# திருக்குறள் ஆராய்ச்சியும்

## ஜைநசமய சித்தாந்த விளக்கமும்.

தி. அ. அனந்தநாத நயினர்.

(1932)

ஓம்

பரமாத்மனே நம:

# திருக்குறள் ஆராய்ச்சியும்

## ஜைநசமய சித்தாந்த விளக்கமும்.

(முதற்பாகம்)

இந்த ஆராய்ச்சி நூல்,

காஞ்சீபுரம்

**தி. அனந்தநாத நயினாரவர்களால்**

எழுதப்பெற்று,

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY TIRUVANMIYUR MADRAS 41
4598.
IV B. 11 (9)

சேம்பூர்

வித்வான்-திருவாளர்-வீ· ஆறுமுகஞ்சேர்வை

அவர்களால் பார்வையிடப்பெற்று,

சென்னை,

ஸ்ரீ ஆதிமூலம் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

(பிரஜோத்பத்தி௵ தை௴)

ரிஜிஸ்டர்ட் காபிரைட்]    1932.    விலை ரூபா 2—0—0.

ஸ்ரீ

## இப்புத்தகம் கிடைக்குமிடங்கள்

ம-ா-ா-ஸ்ரீ,

**தி. ஆதிநயினார் அவர்கள்,**

21. பாரிஷ் வெங்கடாசல அய்யர் தெரு,

ஜி. டி. சென்னை.

ம-ா-ாஸ்ரீ,

**தி. அ. அனந்தநாத நயினார் ஸ் ஸன்ஸ்,**

பட்டு ஜவுளி வியாபாரம்,

ஆடிஸன்பேட்டை,

காஞ்சீபுரம்.



அருகக்கடவுள் துதி.

வெண்பா.

பூமேல் நடந்தானைப் போற்றுகின்ற நாவலரின்
நாமே லிருந்தானை நான்முகனை—பூமேல் நாம்
சிந்தித்துச் செய்கருமஞ் சித்திக்க வெப்பொழுதும்
வந்தித்துச் சேர்ப்பா மனம்.

ஆசாரியர் வணக்கம்.

வெண்பா.

நாலொன்பது குணமும் நல்லொழுக்க மைந்தினையும்
நாலொண் பொருள்வகையி னுண்மையான்—மேலின்ப
மாய்ந்த வகைநிகழு மாசா ரியனடியென்
வாய்ந்த மனம்வைத்தேன் மாண்பு.



ஸ்ரீ விருஷப தீர்த்தங்கர ரென்னும்
ஆதிபகவான்.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஸ்ரீ

# விஷய ஸூசிகை.


| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் அணிந்துரை | க |
| அ. சக்கிரவர்த்திநயினார், எம். ஏ. ஐ. இ. எஸ். அவர்கள் முன்னுரை | கங |
| டி. ஆர். ஸ்ரீனிவாஸாசாரியார் அவர்கள் மதிப்புரை | கக |
| செ. வீ. ஆறுமுகம் சேர்வை அவர்கள் தகவுரை | உஉ |
| நூலாசிரியர் முகவுரை | உச |
| மேற்கோள் நூல்களின் அட்டவணை | எஎ |
| திருக்குறளாசிரியர் சரித்திரம் | எக |

---

| | |
| --- | --- |
| திருக்குறளைப்பற்றிய பலபண்டிதர்களின் அபிப்பிராயங்களுக்கு ஆக்ஷேபசமாதானம் | 1 |
| பகவன் 'என்னும் திருநாமம்' ஆதிபகவான் (அருகக்கடவுள்) ஒருவருக்குத்தான் பொருத்த மென்பது | 25 |
| தொல்காப்பியர் ஜைநர் என்பது | 33 |
| இறையனாரகப்பொருள் ஆசிரியர் ஜைநர் என்பது | 36 |
| பேரகத்தியம் இயற்றிய அகத்தியர் ஜைநர் என்பது | 60 |
| ஜைந சமய உண்மை வரலாறு | 79 |
| ஆரியர்கள் தென்தேசத்தில் சைவ, வைணவ சமயங்களை ஸ்தாபித்தார்களென்பது | 88 |
| ஆரியர், சைவ, வைணவ தமிழர் ஆகியவர்களுக்கு, தமிழில், அடைப்படையான முதனூலில்லை யென்பதும் சைவ, வைணவ தமிழர்களுக்கு, திருஞானசம்பந்தர் முதலான நால்வர் காலத்திற்கு முன்பாரம்பரை ஆசாரியர்களில்லையென்பதும் இவர்கள் ஆரியர்களின் வேதபுராணங்களை முதனூலாகக்கொண்டு தமிழில் சாஸ்திரங்க ளுண்டாக் கப்பட்டன வென்பதும் | 98 |
| பரதசக்கிரவர்த்தி பிராம்மண சிருஷ்டிசெய்ததையும், 16-ஸ்வப்னங்கள் கண்டதையும் ஆதிபகவானிடம் சென்று அவைகளின் பலன்களை வினவ, பகவான் அவற்றின் பலாபலனை அருளியது | 101 |
| பர்வதனென்னும் ஜைந பிராம்மணனால் ஹிம்ஸாயாகம் உண்டாக்கப்பட்டதென்பதும் அதின் காரணமாக அக்காலத்தில் ஜைநப் பிராம்மணர்களில் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டனவென்பதும். | 104 |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| சைவ, வைணவர்கள் ஜைநர்களின் கோவில்களைக்கைப்பற்றிக்கொண்டார்களென்பது | 122 |
| ஐரோப்பியர்களில் சிலர் ஜைநமதத்தை அனுஷ்டித்தல் | 130 |
| மைசூர் மகாராஜா அவர்களின் ஜைநசமயத்தைப் பற்றியஅபிப்பிராயங்கள் | 132 |
| சம்ஸ்கிருதம், பிராகிருதம், தமிழ், கன்னடம் முதலான மகா பாஷைகள் 18-க்ஷுல்லக பாஷைகள் 700-ஆகியவைகள் ஜைந சமயத்தைச் சார்ந்தன வென்பது | 136 |
| ஜைந சமயத்து மகாமுனிவர்கள் முதலானவர்கள் புறச்சமயத்தவர்களிடம் வாதம் செய்து ஜெயித்திருக்கின்றார்களென்பது | 141 |
| சைவ, வைணவம் முதலிய சமயத்தவர்களிடம் சமணர்கள் வாதம் செய்து தோல்வி யடைந்தார்களென்று கூறுவது தவறு என்பது | 147 |


---


| | |
|---|---|
| திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைநசமய சித்தாந்த விளக்கமும் | 1 |
| ஹெச். பவர் என்பவர் எழுதிய ஜைநசமய சித்தாந்தம் | 1 |
| இந்திரதேவர், சிவன், பார்வதி, ஷண்முகன் ஆகியவர்கள் அருகக் கடவுளின் பக்தர்கள் என்பது | 12 |
| ஸ்ரீராமர், இலக்ஷ்மணர், சுக்ரீவன், அனுமகான் ஆகியவர்கள் ஜைநர்களென்பதும், ஜிநதீக்ஷையைப்பெற்று முக்தி அடைந்தார்க ளென்பதும் | 15 |
| கிருஷ்ணன், 22-வது தீர்த்தங்கரராகிய நேமிஸ்வாமியின் சகோதரர் என்பதும், இவர்கள் ஹரிவம்ஸத்தில் ஜனித்தவர்க ளென்பதும் | 16 |
| பாண்டவர்கள் ஜைநர்களென்பதும், இவர்கள் ஜிநதீக்ஷையைப் பெற்று முக்தி அடைந்தார்களென்பதும் | 16 |
| உலகத்தின் ஸ்வரூபமும், காலவிவரமும், கல்பக விருக்ஷங்களின் தன்மையும் | 21 |
| மனுக்களின் விஷயங்கள் | 35 |
| ஆதிபகவான் அவதாரம் | 40 |
| ஆதிபகவான் முதல் முதல் பெண்களுக்கு அக்ஷரம், கணிதம் ஆகிய எழுத்துக்கள் முதலான சாஸ்திரங்களை உபதேசஞ்செய்ததும். பரதன்முதலான புத்திரர்களுக்கு, தனுர்வேதம், நீதிசாஸ்திரம், காமசாஸ்திரம் முதலான லோகோபகாரமாகிய சாஸ்திரங்களை உபதேசஞ் செய்தாரென்பதும் | 42 |

விஷயம். பக்கம்.

ஆதிபகவான் கிராமம், துரோணமுகம், கர்வடம், பட்டணம் முதலியவைகளை பிரஜைகளுக்கு செய்வித்தாரென்பது 46

ஆதிபகவான் பிரஜைகளுக்கு ஜீவனோபாயமாக கல்வி, உழவு வாணிஜ்யம் முதலிய ஷட்கர்மத் தொழில்களை உபதேசஞ்செய்து, மூன்று வர்ணாஸ்ரமங்களையும் சிருஷ்டித்தாரென்பது 47

ஆதிபகவான் அருளிய ஷட்கர்மத் தொழில்களில் யார் யாரெத்தெந்த தொழில்களை ஏற்றுக்கொண்டார்களோ அவரவர்கள் அந்தந்த வர்ணாஸ்ரமமானார்கள் என்பது. 49

பரதசக்கிரவர்த்தி ஏக சமயத்தில் த்ரிவர்க்கத்தைப் பெற்று திக்விஜயம் செய்தாரென்பது 54

பரதசக்கிரவர்த்தி பிராம்மண சிருஷ்டியை செய்து அவர்களுக்கு ஆரிய ஷட்கர்மங்களும் 53 கர்ப்பான்வயகிரியைகளும் 48 தீக்ஷான்வயகிரியைகளும், கார்கத்பத்தியம், ஆஹவநீயம், தக்ஷிணாக்னி ஆகியவைகளின் கிரியைகள் முதலானவைகளை உபதேசஞ்செய்தாரென்பது 57

உபாகர்ம சங்கல்பம் 59

காயத்ரி 61

ஸ்ரீ ஓங்காரத்தின் மகிமை 66

பிராணிகள் உற்பத்தி விவரம் 69

ஸ்திரீகளின் யோனிபேதங்கள் 70

எண்பத்து நான்குலக்ஷம் யோனிபேதங்கள் 71

பறையன் மகனெனினும் சம்யக்திருஷ்டியாக விருப்பின் அவன் இறைவன் என்பது 73

திருக்குறள் கடவுள் வாழ்த்து ஆராய்ச்சி 74

ஆப்தன் லக்ஷணம் 135

ஆத்மன் லக்ஷணம் அதாவது-பகிராத்மா, அந்தராத்மா, பரமாத்மா ஆகியவைகளின் பேதங்கள் 136

திருக்குறள் வான் சிறப்பு ஆராய்ச்சி 138

ஷை நீத்தார் பெருமை ஆராய்ச்சி 141

"சுவையொளியூறோசை" என்னும் குறட்பா ஆராய்ச்சியால் உலகம் ஷட்திரவ்வியங்கள் நிறைந்ததென்பதைவிளக்குவது 173

தொல்காப்பியர் ஐம்பெரும்பூதங்கள் கலந்ததை உலகமென்று கூறினாரென்பது தவறு 182

| விஷயம். | பக்கம். |
|---|---|
| ஜைநசமயம் ஷட்திரவியங்கள் நிறைந்தது உலகமென்பதற்கிணங்க, தொல்காப்பியர், ஷட்திரவியங்களுடன் சிலவற்றைச் சுட்டிக்காட்டல் | 184 |
| ஜீவன்களின் எழுவகைப் பிறப்பு | 187 |
| "ஐந்தவித்தான் ஆற்றல்......" என்னும் குறள் ஆராய்ச்சி | 193 |
| பதினான்கு குணஸ்தானம் | 205 |
| திருக்குறள் அறன்வலியுறுத்தல் ஆராய்ச்சி | 215 |
| ஷை "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்" என்னும் குறள் ஆராய்ச்சி | 220 |
| அநுபந்தம் | 237 |
| அரும்பதவுரை | 244 |

4598. IV. B. 11 (11)

# அணிந்துரை

தமிழ் நாடளித்த அறிவு மணிகள் பல. அவைகளுள் சில தாம்பிறந்த நாட்டிலேயே மிளிர்ந்து கொண்டிருக்கின்றன; சில இமயம் முதல் கன்னி வரைத் தங்கதிரைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன; ஒன்று உலகிற்கே ஒளி வழங்கிக் கொண்டிருக்கிறது. அவ்வொன்றெது? அதுவே திருவள்ளுவர் என்னும் வான் மணி. "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்றார் பாரதியாரும்.

"திருவள்ளுவர் உலகிற்கு ஒருவர்" என்பதை வலியுறுத்த விரிந்ததோர் ஆராய்ச்சி வேண்டுவதில்லை. ஏறக்குறைய எல்லாச் சமயத்தவருந் திருவள்ளுவரைத் தம்மவர் தம்மவர் என்று போற்ற விரைந்து விரைந்து முந்துவதொன்றே "அவர் உலகிற்கு ஒருவர்" என்பதை உணர்த்துவதாகும். இவ்வாறு அவர் போற்றப் படுதற்குரிய காரணங்கள் பல உண்டு. அவைகளுள் சிறந்த ஒன்று, அவர் உலகிற் கறிவுறுத்திய அறத்தினிடைத் திகழும் பொதுமை யென்க. அப்பொதுமையாவது "எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகல்" என்பது.

"எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகல்" என்னும் பொதுமையறத்தைத் **தயை** அல்லது **அருள்** என்று சுருங்கச் சொல்லலாம். "தயா மூல தர்மம்" என்று மறை முழங்குகிறது. தயை அல்லது அருள் நெறி, சமயம் என்று தொன்று தொட்டு வழங்கப்பட்டு வருகிறது. அஃறிணை யுலகினின்றும் உயர் திணையைப் பிரித்து நிற்பது இவ்வருணெறி யென்னுஞ் சமயமேயாகும். அருளுடைய ஒருவனே சமய வழி நிற்பவனாவன். அஃதில்லா ஒருவன் அவ்வழி நிற்பவனாகான். அருளுடைமையைச் சமய ஒழுக்கமெனக் கொள்க.

சமயம் ஒன்றா? பலவா? சமய நெறியை ஒருமுகப் படுத்திக் கோடற்கும் இடனுண்டு. அதைப் பன்முகப் படுத்திக் கோடற்கும் இடனுண்டு. அக்கோண்முறை அவரவர் அறிவு ஆராய்ச்சித் திறத்தைப் பொறுத்து நிற்பது.

ஒவ்வொன்றற்கும் புறமும் அகமும் இருத்தல்போலச் சமயத்துக்கும் புறமும் அகமும் இருக்கின்றன. சமயத்தின் புறத்தை நோக்கும்போது பன்மைக் காட்சியும், அதன் அகத்தை யுணரும்போது ஒருமையுணர்வுந் தோன்றும். புறப் பன்மையைச் சமயவாதிகள் சமயங்களாக்கொண்டு கலாம் விளைக்கிறார்கள். சமயத்தின் அகத்திலேயே பொதுமை என்னுஞ் செம்பொருள் பொலிந்து கொண்டிருக்கிறது. மேலோர் அப்பொது நெறிநின்று, தம்முயிரைப்போல் மன்னுயிரைப் போற்றி வாழ்வு நடாத்துவர். மற்றவர் சமயவாத மென்னுங் குழியில் வீழ்ந்து இடர்ப்படுவர்.

கடலிடைத் தீவுகள் பலபடக் காணப்படுகின்றன. அப்பலபட்ட தலைகளைத் தாங்கி நிற்கும் அடி (நிலம்) ஒன்றா? பலவா? பன்னிறப் பசுக்களிருக்

கின்றன. அவைகள் பன்னிறப் பாலையா சொரிகின்றன? பலநிற மணிகளை ஒருநாணன்றோ எந்தி நிற்கிறது? ஆகவே, புறப்பன்மையளவில் கட்டுப்பட்டு நில்லாது, அப்பன்மையை புறக்கருவியாக் கொண்டு, உள்நுழைந்து நுழைந்து, ஒருமை காண மக்கள் முயலுதல் வேண்டும்.

சமயத்தின் புறத் தோற்றங்களாகிய பேர், கோலம், வழிபாடு முதலிய வேற்றுமைகளை, ஒவ்வொரு சமயமாக் கொண்டு, சமய வாதத்திலிறங்குதல் கூடாது. அப்புறங் குவிந்த அகத்திற் புகுந்தால் ஒருமை இன்பம் நுகர்தல் ஒருதலை. "உங்கள் பேதமன்றியே உண்மை பேதமில்லையே" (சிவவாக்கியர்) "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" (திருமூலர்) "ஒன்றென்றிரு தெய்வ முண்டென்றிரு" (பட்டினத்தார்) "வேறுபடு சமய மெலாம் புகுந்து பார்க்கில் விளங்குபரம் பொருளே நின் விளையாட்டல்லால் - மாறுபடுங் கருத்தில்லை" (தாயுமானார்) "பெருகியபே ரருளுடையார் அம்பலத்தே கடிக்கும் பெருந்தகையென் கணவர்திருப் பேர்புகலென் கின்றாய் - அருகர் புத்தராதி யென்பேன் அயனென்பேன் நாராயணனென்பேன் அரனென்பேன் ஆதிசிவ னென்பேன் - பருகுசதா சிவமென்பேன் சத்திசிவ மென்பேன் பரமமென் பேன் பிரமமென்பேன் பரப்பிரம மென்பேன் - அருவு சுத்த பிரமமென்பேன் துரிய நிறைவென்பேன் சுத்தசிவ மென்பேன் இவை சித்துவிளையாட்டே" (இராமலிங்க சுவாமிகள்) "வாது செய்து மயங்கு மனத்தராய் - யாது சொல்லு வீராகிலும் ஏழைகாள்-யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்-மாதேவன்னலால் தேவர்மற்றில்லையே" "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்தே எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்" (அப்பர்) "புங்கவன் பூரணன் புத்தன் புராதனன் பூண்புனையாச், சங்கரன் சக்கரன் றூமறை யோனெனத் தாவில் செங்கட், சிங்கவன் பேரனைத் தீர்த்தனைத் தீவினைத் தெய்வனும் பேர், மங்கவன் றேவென்னை வான்கொண்ட வீரனை வாழ்த்துவதே" "சத்திய மேயொன்று சாற்றுகின் றேன்சம யங்களெல்லாங், கத்தியஞ் ஞானங் கவல்கின்ற தேகடைச் சாரமெய்து, முத்தியு மேக முதல்வனு மேக முதல்வனு முற், பத்தியு நாசமு மொன்று மில்லாத பாஞ்சுடரே" (அவிரோதி ஆழ்வார்) - இவ்வான்றோர் மொழிகளை நோக்குக.

உலகில் தோன்றிய சமய குரவர் மொழிகளில் புறச்சொல் வேற்றுமையன்றி அகப் பொருள் வேற்றுமையில்லை என்பது எனது ஆராய்ச்சியில் யான் பெற்ற அடைவு. எனது நெறி சமரச சன்மார்க்கம். மகன் எச்சமயத்திலிறங்கினும், அஃது அவனைச் சமரச சன்மார்க்கக் கரை யேற்றுதல் உறுதி.

சமரச சன்மார்க்க அகத்தினின்றும் புறமாகப் பரிணமித்த உறுப்புக்களே உலகில் பல சமயங்களாக நிலவுகின்றன. அவைகளில் ஏதாவதொன்றைப் பற்றினால், அது சமரச சன்மார்க்கக் கரை சேர்க்கும். இஃது ஆன்ம ஒழுக்க முறை.

சிலர் இவ்வொழுக்க உலகம் புகாது, சரித்திர உலகம் புகுந்து புறக் கூறுபாடுகளை ஆராய்வர். இவ்வாராய்ச்சியும் சமரச சன்மார்க்கப் பயிற்சிக்கு (ஒரு போது) படியாக நின்று துணை செய்வதாகும்.

இவ்விரண்டில் முன்னையதற்கு அணிந்துரை வேண்டுவதில்லை. ஆகவே, மற்றைய உலகில் நின்றே, திருவள்ளுவரைச் சமயவாதிகள் எவ்வெப்போது எவ்வெவ்வாறு கொண்டனர் என்பதை ஆராய்தல் வேண்டும்.

திருவள்ளுவர் சமயத்தைப்பற்றி இதுகாறும் எழுந்த ஆராய்ச்சிகள் பல; வாதப் போர்கள் பல. இந்நூலாசிரியருந் திருவள்ளுவர் சமயத்தைக் குறித்து ஆராயப் புகுந்து, தாங்கண்ட முடிபைத் தெரித்துள்ளார். இவர் கண்டு தெரித்த முடிபு திருவள்ளுவர் ஜைந சமயத்தவ ரென்பது. இங்கே ஜைநம், ஆதியில்-திருவள்ளுவர் காலத்தில் - அவர் பின்னை - எவ்வெவ்வாறு மக்களால் கொள்ளப் பட்டது என்று முறை முறையே ஆராய்ந்து முடிபு தெரித்தல் சிறப்பு. அதற்கு அணிந்துரை இடந்தாராதாகலான், சிலவுரை பகர்ந்து, எனது உள்ளக்கிடக்கை யைக் கிளத்த முயல்வல்.

கூர்தல் அல்லது உள்ளது சிறத்தல் (**Evolution**) என்னும் ஓர் அறம் இயற்கையின் மாட்டுளது. அவ்வறத்தின் வழி உலகம் இயங்கி வளர்ந்து வருகிறது. உயிர்கள் மனித உடல் பெறுதற்கு முன்னர், வேறு பல உடல் களைப் பெறுகின்றன. பலதிற உடல்களைத் தாங்கிய பின்னரே உயிர்கள் மனித உடலைத் தாங்கும் பேறு பெறுகின்றன. உயிர்கள் மனித யாக்கை பெற்ற ஆதிநாளில் அவைகள் மக்களுக்குரிய இயல்புகளை முற்றும் பெறவில்லை. பின்னர் ஊடைவில் அவ்வியல்புகள் படிப்படியாக மனித உலகில் அங்கும் இங்கும் முகிழ்த்தன. இதனால் மனித உலகை அகத்திணை வல்லார் மாக்கள் உலகமென்றும், மக்கள் உலகமென்றும் இரு கூறாகப் பிரித்தனர். மாக்கள் உலகமென்பது மனித வடிவமும் விலங்கு நீர்மையுமுடையது. மக்கள் உலக மென்பது மனித உடலும் தெய்வ இயல்புமுடையது. இவ்விரண்டும் இன்னும் மன்பதைக்கண் மருவிக்கொண்டிருத்தல் கண்கூடு.

முதன் முதல் விலங்குலகினின்றும் மாக்கள் உலகே தோன்றிற்று. எவ் வுயிரையுந் தன்னுயிர்போல் கருதும் அருளுணர்வு அம்மாக்கள் உலகில் அரும்ப வில்லை. அவ்வுலகில் கொலை இயல்பாக நிகழ்ந்து வந்தது. உள்ளது சிறத்தல் என்னும் அறத்தின் வழி உலகை வளர்க்கவேண்டுவது இயற்கை யன்னையின் கடன். இயற்கை யன்னையோ ஒருபோதும் வாளா கிடவாள். அவள் தன் கடனை ஆற்றிக்கொண்டே யிருப்பாள். கொலையுலகில் கொல்லாமையுங் கால் கொள்ளும் வாய்ப்பும், அதற்குரிய வேளையும் சேர்ந்தன. அச்சிறப்புக்குத் துணை புரிய இயற்கையன்னை திருவுளங் கொண்டாள்.

பெரும் பெரும் மாறுதல்களை எப்பொழுதும் இயற்கையன்னை ஒரு பெரி யார் வாயிலாகவே நிகழ்த்துவது வழக்கம். அந்நிகழ்ச்சி யுறுதற்கு நிலைக்களனாக நின்று பணியாற்றக் காலத்துக்குரிய பெரியாரும் (அவ்வப்போது) தோன்றுவது வழக்கம். அவ்வேளையில் ஒரு பெரியார் தோன்றி யிருந்தார். அவர் வாயிலாக இயற்கையன்னையின் திருவருள் வெளிப்பட்டது, அவர் உள்ளத்தில் கொல்லா அறத்துக்கு இன்றியமையாத உயிர் மணி "அருள்" என்னுந் தெய்வங் கோயில் கொண்டது. அவ்வொருவர் **விருஷப தேவர்** என்பார். இவருக்கு ஜிநன் என்

ளொரு சிறப்புப் பெயருண்டு. பொறி புலச் சேட்டைகளை வென்று வினையின் நீங்கி விளங்கிய அறிவன் எவனோ அவனே ஜிநன் ஆவன். ஆதிபகவன், அருகர் முதலிய வேறு பெயர்களும் ஜிநனுக்குண்டு. விரிவு ஜைந நூல்களிற் காண்க.

விருஷப தேவர் காலஞ் சரித்திர காலங் கடந்தது. இவர் நாள், காலக்கணக்கில் அகப்படாமையால், தொன்மை நோக்கி, இவர் காலத்தை “அநாதி” என்று கூறுப. மற்ற மற்ற சமயகுரவர் அனைவரும் இவருக்குப் பின்னர்த் தோன்றியவரே. இதனை விஷ்ணு புராணம் முதலிய நூல்களிலுங் காணலாம்.

உலகம் அருளென்னுந் தெய்வ ஒளியிழந்து, கொலை யென்னும் அரக்க இருளில் வீழ்ந்து, இடர்ப்படுவதை விருஷபதேவர் கண்டு, மனமிரங்கிக் குழைந்து குழைந்துருகி, மன்பதையின் உள்ளத்தில் தெய்வ விளக்கேற்றினார். அன்று தொட்டு மன்பதைக்கண் அருள்ஒளி படரலாயிற்று, அவ்வொளியால் மக்கள் உலகமும் மலர்ந்தது. விருஷபதேவர் கண்ட அருள் நெறிக்கு அற்றை நாளில் ஜைநம் என்னும் பெயர் வழங்கப்பட்டது. ஜைநம் என்றால் என்னை ?

மக்கள் துன்பத்தினின்றும் விடுதலை யடைய முயல்கிறார்கள். ஆனால் வினைக்கட்டுள்ளவரை அம்முயற்சி பயனளிப்பதில்லை. வினைக்கேட்டிற்கு மெய்யறிவு விளங்குதல் வேண்டும். அவ்விளங்கிய அறிவினூடே ‘அருள் விளக்கு’ ஒளி செய்யும். அவ்வருள் விளக்கத்துக்கு ஒழுக்கந் தேவை. ஒழுக்கத்துக்குப் பொருந்திய உணவு, பொறி புலன்களின் காப்பு முதலியன தேவை. (பொறி புலன்களின் காப்பென்பது, பொறி புலன்களைக் கெடுத்துக் கொல்வதன்று ; அவைகளைத் தீயவழியிற் செலுத்தாது, செந்நெறியிற் செலுத்துவதாகும்.) அருள் விளக்கத்தின் பொருட்டு, ஒழுக்கத்தை யோம்பிப் பொறி புலன்களைக் குறும்புகளினின்றுங் காக்கும் பயிற்சித் துறைகள் அந்நாளிற் கோலப்பட்டன. அத்துறைகளில் நண்ணி, ‘வினையின் நீங்கி விளங்கிய அறிவ’னாகிய ஜிநனை வழிபடுவோர் ஜைநர் என்று அழைக்கப்பட்டார். இவரது கொள்கைக்கு ஜைநம் என்று பெயர். பொருந்திய உணவு கொண்டு, பொறிபுலச் சேட்டைகளை யொடுக்கி, வினையினின்றும் நீங்க, அருளொழுக்கங் காக்கும் ஒரு நிலை ஜைநமென்பது. சமணம், ஆருகதம் முதலிய பெயர்களாலும் ஜைநம் வழங்கப்படுகிறது.

அருணெறிக்குரியார் இன்னார் என்னுங் கட்டுப்பாடு அற்றை நாளில் இல்லை. அருணெறி எல்லார்க்கும் உரிய ஒன்று. எவரும் அந்நெறியிற்றலைப் படலாம். இப்பொது நெறியே பண்டை நாளில் ஜைநம் என்னும் பெயர் பெற்றிருந்தது. இச்சமயம் மன்பதைக்குரிய பொது நெறியா அல்லது குறிப்பிட்ட சிலர்க்கு மட்டும் உரிய குறுகிய நெறியா என்பது உன்னற்பாலது.

பொது நெறியாகத் தோன்றிய ஜைநம், பிற்றை நாளில் கட்டுப்பட்ட சமயமாகச் சிலரால் கொள்ளப்பட்டது. ஜைநன் பிள்ளை ஜைநனாகக் கருதப்படும் ஒரு நிலை இந்நாளில் உருக் கொண்டது.

விருஷபதேவர் அருளொழுக்கத்தை ஓரினத்தார்க் கென்றாதல், ஒரு நாட்டார்க்கென்றாதல், ஒரு நிறத்தார்க் கென்றாதல், ஒரு மொழியார்க் கென்றாதல்

அறிவுறுத்தினரில்லை. அவர் உலகிற்கே பொதுவாக அருளொழுக்கத்தை அறிவுறுத்தினர். அவ்வருளொழுக்கமே சமயம் சமயம் என்பது. (சமயமாவது, விலங்குணர்வி னின்றும் மக்களைப் பிரிக்க வல்ல அருணெறி யென்க.)

திருவள்ளுவர், விருஷபதேவர் வழிநின்று, அருணெறி யோம்பினர். ஆனால் அவர் வெளிப்படையாக ஜைநம் என்னுஞ் சொல்லை ஆண்டாரில்லை. அச்சொல் அவர் நூலில் யாண்டுங் காணோம். இதற்குக் காரணம் என்னவா யிருக்கலாம்? அருக தேவர்க்கும் திருவள்ளுவர்க்கும் இடையில் (பன்னூறு ஆண்டுகளில்) உற்ற மாறுதல்களா யிருக்கலாம்.

அருக தேவர்க்குப் பின்னை, அவர் கண்ட அருணெறியில் நின்ற மக்களுக்குள் சில பிரிவுகள் தோன்றின. அவைகள் திருவள்ளுவருக்கு முன்னர்ச் சிலவும், பின்னர்ச் சிலவுமாகத் தோன்றின. அருணெறியை ஒல்லும் வகை முற்றுங் கொண்டோர் ஒரு தனிக் கூட்டத்தவராகவும், அதை ஒரோ வழிக்கொண்டோர் வெவ்வேறு கூட்டத்தவராகவும், மற்றவர் மற்ற மற்ற கூட்டத்தவராகவும் பிரிந்தனர். இப்பிரிவுகள் பலதிற மாறுதல்களை நிகழ்த்தின. இம்மாறுதல்கள் ஜைநத்தைச் சில கட்டுக்குள் கடவின. அக்கட்டுப்பட்ட ஜைநத்தினிடை நாளடைவில் பௌராணிகம் புகுந்தது; கண்மூடி வழக்கங்கள் நுழைந்தன; சமயப் போர், மறுப்பு, பிரிவு முதலிய கறைகள் படிந்தன; இயற்கைக்கு மாறுபட்ட பலதிறச் செயற்கை முறைகள் அரசு பெற்றன என்று சுருங்கச் சொல்லலாம்.

பின்னை அருணெறி சைவம் என்னும் பெயர் பெற்றது. நாளடைவில் அச்சைவமுங் கட்டுப்பாடு என்னும் பேயால் பீடிக்கப்பட்டது. பின்னே பின்னே பிரிவுக்குள் பிரிவுகள் கிளைத்தன. இப்பிரிவுகள், சிதறுண்ட தீவுகளைப் போல் இந்நாளில் காட்சியளிக்கின்றன. ஆயினும் அவைகளின் அடியில் அருணெறி ஆணிவேர் போல் நின்றுகொண்டிருக்கிறது. அதுவே சமயங்களின் உயிர்நாடியாகும்.

உலகில் அவ்வப்போது, தோன்றிய சமயகுரவர் அனைவரும், கால தேச வர்த்தமானத்திற்கேற்ப, அருணெறி யென்னும் பொது நெறியை ஓம்பவே போந்தனர். கால நிலைக்கேற்றவாறு சிலர் ஒழுக்கத்தை வலியுறுத்தினர்; மற்றுஞ் சிலர் உயிருண்மையை வலியுறுத்தினர்; இன்னுஞ் சிலர் கடவுளுண்மையை வலியுறுத்தினர். அவ்வக்காலம் எதை எதை நெகிழவிடுகிறதோ, அதை அதை வலியுறுத்தவே, சமயகுரவ ரென்போர் போதருவது வழக்கம். அவர் வழி வழி வருவோர் சிற்சில காரணங்களை முன்னிட்டு, உயிர்நாடியை மறந்து, கட்டுப்பாடுகளால் பிரிவுகளை உண்டுபண்ணி, ஒருவரோடொருவர் பிணங்கித் தொல்லை விளைக்கிறார். இவ்விடைப் பிரிவுகள் செந்நெறியின் புறத்தளவில் நிற்குந் தன்மையனவே யன்றி, அதன் அகத்தில் நுழைந்து உயிர்நாடியைக் கவ்விக் கொல்லுந் தன்மையனவல்ல.

திருவள்ளுவர், காலதேச வர்த்தமான நிலை நோக்கியும், உலக நலன் கருதியும் போருக்குரிய குறியீடுகளை விலக்கிச் சமயத்தின் அகப்பொருளாம் அருளமிழ்தந் தேக்கத் தமிழ்மறை யருளினர். உயிர்கட்குச் செந்தண்மை பூண்டொழுகுஞ் செம்மையறம்—ஜீவகாருண்யம்—உலகில் நிலவவேண்டுமென்பது

திருவள்ளுவர் வேட்கை. அவ்வேட்கை திருக்குறளாகப் பரிணமித்தது. ஆகவே, திருவள்ளுவர் நெறியை என்னென்று கூறுவது? திருவள்ளுவர் நெறியை விருஷபதேவர் வழிப் பிறந்த ஜைநம் அல்லது அருநெறி யென்று கொள்ளலாம். விருஷபதேவர் அறிவுறுத்திய கொல்லா அறமும் பிறவும் திருக்குறளில் வெள்ளிடைமலை யென விளங்குதலும், திருவள்ளுவர் கொல்லாமையை வலியுறுத்தியதைப் போல அவர் காலத்திருந்த மற்றப் புலவர் பலர் வலியுறுத்தாதொழிந்தமையும் ஈண்டுப் பெரிதும் உன்னற்பாலன.

திருவள்ளுவர் காலத்தில் பொது நெறிக்கண் சில கவடு கோடுகள் விட்டிருந்தன. அவர் நாளில் சைவம் வைணவம் முதலிய சமயங்களிருந்தன. அந்நாளில் ஜைநம் அறவோரால் ஒருவாறாகவும், மற்றவரால் மற்ற மற்றவாறாகவுங் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். சமயப் புறநோக்குடையாரிடைச் சிறுமைப் பிணக்குகளும் நிகழ்ந்திருக்கலாம். கொல்லாமை யென்னும் அருநெறியால் பிணக்குகளைப் போக்கத் திருவள்ளுவர் முயன்றிருப்பர்.

அந்நாளில் கொல்லா அறம் ஜைநருடையது என்னும் ஒருவழக்கு மக்களிடைப் பரவியிருந்தமையான், அவ்வறத்தை அறிவுறுத்திய திருவள்ளுவரை, அந்நாளைய சைவ வைணர் முதலியோருட் பெரும்பான்மையோர், ஏற்றுப் போற்ற உளங் கொண்டாரென்று சொல்லுதற்கு இடனில்லை. சைவ வைணவம் முதலியனவும் பொது நெறியின் பாற்பட்டனவே என்று கொண்ட மிக மிகச் சிலரே திருவள்ளுவரை ஏற்றுப் போற்றியிருப்பர். இதனை வலியுறுத்தத் தொன்று தொட்டு வழக்கில் வந்துகொண்டிருக்கும் இரண்டோர் உலகியல் முறைகளைமட்டும் ஈண்டுப் பொறிக்க விரும்புகிறேன். பிற விரியுமாகலின் என்க.

திருவள்ளுவர், நாயன்மார் ஆழ்வார்கட்கு *முற்பட்டவர். அவர் அருளிய திருக்குறளோ மன்பதைக்குரிய அருள் மறை; பொது மறை. அத்தகைய ஒருவர் திருவுருவம் சைவ வைணவக் கோயில்களில் ஏன் அமைக்கப்படுவதில்லை? சைவ வைணவ நூல்களில் அடியவர் வாழ்த்தில் அவர் ஏன் சேர்க்கப்படவில்லை? அவர் நூல் பூசைக்காலங்களில் ஏன் ஓதப்படுவதில்லை? அன்பர்கள் உன்னுவார்களாக. முன்னாளில் திருவள்ளுவர் ஜைநர் என்று கொள்ளப்பட்ட வழக்கே, அவரைச் சைவ வைணவக் கோயில்களும், நூல்களும், சம்பிரதாயமும் புறக்கணிக்கக் காரணமாக நின்றிருக்கலாம் என்று எவரும் ஊகிக்கக் கூடும். பின்னே போந்த சைவ வைணவ அறிஞர்கள், திருவள்ளுவர் அறிவுறுத்திய அருநெறியின் பெற்றியுணர்ந்து, அவரை ஏற்றுப் போற்றுவதோடு, அவரைத் தம்மவர் தம்மவர் என்று கொள்ளச் சொற்போரும் நிகழ்த்தலானார்கள்.

---

* சில நாயன்மார் ஆழ்வார்கட்குப் பிற்பட்டவர் திருவள்ளுவரெனச் சமயவாதிகளிற் சிலர் கூறுப. அக்கூற்றுத் துராபிமானம் பற்றி எழுவதென்க. அதனைச் சரித்திர ஆராய்ச்சியுலகம் ஏற்றல் அரிது. திருவள்ளுவர் தமிழ் நடைக்கும், சிலர் குறிக்கும் நாயன்மார் ஆழ்வார் தமிழ் நடைக்குமுள்ள வேற்றுமையொன்றே எவர் முன்னவர் பின்னவர் என்பதை நனி விளக்கும்.

திருவள்ளுவர் அறிவுறுத்தியது பொதுநெறி - அருணெறி - ஜீவகாருண்ய ஒழுக்கம். அந்நெறியை எவர் எப்பெயரிட் டழைப்பினும் அழைக்க. திருவள்ளுவரைச் சைவரெனில், வைணவரெனில், பிறரெனில், அவரது சைவமும் வைணவமும் பிறவும் அருகதேவர் கண்ட அருணெறியின்பாற் பட்டன வென்க. அருகர் குறிப்பிட்ட ஒரு கூட்டத்தார்க்கு மட்டும் உரியரல்லர். அவர் உலகிற்கே உரியர். அருணெறி யோம்பப் போந்த ஆசிரியர் பலரும் உலகிற்குரியராவர். அவரைச் சமயவாதிகள் தங்கள் தங்களுக்கே உரியர் என்று கருதிக் கொள்கிறார்கள். அச்சுட்டறிவு பொது உணர்விற்கே கேடு சூழ்கிறது. சுட்டி இடுக்கில் நுழைதல் கூடாது. இடுக்கு இடுக்கறுத்தல் இயல்பு. பரந்த பொது வெளியில் உலவ முயல்வதே அறிவுடைமை. அவ்வறிவு சிறப்பளிக்கும்.

திருவள்ளுவர் காலத்திருந்த சமயக் கணக்கர் பலர், திருவள்ளுவரைப் பற்றிக் கொண்ட மனோநிலை மேலே குறிக்கப்பட்டது. ஜைநர்கள் மட்டுந் திருவள்ளுவரை அன்றும் ஏற்றுப் போற்றினார்கள்; இன்றும் ஏற்றுப் போற்றுகிறார்கள். ஜைநர்களிடத்தும், அவர்கள் நூல்களிடத்தும் நெருங்கிப் பழகுவோர்க்கு இவ்வுண்மை விளங்கும். (குந்தகுந்தாச்சாரியார், ஏலாச்சாரியார் முதலிய பெயர்களால் திருவள்ளுவரை ஜைநர்கள் போற்றிவரல் கண்கூடு.)

சமண முனிவரர்பால், முன்னொரு காலத்தில், சில மரபுகள் நிலவியிருந்தன. அவைகளுள் ஒன்று, அவர்கள் தங்கள் நூல்களில் முன்னோர் மொழிபொருளை எடுத்துக் காட்ட நேரும்போதெல்லாம், அம்மொழிப் பொருள் பிற சமயத்தவர்களுடையதாயின், அதன் ஆக்கியோன் பெயரைப் பொறித்தலும், அம்மொழிப் பொருள் தஞ்சமயத்தவருடையதாயின் அதனை "எம் ஒத்து" என்று குறித்தலுமாகும். அக்காளில் எழுந்த சமண நூல்களுள், திருக்குறளும் அடிகண்மார்களால் தங்கள் ஒத்து என்றே கொள்ளப்பட்டது. விரிவு நீலகேசியுரை முதலிய ஜைந நூல்களிற் காண்க.

ஈண்டொன்றைச் சிறப்பாகக் குறிக்க விரும்புகிறேன். "பிரபோத சந்திரோதயம்" என்றொரு வேதாந்த நாடக நூலுண்டு. அந் நூற்கண் பல சமயக் கூத்தர்கள் நடிக்கிறார்கள். அவர்கள் நாடக மேடை ஏறும்போது தங்கள் தங்கள் சமய மந்திரங்களை யோதிச் செல்கிறார்கள். ஜைநர் எதை ஓதிச் செல்வதாக அந்நூல் கூறுகிறது? வடமொழிப் "பிரபோதயம்" "அஹிம்ஸா பரமோதர்மா" என்பதையும், தென்மொழிச் "சந்திரோதயம்" "அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத் துண்ணாமை நன்று" என்பதையும் ஜைநர் சார்பில் சாற்றியிருக்கின்றன. "பிரபோத சந்திரோதயம்" தமிழில் பெயர்த்தெழுதப்பெற்ற நாளில், திருக்குறள் ஜைந நூல் என்னும் ஆட்சி, நாட்டிடை நிலவியிருந்தது போலும்!

திருவள்ளுவர் திருக்குறளில், கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் ஆகிய இவைகள் பாயிரமாக நின்று அழகு செய்கின்றன. இவைகளிற் போந்துள்ள பொருள்கள் மக்கள் அனைவராலும் ஏற்கத் தக்கன என்பதில் ஐயமில்லை. ஆயினும் இவைகளை நூன் மரபில் வழி வழிக் கொண்டு வருவோர் எவர் என்பதை ஆராய்தல் வேண்டும். அறத்தைப் பாயிரத்

தில் அமைக்கும் மரபாட்சி எவர் வயத்திலிருக்கிறது என்பதையுங் கூர்ந்து நோக்கல் வேண்டும். இன்னோரன்ன பிறவற்றைச் சரித்திரக் கண் கொண்டு பார்த்தால், இவைகள் ஜைந மரபாட்சியிலிருத்தல் இனிது விளங்கும்.

திருவள்ளுவரருளிய திருக்குறளிலுள்ள கடவுள் வாழ்த்தைச் சிறப்பாகத் தங்கள் வாதத்துக்குப் பொருளாகக் கொள்வது சமய வாதிகள் வழக்கம். முதற் றிருக்குறளில் கோயில் கொண்டுள்ள "ஆதிபகவனை" ஆராய்ச்சிக்காரர்கள் படுத்தும் பாட்டை என்னென்று கூறுவேன்? அப்பாட்டை அவ்வாதி பகவனே அறிவன். எல்லாருந் தம் பொருள் தம் பொருள் என்று கொள்ளுமாறு "ஆதி பகவ"னுக்குத் தமிழ்க் கோயில் அமைத்த பெருமை திருவள்ளுவருடையதாகும்.

ஆதிபகவனை அவரவர் தத்தங் கடவுளாகக் கொள்கிறார். இக்கொள்கையால் எவ்விதக் கேடும் விளைவதில்லை. இக்கொள்கை வழி நின்றொழுகினால் நலனே விளையும். ஒழுக்கத்தில் கருத்திருத்தாது "ஆதிபகவன்" 'உன் தெய்வம்' 'என் தெய்வம்' என்று உறுத்தலில் கருத்திருத்துவது கேட்டையே விளைக்கும். திருவள்ளுவர் உலகை நோக்கியே "ஆதிபகவன்" என்றார். "முதற்றே யுலகு" என்று பிற்றைத் தொடர்க்கு பெய்த குறிப்பால் இதையுணரலாம்.

திருவள்ளுவர் எவரை உளங்கொண்டு "ஆதிபகவன்" என்று அருளினாரென்பது அவருக்கே தெரியும். பின் வந்தார் ஆராய்ச்சிக்குக் கருவியாக நிற்பது அவர் அருளிய நூலேயாகும். அக் கருவிகொண்டு ஆராய்ச்சி யுலகில் நுழைந்து, புலவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடுகிறார்கள். இக் கருத்துக்களை ஆராய்ச்சி யுலகிற்குப் பெரு விருந்தாகக் கொள்வதே சிறப்பு. அவைகளை முடிந்த முடிபுகளாகக்கொண்டு போர்த்துறை நண்ணுவது மடமை; கயமை.

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தில் ஓரிடத்தில் ஒரு திறவு வைத்துள்ளார். அதற்கு அரணாக நூலினுள் பல குறிப்புக்களுண்டு. "பொறி வாயில் ஐந்தவித் தான்" என்பது அத்திறவு. அத்திறவு கொண்டு கடவுள் வாழ்த்தைத் திறந்து பார்த்தல் வேண்டும்.

"பொறி வாயில் ஐந்தவித்தான்" என்பது ஒருபோது பொறி வாயில் ஐந்துடையானைக் குறித்தல் வெள்ளிடைமலை. முதலில் பொறி வாயில் ஐந்துடையனாயிருந்து, பின்னை அவ்வைந்தவித்த ஒருவனைத் திருவள்ளுவர் "ஆதி பகவன்" என்று போற்றியிருக்கிறாரென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குவ தொன்று. பொறி வாயில் ஐந்துடையனாய்ப் பின்னை அவ்வைந் தவித்த ஒருவனை ஆதிபகவனாகப் போற்றுவது எச்சமயம்?

(எங்கும் நீக்கமற நிறைந்து அசைவற்ற ஒன்றை ஜைநம் மறுக்கின்றதில்லை. அவ்வசைவற்ற ஒன்று ஐந்தொழில் புரியா தென்பது ஜைந சித்தாந்தம்.) "உற்பத்தியு நாசமும் ஒன்றுமில்லாத பரஞ்சுடரே" என்பது ஜைநர் திருநூற்றந்தாதி. ஜைநம், வழிபாட்டிற்குப் பொறிவாயில் ஐந்தவித்துக் கடந்தநிலையை ஆதியில் பெற்ற விருஷப தேவரையே ஆதிபகவனென்று கொண்டிருக்கிறது.

முதற்றிருக்குறளைப்பற்றியும், பிறவற்றைப்பற்றியும் எழுந்த ஆராய்ச்சிகளில் மற்றவர்களை விடச் சைவப் புலவர்கள் நிகழ்த்திய ஆராய்ச்சியே அதிகம். அவர்கள் தடைவிடைகளால் திருவள்ளுவரைச் சைவரென்றும், ஆதிபகவனைச் சிவன் என்றும் நிறுவிக் காட்டியுள்ளார்.

சைவரென்போர்க்கும் ஜைநரென்போர்க்கும் பிணக்கு உண்டு. ஆனால் சைவத்துக்கும் ஜைநத்துக்கும் மிக நெருங்கிய இணக்கமே உண்டு. அவ்விணக்கத்தை நூற்றுக்குத் தொண்ணூற்றென்பதே முக்காலே அரைக்கால் வரைப் பொருத்திக் காட்டலாம்.

“எவ்வுயிரும் நீங்காதுறையும் இறை சிவன் என்று - எவ்வுயிர்க்கும் அன்பாயிரு” என்று “சைவ சமய நெறி” கூறுகிறது. “எவ்வுயிர்க்கும் அன்பாயிருத்தல்” ஜைநத்தின் மூலதர்மம். இங்கே சைவம் ஜைநம் என்னும் வேற்றுமை சொல்லளவிலேயே நிற்கிறது. பொருளில் வேற்றுமை காணேம். “இஃது ஒழுக்க நிலை. இதன்கண் ஒற்றுமை காட்டல் பொருந்திய தொன்றாகாது. பொருளுண்மையில் இரண்டிற்கும் ஒற்றுமை யுண்டா?” என்று சிலர் வினவலாம்.

பொருளுண்மையிலும் ஜைநத்துக்கும் சைவத்துக்கும் ஒற்றுமை யுண்டு. உலகு உயிர் கடவுள் என்னும் முப்பொருளுண்மை இரண்டிற்கும் பொது. அவைகளின் இயல்புகளைப்பற்றிய கொள்கையிலும் இரண்டுக்கும் பெரிதும் ஒற்றுமை யுண்டு. கடவுளியலில் மட்டும் இரண்டும் மிகச் சிறிய வேற்றுமையைப் புலப்படுத்துகின்றன. அச்சிறுமை சமரச சன்மார்க்கத்தாரை மயக்குறுத்தாது. ஆனால் அஃது ஆராய்ச்சி புலமை மயக்குறுத்தியே தீரும்.

| எங்கும் நிறைந்த அசைவற்ற ஒன்றை ஜைநமும் ஏற்கிறது; சைவமும் ஏற்கிறது. ஜைநம் அசைவற்ற ஒன்றற்கு ஐந்தொழில் கூறுவதில்லை. | சைவம் பரம்பொருளுக்கு இருநிலை வகுத்து, ஒன்றற்குத் தொழிலின்மையும், மற்றதற்குத் தொழிலுண்மையுங் கூறுகிறது. அவ்விருநிலை சொருபம் தடத்தம் என்பன. சொருப சிவத்துக்கு ஒன்று மில்லை. “சிவனரு வுருவுமல்லன் சித்தினோடசித்துமல்லன் - பவமுதற் றொழில்களொன்றும் பண்ணிடுவானுமல்லன்” (சைவ சாத்திரம்). தடத்த சிவத்துக்கு ஐந்தொழிலுண்டு.

தடத்த சிவத்தைப் ‘பொறிவாயில் ஐந்தவித்த ஆதிபகவ’னாகக் கோடலகாதோ வெனில், சைவ சாத்திர முறைப்படி கோடலாகா தென்க. பிறவியெடுத்தல், பொறிவாயில் ஐந்து பெறல், பின்னே அவைகளை அவித்தல் முதலியன பசு விலக்கண மெனச் சைவ சாத்திரஞ் சாற்றுகிறது. தடத்த சிவத்தையும் பசு வர்க்கத்தில் சைவ சாத்திரஞ் சேர்த்தில்லை. ஆதலால் திருவள்ளுவர் வழுத்திய ஆதிபகவனைத் தடத்த சிவமாகக் கோடற்கு மிடமில்லை யென்க. கடவுளியலில் ஜைநமும் சைவமும் பிரியுமிடமி துவாகும்.

“உலகியற்றியான்” முதலிய திருக்குறள் மொழிகளைக் காட்டிச் சில சைவர், திருவள்ளுவர் பரம்பொருளுக்குப் படைப்புத் தொழில் குறித்துள்ளாரென்று வாதிக்கிறார். “உலகியற்றியான்” என்பது ஜைந சித்தாந்தத்துக்கு முரண் செய்வதன்று. “உலகியற்றல்” என்பது சைவத்துக்கும் ஜைநத்

†

அக்கும் பொதுவாக நிற்பது. முறைப்பாட்டில் இரண்டிற்கும் வேறுபாடுண்டு. விருஷப தேவர் உயிர்கட்குத் தொழில் முதலியவற்றை ஒழுங்குபட இயற்றினாரென்று ஜைந நூல்கள் கூறுகின்றன. திருக்குறள் உரையாசிரியன்மார் சிலர் ஜைந மதம் பற்றியே குறிப்பெழுதி யுள்ளார்.

சிவன் திருமால் முதலிய சொற்களை மட்டுக்கொண்டு சிலர் சமய முடிபுகளை வெளியிடுகிறார். வெறுஞ் சொற்களை மட்டுங் கொண்டு சமய முடிபுகளை வெளியிடுதல் இயலாது. இந்திய நாட்டிற்றோன்றிய பொது நெறியினின்றும் பிரிந்த சமயங்களிலெல்லாம் சிவன் திருமால் முதலிய பெயர்களிருத்தல் காணலாம். ஜைநர்களும் தங்கள் கடவுளாகிய விருஷப தேவரைச் சிவன் திருமால் முதலிய பெயர்களால் வழிபடுகிறார்கள். சைவ வைணவ நூல்களில் காணப்படுங் கடவுளின் ஆயிர நாமங்களைச் சமண நூல்களிலுங் காணலாம். “வந்தே ப்ரம்ஹாண மாத்யம் வ்ரஷபம் - அரிஹரம் த்ரம்பகம் விஷ்ணும் ஈசம்” (ஸ்ரீ புராணம்.)

திருக்குறட்கண் போந்துள்ள சில சொற்களையும், சில சொற்றொடர்களையும் எடுத்துக் காட்டிச் சிலர் திருவள்ளுவரை ‘இச்சமயத்தார் அச்சமயத்தார்’ என்று கூறுப. சிலர் ஜைந நூல்களை நேரே ஆராயாது, மற்றவர்கள் ஜைநத்தைப்பற்றி வரைந்துள்ள நூல்களைப் பயின்று, ஆராய்ச்சித்துறை நண்ணிக் கருத்தை வெளியிடுகிறார். ஜைநம் கடவுளுண்மை மறுக்குஞ் சமய மென்றும், பௌத்த மதத்தினின்றும் ஜைநம் பிறந்ததென்றும், மஹா வீரர் காலத்திலேயே ஜைநம் தோன்றிற்றென்றுஞ் சிலர் எழுதிச் சென்றார். அவருள் மேல் நாட்டவருஞ் சிலருளர். அவர் கூற்றுக்கள் இப்பொழுது சரித்திரக்காரர்களால் மறுக்கப்பட்டு வருகின்றன. அவரவர் தத்தமக்கு அவ்வப்போது கிடைத்த கருவிகளைக் கொண்டு சரித்திரஞ் செப்பஞ் செய்திருக்கலாம். அந்நூல்களைப் படிக்கலாம். ஆனால் அவைகளையே வேதமொழியாக் கொண்டு இடர்ப்படலாகாது. ஒல்லும் வகை முயன்று மூல நூல்களைப் படித்து ஆராய்ச்சியிற் புகுவதே அறமாகும். ஆராய்ச்சியாளர்க்குத் துரபிமானங் கூடாது. ஆராய்ச்சி யென்னும் பெயரால் இந்நாளிற் சிலர் விளைத்துவரூஉம் அனர்த்தங்கட்கோர் அளவில்லை!

ஆதிபகவனை யொட்டி நமது நாட்டில் திரண்டுள்ள பொய் மூட்டைகள் பல; குப்பைமேடுகள் பல. அம்மூட்டைகளை அவிழ்க்கவோ, அக்குப்பைகளைக் கிளறவோ நான் புகப்போவதில்லை. ஆனால் ஒன்றைமட்டுஞ் சிறிதாதல் கிளறாது செல்ல எனது மனமெழவில்லை.

ஆதியென்னும் புலச்சிக்கும், பகவன் என்னும் பார்ப்பானுக்கும் திருவள்ளுவர் பிறந்தாராம்! அக்கிளைவுக் குறியாகத் தாய் தந்தையர் பெயரைக் கடவுள் வாழ்த்தில் முதலில் திருவள்ளுவர் குறிப்பிலுணர்த்தினாராம்! இப்பொய்க் கதையொன்று நாட்டில் உலவுகிறது. ஆதி, பகவன் என்னுஞ் சொற்களைக் கொண்டு எழுங் கதைகளெல்லாம் வெறுங் கதையுலகிலேயே நின்றுகொண்டிருக்கும். அவைகளைச் சரித்திர வுலகமாதல், ஆராய்ச்சி யுலகமாதல் ஏற்குங்கொல்!

திருக்குறளை முதன் முதல் அச்சிற் பொறித்து வெளியிட்டவர் **ஸ்ரீலஸ்ரீ** நாவலர் பெருமானவர். அவர் பதிப்பில் திருவள்ளுவர் வரலாற்றைக் காணோம்.

இப்பொழுது உலவும் போலிவரலாறு, நாவலர் காலத்தில் உலவவில்லைபோலும்! நாவலர் பதிப்பில் திருவள்ளுவர் வரலாறின்மை கண்ட எவரோ ஒருவர் "கபிலர் அகவல்" என்றொரு நூல் யாத்துத் திருவள்ளுவர் வரலாற்றைச் செப்பஞ் செய்திருத்தல் வேண்டும். (அவர் திருத்தணிகை வீரசைவப்புலவருள் ஒருவர் என்று ஸ்ரீமத் பாம்பன் குமாரகுருதாச சுவாமிகள் சொல்ல யான் கேட்டிருக்கிறேன்.)

நமது நாட்டு ஆசிரியன்மார் தமது வரலாற்றைத் தாமே எழுதவில்லை. தம்மால் இயற்றப்படும் நூல்களிலுந் தம் பெயர் பொறித்தலாகாது என்னும் நியதியைப் பழைய அடிகண்மார் பூண்டிருந்தா ரென்றுஞ் சொல்லப்படுகிறது. எவ்வுயிரையுந் தம்முயிராக் கொண்டு வாழ்ந்த அன்னார் தம்மொழிகளையுந் தம்முடையனவாகக் கருதவில்லைபோலும்! முனைப்பற்றுத் தமக்கென வாழாது, மற்றவர்பொருட்டு வாழ்வு நடாத்திய பெரியோர்கள் தங்கள் வரலாற்றில் தாங்கள் கருத்துச் செலுத்தவில்லை போலும்! அவர்கள் வரலாறுகள் பெரிதும் அவர்கள் பின்வந்தவர்களால் எழுதப்பட்டன. அவ்வரலாறுகளைக் கொண்டு முதலாசிரியர்களையே சிலர் தூக்குகிறார். இஃது அறிவுடைமையாகாது. எடுத்துக்காட்டாக ஈண்டொன்று சொல்கிறேன்.

| திருஞான சம்பந்தர் சமணர்களைக் கழுவேற்றினா ரென்பதற்குப் போதிய சான்றில்லை. அவர் பின் தோன்றிய சிலரால் எழுதப்பெற்ற புராணங்களின் கூற்றுக்களைக் கொண்டு, அவர்மீது பழி பாவங்களைச் சுமத்துகிறார் சிலர். இத்தகை மடமை நாட்டை விடுத்து என்று அகலுமோ அறிகிலேன். திருஞான சம்பந்தர் சமணர்களைக் கழுவேற்றினார் என்பதற்குச் சமண நூல்களில் சான்று ஒன்றுமில்லை என்பதும் ஈண்டுக் கருதற்பாற்று. |

திருஞான சம்பந்தர் சமண சமயத்தையே அழிக்கப் போந்தாரென்றுஞ் சிலர் கூறுப. இது, நிகழ்ச்சிகளைச் சரித்திர முறையில் ஆராயாதார் கூற்றாக முடியும். திருஞான சம்பந்தர் ஜைன தர்மத்தை அழிக்க முயன்றாரென்பதற்கு அவரருளிய தேவாரத்தில் சான்றே யில்லை. அவர் காலத்தில் விருஷபதேவர் அறிவுறுத்திய அறவொழுக்கத்துக்கு மாறுபட்ட வினைகளை நிகழ்த்திய மற்றோர் திறங்களை (கொள்கைகளை) அவர் தாக்கியிருத்தல் உண்மை. "சமண் சாக்கியம் ஆக்கிய வாறே" என்னுந் திருமொழியில் 'சமண சமயமும் ஆண்டவனால் ஆக்கப்பட்டது' என்று உணர்த்திய ஞானசம்பந்தரா ஜைன தர்மத்தை அழிக்க முயன்றிருப்பர்? நன்று! நன்று! இது குறித்துத் "தமிழ் நூல்களில் பௌத்தம்" என்னும் நூலிலும், அதன் முன்னுரையிலும் எனது கருத்தை வெளியிட்டிருக்கிறேன்.

"இன்னவுரு இன்ன நிறம் என் றறிவதேலரிது நீதி பலவும் - தன்னவுருவாமென மிகுத்ததவன் நீதியொடுதானமர்விடம்"—இது திருஞான சம்பந்தர் திருவாக்குகளுள் ஒன்று. "நீதி பலவும் தன்னவுருவாமென மிகுத்ததவன்" என்னுங் கருத்து, ஜைன தர்மத்தை அரண் செய்வதா அல்லது முரண் செய்வதா என்பது உன்னற்பாலது. இவ்வுரை வழங்கிய ஒருவரா ஜைன தர்மத்தை யழிக்க எண்ணியிருப்பர்?

திருக்குறள் கடவுள் வாழ்த்தைப் பீடிகையாக் கொண்டு, இந்நூலாசிரியர் அரியதோர் ஆராய்ச்சி நிகழ்த்தித் திருவள்ளுவர் ஜைநர் என்று நிறுவிக் காட்டியுள்ளார். இம்முடிபைத்—திருவள்ளுவர் நெறி அருநெறி அல்லது பொது நெறிக்குரிய விருஷபதேவர் ஜைநம் என்றும், பிற்காலத்தில் பல நிறக் கட்டுக்களால் கட்டுண்டு குறுகிய ஜைநம் அன்றென்றும் பாகு படுத்தி ஏற்க என் மனம் ஒருப்படுகிறது.

பெண், வீடுபேற்றிற்குத் தடையாயிருப்பவள் என்பதும், பெண்ணை வெறுத்தல் துறவு என்பதும், இன்னோரன்ன பிறவும் பிற்கால ஜைநத்திற் காணப்படுகின்றன. இவைகள் இக்கால ஜைநர்களிடைக் கருத்து வேற்றுமையையும் விளைத்து வருகின்றன. திருவள்ளுவர், "பெண்ணிற் பெருந்தக்கயாவுள" என்று பெண் பெருமை பேசிய பெரியவர்; பெண்ணை வெறுத்தல் துறவு என்று யாண்டுங் கூறாத அறவோர்.

பெண்ணுலகைப்பற்றித் திருவள்ளுவர் கொண்ட கருத்தை, என்னால் யாக்கப் பெற்ற "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை" என்னும் நூலில் 'இயற்கை யறம்' என்னும் பகுதியில் தெருட்டிக் கூறியுள்ளேன். "பெண் வழிச் சேறல்" என்னும் அதிகாரத்தின் உள்ளக் கிடக்கை அப்பகுதியில் விளக்க ஓதப்பட்டிருக்கிறது.

பிறசமய மறுப்புரைகள் இந்நூற்கண் ஆங்காங்கே காணப்படுகின்றன. மறுப்புரைகள் இக்காலப் போக்குக்கு நலஞ் செய்யா என்பது எனது கருத்து. சமயங்களிலுள்ள பொதுமையை யுணர்த்தி, மக்களின் ஒருமைப் பாட்டுக்கு உழைக்கப் புகுதலே காலப் போக்குக் குரிய முறையாகும். இந்நூற்கண் போந்துள்ள பிற சமய மறுப்புரைகள் அவ்வச் சமயப் பௌராணிகத்தைப் பொருளாக் கொண்டெழுந்தனவாகத் தோன்றுகின்றன. பௌராணிகம் ஒரோவழி நடந்த வரலாறுகளைக் கூறுவது. ஆதலால் பொருளாராய்ச்சியிற் புகுவோர் பௌராணிகத்தை முற்றுங் கோடல் சிறப்பன்று.

இந்நூலாசிரியர், திருக்குறள் கடவுள் வாழ்த்துக்கு விரித்த ஆராய்ச்சியுரை காணப் புகுந்து, அதனிடைப் பயன் தரத்தக்க பொருள் பல பெய்திருத்தல் அவரது பன்னூற் பயிற்சியைப் புலப்படுத்துகிறது. ஸ்ரீராமபிரான் கொலைவினை புரியவில்லை யென்றும், திரௌபதை ஐவர்க்கு நாயகியாய் வாழ்க்கைப்படவில்லை யென்றும் ஜைந ராமாயண பாரதங்களை ஆதாரமாகக் நிறுத்தி வெளியிட்டுள்ள உட்கிடக்கைகளும், இன்ன பிறவுங் கழிபேருவகையூட்டுகின்றன. ஆராய்ச்சி மிகுந்த இந்நாளில் ஜைந ராமாயண பாரதங்களைப் பலர் தொடாதிருத்தல் வருந்தத் தக்கது. பண்டைச் சமண நூல்களை ஆராய்வதால் பல நுட்பங்கள் அறிதல் கூடுமென்று எனது அநுபவங் கொண்டு சொல்கிறேன்.

நன் முயற்சியில் தலைப்பட்டுழைத்து, இந்நூலைத் தமிழுலகிற்குதவிய அறிஞர் · திருவாளர் - தி. அநந்த நாத நயினர் அவர்கட்கு எனது நன்றி யறிதல் உரியதாக. இந்நூலைத் தமிழுலகம் ஆதரிப்பதாக.

சென்னை,
24-7-1930.

திரு. வி. கலியாணசுந்தரன்

---

அணிந்துரை Printed at the Sadhu Press, Madras.

# FOREWORD

This book is an attempt to establish that the illustrious author of the Kurral was a Jaina by faith.

Since several sects claim the author of Kurral we have to decide the faith of the author mainly on internal evidence and the internal evidence is quite clear and decisive. It is a unique code of morals based upon the principle of Ahimsa.

"Every Hindu sect claims the great poet, and strives to interpret his verses so far as to favour its own dogmas.......The Jains especially consider him their own and he has certainly used several of their technical terms, and seems to have been cognizant of the latest developments of that System."

"There is one couplet, however, that is destructive of the idea that Tiruvalluvar was a Jain. In Chapter III fifth couplet, a story regarding Indra is referred to as proving that ascetics have power over the Gods. The sage was Goutama, who cursed Indra for deceiving the Sage's wife Ahalya. Now according to Jain ideas, a sage could have no wife nor could he feel the emotion of anger, nor had he the power to inflict punishment. A Jain would not believe the story, and could scarcely use it as the author of the Kurral has done." So declared Dr. Pope who probably knew next to nothing about Jainism and Jaina doctrines. The very fact that he translates "Jinendra" as "the Lord of Wrath" exposes his colossal ignorance of Jainism and makes him forfeit his claim to pass any verdict on the question. The critic who does not know the difference between "Jina" and "Cina" and who derives the word from the Tamil word சினம்—anger and who imagines that "Jinendra" is the Indian prototype of Hebrew "Jehovah" "the God of Wrath" is least qualified to express an opinion as to the author of the Kurral—"the Tamil Gospel of Ahimsa." It is not necessary to point out that the great author of the Kurral does not refer to the story of Indra's escapade with Ahalya nor to Goutama's curse thereby. The story originates in the fertile but perverse imagina-

tion of the commentator "Parimelazhaker" who very often reads into the text very many ideas foreign to and not contemplated by the author of the Kurral. As is ably pointed by the writer of this booklet the only reference in this text is to Indra's service to the Vitaraga—the great, who is worshipped even by the chief member of the Vedic Pantheon. However, there is nothing in this much-misunderstood couplet that is inconsistent with Jaina Dharma.

Again in a course of lectures recently delivered under the auspices of the Annamalai University it is claimed that the author of the Kurral borrowed his ideas from Vedic Hinduism and that his work is but a close translation from Sanskrit works such as Bodhayana's Dharma Sastra, Koutelya's "Arthasastra and Vatsayana's "Kama Sastra." This claim is so unwarranted that it will be repudiated by any one who has an elementary knowledge of Vedic Dharma.

Bodhayana's Dharma Sastra of which so much is said in those lectures is entirely based on Varnashrama Dharma of the Vedic type and is on the opposite pole to Ahimsa doctrine. Bodhayana starts with traditional duties of the four castes as prescribed in Dharma Sastras of Manu, Goutama and others. To take one illustration.—**Madhuparka**—"Feasting the guests." The list of pure beasts and birds fit for Brahman consumption in which figure cows, goats, stags, boars, rhinoceros &c. would stagger even the confirmed meat-eating Non-Brahman of Modern India. This Dharma Sastra is claimed to be the original fountain source of the ideas contained in the Kurral! There animal sacrifice according to the Vedas forms the central theme; here condemnation of the same in unequivocal terms and praising of non-injury as the primary Dharma. "Not killing a single creature for the sake of your food is far better than a thousand yagas performed according to Vedic rules." There you have the necessity of providing beaf, pork, venison and rhinoceros flesh as the delicate dishes for "The Fathers", "Guests" and Gods. Here you have a disgusting reference to meat-eating-meat being compared to a vicious sore on an animal's body and yet it is said that the Kurral owes its ideas to Bodayana's Dharma Sastra!

Again look at the emphasis laid on agriculture. According to Vedic Dharma tilling the soil is the occupation of the last caste.

A Brahman or a Kshatriya cannot think of it unless he is degraded and degenerate enough not to be able to go on with his legitimate occupation. But the author of the Kurral gives precedence to the tiller of the soil. He is put in the forefront of Social rank, everybody else being next to him in as much as he is a parasite on society. Let us not enter into details.

The only Darsana that can lay any claim with some amount of justification to the authorship of the Kurral is Bauddha Darsana. Even this is excluded by the Kurral which condemns the lip service to Ahimsa which is characteristic of Buddhism. The Buddhist practises Ahimsa in so far as he does not himself slaughter the animal. But he can purchase meat from the butcher without violating his principle. The author of the Kurral fixes the responsibility on the right shoulders. The butcher carries on his trade for the benefit of the meat eater ; it is a question of demand and supply. Hence the real responsibility is on the side of demand which sustains the trade.

It is not necessary to say anything more. It is enough to state that the Kurral is the great Gospel of Ahimsa in all its details. The only Indian Darsana that is in conformity both in theory and practice with the ideas contained in the Kurral is Jaina Darsana and this point is ably established in the book to which I have the privilege of writing this foreword.

**A. CHAKRAVARTI, M. A., I. E. S.,**
*Principal,*
Government Arts College,
Rajahmundry.

---

# முன்னுரை

ஸ்ரீமான் அ. சக்கிரவர்த்தி நயினார், எம். ஏ., ஐ. இ. எஸ்.,

இராஜமகேந்திரம் அரசாங்கக் கல்லூரி தலைமை ஆசிரியர் அவர்கள்

ஆங்கில முன்னுரையின் மொழிபெயர்ப்பு

இந்தப் புத்தகம், பிரசித்தி வாய்ந்த திருக்குறளின் ஆசிரியர், ஜைந சமயத்தினரென்று நிரூபிக்க எழுதப்பட்டுள்ளது. பல மதத்தினரும் குறளாசிரியரைத் தம்மவரென்று கூறுகின்றபடியால் அவருடைய மதம் இன்னதென்று காண அவருடைய நூலின் உட்சான்றுகளே நமக்கு ஆதாரம். உட்சான்று சந்தேகமற்றதாயும் நிச்சயமானதாயு மிருக்கின்றது. திருக்குறள் அஹிம்சா தருமத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பற்ற நீதி நூலாகும்.

"ஹிந்துமதத்தின் ஒவ்வொரு பிரிவும் அந்தப்பெரிய கவியைத் தன்னுடையதாகச்சொல்லி அவருடைய செய்யுட்களுக்குத் தன்மதக் கோட்பாடுகளுக்கொப்ப உரை காண முயல்கின்றது. முக்கியமாக ஜைநர் அவரைத் தம்மவராகக் கருதுகின்றனர்; அவர்களுடைய பரிபாஷைகளுள் சிலவற்றை அவர் நிச்சயமாகவே உபயோகித்துள்ளார். அம்மதத்தின் கொள்கைகளை அவர் நன்கு உணர்ந்திருந்ததாகத் தெரிகின்றது."

"ஆனால் திருவள்ளுவர் ஜைநர் என்னும் கொள்கைக்கு விரோதமாக ஒரு குறள் இருக்கின்றது. மூன்றாவது அதிகாரம் ஐந்தாவது குறளில் இந்திரனைப் பற்றிய ஒருகதை குறிப்பிடப்பட்டுள்ளது. அறவிகள், தேவர்களுக்குமேல் சக்தி வாய்ந்தவர்கள் என்பதை அது ருசுப்படுத்துவதாகக் கருதப்படுகின்றது. கௌதமர் என்னும் ஒரு அறவி இருந்தார். தம்முடைய மனைவியாகிய அகலிகையை இந்திரன் ஏமாற்றினான். அதற்காக அவர் அவனைச் சபித்தார். ஜைந சமயத்தின்படி அறவிக்கு மனைவியிருக்க முடியாது; அவர் கோபமடையவும் முடியாது. பிறருக்கு தண்டனை விதிக்கவும் முடியாது. ஒரு ஜைநர் இந்தக் கதையை நம்பமாட்டார்; குறளாசிரியர் செய்ததுபோல இதை உபயோகப்படுத்தவும் மாட்டார்." இவ்வாறு டாக்டர் போப் கூறியுள்ளார். ஜைநசமயத்தைப்பற்றியும் ஜைநக் கொள்கைகளைப்பற்றியும் அவருக்கு ஒன்றும் தெரியாது போலும். "ஜிதேந்திரன்" என்னும் பதத்திற்குக் "கோபத்திற் கதிபதி" என்று அவர் பொருள் கூறுகின்றார். அவர் ஜைநசமயத்தை அறிந்தவரல்லவென்பதை இதுவே வெளிப்படுத்துகின்றது. "ஜிநன்" "சினன்" ஆகியவற்றிற்குள்ள வித்தியாசத்தை உணராத ஒருவர், ஜிநன் என்னும் பெயர் சினம் (கோபம்) என்னும் தமிழ்ச் சொல்லினின்றும் பிறந்ததாகக் கருதும் ஒருவர், ஜிதேந்திரன், ஹீப்ரு ஜனங்களின் கோபக் கடவுளாகிய ஜிகோவாவைப் போன்றவரென்று நினைக்கும் ஒருவர், அஹிம்சையை போதிக்கும் தமிழ் ஆகமமாகிய குறளின் ஆசிரியரைப்பற்றி

அபிப்பிராயம் சொல்லச் சிறிதும் யோக்கியதை யுடையவரல்லர். இந்திரன் அகலிகையோடு செய்த தீச் செய்கையையாவது, அதற்காக கௌதமர் இட்ட சாபத்தையாவது குறளின் பேராசிரியர் குறிப்பிடவில்லை என்று எடுத்துக் காட்ட வேண்டியதவசியமில்லை. இந்தக் கதை உரையாசிரியரான பரிமேலழகருடைய ஆழ்ந்ததும் நேர்மையில்லாததுமான யுக்தியிலுதித்தது. அவர் குறளாசிரியர் நினையாத அநேக கருத்துக்களைப் பலவிடங்களில் மூலபாடத்தோடு பொருத்த முயல்கிறார். இப்புத்தகத்தின் ஆசிரியர் சாதுரியமாகக் காட்டியுள்ளபடி அந்தக் குறள், வேதங்களில் புகழப்படும் தெய்வங்களுக்கு முதன்மையானவனால் வணங்கப்படும் பரமவீதராகனுக்கு இந்திரன் செய்யும் தொண்டைக் குறிக்கின்றது. ஆகையால் மிகவும் தப்பாகப் பொருள் கொள்ளப்படும் இந்தக் குறளில் ஜைந தருமத்திற்கு விரோதமானது ஒன்றுமில்லை.

இன்னும் சமீபகாலத்தில் **அண்ணாமலை சர்வ கலாசாலையின்** சார்பில் சில கட்டுரைகள் செய்யப்பட்டன. அவற்றுள், குறளாசிரியர் தம்முடைய கருத்துக்களை வைதிக ஹிந்து மதத்திலிருந்து பெற்றாரென்றும், அவருடைய நூல் சமஸ்கிருதத்திலுள்ள போதாயனருடைய தர்ம சாஸ்திரம், கௌடில்யருடைய அர்த்த சாஸ்திரம், வத்ஸாயனருடைய காம சாஸ்திரம் ஆகியவற்றின் மொழி பெயர்ப்பென்றும் கூறப்பட்டன. இந்தக் கொள்கை எவ்வளவு பொருத்தமற்றதென்பது வைதிக தருமத்தைப்பற்றி சிறிது தெரிந்தவருக்கும் நன்குவிளங்கும்.

போதாயனருடைய தர்ம சாஸ்திரம் வைதிகமதத்தின் வர்ணாஸ்ரம தருமத்தை முற்றும் அடிப்படையாக உடையது. அது அஹிம்சா தருமத்திற்கு நேர் எதிரானது. மனு, கௌதமர் ஆகியவர்கள் கூறியிருக்கும் நான்கு வர்ணத்தாருடைய தொழில்களையும் போதாயனர் கூறுகின்றார். உதாரணமாக மதுபர்க்கம் அல்லது அதிதிகளுக்கு விருந்தளித்தல் என்ற அதிகாரத்தில் பிராமணபோஜனத்திற்குத் தகுதியான மிருகங்கள் இன்னின்னவென்று கூறப்பட்டுள்ளன. அவற்றுள் பசுக்களும், செம்மறியாடுகளும், மான்களும், காட்டுப்பன்றிகளும், காண்டாமிருகங்களும் அடங்கியுள்ளன. இது தற்காலத்தில் மாமிசம் உண்கின்ற பிராமணரல்லாதாரையும் நடுங்கும்படிச் செய்யும். இந்த தருமசாஸ்திரம் திருக்குறளில் கூறப்பட்டுள்ள கருத்துக்களுக்கு **உற்பத்தி ஸ்தானமாகக் கருதப்படுகின்றது!** அங்கே (தரும சாஸ்திரத்தில்) வேதானுசாரப்படி ஜீவஹிம்ஸை செய்வதே முக்கியமான கொள்கை; இங்கே (திருக்குறளில்) அதை முழுதும் கண்டித்துக் கொல்லாமையே சிறந்த தருமமென்று புகழ்வதாகும். “அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று” என்றார். அங்கே பித்ருக்களுக்கும், அதிதிகளுக்கும், தேவதைகளுக்கும் மாட்டிறைச்சி, பன்றியிறைச்சி, மான் இறைச்சி, காண்டா மிருகத்தின் மாமிசம் ஆகியவற்றைச் சிறந்த ஆகாரமாகக்கொடுக்கும்படி சொல்லப்பட்டுள்ளது. இங்கே (திருக்குறளில்) புலால் உண்பது மிகவும் இழிவாகக் கூறப்பட்டுள்ளது. புலால் ஒரு பிராணியின் புண்ணுக்குச் சமானமாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறிருக்கத் திருக்குறளின்

கருத்துக்கள் போதாயனருடைய தரும சாஸ்திரத்திலிருந்து பெறப்பட்டனவாம்! இது என்ன ஆச்சரியம்!

இன்னும் திருக்குறளில் உழவுத் தொழிலைச் சிறப்பித்துக் கூறியிருப்பதை நோக்குக. வைதிக தருமப்படி நிலத்தை உழுது பயிர் செய்தல் கடை வருணத்தாருடைய தொழில். தன்னுடைய ஜாதிக்குரிய தொழிலைச் செய்ய முடியாமல் இழிந்த நிலைமையை அடைந்தாலொழிய ஒரு பிராம்மணனாவது க்ஷத்திரியனாவது பயிர்த்தொழிலைச் செய்ய நினைக்கமுடியாது. குறளாசிரியர் நிலத்தை உழுபவனுக்கு முதன்மை கொடுத்திருக்கிறார். அவனே ஜனசமூகத்தில் முன் நிற்கின்றான். மற்றெல்லோரும் அவன் பின்னே செல்கின்றவர்கள். நாம் இங்கே அதிகம் எழுதவேண்டியதில்லை.

குறளாசிரியரைத் தம்மவரென்று சிறிது நியாயத்தோடு கூறக் கூடியவர் பௌத்த சமயத்தினர் ஒருவரே. ஆனால் வாய்ப்பேச்சோடு நிற்கும் பௌத்த சமயத்தினுடைய அஹிம்சாதர்மக் கொள்கையைத் திருக்குறள் கண்டிக்கின்றது. பௌத்தன் தன் கையால் எந்த ஜீவனையும் கொல்லுவதில்லை. அவனுடைய அஹிம்ஸாதர்ம அனுஷ்டானம் அதோடு நின்றுவிடும். ஆனால் அவன் தன்னுடைய கொள்கைக்கு விரோதமின்றி மாமிசத்தைக்கடையிலிருந்து வாங்கிக்கொள்ளலாம். ஆனால் குறளாசிரியர், பொறுப்பைச் சரியானயிடத்தில் இறுத்துகின்றார். புலால் உண்கின்றவர்களுடைய சௌகரியத்திற்காகக் கடைக்காரன் புலாலை விற்கின்றான். தேவைக்கு ஏற்றபடி உற்பத்தி செய்ய வேண்டியதாயிருக்கிறது. புலால் அதிகம் தேவையானால் அதிகமாக ஜீவன்களைக் கொலைசெய்ய வேண்டியது அவசியமாகின்றது. தேவை மட்டானால் கொலை மட்டாகும். தேவைக்குத் தகுந்த மாதிரியே வியாபாரமும் நடக்கும்.

இனிமேல் ஒன்றும் சொல்ல வேண்டியதவசியமில்லை. திருக்குறள் அஹிம்சா தருமத்தை எல்லா அம்சங்களிலும் போதிக்கின்ற ஒரு பெரிய ஆகமம் என்று சொன்னால் போதுமானது. கொள்கையிலும் அனுஷ்டானத்திலும் திருக்குறளின் கருத்துக்களோடு ஒத்திருக்கும் ஒரே இந்திய மதம் ஜைனசமயமே. இவ்விஷயம் இந்தப் புத்தகத்தில் சாதுரியமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகத்திற்கு முன்னுரை எழுதும் பாக்கியம் பெற்றதற்கு நான் பெரிதும் மகிழ்வெய்துகிறேன்.

## சின்ன காஞ்சிபுரம் தமிழ்ப் பண்டிதர் T. R. சீனிவாச ஆசாரியார் அவர்கள் மதிப்புரை.

---

தமிழ் இலக்கியத்தில் சிறப்புற்றோங்கி வளரும் குறள் என்ற நீதிநூலைத் தமிழ் நாட்டில் அறியாதவர் அறியாதவரே ஆவர். இந்நூல் அறம் பொருள் இன்பம் என்னும் விஷயங்களின் பாகுபாட்டையும் அதனால் அடையும் பயன்களையும் தெளிவாய்க் கூறுகின்றது. ஆரியருக்கு மனுதர்ம சாஸ்திரம் சுக்கிர நீதி முதலிய நீதிநூல்கள் எவ்வாறு முக்கியமானவைகளோ, தமிழருக்கு இந்நூலும் அப்பேர்ப்பட்டதே. இத்தகைய சிறப்பு வாய்ந்த நூலை யியற்றியவர் யார்? அவர் எக்காலத்தவர்? அவர் சமயம் யாது? என்பவைகளைப் பற்றிச் சுருக்கமாய் ஆராய்வோம்.

குறளின் நூலாசிரியர் திருவள்ளுவர் என்பர். அவர் கடைச்சங்க காலத்திற்கு முன்னே இருந்தவர் ஆவர். இக்கடைச் சங்கமோ ஒன்றாவது இரண்டாவது நூற்றாண்டில் இருந்ததாகத் தமிழ் ஆராய்ச்சி வல்லவர்கள் தக்க நியாயங்களைக் கொண்டு ஸ்திரப்படுத்தி யிருக்கின்றார்கள். ஆகையால் வள்ளுவர் காலமும் 1, 2 நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே என்று ஏற்படுகின்றது. ஏனெனில் சங்கப் புலவர்களாகிய நக்கீரர், நல்லந்துவனார், கபிலர், பரணர் முதலானோர் இத்திருக் குறளின் கருத்துக்களையும் அடிகளையும் அடிகளின் தொடர்களையும் கையாண்டு இருக்கிறார்கள். இம்மட்டோ! சைவ சமயாசாரியர்களான அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர் முதலானவர்களும், வைணவ சித்தாந்த தேசிகர்களாம் நம்மாழ்வார் முதலிய ஞானாசாரியர்களும் குறட்பாக்களை யெடுத்தாண்டிருக்கிறார்கள். இனி அவர் சமயத்தைப் பற்றி ஆராய்வோம்.

இவர் இன்ன சமயத்தினர் என்று துணிந்து கூறுவதற்குத் தகுந்த சான்று இல்லை என்பார் ஒரு சாரார்; மற்றொரு சாரார் இவரைச் சைவர் என்பர். அவர்கள் அப்படிக் கூறுவதற்குக் 'கடவுள் வாழ்த்தில்' குறளாசிரியர் 'எண் குணத்தான்' என்ற சொற்றொடரை உபயோகப்படுத்தி யிருப்பதாலும், அச்சொற்றொடர் சிவபிரானுக்குத்தான் பொருந்தியுள்ளது என்றும் அவர்கள் கொண்ட கொள்கைக்கு காரணங் காட்டுவர். மற்றும் அவர்கள் கூறும் மற்றொரு காரணம் ஔவை அவர் (திருவள்ளுவர்) தமக்கையாம்; அவள் சிவபக்தளாம். ஆகையால் இவரும் சிவபக்தராய்த்தான் இருந்திருப்பாராம். ஏதோ ஒரு தனிப்பாடலில் 'பூவில் அயனும் புரந்தானும்' என்று கூறிச் சிவனைப் புகழ்ந்திருக்கிறாராம். அதுவும் அவரது சைவ சமயத்தைத் தெளிவாய்க்கூறுகின்றது என்றும் உரைப்பர். இத்துடன் நில்லாமல் 'நாயனார்' என்ற பட்டம் சிவபக்தருக்குத்தான் உரியது என்றும் இவரும் அப்பட்டத்தை வகித்ததால் இவர் சைவ சமயியாய்த்தான் இருக்கவேண்டுமென்றுங்கூறி வாதாடுவர்.

இம்மூன்று கொள்கைகளும் நியாய வாயிலாக யோசிக்குமிடத்து ஒன்றும் நிலைக்கு நில்லா. 'எண் குணத்தான்' என்ற சொற்றொடர் சிவனை மாத்

நிரமா குறிக்கின்றது? விஷ்ணுவையும் 'எண் குணத்தான்' என்று திருச்சந்த விருத்தம் முதலிய வைணவ நூல்கள் கதறுகின்றனவே! அருகரையும் 'எண் குணத்தான்' என்று அருகநூல் சாதிக்கின்றது. ஆனால் கடவுள் வாழ்த்தில் 'எண் குணத்தான்' என்றும், 'மலர்மிசை யேகினான்' என்றும், 'பொறி வாயிலைந் தவித்தான்' என்றும், 'பகவன் வேண்டுதல் வேண்டாமை இலான்' என்றும், 'அறவாழி அந்தணன்' என்றும் வரும் சொல்லையும் சொற்றொடர்களையும் உபயோகப்படுத்துவதாலும் அவைகள் அருகருக்கே உரியவையென்று நிகண்டு முதலிய நூல்கள் சான்றுகூறுவதாலும் 'எண்குணத்தான்' என்று குறளில் வழங்கியிருப்பது அருகரைக் குறித்தே அல்லாமல் சிவனைக் குறித்து அல்ல. 'ஔவையார் சைவர், அவர் தம்பியாகிய இவரும் சைவர்' என்பதும், 'பூவில் அயனும்' என்ற ஒருதனிப்பாட்டையும் இதற்கு அனுகுணமான ஓர் ஆதாரமற்ற கதையையும் மேற்கோளாகக் காட்டுவதும் ஒப்புக்கொள்ளத்தக்கன அல்ல. ஏனெனில் குறளில் எங்கேயாவது சிவனையாவது சைவ வழிபாட்டைப் பற்றியாவது கூறியிருக்கின்றாரா? மருந்துக்கும் காணோமே!

இதுபோக வைணவர் இவரை வைணவர் என்று கூறுவர். இதற்குக் காரணம், இவர் குறளில் 'தாமரைக் கண்ணான் உலகு' என்று உபயோகப்படுத்தியிருப்பதால் அத்தொடர் விஷ்ணுவைத்தான் குறிக்குமே யல்லாது, மற்றத்தெய்வத்தைக் குறிக்காது என்ற பிடிவாதக் கொள்கைதான். 'தாமரைக் கண்ணான்' என்ற சொற்றொடருக்கு இந்திரன் என்ற பொருளிலும், கம்பர் பலதடவையில் உபயோகப்படுத்தி யிருக்கிறார். ஆகையால் வைணவர் கூற்று உபயோகமற்ற கூற்றாய் முடிகிறது.

பௌத்தர் என்றாலோ, பௌத்தர்கள் ஜீவனில்லை மறுபிறப்பில்லை என்கிறார்கள். கொல்லாமை புலால் மறுத்தலை இவர்கள் வெறுக்கவில்லை. ஜீவன் உண்டு என்றும், மறுபிறப்பு உண்டென்றும், கொல்லாமையையும் புலால்மறுத்தலையும் குறளில் வற்புறுத்தி யிருக்கிறார். ஆகையால் வள்ளுவர் பௌத்தர் ஆகார்.

ஆனால் இவர் (திருவள்ளுவர்) சமணர்தான் என்று சொல்வதற்குத்தக்க நியாயங்கள் உள்ளன. கடவுள் வாழ்த்தில் பகவன், அறிவன், மலர்மிசை ஏகினான், இறைவன், ஐந்தவித்தான், அறவாழி அந்தணன், எண்குணத்தான் என்று அருகக்கடவுளுக்குப்பெயராக வழங்கும் சொற்களை உபயோகப்படுத்தியிருப்பதும், அருகசரணம், சித்தசரணம், சாது சரணம், தர்மசரணம் என்ற ஜைன சமயத் துதியாகிய நான்கிற்கும் பதிலாகக்கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்ற நான்கு விஷயங்களையும் பதில் பேரிட்டு கூறியிருப்பதாலும் புலால் மறுத்தல், கொல்லாமை முதலிய ஒழுக்கங்களைக் 'கொல்லான் புலாலைமறுத்தானை' என்ற செய்யுளிலும், 'அவிசொரிந்து' என்ற செய்யுளிலும் வற்புறுத்திக் கூறுதலாலும் இவர் சமணரே என்க. இவர் அருகனைக்குறிக்கும் சொற்களையே சிலப்பதிகாரம், சிந்தாமணி, நிகண்டு முதலிய நூற்றிலும் கூறியிருப்பதும் காண்க:— "அறிவன் அறவோன் அறிவரம்பிகந்

தோன்" "செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்" "இறைவன்" "எண்குணத்தான்" "ஐவரை வென்றான்" "மலர்மிசை நடந்த மலரடி"—சிலப்பதிகாரம் "பகை நண் போடிப்பான்"—சிந்தாமணி "அற வாழி அந்தணன்"—திவாகரம், ஆயினும் சிலர் "உலகியற்றியான்" அந்தணர் நூல் "மறப்பினும் ஒத்துக்கொள்ளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக்கெடும்" "அறு தொழிலோர் நூல் மறப்பர்" என்று திருக்குறளில் வழங்கியிருப்பதைக்கொண்டு சமணக்கொள்கையை மறுக்க எழுவோர் பரிமேலழகர் வைதிக மதக்கொள்கைகளையும் கதைகளையும் யுக்திக்குத்தகுந்தவாறு புகட்டி வலிந்து பொருள் கொள்வதை ஆராய்ச்சி செய்யாதவரேயாவர். ஆனால் சமணக்கொள்கைகளையும் கதைகளையும் ஆதாரமாகக் கொண்டு சொல் கடந்த வழியே பொருள் நோக்கினால் பரிமேலழகரே வலிந்து பொருள் கொண்டாரென்று ஏற்படும். இவ்விஷயத்தைக் காஞ்சிபுரம் தீ. அனந்தநாதநைனர் ஆலோசித்து ஆராய்ந்து எழுதிய "திருக்குறள் ஆராய்ச்சி" என்ற புத்தகத்தில் பரிமேலழகர் வலிந்து பொருள் கொண்டதைக்கண்டித்து ஜைந சமயத்திற்கு எவ்வளவு தூரம் பொருத்தமாயிருக்கிறதென்பதை விவரித்திருக்கிறார். நான் படித்தமட்டில் அவர் கருத்து சரியாக இருக்கிறது என்றே புலப்படுகிறது.

தொல்காப்பியச் சூத்திரத்தில் "வினையினீங்கிய" என்ற செய்யுளுக்கு பொருத்தமான பொருள் நோக்கில் வினையில் கொஞ்ச காலம் சம்பந்தப்பட்டிருந்து பின்பு நீங்கிய அறிவையுடையவன் இறைவனாகும் என்று புலப்படுகிறது இவ் வடைமொழிகள் அருகருக்கு பொருந்தி இருப்பதுபோல மற்ற தெய்வங்களுக்குப் பொருந்த வில்லை. ஜைநர் கொள்கைப் பிரகாரம் அருகர் வினையிலே சிலகாலம் கிடந்து பிறகு அதனின்று நீங்கி அறிவையடைந்து விளங்கினார், என்றும் மற்ற தெய்வங்களுக்கு வினையே இல்லையென்றும் புராணங்கள் கூறுகின்றன ஆகையால் தொல்காப்பியர் மதமும் ஜைநம் என்றே தெளிவாகின்றது.

T. R. SRINIVASA CHARIAR,

Tamil Pandit and Government Pensioner,

Revenue Department,

Little Conjeevaram.

---

சேம்பூர் தமிழ்ப்புலவர்

## திருவாளர். வீ. ஆறுமுகஞ்சேர்வை அவர்கள் எழுதிய

# த க வு ரை.

---

இந்நூலை இயற்றிய, திருவாளர். காஞ்சிப்பதி. தி. அனந்தநாத நயினார் அவர்கள், என்பால், பன்னாட்களாக உண்மை நட்புரிமை பூண்டவர்கள். இவர்கள், என்னோடு பழகிய காலந்தொட்டே, இந்நூலை இயற்ற விரும்பி யிருப்பதாகக் கூறிவந்தார்கள். கூறியவாறே விடாப்பிடியுடன் இப்புத்தகத்தை இயற்றிச் சுமார் நான்கு ஆண்டுகட்கு முன்னர்த் தமிழைச் செவ்விதாக்கித் தருமாறு என்னிடம் கொடுத்து வேண்டினார்கள். நான் இவர்களின் விருப்பிற்கிசைந்து, இப்புத்தக முழுவதையும் பார்த்துத் தமிழின் இலக்கிய இலக்கணப் பகுதிகளில் திருத்தவேண்டியவைகளைத் திருத்தி என்னால் இயன்றவரை தமிழ்நடையை ஒழுங்குறவமைத் துதவினேன்.

இவ்வாராய்ச்சி நூலை எழுதி முடித்தற்கு இந்நயினாரவர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் உழைப்பு அளவிடற்பாலதன்றாம். இவர்கள், தங்களுடைய கொள்கைகளில் ஒவ்வொன்றையும் உறுதிப்படுத்துதற்குப் பற்பல வடமொழி, தென்மொழி நூல்களை ஆராய்ந்து நூற்றுக்கணக்கான மேற்கோள்களை எடுத்துக்காட்டி யிருக்கின்றார்கள். படிப்பே தொழிலாகவுடைய பெரும்புலவர்களாலும் இவ்வாறு ஒன்றை நிலைப்படுத்துதற்கு எண்ணிறந்த நூல்களை ஆய்ந்து நூற்றுக்கணக்கான மேற்கோள்களை எடுத்துக்காட்டுதல் இயலாத காரியமாகும்; ஒரு பொருளை உறுதிப்படுத்துதற்கு இதுகாறும் இவர்களைப்போல் எண்ணற்ற மேற்கோள்களை எடுத்துக்காட்டிய புலவர் எவருமிலர். இவர்களை நான், "மேற்கோண்மாரிப் பெரும்புயல்" என்றே உண்மையிற் கொண்டாடுகின்றேன்.

இவர்கள், திருக்குறளைப்பற்றியும், அதன் ஆசிரியரைப் பற்றியும், வேறுசில கொள்கைகளைப் பற்றியும் பற்பல மேற்கோள்களுடன் இதிற் கூறும் அபிப்பிராயங்கள் மிகச் சிறந்தனவும், அறிஞர் ஒப்புக்கொள்ளக் கூடியனவுமாகும். அவற்றைப் படித்துணரும் எவரும், மனதை நடுநிலையில் நிறுத்தி அபிப்பிராயம் சொல்லத்துணிவாராயின், 'திருக்குறள், ஜைந நூல்' என்றே ஐயமறக் கூறுவர். நான் ஜைநநூல்கள் பலவற்றை ஆராய்ந்திருக்கிறேன். அவற்றின் கருத்துக்களையும், திருக்குறளில் உள்ள சில செய்யுட்களின் கருத்துக்களையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது அவை ஒற்றுமையுள்ளன வாயிருந்தன. அவ்வொற்றுமை கருதிநான் திருக்

குறள் ஜைநமத நூலாகவே யிருக்கலாமென்று நினைத்தேன். அவ்வெண்ணமானது, இப்போது நயினாவர்கள் எழுதியிருக்கும் உதாரணங்களைப் பார்த்தபின் உறுதிப்பாடுடையதாய் விட்டது. நானும், 'குறள் ஜைநநூல்', என்றே இனித் துணிந்து கூறுவேன்.

இதில் எண்ணிறந்த நூற்கருத்துக்களும், ஜைநமதக் கோட்பாடுகளும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றமையால் இதனைப் படிப்போர் ஜைநமதசத்துவங்களை விளக்கமாக உணர்ந்து கொள்வதோடு அருமையான நூற்பொருள்களையும் தெரிந்து கொள்ளலாம். நூற்புரட்டு, ஆலயப்புரட்டு முதலியன செய்யும் மாறுபாட்டுக்காரரின் அடாச் செயல்களையும் அறிந்து அவற்றை அகற்றும் நல்ல காரியத்தைச் செய்யலாம். இந்நூல் எல்லோருக்கும் பயன் தருவதாகும்.

இங்ஙனம்,

வீ. ஆறுமுகஞ் சேர்வை,

தமிழ்ப் புலவன்.

# நூலாசிரியர் முகவுரை.

திருக்குறளின்கண் கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு, அன்பு, விருந்தோம்பல், அடக்கம், பிறனில் விழையாமை, அருள், கொல்லாமை, புலான் மறுத்தல், இன்னா செய்யாமை, வாய்மை, வெகுளாமை, பயனில சொல்லாமை, நிலையாமை, துறவு, மெய்யுணர்வு, அறிவுடைமை, ஒழுக்க முடைமை, தவம், கூடாவொழுக்கம், கல்வி, கல்லாமை, கேள்வி, நட்பு, அவாவறுத்தல், உழவு, மருந்து, செங்கோன்மை, கொடுங்கோன்மை, நடுவுநிலைமை, பெரியாரைப் பிழையாமை, களவியல், கற்பியல் முதலான பல நீதிகளையும், நான்கு புருஷார்த்தங்களுக்குரிய அநேக தத்துவங்களையும் 133-அதிகாரங்களால் விளக்கித் திருக்குறள் என்னும் நூலைச்செய்தருளியவர் பிராகிருதம் வடமொழி, தென்மொழி, முதலான சாஸ்திரங்களில் அபார ஆராய்ச்சி யுடைய ஞானியாகவும், தத்துவசாஸ்திரங்களில் நிபுணராகவும், ¶ யோகிந்திரராகவும் இருந்திருக்கவேண்டுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை.

இத்தன்மையுள்ள மகாத்மா தமக்குள் ஒரு சமயக்கடவுளை நிச்சயித்துக் கடவுள்வாழ்த்துக் கூறியிருப்பாரே ஒழியப் பல சமயக்கடவுள்களை வணங்கியிராரென்பது அறிஞர்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம்.

நூல் இயற்றுவோர் தாம்வழிபடும் கடவுள் ஒருவர்மீதே வணக்கங்கூறுவர்; எனினும், சிலர் வழிபடுகடவுள் வணக்கங் கூறுவதோடு உட்சமயங்களிலுள்ள கடவுள்களையும் வேற்றுமையின்றித் துதிப்பர்; ஆனால் புறச்சமயக் கடவுள்களைத் துதிக்கமாட்டார்கள். உதாரணமாக இந்துமதக்காரர் செய்த சில நூல்களில் விநாயகர், சுப்பிரமணியர், சிவன் ஆகியவர்களையும், சில நூல்களில் பிரம்மா, விஷ்ணு,சிவன் ஆகியவர்களையும், சில நூல்களில் விநாயகர், சுப்பிரமணியர், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியவர்களையும், சில நூல்களில் சிவன்,விஷ்ணு ஆகியவர்கள் தனித்தனியாகவும் வணங்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இந்துக்களால் புறச்சமயங்களெனக் கருதப்படும் ஜைந, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களின் கடவுள்கள்,

¶ யோகேந்திரர் - தபஸிகளுக்குத் தலைமையாக வுள்ளவர்.

அவர்களுடைய தெய்வங்களோடு சேர்த்து வணங்கப்படவில்லை. இவ்வழக்கம் எல்லா மதத்தினரிடத்தும் உண்டு.

இப்படியிருக்கத் திருக்குறளாசிரியர் எல்லாச் சமயக்கடவுள் களையும் வணக்கம் செய்துள்ளா ரென்பது பொருந்தாமையாம்.

எந்நாட்டினர்களானும், எச்சமயத்தவர்களானும் பொன்னே போல் போற்றுகின்ற ஞானமூர்த்திகளா யுள்ளவர்கள் உலகில் பல சமயங்களிருப்பினும் அவற்றுள் உண்மைச் சமயத்தையும், உண் மைப் பொருளையும் உணர்ந்து மனிதர்க்கு வெளியிடுவார்கள். அவ் வாறே திருக்குறளாசிரியரும் உண்மைப் பொருளின் தத்துவங்களை மெய்யுணர்வென்னும் அதிகாரத்தால் விளங்க வைத்திருக்கின்றார். கற்றுணர்ந்தோர் அவற்றின் உட்கருத்தை ஆராய்வார்களாகின் ஆசி ரியர் சமயத்தின் உண்மைப்புலனாகும். இன்னும் ஆசிரியர் மக்க ளிடத்து அன்பும் அருளுமுடையவராய், பவ்விய ஜீவன்கள் ¶ மெய்ப் பொருளின் தத்துவங்களை அறிந்து நற்கதியடையும் பொருட்டு நான்கு புருஷார்த்தங்களை அடைய வேண்டிய மார்க்கங்களையும் திருக்குறளில் கூறியுள்ளார். இங்குக் கூறியபடியே அவர், பிராகிருத பாஷையிலும்,

"காமதுஹிம் கப்பதரும் சிந்தாரயணம்
ரஸாயணம் ரஸவாதம் |
ஸம்மொ ஸம்முஹ ஜோஸம்
ஜுஹம் ஜேய் ஜஹண தஹா ஸம்மே ||"

என்று ரயணசாரம் 151 ஆம் சுலோகத்தில் கூறுகின்றார்.

இ-ள்: "காமதேனுவை அடைந்தவர்கள் செளக்கிய மடைவதுபோல வும் கல்பகவிருக்ஷத்தை அடைந்தவர்கள் வேண்டியவற்றைப் பெற்று அனுபவிப்பது போலவும், சிந்தித்ததைக் கொடுக்கும் சிந்தாரத்னத்தைப் பெற்றவர் சினேத்தை அடைந்து மகிழ்வது போலவும், ரஸவாத சித்தி யைப்பெற்றவர் மிக்க சம்பத்தை அடைவது போலவும் சம்யத்வமுண் டானபோது ஜனங்கள் விரும்பிய போகங்களை அனுபவிப்பார்கள்" என் பதாம்.

மேல் சொன்ன காமதேனு முதலான நான்கு வஸ்துக்களையும் அடைந்த ஜனங்கள் எவ்வாறு சுகங்களை அனுபவிப்பார்களோ அவ்

¶ மெய்ப்பொருளின் தத்துவங்களை மெய்யுணர்வைப் பற்றிய விஷ யங்கள் வருமிடத்துக் கண்டுகொள்க.

வாறே திருக்குறளின்கண் சார்புடையவராய் அதனை அன்புடன் கற்றறிந்து $ சம்யத்வம் பெறுவார்களானால் நான்கு புருஷார்த்தங்களையும் பெற்றுச் சுகங்களை அனுபவிப்பார்க ளென்பதற் கையமில்லை.

ஆனால்,

"கற்பகத்தைச் சேர்ந்தோர்க்கு † காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பவத்தில் செய்த வினை"

என்று ஔவைப் பிராட்டியார் கூறியதற்கிணங்க கற்பகவிருக்ஷம் போன்ற திருக்குறளைச் சார்ந்து கற்றறிந்தும் (சம்யத்வ மில்லாமல்) * மித்யாத்வ முண்டாவது முற்பவத்தில் செய்த வினையினால் நேர்வதாம்.

குறளாசிரியர் இரத்தினங்களைச் செப்பில் நிரப்பி வைத்தது போல ஜைநசமய வேதங்களிலுள்ள சாரங்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி மனிதர் நான்கு புருஷார்த்தங்களையும் அடையும்படி திருக்குறளென்னும் மாணிக்கப்பேழையில் நிறைத்து, வைத்துள்ளார். இவ்வாறு ஆசிரியர் செய்யாமற் செய்த வுதவிக்கு உலகம் எக்காலமும் அவரைப் போற்றிப்புகழக் கடமைப்பட்டுள்ளது. இனி, மனிதர் முக்கியமாக அடையவேண்டிய நான்கு புருஷார்த்தங்களைப் பற்றிய விஷயங்களை எந்த மதத்தினர் விசேஷமாக எடுத்துக்கூறியிருக்கின்றார்கள் என்பதையும் அவ்வாறு அநுஷ்டிப்பவர்கள் எம் மதத்தினர் என்பதைப்பற்றியும் ஆராய்வாம்:

நான்கு புருஷார்த்தங்க ளாவன:—

தர்மார்த்த காம மோக்ஷம் அதாவது அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாம். இவைகளில் இல்லறத்தார்க் குரியன

---

$ சம்யத்வமென்பது - கடவுள் ஆகமம், தபஸ் (தர்மம்), தத்துவ முதலானவைகளை, நிறத்தறத்துச் சுட்டுரைத்துப் பொன்கொள்வான் போல பரிக்ஷித்து உண்மைப்பொருளிது வெனத் தெளிந்து நம்புவது. இதற்கு வடமொழியில் சம்யக் தரிசனமென்றும், தென்மொழியில் நற்காட்சியென்றும் பெயர்கள் சொல்லப்படும்.

† காஞ்சிரக்காய் - எட்டிக்காய்.

* மித்யாத்வமென்பது இப்புத்தகம் 205 ஆம் பக்கத்தில் கண்டுகொள்க.

தர்மார்த்தகாம மென்னும் திரிவர்க்கமாகும். அதாவது அறம், பொருள், இன்பமென்னும் மூப்பாலாகும். இல்லறத்தினின்றும் முற்றுந்துறந்தார்க் குரியது அபவர்க்கமென்னும் மோக்ஷமாகும். அதாவது தவத்தை எய்தி விடு பெறுதலாகும். இந்நான்கு புருஷார்த்தங்களை விசேஷமாகச் சொல்வன ஜைநசமய சித்தாந்தங்களாகும்.

இதனைப் பிங்கலர்,

"தர்மார்த்த காம மோக்கம் சிநாகமமே"

என்றும்,

பவணந்தி முனிவர்,

"அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே"

என்றும் கூறியிருப்பதால் உணரலாம்.

திரிவர்க்க மென்னும் அறம்பொருளின்பங்களை மனிதன் அநுஷ்டிக்க வேண்டும். அநுஷ்டிக்காத மனிதனுடைய வாழ்க்கை பயனற்றதாகும். இது,

"த்ரிவர்க ஸம்ஸாதந மந்தரேண
பஶோரிவாயுர் விபலம் நரஸ்ய ।
தத்ராபி தர்மம் ப்ரவரம் வதந்தி
நதம் விநா யத்பவதோர்த்த காமௌ ॥"

என்னும் சூக்தி முக்தாவளி பத்ததி 1. சு. 3-ல் கூறப்படுகின்றது.

*இ-ள்:—தர்மார்த்தகாம மென்னும் திரிவர்க்கங்களைச் சாதித்தல் இல்லாத புருஷனுடைய ஆயுஷ்யம் பசுவின் ஆயுஷ்யம் போல வியர்த்தமாகும்; அந்த தர்மார்த்த காமங்களிலேயும் தர்மம் சிரேஷ்டமாகச் சொல்லப்படுகின்றது. தர்மமின்றி அர்த்தகாமங்களுண்டாகா" என்பதாம்.*

மனிதன் தர்மம் செய்வதனால் அர்த்தகாம முண்டாகின்றன. தர்மத்தின் பயன், பறவையை நிழல் தொடர்வதுபோல ஆத்மனுடன் தொடர்ந்து சென்று மறுபவத்தில் அவன் விரும்பிய அர்த்த காம முதலானவற்றை உண்டாக்குகிறது. இன்னும் தர்மமானது ஓர் வித்துப்போலாகும். எங்ஙனமெனில் விதையை பூமியில் விதைத்து ஜலம் ஊற்றி வளர்த்தால் அது பெரிய விருக்ஷமாய்ப் பழம் என்னும் பொருளையும் கொடுத்து அப்பழத்திலுள்ள இனிமையையும்

அளிப்பதுபோல தர்மம் பொருளைக்கொடுத்து அதனால் இன்பத்தையும் அநுபவிக்கச் செய்யும். விதைக்கு ஊற்றிய ஜலமும், பழமும், பழத்தின் இனிமையும் பிரிவில்லாமல் ஒன்று சேர்ந்திருப்பதுபோல, அறத்தை வளர்க்கும் முயற்சியும், அதனாலுண்டாகும் பொருளும், பொருளாலுண்டாகும் இன்பமும் ஆகிய முப்பால்களும் ஒன்று சேர்ந்திருப்பனவாகும். இவற்றைத் தனித்தனியாகப் பிரிக்கவொண்ணாது. இக்காரணத்தால் பெரியோர்கள் பல நூல்களிலும் திரிவர்க்கங்களை ஒன்றாகவும் மோக்ஷத்தை ஒன்றாகவும் பிரித்துக்கூறியிருக்கின்றார்கள்.

இதனை,

"அறம் பொருளின்ப மூன்றி லாதியா லிரண்டுமாகும்"

என்று மேருமந்தரபுராணம் 569 ஆம் கவியினடி கூறுகின்றது.

இ-து:—"தர்மத்தினால் பொருளு மின்பமும் உண்டாகின்றன"

என்பதாம். இது மேற்கூறியபடி தர்மார்த்த காமங்களை ஒன்றாக வேறுபிரித்துக் கூறுகின்றது.

மோக்ஷத்தைப்பற்றி,

"வினையுயிர் தத் தமில் விடுதல் விடது"

என்று மேருமந்தரபுராணம் 1353 ஆம் கவியினடி கூறுகின்றது.

இ - ள்: கர்மங்களும்' ஜீவன்களும் தங்கள் தங்களுக்குள்ளே விடுதலையடைதல் மோக்ஷமாகும்" என்பதாம்.

இன்னும் இதைப்பற்றி,

"வீடெனப் படும் வினைவிடுதல் பெற்றதம்"

என்று ஜீவக சிந்தாமணி 2846 ஆம் கவினடி கூறுகின்றது.

இவைகள் மோக்ஷத்தினை வேறாகப் பிரித்துக்கூறுதல் உணர்க. இன்னும் திருக்குறளாசிரியரும், திரிவர்க்கத்தைப் பற்றி,

§ "இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்"

என்று இல்வாழ்க்கையில் தர்மார்த்த காமங்களை இல்வாழ்க்கைக்குரிய இயல்பென்று வேறுபிரித்துக் கூறுகின்றார்.

---

§ இக்குறட்பாவிற்குப் பரிமேலழகர் எழுதியிருக்கும் பொருள் பொருத்தமற்றதாம் என்பது இல்வாழ்க்கையைப் பற்றிய விஷயங்கள் இரண்டாம் பாகத்தில் வரும் ஆங்கு கண்டுகொள்க

"கிருகஸ்தாஸ்ரமத்துக்குரிய தர்மார்த்தகாம இயல்போடு கூடி வாழ்பவனென்பான்" என்பது இதன் கருத்தாம். இல்வாழ்க்கைக்கு இயல்பு-அறம் பொருளின்பத்துடன் வாழ்வது.

இன்னும் ஷை ஆசிரியர் மோக்ஷத்தைப்பற்றி மெய்யுணர்வில்,

‡ "பிறப்பென்னும் பேதைமைநீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு"

என்று கூறுகின்றார்.

இ - ள்: "பிறப்பிற்குக் காரணமென்னும் ஞானாவரணாதி கர்மங்கள் கெட்டொழிய மோக்ஷத்திற்குக் காரணமென்கிற பரஞ்சோதி சொருபமாகிய தனது சுத்தாத்மனை (திரிலோகத்தையும், திரிகால வுணர்ச்சியையும்) காணவல்லது (கேவல) ஞானமாகும்' என்பதாம்.

இக்குறட்பாவில் கர்மம் நீங்க அடையப்படும் கேவலஞானமே மோக்ஷகாரணமென்று மோக்ஷத்தை வேறாகப்பிரித்துக் கூறுதல், உணர்க.

நான்கு புருஷார்த்தங்களைப் பெறுவதும், நன்மை தீமைகளின் செய்கையால் சுவர்க்க மடைவதும், நரகம் புகுவதும் ஆன்மாவின் குணத்திற்கியைந்தவாறு நேர்வனவேயாம்.

இதனை,

"தானே தனக்குப் பகைவனு நட்டானும்
தானே தனக்கு மறுமையு மிம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் றுய்த்தலால்
தானே தனக்குக் கரி"

என்னும் அறநெறிச் சாரச்செய்யுள் விளக்கும்.

இன்னும்,

சேறு ஜலத்தினால் உண்டானாலும் அச்சேற்றை நீக்கி பரிசுத்தம் செய்வதும் ஜலமேயாம்; அதுபோல ஆத்மன் வினையை உண்டு பண்ணிக் கொண்டாலும் அவ்வினையை நீக்கி சுத்தாத்மனாக விளங்குதலும் அந்த ஆத்மனுக்குள்ள குணமாம்.

---

‡ இத்தக் குறட்பாவிற்குப் பரிமேலழகர் எழுதியிருக்கும் உரை பொருந்தாததாம்.

இக்காரணம் பற்றியே குறளாசிரியர்,

> "அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
> பொறுத்தானோ டூர்ந்தா னிடை"

என்று கூறுகின்றார்.

**இ - து: "தர்மத்தின் பயன் ஆகமவகையால் அறிவிக்கவேண்டிய தில்லை; சிவிகை தாங்குபவனிடத்தும், ஏறுபவனிடத்தும் காணப்படும்" என்பதாம்.**

இதனால் நல்வினை தீவினை செய்தவர்கள் பயன் அறிதல் கூடும். தர்மம் செய்தவன் பல்லக்கில் உட்காரக்கூடிய சம்பத்தை அவனுக்குக் கடவுள் கொடுத்தாரென்றும், தர்மம் செய்யாதவனை பல்லக்கைச் சுமக்கச் செய்தாரென்றும் சொல்லக்கூடாதோ வெனின் அது பொருந்தாது. ஏனெனின், இவற்றிற் கர்மங்களே காரணமென்பதை ஷை ஆசிரியரே விளக்கியிருக்கின்றார், எவ்வாறெனின்,

> "நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
> லல்லற் படுவ தெவன்"

என்று கூறுகின்றார்.

**இ - ள்: "நல்வினை இன்பங்களைக் கொடுக்கும்போது நல்லவை யென்றிசைந்து அனுபவிப்பர்; தீவினை துன்பங்களைக் கொடுக்கும்போது அத்துன்பங்களையும் அப்படி அனுபவியாமல் துன்பப்படுவது என்ன" என்பதாம்.**

இன்னும்,

> "இலர்பல ராகிய காரண நோற்பார்
> சிலர்பலர் நோலா தவர்"

என்று இவ்வாசிரியரே கூறுகின்றார்.

**இ - ள்: "செல்வர் சிலரும், தரித்திரர் பலருமாக இருத்தற்குக் காரணம் தவஞ்செய்பவர் சிலரும், அது செய்யாதார் பலருமாக இருத்தலே யாம்" என்பதாம்.**

இன்னும் ஷை ஆசிரியரே,

> "அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
> யாரிரு ளுய்த்து விடும்"

என்று கூறுகின்றார்.

**இ - ள்: "அடக்க முடையவர் சுவர்க்கத்தையும், அஃதில்லாதவர் நரகத்தையுமடைவர்" என்பதாம்.**

இன்னும் அவரே இதைப்பற்றி,

"அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னா வுலகம் புகல்"

என்றும் கூறுகின்றார்.

**இ - து: "ஜீவன்களிடத்து அருளுடையவர் நரகம்புகார்" என்பதாம்.**

இன்னும் இதை விளக்கி அவரே,

"ஆராவியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்"

என்றும் கூறுகின்றார்.

**இ - து: "ஒருவன் ஆசையை ஒழிப்பானாயின் அது முத்தியைத் தரும்" என்பதாம்.**

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்"

என்பதும் அவரே இதுபற்றிக் கூறியதாம்.

**இ-து: "ஒருயிரையும் கொல்லாது புலாலையும் உண்ணாதிருப்பவனை எல்லாவுயிரும் கைகுவித்து வணங்கும்" என்பதாம்.**

இன்னும் கர்மச்செயலைப் பற்றி ஷெ ஆசிரியர்,

"நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு"

என்று கூறுகின்றார்.

**இ - து: "செல்வத்தை உண்டாக்குதற்கு கெட்டவை நல்லவையாயும், அச்செல்வத்தை ஒழிப்பதற்கு நல்லவை கெட்டவையாயும் மாறும் ஊழ்வசத்தால்" என்பதாம்.**

பின்னும் கர்மத்தால் நேரும் ஊழ்வலியைப்பற்றி ஷெ ஆசிரியரே,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

என்று கூறுகின்றார்.

இ - து: "ஊழைவிலக்க நினைக்கின் அதுவே முன்நிற்கும்; ஆதலால் அவ்வூழினும் வலியவை இல்லை" என்பதாம். . .

இன்னும் அதிகப்பொருளைச் சேர்த்தவர்க்கும், அருகக்கடவுள் வகுத்த கர்மச்செயல்களின் காரணமின்றி, அநுபவித்தல் உண்டாகாது என்பதுபற்றி ஷை ஆசிரியர்,

"வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது"

என்று கூறுகின்றார்.

இ - ள்: "வகுத்தான் – (கர்மங்களை வகுத்தருளியவனாகிய) அருகக் கடவுள், வகுத்த - (ஞானாவரணீய அஷ்டகர்மங்களின் கூறுபாடுகளை பிரிவு செய்தருளிய, வகையல்லால் - அக்கர்மங்களின் ஏதுக்களல்லாமல், கோடி-(அநுபவிக்கப் படும் பொருள்கள்) கோடியை, தொகுத்தார்க்கும்- சேர்த்தவர்க்கும், துய்த்தல் - அநுபவித்தல், அரிது - உண்டாகாது" எ ன்பதாம்.

"கோடி பொருள்களைச் சேர்த்தவர்க்கும், அருகக்கடவுள் ஞானாவரணீய அஷ்டகர்மங்களின் கூறுபாடுகளை வேறு வேறாகப் பிரித்தருளிய 148 கர்மங்களின் வகையா லல்லாமல் அனுபவித்தல் அரிது" என்பது இதன் கருத்து:

கடவுளால் யாதொரு அபீஷ்டமும் ஒருவனுக்குண்டாகாது; ஊழிற்குத் தக்கபடி ஒருவன் முயற்சி பயன் தருமென்பதுபற்றி, ஷை ஆசிரியர்,

"தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்று கூறுகின்றார்,

இ-ள்: தெய்வத்தால்-அருகக்கடவுளால், ஆகாதெனினும் (யாதொரு அபீஷ்டமும்) பெறுதலாகாதெனினும். முயற்சி-முயற்சியால், தன்மெய் -தனது உடம்பை, வருத்த-உழைப்பிக்க, (அவ்வருத்தத்திற்கேற்ற) கூலி தரும் (ஊழ்) பயன் கொடுக்கும்" என்பதாம்.

இதன் கருத்து: "கடவுளாலாவ தொன்றுமில்லை; முயற்சியால் வினைக்குத்தக்க அளவு பயனுண்டாகும்" என்பதாம்.

இக்தக் குறட்பாவில், பரிமேலழகர், "ஊழ்வகையால் கருதிய பயன் தாராதாயினும் முயற்சி பலனைத் தரும்" என்று கூறியுள்ளார். இது பொருத்தமன்று ஏனெனின் கடவுள் யாதொரு பொருளும்

தருவதில்லை யென்னும் ஜைநசமய சித்தாந்தத்தினை விளக்கிக் காட்டுதற்பொருட்டு ஆசிரியர், "தெய்வத்தானாகா தெனினும் முயற்சி ஊழ்வினைக்கேற்ற அளவு பலன்தரும்" என்று கூறியிருக்கின்றார்.

முயற்சி செய்யினும் ஊழின் அமைப்பு இன்றி பயனுண்டாகாது.

இதனை ஔவைப் பிராட்டியார்,

"ஈட்டும் பொருண்முயற்சி யெண்ணிறந்தவாயினு மூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம்"

என்று நல்வழி 8 ஆம் செய்யுளடியில் கூறுகின்றதுணர்க.

குறளாசிரியரும்,

"ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி"

என்பதும் அவர் கர்மப்பயனைப்பற்றிக் கூறியதாம்.

இ - து: "ஒருவனுக்குக் கைப்பொருள் உண்டாகும் ஊழ்தோற்றினால் முயற்சி தோன்றும்; கைப்பொருள் நீங்கும் ஊழ்தோற்றினால் சோம்பல் தோன்றும்" என்பதாம். ஆதற்கும் அழிதற்கும் ஏதுவான முயற்சியும் சோம்பலும் ஊழால் வரும் என்பது இதன் கருத்து.

"ஊழிற் பெருவலியாவுள" என்னும் குறட்பா இல்லறத்தார்க் குரியனவாகக் கூறப்பட்டன. துறவறத்தார் ஊழையும் வென்று வீடுபெறுவர் என்பதைப்பற்றி,

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

என்று ஆசிரியர் கூறுகின்றார்.

இ - து: "தாம் மேற்கொண்ட (தவத்) தொழிலை இடைவிடாது முயற்சித்துச் செய்வோர் விதியையும் புறங்காண்பர்" என்பதாம். தவத் தோன்றி மற்றவர் விதியை விலக்கல் முடியாது என்பது இதன் கருத்து.

இன்னும் இது பற்றி,

"கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு"

என்றும் கூறுகின்றார்.

**இ - ள்: நோற்றலின் - தவத்தின் வல்லமையால். ஆற்றல் தலைப் பட்டவர்க்கு - (கேவல) ஞானத்தின் பெருமையை அடைந்தவர்க்கு, கூற்றங் குதித்தலுங் கைகூடும் - யமனைக் கடத்தலும் சித்தியாகும்'' என்பதாம்.**

யமனைக் கடத்தலாவது, பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு இவை களினின்றும் நீங்கி வீடு பெறுவதாம். இந்தக் குறட்பாவில் பரிமேலழ கர், 'தவத்தை யடைந்தவர் யமனை வெல்லுவர்', என்றும், 'ஆற்றல்- சாபானுக்கிரகம்' என்றும் கூறுகின்றார். இதுபொருத்த மற்றதாம். சாபானுக்கிரகம் என்பதுபற்றி ஆசிரியர் ''ஒன்னார்த் தெறலு முவந் தாரை யாக்கலு மெண்ணிற் றவத்தான் வரும்'' என்னும் குறளால் விளக்கியுள்ளதை அறிதல்கூடும். மணக்குடவரும் 'மார்க்கண்டேயர் தப்பினாற் போல' என்றும் பொருள்கூறி யிருக்கின்றார். இவர் கருத் தும் பொருந்தாதனவாம்.

ஆதலின் குறளாசிரியர் அருளியதற் கிணங்க,

''கொலைமாறாக் கொடியவெங் கூற்றினையுங் குதித்தனையே''

என்று திருக்கலம்பகம் கடவுள் வாழ்த்துச் செய்யுளடியில் கூறு கின்றது முணர்க.

**இ - ள்: ''கொல்லுந் தொழில் நீங்காத கொடுமையான வெப்ப முடைய யமனையுங் கடந்தாய்'' என்பதாம்.**

ஆதலின்

ஜைநசமய சித்தாந்தம் கடவுள் ஆக்கல், காத்தல், அழித்தல், முதலிய யாதொரு தொழிலுமில்லாதவர் என்று கூறுவதாகும். சைவ வைணவசமய சித்தாந்தம் இதற்குமுரணாயிருக்கும். எல்லாம் கடவுளாலுண்டாகுமென்று கூறுவது அந்த மதக் கொள்கையாம். அதன் விவரத்தை இங்குச்சிறிது விளக்குவாம்:

சிவன் குணத்தைப்பற்றித் திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில்,

''தரைமுத லுலகினி லுயிர்புணர் தகைமிக
விரைமலி குழலுமை யொடுவிர வதுசெய்து
நரைதிரை கெடுதக வதுவரு ளினனெழில்
வரைதிகழ் மதில்வலி வலமுறை யிறையே''

என்று 1-வது திருமுறை திருவலிவலம் பதிகத்தில் கூறுகின்றார்.

**இ - ள்: ''அழகியவரை திகழும் மதிலையுடைய திருவலிவலத்தில் எழுந்தருளிய சிவன் வாசனைமிகுந்த கூந்தலையுடைய உமையைப் புண**

ந்து பூவுலக முதலாகச் சகல லோகங்களின் கண்ணுள்ள ஜீவாத்மாக்கள் புணர்ச்சி செய்யத்தக்க குணத்தையும் நரையும் திரையும் கேடும் நன்மையையும் அருளினன்" என்பதாம்.

இன்னும், சிவபெருமான் திருப்பெருமணத் திருக்கோயிலுட்பட எங்கும் பரஞ்சோதி வடிவமாகி அச்சோதிக்குள் ஒருவாயிலை வகுத்துக்காட்டி யருளினரென்றும், திருஞான சம்பந்தர் தமது காதலியைக் கைப்பற்றிக்கொண்டு அத் திருச்சோதியை வலஞ்செய்து அதனுள்ளே பிரவேசித்துச் சிவத்தோடு இரண்டறக்கலந்தாரென்றும் பெரியபுராணம் கூறுகின்றது. இது தவிர சிவத்தை, ஒன்றும் கலத்தலில்லாத தென்றும், எல்லாப் பொருளையும் தான் கலந்து நிற்கின்றமுதற் பொருளென்றும் சைவசித்தாந்தம் கூறுகின்றது. இவற்றால் உலகின்கண்ணுள்ள சகல பொருள்களுக்கும் சிவன் சார்புடையவ ரென்பது தெளிவாகிறது.

ஜைநசமய சித்தாந்தமாவது, மோக்ஷத்தில், பரஞ்சோதி ஸ்வரூபமாய் நிலை பெற்றிருக்கும், (பிரம்மம்) கடவுளும், அருகக்கடவுளும், திரிலோகத்திலும், த்ரிகாலத்திலும், உற்பத்தி, ஸ்திதி, விநாசங்களுடன் கூடிய உயிர்ப்பொருள் உயிரில் பொருள் முதலான சகல விஷயங்களையும் ஒருங்கே க்ஷணப்பிரதி சமயந்தோறும் அறியா நின்றவர், தூண், துரும்பு, முதலான எப்பொருளுக்கும் சார்புடையவரல்லர், ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு நாம ரூபங்களால் தோன்றுவதும் அழிவது மில்லாதவர், அவரவர் நினைத்த வடிவுடன் தோன்றுபவரல்லர், அவரவர் விரும்பியவைகளைக் கொடுப்பவரல்லர், பூஜிப்பவரிடத்தும் தூஷிப்பவரிடத்தும் விருப்பு வெறுப்பில்லாதவர், சகல ஜீவன்களிடத்தும் சமத்வபாவ முடையவர், தோற்றமும் கேடுமுடையவர் தலைவரல்லர், ஆதலின் இம்மண்ணுலகின்கண் தோன்றி பவ்விய ஆத்மனை தமது ஜோதிஸ்வரூபத்துடன் சேர்த்துக்கொள்ளாதவர் என்பதுவும், பவ்வியாத்மன் கர்மங்களை நாசஞ்செய்து சுத்தாத்ம ஸ்வரூபத்தைப் பெற்றதும் ஆமணக்குக்காய் வெடித்தவுடன் கொட்டை உயர எழும்புவதுபோன்று, ஆத்மன் மேலெழும்பும் ஊர்த்துவகதி ஸ்வபாவனுகையினால் மேலெழுந்து எல்லாவுலகங்களுக்கும் மேலுள்ள மோக்ஷலோகத்தில் நிலைபெற்று வாழ்வா னென்பதுமாம்.

இதனைக் குறளாசிரியர் கடவுள் வாழ்த்தில்,

"நிலமிசை நீடு வாழ்வார்"

என்பதால் விளக்கி யிருக்கின்றார்.

**இ - து: "எல்லாவுலகங்களுக்கும் மேலாகிய மோக்ஷ பூமியில் அழிவின்றி வாழ்வார்" என்பதாம்.**

இன்னும் துறவு என்னும் அதிகாரத்தில்,

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்"

என்னும் குறளால் இதனைத் தெளிவுபடுத்தி யிருக்கின்றார்.

**இ - து: "யான் எனது என்னும் மயக்கத்தை கெடுப்பவன் தேவர்க்கும் அடைதற் கரிதாகிய மோக்ஷவுலகத்தை அடைவான்" என்பதாம்.**

இவற்றின் மூலம் சுத்தாத்மன் யாதொன்றிலும் கலந்தலில்லாமல் தானே மோக்ஷமடைவா னென்பதை ஆசிரியர் ஸ்பஷ்டமாக விளக்கியிருப்பதால் கடவுளாலாவ தொன்றுமில்லை என்பது நன்கு தெளிவாகும்.

வைணவ சமயத்திலும் இதற்கு விரோதமாகப் பலவிஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றுள் பரமபத மென்னும் மோக்ஷத்தில் வாசம்செய்யும் விஷ்ணுவானவர் தம்முடைய அவதாரங்களி லொன்றாகிய கிருஷ்ணாவதாரத்தில் அருச்சுனனுக்குச் சொன்னதாகக் கூறப்படும் பகவத்கீதை. அத். 7. சு. 6. முதல் 10 வரையில்,

"இந்த ஜீவபூதமான பரப்பிரகிருதியே எல்லாபூதங்களுக்கும் காரணமெனத் தெளிக; ஜெகமுழுதிற்கும் உற்பத்தி லயஸ்தானமும் நானே ஆவன்; என்னைக்காட்டிலும் அன்னியகாரியம் வேறொன்றில்லை; இப்பிரபஞ்ச முழுதும் கயிற்றிற்கோத்த இரத்தினங்கள் போல என்னிடத்திற் சேர்க்கப் பட்டுள்ளன; ஜலத்தில் ரஸமும், சூரிய சந்திராதியரில் பிரகாசமும், வேதங்களில் பிரணவமும், ஆகாயத்திற் சத்தமும், புருஷர்களில் பௌருஷமும் யானென்றறிக; பூமியில் சுகந்தமும், அக்னியில் தேஜஸும், பூதங்க ளெல்லாவற்றிலும் ஆயுவும், தவஸிகளில் தவமும் நானென்றறிக; சமஸ்த சராசர பூதங்களுக்கும் உற்பத்திகாரணமான அனுதிபீஜமும், புத்திமான்களுக்கு புத்தியும், தேஜோரூபிகளுக்கு தேஜஸும் நானென்றறிக" என்றவிஷயங்கள் கூறப்படுகின்றன. ஷை 21–22–ஆம் சுலோகங்களில் "எவ னெவன் எவ்வெக்கோரிக்கைகளால் எவ்வெத் தேவதைகளைப் பக்தி சிரத்தைகளோடு வந்திக்கின்றானோ அவனவனுக்கு அவ்வத் தேவதைகளில் சிரத்தை பக்திகளை நானே ஸ்திரப்படுத்துகிறேன்; அவ்வகையான புருடன் அப்படிப்பட்ட சிரத்தையால்

அவ்வத்தேவதைகளை ஆராதிக்கின்றான்; அவ்வத்தேவதைகளின் மூலமாக என்னாலேயே கொடுக்கப்பட்ட அவனவனுடைய அபீஷ்டங்களை அவனவனடைகிறான்" என்ற விஷயங்கள் கூறப்படுகின்றன.

இங்கு எடுத்துக்காட்டிய இவ்விஷயங்களின்படி சைவசமயம் முதற்கடவுள் மூவராய் முத்தொழிலை யுடையவரென்றும், சிவன் உமாதேவியுடன்சங்கமம் செய்வதனால் லோகத்திலுள்ள ஜீவாத்மாக்களும் தங்களுக்குள்சங்கமம் செய்கின்றனவென்றும், இல்லறத்தில் மோக்ஷமுண்டென்றும், மோக்ஷமடையும் ஆத்மாக்களை சிவன் ஜோதி வடிவத்தில் சேர்த்துக் கொள்கிறாரென்றும், சிவன் எல்லாப் பொருளுக்கும் தாமே சார்புள்ளவரென்றும் கூறுவதனாலும், வைணவ சமயமும் நாராயணன் நான்முகனைப் படைத்தான், நான்முகன் தானுந் தான் முகமாய் சங்கரனைத்தான் படைத்தானென்றும், நாராயணனும் பல அவதாரங்க ளெடுத்துப் பல தொழிலை யுடையவனாயிருந்தனனென்றும், ஜீவாத்மாக்களின் அபீஷ்டங்களை அந்தந்த தேவதைகள் மூலமாகத்தானே கொடுக்கிறானென்றும், உற்பத்திக்கும் லயத்திற்கும் தானே கர்த்தாவென்றும், இல்லறத்தில் மோக்ஷமுண்டென்றும் கூறுவதனாலும் சைவ வைணவ சமயங்களில் மனிதன் நான்கு புருஷார்த்தங்களை பெறவேண்டுமென்கிற நியதியில்லையெனவே ஏற்படுகிறது. இவ்விதம் இல்லறத்தில் மோக்ஷமுண்டென்று கூறுவதனால் நான்காவது புருஷார்த்தத்தை அடையக்கூடிய வானப்பிரஸ்தாஸ்ரமமும், முற்றுந்துறந்த சன்னியாஸி ஆஸ்ரமும் பெற்று வனத்தில் சென்று வருந்தி தவஞ்செய்ய வேண்டியதனாவஸ்யமாம். அவ்வாறு தவம் செய்தும் மோக்ஷமடையக் கூடுமெனின் இல்லறத்தில் மோக்ஷமுண்டென்பது தகுதியற்றனவாம். ஆதலின் தங்கள்கொள்கைகளில் குறளாசிரியர் அருளியதற்குமாறாக இல்லறத்தில் மோக்ஷமுண்டென்பதனால் நான்காவது புருஷார்த்தத்தையடையக்கூடிய துறவறமும் தங்களுக்குமுரியனவென்று கூறுவது ஜைநசமய சாஸ்திரங்களைக் கண்டு தங்கள் சாஸ்திரங்களிலும் துறவறத்தைக் கல்பித்து அனுஷ்டித்து வருகின்றார்களென சொல்லக்கூடும்.

சைவ வைணவ சமய சாஸ்திரங்கள் முதற்கடவுள் மூவராய்த் தோன்றி ஆக்கல், காத்தல், அழித்தல் முதலானவைகளெல்லாம் அக்கடவுளின் செய்கைகளென்று கூறுகின்றன. ஆதலால் பரிமேலழகர் தெய்வத்தால் எதுவும் ஆகாதென்று சொல்வது தம் மதத்திற்கு விரோதமாகு மென்று, 'தெய்வத்தானாகா தெனினும்' என்பதற்கு 'ஊழ்வகையால் கருதியபயன் தாராதாயினும்' என்று வலி

ந்து பொருளுரைத் திருக்கின்றார். இவர் கருத்து பொருத்தமான தன்று. குறளின் ஆசிரியர் ஜைநராதலால் தமது நூலின்கண் "இல்லறத்தில் மோக்ஷத்தைப்பற்றிக் கூறாமல் அவற்றில், த்ரிவர்க்கத்தையும் துறவறத்தில் அபவர்க்கத்தையும் விளக்கிக்காட்டி" சைவ வைணவ சமயக் கொள்கைகளை மறுத்துக் கடவுளாலாவது ஒன்று மில்லை யென்றும், ஆன்மாவின் முயற்சியும் வினைக்குத்தக்க பயனுண்டாகுமென்றும், சுவர்க்கமடைவதும், நரகம் புகுவதும் நான்கு புருஷார்த்தங்களைப் பெற்று மோக்ஷத்தில் நீடூழிகாலம் அழிவின்றி வாழ்ந்திருப்பதும் ஜீவாத்மாவின் சக்தியினாலேயே உண்டாகின்றன வென்றும் மேல் எடுத்துக்காட்டியுள்ள குறட்பாக்களால் ஜைநசமய உண்மைத் தத்துவங்களை நன்கு விளக்கியிருக்கின்றார். இவற்றைக் கொண்டே இவ்வாசிரியர் ஜைநர் என்பதை எளிதில் உணரலாம். இது நிற்க,

நன்மை தீமைகளின், இயற்கைக்குத் தக்கபடி மக்கள் சுவர்க்கமடைவதும், நரகம் புகுவதும், நான்கு புருஷார்த்தங்களைப் பெறுவதும் ஆன்மாவின் குணத்திற் கியைந்தவாறு சேர்வனவேயன்றிக்கடவுள் எவ்விதத்திலும் ஆத்மனை இரக்ஷிப்பவன் அல்லனென்றுகூறியபடி, திருக்குறளாசிரியரும், 'தெய்வத்தானாகாது' என்றுகூறினரே, அவ்வாறு சொன்னவர் கடவுள் வணக்கம் ஏன் செய்யவேண்டுமெனவும், ஜைநர்கள் கடவுளுக்குக் கோவில்கள் நிர்மித்து அவற்றில் கல், தாம்பிர முதலானவைகளால் உருவம் செய்வித்து அதற்குப் பூஜை முதலான உத்ஸவங்கள் எதற்காகச் செய்யவேண்டுமென்றும் சிலர் கேட்கக் கூடும். இக் கேள்விக்குத்தக்க சமாதானம் கூறுவோம்:—

பதினாலாவது நாபி மனுவின்காலத்தில், மக்கள் விரும்பியவற்றைக் கொடுக்கும் கற்பக விருக்ஷம் மறைந்தபின் மேகங்களெழுந்து மழை பொழிந்தன; உழுதுவித்தாமலே பல தானியங்கள் முதலானவைகள் தாமே தோன்றின; அவற்றைப் பிரஜைகள் உபயோகப்படுத்தும் முறைகளை அறியா திருந்தார்கள். அப்போது நாபி மனுவினால் அம்முறைகள் மனிதர்க்கு உபதேசிக்கப்பட்டன. பிறகு நாபி மனுவின் புத்திரராகிய ஆதிபகவான் காலத்தில் தாமே விளைந்த தானிய முதலானவைகள் விளையாமற் போயின. அதனால் பிரஜைகள் ஆதிபகவானைச் சரணமாகவடைந்து, "நாங்கள் பசியினாலும், மழை, பனி, குளிர், வெயில் முதலானவைகளாலும் வருந்துகின்றோம். இவைகளைப் போக்கிக்கொள்ளு முபாயங்களை எங்களுக்குக் காட்டியருள வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

ஆதிபகவான் * மதிஞானம், ஸ்ருதஞானம், அவதிஞானமென்னும் மூன்று ஞானத்துடனும் சகஜாதிசயம் பத்துடனும் அவதரித்தவராதலால் தமது சுபாவ கருணையால் வாழையடி வாழையாக வரும் மக்கள் எக்காலமும் ஜீவிக்கும்பொருட்டு அஸி, மஷி, கிருஷி, வாணிஜ்யம், வித்தியா சில்பமென்னும் ஷட்கர்மத்தொழில்களையும் அவர்கட்கு உபதேசித்து, நாடு நகர கிராம கிருக முதலானவைகளையும் செய்வித்தார்.

பிறகு ஆதிபகவான் (அருகக்கடவுள்) கர்மக்ஷயாதிசயம் தெய்விகாதிசய முதலானவைகள் தாமே தோன்றவும் இந்திராதி தேவர்களால் நிர்மிக்கப்பட்ட சமவ சரணமென்னும் கோவிலுடன் சர்வ

---

* மதிஞானம் என்பது-இயற்கை அறிவு; ஸ்ருதஞானம் என்பது சாஸ்திரங்களை அறிந்துகொள்வது. இதனை, "ஸ்ருதம் மதிபூர்வம்" என்று தத்துவார்த்தசூத்ரம் அத்-1-ல், 19-ஆம் சூத்திரம் கூறுகின்றது. இக்கருத்தைக் குறளாசிரியர், 'மக்கட்பேறு' என்னும் அதிகாரத்தில்

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

என்று கூறுகின்றார்.

இ - ள்: "பெறுமவற்றுள் - (ஒருவன்) பெறும்பேறுகளுள், அறிவு - இயற்கை அறிவைக்கொண்டு, அறிந்த - (கல்வியின் ஞானத்தை) அறிந்துகொண்ட, மக்கட்பேறல்ல-மக்கட்பேறுகளல்லாமல் பிற - மற்றை மக்கட்பேறுகளை; யாம் அறிவதில்லை (புத்தியுள்ளவர்களாய்) நாம் உணர்வதில்லை" என்பதாம்.

"ஒருவன் பெறும் மக்கட்பேறுகளுள் இயற்கை அறிவைக்கொண்டு கல்வியை அறிந்துகொண்ட மக்களை மதிப்பது போன்று பிறமக்களை யாம் மதிப்பதில்லை" என்பது இதன் கருத்து.

இக்குறட்பாவில் பரிமேலழகர், "அறிவறிந்த, வென்றதனால் மக்கள் என்னும் பெயர் பெண்பாலை யொழித்து நின்றது" என்றும், "இதனாலே புதல்வரைப் பெறுதலினது சிறப்புச் சொல்லப்பட்ட' தென்றும் கூறுகின்றார். இவர் கருத்து பெண்பாலர் அறிவறிந்தவரல்லர் என்பது போலும். இவ்வாறு கூறும் பரிமேலழகர் கூற்றுப் பொருந்தாதென்க. இதைப்பற்றி இரண்டாம் பாகத்திலும் மேற்கோள்களுடன் உண்மையை விளக்குவாம். ஆண்பால் பெண்பால் இருவரும் கல்விகற்க வேண்டுமென்பது ஜைநசமய வேதக்கொள்கை. இது பற்றியே ஆசிரியர், "அறிவறிந்த மக்கள்" என்று இருவகையினர்க்கும் பொதுவான வார்த்தையைக்கூறியிருக்கின்றார்.

தர்ம க்ஷேத்திரங்களிலும் சென்று மக்கள் நற்கதியடையும்பொருட்டு அதோலோகம், மத்திமலோகம், ஊர்த்துவலோகம் ஆகிய மூன்று லோகங்களின் சுபாவங்களையும், அந்த லோகங்களிலுள்ள ஜீவ புத்கலாதிகளின் உற்பத்தி ஸ்திதி விநாசங்களையும், சென்றகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய காலங்களையும், பிரத்வீ, அப்பு, தேயு, வாயு, வனஸ்பதி, த்ரஸங்களென்னும் ஆறுவித ஜீவபரியாய பேதங்களையும், திரவ்விய, க்ஷேத்ர, கால, பாவ, பவமென்னும் பஞ்ச பரிவர்த்தனைகளால் சம்ஸார ஜீவன்கள் மிகவும் பிறத்தலையும், இறத்தலையும், நரக, திர்ய, மனுஷ்ய, தேவகதி முதலானவைகளில் காற்றாடிபோல் சம்ஸார ஜீவன்கள் சுழன்று வருவதையும் தர்ஸனிகன், விரதிகன், சாமாயிகன், புரோஷதோபவாசன், சச்சித்தவிரதன், ராத்திரியபுக்தன், பிரம்மசாரி, அநாரம்பன், அபரிக்ரகன், அநனுமதி, உத்திட்ட பிண்டன் என்னும் பதினொரு நிலை ஸ்ராவகாசார ஒழுக்கங்களையும், அணுவிரதம் 5. குணவிரதம். 3, சிக்ஷாவிரதம் 4. ஆகிய பன்னிரண்டு விரதங்களையும், சம்யக்தரிசனம், சம்யக்ஞானம், சம்யக்சாரித்திரமென்னும் நற்காட்சி நன்ஞானம் நல்லொழுக்கங்களாகிய இரத்ன த்ரயங்களில் விவகார நிச்சயமென்னும் இருவகைகளின் தத்துவங்களையும்,மதிஞானம்,ஸ்ருதஞானம்,அவதிஞானம், மனப்பரியயஞானம், கேவல ஞானமென்னும்ஐந்து ஞான விசேஷங்களையும், குமதிஞானம், குஸ்ருதிஞானம், விபங்கஞானமென்னும், மூன்று விபரீத ஞானத்தின் தன்மைகளையும், ஜீவாஸ்திகாயம், புத்கலாஸ்திகாயம், தர்மாஸ்திகாயம், அதர்மாஸ்திகாயம், ஆகாசாஸ்திகாயங்களென்னும் பஞ்சாஸ்திகாயங்களையும், ஜீவ, புத்கல, தர்ம, அதர்ம, ஆகாச, காலமென்னும் ஷட் திரவியங்களையும், மனோகுப்தி, வாக்குப்தி,காயகுப்தி யென்னும் (3) திரிகுப்திகளையும், அஹிம்ஸை, சத்தியம், அஸ்தேயம், பிரம்மசர்யம், அபரிக்ரகம் என்னும் பஞ்சமகா விரதங்களையும், ஈர்யாசமிதி, பாஷாசமிதி, ஏஷணாசமிதி, ஆதானநிக்ஷேபணாசமிதி, வ்யுத்சர்க்கசமிதி என்னும், பஞ்ச சமிதிகளையும், ஞான, தரிசன, தப, வீரிய, சாரித்திரமென்னும் ஐந்து சாரித்ர பேதங்களையும், சாமாயிகம் ,ஸ்துதி, வந்தனை, ப்ரதிக்ரமணம், ப்ரத்யாக்ஞானம், வ்யுத்சர்க்கமென்னும் (6) ஷடாவஸ்யக்ரியைகளையும், ஜீவ, அஜீவ, ஆஸ்ரவ, பந்த, சம்வர, நிர்ஜர, மோக்ஷமென்னும் சப்த தத்துவங்களையும், ஸ்யாதஸ்தி, ஸ்யாந்நாஸ்தி, ஸ்யாதஸ்திநாஸ்தி, ஸ்யாதவக்தவ்யம், ஸ்யாதஸ்திவக்தவ்யம், ஸ்யாந்நாஸ்திவக்தவ்யம், ஸ்யாதஸ்திநாஸ்திவக்தவ்யம்

என்னும் சப்தபங்கி தத்துவங்களையும், ஜீவ, அஜீவ, ஆஸ்ரவ, பந்த, சம்வர, நிர்ஜர, மோக்ஷ, புண்ணிய, பாபமென்னும் நவபதார்த்தங்களையும், கதி, இந்திரிய, காய, யோக, வேத, கஷாய, ஞான, சம்யம, தரிசன, லேசியா, பவ்விய, சம்யக்த்வ, சஞ்ஞித்வ, ஆஹாரமுதலாகிய பதினன்கு மார்க்கண ஸ்தானங்களையும், மித்தியாதிருஷ்டி, சாஸாதனசம்மியக்திருஷ்டி, சம்மியக்மித்தியாதிருஷ்டி, அசம்யதசம்மியக்திருஷ்டி, தேசசம்யதன், பிரமத்தன், அப்பிரமத்தன், அபூர்வகரணன், அநிவிர்த்திகரணன், சூக்ஷ்மசாம்பராயன், உபசாந்தகஷாயன், க்ஷீணகஷாயன், சயோகிகேவலி, அயோகிகேவலி என்னும் பதினன்கு குணஸ்தானங்களையும், உத்தமக்ஷமை, உத்தமமார்த்தவம்; உத்தமஆர்ஜ்ஜவம், உத்தம சத்தியம், உத்தம செளசம், உத்தமசம்யம், உத்தமதவம், உத்தமத்யாகம், உத்தமஆகிஞ்ஜின்யம், உத்தமபிரம்மசரிய மென்னும் தச (10) தர்மங்களையும், அநசனம், ஆவமோதர்யம், வ்ருத்திபரிசங்கியானம், ரஸபரித்யாகம், விவிக்தசயனசயனம், காயக்லேசமென்னும் பாகிய தபசு 6-ம், பிராயச்சித்தம், விநயம், வையாப்ரத்யம், ஸ்வாத்யாயம், வ்யுத்சர்க்கம், தியானமென்னும் அந்தரங்க தபசு 6-ம் ஆகிய துவாதச (12) தபசுக்களையும், அநித்யம், அசரணம், ஏகத்வம், அன்யத்வம், சம்ஸாரம், லோகம், அசுசித்வம், ஆஸ்ரவம், சம்வரை, நிர்ஜரை, போதிதுல்லபம், தர்மஸ்வாக்யான மென்னும் (12) துவாதசானுபிரேக்ஷைகளையும், க்ஷுத், பிபாஸா, ரோக, யாசனு, அலாப, நிஷத்யா, சர்யா, சய்யா, நக்ந்யா, அதர்சன, பிரக்ஞா, அக்ஞான, அரதி என்னும் பாகிய பரீஷக ஜெயங்கள் 13-ம், உஷ்ணம், சீதம், மல, சத்காரபுரஸ்கார, ஆக்ரோச, வத, தம்ஸமஸக, த்ரணஸ்பரிஸ, ஸ்திரீ என்னும் அந்தரங்க பரீஷஹ ஜெயங்கள் 9-ம் ஆகிய இருபத்திரண்டு பரீஷஹ ஜெயங்களையும், இஷ்டவியோகம், அநிஷ்டசம்யோகம், லாபஜம், ரோகஜம் என்னும் நான்கு ஆர்த்தத்யானங்களையும், ஹிம்ஸாநந்தம், ம்ருஷாநந்தம், ஸ்தேயாநந்தம், சம்ரக்ஷணநந்தமென்னும் நான்கு ரௌத்ர த்யானங்களையும், ஸ்பரிஸ, ரஸ கிராண, சக்ஷு, ஸ்ரோத்திரம், மனமென்னும் ஆறுவிஷய சம்யமங்களையும், பிரத்திவி, அப்பு, தேயு, வாயு, வனஸ்பதி, த்ரஸகாய மென்னும் ஆறுபிராணி சம்யமங்களையும், சூக்ஷ்மஏகேந்திரியபரியாப்தி, அபரியாப்தி, பாதரஏகேந்திரியபரியாப்தி, அபரியாப்தி, த்வீந்திரியபரியாப்தி, அபரியாப்தி, த்ரீந்திரிய பரியாப்தி, அபரியாப்தி, சதுரிந்திரியபரியாப்தி, அபரியாப்தி. அசஞ்ஞிபஞ்சேந்திரியபரியாப்தி:

அபரியாப்தி, சஞ்ஞி பஞ்சேந்திரிய பரியாப்தி, அபரியாப்திகளாகிய பதினான்கு ஜீவஸ்தானங்களையும், இந்த ஜீவஸ்தானங்களுக்கு, ஆஹாரபரியாப்தி, சரீர பரியாப்தி, இந்திரிய பரியாப்தி, உச்வாஸபரியாப்தி, பாஷாபரியாப்தி, மனப்பரியாப்தி என்னும் ஆறுவகைபரியாப்தி, அபரியாப்திகளின் கூறுபாடுகளையும்; ஜீவன் நித்திய னென்றும், புத்கலம் அநித்தியம் என்றும் புத்கலம் பரமாணுக்களின் சமூகங்களாகிய ஸ்கந்தங்களென்றும், அந்தஸ்கந்தங்கள், ஸ்தூலஸ்தூலம், ஸ்தூலம், ஸ்தூலசூக்ஷ்மம், சூக்ஷ்மஸ்தூலம், சூக்ஷ்மம், சூக்ஷ்மசூக்ஷ்மமென்னும், ஆறுவகைகளாகவுள்ளவைகளையும், ஜீவன், மன, வசன, காயங்களினாலுண்டாம் ராக த்வேஷ மோகமென்னும், காம, வெகுளி, மயக்கம் முதலானவைகளால், ஞானாவரணீயம், தர்ஸனாவரணீயம், வேதனீயம், மோகனீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயமென்னும் (8) அஷ்டகர்மங்களுக்குப் பந்தப்படும் காரணங்களையும், அக்கர்மங்கள் (நல்வினை தீவினைகள்), அநாதிகாலந் தொடங்கி ஜீவனை இடைவிடாமல் பந்தித்து வருவதையும், அவ்வினைகளின் பந்தத்தினால், ஜீவன்களுக் குண்டாகும் சுக துக்கங்களையும், அந்த பந்தமும், ப்ரக்ரதி பந்தம், ப்ரதேசபந்தம், ஸ்திதி பந்தம், அநுபாகபந்தமென்னும் நான்கு பிரிவுகளாயுள்ளவைகளையும், இந்தக்கர்ம பந்தங்களைக் கெடுத்து, மோக்ஷம் பெறுதற்குத் தவத்தைப்பெற்று ராக, த்வேஷ, மோஹமுதலான ஆர்த்த ரௌத்ரத்யானங்களினின்றும் நீங்கி, சப்த தத்துவம், தசதர்மம், துவாதசானுப்பிரேக்ஷை முதலான மேல் கண்ட பலதத்துவங்களுடன், ஆக்ஞாவிசயம், அபாயவிசயம், விபாக விசயம், சம்ஸ்தான விசயமென்னும் நான்கு தர்மத்யானங்களையும், பிரதக்த்வவிதர்க்கவீசாரம், ஏகத்வ விதர்க்க வீசாரம், சூக்ஷ்மக்ரியா ப்ரதிபாதி, வ்யுபதரக்ரியா வென்னும் நான்கு சுக்லத்யானங்களையும் அநுஷ்டித்தால், மோக்ஷமெய்தி, எக்காலமும் நிலைபெற்று உவமையில்லாத பேரின்பத்தை அடைதல் கூடுமென்பது முதலான, அநேக தத்துவங்கள் அமைந்த நல்லொழுக்கங்களுள்ள இல்லற துறவறங்களுக்குரிய அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கு புருஷார்த்தங்களையும் மக்கள்முதலான ஜீவன்களிடத்து அன்பும் அருளும் உடையவராய்ச் சுயப்பிரயோசனமின்றி நான்கு வேதங்களால் சகலருக்கும் உபதேசித்தருளினார்.

மேல்கண்ட தத்துவங்கள் முதலான ஒவ்வொரு விஷயங்களும் இப்புத்தகத்திலும் இதன் இரண்டாம் பாகத்திலும் ஆங்காங்கு எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு ஆதிபகவான் கர்மபூமியின் ஆதியில் மக்கள் ஜீவிக்கும் பொருட்டு ஷட்கர்மத்தொழில்களை உபதேசம் செய்ததுடன், தாம் அடைந்த நான்கு புருஷார்த்தங்களை பரம்பரையாக வரும் மக்களும் பெறவேண்டுமென்கிற கருணையுடன் நான்கு வேதங்களால் ஜீவாதி தத்துவங்களை அம்மக்களுக்கு, உபதேசித்தருளியவராதலால் அந்தப் பகவான் செய்த நன்றியை

அதாவது,

"செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது"

என்று குறளாசிரியர் அருளியதற் கிணங்க

மக்கள் எக்காலத்தும் வழிவழியாய் மறவாமலிருக்கும் பொருட்டும், அப்பகவான்மீது பக்தி உண்டாகும் பொருட்டும், ஜைநர்கள் சமவசரணம்போல் கோவில் நிர்மித்து, பகவானைப்போல சிலை தாம்பிரமுதலானவைகளால் பிரதிபிம்பம் செய்வித்து, அஷ்டோத்தர சகஸ்ரநாமார்ச்சனைகளாலும், அஷ்டவிதார்ச்சனைகளாலும், அபிஷேகம் தோத்திரம் தியானம் முதலானவைகளாலும் ஆதிகாலந் தொட்டுப் பூஜித்து தொழுது வருகின்றார்கள்.

மக்கள் செய்யும் அபிஷேகம், அர்ச்சனை விழா முதலானவைகளைப் பகவான் ஏற்றுக்கொள்வதில்லை. அவர் நிர்மலதேகத்தைப் பெற்று பசி, தண்ணீர்த்தாகம் முதலான பதினெண் குற்றங்களினின்றும் நீங்கினவர். இத்தன்மையுடைய பகவானுக்கு அர்ச்சனை முதலானவைகள் செய்வதாலுண்டாம் பலன்கள் இன்னவை யென்பது, பின்வரும் சுலோகத்தாலும் அதற்கு எடுத்துக் காட்டியுள்ள உதாரணங்களாலும் நன்கு விளங்கும்.

இன்னும் விழா நடத்துவதற்குக் காரணம் என்னவெனில், ஆதிபகவான் பலக்ஷேத்திரங்களிலும் ஸ்ரீவிஹாரஞ்சென்று பன்னிருகணங்கட்கும் தர்மோபதேசஞ் செய்ததை விளக்கிக்காட்டும் பொருட்டே ஆதிகாலந்தொடங்கி ஜைநர்கள் அவருக்கு தசதினபிரம்மோத்சவமுதலான பல விழாக்கள் நடத்தி அந்தப் பகவானது

பிரதிபிம்பத்தை வீதி வீதியாக $ வாகனங்களில் எடுத்துக்கொண்டு போய் ஊர்வலஞ் செய்வித்து, பகவான் இல்லற துறவற தர்மங்களை உபதேசம்செய்த பாவனையாக * ஸ்ராவகர்கள் வேத அத்யயனம் புரிந்து வரவும் செய்து வருகின்றார்கள்.

இக்காலத்திலும் கல்வித் தேர்ச்சியும், பல ஆராய்ச்சிகளுமுடையவர்கள் பல ஊர்களுக்கும் சென்று, மக்களுக்கு நன்மை உண்டாக வேண்டுமென்கிற எண்ணங்கொண்டு பல நல்லவிஷயங்களைப் பிரசங்கித்துவந்தால், அப்பெரியாரின் உருவத்தை, பக்தர்கள் படத்தில் பிரதிரூபம் செய்வித்து அந்த உருவப்படத்திற்குப் பூமாலை முதலானவை அணிந்து விழா நடத்தி அதனை பல வீதிகளில் ஊர்வலமாகசுற்றி வந்து, அவர்கள் செய்த நன்மைகள் எப்போதும் ஜனங்களின் ஞாபகத்திலிருக்கும்படி அவ்வுருவபடத்தை ஓர்கட்டிடத்தில் ஸ்தாபித்து அவர்கள் சரித்திரங்களையும் எழுதிவைக்கின்றார்கள்.

இவ்வாறு வினைகளுக்குச் சம்பந்தமாயுள்ள மனிதர்களுக்கு இத்தன்மையாகச் சிறப்புக்கள் செய்விக்கும்போது "வினையினீங்கி விளங்கிய வறிவின் முனைவன்" என்னும் ஆதிபகவானுக்கு (அருகக் கடவுளுக்கு) ஆலயமும், அவற்றில் பிரதிபிம்பமும் செய்வித்து, பூஜைவிழா முதலானவைகள் செய்துவருவதை மறுத்துச் சொல்வது ஒவ்வாமை, என்பதுயாவருக்கும் ஐயமறத் தெளிவாகும்.

சிவன் விஷ்ணு முதலானவர்களுக்கு இந்திராதி தேவர்கள் கோவில் நிர்மிதம் செய்தார்களென்றும் அக்கோவிலுள் சிவன் விஷ்ணு ஆகியவர்கள் சிறப்பை எய்தி சர்வ தர்ம க்ஷேத்திரங்களுக்குச் சென்று மக்களுக்கு தர்மோபதேசஞ் செய்தார்களென்பதற்கு சைவ வைணவ சமயங்களுக்கு சாஸ்திரப் பிரமாணமில்லை.

---

$ வாகனங்களின்மீது பகவானை எடுப்பித்து விழா செய்வதற்குக் காரணம்: விருஷபதீர்த்தங்கரர் (ஆதிபகவான்) முதல் மகாவீரர் பரியந்தமுள்ள 24 - தீர்த்தங்கரர்களுக்கும் வலது கால் பாதத்தின் பெருவிரலின் கீழ் விருஷபம், யானை, குதிரை, சர்ப்பம், சிம்மம் முதலான (24) லாஞ்சனம் அவர்களுக்கு தனித்தனி அமைந்துள்ளன வென்பது ஜைநசமய சாஸ்திரம் அதிகாரணம் பற்றி வாகனங்களி லேற்றுவதாகும்.

* ஸ்ராவகர்கள் வீதிவீதியாக வேத அத்யயனம் செய்வதை இக்காலத்தில் தவறவிட்டிருக்கின்றார்கள். இதற்குக் காரணம் கல்விக்குறைவே.

இவ்வாறு சைவ, வைணவ சமயங்களில் பகவானுக்குக் கோவில்கட்டி விழா நடத்துதற்குச் சாஸ்திரப்பிரமாண மில்லை எனினும், ஜைநர்கள் இவற்றைச் செய்துவருவதைப் பார்த்துத் தாங்களும், வேறுவகையாக சாஸ்திரங்களை நியமித்துக்கொண்டு கோவில் கட்டுவது, அதில் தேவ உருவத்தை ஸ்தாபித்து பூஜிப்பது, அதற்கு விழாக்கள் செய்வது, பிராம்மணர்கள் வேதங்களை அத்யயனம் செய்வது முதலியவற்றை நடத்தி வருகின்றார்கள்.

கர்மபூமியின் ஆதிகாலத்தில் ஆதிபகவான் (அருகக்கடவுள்) தவிர வேறு கடவுள் இல்லாமையால் மக்கள் யாவரும் அந்த பகவானைப் பூஜித்து வந்தார்கள். பிறகு கல்வித்தேர்ச்சி யுடையவர்களாலும், வித்தியா தேவதைகள் சகாயத்தினாலும் ஜைநர்கள் காலதோஷத்தால் சிவன் விஷ்ணு முதலான பல கடவுள்களையும், பல சமயங்களையும் பல சாஸ்திரங்களையும், உண்டுபண்ணிக்கொண்டார்கள்.

இவற்றின் விவரம் இப்புத்தகம் 7-ம் பக்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. கண்டுகொள்க.

ஆதிபகவான் அருளிய தர்மங்கள் அநேக பிரிவுகளாக இருந்து வருகின்றன. அந்தத் தர்மங்களில் கிருகஸ்தாஸ்ரமத்தை யுடையவர்கள் கைக்கொள்ளவேண்டிய முதல் தர்மம் யாதெனின், பகவானை பூஜை விழாக்கள் தோத்திரம் தியான முதலானவைகளால் வழிபடுவதேயாம்.

இக்காரணம் பற்றியே மக்களைப்பெற்ற தாய் தந்தையர்கள், குழந்தைப் பருவத்திலிருந்தே அப்பிள்ளைகளுக்கு பகவானை வணக்கம் செய்யும் தர்மத்தைக் காட்டும்பொருட்டு, ஆலயத்திலும், விழாக்களிலும் "அப்பா! அதோபார் சுவாமி; கும்பிடு; இதோ நான் கும்பிடுகிறேன் பார்" என்று இரண்டு கைகளையும் கூப்பி காட்டுவது முதலான பழக்கங்களைச் செய்துவருகின்றார்கள்.

இரண்டாவது தர்மமாவது; ஜீவன்களிடத்து அருளுடையவராயிருத்தல். 'தர்மஸ்ய மூலம் தயா' என்பது ஜைந சமயவேதம், அதாவது தர்மத்திற்கு மூலம் அருள்.

மூன்றாவது தர்மம் கொல்லாமையாம்; இதை விளக்கும் பொருட்டே ஜைநர்கள், தங்கள் மக்கள் சிறு பிராயத்தில் ஜீவன்களுக் கேதாவது இடர் செய்தால் அவர்களுக்கு நயமாகவும் பயமாகவும், "அப்பா! அதை ஒன்றும் செய்யாதே; அப்படிச் செய்

வது பாபம்" என்று கொல்லாமை யென்னும் தர்மத்தைப் போதிக்கும் வழக்கத்தைக்கொண்டிருக்கிறார்கள்.

அறம் பொருள் இன்பமென்னும் மூன்றில் அறத்தை நீக்கி மற்ற விரண்டில் அதாவது * போகோப போகங்களில் விருப்பமும், பொருள் சம்பாதிக்கும் தொழிலில் ஆசையும் உடையவர்கள் மோக்ஷ மடையார்கள்.

இதனைக் குறளாசிரியர்,

"மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது"

என்னும் குறளால் விளக்கியுள்ளார்,

இ-ள்: "மனை—தம்மனையாளை, விழைவார்— இன்ப காரணமாக) விரும்பியவர், மாண்பயன்–மாட்சிமை பொருந்திய மோக்ஷபலனை, எய்தார்-அடையமாட்டார்கள், (அவர்கள் வினை-(பொருள் சம்பாதிக்கும்) தொழிலை, விழைவார் - விரும்புகின்றவராவர், வேண்டாப்பொருளும்-'வீடு பெறுதற்கு பகையென்று) இகழ்கின்ற பொருளும், அது-அத்தன்மையுடையதே," என்பதாம்.

இதன் கருத்து; மனையாளை விரும்பியவர், பொருள் சம்பாதிக்கும் தொழிலில் ஆசையுடையவர்; இவர்கள் மோக்ஷத்தை யடையார் என்பதாம்.

(இக்குறட்பாவிற்குப் பரிமேலழகர் செய்திருக்கும் உரை பொருந்தாததாம்.)

இதன்படி தர்ம மன்றி மற்ற விரண்டாலும் பயனில்லை யென்பது பெறப்படும். ஆதலின், நற்காட்சி, நன்ஞானம் நல்லொழுக்கம் ஆகிய § விவகார ரத்தினத்திரயங்களை அனுஷ்டிக்கும், மனிதர், அருகத் பரமேஷ்டிக்கு அபிஷேகம், அர்ச்சனை, ஆராதனை முதலானவைகளைச் செய்யும் தர்மம் விசேஷமாகக் கூறப்பட்டிருக்கின்றது. பகவத் அர்ச்சனைசெய்யும் பலன்களை,

---

* போகம் உபபோகமென்பது இப்புத்தகம் 161-ஆம் பக்கத்தில் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது இதன் விவரத்தை ஆங்குக் கண்டுகொள்க.

§ மேல்சொன்ன விவகார ரத்னத்திரயம் நிச்சய ரத்னத்திரயம் இவைகளைப்பற்றி இரண்டாம்பாகத்தில் மெய்யுணர்வைப்பற்றிய விஷயங்கள் வருமிடத்து கண்டுகொள்க.

"ஜிநேந்த்ர பாதாம்போஜார்சநோத்த புண்யாந் நரா:
ஸமேத்ய ஸர்வாதிஶய ப்ரபாவவந்த:|
த்ரிலோக ஸௌக்யாநநுபூய மோக்ஷ
லக்ஷ்மீ ஸம்ஶ்லிஷ்ட வபுர் பவந்த்யாஶு."॥

என்னும் விரதஸ்வ ரூபம் 29-ஆம் சுலோகம் கூறுகின்றது.

இ-ள், 'அருகக்கடவுளுடைய தாமரைபோன்ற திவ்விய பாதங்களுக்குச் செய்யும் அர்ச்சனையினாலுண்டான புண்ணியத்தினால் (மனிதர்) ருபாதிசயங்களை அடைவார்கள். மறுபடியும் மூன்று லோகங்களிலுள்ள சுகங்களை அநுபவித்து மோக்ஷ லக்ஷ்மிக்கு பிரியமுள்ளவர்களாயும் விளங்குவார்கள்" என்பதாம்.

இதில் கூறியபடி மனிதர், கடவுள்பூஜை, அர்ச்சனை முதலானவைகளைச் செய்யும் புண்ணியத்தினால் மோக்ஷத்தை எவ்விதம் அடைகின்றார்களெனில், ஒருவன், அகலில், நெய், திரி முதலானவைகளைச் சேர்த்து தீபம் எற்ற அத்தீபம் பிரகாசிக்கும்; அவ்வாறு பிரகாசித்துக்கொண்டிருக்குமிடத்தில் இருள் சஞ்சாரமிராது, ஆனால் தீபத்தின்கீழ் அத்தீபஸ்தம்பத்தின் நிழலால் கிஞ்சித்து இருள் நீங்காமலிருக்கும்; அதைப்போல ஒருவன் கடவுள்பூஜை, அர்ச்சனை, விழாக்கள் முதலானவைகளைச் செய்யும் தர்மத்தினால் புண்ணியகர்மம் மிகுந்திருக்கும், எனினும் * பாபகர்மமும் குறைந்த அளவில் இருந்துகொண்டிருக்கும்; தீபப்பிரகாசம்போல மிகுந்த, புண்ணிய கர்மத்தினால் அவன், மனிதலோகம், தேவலோகம், அகமிந்திரலோகம் முதலான விடங்களில் ஜனித்து சுகங்களை அநுபவித்து, புண்ணிய கர்மமும் பிறத்தற்குக் காரணமா யிருத்தலாலும் தீபத்தின்கீழ் விலகாமலிருக்கும் இருள்போல பாபகர்மமும் தன்னைவிட்டுப் பிரியாமலிருப்பதாலும், மறுபடியும் மனிதலோகத்தில் அவதரித்து,

"இருள்சே ரிருவினையும் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்று குறளாசிரியர் கூறி அருளியதற் கிணங்க இறைவன் (அருகக்கடவுள்) அருளிய நான்குவேதங்களிலுள்ள தத்வப்பொருள்

---

* பாகல்காய் கசப்புள்ள பதார்த்தமாக விருப்பினும் அவற்றுடன் வெல்லம் சேர்த்தால் அக்கசப்பு குறைவுபடும் அதுபோல புண்ணிய மிகுதியால் பாபம் குறைவதாம்.

களை யுணர்ந்து அதனால்வரும் கீர்த்தியைப்பொருந்தி மோக்ஷமார்க்கத்தை அநுஷ்டித்து, நல்வினை தீவினைகள் அதாவது புண்ணியகர்மம் பாபகர்மம் ஆகியவைகள் நீங்கப்பெற்று மோக்ஷ மடைவார்கள்.

(ஒருவன் நிச்சய இரத்தினத்திரயத்தை அடைந்து) நான்கு வேதங்களாகிய தீபத்திலுள்ள தத்வங்களை தியானம் செய்தால் புண்ணிய கர்மங்கள் பாபகர்மங்கள் ஆகியவை அந்த ஆத்மனைவிட்டு நீங்கும். அவ்வாறு நீங்கியவுடன் ஆத்மஜோதி ஞான ஜோதி தேகஜோதி முதலியவைகளை அவன் அடைந்து, மோக்ஷ மெய்துவான். இத்தன்மை யுடையவனுக்கு உலகத்தின் கண்ணுள்ள இருளும், இரு சுடர்களா லுண்டாம் பிரகாச முதலானவைகள் இல்லாமல் கெடும். இக் குறட்பாவிற்குப் பரிமேலழகர் செய்திருக்கும் உரை பொருத்த மற்றதாம். மேல்காட்டிய கருத்திற்கிணங்க மேற்கோள்களுடன் இப்புத்தகம் 84-ஆம் பக்கமுதல் 90-ஆம் பக்கம் வரையில் இக்குறட்பாவின் பொருளை விவரித்திருக்கின்றேன்; ஆங்குக் கண்டுக்கொள்க.

மேற்கூறிய தர்மத்தை மனத்திற் குற்றமில்லாமலும், ஆடம்பரமின்றியும் செய்யவேண்டும். இதனையும் குறளாசிரியர்,

"மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற"

என்னும் குறளால் விளக்கி யிருக்கின்றார்.

**இ-ள். "தர்மம் செய்பவன் மனத்தின்கண் குற்றமில்லாதவனாகக் கடவன்; அவ்வனவே தர்மமாம்; சொல்லும் வேடமும் ஆரவார குணத்தை யுடையனவாம்." என்பதாம்.**

"மனம் வாக்கு காயமென்னும் த்ரிகரண சுத்தியோடு தர்மம் செய்யவேண்டும்; அஃதில்லாமல் ஆடம்பரமாக வாக்கு காயங்களினால் செய்யும் தர்மம் பயன் தருவதில்லை" என்பது இதன் கருத்து.

இனித் திருக்குறள் உரையாசிரியர்களைப்பற்றி சிறிது கூறுவாம்.

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிதி பரிமே லழகர் திருமலையர்
மல்லர் கவிப்பெருமான் காளிங்கர் வள்ளுவர்நூற்கு
எல்லைஉரை செய்தார் இவர்.

என்று திருக்குறளுக்கு உரைசெய்தோர் பதின்மர் கூறப்பட்டிருக்கின்றார்கள். இவ்வுரை யாசிரியர்களில் தருமர் என்பவர் ஜைந

ராவர். அப்படியிருந்தும் அவர்செய்த உரையுள்ள புத்தகம் ஜைநர்க ளிடம் கிடைக்கவில்லை. ஆனால் இரண்டு பழைய ஓலைப் பிரதிகள் கிடைத்திருக்கின்றன. அவற்றில் அநேகம் கருத்துக்கள் பரிமேலழ கர் கருத்துகளுக்குப் பொருந்தியும், சில பொருந்தாமலு முள்ளன.

மேற்கூறிய உரையாசிரியர்கள் பதின்மரில் இப்போது பரிமே லழகர், மணக்குடவர் ஆகிய இவ்விருவர் உரைகள் மட்டுமே அச் சிற் பதிப்பித்து வெளிவந்திருக்கின்றன. இவ்விருவர் உரைகளி லும் சிற்சில குறட்பாக்களின் உரைகள் ஒற்றுமை யுடையனவாயும், சில உரைகள் ஒன்றுக்கொன்று விகற்பப்பட்டு மிருக்கின்றன. அதி காரவரிசைகளும், செய்யுள் வரிசைகளும் ஒன்றுக்கொன்று முரண் பட்டு மிருக்கின்றன. ஆசிரியர் ஜைநசமயத்திற் கியைந்தவாறு அதி கார வரிசைகளையும் அவற்றிற்குரிய குறட்பாக்களையும் இயற்றியதை புறமதத்தினர் தங்களுக்கிசைந்தவாறு மாறுதல் செய்திருக்கிறார்கள்.

மேற்கூறிய ஆசிரியர்களின் உரைகளும் மிக நயமும், விளக்க மும் உள்ளன, எனினும் பதவுரை, கருத்துரை, விசேஷவுரை முதலானவைகளுடன் அமைந்துள்ளதும், ஆங்கில முதலான பல பாஷைகளில்மொழி பெயர்த்து உலகமுழுவதும் உலாவிவருவதும் பரிமேலழகர் உரை ஒன்றேயாகும்.

பரிமேலழகர் திருக்குறள் கடவுள் வாழ்த்தின் தலைப்பில், "சத் துவ முதலாகிய முக்குணங்களாலே அறமுதல் மூன்றாகிய உறுதிப் பொருளுக்கு அக்குணங்களாலே மூவராகிய முதற்கடவுளோடு சம் பந்தம் உண்டாயிருக்கையால் அம்மூவரையும் வாழ்த்துதல் முறை மையாதலின் இவ்வாழ்த்து அம் மூவருக்கும் பொதுபடச் சொல் லினுமென்று அறிக" என்று கூறியுள்ளார். இங்ஙனம் கூறும் கருத் துக்கள் மேல்குறித்த ஏட்டுப் பிரதிகளிலில்லை, இவ்வாறு கூறி யிருப்பது பரிமேலழகர் கூற்றாக விருப்பினும் அவர் கருத்து பொருத்த மற்றதாகும்.

திவாகரம், பிங்கல முதலான நிகண்டுகளிலும், இன்னும் பல இலக்கியங்களிலும், திருக்குறள் கடவுள் வணக்கத்திலுள்ள, அறி வன், மலர்மிசை யேகினன் (பூமிசை நடந்தோன்), அறவாழி யந்தணன், ஐந்தவித்தான், எண் குணத்தான் என்ற நாமங்கள் அரு கர் புத்தர் முதலானவர்களுக்குச் சொல்லியிருக்க, இந்தப்பெயர்கள் பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலான மூவருக்கும் பொதுபடக்

கூறப்பட்டிருக்கின்றன வென்று பரிமேலழகர் சொல்லியிருப்பது நூதனமாக விருக்கின்றது.

ஜைநசமயத்து வடமொழி நூல்களிலுள்ள அருகக்கடவுளின், தர்ம சக்கிராதிபன், அநந்த ஞானதி அஷ்டகுணன் முதலானபெயர்களும், இல்லற துறவறங்களுக்குரிய ஒழுக்கங்கள் முதலான தத்துவங்களும் திருக்குறளில் நிறைந்திருக்கின்றன.

இன்னும் ஜைநரால் செய்யப்பட்ட நாலடியார், பழமொழி, அறநெறிச்சாரம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் முதலான நூல்களிலுள்ள கருத்துக்கள் திருக்குறளில் பூர்ணமாக விருக்கின்றன, சீவகசிந்தாமணி, சூளாமணி, மேருமந்தர புராணம், திருக்கலம்பகம், திருநூற்றந்தாதி, அருங்கலச்செப்பு முதலானவைகளிலுள்ள ஜைநசமயக் கோட்பாடுகளும், மற்றுமுள்ள நீதிகளும் திருக்குறளில் அமைந்திருக்கின்றன. தமிழறிந்த நண்பர்கள் ஜைந சமய வடமொழி நூல்களைக்கற்று அச்சமயக் கோட்பாடுகளையும், கடவுள் பெயர் முதலியவற்றையும் உணராதிருப்பினும் மேற்கூறியுள்ள நிகண்டு முதலான தமிழ்நூல்களைக் கற்றுணர்ந்தேனும் தெரிந்துகொண் டிருக்கிறார்கள் அப்பேர்ப்பட்ட கல்வியாளர்கள் மேல் குறித்த பெயர்கள் அருகர், புத்தர் முதான கடவுளுக்கு உரியனவென்றும் அதனால் ஆசிரியர் ஜைந சமயத்தினராயேனும். புத்த சமயத்தினராயேனும் இருத்தல் கூடுமென்றும் துணிந்து கூறுகின்றார்கள். அவ்வாறு கூறியிருப்பது மேற்கூறிய பண்டிதர்களின் அபிப்பிராயங்களால் விளக்கும் இன்னும் பழய நூல்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான இலக்கியங்களிலும் அருகர், புத்தர் இவர்களுக்கு மலர்மிசை நடந்தோன், அறவாழி யந்தணன், எண்குணத்தான் என்கிற நாமங்கள் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

அப்படியிருக்கப் பரிமேலழகர், திருக்குறளாசிரியர் இந்து சமயக்கடவுளாகிய மூவருக்கும் அப்பெயர்களைப் பொதுப்படக் கூறினரென்பது சிறிதும் பொருத்த மற்றதாகும். இவர் நிகண்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை சீவகசிந்தாமணி முதலான பல இலக்கியங்களை அறிந்திலர்போலும். இவர் சைவ வைணவ சமயங்களின் பற்று மிகவு முடையவராய் அந்தச் சமயங்கட் கியையும்படி உரையும் செய்துள்ளார். இவரியற்றிய உரைகள் அநேக குறட்பாக்களுக்குப் பொருந்தாமலும், சில குறட்பாக்களுக்குப் பொருத்தமாயும், இருப்பதாலும், சில செய்யுட்களுக்கு வலிந்து பொருள்

கூறி யிருப்பதாலும், சில உரைகளை முன்னுக்குப்பின் முரணாக வகுத்திருப்பதனாலும் இவர் ஜைநசமய சாஸ்திரங்களை அறியாதவ ரென்பது புலனாகும். இவர் இவ்வாறு பொருத்தமில்லாமலும், வலிந்தும் பொருளுரைத் திருக்கின்றாரென்பது இப்புத்தகத்தில் பல இடங்களில் காட்டப்பட்டிருக்கின்றது. இன்னும் இதன் சார் பாகவரும் பாகங்களிலும் வெளிவரும். எனினும் இங்குமொரு குறட்பாவினால் அதனை விளக்குவாம்.

புலா லுண்ணாமையைப்பற்றி ஆசிரியர்,

"உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணாத்தல் செய்யா தளறு"

என்று கூறுகின்றார்.

இதற்குப் பரிமேலழகர், "சிலவகை உயிர்கள் உடம்பி னிடத் தே நிற்றல் மாமிசத்தை உண்ணாமையென்கிற அறத்தினிடத்தது" என்று பொருள்கூறி விசேட வுரையில், "உண்ணப்படுகிற விலங்கு கள் புசிப்பதினால் குறைந்துபோக மற்றவை பெருகுதலால் உண் ணாமையுள்ளது உயிர்நிலை யென்றார்" என்றும் கூறுகின்றார். இது பொருத்தமன்று. ஏனெனின் உண்ணப்படுகிற விலங்குகள் ஒருவ ராலும் உண்ணப்படாமலே யிருந்தால் அவற்றின் உடம்பில் உயிர் நிலையாக இருக்குமென்று சொல்லுதல் இயலாது; உண்ணப்படாத விலங்குகளின் உயிரும் அவற்றின் உடம்பில் நிலையாகவிருந்து பெருகுமென சொல்வதும் தவறு. உடம்பு நிலையற்றது; உயிர் நிலையாக வுள்ளது. ஆகையால் இவ்வாறு உரைகூறுதல் அசம்பா விதமாகும் .ஆதலின்

இந்தக் குறட்பாவின் உண்மைக் கருத்தை விளக்குவாம்.

இ - ள்: "ஊன் -மாமிசத்தை, உண்ணாமை-புசியாமையினால், உயிர்-ஆத்மன், நிலை-(பாரம் பரியத்தால்) சாஸ்வதமாகவுள்ள மோக்ஷத்தில், உள்ளது-(எப்பொழுதும் நிலைபெற்று) இருப்பதாகும், உண்ண (மாமிசத்தைப்) புசிக்க, அளறு - (அவனை விழுங்கிய * நிகோதமென்னும் நரகம், அண்ணாத்தல் செய்யாது-பின் உமிழ்தற்கு வாய் திறவாது." என்பதாம்.

---

* நிகோதமென்னும் நரகம் ஏழாவது நரகத்தின் கீழ் உள்ளது. இதிலுள்ள ஜீவன்கள் உத்சர்ப்பிணி, அவசர்ப்பிணி, அனந்தானந்தம் சென்றபிறகு சில ஜீவன்கள் மண்ணுலகின்கண் கிழங்கு, வேர், பட்டை, தளிர் முதலானவைகளில் உற்பத்தியாகும். இது காரணம்பற்றி ஆசிரியர் நரகம் உமிழ்தற்கு வாய்திறவாது என்று கூறினார்.

இன்னும்,

"அஹிம்ஸா பரமோ தர்ம: அதர்ம: பிராணிநாம் வத:
அதர்மோ அதோகதி பிராப்தஸ் ஸத்தர்மா மாஸ்வதம் சுகம்."

என்று தர்மசாரம் என்னும் கிரந்தத்தில் கூறுகின்றது,

**இ-ள்: "கொல்லாமையே உத்தமமான தர்மம், பிராணிகளைக்கொலை செய்வது அதர்மம். அதர்மம் நரககதியை யடைவிக்கும். சத்தர்மம் சாஸ்வதமாகவுள்ள (மோக்ஷ) சுகத்தைத்தரும்" என்பதாம். இந்த கிரந்தகர்த்தா கொல்லாமை மோக்ஷத்தையும் கொலை நரகத்தையும் அடைவிக்கும் என்று கூறியதற்கிணங்க குறளாசிரியர் புலாலுண்ணாமை மோக்ஷத்தையும்,மாமிசத்தை உண்பது நரகத்தையும், அடைவிக்கு மென்றும் கூறியுள்ளார். ஆதலால் குறளாசிரியர் கருத்தும் மேற்படி ஸ்லோகத்தின் கருத்தும் ஒக்கும் என்றறிக.**

மேல்கூறிய குறட்பாவின் உரை மாறுபட்டிருப்பதுபோல இன்னும் பலவிடங்களில் பொருந்தா வுரைகளை வகுத்திருப்பதால் ஜைநசமய சித்தாந்தங்களின் உட்கருத்துக்கள், ஆதித்தன் மேகங்களாலும், கேதுவினாலும் மறைக்கப்பட்டுப் பிரகாசம் குன்றுதல்போல திருக்குறளில் உள்ள ஜைநசமய சித்தாந்தங்களாகிய உண்மைக் கருத்துக்களி னொளி மழுங்கி இருக்கிறது. இதனால் பெரிய பெரிய பண்டிதர்கள் மனதிலும் ஆசிரியர் சமயத்தைப்பற்றியும் திருக்குறள்பற்றியும் பலவித சந்தேகங்களும் உண்டாய் விட்டன. இச் சந்தேகம் இந்தபாகத்திலேயே நிவர்த்தியாகும். இனி வரும் பாகங்களைப் படிப்பதனாலும் நிவர்த்தியாகும். ஜைநசமய வடமொழி, தென்மொழி நூல்களை நன்குக் கற்றுணர்ந்த கல்வியாளர் திருக்குறளுக்கு வேறு உரைசெய்தால் இலை மறைகாய்போல் மறைந்து கிடக்கும் ஜைநசமய சித்தாந்தங்களாகிய அரியபெரிய விஷயங்களெல்லாம் வெள்ளிடை மலைபோல விளங்கும்.

இன்னும் தமிழறிந்த கல்விமான்கள் சிலர், ஜைநசமயத்தின் மீது துவேஷமும், பொறாமையு முடையவர்களாய்த் தாம் அச்சிற் பதித்த தொல்காப்பியம் முதலான, சில நூல்களில் நூல்களின் தலைப்பிலுள்ள அருகக்கடவுள் வாழ்த்தை விலக்கியும், சில நூல்களில் அருகக்கடவுள் வாழ்த்தை நீக்கி விநாயகர்வணக்கம் அமைத்தும், செய்யுட்களைத் திருத்தியும், பழைய செய்யுட்களை நீக்கித் தாம் புதியனவாகச் செய்யுட்கள்செய்து சேர்த்தும் உண்மைக் கருத்துக்களுக்கு மாறுதலான உரைகளைச்செய்தும், நூல் இயற்றிய ஆசிரியர் உரையாசிரியர் ஆகியவர்களின் சமயமுதலானவைகளைச் சொல்

லாமலும் அநேக மாறுபாடுகளைச் செய்திருக்கின்றார்கள். இம்மா திரி செய்துள்ளவற்றில் திருக்குறளும் ஒன்றாகும்.

இதற்குக்காரணம் சில வருஷங்களாகத் தென்தேசத்தில் ஜைநர்களின் ஜனப்பெருக்கமும், செல்வச் செழிப்பும், கல்வி மேன்மையும் குறைந்ததுவேயாகும். ஜைநர்கள் இத்தன்மை எய்தியதைக் கண்டு தமிழறிந்த பெரியார்,

"கொல்லா விரதம் பூண்ட நலத்தோர்
அறிவா னிறைந்த வறமான் புடையோர்
தமிழின தருமை தனியா யுணர்ந்தோர்
கருவி நூற் காவியம் கழறும் பெரியோர்
கால கதியாற் கடைநிலைப் படுவோர்
தம்வயப் படுவது சமண காலம்"

என்றும் கூறியிருக்கின்றார்.

ஆதலின் இந்த நிலைமையை அடைந்த ஜைநர்கள், தங்கள் முன்னோர்களால் செய்திருக்கும் சாஸ்திரங்களின் அருமை பெருமைகளை அறியாமலும், அவற்றை அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தாமலு மிருந்து வருவதனாலேயே பிறர் பலவாறு திருத்தம் செய்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் செய்திருக்கும் அநீதிகளையெல்லா மெழுதப்புகின் அவைகள் மிக விரிவெய்தும். ஆகையால் அவர்கள் செய்திருக்கும் புரட்டுக்களில் சிலவற்றைமாத்திரம் இங்கு விவரிக்கின்றேன்.

அமரகோசம் இயற்றியவர் ஜைநர், இதனை அதிலுள்ள பல சுலோகங்கள் விளக்கக்கூடியனவா யிருக்கின்றன. அவற்றுள் "யஸ்யக்ஞான தயாஸிந்தோ" என்கிற சுலோகமொன்றே போதுமான அத்தாட்சியாகும். இப்படியிருந்தும் இந்தச் சுலோகத்தின் கருத்து விஷ்ணுவைக் குறிக்கும்படி உரை செய்யப்பட்டிருக்கிறது. அது பொருத்தமன்று என்பது பின்வரும் உரையால் விளங்கும். இது தவிரச் சில பதிப்பாசிரியர்கள் தம் முகவுரையில் அமரகோசர் புத்த சமயத்தினரென்று எழுதியுள்ளார்கள். அதுவுந் தவறுதலாகும். இன்னும் மேற்கூறியவர்கள் அமரகோசத்தின் தலைப்பில் அருகக்கடவுளுக்கும் ஜைநசமயத்துக்குமுரிய (73) எழுபத்திரண்டு சுலோகங்களை விலக்கி அச்சிட்டிருக்கின்றனர். மற்றுமுள்ள வடமொழி தென்மொழி நிகண்டுகளில் ஒவ்வொரு சமயக் கடவுள் பெயர்களும் சொல்லியிருக்க அமரகோசத்தில் மாத்திரம் அருகக்கடவுளின் பெயர்கள், இல்லாமல் புத்தர், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய

வர்கள் பெயர்கள். இருப்பதைக்கொண்டே இதன் உண்மையை நன்குணர்ந்து கொள்ளலாம். பிராமணர்கள் மதத்துவேஷத்தினுல் ஷை 72-சுலோகங்களை நீக்கியுள்ளாரென்பது அறிஞருக்கு நிச்சயமாக விளங்கும். அச்சிடப்படாத அமரகோசத்தின் ஏட்டுச்சுவடியில் 72 - சுலோகங்கள் இருந்து வருகின்றன.

வடமொழி நிகண்டுகளில் நாமத்தையும் லிங்கத்தையும் ஏககாலத்தில் தெரிவிக்கக்கூடியது அமரகோசம் என்னும் நிகண்டு ஒன்றுதான். இத்தன்மையுடைய நிகண்டு இயற்றியவர் ஜைநர் என்பதைப்பற்றி நிச்சயிக்கக்கூடிய சுலோகங்கள் அச்சுபுத்தகத்தில் இருப்பினும் அமரகோசத்தின் சுலேகங்கள் 73 ஏட்டுச்சுவடியில் இருந்துவருகின்றன. அவற்றில் அமரகோசம் படிப்பதனுல் உண்டாகும் பயனைப்பற்றி சுலோகம் ஒன்றும் அருகக்கடவுள் வணக்கம் இரண்டு சுலோகமும் அருகக்கடவுளின் திருநாமங்களைப்பற்றியும் அவர்க்குரிய தர்மச்சக்கிரம், தயாசக்கிரம் ஆகியவைகளைப் பற்றியும், ரித்தியைப்பெற்ற முனிவர்களைப் பற்றியும், புவன, வியந்தர, ஜோதிஷ்க, கல்பவாசி, அகமிந்திரலோகம் ஆகியவைகளைப்பற்றியும் யக்ஷன், யக்ஷி, சக்கிரவர்த்தி, இராஜாக்கள் அவர்கள் வம்சத்தைப் பற்றியும் கூறப்படுகின்றன. ஆகலின் மேல்சொன்ன எழுபத்திமூன்று சுலோகங்களையும் இங்கு எடுத்துக்காட்டுவோம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

இ - ள்: "இந்த அமரகோசமானது யாரொருவனுல் படிக்கப்படுகின்றதோ அப்புருஷன் சமஸ்த சாஸ்திர விஷயங்களையும் அறிந்து கொள்ளுகிறான் அதிகபுத்தியும் உண்டாகிறது; மற்றும் வியாகரண சமுத்திரத்தின் கரையை காணப்படுகிறான். அம்மனிதன் அமரகோசத்தைப் படித்த சக்தியினுல் ஜனங்களுக்கு இஷ்டமாயும் மனதைக் கவரக்கூடியதுமான காவ்யத்தைச் செய்வதற்கு சமர்த்தனுயும் சமஸ்த சாஸ்திர சமுத்திரத்தின் கரையைக் கடந்தவனு மாகிறான்" என்பதாம்.

ஜிநஸ்ய லோகத்ரய வந்திதஸ்ய ப்ரக்ஷாலயேத்பாத
[ஸரோஜயுக்மம் |
[illegible] ||

இ - ள்: "என்னிடத்தில் மிகவும் பக்தமாயிருக்கிற சம்ஸாரமாகிய சேற்றை மூவுலகிலுள்ள ஜனங்களால் வந்திக்கப்பெற்ற அருகக்கடவுளது இரண்டுபாத தாமரையின் ஈக காந்தியாகிய கங்கையின் ஜலத்தினுல் சுத்தம் செய்யட்டும்" என்பதாம்.

𑌯𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑌯𑌾𑌸𑌿𑌨𑍍𑌧𑍋𑌰𑌗𑌾𑌧𑌸𑍍𑌯𑌾𑌨𑌘𑌾 𑌗𑍁𑌣𑌾𑌃 ।
𑌸𑍇𑌵𑍍𑌯𑌤𑌾𑌮𑌕𑍍𑌷𑌯𑍋 𑌧𑍀𑌰𑌾𑌃 𑌸 𑌶𑍍𑌰𑌿𑌯𑍇 𑌚𑌾𑌮𑍃𑌤𑌾𑌯 𑌚 ॥

இ - ள்: "பண்டிதர்களே! ஸ்வபாவமாய் காம்பீரத்தை யுடைத்தானவரும், த்ரிலோக த்ரிகால விஷயங்களை ஏக சமயத்தில் அறியும் கேவல ஞானத்தையும், சமஸ்த ஜீவன்களிடத்தும் சமத்வபாவமுள்ள அருள் என்னும் சமுத்திரம் போன்ற குணங்களையுடைய யாதொரு அருகக்கடவுள், கர்மங்களை நாசஞ்செய்தவரும், நாசமற்றவருமாகிய அந்த அருகக்கடவுளை; சுவர்க்க சுகத்தின்பொருட்டும், மோக்ஷ சுகத்தின் பொருட்டும், நமஸ்காரம் செய்யுங்கள்" என்பதாம்.

இந்த சுலோகத்தின் கருத்தால் இதற்குமுன் கடவுள் வணக்கமுள்ள சுலோகம் ஒன்று இருத்தல் வேண்டுமென்பது விளக்கமாகும்.

'யஸ்யக்ஞான தயாஸிந்தோ' என்னும் பதங்களின் தாத்பரியம் அருகக்கடவுளுக்குப் பொருந்துமேயன்றி விஷ்ணுவிற்குப் பொருத்தமாகாது. எவ்வாறெனின் விஷ்ணு துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்யும்பொருட்டு பல இராக்ஷஸர்களை சம்ஹாரம் செய்திருக்கிறார். அருச்சுனனுக்கு சாரதியாக விருந்து துரியோதனுதி வம்சங்களை நாசஞ்செய்வதற்கு உடன்பட்டு மிருந்தார் என்பது சாஸ்திரப்பிரமாணம். இது காரணத்தினுல் விஷ்ணு தயை உள்ளவரென்று சொல்லப் பொருந்தாது. இந்த சுலோகத்தின் கருத்துக்கள் விஷ்ணுவிற்குப் பொருந்தாதென்பதை அதிகம் சொல்லவேண்டியதில்லை. தயை இல்லாதவரென்று குறித்துள்ளது ஒன்றே போதுமான சான்றாகும்.

இதன் கீழுள்ள சுலோகங்கள் சுவர்க்கவர்க்கின்கீழ் இருத்தல் வேண்டும்.

𑌸𑍍𑌵𑌰𑌵𑍍𑌯𑌯𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌨𑌾𑌕𑌤𑍍𑌰𑌿𑌦𑌿𑌵𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑌾𑌲𑌯𑌾𑌃 ।
𑌸𑍁𑌰𑌲𑍋𑌕𑍋 𑌦𑍍𑌯𑍋𑌦𑌿𑌵𑍌 𑌦𑍍𑌵𑍇 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 𑌕𑍍𑌲𑍀𑌬𑍇 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌪𑌮𑍍 ॥

𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌃 𑌕𑌲𑍍𑌪𑌜𑌾 𑌦𑍇𑌵𑌾𑌃 𑌕𑌲𑍍𑌪𑌾𑌤𑍀𑌤𑌾 𑌸𑍍𑌤𑍍𑌵𑌹𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌾𑌃 ।
[illegible] ॥

𑌚𑌤𑍁𑌰𑍍𑌧𑌾 𑌦𑍇𑌵𑌾𑌸𑍍𑌤𑍇 𑌤𑍇𑌷𑍁 𑌭𑌵𑌨𑌵𑌾𑌸𑌿𑌨𑌃 ।
𑌵𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍍𑌕𑌾𑌶𑍍𑌚 𑌵𑍈𑌮𑌾𑌨𑌿𑌕𑌾𑌃 ॥

श्रीमाञ्जितेन्द्रजिनपतिर्जिनेन्द्रो जिनबन्धुरः ।
तीर्थंकरस्तीर्थकरस्तीर्थकृद्दिव्यवाक्पतिः ॥

सर्वज्ञो वीतरागोऽर्हन् सार्वः सार्वज्ञ्यतारणः ।
पारगो वन्दितः कल्याणो सार्वः कल्याणभाजनः ॥

अभिनव शासनस्थाणुः केवली परमवक्त्रः ।
अष्टप्रातिहार्यसर्वार्थं नष्टकेवल सूरिकः ॥

सत्यवाक् सत्यवान् सार्वः सार्वज्ञ्य निरामयः ।
अनिन्द्यो निर्मलो निष्कलः सिद्धो निर्मलोदयः ॥

स्वयंभूर्दर्शनातीतः परमात्मा परोऽव्ययः ।
अक्षीणगुणो देवो परंज्योतिः स्वयंप्रभः ॥

मार्गमार्गी मार्गज्योतिः मूलधारी निर्मारकः ।
अनन्तदिव्यज्ञानः कृतकृत्यो विश्वशः ॥

उत्तमो नित्यो नित्यो गुणोत्तमः महाऋषिः ।
व्योमगामी श्रीमान् परमः स्थाता विश्वस्थितिः ॥

पाता प्रजानां सर्वतः परमेष्ठी विधाता ।
हिरण्यगर्भो लोकेशः स्वयंभूः शाश्वतः सदा ॥

पञ्चब्रह्ममयः सदा परिज्ञानदृष्टाचारनयः ।
श्रीनिवासो भव्यः शिवः श्रीपतिः पारमेष्ठीत्वः ॥

पद्मनाभः पद्मनाभो महावीरो जितकामः ।
वामदेवो महादेवः कामजित् कन्दर्पहारः ॥

अष्टगुणः सर्वदर्शी स्वयंभूः सर्वदर्शी पारमेष्ठी ।
सर्वज्ञः सर्वदर्शी ज्ञानभूः सर्वदर्शी ॥

महादेवः पशुपतिः केवली ज्ञानलोचनः ।
सदाशिवः स्वयंभूः परमात्मा विभावसुः ॥

महाव्रतो लोकनाथः सर्वज्ञो लोकबान्धवः ।
परमेष्ठी परमात्मा परमज्योति नायकः ।

[illegible] ।
[illegible] ॥

नाभेयो वृषभो [illegible] प्रजापतिः ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ।

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

என்பவைகளே. இதன் கீழ் புத்தரைப்பற்றிய நாமங்களாம்.

இந்த சுலோகங்களைக் கண்ணுறும் பண்டிதர்கள் இனி தாம் அச்சிடும் அமரகோச புத்தகத்தில் சேர்த்தச்சிட்டு வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்வாறு செய்பவரே முன்னோர்களில் சிலர் மத வைராக்கியத்தால் செய்த பழியை நீக்கியவராயும் அமரகோசத்தின் முழுப்பெருமையையும் உலகுக்கு ஊட்டிய உத்தமராயும் ஆவார் என்பதில் ஐயமில்லை.

இன்னும், தொல்காப்பியத்தில் "வினையினீங்கி" என்கிற சூத்திர மிருப்பதைக்கொண்டு, ஆசிரியர் இந்நூலின் தலைப்பில் அருகக்கடவுள் வணக்கம் செய்திருப்பா ரென்பதும் பிற்காலத்தவர் அதைநீக்கி யிருப்பார்களென்பதும் விளங்குகின்றன. இறையனாகப்பொருள் ஆசிரியரும் அந்நூலில் அருகக்கடவுள் வாழ்த்துக் கூறியிருக்கக்கூடும். சைவர்கள் அதைநீக்கிவிட்டு அந்நூலை இறைவன் (சிவன்) செய்த நூலென்று சொல்கின்றார்கள். சிலர், திவாகரத்தைப் பற்றி ஆதிதிவாகரம் வேறு, சேந்தன் திவாகரம் வேறென்று கருதுகிறார்கள். அது சரியன்று. சேந்தன் திவாகரம் ஒன்றுதான் வெளியானது; சேந்தனென்னும் இராஜாவின் வேண்டுகோளுக்கிணங்கி திவாகர முனிவர் செய்ததனால் சேந்தன் திவாகரமென்று அதற்குப்பெயர் வழங்கலாயிற்று. அதிலுள்ள பல சான்றுகளால் அந்நூலைச் செய்தவர் ஜைநரென்பது நிச்சயிக்கக் கூடும். இதிலும் அருகக்கடவுள் வணக்கம் நீக்கப்பட்டும் வினாயகர் துதி அமைக்கப்பட்டும், சிவன் விஷ்ணு இந்திரன் முதலானவர்களின் பெயர்களின் ஈற்றில் அருகன் பெயர் அமைக்கப்பட்டு மிருக்கின்றன.

பிங்கல நிகண்டைச் செய்தவரும் ஜைநர் என்பது யாவரும் அறிந்ததே. இதிலும் அருகக்கடவுள் துதி நீக்குதல் செய்யப்பட்டும், சிவன், விஷ்ணு, பிரம்மா, இந்திரன், சந்திரன், காளி, கூளி, மூதேவி முதலானவர்கள் பெயர்களின் கடைசியில் அருகக்கடவுள்பெயர் அமைக்கப்பட்டு மிருக்கின்றன. இன்னும், தர்மார்த்த

காமமோக்ஷம் சிநாகமமே என்று ஆசிரியர் கூறியிருந்ததைப் பிற் காலத்துச் சைவ மதப்புலவர்கள், "தர்மார்த்தகாம மோக்கம் சிவா கமமே" என்று மாற்றியிருக்கின்றார்கள். இன்னும் அதில் சிவன் பெயர் 95-ம், அருகன் பெயர். 14-ம் கூறப்பட்டிருக்கின்றன. அரு கன் பெயர் எத்தனையோ இருக்க ஆசிரியர் இவ்வாறு கூறியிருப் பாரா என்பதை அறிஞர்யோசிக்க வேண்டும். இன்னும் அமரகோசர் திவாகரர், மண்டல புருடர் முதலானவர்கள் சிவனுக்கு எண் குணத்தானென்ற பெயரைச் சொல்லவே இல்லை. இவ்வாறு சொல்ல வில்லையென்பது, புலவர்கள் அறிந்ததேயாம். அப்படி யிருக்க பிங்கலத்தில் மாத்திரம் சிவன் பெயர் 95ல் எண்குணத்தா னென்றபெயர் சேர்க்கப்பட்டிருக்கிறது. இது போலிப்புலவர் செயற்கையாகும்.

இன்னும் சூடாமணி நிகண்டு 12-வது தொகுதியில் மண்டலபுருடர்,

"அறுசம யங்க ளென்ப வானவை யாயி கத்தோ
டுறையும்வை சேடி கம்மே லுள்ளலோ காயி தந்தான்
குயிலிமீ மாஞ்ச மென்று குறித்தவை யன்றி நல்ல
நெறியுள வருகம் புத்தம் நீதியென் றோது மன்றே"

என்று அறுவகைச் சமயங்கள் இன்னவை யென்பதைக் கூறியுள் ளார். சேந்தன் திவாகரம் 12-வது தொகுதியில் இக்கருத்தையே கூறியுள்ளன. இச்செய்யுள் பழைய ஏட்டுப் பிரதிகளிலும் பழைய அச்சுப் புத்தகத்திலுமுள்ளன. இதை ஆறுமுக நாவலர் முதலான மதத்துவேஷிகள் மாற்றி, உட்சமயம் ஆறு என்றும், புறச்சமயமாறு என்றும் புனைந்துரைத்து அவற்றை விளக்கும் பொருட்டு இரண்டு செய்யுட்களைச் சேர்த்திருக்கிறார்கள். அவையாவன:-

"அரியவுட் சமய மாறே யாவன சைவந் தூய்மை
பெருகுபா சுபதத் தோடு பிறங்குமா விரத மற்றும்
கருதிய வீடு பேறு காட்டுகா ளாமு கந்தான்
மருவிய வாம மிக்க வைரவ மென்ன லாமே."

"அறுபுறச் சமயந் தானே யறையும்லோ காய தம்பின்
உறைதரு பௌத்த மேயா ருகதமீ மாஞ்ச மோடு
குறிபெறு மாயா வாதங் கூறிய பாஞ்ச ராத்ரம்
நெறிபெறு மிவையே யென்ன நிகழ்த்துவர் நூல்வல் லோரே"

என்பனவாம்.

சங்கநூல்களிலொன்றாகிய எலாதியில், "அறுவர் தந்நூலும் அறிந்துணர்வு பற்றி" என்பது கூறப்பட்டிருக்கின்றது. சைவ சமயத்தில் அப்பரும், "ஆறிருளண்டம் வைத்தார் அறுவகைச் சமயம் வைத்தார்" என்றும் கூறியிருக்கின்றார். வைணவ சமயத்திலும், 'கூறும் சமயங்களாறும் குலைய குவலயத்தே" என்று இராமாநுஜ நூற்றந்தாதி 46ஆம் செய்யுளடி கூறுகின்றது. இவற்றைக் கொண்டு முற்காலத்திலுள்ள புலவர்கள் அறுசமயங்களே கூறியிருக்கின்றார்க ளென்பதும், உட்சமயம், புறச்சமயமென அவற்றில் இரண்டுபிரிவுகள் சொல்லவில்லை யென்பதும் புலப்படும். அப்படியிருக்கப் பிற்காலத்திய போலிப்புலவர்கள் மண்டலபுருடர் அறுசமயங்களைப்பற்றி மாத்திரம் சொல்லியிருந்ததைத் திருத்தி, உட்சமயமாறு, புறச்சமயமாறு என அவற்றில் இருபிரிவுகளைக் கூறியுள்ளார்கள். சைவம் மிகுதியானதின் பிறகு, உட்சமயம் புறச்சமயமென கற்பித்திருக்கின்றனர்.

இன்னும் மண்டலபுருடர்,

"கடையிலா ஞானத் தோடு காட்சிவீ ரியமே யின்ப
மிடையுறு நாம மின்மை விதித்தகோத் திரங்க ளின்மை
அடையிலா வாயுவின்மை யந்தரா யங்க ளின்மை
உடையவன் யாவன் மற்றிவ் வுலகினுக் கிறைவ னாமே"

என்று அருகக்கடவுளைப்பற்றிக் கூறிய செய்யுளின் நாலாவது அடியில். "உலகினுக் கிறைவனாமே", என்பதை திருத்தி, "உடையவனிறைவனென்ன வுரைக்கு மாருகத நூலே" என்று ஷெ நாவலர் மாற்றியிருப்பதுந் தவிர சிவனுக்கு எண்குணத்தா னென்ற பெயரையுஞ்சூட்டி அதை விளக்குதற்கு, இரண்டு அசத்தியமுள்ள விருத்தங்களைச் செய்தும் சேர்த்துள்ளார். அவையாவன:—

"இன்னவை யருக நூலி னிசைக்குமென் குணங்கண் மற்றும்
தன்வயத் தூய தேகந் தகுமியல் புணர்வு மேலாப்
பன்னுமுற் றுணர்வி னோடு பாசங்க ளியல்பி னீங்கல்
முன்னுபே ரருளே மற்றை முடிவிலா வாற்றல் பின்னும்"

"வரம்பிலா வின்ப மென்றே வாய்த்திடுங் குணங்க ளெட்டும்
தாம்பெறு சைவ நூலிற் சாற்றிய தொகையா மென்ப
திருந்துமிக் குணங்க டாமே சேர்ந்தவனியாவ னென்னிற்
பொருந்திய வுலக மெல்லாம் புரந்திடுங் கடவு ளாமே"

என்பனவே.

"சைவ நூலிற்சாற்றிய தொகையாமென்ப" என்று சொல் லும்பொருட்டே மேலே, "உரைக்கு மாருகத நூலே". என்று மேற்கூறிய செய்யுளடியைத் திருத்தி யிருக்கின்றார்கள்.

இன்னும் இலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, பெருங்குழி, சிறுகுழி முதலான கணித நூல்களிலும் இருந்த அருகக்கடவுள் வணக்கத்தை விலக்கி, விநாயகர் வணக்கச் செய்யுட்களைச் செய்து சேர்த்துள்ளார்கள்.

ஆதிகாலத்தின் ஆரம்பத்தில் ஆதிபகவான் கலாஞானங்களை லோகத்திற்கு உபதேசிக்க நினைத்து, தம்முடைய இரண்டு பெண் களுக்கும் அக்ஷர, கணித, வியாகரண (இலக்கணம்) சந்தோவிசி த்தி, அலங்கார முதலான சாஸ்திரங்களை உபதேசித்ததைக் கொ ண்டு கணதரபரமரிஷிகளாலும், மகாமுனிவர்களாலும் இலக்கண இலக்கிய சாஸ்திரங்கள் செய்யப்பட்டிருப்பது போல கணித (எண் களது) சாஸ்திரங்களிலும் மேல்கூறியுள்ள இலக்கம் முதலாகச்சிறு குழி பரியந்தம் உள்ளநூல்கள் ஜைநசமயத்தில் வாமன முனிவரால் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றில், ஒவ்வொன்றுக்கும் அருகக் கடவுள் வாழ்த்தும், எண்சுவடி முப்பது வாய்ப்பாடுகளுக்கும் அலகுநிலைச் செய்யுட்கள் 30ம் செய்திருக்கின்றார். அவைகளில் இலக்கத்தில்,

"முக்குடை யருகன் முதல்வனைப் போற்றிவாழ்
அக்கண லக்கம் அறிந்திடலாமே"

என்றும்,

நெல்லிலக்கத்தில்,

"வல்மதி முக்குடை யான்மல ரடிதொழ
நெல்லணி லக்கமென் னெஞ்சினில் வருமே"

என்றும்,

எண்சுவடியில்,

"முத்தணிந்த முக்குடைக்கீழ் மூவாமுதல்வனே
அத்தனேயாதி யறவாசே சித்தனே
எண்ணுாலி லாறைந்து வாயுமெனக் கருள்வாய்
இந்நூலை யானுணர்க வென்று"

என்றும்,

பெருகுழியில்,

"பண்ணவன் கமலவூர்தி பரமேட்டி பாதம்போற்றி
எண்ணினற் குழிகள்மாற எழில்பெருங் குழிக்குக்காப்பு
நண்ணவே கணக்காய்ந்தோத ஞானிலத்துள்ள வெல்லாம்
விண்ணவள் கமலமாது வாணிநாமகள் தாள்தானே"

என்றும்,

சிறுகுழியில்,

"அருகனை அமலனை அசலனை அடிதொழச்
சிறுகுழி முப்பதும் சிந்தையில் வருமே"

என்றும் கடவுள் வணக்கங்கள் கூறியுள்ளார்.

**எண்சுவடியில் முப்பது வாய்பாடுகளுக்கு¶அலகுநிலை * பரிவாகம்.**

க—வது வாய்பாடு

மல்லிகை யைந்து மலர்ந்த பூத்தொண்ணூறு
கொள்ளுவாரைவர் பறித்து அலகுநிலை. ௫௪௫.

உ—வது வாய்பாடு.

ஆயிரம்பைங்கிளி நூறுகுயிற் கொண்டு
மாயிரஞ் சோலைமரந் தொண்ணூறு
பேறியஞாயிறு பட்டாங் கறிந்து
அலகுநிலை. ௲௪௰.

௩—வது வாய்பாடு.

ஆயிரம்யானை எழுநூறு கூன்பகழி
பாயும் பகடெண்பத்தைந்து அலகுநிலை. ௲௭௱௮௰௫.

௪—வது வாய்பாடு.

இருவரே மூவர்க் கினி தமர்ந்தூட்டி
விருநால்விளக்கினு முண்டாக்குவாரே அலகுநிலை. உ௲௩௱௮௰.

௫—வது வாய்பாடு.

இருகயத்து டொன்பதின்மர் செங்கழுநீர்ப் போதோ
டெழுமலரைம்பாற் காட்டுது மென்பார் அலகுநிலை. உ௲௩௱௭௫.

---

¶ அலகு நிலை எண்ணின் நிலைமை. * பரிவாகம் பெருக்கு.

## ௬-வது வாய்பாடு.

முக்குள மாடுவார் கைந்நூற்றுந் தக்க
தெழுமலர்த் தக்கதாந் தக்க துடைத்து அலகுநிலை. ௧௲௫௱௭௰.

## ௭-வது வாய்பாடு.

நால்வரொருநெறி போயினரே யறுவ
ரைந்நூறும் புக்காரகத்து அலகுநிலை. ௪௲௯௰௫.

## ௮-வது வாய்பாடு.

நாநில மாடத் தெழுபது காலாள்
துங்காரறுவர் தோழியே கேள் நீ அலகுநிலை. ௪௲௱௯௰.

## ௯-வது வாய்பாடு.

ஐந்துடன் மாட்டி யாறைந்து விளக்கின்கி
ழைம்பது தும்பி முன்னூத வைந்தும்பி
சென்றறியும் பூவைச் செறிந்து
அலகுநிலை. ௫௲௯௱௫௫.

## ௰-வது வாய்பாடு.

கோடிமடவார்தங் குன்றுபோன் மாளிகை மேற்
பாடப் பயிலுமிடம் பன்னொருநூ றாயிரமாஞ் சேடியர்க
ளைம்பற் றெண்பதினாயிரத்துத் தொளாயிரத்தைம்பதே யாகும்
அலகுநிலை-ஒரு கோடியே ௰௪-லக்ஷத்து ௫௪௲௯௱௫௰.

## ஷத. முந்திரி வாய்பாடு.

மலர்பத்துப் போதெட்டு வானரையு மாக
விலை நான்கே கொம்பிரண்டே வேரொன்றே வேரின்
முதலொன்றே முந்திரி வாய்க்கு
அலகுநிலை. ௰அ௲ நாலும்மா சுமுடிஷத.

## ௨. அரைக்காணி வாய்பாடு.

ஆறைந்துபூவி னகத்தியனு ரேழ் கோட்டைக்
காலென் றெழிலார் கவிநான்கெனுங் கவியின்
பூவொன்றே பூவிலையு மொன்று
அலகுநிலை. ௲௭௰ நாலும்மா காணி அரைக்காணி.

## ௯. காணி வாய்பாடு.

எழுபதின்மர் கன்னியர்கள் நான்கா மலைச்சார்
முலை குனிப்பார் முக்கண்ணர் மூன்றேயும் பாடுவரே
நின்றெறியுங் கோல்மூன்று
அலகுநிலை. எயசமுக்காலேமூனுவீசம்.

## சுய. அரைவீசம் வாய்பாடு.

நூற்றுவர் நால்வேதமோத மற்றொன்பதின்மர்
வேட்டாரே முக்கா லகத்திருக்க நீர்கொண்டு
வேற்றரைக்கால் வாய்பூசா நின்று
அலகுநிலை ாசயகூமுக்காலே அரைக்கால்.

## சூ. முக்காணி வாய்பாடு.

நாலைம்பதனை யிருபத்து நால்வர்க்கு
நீரோடு முக்கால் கொடுத்தாரே மாவோடு
காணிகடை நின்ற தொன்று
அலகுநிலை. உாஉசமுங்காலேவீசம்.

## ப. ஒருமா வாய்பாடு.

குஞ்சரந் தாமிரண்டு தொண்ணூற்றோ ரேமற்
றொன்பதின்மர் கால்காப்பச் செல்வரே மூன்றேயும்
வந்துதொழுது அலகுநிலை. உாகூயகூமுக்கால்.

## பது. வீசம் வாய்பாடு.

முப்புரி நூன்மார்ப ரெழுபதின்மர் நால்வேதத்
தர்க்காங் கிருகாலிற் கொள்வரே முப்பொழுது
மூன்றேயும் வந்து தொழுது
அலகுநிலை. நாஎயச?மூனுவீசம்.

## இரண்டுமா வாய்பாடு.

ஐங்கயத்துத் தொண்ணூறு செங்கழுநீ ரொன்பதின்மர்
கொள்வாரிருகாற்பறிந்து அலகுநிலை. ொகூயகூ.

## ஹு. அரைக்கால் வாய்பாடு.

விளக்கேயெழுவர் வரிவிளக்கே கைகூப்பி
நால்வரிருந்து விளையாடாமற் றொன்பதின்மர்
காலிற் சதிராய் வருவரே மாவிரண்டும்
காணிரண்டுங் கண்டறிந்தொன்று அலகுநிலை. எளசயகூவஹு.

### மூன்றுமா வாய்பாடு.

என்னூற்றுத் தொண்ணூறு பூமலர்கொண்டொன்பதின்மர்
விண்ணுளார் முக்குடைக்கீழ் வீர னடிதொழுவார்
நண்ணுவார் காலால் நடந்து
அலகுநிலை. அாகூ௰கூவ.

### ஙூ. மூன்று வீசம் வாய்பாடு.

கொங்கொன்று நூற்றுவர் ஏறினர் மற்றதன்கீழ்
நாலைந்து நான்குமே ஆயிலியம் பூவிலிய
மாகாணியாகி விடும் அலகுநிலை. தூாஉ௰சபஞ.

### நாலும்மா வாய்பாடு.

குளமொன்று நீர்போ மடையொன்றதன்கீழ்
நிலமளந்தார் தொண்ணூற்றோ ரேமற்றொன்பதின்மர்
ஆத்தன் கடைநெறி காட்டியவர் அலகுநிலை. தூாகூ௰கூ.

### வ. கால் வாய்பாடு.

ஆயவனை நல்லா ளொருத்தி யவளுக்குத் தோழிமார்
நால்வர் தொடுத்த பூத்தொண்ணூறு நாலிரண்டே
கொள்ளுமாத் தலையளவே பூசுமாஞ் சாத்துக்கு
முக்கால்விலை அலகுநிலை. தூசாகூ௰அமுக்கால்.

### ௨. அரை வாய்வாடு.

இரண்டுபூத்தொண்ணூறு சாக்காடு பூண்ட மலர்ப்
பண்டத் தொண்ணூறு செய்ததே கூலியாம்
அமர்ந்ததாம் ஏழரை வாய்க்கு
அலகுநிலை. உதூகூாகூ௰எ௨.

### முக்கால் வாய்பாடு.

நால்வர் கணிகையர் நான்மாடக் கூடலிற்
நேரொன்பதேறித் தெருவே கடாவேறி
ஆறுவ தொன்று விலக்கினன் சாலெதிரே
காலொன்று கை கொண்டதொன்று அலகுநிலை. சதூசாகூ௰கூவ.

### ட. நாழி வாய்பாடு.

அறுபத் திரண்டாகுந் தாமரைப் பூவிற்
குறுகூலி யைங்குறுணி முக்காழி யென்பரே
மறுவறு காட்சியவர் அலகுநிலை கூஉஉளதஙநஉ.

### * ௯. செவுடு வாய்பாடு.

நெல்விலை வேண்டி நிறைந்தமரக்காலி
லல்லதொரு நாழியது வாய்க்கு சொல்லரிய
வாயினல் மாறிவரும் பொருள்தன்னை
ஒருமா விரைச்செவுடென்றேது
அலகுநிலை சள தஹறுவ முக்காலரைக்கால்.

### ௧. குறுணி வாய்பாடு.

நான்குதயத் தொண்ணூற்றேரேமற் றென்பதின்மர்
ஆன்றவெழுகுறுணி பொற்சின்னங் கொள்வரே
முத்துணி நடப்பதினில் அலகுநிலை. சாகூமகூளஎழுகுறுணி.

### ௨. தூணி வாய்பாடு.

ஒன்று பலாப்பழம் ஒன்பது வாழைக்காய்
நல்ல சிறுகிழங்கோ டொன்பது வர்க்கத்து
சிங்காரக் கூலியாமற் றெண்கலனே தூணியாங்
குன்றுமற் கொள்வர் பெறின் அலகுநிலை. நகூாகூமஅளத.

### ௭. கலம் வாய்பாடு.

முக்கலம் பூரிநெல் மூதுரைவாய்க் காணுங்கால்
அக்குளத்து நீர்மோரைங்குறுணி நானழி
சிக்கென வந்தவர் காற்சுவடா மென்பரே
தக்கதுணர்ந்தவர் தாம். அலகுநிலை. கஎதஙசவஉச௯.

### சதுர வாய்பாடு.

தாமிரு நூறு தகையாப்பூத்தோ செழுமர் விருவல்லி
யிருமூன்றே முக்காலாந் தாமரைக
ளாடுத்துறை யருகே சேர்ந்தாரே
நீருமொரு பூவை நிறைத்து

சதுரத்தை நாற்றித்துத் தான்வேண்டும் வாயால்
எதிரா மொழிந்த பொருளை—அதிராதே
முந்திரிவாயிற் கழிப்பனவுங் காணுமே
இந்த வசலப் பிறப்பு.

ஓதிய வாயி லொருவாய்த் தொகைதன்னை
ஆறினல் மாறி யமைந்த—பொருள்தன்னை
அஞ்சினு லாய பயன்களைத் தோன்றுமே
இந்த வலகு நிலை.

என்பவைகளே.

---

* இந்த செவுடு வாய்பாடு, நாழி வாய்பாட்டுக்கு முன் இருத்தல்வேண்டும்.

இத்தன்மையாக வாமனாசாரியார் என்னும் ஜைநமுனிவரால் இயற்றிய பழய ஓலைப்பிரதிகளில் இலக்கமுதல் சிறுகுழி பரியந்தம் உள்ள நூல்களில் அருகக்கடவுள் காப்புச் செய்யுட்களும், எண்சுவடி முப்பது வாய்பாடுகளில் அலகுநிலைகளும் அமைந்துள்ளன. இவற்றிற்குப் பெரும்பான்மையும் பொருத்தமாக திருப்பதி இரத்தினமுதலியார் அவர்களது சென்னை கலைஞான முத்திராக்ஷர சாலையில் பதிப்பித்துள்ள எண்சுவடி பழய அச்சுப்புத்தகத்தில் காப்புச் செய்யுள்மாத்திரம் விநாயகக்கடவுளைக் குறித்ததாக அலகுநிலைகள் 30-ம் ஜைநமுனிவரால் இயற்றப்பட்டனவாகவு மிருக்கின்றன. அந்தப் புத்தகம் இப்போது என்னிட மிருக்கின்றது. அதை நண்பர்கள் நேரில் பார்க்கலாம். இவ்வாறு எண்சுவடியில் எங்கள் பெரியார், “ஆறைந்துவாயு மெனக்கருள்வாய்” என்று கூறியதற்கிணங்க, இக்காலத்தில் அச்செய்யுளை மாற்றிய போலிப்புலவரும், “எண் முப்பது வாயுமென் சித்தத்தே நிற்கும்” என்று கூறிவிட்டார்கள். ஆனால் அவர்களால் அவ்வாறு மாற்றப்பட்டு இப்போது வழங்கும் எண்சுவடியில் முப்பது வாய்பாடுகளில்லை. ஒருமா, இரண்டுமா, மூன்றுமா, நாலுமா, துணி, கலமுதலான வாய்பாடுகள் சேர்ந்தால்மாத்திரம் முப்பது வாய்பாடுகளாகும். ஆதலின் அவர்கள் முப்பது வாய்பாடென்று பாடியது பொருத்தமற்றது. எங்கள் ஆசிரியர், “பழையனகழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே” என்று கூறியிருப்பதற்கேற்றபடி அவர்கள் புதியன ப்புகுதலாகச் சில்வாம் பாட்டுகள் தள்ளப்பட்டன என்று சமாதானங் கூறலாம். அப்படி யிருந்தாலும் லக்கமுதல் சிறுகுழி பரியந்தம் உள்ள ஜைநசமயத்திற்குரிய அருகக்கடவுள் வணக்கத்தை நீக்கிச் சைவசமயத்திற்குரிய விநாயகர் வணக்கத்தைக் கூறியதற்கு என்ன நியாயமிருக்கின்றது? இதையும் அவர்கள், “பழையனகழிதலும் புதியனபுகுதலும் வழுவல” என்ற நியாயத்தைக் கொண்டு செய்தனரா? இவ்வாறு சமயத்தைப் புரட்டுதற்குமா அச்சூத்திர விதி இடந்தருகிறது? நடுநிலையுள்ள கல்விமான்கள் இதைப்பற்றி நன்கு ஆராய்ந்தால் அவர்கள் தாமெண்ணத்தினாலேயே சமயத்தைப் புரட்டியிருக்கிறார்களென்பது வெளியாகும்.

இன்னும் சிலப்பதிகார முதலான சிலநூல்களில் பல மாறுதல்கள் இருக்கின்றன. அவற்றை இங்கெழுதின் இவ்வுரை மிகவெய்து மெனவிடுத்தனம். இவ்வாறு நூற்புரட்டுச் செய்வதால் பல தீமைகளுண்டாகும்.

ஒருசமய சாஸ்திரங்களைப் புரட்டிவேறு சமயசார்பாக பல மாறுபாடுகள் செய்வோர் அடையும் பயனை மேருமந்தர புராணத்தில்,

"பரமநூல் பழித்தல் மாய்த்த லிடையுறல் பிழைக்க வோதல்
குரவர்மா றுதல் சுருதங் கொண்டுழி காத்தற் றீ நூன்
மருவுதல் துவர்க ளுன்கின் ஞான மாச்சரிய முற்றும்
பெருகிலா வரண ஞானக் காட்சியைப் பிணிக்கு மிக்கே"

என்று 1330 ஆம் கவி கூறுகின்றது.

இ - ள்: "அஷ்டாதஸ (18) தோஷரகிதனுன அருகத்பரமேஸ்வரனுல் சொல்லப்பட்ட கணதரரசித பரமாகமங்களை நிந்திப்பதும், நாசஞ்செய்தலும், விக்னம் பண்ணுவதும், அவற்றின் கருத்துக்களை மாறுபாடாகச் சொல்லுவதும், ஆசாரிய உபாத்தியாய ஸ்ருதகுருக்கன்மார்களை மாறுபாடாகச் சொல்லுவதும், ஆகமத்தை வைத்துக்கொண்டிருந்தும் அதனைப் பிறருக்குக்காட்டி உபகாரம் செய்யாமல் மறைத்து விடுவதும், மித்தியா (பொய்) சாஸ்திரங்களை உண்மைச் சாஸ்திரங்களோடு கலத்தலும், குரோத மான மாயா லோபங்களென்னும் நான்கினுல் சம்மியக்ஞானத்தின்மேல் பகையாவதும் ஆகிய இவைகள்யாவும் ஒருவனிடத்தே விருத்தியடையுமானுல் அதனுலே ஞானுவரணீய தர்ஸனுவரணீய கர்மங்கள் மிகுதியாக வடைந்து ஆத்மனிடத்தில் பந்திக்கும்" என்பதாம்.

ஆகையால் மேல்கூறியவைகளை கல்விமான்கள் யாவரும் உணர்ந்து ஜைநர்களா லியற்றியுள்ள நூல்களில் யாதொரு மாறுபாடும் செய்யாமல் அவற்றை அச்சிற்பதித்து வெளியிடும்படி அதி விநயத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அருந்தமிழ் அறிந்த நண்பர்களே! மேற்கூறிய மாறுபாடுகளை நீக்கும்பொருட்டும் அநேக பண்டிதர்கள் திருக்குறள் ஆசிரியர் சமயத்தினது உண்மையை உணராமல் அவ்விஷயத்தில் கொண்டிருக்கும் ஐயத்தினை நிவர்த்தி செய்யும் பொருட்டும், புறமதத்தினரும் ஜைநமத தத்துவங்களை நன்கு உணரும் பொருட்டும், சாமானியப் படிப்பாளிகளும் திருக்குறளின் உண்மைக் கருத்துக்களை நன்கு அறியும் பொருட்டும் இந்நூலை எழுதி வெளிப்படுத்த நான் முன்வந்தேன். இதில் பொருத்தமில்லாத பரிமேலழகர் உரைகளில் மாறுபட்டிருந்த சில குறட்பாக்களைத் திருத்தியும், அவற்றிற்கியைந்த வடமொழிமேற்கோள் சுலோகங்களை உரையுடன் விவரித்தும், தென்

மொழி மேற்கோள் செய்யுட்களைச் சிற்சில விடங்களில் உரையுடன் எடுத்துக் காட்டியுமிருக்கின்றேன்.

ஜைந சமயத்தின் காலம், அருகக்கடவுள் சிறப்பு அவரால் அருளிய இல்லற துறவற தத்துவங்கள் திருக்குறள் முதலியவற்றைப் பற்றியும் ஜைநரல்லாதார் பலர் பலவாறு சொல்லிக்கொண்டிருக்கும் அபிப்பிராய பேதங்கள் நீங்கி, மேல்சொன்ன விஷயங்களின் உண்மைகளை அறியும் பொருட்டும் திருக்குறள் ஜைநசமய தமிழ் வேதமென்பதைச் சில குறட்பாக்களால் உறுதிப்படுத்தியும், ஜைந சமய காலமுதலான பலவிஷயங்களைச் சுருக்கமாக இப்புத்தகத்தில் விளக்கியு மிருக்கின்றேன்.

இந்நூல் பூர்த்திபெறச் சுமார் 700–800, பக்கங்களுக்கு மேலாகுமாதலாலும், நூல்முழுதும் முடியக்காலம் நீடிக்குமாதலாலும், நான் திருக்குறள் ஆராய்ச்சிசெய்து இதை எழுதிவருவதையும், அச்சிற்பதிப்பித்துப் பிரசுரஞ்செய்ய விருப்பதையும் அறிந்த சில ஜைநரும், ஜைநரல்லாத சில நண்பர்களும் இந்த ஆராய்ச்சி நூலைப்பார்க்க விருப்பமுற்று சீக்கிரம் வெளியிடும்படி வற்புறுத்தியதாலும் இப்போது முடிந்தவரையில் இதனை முதல் பாகமாக வெளிப்படுத்தி யுள்ளேன்.

திருக்குறள் ஆராய்ச்சியின் நிமித்தம் நான் வடமொழி தென்மொழி நூல்களை ஆராய்ச்சிசெய்து வரும்போது தொல்காப்பியம் இயற்றிய ஆசிரியர் ஜைநரென்பது விளக்கமாகத் தெரியவந்ததனாலும் இறையனாகப்பொருள் ஆசிரியரும் ஜைநரென்பது அவ்வுரையிலுள்ள சிலகருத்துக்களால் தெரியவந்ததனாலும் அவற்றையும் இப் புத்தகத்தில் விளக்கிக்காட்டி யிருக்கின்றேன்.

நான் இந்நூலை இயற்றத் தொடங்கியபோது செய்யாறுத் தாலுகா, திருப்பறம்பூர்க் கிராமத்தில் உள்ள ஸ்ரீபுஷ்பதந்தஸ்வாமி ஜிநாலயத்தின்கண், ஸ்வஸ்திஸ்ரீ தர்மசாகரஸ்வாமியாரவர்களால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் புத்தகசாலையில் (லைப்ரரியில்) திருக்குறளாசிரியர் இயற்றிய ப்ராப்ரதத்ரய மென்னும் பஞ்சாஸ்திகாயம், ப்ரவசனசாரம், சமயசாரம், ரயணசாரம், பத்மநந்திபச்சீஸ் ஆகிய நூல்களும், பலமுனிவர்களால் செய்யப்பட்ட வடமொழி நூல்களும் கிடைத்தன. இவை திருக்குறள் ஆராய்ச்சிக்கு மிகவும் உதவியாக விருந்தன. தென்மொழியிலுள்ள நூல்களில் அச்சிட்ட

நூல்கள் இரண்டு மூன்றே ஷெ லைப்ரேரியில் கிடைத்தன. இந் நூல்களை எனக்கு லைப்ரரியிலிருந்து அடிக்கடி உதவிய ஷெ லைப்ரரி யின் காரியதரிசி திரு. T. S. ஸ்ரீபால் ஜெயின் அவர்கள் நன்றியை மறவேன். லைப்ரரியில் கிடைத்ததுதவிர ஷெ ஆராய்ச்சிக்கு வேண்டிய மற்ற நூல்கள் பலவற்றைக் கிரயத்திற்கு வாங்கி ஆராய்ச்சி செய் தேன். இன்னும் மேல்படி லைப்ரரியில் நாகரம் கன்னட அக்ஷரங்களில் இந்தி, சம்ஸ்கிருதம், கன்னடம், முதலான பாஷைகளில் அநேக சாஸ்திரங்களிருந்தன எனினும் அவைகள் எனக்குவிளங்காமை யால் அந்நூல்களிலுள்ள விஷயங்களையும் வேறுசில விஷயங்களையும் நேரிலும், தபால் மூலமாகவும் விளக்கி உதவி புரிந்தவர்கள்,

வந்தவாசி தாலூகா களப்புலியூர் கிராமம்
ஸ்வஸ்திஸ்ரீ. பிரம்மசரிய சுவாமியாரவர்கள்,

ஷெ தாலூகா வெண்குணம்கிராமம்
ஸ்ரீமகம்மேரு **செல்வரஸு சாஸ்திரியார்,**

ஜாகீர் ஆரணி ஜவுளிவர்த்தகம் ஸ்ரீமான். வசுபால நயினர்,

செய்யாறு தாலுகா காவல்கிராமம்
ம-ா-ா-ஸ்ரீ, **பத்திரபாகு சாஸ்திரியார்,**

ஷெ தாலுகா ஷெகிராமம்
ம-ா-ா-ஸ்ரீ, **சம்பத்ராவ் சாஸ்திரியார்,**

முதலியவர்களே. இவர்கள் செய்தவுதவிகளை யான் எழுபிறப்பிலும் மற வாமல் இவர்களிடம் நன்றிபாராட்டுங் கடமை பெரிது முடையேன்.

நான் இந்நூலை எழுதுங்காலத்தில் சென்னை பிரஸிடென்ஸி கலாசாலைத் தத்துவபோதகாசிரியர் ஸ்ரீமான். அ. **சக்கிரவர்த்திநயி னர்** எம். எ. ஐ. இ. யஸ். அவர்கள் மேருமந்தர புராணத்தை அச்சிற்பதிப்பித்து பிரசித்தம் செய்திருந்தார்கள். குறளில் சொல் லப்பட்ட தத்துவங்களுக்குச் சரியான உதாரணங்கள் அந்த மேரு மந்தர புராணத்தில் அமைந்திருந்தன; நான் அவற்றைப்பார்த்து மனமகிழ்ச்சியுடையவனாய் அவைகளையெல்லாமெடுத்து இந்நூலில் உள்ள பல விஷயங்களுக்கு ஆதாரங்களாகக் காட்டியுள்ளேன். இன் னும் குறள்கருத்திற்கிசைந்த கருத்துள்ள பல செய்யுட்கள் அம் மேருமந்தர புராணத்தில் கிடைத்தன. அவைகளும் இந்நூலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

மேற்கூறிய பெரியார் இந்த மேருமந்தர புராணத்திற்குத் தக்க உரையாசிரியரைக் கொண்டு உரை யெழுதுவித்தும் வெளியிட்டிருக்கின்றார். அவ்வுரை ஜைநர்களுக்கும் மற்றையர்க்கும் பெருந் தனப்புதையல் கண்டெடுத்ததுபோலாம்.

இன்னும் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், உதையணன் பெருங்கதை முதலான ஜைநநூல்களும் என் ஆராய்ச்சிக்குப் பேருதவிபுரிந்தன. இவற்றை அச்சிட்டு வெளிப்படுத்திய ஸ்ரீமான். உ. வே. சாமிநாதையர் அவர்கள் செய்த நன்றி ஜைநர்களால் எப்போதும் மறக்கற்பாலதன்று.

இன்னும் தொல்காப்பியம், இறையனாரகப் பொருள், அகப்பொருள்விளக்கம், நன்னூல், நேமிநாதம், வெண்பாப்பாட்டியல், யாப்பருங்கலவிருத்தி, யாப்பருங்கலக்காரிகை, திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணிநிகண்டு, திருக்குறள், நாலடியார், பழமொழி, ஏலாதி, திணைமாலை நூற்றைம்பது, சிறுபஞ்சமூலம், அறநெறிச்சாரம், யசோதரகாவியம், கலிங்கத்துப்பரணி, லக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, பெருகுழி, சிறுகுழி முதலான பல ஜைந நூல்களும் எனது ஆராய்ச்சிகளுக்கு மிகவும் உதவியாக விருந்தன. இவற்றை அச்சிட்டு வெளிப்படுத்தின அன்பர்களின் நன்றியை யானும் மற்றுமுள்ள ஜைநர்களும் என்றும் நினைத்தற் குரிமையுடையவர்களாயிருக்கின்றோம். இன்னும் ஜைந நூல்களில் அமரகோசமும் எனக்குப் பயன்பட்டது. இதனை அச்சிற் பதித்து வெளியிட்டவர்களின் நன்றி என்றும் பாராட்டத் தக்கதாம்.

நான் எழுதியுள்ள பலவிஷயங்களையும் ஊக்கத்துடன் கவனித்து ஒப்புநோக்கிச் சீர்திருத்தம் செய்தவகையில் தமிழ்ப்பெரும் புலவர் திருவாளர். செம்பூர். வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்கள் பெரிதும் உழைத்து வந்தார்கள். இவர்களை யான் ஒருபொழுதும் மறவேன்.

ஸ்ரீமான் சென்னை தி. ஆதிநயினார் அவர்களால் நடத்திவந்த "தரும சீலன்" என்னும் தமிழ்பத்திரிகையில் திருக்குறள் ஜைந நூல் என்பதை சுருக்கமாக எழுதியுள்ளேன். அதனை விரிவாக எழுதி புத்தகரூபமாக வெளிபடுத்த ஊக்கமூட்டிய அப்பத்திரிகையையும் அதன் ஆசிரியரையும் மறக்கற்பாலதன்று.

எனது சிற்றறிவைக் கொண்டு இந்தப் பெரிய விஷயத்தில் நான் பிரவேசஞ் செய்தது திருக்குறளின் உண்மை உரைகளையும் அதன் உண்மை ஆசிரியரையும் உலகுக்குக் காண்பிக்க வேண்டு மென்ற பெரும் அவாவே இவ்விஷயத்தில் என் மனம் சார்த்தது. இஃது ஒரு பெண்மானானது தனது பராக்கிரமத்தை யறியாமல் பிரீதியினாலே தனதுகுட்டியை ரக்ஷிக்கும் பொருட்டு சிம்மத்தை எதிர்க்க முயன்றது போலாம். ஆயினும் என்னுடைய சொற்கள் குற்றமாயிருப்பினும் குறளின் உண்மை உருவம் வெளியாயிருப் பதைக்கண்டு அறிஞர்கள் ஆனந்தித்து திருப்தி யடைவார்க ளென்றே துணிந்து இந்நூலை எழுதத் தொடங்கினேன்.

திருக்குறள் கடவுள்வாழ்த்து அருகக்கடவுளைச் சார்ந்ததென் பதையும், மற்ற அதிகாரங்களிலுள்ளவைகள் ஜைநசமயத்தைச் சார்ந்தவைக ளென்பதையும் விளக்கும்பொருட்டு இதர சமயக்கட வுளரின் குணங்களையும், அந்தந்தச் சமயசாஸ்திரங்களிலுள்ள கருத் துக்களையும் எடுத்துக் காட்டவேண்டியது அவசியமா யிருந்தன. அவற்றை எடுத்துக் கூறாவிடின் மேற்கூறிய விஷயங்களின் உண்மை விளங்காது. இக்காரணத்தைக்கொண்டே பிறசமயங்களின் கடவு ளர்களின் தன்மைகள், சாஸ்திரங்களின் தன்மைகள் முதலியவற்றை எடுத்துக்காட்டி யிருக்கின்றேன். இதனால் இதர சமயங்களின் கடவுளரையாவது, சாஸ்திரங்களையாவது, பரிமேலழகரையாவது குறைகூறத் துணியவில்லை. அங்ஙனம் நான் குறையைகூறத் துணிந்திலேன் என்பதை திரிகரண சுத்தியோடு கூறுகிறேன்.

> "புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி
> கல்லா வொருவ னுரைப்பவுங் கண்ணோடி
> நல்லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன்
> பல்லாரு நாணல் பரிந்து"

என்றும்,

> "குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
> மிகைநாடி மிக்க கொளல்"

என்றும் சான்றோர்கள் கூறியவற்றை நேயர்கள் மனங்கொண்டு நான் என் சிற்றறிவிற் கியைந்தவரையில் மிக்க பிரயாசையுடன் யெழுதி வெளியிட்டிருக்கும் இந்நூலை அங்கீகரித்து இதிலுள்ள குற்றத்தை நீக்கிக் குணத்தைஸ்வீகரிக்க வேண்டுகிறேன்.

எனது அறியாமையாலோ வேறு காரணங்களாலோ இந்நூலில் பிழைகள் நேர்ந்திருப்பின் அறிவுடையோர் அப்பிழைகளை திருத்திக்கொள்வதுடன் அவைகளை எனக்குத் தெரிவித்தால் நான் இரண்டாம் பதிப்பில் திருத்தம் செய்து கொள்ளுவேன்.

இந்நூல் இனிது முடியும்பொருட்டுத் திருவருள்புரிந்த சர்வ ஜீவதயாபரனாகிய அருகக்கடவுளை வாழ்த்துவாம்.

சிறியேனை இம்முயற்சியில் பிரவேசிக்குமாறு செய்தருளிய ஸ்ரீ தர்மதேவி அம்பாளையும், திருக்குறள் இயற்றியருளிய (குந்த குந்தர்) ஏலாசாரியரையும் சிந்தித்து வந்திக்கின்றேன்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்ஙனம்,

தி. அநந்தநாத நயினார்.

காஞ்சிபுரம்.


5-9-31

## இப்புத்தகத்திலும் இதன் சாரபாகவரும் இரண்டாம் பாகத்திலும் எடுத்துக்காட்டிய வடமொழி தென்மொழி மேற்கோள் நூல்கள்.

அகளங் காஷ்டகம்
அஷ்ட பதார்த்தம்
அமர கோசம்
* அப்பர் தேவாரம்
அருங்கலச் செப்பு
அறநெறிச் சாரம்
ஆதிபட்டாரகர் பஞ்சரத்னம்
ஆதிபட்டாரகர் இரட்டைமணி
மாலை
ஆத்மத்யான பஞ்சரத்னம்
* இராமாநுஜர் சரித்திரம்
* இராமாநுஜ நூற்றந்தாதி
இனியவை நாற்பது
இன்னா நாற்பது
உதயணன் பெருங்கதை
ஏலாதி
* கந்தபுராணம்
* கம்ப ராமாயணம்
* காஞ்சி புராணம்
கர்மஸ்வரூபம்
கிரியா புஸ்தகம்
* கொலை மறுத்தல்
கோமட சாரம்
சகஸ்ரநாம கிரந்தம்
* சங்கரர் சரித்திரம்
சரஸ்வதி தோத்திர கிரந்தம்
சந்த்ர சூடாமணி
சாகார தர்மாமிர்த ஸ்ராவகா
சாக்கியாஷ்டகம் [சாரம்
* திருஞானசம்பந்தர் தேவாரம்
திருப்பாமாலை
* திருவிளையாடற் புராணம்
திவாகரம்
தீபநாதர் தோத்திரம்
தொல்காப்பியம்
தோத்திரத்திரட்டு
நரி விருத்தம்
* நல்வழி
நவரத்ன வைத்தியசிந்தாமணி
நன்னூல்
நாககுமார காவியம் வடமொழி
நாலடியார்
* நாலாயிர ப்ரபந்தம்
* நாஞ்ஜீவவாத கட்டளை
* நான்மணிக் கடிகை
நித்ய பூஜாவிதானம்
* நீதிநெறி விளக்கம்
நீலகேசி
நேமி நாதாஷ்டகம்
* பகவத்கீதை
பத்தாமரம்
பஞ்சாத்தியாய்
பஞ்சாஸ்தி காயம்
பதார்த்த சாரம்
பத்மநந்தி பச்சிஸ்
பரமாத்ம ப்ரகாசம்
* பரிபாடல்
பழமொழி

சிலப்பதிகாரம்
* சிவஞான தீபம்
* சிவஞான வள்ளலார் சாத் [திரம்
சிறுபஞ்ச மூலம்
ஜீவக சிந்தாமணி
ஜீவ சம்போதனை
ஸ்ரீபுராணம்
சுப்ரபாதம்
சூடாமணி நிகண்டு
சூளாமணி
சூக்தி முக்தாவளி
சோமசேன பட்டாரகர் த்ரை
வர்ணிகா சாரம்
ஸ்ருதாவதார கிரந்தம்
ஞானர்ணவம்
தசதர்மம்
தத்வார்த்த சூத்ரம்
தர்ம சாரம்
தர்ம பரிக்ஷை
திரவ்ய சங்கிரகம்
திருக்குறள் மணக்குடவர் [உரை
திருநூற்றந்தாதி
திருக்கலம்பகம்
* பாகவதம்
பாண்டவ புராணம்
பிங்கலர் நிகண்டு
பிரஸ்னோத்தர மாணிக்கமாலா
பிரம்மசூரி த்ரைவர்ணிகா சாரம்
பிரவசனசாரம்
* புறநானூறு
பூஜ்யபாதசுவாமி ஸ்ராவகாசாரம்
* பெரிய புராணம்
பேரகத்தியத்திரட்டு
மகாபுராணம்
மணிமேகலை
மேருமந்தர புராணம்
யசோதர காவியம்
யதியாசாரம்
யாப்பருங்கல விருத்தி
யாப்பருங்கலக் காரிகை
ரத்னகரண்டக ஸ்ராவகாசாரம்
ரயண சாரம்
லோகாணி
* வாக்குண்டாம்
விரதஸ்வரூபம்
விஸ்வலோசன கோசம்

* இக்குறி இட்டிருக்கும் நூல்கள் சைவ வைணவ சமயத்தைச் சார்ந்தனவாகும். மற்ற நூல்கள் ஜைநசமயத்தைச் சார்ந்தனவாகும்.




ஏலாசாரியார்.

(திருக்குறளாசிரியர்)

# திருக்குறளாசிரியர் சரித்திரம்.

திருக்குறள் இயற்றிய உண்மை ஆசிரியரின் சரித்திரத்தைக் கூறுதற்கு இவருடைய காலம், பெயர்கள் முதலியவற்றை ஒருவாறு ஆராய்ந்து நிச்சயப்படுத்திக் கொள்வது அவசியமாதலின், அவற்றை முதலில் ஆராய்ந்துரைப்பாம்:—

இவர் குந்தகுந்தர், ஏலாசாரியார் முதலிய ஆறுவித காரணப் பெயர்கள் பெற்றிருக்கிறார். அவற்றுள் ஐந்து பெயர்களைப்பற்றிய விவரமும், இவர் வசித்திருந்த காலத்தைப்பற்றிய விவரமும், ஆர் ஹோர்ன்லே துரை அவர்கள் ஜைந திகம்பரர்களும், சுவேதாம்பரர்களும் வைத்திருக்கும் ஆசாரியர்கள் பட்டாவளியிலிருந்து இண்டியன் ஆண்டிக்வரி தொகுதி 20, 21ல் எழுதியிருக்கிறார். அதைக்கொண்டு ஷை விவரங்களை, ஸ்ரீமான் எ. சக்ரவர்த்தியனார் எம். எ. ஐ. இ. யஸ். அவர்கள் ஜைநா கெஜட் 1922-ஆம் வருஷம் ஜனவரி, பிப்ரவரி மாதத்திய பத்திரிகையில் வெளியிட்டிருக்கின்றார்கள். மேற்கூறிய பட்டாவளியாவது, ஸ்ரீ மகாவீர வர்த்தமானர் பரிநிர்வாண மடைந்த கி. மு. 527க்குப்பின், அநகாரகேவலிகள், ஆசாரியர்கள் முதலானவர்கள் குருபீடத்துக்கு வந்தவர்களின் பட்டாவளியாம். அதை இங்கு எடுத்துக் காட்டுவோம்:—

## பட்டாவளி

| ஸ்தானவிவரம். | பெயர். | குருபீடத்தில்இருந்த | ௵ |
|---|---|---|---|
| அநகாரகேவலி | கௌதமர் | ,, | 12 |
| ,, ,, | சுதர்மர் | ,, | 12 |
| ,, ,, | ஜம்புநாமர் | ,, | 38 |
| ஸ்ருத கேவலி | விஷ்ணுகுமாரர் | ,, | 14 |
| ,, ,, | நந்திமித்ரர் | ,, | 16 |
| ,, ,, | அபராஜிதர் | ,, | 22 |
| ,, ,, | கோவர்த்தனர் | ,, | 19 |
| ,, ,, | முதல்பத்திரபாகு | ,, | 29 |

| ஸ்தானவிபரம் | பெயர் | குருபீடத்திலிருந்த | வரு |
|---|---|---|---|
| தசபூர்வதரர் | விசாகர் | ,, | 10 |
| ,, ,, | ப்ரோஷ்டிலர் | ,, | 15 |
| ,, ,, | நக்ஷத்ரா | ,, | 17 |
| ,, ,, | ஜெயசேன | ,, | 21 |
| ,, ,, | நாகசேன | ,, | 18 |
| ,, ,, | சித்தார்த்தா | ,, | 17 |
| ,, ,, | த்ரதிசேன | ,, | 18 |
| ,, ,, | விஜயா | ,, | 13 |
| ,, ,, | புத்திலிங்கா | ,, | 20 |
| ,, ,, | கங்கதேவா | ,, | 14 |
| ,, ,, | தர்மசேன | ,, | 14 |
| ஏகாதசாங்கதரர் | நக்ஷத்ரா | ,, | 18 |
| ,, ,, | ஜெயபாலா | ,, | 20 |
| ,, ,, | பாண்டவா | ,, | 39 |
| ,, ,, | துருவசேன | ,, | 14 |
| ,, ,, | கம்ஸா | ,, | 32 |
| ஏகாங்கதரர் | சுபத்ரா | ,, | 6 |
| ,, ,, | எசோபத்ரா | ,, | 18 |
| | | ஆகமொத்தம் வருஷம் | 486 |

| பெயர்கள் | இல்லறம் | | | துறவறம் | | | குருபீடம் | | | அதிகசான் | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வரு | மீ | உ | வரு | மீ | உ | வரு | மீ | உ | சான் | வரு | மீ | உ |
| 2-வதுபத்திரபாகு | 24 | 0 | 0 | 30 | 0 | 0 | 22 | 1 | 27 | 8 | 76 | 11 | 0 |
| குப்தி குப்தா | 22 | 0 | 0 | 34 | 0 | 0 | 9 | 6 | 25 | 5 | 65 | 7 | 0 |
| முதல்மாகாச்தி | 20 | 0 | 0 | 44 | 0 | 0 | 4 | 4 | 26 | 4 | 68 | 5 | 0 |
| ஜிரசந்திரா | 24 | 9 | 0 | 32 | 3 | 0 | 8 | 9 | 6 | 3 | 65 | 9 | 9 |
| குந்த குந்தர் | 11 | 0 | 0 | 33 | 0 | 0 | 51 | 10 | 10 | 5 | 95 | 10 | 15 |

இந்த ஐவர்களும், குருபீடத்திலிருந்த மொத்த வருஷம் — 97 6 4
மேல்கண்ட தொகை — 486 0 0
ஆக மொத்தம். — 583 6 4

இவருக்கு வேறு நான்கு பெயர்கள் உண்டு. அதாவது பத்மநந்தி, வக்ரக்ரீவர், க்ரத்ரபிஞ்சர், ஏலாசாரியார்.

மேல்கண்டவர்கள் குருபீடத்திலிருந்த மொத்த வருஷங்கள் ஷை பட்டாவளியின்படி 583 மாதம் 6-நாள் 4 ஆகும். மகாவீரர் பரிநிர்வாணமடைந்த காலம், கி. மு. 527. இந்தக்கணக்குகளை ஒத்திட்டுப்பார்க்க, மகாவீரருக்குப்பின் வந்தவர்களுள் ஈற்றில்வந்த குந்தகுந்தர், ஏலாச்சாரியர் முதலிய பெயர்கள் பெற்ற திருக்குறளாசிரியர், குருபீடத்திற்கு வந்தகாலம், கி. பி. வருஷம் 4 மாதம் 7 நா 24 என்பது ஏற்படுகிறது. இதன்படி இவர் ஜனனகாலம், கி. மு. வருஷம் 39 மாதம் 4-நாள் 6 என்பதாம்.

ஆனல், முதல் பத்திரபாகுஸ்வாமி காலத்தில் உஜ்ஜெயினியில் தங்கியிருந்த பன்னிரண்டாயிரம் திகம்பர சங்கத்தவர்களிலிருந்துபிரிந்தவர்கள் சுவேதாம்பரமதத்தினராவர்; ஆதலால், திகம்பரர்களுக்கும், சுவேதாம்பரர்களுக்கும் பரம்பரையாக அதாவதுசிஷ்யப்பிரதி சிஷ்யராக ஆசாரியர்கள் வந்தார்களென்றுசொல்லல் இயலாது. ஆகவே, மேற்கூறிய துரை அவர்கள் இரண்டு பட்டாவளியையும் சேர்த்து கூறியிருப்பது திகம்பரர் பட்டாவளிக்குப் பொருத்தமாகாது. அதுதவிர இவர் 2-வது மாக நந்தி காலத்தை முதல்மாகநந்தி காலமென்று குறித்திருக்கிறார். இதுவும் பொருத்தமன்று. ஆகையால் திகம்பரர்கள் பட்டாவளிப்பிரகாரம் ஆசிரியர் காலத்தை உறுதிப்படுத்துவதே பொருத்தமுடையதாம். ஆதலின், அவ்விவரத்தைக்கூறுவாம்:—

காஞ்சிபுரத்திற்கருகாமையிலுள்ள திருப்பருத்திக்குன்றம், ஸ்ரீ த்ரிலோக்யநாத ஸ்வாமியார்தேவஸ்தானத்தின் அர்ச்சகர் ம-ா-ா-ஸ்ரீ புருஷோத்தம வாத்தியார் அவர்களிடம் இருக்கும் ஏட்டுப்பிரதியிலுள்ளமஹாபுண்ணியாஹவாசனகிரந்தத்தில் ஆர்.ஹோர்ன்லே அவர்கள் பட்டாவளியில் கண்டவற்றில் கௌதமர் முதல் இரண்டாவது பத்திரபாகுஸ்வாமி குருபீடத்திற்கு வந்தகாலபரியந்தம்உள்ள ஆசாரியபரம்பரைகள் சரியாகவுள்ளன. பிறகு ஷை ஏட்டுப்பிரதியில் லோகாசாரியர் பெயர் கூறப்பட்டுள்ளது. மகாபிஷேக காலத்தில் சொல்லப்படும் பிரஸஸ்தை விதியில் லோகாசாரியருக்குப் பிறகு

அருகத் பலி, முதல்மாகநந்தி, *புஷ்பதந்தர், *பூதபலி ஆகியவர்களுடைய பெயர்களும், பிறகு திருக்குறளாசிரியர் பெயர்களாகிய உமாஸ்வாமி, ஏலாசாரியர், குந்தகுந்தர், க்ர [illegible] பிஞ்சர் முதலிய பெயர்களும் கூறப்பட்டிருக்கின்றன.

இவைதவிர குந்தகுந்தர் இயற்றிய தத்வார்த்த ஸூத்ரமென்னும் கிரந்தத்தை அச்சிற்பதிப்பித்த இந்தூர் மாஜி ஜட்ஜி ஜெக்மந்தர்லால் ஜெயின் அவர்கள், அப்புத்தகத்தின் முகவுரையில் ஆசாரிய பரம்பரைகளை எழுதியிருக்கின்றார். அவ்வாறுகுறித்துள்ளவிடத்து, கௌதமர் முதல், முதல்மாகநந்திவரையில் மேற்கூறிய சுவடியில் சொல்லியபடிவரிசைக்கிரமம் சரியாயிருக்கிறது; பிறகு, தரசேனர் 19 ஆண்டுகளும், புஷ்பதந்தர் 30 ஆண்டுகளும், பூதபலி 20 ஆண்டுகளும், குப்திகுப்தா 10 ஆண்டுகளும், 2-வதுமாகநந்தி 4 ஆண்டுகளும், ஜிநசந்திரா 9 ஆண்டுகளும் குருபீடத்திலிருந்தார்களென்று அவர் எழுதியிருக்கின்றார். இவற்றின்பிறகு அதாவது கி. பி. 175-க்கு மேல் குந்த குந்தர் குருபீடத்திற்கு வந்தாரென்று விளக்கியுள்ளார். இவர் குறித்துள்ள குப்திகுப்தா, ஜிநசந்திராவென்னும் ஆசாரியர்களை ஆர். ஹோர்ன்லேயும் குறித்துள்ளார். இவர்கள் இவ்விரண்டு ஆசாரியர்களைப்பற்றி விவரித்துள்ளவைகளொன்றுக்கொன்று முன்பின்னாகவுமிருக்கின்றன. ஜக்மந்தர்லால் ஜெயின் அவர்கள் எழுதியபரம்பரைகளில் முதல் மாகநந்திக்குப் பிறகு எழுதியுள்ளவற்றில் பூதபலி, புஷ்பதந்தர் தவிர மற்றவை பொருத்தமில்லா திருப்பதனாலும், ஒருகாலத்திலிருந்த பூதபலி, புஷ்பதந்தர் ஆகியவர்களின் காலத்தை வெவ்வேறு வருஷங்களாகப் பிரித்திருப்பதனாலும் இவர் குந்தகுந்தரைப்பற்றிக் கூறியகாலம் கி. பி. 175-க்கு மேலென்பது பொருந்தாது.

இன்னும் இவர், உமாஸ்வாமி என்பவர் குந்தகுந்தர் சிஷ்யரென்றும் கூறியுள்ளார். இவர் கருத்துசரியல்லவென்பது பின்வரும் பூஜ்யபாதர்வாக்கியத்தால் குந்தகுந்தருக்கு உமாஸ்வாமி என்னும் பெயருமுண்டென்பது தெளிவாகிறது. இது நிற்க,

---

* புஷ்பதந்தர், பூதபலி ஆகிய இவ்விரு முனிவர்களும் ஒருகாலத்தில் வசித்திருந்தவர்கள். புஷ்பதந்தர் கர்மப்பிருகிருதி ப்ராப்ரத சாஸ்திரத்தைச் சுருக்கி 300-கிரந்தங்கள் ஜீவஸ்தானாதிகாரங்களை இயற்றினார். பூதபலி இக்கிரந்தங்களைச் சேர்த்து ஜீவஸ்தான முதலானவைகளை ஷட்கண்டங்களாகப் பிரித்து (30000) முப்பதினாயிரம் கிரந்தம் இயற்றி இருக்கின்றார்.

ஆர். ஹோர்ன்லே துரை அவர்கள் பட்டாவளியில் 2-வது பத்திரபாகுஸ்வாமி குருபீடத்திற்கு வந்த காலத்தைப்பற்றி வரைந்துள்ளதற்கும், யான்கண்ட ஏட்டுப்பிரதியிலுள்ளதற்கும் ஒற்றுமையாக விருப்பதால் 3-வது பத்திரபாகுஸ்வாமி குருபீடத்திலிருந்த காலத்தின் இறுதி, கி மு. 18. ஆண்டு

| | | | |
|---|---|---|---|
| அதன்பின் லோகாசாரியார் குருபீடகாலம் 52 ஆண்டுக்கு | | | |
| | கி. பியில் | 34 | ஆண்டாகும். |
| பின்னர் * அருகத்பலி | ,, | 28 | |
| முதல் மாகநந்தி | ,, | 21 | |
| புஷ்பதந்தர் பூதபலி | ,, | 25 | |
| குந்தகுந்தர் | ,, | 52 | |
| | ஆக மொத்த வருஷம் | 160 | ஆகும். |

இக்கணக்கின்படி குந்தகுந்தர், ஏலாசாரியார் என்னும் பெயர்களையுடையாராகிய திருக்குறளாசிரியர் கி. பி. 108-ல் குருபீடத்திற்கு வந்து 160-வரியந்தம் இருந்திருக்கிறார் என்பது நிச்சயமாகிறது. இவர் ஜனனகாலம் கி. பி. 64-என்பது நன்கு விளக்கமாகிறது.

திருக்குறள் ஆசிரியர் பெயர்களைப்பற்றி, ஆர். ஹோர்ன்லே துரை அவர்கள் குறித்திருப்பதாக மேலே காட்டப்பட்டிருக்கும் பட்டாவளியிலுள்ளவற்றிற் கிணங்க, வந்தவாசி தாலூகா, நெல்லியாங்குளம் கிராமத்தில் வசித்திருந்த காலஞ்சென்ற தனபாலநயி

* இந்த அருகத்பலி ஆசாரியார் கலியுகப்பிரவர்த்தத்தினால் இனி ஆசாரியபரம்பரையில் விரோதம்வருமென்று நிச்சயித்து மூலசங்கத்தை, தமது புத்திவிசேஷத்தால் சேனகணம், தேசிகணம், காலோக்ரகணம், பலோத்காரகணமென நான்கு கணங்களாக்கி, இந்நான்கு கணங்கட்கும் நந்திசங்கம், சேனசங்கம், வீரசங்கம், தேவசங்கமென நான்கு சங்கங்களையும் ஏற்படுத்தி ஒவ்வொருசங்கத்திற்கும் ஒவ்வொருஆசாரியரைஏற்படுத்தி நான்கு இடங்களில் மேடி சங்கங்களை ஸ்தாபித்திருக்கிறார். இந்த சங்கங்களில் சம்பந்தப்பட்டமுனிவர்களுக்கு நந்தி, சேனர், வீரர், தேவர்என்னும் பட்டப்பெயர்கள் முறையேவழங்கிவந்திருக்கின்றன. குந்தகுந்தர், ஏலாச்சாரியர் முதலிய பெயர்களையுடைய திருக்குறளாசிரியர் நந்திசங்கத்தைச் சேர்ந்தவரென்று ஜெகநாதர்லால் அவர்கள் சமய பிராப்ருதம் என்னும் நூலின் முகவுரையில் எழுதியிருக்கின்றார்கள்.

ஞர் அவர்கள். எனக்கு எழுதிய கடிதத்தில் ஷை ஆசிரியருடைய குந்தகுந்தர் முதல் ஏலாச்சாரியார் பரியந்தமுள்ளவைந்து திருநாமங்களைப்பற்றி ஒரு சுலோகம் எழுதியுள்ளார்.

அதாவது:—

"* 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌃 𑌕𑍁𑌨𑍍𑌦𑌕𑍁𑌨𑍍𑌦𑌾𑌖𑍍𑌯𑌃
𑌵𑌕𑍍𑌰𑌗𑍍𑌰𑍀𑌵𑍋 𑌮𑌹𑌾𑌮𑌤𑌿𑌃 ।
𑌏𑌲𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍋 𑌗𑍃𑌧𑍍𑌰𑌪𑌿𑌞𑍍𑌛𑌃
𑌪𑌦𑍍𑌮𑌨𑌨𑍍𑌦𑍀𑌤𑌿 𑌤𑌨𑍍𑌨𑍁𑌤𑌿𑌃 ॥"

என்பதாகும்.

இ-ள்: **"மிக்க ஞானத்தையுடைய குந்தகுந்தர், வக்ரக்ரீவர், ஏலா, க்ரத்ரபிஞ்சர், பத்மநந்தி, ஆகிய இத்திருநாமங்கள் பெற்ற யதிஸ்ரேஷ்டரான ஆசாரியரை ஸ்தோத்திரம் செய்யக்கடவர்." என்பதாம்.**

இப்பெயர்கள் பெற்றவரும், திருக்குறள் இயற்றியவருமாகிய ஷை ஆசாரியரைப்பற்றிய சரித்திரம் ஓர் தொடர்புள்ளதாகக் கிடைக்கவில்லை. ஆயினும், ஜைநசமய சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள அன்னதானம், ஔஷததானம், சாஸ்திரதானம், அபயதானம் என்னும் நான்கு தானங்களுக்கும் உதாரணமாகக் கூறப்பட்டிருக்கும் பெரியார் சரிதைகளுள் சாஸ்திரதானத்திற்குதாரணமாக இவர் சரிதை கூறப்பட்டுள்ளது. ஆனால் இங்குக்காட்டிய பெயர்கள் அதிற் கூறப்படவில்லை. எனினும், அந்நூலின் ஆதாரவைக் கொண்டும், அவரைப்பற்றி ஜைநப் பெரியோர்கள் கூறும் கர்ணபரம்பரைவரலாறுகளைக் கொண்டும், சில நூல்களிலுள்ள சுலோகங்களைக்கொண்டும், ஸ்ரவண பெளிகுளத்திலுள்ள சிலாஸாஸனங்களைக் கொண்டும், ஆராய்ச்சிசெய்து, இவர் சரிதையை ஒருவாறு துணிந்து கூறுவாம்:—

பிடதநாட்டில் குருமறை யென்னும் நகரத்தில் வைசியகுலத்தில் காமுண்டனென்பான் ஒருவனிருந்தான். இவன் பாரியாள் ஸ்ரீமதி. இவர்கள் தனதானிய சகல ஐஸ்வரியங்களுடனும், விரதசீலாசாரங்களுடனும், தெய்வபக்தியும், தான பூஜாதிகளில் பிரீதியு

* இந்த சுலோகம் இயற்றியவர் இன்னாரென்ற தெரியவில்லை; சமய ப்ராப்ருதம் என்னும் நூலின் முகவுரையில் கஜாதர்லால் என்பவர் இதை யெழுதியுள்ளார்.

முடையவர்களாய் இனிது இல்வாழ்க்கை நடத்தி வந்தனர். இவர்
களுடைய மகிஷ பாலகனாகிய மதிவரனென்பவன் ஒருநாள் பசுக்
கூட்டங்களை வனப்பிரதேசத்தில் மேய்க்கக்கொண்டு போனபோது
பெருங் காட்டுத்தீயால் வெந்து பஸ்பமாயிருந்த ஓர்வனத்தினடுவில்
தருக்கள் தளிர்த்துப் பழுத்து பக்ஷிகள் நிறைந்ததொரு சோலை
தோற்றக்கண்டு, அவ்விடம்சென்று இளைப்பாறி யிருந்தான். அப்
போது அவன், "இவ்வளவு கொடிய பெருங்காட்டுத்தீயினடுவில்
இந்தவிடமாத்திரம் தவறிச் செழித்திருப்பதற்குத் தகுந்த காரண
மிருக்கவேண்டு" மென்று தனக்குள் யோசித்து அதைக் கவனித்
துப்பார்த்தான். அச்சோலையினடுவில் பரந்துயர்ந்ததொரு ஸப்த
ஸதவிருக்ஷத்தின்கீழ் தபோதனரால் அர்ச்சிக்கப்பட்டதொரு ஆக
மம் இருந்தது. அவன் அதைக்கண்டு சந்தோஷமடைந்து, "இங்கே
இச்சோலை இவ்வாறிருப்பது இதன் மகிமைதான்" என்று நிச்சயித்
துத்தானும் அதனை ஆராதிக்க நினைந்து ஸ்நானம் செய்து பலவித
புஷ்பங்களைக்கொண்டு அர்ச்சித்து அதனை பக்தியுடன் எடுத்துக்
கொண்டுபோய்த் தன் கிரகம் சேர்ந்தான். பிறகு ஆகமத்திற்கு
சரஸ்வதி மாடமொன்று நிர்மித்து அதில் அந்த ஆகமத்தைவைத்
துப் பிரதிதினமும் பக்தியுடன் பூஜித்துவந்தான்.

இவ்விதம் செல்கின்ற காலத்தொருநாள் ஸ்ருதஸாகரரென்னும்
ஒரு திவ்யதபோதனர் ஆகாரத்திற்கு அந்நகரத்தில் எழுந்தருள,
மேல் சொன்ன வைசிய ஸ்ரேஷ்டியாகிய கரமுண்டன் அந்த மகா
முனிவரைப்பார்த்து அதிக ஆநந்தத்தோடும் சென்று நமஸ்கரித்து
எதிர்கொண்டழைத்து வந்து தனது கிரகத்தில் உச்சஸ்தானத்தில்
நிறுத்தி நவபுண்ணியக் கிரமத்தால் அவருக்கு ஆகாரம்கொடுத்து,
அவரால் தர்மஸ்ரவணம் பண்ணி அவரிடம், கிரகஸ்தாஸ்ரமத்தி
லிருக்கும் தனக்கு குலசந்தான விருத்தியின்பொருட்டு புத்திரோற்
பத்தியுண்டாகுமாறு கடாக்ஷித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்
தான். ஸ்ரேஷ்டியின் மஹிஷபாலனாகிய மதிவரன் அங்குவந்து
அம்முனிவரை நமஸ்கரித்து அவருக்கு தானமாகத் தன்னிடமிருந்த
ஆகமத்தை அவர்முன்வைத்து அதுகிடைத்த விருத்தாந்தத்தைச்
சொன்னான். முனிவரும் ஸ்ருதத்தைப்பார்த்து இதனை பூஜிக்க நீ
புண்ணியம் பெற்றாயாகையால், தேவசம்பத்தையும், மோக்ஷசுகத்தை
யும் அடைவாய் என்று அவனுக்கு ஆசிர்வாதம் கூறியருளினர்.
பிறகுவைசிய தம்பதிகளைப்பார்த்து, "உங்களுக்கு ஞானரூபமுடையு

புத்திரன் பிறப்பான்; நீங்கள் அவனை எனக்கு சிஷ்யனாகத்தர வேண்டும்; அதன்பின் உங்கள் குலசந்தான விருத்தியின்பொருட்டுப்பிள்ளை உண்டாகும்'' என்று அருளிச்செய்து ஆகமத்தையும் எடுத்துக் கொண்டு தமதிடமடைந்தார். காமுண்டனிடம் பசுக்கூட்டங்களை மேய்த்துக்கொண்டிருந்த மதிவரன், சாஸ்திரதான பலனால் ஆயுசாவஸானத்து சரீரம்விட்டு மேல்கண்ட ஸ்ரீமதிக்கு புத்திரனாக அவதரித்தான். காமுண்டனும், ஸ்ரீமதிதேவியும் அவனுக்கு, 'கௌண்டேசன்' என்னும் நாமகரணமிட்டு அவனை அன்புடன் வளர்த்து வந்தார்கள்.

அக்குமாரனுக்கு வித்தியாப்பியாஸம் செய்யும் பருவம் வந்தது. அத்தருணத்தில் முன்சொன்ன ஸ்ருதஸாகரமுனிவர் அங்கெழுந்தருளினர். காமுண்டன், அவரை எதிர்கொண்டழைத்து வந்து அவருக்கு ஆகாரதானம் செய்து, பிறகு அவரைநோக்கி, "சுவாமி! தாங்கள் அருளியபடி எனக்கு பிள்ளை பிறந்துள்ளான்; அவனை தேவரீர் சிஷ்யனாகக் கொண்டருள்க'' வென்று பிரார்த்தித்தான். அவரும் மகிழ்ச்சியுடன் அப்பாலகனை அழைத்துச்சென்று ஒரு பிரம்மசாரியிடம் வித்தியாப்பியாஸம் பண்ணும்படி ஒப்புவித்து, தவத்திற்குச் சென்றனர். சிறுவனும் சிறிதுகாலத்தில் சகல சாஸ்திரங்களையும் அப்பியஸித்து தர்மசித்தனாயினான். அவ்வாறாகி வர்த்திக்குமளவில் அவனை நோக்கி, "நீ மாதாபிதாக்களிடம் சென்று சிலகாலமிருந்து வருக'' வென்று குரு உரைத்தருளினர். கௌண்டேசன் சம்ஸாரசுகத்தில் விரக்தியுடையவனாயிருந்தும் வித்தியாகுரு வசனத்தை மீற மனமில்லாமையால் அவ்வாறே மாதாபிதாமுதலிய பந்து ஜனங்களிடம் சென்றான்.

அவன் இல்லத்தில் சிறிதுநாள் தங்கியிருந்தான். அவ்வாறிருந்து ஒருநாள் சிறு பிள்ளைகளோடு பந்தாடிக்கொண்டிருக்குங் காலத்தில் அப்பந்தானது அருகில் தவம் செய்துக்கொண்டிருந்த மேல்கண்ட ஸ்ருதஸாகரமா முனிவரர் உள்ளங்கையில் குதித்துத் தங்கிவிட்டது. அதை எடுப்பதற்கு மற்ற பிள்ளைகள் பயந்தார்கள். கௌண்டேசன் நிர்ப்பயமாய் அப்பந்தை எடுத்தான். தவத்திலிருந்த முனிவர் தியானத்தைவிட்டு அப்பிள்ளையைப்பார்த்து, "இவன் ஜைந சமயத்தைப் பரிபாலனம் செய்யக்கூடியவ''னென்றும் "மிக்க ஞானியாக விருப்பா''னென்றும், இவனுக்குத் தர்மோபதேசம்

செய்யவேண்டுமென்றும் கருதி, தமது ஆயுஷ்யாவ்சானத்தை உத்தேசித்து உடனே அதைச் செய்யத்தொடங்கி கௌண்டேசனுக்கு ஆசிர்வாதபூர்வகம் துறவறதர்மங்களை உபதேசித்துத் தமது கையிலிருந்த மயில்பிஞ்சத்தைக் கொடுத்து, "ஸ்ரீமந்தராயநமஃ" வென்று பரலோகப்பிராப்தியானார்.

அந்த இளமைப்பருவம் முதலே கௌண்டேசன் துறவறதர்மங்களை அனுஷ்டித்து, "ஸ்ரீமந்தராயநமஃ! ஸ்ரீமந்தராயநமஃ!!" வென்று பலமுறைகள் சொல்லி குந்திக்குந்தி நடந்து பஞ்சமுஷ்டியால் நமஸ்காரம் செய்து எழுந்திருக்கும் வழக்கத்தை மேற்கொண்டான். இம்மாதிரி பலதடவைகள் குந்திக்குந்தி நடந்து நமஸ்காரம் செய்து எழுந்து தியானம் செய்து வந்ததனால் கௌண்டேசனுக்கு "குந்த குந்த"ரென்கிற காரணப் பெயர் வழங்கலாயிற்று.

இங்ஙனம் குந்தகுந்தர், தவம்செய்ய ஆரம்பிக்குங்காலத்திலும், தியானம் முடிந்தகாலத்தும் ஸ்ரீமந்தரரை துதிப்பது வழக்கமாகவிருந்தது. இவர் முதல்முதல் நூதனமாக கிரந்தம் செய்வதற்கு ஆனித்திங்கள் சுக்கிலபக்ஷ பஞ்சமிதிதியில் முகூர்த்தம்பார்த்து நிச்சயம் செய்திருந்தார். அந்ததினத்தில் அவர், "யான் செய்யப்போகும் கிரந்தம் யாதொருவிக்னமுமில்லாமல் நடந்தேறவேண்டு' மென்று மிக்க பக்தி விநயத்துடன், "ஸ்ரீமந்தராயநமஃ" வென்று துதிசெய்தார். அது சமயம் விதேஹக்ஷேத்திரத்தில் ஸ்ரீமந்தரஸ்வாமி சமவசரணத்தில் அகஸ்மாத்தாய் ஆசிர்வாதத்வனி உண்டாயிற்று. அச்சமவசரணத்திலிருந்த பத்மநாபனென்னும் சக்கிரவர்த்தி, ஸ்ரீமந்தரபகவானை நோக்கி, "சுவாமி! அகாரணமாக ஆசிர்வாதம் உண்டானதற்குக்காரணம் என்ன?" வென்று வினவ, பகவானும், "பரத க்ஷேத்திரத்தில் குந்தகுந்த ரென்கிற க்ஷாயிக சம்யக்திருஷ்டி முனிவரர் நம்மை ஸ்மரித்தார்; அதன்பொருட்டு நாம் ஆசிர்வதித்தோ" மென்று கூறியருளினர்.

அதைக்கேட்ட இரண்டு சாரணபரமேஷ்டிகள் (ஆகாசத்தில் செல்லும் ரித்தியைப்பெற்ற முனிவர்கள்) பரதக்ஷேத்திரத்தில் குந்தகுந்தரிருக்கும் இடத்தில் வந்தார்கள். அதுசமயம் குந்தகுந்தர் தாம் பார்த்திருந்த முகூர்த்தத்தில் நூதன கிரந்தத்தைச்செய்ய ஆரம்பித்து எழுதிக்கொண்டிருந்ததால் சாரணபரமேஷ்டிகளைக் கண்டு மரியாதை செய்யவில்லை. அவ்வாறு குந்தகுந்தர்மரியாதை

செய்யவில்லை யென்று அந்தச் சாரணமுனிவர்களிருவரும், ஸ்ரீமந்தரர் சமவசரணம் சென்றார்கள். இங்கு குந்தகுந்தர் தாம் குறித்த முகூர்த்தம் தவறாமல் சுலோகங்களை எழுதிவிட்டுத் தமதிடம்வந்த முனிவரர்களைப் பார்த்தார். அவர்கள் இல்லாமையால், "அவர்களைப் பார்த்தல்லது இரண்டு கைகளையும் கீழேதொங்கவிடுவதில்லை"யென்னும் விரதத்தைக்கைக்கொண்டு கைகளை மேலே தூக்கிக்கொண்டு தியானத்தில் நின்றுவிட்டார். சமவசரணத்திற்குச் சென்ற சாரணமுனிவர்களிருவரும் இங்குநிகழ்ந்ததைச் சொல்ல, ஸ்ரீமந்தரபகவானும் "அம்முனிவர் இப்போது உங்களைப்பார்த்தல்லது இரண்டு கைகளையும் தொங்கவிடுவதில்லை யென்று கைகளைமேலே தூக்கிக் கொண்டு தியானத்திலிருக்கிறார்; ஆகையால் இச்சமயமே நீங்கள் அவரிடம் செல்லுதல் நல"மென்று கூறியருளினர். இதைக்கேட்ட இரண்டுமுனிவர்களும், குந்தகுந்தர் இருக்குமிடத்திற்குவந்து அவரைப்பார்த்து "நாங்களே முன்வந்த முனிவர்கள்; இதோவந்து விட்டோம்; தாங்கள் கைக்கொண்ட விரதத்தை நிவர்த்தி செய்யுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்கள். குந்தகுந்தர் தியானத்தினின்றும் நீங்கி அவர்களை விநயபூர்வகம் நமஸ்காரம் செய்து கொண்டார்.

பிறகு இரண்டு சாரணர்களும் குந்தகுந்தருக்கு பதில்மரியாதை செய்து, தாங்கள் ஸ்ரீமந்தரஸ்வாமியின் திவ்யவாக்கினால் கேள்வியுற்ற விஷயங்கள் யாவும் அவருக்குக் கூறினார்கள். குந்த குந்தர், ஸ்ரீமந்தரபகவானை தரிசனை செய்யவேண்டி அவ்விருவரையும் கேட்டுக்கொண்டார். இரண்டு சாரணர்களும் 500வில் உன்னதமும், ஆகாயத்தில் செல்லக்கூடிய ரித்திப்பிராப்தியையும் பெற்றவர்களாதலால், அவ்விருவருள் ஒருவர், குந்தகுந்தர் விருப்பத்தின்படி அவரைக் கையிலேந்திக்கொண்டு ஆகாய மார்க்கமாகச் சென்றார்; மற்றவரும் உடன் சென்றார். இவ்வாறு அவர்கள் செல்லும் போது குந்தகுந்தர் கையிலிருந்த மயில் பிஞ்சம் நழுவிக்கடலில் விழுந்துவிட்டது. அதையுணர்ந்த சாரணர்கள் சமீபத்திலிருந்த ஒரு திடலைப்பார்த்து, அங்கு உதிர்ந்திருந்த கழுகுகளின் இறகுகளைச்சேர்த்துப் பிஞ்சமாக்கிக் கொடுத்தார்கள். இக்காரணத்தால் இவருக்கு "க்ரத்ரபிஞ்சர்" என்று மற்றொரு பெயருமுண்டாயிற்று.

பிறகு சாரணர்கள் இருவரும் குந்தகுந்தரை ஸ்ரீமந்தரஸ்வாமி சமவசரணத்திற்குக் கொண்டு போய் சேர்த்தார்கள். அவர் ஆங்கு சமவசரண விபூதியையும் பன்னிருகணங்களையும், இந்திராதிதேவர்களுடைய கோலாகலத்தையும் கண்டு ஜ்யோதிஸ்வரூபமுள்ள ஸ்ரீமந்தரஸ்வாமியையும் தரிசித்து அநேகஸ்துதிகளால் பகவானை த்ரிப்ரதக்ஷணஞ்செய்து பிரம்மாநந்தமடைந்தார். அந்தச்சமயத்தில் 500வில் உயரமுடைய பத்மநாப சக்கிரவர்த்தி குந்தகுந்தர் மீதுவிருப்பமுடையவராய்த்தமது வலது உள்ளங்கையில் அவரை ஏந்திக்கொண்டு, “ஹேலா!” ஹேலா!! வென்றுகுழந்தையைத்தாலாட்டுவது போன்று ஆட்டினர்; அவ்வாறுஆட்டி அங்கிருந்த பன்னிருகணங்கட்கும், குந்தகுந்தர், ஏலக்காயளவு கனமுள்ளவராயிருப்பதாகச் சொல்லி இவருக்கு, “ஏலா” வென்று திருநாமமிட்டார். இக்காரணத்தால் இவருக்கு “ஏலாசாரியார்” என்று மற்றொரு திருநாமமுண்டாயிற்று.

பிறகு குந்தகுந்தர், சகல சாஸ்திரங்களையும், ஜீவபுத்கலாதி சமஸ்ததத்வங்களையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பினர். அதை ஸ்ரீமந்தரபகவான் அறிந்து சகலசாஸ்திரதத்துவங்களையும் அவருக்கு உபதேசம் செய்தார். அவர் அவைகளை உணர்ந்தபின் பகவானைநமஸ்கரித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டுமேற்கண்ட சாரணமுனிவர்கள் மூலமாக பரதக்ஷேத்திரம் வந்து சேர்ந்தார்.

இம்முனிவரர் மேற்கூறியபடி ஸ்ரீமந்தரரென்னும் அருகத்பகவானிடம் சகல சாஸ்திரதத்வார்த்தங்களையும் உணர்ந்துவந்த பிறகு, பிராகிருதத்தில் 84-கிரந்தங்கள் செய்து, பிறகு சம்ஸ்கிருதத்தில் தத்வார்த்தங்களை சூத்ரமூலமாகப் பத்து அத்தியாயங்களையுடைய தத்துவார்த்த ஸூத்ர மென்னும் கிரந்தமாகச் செய்தார். இந்த ஸூத்ரத்தைப்பற்றியும், இவர் திருநாமத்தைப்பற்றியும், இவர் முனிகணங்கட்குத் தலைவரென்பதைப்பற்றியும் கூறும் சுலோகமொன்று தத்வார்த்த சூத்ரகிரந்தத்தின் தலைப்பில் காணப்படுகின்றது. அதாவது;

“𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥 𑌸𑍂𑌤𑍍𑌰 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂
𑌗𑍃𑌧𑍍𑌰 𑌪𑌿𑌂𑌛𑍋𑌪 𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌂 ।
𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑌣𑍀𑌨𑍍𑌦𑍍𑌰 𑌸𑌂𑌜𑌾𑌤𑌂
𑌉𑌮𑌾𑌸𑍍𑌵𑌾𑌮𑌿 𑌮𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 ॥”*

என்பதாம்.

இ - ள்: "தத்வார்த்த சூத்ரமென்கிற கிரந்தத்தை செய்தவராயும், கிருத்ரபிஞ்சத்தை அடையாளமாகவுள்ளவராயும், முனிகணங்களுக்கு இந்திரனைப்போல தலைவராயுமுள்ள உமாஸ்வாமி என்னும் முனீஸ்வரரை நமஸ்கரிக்கிறேன்" என்பதாம்.

இந்தப் பேரறிஞர் சாரணபரமேஷ்டிகள் மூலமாக விதேக க்ஷேத்ரம் சென்றதும் அங்கு ஸ்ரீமந்தரபகவானிடம் சகல சாஸ்திரங்களையும் ஜீவபுத்கலாதி சமஸ்த தத்துவங்களை உணர்ந்ததும், கிருத்ரபிஞ்சர், ஏலா முதலிய பெயர்கள் பெற்றதும் மோக்ஷமார்க்கத்துக்குரிய தத்துவார்த்த சூத்ரமுதல் 84 கிரந்தங்கள் செய்தது முதலானவைகளை கல்வியமைந்த முனிவர்கள் ஸ்ராவகர்கள் முதலான அநேக பிரஜைகள் கண்டும் கேள்வியுற்றும் உலகில் இவருக்கு இணையானவர்கள் யாவருமில்லையென்றமிக்கக்கீர்த்தியைப் பெற்றார். இக்காரணத்தின் பொருட்டு இவருக்கு "உமா(ஸ்வாமி)" யென்று மற்றொரு திரு நாமமும் வழங்கலாயிற்று.

இந்த யோகிந்திரராகிய குந்தகுந்தர் தாம் சாஸ்திரங்களை ஏட்டில் எழுதும் போதெல்லாம் தலையை ஒருபுறமாக சாய்த்துக் கொண்டு எழுதிவந்ததனால் தலையானது ஒருபுறம் சாய்வாகவே நின்றுவிட்டது. இக்காரணத்தால் இவர், "வக்ரக்ரீவர்" என்னும் திருநாமத்தையும் பெற்றார்.

இவ்விதம் ஒவ்வொருகாரணத்தைக்கொண்டு ஒவ்வொரு திருநாமத்தைப்பெற்றுமுனிசங்கத்துக்கு இந்திரனைப்போன்றுசிறப்படைந்த இக்கௌண்டேசர், பூர்வத்தில் பிறந்துவளர்ந்த நாடுநகரமுதலியன இருந்தவிடம் காலதேசவிகற்பங்களால் இப்போது தெளிவாகத்தெரியவில்லை; எனினும், மேற்கண்ட திருநாமங்களிலொன்றாகிய ஏலாச்சாரியார் என்ற பெயரைப்பெற்ற இவர்தற்காலம் வழங்கிவரும் வடஆற்காடுஜில்லா வந்தவாசி தாலூகா டவுனுக்கு 4-மைல் தூரத்தில் இருக்கும் ஹேமக்கிராம மென்னும் பொன்னூருக்கு சமீபத்திலுள்ள நீலகிரியென்னும் மலையின்மிசை வசித்திருந்தாரென்பதும், திராவிட நிர்க்கந்தமாமுனிவரர்சங்கத்தின் கணதரபதத்தை அடைந்திருந்தாரென்பதும், அம்மலையின்மிசை பொறிக்கப்பட்டிருக்கும் பாதங்களாலும் கீழ்வரும் சுலோகத்தாலும் விளக்கமாகின்றன.

அச் சுலோகமாவது:—

“தக்ஷிண தேசே மலயே ஹேமக்ராமே முநிர் மஹாத்மாஸீத் ।
ஏலாசார்யோ நாம்நா த்ராவிட கணாதீச்வரோ தீமாந் ॥”

என்பதே.

(இ-ள்) “பொதியமலை எல்லையாகவுடைய தென் தேசத்தில் பொன்னூர் கிராமத்தில் திராவிட நிர்க்கந்த மகாமுனிவர் சங்கத்தின் கணதர பதத்தைப் பெற்றவராயும், மகாமேதாவியாயும், மகாத்மாவாயும் உன்ன பெயரினுல் ஏலாச்சாரியார் என்கிற நிர்க்கந்த மகாமுனீஸ்வரர் இருந்தார்.” என்பதாம்.

இந்த ஸ்லோகம் ஜ்வாலாமாலினி அம்மன் மந்த்ரலக்ஷண மென்னும் கிரந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

குந்தகுந்தர், ஏலாச்சாரியார் முதலிய பெயர்கள் பெற்ற இம் மகாத்மா இயற்றியருளிய நூல்களாவன:—

| | |
|---|---|
| பஞ்சாஸ்திகாய ஸாரம் | தோய பாகுடம் |
| பிரவசன ஸாரம் | சரண பாகுடம் |
| சமய ஸாரம் | சமவாய பாகுடம் |
| தர்ஸன பாகுடம் | நய பாகுடம் |
| சுத்த பாகுடம் | பிருகிருதி பாகுடம் |
| சாரித பாகுடம் | சூர்ணி பாகுடம் |
| போத பாகுடம் | பஞ்சவர்க்க பாகுடம் |
| பாவ பாகுடம் | கர்மவிபாக பாகுடம் |
| மோக்ஷ பாகுடம் | வஸ்து பாகுடம் |
| ரயண ஸாரம் | புத்தி பாகுடம் |
| நியம ஸாரம் | பயர்த்த பாகுடம் |
| ஜோணி ஸாரம் | உத்பாத பாகுடம் |
| கிரியா ஸாரம் | திவ்ய பாகுடம் |
| ஆராதனு ஸாரம் | ஸிக்க பாகுடம் |
| லப்தி ஸாரம் | ஜீவ பாகுடம் |
| க்ஷபணு ஸாரம் | ஆசார பாகுடம் |
| பந்த ஸாரம் | ஸ்தான பாகுடம் |
| தத்வ ஸாரம் | பிரமாண பாகுடம் |
| அங்க ஸாரம் | ஆலாப பாகுடம் |
| திரவ்விய ஸாரம் | சூளி பாகுடம் |
| துவாதஸாநுப் பிரேக்ஷை | ஷட்தரிசன பாகுடம் |

| | |
|---|---|
| கம பாகுடம் | சித்தாந்த பாகுடம் |
| பயா பாகுடம் | நிதாய பாகுடம் |
| வித்தியா பாகுடம் | ஏயந்தபாகுடம் |
| உகாத பாகுடம் | விஹய பாகுடம் |
| திருஷ்டி பாகுடம் | ஸாலம்மி பாகுடம் |

ஆகியவைகள் 52

இவையன்றி மேல்குறித்தபூதபலி, புஷ்பதந்தர் என்னும் இரண்டு மாமுனிவர்கள்செய்த ஷட்கண்ட மென்னும் முதல் மூன்று கண்டத்திற்கு பெரியதொரு வியாக்யானம், 12000-ம் பன்னிரண்டாயிரம் கிரந்தத்தில் இவர் செய்தருளி யிருக்கின்றார்.

இந்த ஐம்பத்திரண்டு * நூல்களையும் இவர் பிராகிருத பாஷையில் இயற்றியுள்ளார். சம்ஸ்கிருதத்தில் தத்வார்த்த சூத்ரம், பத்மநந்திபச்சிஸ் ஆகிய இவ்விரண்டையும் செய்திருக்கிறார். மற்றும் தென்மொழியில் செய்தது திருக்குறளாம். இந்தப் பரமஞானியாகிய யோகீஸ்வரர் முனிசங்கத்துடன் பலதேசங்களிலும் சென்று அஹிம்ஸாதர்ம முதலிய அநேக தத்துவங்களமைந்த ஜைநசமயக் கொள்கைகளை ஸ்தாபித்து, ஆங்காங்கு மக்களுக்கு உபதேசஞ் செய்து, ஜைநமத தர்மங்களை ஸ்திரப்படுத்திப் பலபுண்ணிய க்ஷேத்திரங்களையும் தரிசித்துக் கடைசியாக ஊர்ஜயந்தகிரிக்கு (கிர்னார்) சமீபத்திலுள்ள வனத்தில் வந்து சங்கத்துடன் தங்கினார். ஊர்ஜயந்தகிரியின்மிசை ஸ்ரீநேமி தீர்த்தங்கரர். பரிநிர்வாணமடைந்த விடத்தில், இரண்டு பாதங்கள் பொறிக்கப்பட் டுள்ளன.

அப் பாதங்களுக்கு சுவேதாம்பரிகளும், திகம்பரிகளும் நேமிஸ்வாமிகள் பரிநிர்வாணமடைந்த தினத்தில் பூஜைசெய்வது வழக்கம். இவ்வாறு செய்துவந்ததில் திகம்பரர்கள் மூன்னும், சுவே

* இந்நூல்களின் விவரங்கள், காசி (பனாரஸ்) பாரதீய ஜைந சித்தாந்த பிரகாசினி சபையாரால் அச்சிட்டு வெளிப்படுத்தப் பட்டிருக்கும் சமயசாரம், அல்லது, சமய பிராப்ரதம் என்னும் நூலின்கண், கஜாதரலால் அவர்கள் எழுதிய முகவுரையில் குறிக்கப்பட்டுள்ளன. இன்னும் ஷையார் மேல்கண்ட நூல்களில் ஷட்பிராப்ரதம் என்னும் கிரந்தத்தில் சில பாகங்கள் பூராவும் கிடைக்க வில்லை யென்றும் எழுதி யிருக்கின்றார். மேலும், திருக்குறள் ஆசிரியர் இயற்றியருளிய 84-சாஸ்திரங்களில் மேல் குறித்துள்ளவைகள் போக மற்ற நூல்களுக்கு விவரம் தெரியக்கவுமில்லை, ஆதலின், அவை இன்ன இன்ன நூல்களென்று விவரம் ஏற்படவுமில்லை.

தாம்பரிகள் பின்னும் செய்வது வழக்கமாயிருந்தது. அவ்வாறுசெய்து வருங்காலத்தில் சுவேதாம்பரிகள் தாங்கள் முந்திச்செய்யவேண்டுமென்று, திகம்பரர்கள் செய்துவந்ததைத் தடுத்துத் தாங்கள் முன்னர் நடத்திவந்தார்கள்; அதனால், திகம்பரர்கள் மறுநாள் பூஜை செய்ய நேர்ந்தது. இதனால் மனவருத்தப்பட்டுக் கொண்டிருந்த திகம்பரர்கள் சமீபத்தில் முனிசங்கங்களுடன் வந்திருந்த குந்த குந்தருடைய பெருமையைக் கேள்விப்பட்டு அங்குச்சென்று தனித்திருந்த குந்தகுந்தரையும், மற்றுமுள்ள முனிவர்களையும் நமஸ்காரம் செய்து முனீந்திரருக்கு பூஜாவிஷயத்தைத் தெரிவித்து இன்று "ஊர்ஜயந்தகிரியில் நேமிஸ்வாமி பரிநிர்வாண பூஜை, அதற்கு நாங்கள் பூஜாதிரவியங்களுடன் வந்திருக்கின்றோம்; ஆதலின் நாங்கள் சுவேதாம்பரர்களுக்கு முன்னே பூஜை செய்யவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள். முனீந்திரரும், "பூஜை யார்முந்திச்செய்தாலென்ன? யார்பிந்திச்செய்தாலென்ன? 'அழுக்காறவா வெகுளி இன்னாச்சொல்' ஆகியவைகள் தர்மத்திற்குப் பொருந்தியவையல்ல; பூஜைக்குப் பக்திதான் முதற்காரணம்; ஆதலின் சுவேதாம்பரர்களே முந்தி செய்துக்கொள்ளட்டும்" என்று கூறியருளினார்.

அதன் பிறகு திகம்பரர்களனைவரும் குந்தகுந்தரை வணங்கி, "சுவாமி! பரிநிர்வாண பூஜை தினத்தில் அநேகமாயிரம் திகம்பரர்கள் வருவது வழக்கம்; அபிஷேககாலத்தில் எங்களுக்கும் ஸ்வேதாம்பரர்களுக்கும் ஏற்பட்ட விவாதம் காரணமாகச் சில வருஷங்களாக முதல்நாள் நடக்கும் திகம்பரர்களின் அபிஷேகம் மறுதினம் நடந்து வருவதால் அநேக திகம்பரர்கள் பூஜைக்கு வருவதில்லை; இது நிமித்தமாக எங்களுக்கு பரிநிர்வாணகாலத்தில் அபிஷேகம் செய்வதற்கில்லையே என்னும் மனக்குறையும் உண்டாகியிருக்கிறது; ஆதலின், இன்று பரி நிர்வாண தினமாகையால் நாங்கள் பூஜை நடத்துவதற்கு விக்னமில்லாமலிருக்கச் சுவாமிகள் கிருபை செய்தருளவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள். அதன் பிறகு அபாரஞானத்தையுடைய குந்தகுந்தர் இவ்விருவகையினர்களையும் ஒற்றுமைப் படுத்த வேண்டும்; ஆயினும், சுவேதாம்பரர்களை இங்கு வரவழைத்துச் சொல்வது தகுதியல்லவென்று கருதி, பூஜா திரவியங்களுடன் வந்திருந்த எல்லா திகம்பரர்களையும் உட்காரும்படிசொல்லிவிட்டுத்தாம் தபோதியானத்தில் நின்றுவிட்டார். அதன்மேல் இவாதுதபோதியானத்தின் மகிமையையும், இவாதுகருத்தினையுமறிந்தலாஸனதேவதையாகிய ஜ்வாலாமாலினி அம்மன், சங்கத்து

டன் முனீந்திரரையும் ஆங்கிருந்த திகம்பரஸ்ராவகர்களையும் ஊர்ஜயந்த கிரியின்மிசையிலுள்ள ஸ்ரீநேமிநாதபகவான் பாதங்களுக்கு சமீபத்தில் சேரும்படி செய்தாள்.

சுவேதாம்பரர்கள் வழக்கம்போல் பூஜாதிரவ்வியங்களை எடுத்துக்கொண்டு அடி மலையின்மிசை சென்றார்கள்; அப்போது தங்களுக்குமுன் அங்கு வந்திருந்த திகம்பரமுனிக் கூட்டங்களையும், ஸ்ராவகர்களையும் பார்த்து, "நாம் வந்தவழி தவிர வேறுவழியில்லாமலிருக்க வனத்திலிருந்தவர்கள் இங்குநமக்குமுன் எவ்விதம் வந்தார்கள்!" என்று ஆச்சரியமடைந்து, இதற்குக்காரணம் இங்குவீற்றிருக்கும் இம்மகாமுனிவருடையமகிமையாகவிருக்குமென்று அனைவரும் நிச்சயித்துக் குந்தகுந்தரையும், மற்றுமுள்ள முனிவர்களையும் நமஸ்காரம் செய்தார்கள். அப்போது முனீந்திரர் அவர்களுக்கு ஆசீர்வாதம் செய்து அவர்களைநோக்கி, "நீங்கள் ஸ்ராவக விரதத்தையும், துறவறத்தையும் அனுஷ்டிப் பவர்களாயிருந்தும் உங்கள் அனுஷ்டானங்களில் பகவான் அருளியதற்கு மாறுகச் சிலவிஷயங்கள் இருக்கின்றன" வென்று அவைகளை எடுத்துக் காட்டி, அவற்றை அகற்றுமாறு உண்மையை உரைத்தருளிப் பிறகு திகம்பர ஸ்ராவகர்களைப்பார்த்து, "நீங்கள் இருவகையினரும் ஒரு சமயத்தவர்களாயிருந்தும் உங்களுக்குள் கடவுள் பூஜையில் மனஸ்தாபப்பட்டு ஒழுகுவது தகுதியல்ல" வென்று சத்தர்மோபதேசஞ்செய்து, இருவகையினரும் கொண்டுவந்த பூஜாதிரவ்வியங்களை நேமிநாதபகவான் பாதத்திற்கு அபிஷேகம் செய்யும்படி உத்தரவு செய்தார். குந்தகுந்தர் கட்டளைப்படியே இருவகையினரும் ஒற்றுமையுடன் அதிக குதூகலத்துடன் அபிஷேகம் செய்தார்கள்.

அது சமயம் தேவர்கள் முதலான சாஸன தேவதைகள் குந்தகுந்தரைப்பலவாறு புகழ்ந்து போற்றித்தாமரை மலர்மாரியைப் பொழிந்தார்கள். அதுசமயம் சுவேதாம்பரர்களும், திகம்பரர்களும் மற்றுமுள்ள பிரஜைகளும் "இம்மகா முனிவருடைய தபோமகிமையை யறிந்த தேவர்கள் தாமரை மலர்மாரியை பொழிந்தார்கள்" என்று அதிசயித்து, அதிக ஆநந்தத்தோடு "பத்மாநந்தம் ஜே! பத்மாநந்தம் ஜே!!" என்று குந்தகுந்தர் பாதத்தைப்பணிந்து துதித்தார்கள். அதுமுதல் இவருக்கு பத்மநந்தியென்று மற்றொரு திருநாமமும் வழங்கலாயிற்று.

இவ்விதம், குந்தகுந்தர், ஏலாச்சாரியார், பத்மநந்தி முதலிய பெயர்களால் கீர்த்தியை அடைந்த யதிஸ்ரேஷ்டரைப்பற்றிச் சில சுலோகங்கள் ஏற்பட்டிருக்கின்றன; அவைவருமாறு:—

இம்மகான் இயற்றிய தத்வார்த்த ஸூத்ரத்திற்கு பூஜ்ய பாத ஸ்வாமி செய்த சர்வார்த்த சித்தியென்னும் வியாக்கியானத்தின் முக வுரையில்,

“ஸஞ்ஜாத ப்ரதமாபித ப்ராது வாரணவித: ஸ்ரீபத்மநந்த்யா
த்யபிதாந ஸூத்ராதிகம மோக்ஷஶாஸ்த்ர ப்ரணேதா பகவா
நுமாஸ்வாத்யாசார்ய: ஸகலபதார்த்த வேதித்வாத் ப்ரதம
ஸ்தாநமலஞ்சகார ॥”

என்னும் வாக்கியங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

இ - ள்: “ஸ்ரீபத்மநந்தி முதலான பெயர்களுடையவரும், தத்வார்த் தாதிகமமென்னும் மோக்ஷசாஸ்திரம் செய்தவரும் ஆகிய பகவானுன உமா (ஸ்வாமி) ஸ்வாதி ஆசாரியர் எல்லாபதார்த்தங்களையும் அறிந்தமையால் முதன்மையான இடத்தை அலங்கரித்தார்.” என்பதாம்.

இன்னும் சமயஸார பிராப்ரதத்தின் முகவுரையில்,

“தஸ்யாந்வயே பூவிதிதே பபூவ
ய: பத்மநந்தி ப்ரதமாபிதாந: ।
ஸ்ரீகொண்டகுந்தாதி முநீஶ்வராக்ய:
ஸத்ஸம்யமாது த்கத சாரணர்த்தி: ॥”

என்னும் சுலோகம் கஜாதர்லால் அவர்களால் எடுத்துக்காட்டப்பட் டிருக்கிறது.

இ - ள்: “உலகத்தில் பிரசித்தமான தம்முடைய வம்ஸத்தில் பத்ம நந்தி யென்னும் ஸ்லாக்கியமுள்ள பெயருடையவராயிருந்தவர் எவரோ, அவரே நல்ல தவயோகத்தினுல் குந்தகுந்தர் முதலிய பெயர்களமைந்த முனீஸ்வரரும், சாரணரித்தியை அடைந்தவருமானுர்.” என்பதாம்.

இன்னும்,

"𑌅𑌭𑍂𑌦𑍁𑌮𑌾𑌸𑍍𑌵𑌾𑌤𑌿 𑌮𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑍋𑌸𑌾
𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌶𑌬𑍍𑌦𑍋𑌤𑍍𑌤𑌰 𑌗𑍃𑌧𑍍𑌰𑌪𑌿𑌞𑍍𑌛𑌃 ।
𑌤𑌦𑌨𑍍𑌵𑌯𑍇 𑌤𑌤𑍍𑌸𑌦𑍃𑌶𑍋𑌸𑍍𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯
𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌕𑌾𑌲𑌿𑌕𑌾 𑌶𑍇𑌷 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌵𑍇𑌦𑍀 ॥"

என்றசுலோகமும் ஷை யாரால் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

இ-ள்: "ஆசாரியர் என்னும் பதத்தையுடைய கிருத்ரபிஞ்சர் அதாவது கிருத்ரபிஞ்சாசாரியர் என்ற 'உமாஸ்வாதி முனீஸ்வரர்' உண்டானார்; அவர் வம்ஸத்தில் அவருக்கு இணையாக அந்தக் காலத்தில் ஸகல பதார்த்தங்களையும் அறிந்தவர் வேறொருவர் இல்லை"
என்பதாம்.

இன்னும் *ஸ்ரவண பெளிகுள சிலாஸாஸனங்களுள் 67-வது. ஸாஸனத்தில்,

"𑌵𑌂𑌦𑍍𑌯𑍋 𑌵𑌿𑌭𑍁𑌰𑍍𑌭𑍁𑌵𑌿 𑌨𑌕𑍈𑌰𑌿𑌹 𑌕𑍌𑌣𑍍𑌡𑌕𑍁𑌨𑍍𑌦𑌃
𑌕𑍁𑌨𑍍𑌦𑌪𑍍𑌰𑌭𑌾 𑌪𑍍𑌰𑌣𑌯𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿 𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌾𑌶𑌃 ।
𑌯𑌶𑍍𑌚𑌾𑌰𑍁𑌚𑌾𑌰𑌣 𑌕𑌰𑌾𑌂𑌬𑍁𑌜 𑌚𑌂𑌚𑌰𑍀𑌕𑌃
𑌚𑌕𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍁𑌤𑌸𑍍𑌯 𑌭𑌰𑌤𑍇 𑌪𑍍𑌰𑌯𑌤𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 ॥"

என்ற சுலோகம் காணப்படுகிறது.

இ-ள். "எவர் அழகான சாரணர்களுடைய தாமரை மலர்போன்ற கைகளுக்கு வண்டு போன்றவராயும், ஜிநேந்திரராயும், பாரதவருஷத்தில் சாஸ்திரங்களுக்கு ஸ்தாபனத்தைப் பண்ணினரோ அப்பேர்ப்பட்ட கொருக்கத்திப் புஷ்பத்தின் காந்திபோன்ற கீர்த்தியினால் திக்கெங்கும் வியாபித்த குந்தகுந்த ரென்கிற பிரபுவானவர், இந்த உலகில் எவரால் சேவிக்கத்தகாதவர்?" என்பதாம்.

இன்னும் ஷை 254 நெம்பர் சாஸனத்தில்,

"𑌪𑍋𑌣𑍍𑌯𑌾𑌦𑌿𑌜𑌨𑌿 𑌸 𑌜𑌯𑌤𑌾𑌂 𑌕𑍌𑌣𑍍𑌡𑌕𑍁𑌨𑍍𑌦𑍋 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 ॥"

என்னும் சுலோகத்தின் 4-வது சரணத்தில் காணப்படுகிறது.

* ஸ்ரவண பெளிகுளத்திலுள்ள ஸாஸனங்களை, மைசூர் - சிலா சாஸன இலாகா ஆபீஸரவர்கள் ஆங்கிலம் முதலியபாஷைகளில் மொழி பெயர்த்துப் புத்தகரூபமாக வெளிப்படுத்தி யிருக்கின்றார்கள்.

இ - ள்: "உலகங்களினுடைய புண்ணியத்தினால் குந்தகுந்த ரென்னும் யதீந்திரர் உண்டானார்" என்பதாம்.

இன்னும், ௬௪ சாஸனத்தில்,

"ரஜோபி ரஸ்ப்ருஷ்டதமத்வமந்தர்
பாஹ்யேபி ஸம்வ்யஞ்ஜயிதும் யதீஶ:।
ரஜ:பதம் பூமிதலம் விஹாய
சசார மந்யே சதுரங்குலம் ஸ:॥"

என்னும் சுலோகமும் வரையப்பட்டுள்ளது.

இ - ள்: "உள்ளும் புறமும் அழுக்குகளால் அக்ஞான மில்லாதிருக்கும்படி அதை ஜெயித்த அந்த யதீஸ்வரர் அழுக்குகளுக்குஇருப்பிடமான பூமிப் பிரதேசத்தைவிட்டு நிச்சயமாய் நான்கு அங்குலத்திற்கு மேல் சஞ்சரித்தார்" என்பதாம்.

இன்னும், அதே சாஸனத்தில்,

"ஶ்ரீமாநுமாஸ்வாதிரயம் யதீஶ
ஸ்தத்வார்த்தஸூத்ரம் ப்ரகடீசகார।
யந்முக்திமார்காசரணோத்யதாநாம்
பாதேயமர்க்யம் பவதி ப்ரஜாநாம்॥"

என்ற சுலோகமும் வரையப்பட்டுள்ளது.

இ - ள்: "ஸ்ரீமானன உமாஸ்வாதி என்கிற இந்த யதீஸ்வரர் தத்வார்த்த ஸூத்ர மென்கிற கிரந்தத்தை வெளியாக்கினார்; அந்த ஸூத்ரமானது மோக்ஷவழியில் நடக்க ஆரம்பித்த ஜனங்களுக்கு விலையுயர்ந்த கட்டமுதாகும்" என்பதாம்.

இன்னும் 351-வது சாஸனத்தில்,

"ஸ்வஸ்தி ஶ்ரீ வர்த்தமாநஸ்ய வர்த்தமாநஸ்ய ஶாஸநே।
ஶ்ரீ கொண்டகுந்த நாமாபூச் சதுரங்குல சாரண:॥"

என்ற சுலோகம் வரையப்பட்டுள்ளது.

இ - ள்: "க்ஷேமத்தாலும், சம்பத்தாலும் வளருகிற வர்த்தமான பகவானுடைய மதத்தில் (சாம்பிரதாயத்தில்) பூமிக்கு நான்கு அங்குலத்துக்கு மேல் நடக்கும் குந்தகுந்தரென்னும் பெயரையுடையவராகிய சாரணர் உண்டானார்." என்பதாம்.

இன்னும் இந்தப் பெரியாரைப்பற்றிப் பல சாஸனங்களுமுள்ளன.

இத்தகைய குந்தகுந்தர் ஊர்ஜயந்தகிரியில் மேற்கூறியபடி நேமிஸ்வாமி பாததரிசனம் செய்தபிறகு, பல தேசங்களுக்கும் சென்று ஜிநதர்மத்தை உபதேசஞ்செய்தது போல *(பழைய)மயிலை மாநகரம்சென்று தர்மங்களை உபதேசஞ்செய்து அங்குச்சிலகாலம் தங்கியிருந்தார். இவர் பத்மநந்தி யென்னும் பெயர் பெற்றபிறகு அப்பெயரால் பத்மநந்தி பச்சிஸ் என்ற (திருக்குறள் போன்ற) நீதி நூல் ஒன்று வடமொழியில் செய்திருக்கிறார். இந்தக்கிரந்தத்தில் மங்களாசரணையாக ஆதி பகவானைக்குறித்து வணக்கம் செய்திருக்கிறார். ஷ்டி பத்மநந்தி பச்சிஸ் செய்த பிறகு திருக்குறளை இயற்றினாராதலின், ஷ்டி பச்சிஸ் கிரந்தத்தில் ஆதிபகவானை வணக்கம்செய்திருப்பதுபோலவே திருக்குறளிலும் ஆதிபகவானைக் குறித்தே கடவுள் வணக்கம் செய்திருக்கிறார்.

பத்மநந்தி முதலான பெயர்கள் பெற்ற ஏலாசாரியார் தென்மொழியில் அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கு புருஷார்த்தங்களையும், மக்கள் யாவரும் அறிந்து ஒழுகுமாறு ஷ்டி திருக்குறள் என்னும் நூல் இயற்றியதை தமதுசிஷ்ய கணங்களுக்குக் கூறியருளினர்.

---

* பழையமயிலை பெரிய நகரமாயிருந்த தென்பதும், அங்கு நேமிஸ்வாமி ஆலயமிருந்ததென்பதும், அப்பகவான் மீது வடமொழி தென்மொழிகளில், ஸ்தோத்ர நூல்கள் உள்ளனவென்பதும், அங்கே ஜைநர்கள் மிக்க பிரபலமாகவும் கல்விநிறைந்தவர்களாகவும் இருந்திருக்கிறார்களென்பதும், திருக்குறளாசிரியர் மயிலையில் தங்கியிருத்தல் கூடுமென்பதும் பழையநூல்களால்ஏற்படுகிறது. தவிர ஸ்ரீமான் வி. ஹயவதனராவ் பி. ஏ. அவர்களும் மயிலையைப்பற்றியும் அங்குவசித்திருந்த ஜைநர்களைப்பற்றியும் திருக்குறளைப்பற்றியும் எழுதியிருக்கின்றார். இவ்விவரங்கள் பின்வரும் பண்டிதர்கள் அபிப்பிராயம் 6-7—வது பக்கத்தில் காட்டப்பட்டிருக்கின்றன. ஆங்குகண்டுகொள்க

இது நிற்க பழய ஏட்டுப்பிரதி யொன்றில் மயிலையைப்பற்றியும், ஆங்கிருந்த நேமிஸ்வாமியைப்பற்றியும் மயிலையை அரசபுரிந்திருந்த மயிலைமான் என்னும் ஜைநனைப் பற்றியும் ஷ்டி நகரத்தை 500 - வருஷங்களுக்கு முன் கடல் கொள்ளப்பட்டதைப்பற்றியும் உள்ள சில விஷயங்கள் காணப்படுகின்றன. அவற்றை இங்கெழுதப்புகின் பெருகுமெனவிடுத்தனம். அதில் உள்ளபடி பழயமயிலைமாநகரம் கடல் கொள்ளப்பட்ட பிறகு அருகாமையிலிருந்த ஆப்பூரென்னும் கிராமம் மயிலாப்பூரென்று இப்பொழுது வழங்கிவருவதாகத் தெரியவருகிறது.

இவ்விதம், அருளிய அறநூலேக்கண்டு மகிழ்வெய்தி ஆழ்ந்த கருத்துக்களை ஆராய்ந்த சிஷ்யர்களில் ஒருவரும் * வானப்பிரஸ்தாஸ்ரமத்தையுடையவருமாகிய திருவுள்ளம் கபிஞர்,

()" கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்."

என்னும் செய்யுளால் சிறப்பித்துப் போற்றினர்.

இ - ள்: 'குறள்-(ஆயிரத்து முந்நூற்று முப்பது) குறள் வெண்பாக்களும், கடுகை-கடுகினை, துளைத்து-(அதனடுவே) துளைசெய்து, எழ்கடல்களெப்தஸாகரத்தினீரையும், புகட்டி - அத்துளையுட் புகுத்தி, குறுக - தன்னளவிற் சுருக்கமாக, தறித்த - தறித்துவைத்ததுபோல்வனவாகும்" என்பதாம்.

---

* வானப்பிரஸ்தாஸ்ரம மென்பது - தர்மார்த்தகாமங்களை அனுபவித்து இல்லத்தினின்றும் விலகி வனத்தில் சென்று முற்றுந்துறந்த முனிவரிடம் அடைந்து அவருக்கு சிஸ்ருஷை செய்துகொண்டு அவரிடம் தவத்திற்குரிய சில தத்துவங்களையுணர்ந்து ஒழுகுவதாகும் இதில் இரண்டுவிதமாம்: அவற்றுள் முதலாவது-கௌபீனமும் கண்டவஸ்திரமும் அணிந்து கமண்டலத்துடன் கூடியிருப்பதாம்: இரண்டாவது - கௌபீனமாத்திர முடைத்தாகி கமண்டலமும் பிஞ்சமுங் கொண்டிருத்தலாம். இந்த ஆஸ்ரமத்திலுள்ளவர்களின் தபோத்தியான ஒழுக்கங்களைப் பற்றிய விஷயங்கள் இரண்டாம்பாகத்தில் விரிவாக விளக்கிக் காட்டப்படும். திருவுள்ளம்கபிஞர் கௌபீன கமண்டல பிஞ்சதாரியாயிருந்து முற்றுந்துறந்தவர். இவர்தன்மை இங்ஙனமிருப்ப புறமதத்தினர் திருவுள்ளம் கபிஞர் என்னும் பெயரை மாறுபடச்செய்து திருவள்ளுவ நாயனரென்று திருத்தி அவரே திருக்குறள் செய்தாரென்றும், ஏலாச்சாரியரென்னும் பெயருள்ள மாமுனிவரரை ஏலேலசிங்கரென்று திருத்திஇவரிடம் திருவள்ளுவர் நூல்வாங்கி நெசவுத்தொழில் செய்தாரென்றும் கூறுவது பொருத்தமற்றதாம்.

() இந்தவெண்பாவை திருவுள்ளம் கபிஞர் திருக்குறளின் சிறப்பைப் பற்றி கூறியிருக்க, இதனை இடைக்காடர் பாடினரென்றும் இவர் விஷ்ணுவின் அவதாரமென்றும் புறமதப் புலவர்கள் கல்பனை செய்திருக்கிறார்கள். இது தவிர

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்னும் வெண்பாவை ஆசிரியர் காலத்தில், ஔவையார் பாடினதாகவும், இவர் சரஸ்வதியின் அவதாரமென்றும் இது போதாமல் திருவள்ளுவர் சகோதரி யென்றும் கூறுகின்றனர். இவை முற்றுந்தவறு. ஔவையார் கம்பர்காலத்தில் ஜனித்து வசித்திருந்தவராவர்.

மிகச் சிறியனவாகவுள்ள கடுகில் * ஸப்தஸாகரத்தினீரையும்புகுத்தி அதைப்பலபாகங்களாகத்தறித்து வைத்ததுபோலகுறட்பாக்கள் சொற் சுருக்கமும், அவற்றில் ஏழ்கடல் நீரைப்போல அதிகரித்த § ஸப்த தத்துவமுதலான வேதங்களுடைய பொருள்களின் விரிவும் உடையன என்பது இதன் கருத்து

---

* ஸப்த ஸாகரங்களாவன:—

| | | | | |
|---|---|---|---|---|
| லவண சமுத்திரம் | உப்பு | க்ஷௌத்ர | சமுத்திரம் | தேன் |
| வாருணி | ,, கள் | காளோதகம் | ,, | சுத்தஜலம் |
| க்ஷீரம் | ,, பால் | இக்ஷுரஸம் | ,, | கரும்புரஸம் |
| கிருதம் | ,, நெய் | ஆகியவைகளாம் | | |

§ ஸப்த தத்துவங்களாவன:—

‘‘ஜீவா ஜீவா ஸ்ரவ பந்த ஸம்வர நிர்ஜரா மோக்ஷாஸ்தத்வம்।’’

என்று இவ்வாசிரியர் இயற்றிய தத்வார்த்த ஸூத்ரம் அத்-1-ஸூத்ரம் 4-ல் கூறியுள்ளனவாம். அவையாவன:—

ஜீவன், அஜீவன், ஆஸ்ரவம், பந்தம், சம்வரை, நிர்ஜரை, மோக்ஷம் ஆகியவைகளாம். ஜீவன் தனது குணமாகிய சைதன்ய விசேஷ ஞானதரிசன ஸ்வரூபத்தையுடையவன். அவ்வாறிருப்பினும் சுபோபயோகம், அசுபோபயோகம், சுத்தோபயோகமென மூன்று பரிணாம மனத்தையுமுடையவன்.

ஜீவனிடத்தில். புத்கலம், தர்மம், அதர்மம், ஆகாயம், காலம் ஆகியவைகள் சம்பந்தமாம். ஜீவன் தவிர மற்ற வைந்தும் அஜீவனாகும்.

ஆஸ்ரவமென்பது-சுபா சுப பரிணாமத்திற் கியைந்தவாறு கர்மங்கள் ஆத்மனிடத்தில் வருவதாகும்.

பந்தமென்பது-ஆத்மனிடத்தில் வருகிறகர்மங்கள் அக்கினியில் காய்ந்த இரும்பில் நீர் கலத்தல் போன்ற தேகமெங்கும் பந்தப்படுவதாகும்.

சம்வரையென்பது - ஆத்மனுடைய சுப சுத்த பரிணாமத்தால் கர்மங்களை வரவொட்டாமல் தடுப்பதாகும்.

நிர்ஜரை யென்பது-கடுந்தபோபலத்தாலும் சுத்தோப யோக சுக்லத்தியானத்தாலும் கர்மங்களைக் கெடுப்பதாகும்.

மோக்ஷமென்பது — சமஸ்த கர்மங்களும் ஆத்மனைவிட்டு விலகியவுடன் மோக்ஷத்தில் நிலைகொண்டிருத்தல்.

பிறகு ஆசிரியர் திருவள்ளம் நயினரின் நுண்ணிய அறிவையும் நூலினுள் அடங்கியுள்ள பொருள்களை கிரகித்துக்கொண்டிருக்கும் தெளிவினையும் கண்டு இந்நூலை சங்கத்தாரிடம் அறங்கேற்றுதல் செய்தற்குரியவர் இவரேதகுந்தவர் என்றுதெளிந்து அருகில்அழைத்து மதுரையில் "மிக்க பிரபலமாக தமிழ்ச்சங்கம் ஒன்று நடந்து வருகிறது. அப்பட்டணத்தைஅரசுபுரிந்துவரும்பாண்டியன்ஜைநன், அவன் கல்வியிற் சிறந்தவன்; தமிழ்முதலான சாஸ்திரங்களைவிருத்தி செய்து வருபவன், ஆதலின், அவ்வரசன் முதலானவர்களை வரவழைத்து ௸ சங்கத்தில் இத் திருக்குறள் என்னும் தர்ம சாஸ்திரத்தை அரங்கேற்றுதல் செய்து வருவாயாக"வென்று உத்தரவளித்தார்.

திருவள்ளம்நயினரும் ஆசாரியர் ஆக்ஞைப்படி திருக்குறள் புத்தகத்தினை யெடுத்துக்கொண்டு மதுரை சென்று சங்கப் புலவர்

---

ஜீவனுக்கு-ஆஸ்ரவம், பந்தம் இவ்விரண்டும் சம்ஸார காரணமாகும். சம்வரை, நிர்ஜரை இவ்விரண்டும் மோக்ஷத்தின் பொருட்டு தவத்தின் காரணமாகும்.

எங்ஙனமெனின், ஒரு ஏரிக்கு ஆற்றுக்கால்வாய் வழியாக ஜலம் வருவதுபோன்ற ஆத்மனுக்கு கர்மங்கள் வருவது ஆஸ்ரவமென்றும், ஆற்றுக்கால்வாய் ஜலம் ஏரியில் கலத்தல் போன்ற ஆத்மனிடத்தில் கர்மங்கள் கலத்தல் பந்தமென்பதுமாம்.

ஆற்றுக்கால்வாய் மூலம் வரும் ஜலத்தைத்தடுத்து ஏரியில் நிலைகொண்டிருக்கும் ஜலத்தை மதகுகளின் மூலமாக பூராவும் கழிந்துவிடும்படி செய்வது போன்று, சம்வரை யென்பது வரும் கர்மங்களைத்தடுத்து, நிர்ஜரை யென்பது அநாதியாய் பந்தித்திருக்கும் கர்மங்களைக் கழிக்கும்.

இவ்வாறு ஏரியிலுள்ள ஜலம்பூராவும் கழிந்தவுடன் ஏரி உலர்ந்து சுத்தப்படுவது போன்ற ஆத்மனிடத்திலுள்ள கர்மஜலம் சம்பூர்ணமாக உலர்ந்ததும் சுத்தாத்மன் மேகம்மூடின ஆதித்யன் மேகம் நீங்கினவுடனே பிரகாசமாய் விளங்குவதுபோன்ற பரஞ்சோதிமயமாய் மோக்ஷத்தில் நிலைகொண்டிருப்பன்.

மேற் கூறியுள்ள ஸப்த தத்துவங்களமைந்த குறட்பாக்களை இரண்டாம் பாகத்தில் எடுத்துக் காட்டுவோம். இந்த பாகத்தில் திருக்குறள் ஜைநசமயவேதமென்பதற்குச் சான்றாக சில குறட்பாக்களே யெடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஆதலின் பல அதிகாரங்களிலுள்ள குறட்பாக்களால் ஜைந சமய வேதங்களுடைய தத்துவங்களின் பொருள்களை இரண்டாம்பாகத்தில் விவரிப்பாம். அவற்றை ஆங்கு பார்க்கக்காணலாம்.

களைக்கண்டு, "எனது குருநாதர் ஏலாச்சாரியார் அருமையான தமிழ் நூலொன்றுசெய்து, 'இதனைச் சங்கப்புலவர்களிடம் கொண்டுபோய் அரசன் முதலானவர்களை வைத்துக்கொண்டு அரங்கேற்றி வருவாயாக, வென்று எனக்குக் கூறி அருளினார்;" என்று சொன்னார். புலவர்களனைவரும் அதற்குச் சம்மதித்து இவ்விஷயங்களை அரசனுக்கு அறிவிக்க அரசனும் ஏலாச்சாரியருடைய பெருமையை முன்னமே கேள்விப்பட்டிருந்ததால் தாம் மந்திரி முதலானவர்களுடன் சங்கமிருந்த விடத்திற்கு வந்து நயினாரை நமஸ்காரம் செய்து "சுவாமி! தங்களது பெயரென்ன"வென்று கேட்டான்; அவர் தமது பெயரையும் சொல்லி இந்நூல் இயற்றியவர் எமது குருநாதர்; என்றும் அவர் அருளிய விஷயத்தையும் சொன்னார். அரசனும் அவ்வாறே ஆகமத்தை அரங்கேற்றம் செய்யும்படி கேட்டுக்கொண்டான்.

திருவுள்ளம் நைனாரும் அரசன் முதலான சங்கத்தாரிடம் ஒவ்வொரு குறட்பாவையும் எடுத்தோதினார். பாண்டியன் அவற்றிலுள்ள ஆழ்ந்த கருத்துக்களையறிந்து, 'நமது (ஜைந) சமயத்து வேதங்களின் சாரங்களை யெல்லாந்திரட்டி இந்நூல் செய்யப்பட்டிருக்கிறது" என்றுசங்கத்திலுள்ளவர்களும் மந்திரிமுதலான பலஜனங்களும் அறியும்வண்ணம் தெரிவித்து, அதிக குதூகலத்துடன் ஏலாச்சாரிய மகாத்மாவையும் திருக்குறளையும் நைனாரையும் புகழ்ந்து கொண்டாடினான். சங்கத்தார் முதலான பல ஜனங்களும் இந்நூல் மிக்க அருமையானதென்றும் மகாராஜா அவர்கள் கூறியது உண்மையே யென்றும் கூறினார்கள். பிறகு திருவுள்ளம் * நயினார்

* தமிழ் தேசத்தில் வசிக்கும் ஜைநர்களுக்கு மாத்திரம் நைனார் என்கிற சிறப்புப் பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஜைநமத சாஸ்திரப்படி அஹிம்ஸா முறையில் நடப்பவனுக்கு பாபம் வருவதில்லை. இதை ஜைநர்கள் அனுஷ்டித்துப் பாபத்தை நீக்குகிறார்களென்பதற்கு திருஷ்டாந்தமாக மேல்படி பட்டப்பெயர் வழங்கிவருகிறது. நைநஃ-என்கிற பதம் வடமொழி; ஏநஃ என்கிற பதமும் வடமொழி; இந்த பதத்திற்கு, பாபமென்று அர்த்தம்; ந என்னும் வடமொழிக்கு இல்லையென்று அர்த்தம்; இந்த, ந என்னும் பதமும் ஏநஃ என்கிற பதமும் சேர்ந்து நைநஃ என்றாயின. இந்தச் சொற்றொடரைத் தென்மொழியில் உச்சரிக்கும் போது 'ஆர்' என்னும் பலர்பால் விகுதி சேர்ந்து நைநார் என்று உச்சரிக்கப்பட்டு வருகிறது. இதற்குப் பொருள் பாபமில்லாதவர் என்பதாம்.

அரசன் முதலான சங்கத்தாரவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு மயிலைவந்து ஆசாரியருடன் திருக்குறள் அரங்கேற்றியதும் பாண்டியவரசனும் சங்கத்தார்முதலான பல ஜனங்களும் சொல்லிய விஷயங்கள் யாவற்றையும் சொன்னார்.

பிறகுதிருவள்ளம்நயினார் குருவை நமஸ்கரித்து,"ஸ்வாமி! வானப்பிரஸ்தாஸ்ர மத்தினின்றும் விலகி வீடடைதற்குரிய நான்காவதாகிய முற்றுந்துறந்தமுனிவர் ஆஸ்ரமத்தை அடையும்பொருட்டு அடியேனுக்குதீக்ஷைசெய்விக்க வேண்டும்"என்றுகேட்டுக்கொண்டார். அவரும்அவ்வாறே தீக்ஷைசெய்வித்து முற்றுந்துறந்து தவஞ்செய் வதற்குரிய பலதத்துவங்களையும் உபதேசஞ்செய்து முனிகணங்களுடன் நிர்கந்த தவம் செய்யும்படி கட்டளையிட்டார். நைநாரும் அவ்வாறே தவஞ்செய்து ஐந்திர நிறைந்தபடிமையோனானார்.

ஏலாச்சாரியார் சிலகாலம் சென்றபிறகு மயிலையை விட்டுப் பழையபடி பொன்னூருக்குச் சமீபத்திலுள்ள நீலகிரியின்மிசை முனிசங்கத்துடன் வந்து சேர்ந்தார். பிறகு இரவும் பகலும் பிரதிமா யோகதாரியாய்க் கடுந்தவம்செய்து அதன்பலனால் பூமியின்மிசை நான்கு அங்குலத்திற்குமேற் செல்லும் சாரணரித்தியைப் பெற்றுச் சிலகாலம் ஆசாரிய பதத்திலிருந்து பிறகு தமது ஆசாரிய பதவியை சிஷ்யனுக்குக்கொடுத்து விட்டுப்பிறகு உபாத்தியாயர் பதவியிலும் சாதுத்தன்மையிலும் சிலநாட்களிருந்து மேல்படி மலையின்மிசை தேகவியோகமடைந்து * சர்வார்த்த சித்தி என்னும் பஞ்சாநுத்தரத்தில் அகமிந்திரனாக அவதரித்தார்.

---

* சர்வார்த்த சித்தியில் அவதரித்தவர்கள் அந்தியத்தில் இம்மண்ணுலகில் அவதரித்து தவத்தை யெய்தி மோக்ஷமடைவது நிச்சயம். சர்வார்த்த சித்தியில் அகமிந்திரர் அனுபவிக்கும் சுகத்தைப்பற்றிய விஷயங்களை இப்புத்தகம் 130-ம் பக்கத்தில் விளக்கியுள்ளோம். ஆங்குக் கண்டு கொள்க.

இந்த மகாஞானியாகிய ஏலாசாரியார் மேல்குறித்த நீலகிரியின் மிசை தேகவியோகமடைந்ததால் அம்மலையின்மீது அவருடைய ஞாபகார்த்தமாக இரண்டு பாதங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இப் பாதங்களுக்கு மழைக்காலம் தவிர மற்றகாலங்களில் தைமாதத்தி லிருந்து ஒவ்வொரு ஆதிவாரதினத்திலும் தென்தேசத்திலுள்ள ஜைநர் முதலானவர்கள் ஆயிரம் கணக்காகச் சேர்ந்து அபிஷேகம் செய்து வருகின்றார்கள். வடதேசத்திலுள்ள ஜைநர்களும் ஷெடி பாதங்களை தரிசனம்செய்து வருகிறார்கள். சுமார் பத்து வருஷத் திற்குமுன் ஆராபட்டணம் ஸ்ரீமான் தரணேந்திரதாஸ் அவர்கள் தமது குடும்பத்துடன் வந்து இப்பாதங்களை தரிசனம் செய்தது மல்லாமல் ஷெடி மலையின் வடபுறத்தில் ஆஸ்ரமம் ஒன்று நிர்மாணம் செய்துள்ளார். இந்த ஆஸ்ரமத்தில் ஜைநசமயத்து முனிவர், வானப்பிரஸ்தர் ஆகியவர்கள் சிலகாலம் தபோதியானத்தில் வசித் திருப்பதும், சிலகாலம் வெளியில் சஞ்சரிப்பதுமாக இராநின் றார்கள்.

# திருக்குறளைப்பற்றியும் அதன் ஆசிரியரைப் பற்றியும் பல ஆராய்ச்சிகள் நிறைந்த பண்டிதர்களின் அபிப்பிராயங்கள்.

## கோலார் தங்கத்தரை சாம்பியன் ரீப்ஸ் சாக்கைய சங்கத்தார் 25-2-20ல் வெளியீட்டில் பிரசுரித்த சாத்தார்-ஸ்ரீமான் விஸ்வநாத பாரதியாரின் திருக்குறளைப்பற்றிய பிரசங்கசுருக்கம்

1. 'குறள்' என்ற சொல்லுக்கு 'குறுகிய' என்பது நேர்ந்த பொருள். அது இரண்டு அடியும், எழுசீரும் உடைய ஒரு பாவினத்தைக் குறிக்குஞ் சொல்லாகவும், பின் அத்தகைய பாக்களால் ஆகிய ஓர் நூலைக் குறிக்கும் பெயராகவும் மாறியது.

இவ்விதம் 'குறள்' என்ற தலைப்பெயருடன் பற்பல நூல்கள், பற்பல காலங்களில் பற்பல ஆசிரியர்களாற் பாடப்பெற்றுத் தற்போது நந் தமிழ் நாட்டினிடையே உலவி வரினும், அவற்றுள் தெய்வப்புலமைத் திருவள்ளுவரது குறளை பூவிற்குத் தாமரையும் பொன்னுக்குச் சாம்புநதமும் போன்றது. அதனைப் பலர் 'திருக்குறள்' என்றும், சிலர் 'திரிக்குறள்' என்றும் கூறி வருகின்றனர். நாம் இத்தகைய பெயர் வாதங்களுட்புகாது, பண்டைப் பேராசிரியர்களாம் பொன்முடியார், நரி வெரூஉத்தலையார், இடைக்காடர் முதலானவர்கள் தங்கள் சிறப்புக்கவிகளிற் கூறி யிருப்பதுபோலப் பொதுவாகக் 'குறள்' என்போம்.

2. இக்குறள் ஆசிரியராகிய திருவள்ளுவ தேவர் பார்ப்பானுக்கும், பறைச்சிக்கும் பிறந்தார் என்றும், பிறந்தபொழுதே பெற்றோரை நோக்கி அருட்கவி பாடினர் என்றும், வள்ளுவர் என்ற தாழ்ந்தவகுப்பினர்களால் மைலாப்பூரில் வளர்க்கப் பெற்றார் என்றும், வாசுகியென்ற கர்பிற் சிறந்த காரிகையைக் காதலியாகக் கொண்டார் என்றும், வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு நெசவுத் தொழில் புரிந்தார் என்றும், ஏலேலசிங்கன் என்ற வணிகனுடன் அளவளாவி நட்டார் என்றும், சங்கப்புலவர்களை வாதில் வென்று

தம் நூலை அரங்கேற்றினர் என்றும் பற்பல காவில்லாக் கதைகளை நம்மவர்களுட் பலர் நித்தமுங்கூறியும், எழுதியும் வருகின்றனர். ஆனால், நம் பண்டை நூல்களில் இவற்றிற்கு ஆதாரமாக ஒன்றுமே யில்லை; இருக்கும் இரண்டொன்றும் பெரிய வாதங்களுக்கு இடந் தருகின்றன.

காலஞ்சென்ற வித்வான் விசாகப்பெருமாள் ஐயரும், சரவணப் பெருமாள் ஐயரும் குறளை அச்சிட்டு வெளிப்படுத்திய காலந் தொட்டே இத்தகைய 'வண்ணானுக்குப் போனான், வண்ணாத்திக்கு வந்தான்' என்ற ஆபாசக் கதைகள் தலையெடுத்தன என்று உறுதி கூறுவோம். முதன்முதலில் இக்குறளை அச்சிட்ட 'எல்லிஸ்' துரை மகனாரது இரண்டு பதிப்புகளிலும் இத்தகைய கதைகளைக் காண் கிலேம். ஆகவே 'ஞானவெட்டியான்' 'கபிலர் அகவல்' ஆகிய சில சர்வ சாதாரண நூல்களை இயற்றிப் பழையபோராசிரியர்களது பெயர் களால் வெளியிட்ட பிற்காலத்தவர்களது சிருஷ்டியே இவையனைத் தும் என்று எண்ணுகின்றேன்.

மேலும், ஹிந்துமதத்தைச் சார்ந்த வள்ளுவர் என்ற தாழ்ந்த வகுப்பினர்களால் வளர்க்கப் பெற்றவர் என்று கூறும் முழுப் பொய்க் கதையை ஒருக்காலும் நாம் நம்ப முடியாது; ஏனெனின், வேத சாஸ்திர புராண இதிகாஸங்களை ஐயந்திரிபறக் கற்றுப் பாண்டித் யம் பெறும் உரிமைகளை ஏனையோர் அவ்வள்ளுவர்களுக்கு முன் ஒரு சிறிதும் வழங்கினர்கள் இல்லை என்பது பட்டப்பகல் வெட்ட வெளிச்சம். குறளை ஆதியோடந்தம் படிப்பவர்களுக்கு அந்நூலா சிரியர் விசேஷ நூலாராய்ச்சி உடையவர் என்பது தெரியாமற் போகாது விஷயம் இவ்வாறு இருக்கும்பொழுது, தமிழ் மறையாகிய குறளை அறியாமையென்ற அந்தகாரத்தில் மூழ்கியிருந்த(ஹிந்து மதச் சார்பான) வள்ளுவர் கூட்டத்தில் வளர்ந்த ஒருவரால் இயற் றப்பெற்றதென்பது 'மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச் சிடுவது' போலாகும். ஆனால் சமணர்களுக்கும் பௌத்தர்களுக் கும், ஞானகுருக்களாகவும், கன்ம குருக்களாகவும், வைத்தியர்க ளாகவும், ராஜதந்திரிகளாகவும் அக்காலத்தில் விளங்கிய ஒரு கூட் டத்தார்க்கு சாக்கையர் என்றும், நிமித்திகர் என்றும், வள்ளுவர் என்றும் பல பெயர்கள் வழங்கியதாக நம் காவியங்களும், நிகண்டு களும் அறிவிக்கின்றன.

மேலும் புலாலுண்ணல்,கொல்லாமையாகிய தர்மங்கள் ஹிந்து மதத்திற்குப் பொது தர்மங்கள் எனினும் ஜைன பௌத்த மதங் களுக்கு விசேஷ தர்மங்களாகும். யாக காலங்களில் பசு, ஆடு, குதி ரை முதலியவற்றை மந்திரத் துணையால் வதைத்துத் தேன், பால், பழம், சர்க்கரையாகியவற்றுடன் கலந்து அருந்தி மகிழும் ஹிந்துக் களைப் போல ஜைனர்களும் பௌத்தர்களும், செய்தற்குச் சம்மதி யார் என்பது உலகறிந்த விஷயமாகலானும், அக்கருத்தை யொட் டித் "தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான் பிறிதின்னுயிர் நீக்கும் வினை" என்றும், "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா வுயிருந் தொழும்" என்றும், "அவிசொரிந்தாயிரம் வேட்ட லின் ஒன்றன் உயிர்செகுத் துண்ணாமை நன்று" என்றும் குறள் கூறுவது பிறிதோர் காரணம்.

ஹிந்து வேதங்களைப் பின்பற்றி பக்தி நூலாக இன்றி, திரி பேதமே (திரிபிடகம்) போல் இக்குறள் நூலும் சிறந்த ஒழுக்க நூலாக இருப்பது மற்றொரு காரணம்.

பாயிரத்தில் "மலர்மிசை யேகினான்" "ஆதிபகவன்" "பொறி வாயில் ஐந்தவித்தான்" என்ற பாலி நிகண்டையும், திரிபேதத்தை யும் பின்பற்றி புத்தர்பிரானை வாழ்த்தி யிருப்பது வேறொரு கார ணம். இன்னும் ஹிந்து மதத்தார்க்கு உரிய நான்கு ஆஸ்ரமக் கட மைகளையும கூறாது இல்லற துறவறங்களை மட்டும் கூறியிருப்பது வும் பரத்துவாசருக்கு புத்தர்பிரான் கூறிய ஔஷத தத்துவத் தோடு குறளில் உள்ள மருந்து என்ற அதிகாரத்தைப் பார்க்கும் பொழுது பெரிதும்ஒற்றுமையிருப்பதுவும் இக்குறள் ஆசிரியரை ஜைந பௌத்த மதங்களைச் சார்ந்தவரென்று உறுதிப்படுத்தும்.

"தாமரைக் கண்ணான்" 'இந்திரன்' என்ற பெயர்கள் புத்தர் பிரானுக்கும் உண்டென்பதை ஹிந்து சகோதரர்கள் அறியவேண் டும். மேலும் 'இயல்புடைய மூவர்' என்றது துறந்தார், துவ்வா தார், இறந்தாரை அல்லது மக்கள், தேவர்,நரகரை என் குறிக்கா தென்பதற்குத் தக்க விடைகளையும் அன்னார் அறிந்துகொள்ள வேண்டும். சிலர் பௌத்தர்களுக்கு மெய்யுணர்வு வேண்டியதில்லை யென்றும், அதனை அவசியமென்று குறள் கூறுவதாகவும் எடுத் துக் கூறி வள்ளுவரை ஹிந்து என்கின்றனர். அது முற்றிலும் பிசகு: பௌத்தர்களுக்கும் மெய்ப்பொருள் உணர்ச்சியுடன்பாடே

யென்பதைத் திரிபிடகத்திலும், மணிமேகலையாகிய நூல்களிலும் பரக்கக் காணலாம்.

ஆகவே இத்தியாதி காரணங்கள் பற்றி வள்ளுவரை நாம் பௌத்த-ஜைநமதத்தினர் என்போம். இன்னும் இக்குறள் ஆசிரியர் மறுபிறப்பில் நம்பிக்கை கொண்டு "எழுமை யெழு பிறப்பும் என்று அடிக்கடி கூறுவதாலும், ஏசு மதத்திற்கு முரண்பாடும், புத்த தன்மத்திற் குடன்பாடுமான பலகோட்லை வற்புறுத்திப் போதலாலும், போப்பையர் கருத்துப்படி கிறிஸ்தவரும் அல்ல என்ற உறுதி கூறுகின்றோம். ஸ்ரீமான் கனகசபை கூறுவதேபோல இக்குறளாசிரியர் கி. பி. முதல் நூற்றாண்டினரே யென்றும் எண்ணுகின்றோம்.

குறள்.

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

---

## மதுரைச்செந்தமிழ்ப் பத்திரிகை. தொகுதி 16-பகுதி5-ல் கெ. ஸி. வீரராகவையர், எம், ஏ. எப். ஸி. ஏ. எஸ். அவர்கள் ஜைந நூல்களின் கவிமேன்மையும் காலநிர்ணயமும் என்கிற வியாசத்தில் திருக்குறளைப் பற்றி எழுதியுள்ளதாவது.

"மலர்மிசையேகினன்" என்றதனாலும் "அவிசொரிந்தாயிரம் வேட்டலினொன்ற னுயிர்செகுத்துண்ணாமைநன்று" என்றதனாலும், ஆசிரியர் "தேவர்" என்று அழைக்கப்படுவதனாலும், தேவர் என்ற பட்டம் ஜைனர்களே வைத்துள்ளாரதனாலும் இந்நூலையியற்றிய வள்ளுவரை ஜைநர்கள் தம்மவர் என்பர். சைவர், வைணவர், கிறிஸ்தவர் முதலியவர் தம்மவர் என்று கூறுகிற்பர். ஆதலினிதை ஜைந நூல் என்றுசொல்லவியலாது.

---

விஜய நகரம் மகாராஜா கலாசாலையில் சரித்திர போத
காசிரியராகிய ஸ்ரீமான் எம். எஸ். இராமசாமி
அய்யங்கார் அவர்கள் எம். எ. 1920-௵
ஜூலைமாதத்திய "ஜைன கெஸட்" பத்திரி
கையில் எழுதிய தமிழ் நாட்டிலுள்ள ஜைனர்
கள் என்கிற வியாசத்தின் சுருக்கம்.

---

திருக்குறளுடைய ஆசிரியர் எந்தமதத்தைச் சார்ந்தவர் என்பது ஒரு பெரிய கேள்வியாகவிருந்து வருகிறது. அவ்வாசிரியர் ஜைனரென்று சில பெரிய வித்வான்கள் உறுதியாகக் கூறுகின்றார்கள். அவர் ஹிந்து தெய்வம் எதையும் வணங்கா திருத்தலும் மலர்மிசை யேகினான், எண் குணத்தான் என்று கடவுளைக் குறிப்பிடுதலுமே அவர் ஜைனர் என்று கூறுவதற்குப் போதுமான ஆதாரங்களென்று கருதப் படுகின்றன ஜைனர்கள் தங்களுடைய ஆசாரியர்களுள் ஒருவரான ஏளாசாரியர் என்பவர் குறளை இயற்றியதாக நம்புகிறார்கள். பழைய சிறந்த தமிழ்க்காப்பியங்களுள் ஒன்றாகிய நீலகேசி என்னும் நூலினுடைய உரையாசிரியராகிய சமயதிவாகர மாமுனிவர் தமது உரையில்திருக்குறளைக் குறிப்பிடும்பொழுதெல்லாம் அதை "எம்மோத்தாதலால்" (எமது வேதம் ஆகையினால்) என்று எழுதி யிருக்கின்றார். இந்தக் கொள்கை உண்மையானால் ஜைனர்கள் கி. பி. முதல் நூற்றாண்டில் தென்னாட்டில் பிரவேசித்துத் தங்கள் மதத்தைத் தமிழ்ப் பாஷை மூலமாக வெளியிட ஆரம்பித்தனரென்று ஊகிக்கலாம்.

ஜைனர்கள் பெரிய வித்யார்த்திகளாய் இருந்தது மல்லாமல் புத்தகங்களை எழுதுபவருமாய் இருந்தனர். அவர்கள் நூற்களையும் சாஸ்திரங்களையும் ஸ்வபாவ மாகவே நேசித்து அவைகளை விருத்தி பண்ணும் முயற்சி யுடையவர்கள். தமிழில் ஜைனர்களால் செய்யப் பட்டிருக்கும் நூல்கள் தமிழர்களுடைய ஐஸ்வர்யங்களுள் மிகவும் விலையுயர்ந்தவை. இலக்கண இலக்கிய விரோதங்களில்லாமல் சமஸ்கிருத சொற்களைத் தமிழ்ச் சொற்களோடு கலந்து உபயோகிக்கும் முறையைக் காட்டியவர்களும் அவர்களே. கன்னட நூற்களும்

ஜைநர்களுக்கு ஏராளமாகக் கடன்பட்டுள்ளன. உண்மையில் அவைகளை முதலில் எழுதியவர்களும் இவர்களே, இங்கு(L. RICE) எல் ரைஸ் என்பவர் எழுதுவது கவனிக்கத் தக்கது; அதாவது: "பன்னிரண்டாவது நூற்றாண்டின் மத்தியகாலம் வரையில் கன்னட நூற்கள் முழுமையும் ஜைநர்களுடையனவே. ஜைந நூற்களே பின்னும் நீண்ட காலம் வரையில உயர்ச்சி பெற்று வந்தன. கன்னட பாஷையில் மிகப்பழமை யானவையும், அதிக மேன்மை தங்கியவுமான நூற்களெல்லாம் ஜைநர்களுடையனவே" என்பதே. இன்னும், ரவரண்ட் கிட்டல்என்பவரும் இம்மாதிரியே கூறுகிறார்; அதாவது: "அவர்கள் (ஜைநர்கள்) தங்கள் சமூகத்திற்காக எழுதியது மல்லாமல், சாஸ்திரங்களின் மேலுள்ள இச்சையினாலும் அநேக நூற்களை எழுதி யிருக்கின்றனர். சில சமஸ்கிருத நூற்களைக் கன்னடத்தில் மொழிபெயர்த்து மிருக்கின்றனர்." என்பதே.

உன்னதமான அஹிம்ஸா விரதம் இந்துவேதாந்த ஆசாரங்களைச் சரிப்படுத்தி இருக்கிறது. ஜைந உபன்னியாசங்கள் காரணமாகப் பிராமணர் மிருகபலியை நிறுத்தி அதற்குப் பதிலாக யாகங்கள் செய்யும பொழுது மாவினால் மிருகங்கள் செய்து உபயோகப் படுத்து கின்றனர்.

விக்ரக ஆராதனையும் தேவாலய நிர்மாணமும் தென்னிந்தியாவில் பெரும்பாலும் ஜைநர்களினாலேயே ஏற்பட்டன. சைவகோயில்களில் சந்நியாசிகளைக் கும்பிடுவது ஜைனப் பழக்கத்தில் நின்று நேராகவே கடன் வாங்கப்பட்டிருக்கின்றது. ஜைநர்களா லேற்பட்ட மற்ற எல்லாத் திருத்தங்களை விட மேலானவை, திராவிடர்களுடைய ஞான, நீதி, அபிவிருத்திக்குக் காரணமா யிருந்தனவும், ஜைந கல்விக் கழகங்களுக்கும் பிரசாரங்களுக்கும் போட்டியாக ஏற்படுத்தப்பட்டனவுமான பாடசாலைகளேயாம்.

ஸி. ஹயவதனராவ், பி, எ, பி, எல், அவர்கள்

தென் இந்திய சரித்திரக் கதைகள்.

என்னும் புத்தகத்தில் திருக்குறளைப்பற்றி

எழுதியுள்ளதாவது.

## தெய்வப்புலவரான திருவள்ளுவர்.

சென்னைக்கு ஸமீபத்திலுள்ள மைலாப்பூர் உங்களில் அநேகருக்குத் தெரியும். பழைய காலங்களில் கூட அது பெயர்பெற்ற

பட்டணம். முன்னொரு கதையில் நாம் அறிந்திருக்கிற தெய்வப் புலவரான திருவள்ளுவர் இங்கே பிறந்தவர்.

அந்நாளில் மைலாப்பூரில் ஜைநர் அநேகர் இருந்தனர். அவர்களில் பலர் நல்ல கல்விமான்கள்.

திருவள்ளுவர் ஓர் எளிய பறையன் வீட்டிலே பிறந்தார். மைலையிலிருந்த ஜைநர்களிடத்தில் கல்விகற்றவ ராகையால் அவருடைய மனப்போக்கு ஜைநப்போக்காக இருக்கிறது. அவர் இயற்றிய நூல் திருக்குறள் என்று வழங்கிவருகிறது.

## திராவிடன்பத்திரிகையில் 1922ம் வருஷம் ஆகஸ்டுமீ 25உ கா பி. பரமசிவன் என்பவர் எழுதிய வியாசத்தின் சுருக்கம்

பூர்வீகத்தில் திருக்குறள், திருவள்ளுவர்மாலை முதலியவைகள் யாவும் ஓலைப் பிரதிகளாகவே யிருந்திருக்கின்றன.

1825ம்-வருஷம் பிரிட்டிஷ் இராஜாங்கத்தில் சிவில் சர்விசில் தேர்ந்து வந்த எலிஸ் துரையவர்கள் ஓர் தமிழ்ச் சங்கம் சென்னையில் ஏற்படுத்தி அதனை விருத்தி செய்ய பல விடங்களிலுமுள்ள ஓலைப் பிரதிகளைக் கொண்டு வரச்செய்து அச்சிட்டுத் தமிழ் நூற்களைப் பரவச்செய்து வந்தார். அக்காலத்தில் ஜார்ஜ் ஆரிங்டன் துரையுடைய அரண்மனை உத்தியோகஸ்தராகிய ஸ்ரீமான் கந்தப்ப னென்பவரால் கொடுக்கப்பட்ட ஓலைப் பிரதி திருக்குறள் மூலமும், திருவள்ளுவர் மாலையும், நாலடி நானூறும் எலிஸ் துரையவர்களின் தமிழ் வித்துவான்களாகிய தாண்டவராய முதலியாராலும், முத்துசாமி பிள்ளை யவர்களாலும் பார்வையிடப்பட்டு 1831 வருடம் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டன. இதுவேபுத்தக ரூபமாய் வெளிவந்தமுதல் திருக்குறளாகும்.

திருவள்ளுவ நாயனர் பார்ப்பானுக்கும் பறைச்சிக்கும் பிறந்தார் என்றும், வள்ளுவர் சேரியில் வளர்ந்தார் என்றும் வைசிய குலப்பெண்ணை மணந்து இல்லறம் நடத்தினரென்றும் 1835-ம் வருஷம் விசாகப் பெருமாளையர் கட்டுக் கதை கட்டி அச்சிட்டு வெளியாக்கினர். அதன் பின் 1837-ம் வருஷம் சரவணப் பெருமாளையர் அச்சிட்ட புத்தகத்தில் வேளாளர் குலப் பெண்ணை மணந்

தாக எழுதிவைத்திருந்தார். திருவள்ளுவரோடு 7-பிள்ளைகள் பிறந்ததாகச் சரவணப் பெருமாளையர் இன்னொரு புளுகையும் விவரித்து விட்டார்

அதாவது, அந்த ஏழுபிள்ளைகளும் பூமியிற் பிறந்தவுடன் ஒவ்வொரு வெண்பாக்களைப் பாடினவென்று இவர்பக்கத்தில் ஓலையும் எழுத்தாணியும்வைத்து எழுதினவரைப்போல் ஏழுபாக்களைப் பாடி குறளோடுசேர்த்துவிட்டார் இந்தப்பொய் போதாமல் 1847-வருஷம் திண்டுக்கல் முத்துவீரப்பிள்ளை உத்தரவின்படி வேதகிரி முதலியாரவர்கள் எழுதிய புத்தகத்தில் பிரமன் ஓர் யாகஞ் செய்ததாகவும், அதில் கலைமகள் உற்பத்தியானதாகவும் அவளையே பிரமன் விவாகம் செய்து கொண்டு, மறுபடியும் அகஸ்தியராய்த் தோன்றி, சமுத்திர கன்னிகையை மணந்து பெருஞ் சாகரனைப் பெற்று அப் பெருஞ்சாகரன் திருவாரூர்ப் புலைச்சியைச் சேர்ந்து பகவனென்பவரைப்பெற்று அவருக்கும் பிரம குலப்பெண்ணுக்கும் பிறந்தார் என்று இன்னொரு பொய்யை அழுத்தி எழுதிவிட்டார். அதற்குப்பின் ஜோடித்திருக்கிற கதையோ கேட்க வேண்டியதில்லை.

## திராவிடன் 1922௵ செப்டம்பர்௴ 4௳ பத்திரிகையில் வெளியான திருவள்ளுவர் சமயம்யாதுஎன்ற வியாசத்தின் சுருக்கம்.

சட்டகலாசாலை ஆசியர் ஸ்ரீமான் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் அவைத் தலைமை வீற்று, உயர்திரு உருத்திர கோடீசுவர சுவாமிகள் மேற்படி விஷயமாகப் பேசியதாவது.

திருவள்ளுவர் இன்ன சமயத்தைச் சேர்ந்தவர் என்பதைப் பற்றித்திருவள்ளுவர் யாண்டும் குறிப்பிடவில்லை. அவர் காலத்தில் அவருடன் இருந்த புலவர்களும் அவர் இன்ன சமயத்தைச் சார்ந்தவர் என்பதை எங்கும் சொல்லவில்லை. இதனால் அவர் இன்ன சமயத்தவர் என்பது விளங்கவில்லை. ஆனால், உலோகாயதர், பூதவாதிகள், பௌத்தர், ஜைநர், சைவர், வைணவர், வேதாந்திகள், சித்தாந்திகள் முதலிய பல வேறு சமயத்தவரும் திருவள்ளுவர் தங்கள் சமயத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லுகிறார்கள்; அவர்கள், சில திருக்குறள்களைமேற்கோளாகஎடுத்துக்காட்டித்தங்கள் தங்கள்

மதத்தைத்தான் திருவள்ளுவர் எடுத்தோதியதாக அர்த்தம் செய்து அதனால் திருவள்ளுவர் தங்கள் மதத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லுகிறார்கள். சைவர், வைணவர், புத்தர், ஜைநர் முதலிய சமயத்தவர்கள் தத்தம் நூல்களிலும். தத்தம் சமய நூல்களின் உரைகளிலும் சமயம் சேர்ந்துழித் திருவள்ளுவர் திருக்குறள்களை மேற்கோள்களாகக் காட்டியிருப்பதோடு, திருவள்ளுவர் தங்கள் தங்கள் மதத்தைச் சேர்ந்தவர் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனல், திருவள்ளுவர் அருளிச்செய்த திருக்குறள்களின் பாக்கள் ஒன்றேனும் அவர் எம்மதத்தைச் சார்ந்தவர் என்பதை வெளிப்படையாகக் காட்டவில்லை. மேற்படி சமயவாதிகளெல்லோரும் தாங்கள் மேற்கோள்களாகக்காட்டும் திருக்குறள்களுக்குப்பொருள் செய்யும்போது தங்கள் சமயக் கொள்கைகளை யெல்லாம் வலிதில் அவற்றிற்பொருத்தி வைத்துப்பொருள் படுத்துகிறார்களேயன்றித் திருக்குறளின் நேரானபொருளினின்று தத்தம் கொள்கைகளை எடுத்துக்காட்டுகிறார்களில்லை.

உதாரணமாக, "அகரமுதல் எழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றேயுலகு", என்பதற்குப் பொருள் உரைக்குங்கால், 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்னும் தொடருக்கு, "உலகம் ஆதி பகவானாகிய முதலையுடையது" என்று பொருள்படுகின்றது. இதற்குச் சைவசித்தாந்தி ஒருவர் பொருள் சொல்லும் போது, 'பகவன்' என்னும் வார்த்தைக்கு 'சிவபெருமான்' என்றும், வைணவர், 'நாராயணமூர்த்தி' என்றும், பௌத்தர். "பகவன்; என்னும்வார்த்தை புத்ததேவரைக்குறிக்கின்றது" என்றும்,ஜைநர் அவ்வார்த்தை, 'மகாவீரர் என்னும் ஜைநக்கடவுளைக் குறிக்கிறது' என்றும் பொருள் சொல்லுகிறார்கள்.

இதைப்போன்றே, "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார். நிலமிசைநீடுவாழ்வார்", என்னும் திருக்குறளிலுள்ள 'மலர்மிசை ஏகினான்' என்னும் சொற்றொடருக்குப் பல சமயத்தவர்கள் தங்கள் தங்களுக்கிசைந்த பொருள்களைச் சொல்லுகிறார்கள்" என்று மிகவிரிவாகப் பேசினார்" என்னும் விஷயங்கள் விளக்கப்பட்டுள்ளன:

திராவிடன் 1922-வருஷம் செப்டம்பர்மீ 22உ பத்திரிகையில், "திருவள்ளுவனார் சமயம் யாது?" என்ற வியாசமொன்று வெளிவந்திருக்கின்றது; அதில்.

'ஆசிரியர் திருவள்ளுவனார் சமயம் யாது? என்னும் பெரும்பொருளை எடுத்துக்கொண்டு சுவாமி உருத்திரகோடீஸ்வரர் அவர்கள் நிகழ்த்திய இரண்டு சொற்பொழிவுகளின்மீது சட்ட கலாசாலைப் பேராசிரியர் திருவாளர். கா. சுப்பிரமணியம்பிள்ளை அவர்கள் எம். ஏ. எம். எல். தம்கருத்தை வெளியிடுங்கால் நிகழ்த்திய சிறந்த சொற்பொழிவின் சுருக்கமாகும். அதாவது:—

"திருவள்ளுவனார் சமயத்தைப்பற்றி ஆராயுமிடத்து ஒவ்வொரு சமயத்தாரும் அவர் தம்தம் சமயத்தினராய் இருந்தால் நல்லது என்று நினைத்தல் நன்றாகமாட்டாது; 'திருவள்ளுவனார் சமயம் எது?' என்பதனைச் சுவாமி உருத்திர கோடீஸ்வரர் அவர்கள் மிக விரிவாக ஆராய்ந்து, 'அவர் சமரசக் கொள்கையினர். என்று விளக்கினார்கள். அது உண்மையே; அவர் எல்லாச் சமயத்தார்களுக்கும் பொதுவாகவே திருக்குறள் நூல் செய்தனர்; அவ்வச்சமயக்கருத்துக்களையும் தழீஇயினர்; தம் நூலின் கண் யாண்டும் தம் சமயம் இன்னதென்று தெளிவுபடக் கூறினாரிலர்' ஆனால் அவர் தம் குறிப்புரைகளாற்றான் அவர் உண்மையில் இன்ன சமயத்தைச் சார்ந்தவராக இருக்கலாமென்று நாம் ஊகஞ் செய்தலாகும்; திருக்குறளின்கண் எடுத்தாளப் பெற்றுள்ள சமயச் சொற்கள் சில பலவற்றைக்கண்டு அவர் இன்ன சமயத்தினர் என்று துணிதல் இழுக்காகும்.

'ஆதிபகவான்', 'மலர்மிசைஏகினான்' என்பவைகளைப் போன்ற பௌத்த ஜைநக்கடவுளர்களைக் குறிக்கும் பெயர்கள், திருக்குறளில் இருப்பனபோல சீவகசிந்தாமணியில், 'சிவகதி' என்னும் சொற்றொடர் காணப்படுகின்றது; அங்கு அதற்கு, 'சிவபதவி' என்று பொருள் உரைத்தலாகுமா? அது போலவே, திருவள்ளுவனார் ஆண்ட சில சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும் பௌத்த ஜைநச்சமயப் பொருள்களைக் கொள்வது நேரிதாகாது.

ஆசிரியர்க்குப் பிற்காலத்தில் நம் தமிழகத்தில் நடைபெற்ற சமயங்கள் இன்னின்னவென்பது மணிமேகலை, நூலினால்

விளங்கும். ஆசிரியர் காலத்துக்கு முன் இருந்தசமயம் யாதுஎன்று நாம் ஆராயுங்கால் 'தொல்காப்பியம்' என்னும் மிகப்பழைய தமிழ் இலக்கணத்தின்கண் குறிப்பிடப்பட்டுள்ள கந்தழியாங் கடவுள் வழிபாட்டுச்சமயம் என்பது புலப்படும். அவ்விலக்கண நூலில் கூறப்பட்ட கடவுளின் இலக்கணம், உயிரின் இலக்கணம், உடம்பின் இலக்கணம் முதலானவைகளையே திருவள்ளுவனார் உடன்பட்டனர் என்பது அவர்தம் திருக்குறள் நூலால் நன்கு விளங்கும்.

அவர் பிற்காலத்து இராமாநுஜ மதத்திற்குமேல் சென்றனர்; 'உயிரின் இன்பதுன்ப நுகர்ச்சிகளுக்கு வினைகாரணம்' என்பது ஸ்ரீ வைஷ்ணவசமயக் கொள்கை; திருவள்ளுவனார், 'வினைக்குக் காரணம் அவாவும், அதற்குக் காரணம் அறியாமையும்,' என்று காட்டினர்; அவர் கடவுள், உயிர், வினை, மறுபிறப்பு முதலானவைகளைப்பற்றித் தம் நூலில் ஆங்காங்கு எடுத்துக் காட்டினர்; 'உயிர் தன் அறியாமையினின்று நீங்கி, அவாவறுத்து, எங்கும் நிறைந்து நிற்கும் இறைவன் அடியை அடைந்து முத்தி பெறல் வேண்டும் என்னும் சைவசித்தாந்த முத்தி நிலையை உபதேசித்தருளினர்.

நடுநிலை நின்ற எல்லாச்சமயத்தார்க்கும் பொதுவாகப்பெருஞ்சொற்கள் பொழிந்த உருத்திர கோடீஸ்வரஸ்வாமிகளும், 'திருவள்ளுவனார் கருத்துக்கள் பிற்காலத்தில் தோன்றிய சங்கரமதத்திற்கு ஒத்தில்லை' என்றும், 'அவர் உயிரைப்பற்றிக் கூறியவைகளெல்லாம் சுத்தாத்வைத சைவசித்தாந்த சமயத்தில் உயிரைப் பற்றிக் கூறப்பட்டுள்ள இலக்கணங்களோடு முழுவதும் ஒத்திருக்கின்றன' வென்றும் எடுத்துக்காட்டினார்கள்.

அது சைவசமயச்சார்பாக உள்ள எனக்கு ஒரு ஆதாரமாகின்றது; ஆகையினாலே, பிற்காலத்தில் சைவசித்தாந்தம் என வழங்கப்பெற்றதும், தொல்காப்பியத்தில் குறிப்பிட்டதுமாகிய பண்டைத் தமிழர் சமயமே திருவள்ளுவனார் சமயம் என்பது என் கருத்தாகும்'' என்பதே.

திராவிடன் 1922-ஆம் வருஷம் அக்டோபர்மாதம் 4உ பத்திரிகையில் ஸ்ரீ சித்தார்த்த புத்தகசாலையார் எழுதியுள்ள

வியாச, மொன்று வெளிவந்திருக்கிறது அதன் சுருக்கமாவது. "கலியுகத்தின் தொடக்கத்திலிருந்தவ ரென்று வைணவர் களால் கூறப்படுகின்ற நம்மாழ்வாரியற்றிய திருவாய்மொழியிலுள்ள,

'ஊரவர் கவ்வை யெருவிட்டன்னை சொன்னீர்படுத்து
ஈர நெல்வித்து முளைத்த நெஞ்சப் பெருஞ்செயுள்'

என்ற பாசுரக் கருத்தை,

'ஊரவர் கவ்வை யெருவாக வன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்'

என்ற திருக்குறளின் கண்ணும்,

'கண்கேட்டுற்று மோந் துண்டுழலு மைங்கருவி

என்னும் திருவாய் மொழியிலுள்ளதை,

'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலன்...'

என்ற குறளின் கண்ணும்,
துவாபரயுகத்தவர் எனப்படுகின்றதிருமழிசை யாழ்வாரது,

'வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விடையார்த்த
புத்தியுழவன் பழம் புனத்து..'

என்ற பாசுரத்தின் சொற்பொருளை,

'வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்'

என்ற குறளின் கண்ணும் நமதுபுலவர் முறையே அமைத்திருக் கின்றனர்; மேலும் வள்ளுவர், மடியின்மை என்னுமதிகாரத்தில்,

'மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றாஅய தெல்லா மொருங்கு'

என்ற குறளினும், காமத்துப்பாலில்,

‘தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
றாமரைக் கண்ணா னுலகு’

என்ற குறளினும் திருமாலைச் சிறப்பித்துக் கூறியிருக்கின்றனர். இவை யிற்றான் மாத்திரமே நாயனார் வைணவரெனக் கூறலாகும்', என்பதே.

திராவிடன் 1922-௵ அக்டோபர்௴ 14௳ பத்திரிகையில் “திருக்குறள் கடவுள்வாழ்த்து” என்ற வியாசமொன்று வெளிவந் திருக்கின்றது; அதன் சுருக்கமாவது:—

“நவசக்தி; ஆசிரியர் திருவாளர் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் சபைகூடியது. உயர்திரு சுவாமி உருத்திர கோடீஸ்வரர் அவர்கள் திருக்குறளின்கண் முதல் அதி காரமாகிய, ‘கடவுள் வாழ்த்து’ என்பதனைப்பொருளாகக் கொண்டு ஒருபெருஞ் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்; சுவாமிகள் அவ்வதி காரத்தில் முதல் குறளுக்குப் பதவுரை, பொழிப்புரை, கருத் துரை கூறிவிட்டு, அதற்குப் பௌத்தர், ஜைநர், சைவ வைண வத்துவிதிகள், சுத்தாத்துவிதிகள், கேவலாத்துவிதிகள் என்னும் வேதாந்திகள் என்பவர்கள் கூறும் விசேஷ உரைகளை யெல்லாம் மிகவிரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக்காட்டினார்கள்; அவ் வாறே இரண்டாவது மூன்றாவது குறள்களுக்கும் பலவகையான உரைகளையும் உரைத்தார்கள்.

சுவாமிகள் தம்சொற் பொழிவில், ‘ஜைநர்கள் தம் கடவுள் அநாதிசித்தன்’ என்றும், ‘ஒருஜீவன்’ என்றும், ‘அவர் உலகைச் சிருட்டிப்பவர் அல்லர்’ என்றும், ‘உலகம் பரமாணுக்களின் காரி யம்’ என்றும், ‘ஜீவனுக்கு இலக்கணம், உண்டாம் இல்லையாம் உண்டு மில்லையாம் முதலான சப்தபங்கியாயத்தின் பாற்படும், என்றும், ‘இல்லறம் தீவினையின்கண் அடங்கும்’ என்றும், ‘மற்றத் துறவறமே மேம்பாடுடைத்து’ என்றும் கூறுவதனாலும், ஆசிரியர் திருவள்ளுவனாரே, ‘உலகிற்கு முதற்கடவுள் ஒருவர் உளர்’ என வும், ‘அவர் இவ்வுலகை இயற்றியவர்’ எனவும், ‘உயிர் நிலைபேறு டையது’ எனவும், ‘இல்லறம் முன்னும் துறவறம் பின்னும் மேற் கோடலே நன்று’ எனவும் கூறினமையினாலும் திருவள்ளுவனார்

ஜைநசமயத்தினைத்தழுவி ஒழுகியவரல்ல ரென்பது நன்கு வெளிப் படையாமென்று மொழிந்திட்டார்கள்.

அதன்மேல், தலைமை ஏற்றதிருவாளர் திரு. வி. கலியாண சுந்தரமுதலியார் அவர்கள், 'பழைய தமிழருடைய சமயம் ஜைநசம யமேயாம்; திருவள்ளுவனாரும் ஜைநரேயாவர்; அவர்தம் நூலும் ஜைநசார்பான நூலேயாகும்; ஆகவின், சுவாமிகள் திருக்குற ளைப்பொது நூல் என்பதனை நான் உடன்படேன் என்று தம் அபிப் பிராயத்திற்கேற்ற பல பிரமாணங்களை விரிவாகஎடுத்துக் காட்டிப் பேசினார்கள்,'' என்பதே.

ஸ்ரீமான் டி. குப்புசாமி சாஸ்திரியார் எம், எ அவர்கள் தாம் எழுதியிருக்கும், "ஜைநர்களின் முதிர்ச்தஞானம்" என்னும் வியா சத்தில், "குறளை இயற்றியவர் அடைந்திருக்கும் பெரும் புகழை நோக்கி, இந்துக்களில் பல வகுப்பினரும், அவரைத் தம்மதத்தின ரென்று சொல்லுதலுங் கூடும்; ஆனால் அவர் உண்மையாகவே ஜைநசமயத்தினரென்று மறுக்கக் கூடாத அநேக ருஜுக்களால் நிச்சயப்படுத்தலாம்" என்றும், "இந்நூல் அறம், பொருள், இன் பம், வீடு ஆகியவற்றைப் பற்றிப் பொதுவாகவே அமைந்திருக்கிற படியால் பல மதஸ்தர்களாலும் மேற்கோளாக எடுத்தாளப்படுகி றது." என்றும் கூறியுள்ளார்.

இன்னும், திருவாளர் ஆர். பி. சேதுப்பிள்ளை, பி, ஏ, பி, எல், அவர்கள், 'திருவள்ளுவர் நூல் நயம்.' என்ற பெயர் அமைத்து 1923 ம் வருஷத்தில் வெளியிட்ட புத்தகத்தில், 'திரு வள்ளுவர் பெருமை'. 'திருக்குறள் பொதுநூல்'. 'சாதிப்பொது நூல்' என்ற தலைபங்கங்களின் கீழ் எழுதியுள்ளவைகளாவன:—

"தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் பிறந்து வளர்ந்த இடமும், விதமும், அவர் பெற்றோரது குலமும், நலமும், அவர் கற்ற கல்வியும், மற்றையாவும் தெளிவாகத் தெரிய வொண்ணாத புதை பொருளாக விருக்கின்றன. உலகோர் செய்த உயர் தவப் பயனாய்த் தோன்றிய புலவர்பெருமானது உண்மை வரலாறு ஒன்றும் தெளிவாய்த்தெரிய இயலாமை பற்றித்தமிழ் மெய்யன்பர் உள்ளம் பெரிதும் கவல்கின்றது.

சென்னையிலுள்ள திருமயிலையில் நாயனார் பிறந்து வளர்ந்தார் என்பதற்கு அங்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப் பெற்றுள்ள அவரது ஆலயத்தைத்தவிர, வேறு சான்று கிடைப்பது அரிதாயிருக்கின்றது; ஆசிரியரது தாய் தந்தையர் பெயர்கள் 'ஆதிபகவான்' என்னும் சொற்றொடர்கள் ஆசிரியர் நூலின் ஆதிக் குறளில் அமைந்துள்ளதால் அறியப்படுவதல்லாமல் வேறு சான்றுகளால் ஆராய்வதற்கிடமில்லை.

'கல்லாடம்' என்னும் உயரிய நூல் செய்த புலவர் பெருமான் சிவநெறியில் பெரிதும் பற்றுடையவராயிருந்தும் நாயனார் நூலைப் பொது நூலென்றே பாராட்டி மகிழ்ந்தார்; ஆயினும் சைவசமயத்திற் காணப்படும் உயரிய விழுமிய கொள்கைகளும், கருத்துக்களும், திருக்குறளில் காணப்படுகின்றன வென்பதும் உண்மையே யாகும்; 'கடவுள் வாழ்த்து' என்னும் முதல் அதிகாரத்தில் இறைவனை, 'எண் குணத்தான்' என்று நாயனார் கூறுவது சைவசமயக் கருத்தென்று கருதலாகும்; முழுமுதற் பொருளாகிய சிவபெருமானை, 'எட்டுவான் குணத்து ஈசன்' என்று அப்பர் பெருமானும், 'இறைபவனை மறைபவனை எண் குணத்தினனை' என்று சுந்தரப் பெருமானும் தேவாரத்தின் கண்ணே அமைத்தருளினர்.

இவையுமன்றி,

"சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

என்ற தெய்வப்புலவர் குறளைத் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் என்னும் சைவசமய ஆசிரியர், தமது 'திருக்களிற்றுப்படியார்' என்னும் சமயநூலில்,

"சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் என்றமையால்
சார்புணர்வு தானே தியானமுமாம்—சார்பு
கெடஒழுகின் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று".

என்று அமைத்திருக்கின்றமையால் ஆசிரியர்கருத்தும் சைவ சமய நூற்கருத்தும் ஒன்றே யென்பது தெரியலாகும்.

இன்னும் சைவசமயப் பெரியார் ஒருவர்,

“தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என் றுணர்”.

என்று அருளிச்செய்தமையால் திருக்குறள் சைவசமய நூல்களுள் ஒன்றாகக்கருதப்படுதல் தெளிவாக விளங்கும்.

இவ்வாறே வைணவசமயத்தாரும் திருக்குறளைத் தம் சமயச் சார்பான நூலென்று கருதுகின்றார்கள்; ‘தாமரைகண்ணான் உலகு’ என்பதையும், மற்றும் பூவினுறைசெய்வாரைக் குறித்து அமைத்திருக்கின்ற சொற்களையும் ஆதாரவாகக் கொண்டு திருக் குறளைத்தம் சமய நூல் என்பார்.

இன்னும் பௌத்தம், சமணம் முதலிய சமயத்தார்களும் நாயனாரைத் தம்சமயத்தவர் என்று பாராட்டி மகிழ்கின்றனர்; சமணசமயத்தில் ‘கடவுள் பூமேல் நடந்தான்’ என்னும் கருத்துக் காணப்படுகின்ற தென்றும், அக்கருத்தே, ‘மலர்மிசையேகினான்’ என்னும் நாயனார் சொற்றொடரில் விளங்குகின்ற தென்றும் சமண சமயத்தார் கருதுகின்றார்கள்; பௌத்த சமயத்தின் அடிப்படை யான கொள்கைகள் நாயனார் நூலில் அழுத்தமாகக் கூறப்பட்டிருத் தலால், ‘திருக்குறள் பௌத்த சமயச்சார்பாய் எழுந்தநூல்’ என்று கருதுவாருமுளர். பௌத்தசமயம் கூறும் கொள்கையே திருக் குறளில், ‘துறவு’ என்னும் அதிகாரத்தில்.

“தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்”

என்னும் குறளிலும், மற்றைய குறள்களிலும் காணப்படுகின்றது.

திருக்குறள் எல்லாச் சமயங்களுக்கும், எல்லாக் காலங்களுக் கும் எவ்வாறு பொது நூலாய் விளங்குகின்றதோ அவ்வாறே எல்லாச்சாதிகளுக்கும் பொது நூலாய் அமைந்திருக்கின்றது. உண்மையில் ஆசிரியரது உள்ளக்கருத்தை நாம் அறிவோமானால்

சாதி, குலம், பிறப்பென்னும் சுழியிடைப்பட்டுத் தடுமாறுகின்ற தன்மை அவரிடம் இல்லை என்பது வெள்ளிடை மலைபோல் விளங்கும். தொழில் வேற்றுமையால் உலகில் பாகுபாடுகள் காணப்படுமே யல்லாமல் பிறப்புக்காரணமாக ஏற்றமும், தாழ்வும், வேற்றுமையும் இல்லை என்பது ஆசிரியரது அடிப்படையான கருத்தாம்.

> "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்"

என்ற குறளே மேற்கூறிய உண்மைக்குப் போதிய சான்றாகும்' என்பவைகளே.

மதுரைச் செந்தமிழ்ப்பத்திரிகை தொகுதி 24 பகுதி 10-ல் ஸ்ரீமத். ச. சோமசுந்தர பாரதியார், எம். ஏ. பி. எல். அவர்கள் எழுதிய 'திருவள்ளுவர்' என்ற விஷயத்தில், திருவள்ளுவமாலையைப் பற்றிக் கூறுமிடத்து, 'ஒருவர் அல்லது ஒரு சிலரே முன் சாவதான யோசனையுடன் பாடித்தொகுத்த பான்மையினை அப்பாக்களே நிரூபிக்கின்றன'. என்றும், 'வென்றுயர்ந்த வள்ளுவரைப் புகழவந்த சங்கப் புலவரின் பாக்கள் திருக்குறளின் இயல்பும், பெருமையுமட்டும் குறிக்க வேண்டும்; எனினும் அங்ஙனம் குறிக்கவில்லை, திருவள்ளுவமாலைச் செய்யுட்களையுற்று நோக்குவார்க்கவைத்திருத்தமாகப் பொருத்தங்காட்டும் குறிப்புடன் எண்ணித் துணிந்து பாடி வைத்தப் பாட்டுக்களென்பது விளக்கமாகும். மேலும் கதையின்படி பங்கமுற்ற சங்கப்புலவர் குறையிரக்கியற்றின தனிப்பாக்கள் குறளுக்குச் சிறப்புப் பாயிரமாமாறில்லை; சங்கத்தார், வள்ளுவர்க்கு, தன்னாசிரியர், தன்னொடு கற்றோர், தன் மாணாக்கர், தகுமுரைகாரர் என்றின்னோர் வகையில் யாருமாகாமையானும், திருவள்ளுவ மாலை குறணூலின் சிறப்புப் பாயிரமென வழங்கப்பெறுதலானும் அதனைச் சங்கப்புலவர் செய்தனரென்னுங் கொள்கை உறுதி பெறுமாறில்லை. என்றும் கூறியுள்ளார்.

சுதேசமித்திரன் 1922 வருஷம் செப்டம்பர் மீ 5உ பத்திரிகையில், 'திருவள்ளுவர் திருக்குறள் கழகம்' என்ற விஷயமொன்று வெளிவந்துளது; அதன் சங்கிரகமாவது:—

"ஸ்ரீமான் கடயம் சங்கர...ராயர், அவைத்தலைமையின்கீழ் கூட்டம் ஒன்று கூடிற்று; அதில் சுவாமி உருத்திர கோடீஸ்வரர் திருக்குறள் பெருமையைப்பற்றிச் சிறிதுபேசிப் பின்னர்த் திருவள்ளுவமாலை, பரிமேலழகர் உரை, இவற்றின் ஆராய்ச்சி விஷயங்களை விளக்கினார்; அவற்றுள் திருவள்ளுவ மாலையைப்பற்றிப் பேசியபோது திருவள்ளுவ மாலையில் 50-பாட்டுக்கள் காணப்படுகின்றன வென்றும், அவற்றைப்பாடிய பாவலர்கள் எல்லோரும் திருவள்ளுவர் காலத்திலேயே ஒருங்கு வசித்திருந்தனர் என்பது சாதாரணமாகப்பலரால் கருதப்படுகிறதென்றும், ஆனால் பதின்மர் அல்லது பன்னிருவர் தவிர ஏனையோர் திருவள்ளுவருக்குப் பிற்காலத்தினர் என்றும், ஓரோர் காலத்திலிருந்த புலவர்கள் பாடிய பாட்டுக்களை யெல்லாம் பின்னர் எவரோ ஒருவர் தொகுத்திடுவாராயினர் என்றும், அன்றியும் அப்பாட்டுக்களெல்லாம் யாரோ ஒருவரால் பாடப்பட்டிருக்கலாம் என்று ஊகிப்பாரும் உளர் என்றும் மேலும் அப்பாட்டுக்களெல்லாம் பண்டைப்பாட்டுகளின் நடையிலிருந்து வேறுபட்டிருக்கின்றன வென்றும், ஒரேவிதமான கருத்துக்கள் பலபாட்டுக்களில் வந்துள்ளன என்றும் சொன்னார்.

இவையன்றி இப்போது அச்சில் வெளிவந்துள்ள மணக்குடவர் உரைக்கும், பரிமேலழகர் உரைக்கும் உள்ள வேறுபாடுகளும், அவ்விரு உரைகளில் குறட்பாக்களின் வரிசைகள் இயல் முறைகள் பிறழ்ந்திருக்கின்றமையும், நிலையாமை என்னும் அதிகாரத்தில் குடம்பை என்னும் சொல்லுக்குப் பண்டைப்புலவர்களெல்லாம் கூடு என்று உரைகூறியிருக்க, பரிமேலழகர் மட்டும் முட்டை யென்று பொருள் செய்தமை விவாதத்திற்கு இடமாக இருக்கின்றமையும் எடுத்துக் கூறப்பட்டன" என்பதே.

மேற் கூறியுள்ள பண்டிதர்களின் அபிப்பிராயங்களுக்குச் சமாதானம் கூறுவாம்,

1-வது, ஸ்ரீமான் சாத்தூர் விஸ்வநாத பாரதியார் அவர்கள் வள்ளுவரை இந்து சமயத்தினரல்லர் என்பதற்குரிய சாதனங்களை எடுத்துக்காட்டி, 'பௌத்த ஜைநமதத்தின ரென்போம்' என்று கூறியுள்ளார். எனினும் இவ்விருமதங்களில் ஒன்றை ஸ்திரமாகச் சொல்லவியலாமல் தம்முடைய முடிவைச் சந்தேகத்தில் வைத்திருக்கிறார். ஆதலின் நாம் அவ்விரண்டிலொன்றை ஸ்தாபிப்பாம்.

புத்தர் கொல்லாமையை உபதேசித்தாரெனினும் கொன்று தந்த மாமிசத்தைவாங்கி புசிக்கலாமென்று கூறிப்போந்தார். திருக்குறள் ஆசிரியரோ,

"தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்ற ருவாரில்"

என்று பௌத்த சமயக் கொள்கையைக் கண்டித்தும்

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்"

என்னும் குறளால் ஜைநசமய கொள்கையை விளக்கி யிருக்கின்றார். கொல்லாமையும், புலானுண்ணாமையும் ஜைநசமயக் கொள்கைகளாம், இவற்றை யனுசரித்தே திருத்தக்க தேவரும் சீவகசிந்தாமணி 1236 ம் கவியினடியில்,

"இறைவனூற் காட்சி கொல்லா வொழுக்கமூன் றுறந்தல் [கண்டாய்"

என்று கூறியிருக்கின்றார்; இவற்றை ஆராயுமிடத்து வள்ளுவர் ஜைநர் என்பது உறுதியாகச்சொல்லக்கூடும்

2-வது, ஸ்ரீமான் வீரராகவ ஐய்யர் அவர்கள், 'மலர்மிசையேகினான்' 'அவி சொரிந்தாயிரம் வேட்டலின்' என்ற இரண்டு குறட்பாக்களின் கருத்துக்கள் ஜைந மதக்கொள்கையைச் சேர்ந்தவையென்றும், 'தேவர்' என்கிறபட்டம் ஜைநர்களுக்குரிய தென்றும் வள்ளுவர் தம்மவர் என்றும் ஜைநர் சொல்லுவர்; சைவ வைணவர் வள்ளுவரைத் தம்மவர் என்று கூறு நிற்பர்; ஆதலின், திருக்குறளை ஜைநநூலென்று சொல்லவியலாதென்று கூறியிருக்கின்றார். இங்ஙனம் இவர் நாயனாரை இன்ன சமயத்தினரென்று தீர்மானங் கூறாமலும், திருக்குறள் ஜைநநூலல்ல வென்பதற்குத் தகுதியான காரணம் சொல்லாமலும், திருக்குறள் ஜைநநூலென்று சொல்லவியலாது, என்பது முற்றிலும் தவறேயாம். திருக்குறள் ஜைந நூலென்பதற்கு அய்யரவர்கள் எடுத்துக் காட்டிய இரண்டு குறட்பாக்களே போதுமான சான்றாகும். இன்னும் இப்புத்தகத்திலும் இனிவரும் பாகங்களிலும் உள்ள உதாரணங்களாலும்திருக்குறள் ஜைநசமயவேதம் என்பதை நன்கு அறிதல் கூடும்.

3-வது, ஸ்ரீமான் எம். எஸ், இராமசாமி ஐயங்கார் அவர்கள், "வள்ளுவர் இந்து தெய்வங்களை வணங்காதிருத்தலும், அவர், 'மலர்மிசையேகினான்', 'எண்குணத்தான்' என்று கடவுளைக் குறிப்பிடுதலும் அவர் ஜைநர் என்று கூறுவதற்குப் போதுமான ஆதாரங்களென்று கருதப்படுகின்றன; நீலகேசி உரையில் சமய திவாகர மாமுனிவர் திருக்குறளைக் குறிப்பிடும் பொழுதெல்லாம், அதை, 'எம்மோத்தாதலால்' (எங்களுடைய வேதம் ஆகையினால்) என்று எழுதியிருப்பதைக் கொண்டும் அது துணியப்படும்என்று கூறியுள்ளார். ஆகையால், சமய திவாகரமாமுனிவர் நீலகேசியில் குறிப்பிட்டுள்ள குறள்களில் ஒன்றை இங்கு எடுத்துக்காட்டுவாம்

நீலகேசி மொக்கலவாத சருக்கம் கவி 324ல்,
"உய்யக் கொள்வனென.........பொருந்துமே"

என்னும் செய்யுளுக்கு, உரையாசிரியர் செய்த தெருட்டுரையில்,

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்பது எம்மோத்தாதலாற் (ப்ராணி வீடா நிவ்ருத்யுபகாரம்) பிராணி பீடாநிவர்த்யர்த்தமாகப் பொய்யுரைத்த லுமாவதாதலின் என்பது. நன்மை வேண்டிப்பொய் சொல்வதாயின் நன்மை வேண்டிக் கொலைமுதலாயினவு மாமோவெனில், நன்மையாவது ஜீவன்கட்குப் பீடைபுகுதாமல் வர்த்தித்தலாதலின் கொலைமுதலாயினஜீவன்கட்குப் பீடாநிமித்த மாதலின் ஆகாதென்பது. காமமாடுதலும் மெருஜீவாஈதபென்பது எம்மோத்தினுட்கண்டு கொள்க" என்றெழுதி யிருக்கின்றார்.

ஆதலின், சமய திவாகர மாமுனிவர், திருக்குறளை 'எம்மோத்தாதலால்'என்று கூறுவதாலும், பிறஉதாரணங்களால் திருக்குறள் தம்முடைய தென்பதைக் காட்டுவதாலும் 'வள்ளுவர் ஜைநர் என்பதை உறுதிப்படுத்துதற்கு அய்யங்காரவர்கள் குறிப்பிட்டுள்ள இரண்டு குறட்பாக்களாலும், இன்னும் இப்புத்தகத்தில் காட்டப்பட்டுள்ள மேற்கோள்களாலும் ஸ்ரீமான்-இராமசாமி அய்யங்கார் அவர்கள் திருக்குறள் ஆசிரியர் ஜைநரென்று சொல்வது சரியென ஒப்புக்கொள்ளத்தக்கதே.

4-வது, ஸ்ரீமான். ஸி. ஹயவதனராவ் அவர்கள், "வள்ளுவர் ஓர் எளியபறையன் வீட்டில் பிறந்தார்; அவருடைய மனப்போக்கு ஜைநப் போக்காக விருக்கின்றது; அவர் இயற்றியநூல் திருக்குறள்" என்று கூறுவதனால், 'திருக்குறள் ஜைநசமயநூல், என்பதே அவருடைய கருத்தென்பது நன்குபுலனாகின்றது. ஆனால், ராவ் அவர்கள், 'ஆசிரியர் ஓர் எளிய பறையன் வீட்டில் பிறந்தார்' என்பது ஒவ்வாததாயிருக்கின்றது; திருக்குறள் ஜைநசமய நூலென்பது மட்டும் ஒப்புக் கொள்ளத் தக்கது.

5-வது, ஸ்ரீமான் கா. பரமசிவன் அவர்கள் எழுதியிருப்பது போல விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர்முதலானவர்களால் திருக்குறளாசிரியரைப்பற்றி எழுதியிருப்பவைகளும் அதாவது, திருவள்ளுவரோடு-7-பிள்ளைகள் பிறந்ததாகவும், அந்த, ஏழுபிள்ளைகளும், பூமியிற், பிறந்தவுடன், ஒவ்வொரு, வெண்பாக்களைப் பாடினவென்று, இவர் பக்கத்தில், ஓலையும், எழுத்தாணியும் வைத்து, எழுதினவரைப் போல், ஏழுபாக்களைப்பாடி, குறளோடு சேர்த்து விட்டார், என்பது முதலான செய்திகள், நூதனமாகக்கற்பிக்கப்பட்ட கட்டுக் கதைகளென்பதை யாவரும் உறுதியாக நம்பக்கூடும் என்பது எமது கருத்தாகும்.

திருவள்ளுவரைப் பற்றிய பொய்க்கதைகளில் இன்னமொரு புளுகும் உள்ளது. அதாவது, திருவள்ளுவர் திருமேனியிற் சிறிய மாமிசங்களைக் காகமுதலானவைகள் புசித்துப்பொன்மயமாயின வென்றும், சிலர் அதைக்கண்டு பெரிதான ஆச்சரியமடைந்த, அவர் திருமேனியிருந்த விடத்தில் ஆலயம் எடுப்பித்து அவரைப் பூசித்து வந்தார்கள் என்றும் ஒரு பொய் வாலாறு எழுதப்பட்டிருக்கிறது.

இதுபோலிக்கதை. இது மெய்யாயிருக்குமானால் திருவள்ளுவனாரின் குறள் நிலைபெற்றிருப்பதுபோல அந்தப் பொன்மயமான காகமுதலானவைகளும் இக்காலத்திலும் இருக்கவேண்டும்; அஃதில்லை; ஆதலின், திருவள்ளுவர் சம்பந்தமான இக்கதையைப் பற்றி நம்மவர்கள் பொய்க்கதை யெனவே நிச்சயிக்க வேண்டிய தவசியமாயிருக்கிறது.

௬-வது, உயர்திரு உருத்திர கோடீஸ்வர ஸ்வாமிகள், "திருவள்ளுவர் இன்ன சமயத்தைச் சார்ந்தவர் என்பதைப்பற்றி அவர் யாண்டும் குறிப்பிடவில்லை" என்றார். இது சரியானகருத்தன்று. ஏனெனின் நூல் இயற்றுமவர், நூலின் தலைப்பில் கூறும் கடவுள் வணக்கத்தாலும், அந்நூலின் கருத்துக்களாலும் தாம் இன்ன சமயத்தைச் சார்ந்தவர் என்பதை விளக்குவார்களே யன்றித் தாம் இயற்றும் நூல்களில் தமது சமயத்தை வெளிப்படையாகக் குறிப்பிடமாட்டார்கள்.

ஆகையால் திருக்குறளின் கடவுள் வாழ்த்து அந்நூல்களிலுள்ளக்கருத்துக்கள் முதலானவைகளைக் கொண்டே திருவள்ளுவரின் உண்மைச் சமயத்தை அறிய வேண்டும். திருக்குறளின் கடவுள் வாழ்த்து முதலியவைகளிலுள்ள பெயர்களைக் கொண்டே திருக்குறளாசிரியரின் மதம் இன்னதென்பது துணியப்படும். அப்பெயர்கள் திவாகரம், பிங்கலந்தை, சூடாமணிநிகண்டு முதலானவைகளில் எந்தக் கடவுளுக்குச் சொல்லப்பட்டிருக்கின்றனவென்பதையும், எந்தெந்தக் கடவுளுககு எந்தெந்த நாமங்கள் வரையறுத்துக் கூறப்பட்டிருக்கின்றனவென்பதையும், திருக்குறளிலுள்ள கடவுளின் பெயர்கள் பல இலக்கியங்களிலும் எந்தச் சமயத்தினர்குரியனவாக வழங்கப்பட்டு வந்திருக்கின்றனவென்பதையும் நன்கு ஆராய்ந்தால் ஆசிரியர் சமயம் இன்னதென்பது விளங்கி விடும்; அங்ஙனம் ஆராயாமல் சமயச் சார்பாக உரைசெய்த பரிமேலழகர் உரையைக் கொண்டு சுவாமிகள், "திருவள்ளுவனார் தமது சமயத்தை யாண்டும் குறிப்பிடவில்லை" என்று சொல்வது தகுதியன்று.

ஆயினும் உருத்திரகோடீஸ்வரசுவாமிகள் கூறியுள்ளவற்றில் நாம் ஒப்புக்கொள்ளக்கூடியது ஒன்றுள்ளது. அதாவது, திருவள்ளுவர் அருளிச்செய்த திருக்குறள்களின்பாக்கள் ஒன்றேனும் அவர்எம்மதத்தைச் சார்ந்தவர் என்பதை வெளிப்படையாகக்காட்டவில்லை. என்றும் "சமயவாதிகளெல்லோரும் தாங்கள் மேற்கோள்களாகக் காட்டும் திருக்குறட்செய்யுட்களுக்குப்பொருள் செய்யும்போது தங்கள் தங்கள் சமயக்கொள்கைகளையெல்லாம் வலிதில் அதில் பொருத்திப் பொருள்படுத்துகிறார்களேயன்றி, திருக்குறளின்நேரானபொருளினின்றும் தத்தம் கொள்கைகளை எடுத்துக்காட்டுகிறார்களில்லை"

என்றும் கூறியுள்ளார். இது மட்டும் சரியான தேயாம். இப்படிப் பலர்பலவித அபிப்பிராய பேதங்களைக் கூறியபோதிலும், திருக்குறள் இன்னசமயத்தைச் சார்ந்த தென்பதை விளக்குதற்குப் போதிய ஆதாரங்களிருக்கின்றன; அவற்றைக்கொண்டு ஆராய்ந்தால் அது ஜைநசமயச்சார்பானதென்பதை நன்குணாலாம்

அவற்றில் சிலவற்றை எடுத்துக் காட்டுவாம்.
உமாசுவாமி வடமொழியில்

"சம்யக் தரிசன ஞான சாரித்ராணி மோக்ஷமார்க்கஃ"

"என்று தத்வார்த்த சூத்ரம் 1-வது அத்யாயம் 1-வது சூத்ரத்தில் கூறுகின்றார்.

(இ - ள்.) ',சம்யக்தரிசனம்—நற்காட்சி; சம்யக்ஞானம்—நன்ஞானம்—சம்யக்சாரித்ராணி—நல்லொழுக்கம். ஆகிய இவைகள், மோக்ஷமார்க்க:—மோக்ஷத்திற்கு வழிகளாகும்,' என்பதாம். இந்த நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் மூன்றும் இரத்தினத்திரய மென்று சொல்லப்படும்.

ஜைநசமயத்தில் மோக்ஷமார்க்கத்தை நக்கூறப்பட்டிருக்கும்இந்த இரத்தினத்ரயங்களின் பலன்களைத் திருவள்ளுவர் மூன்று குறட்பாக்களால் மெய்யுணர்வில் விளக்கி யிருக்கின்றார். அவைகளாவன:—

+ "இருணீங்கி இன்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு".

+ "ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து".

+"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்".

என்பனவாம். 'சார்புணர்ந்து என்பது நற்காட்சி நன்ஞானம் . இவ்விரண்டும் உணர்வதாம்.

+ + + இம்மூன்று குறட்பாக்கள் முதலாக மெய்யுணர்விலுள்ள 10-குறட்பாக்களுக்கும் பரிமேலழகர் செய்தவுரை பொருத்த மற்றதென்பதும் இதன் உண்மைக்கருத்துக்களும் இரண்டாம் பாகத்தில்வரும் ஆங்கு கண்டு கொள்க.

இம்மூன்று குறட்பாக்களில் சொல்லப்பட்டிருப்பவை: நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் என்பனவாம். இவைகள் ஜைநசமய மோக்ஷமார்க்கத்தின் தத்துவங்களுக்கு நேரானகருத்துள்ள வெளிப்படையான குறட்பாக்கள். இவை உருத்திரகோடீஸ்வர சுவாமிகளின் சந்தேகத்தைத் தெளிவாக்கும்.

இதனை திருத்தக்க தேவரும்,

"உள்பொரு ளிதுவென வுணர்தன் ஞானமாந்
தெள்ளிதி னப்பொரு டெளிதல் காட்சியாம்
விள்வற * விருமையும் விளங்கத் தன்னுளே
யொள்ளிதிற் றரித்தலே யொழுக்க மென்பவே."

என்று சீவகசிந்தாமணி 2845 ஆம் கவியில் கூறுகின்றார்,

இன்னும் மேற்கூறிய சுவாமிகள், "பகவன்" என்னும் வார்த்தைக்குச்சைவர், 'சிவபெருமா' னென்றும், வைணவர், 'நாராயண மூர்த்தி' யென்றும், பௌத்தர், 'புத்த தேவர்' என்றும், ஜைநர் 'மகாவீர' ரென்றும் பொருள் சொல்லுகிறார்கள்" என்றார். இவர் சொல்லியவற்றில் '(ஆதி)பகவன்' என்னும் வார்த்தைக்கு ஜைநரல்லாதசிலர்தாம் மகாவீரர் என்ற பொருள் சொல்வார்கள் ஜைநர்கள் அவ்வாறு கூறமாட்டார்கள். ஏனெனின் மகாவீரர் பகவானாகவிருப்பினும் இவருக்குமுற்பட்ட இருபத்து மூன்று தீர்த்தங்கரருள் முதல்வராகிய விருஷப தேவரையே ஜைநர்கள், 'ஆதிபகவன்' என்று கூறுவார்கள். அந்த ஜைநர் கொள்கைப்படியே திருக்குறளாசிரியர் விருஷபதேவரை 'ஆதிபகவான்' என விளக்கிக்காட்டியுள்ளார். இக்கருத்தை அறியாதவர்களே அதற்கு மகா வீரர் என்று பொருள் கூறுவார்கள்; அது பொருத்தமன்று. பகவன் என்னும் சொல்லை மண்டலபுருடர், "பகவனே யீசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்; என்று ஐந்து தேவருக்கு முரியதாகக் கூறியுள்ளார். இதைக் கொண்டு பகவன் என்னும் வார்த்தை மேல்கண்ட ஐந்து தேவரையும் குறிப்பிடுமெனினும்—பகவன் என்னும் வார்த்தை ஸ்ரீ ஆதிதீர்த்தங்கரராகிய அருகக் கடவுளுக்கே பொருத்த மென்பது துணியப்படும்.

---

* இருமையும் விளங்க என்பது. நற்காட்சி, நன்ஞானமுமாம் இவ்விரண்டையும் குறளாசிரியர் சார்புணர்ந்து என்றார்.

இந்தப் பெயரைப் பலரும் தங்கள் தங்கள் தெய்வங்களுக் கமைத்துக் கொண்டாலும் அதனுல் அவர்களுடைய தெய்வங் களுக்குச் சிறப்புண்டாகி விடமாட்டாது; அப்பெயர்க்குத் தகுந்த குணங்கள் அத்தேவர்க்கு இருந்தால் மாத்திரமே சிறப்புண்டாகும். அவர்க்கு அப்பெயரும் தகும்; அவர்க்கு அத்தகைய குணங்கள் இல்லையென்பதையும், அருகக் கடவுளுக்கே உண்டென்பதையும் அவர்க்கே அப்பெயர் தகுமென்பதையும், "தனக்குவமையில்லா தான் ருள்சேர்ந்தார்க்கல்லால்" என்ற குறட்பாவைப்பற்றி இப்புத் தகத்தில் 100வது பக்கம் முதல் 114வது பக்கம் வரையில் எழுதிய விஷயங்களால் தெளிவாகக் காட்டியிருக்கின்ருேம். அவற்ருல் இதன் விவரமுணரலாம் எனினும் இங்கும் அதைப்பற்றிய சிலவிஷ யங்களைக் கூறி அதை உறுதிப் படுத்துவாம்.

'பகவன்' என்ற நாமம் ஸ்ரீ ஆதிதீர்த்தங்கரருக்கே பொருத்த மானதாக விருக்கிறது.

'பக' சப்தத்திற்கு அமரகோசம் திரிதிய காண்டத்தில்,

பக: ஸ்ரீகாம மாஹாத்ம்ய வீர்ய யத்நார்க கீர்த்திஷு

என்று 183 ஆம் சுலோகம்-1வது சரணத்தில் கூறியிருக்கின்றது.

(இ-ள்.) ஐஸ்வரியம், ஆசை, மாகாத்மியம், வீரியம், யத்நம், சூரி யன், கீர்த்தி, முதலானவைகளுக்குப்பெயர் என்பதாம்.

இன்னும் 'பக' சப்தத்திற்கு விஸ்வலோசன கோசத்திலும், முக்தா வலி கோசத்திலும்,

"பகம் ஜ்ஞாந யோநீச்சா யசோ மாஹாத்ம்ய மோக்ஷேஷு
ஐச்வர்ய வீர்ய வைராக்ய தர்ம ஸ்ரீ ரத்ந பாநுஷு"

என்று கூறியிருக்கின்றது.

(இ-ள்.) ஞானம், முனி, ஆசை, யசஸ், மாஹாத்மியம், மோக்ஷம், ஐஸ்வரியம், வீரியம், வைராக்கியம், தர்மம், ஸ்ரீ, ரத்னம், சூரியன் முத லானவைகளுக்குப் பெயர் என்பதாம்.

இவ்வாறு பல அர்த்தங்களைச் சொல்லியிருக்கிருர்கள். இவற்றின் படி 'பக' என்பதற்கு, 'ஞானம்' என்பது பொருளாம். அதனடி

4

யாக உண்டான 'பகவன்' என்பதற்கு 'ஞான முள்ளவ' னென்று அர்த்தமாகிறது. எனினும் சாமானியமாக ஒருவனுக்கு ஞான மிருப்பதினாலேயே அவனைப் 'பகவ'னென்று சொல்லிவிட முடியாது. அப்படிச் சொல்லப் புகுந்த ஞானமுள்ள எல்லாஜீவன்களையுமே 'பகவன்' என்று சொல்ல வேண்டும், அவ்வாறு கொள்ளுதல் கூடாது.

ஆதலின், 'பகவன்' என்ற நாமதேயத்தை, இதர ஜீவன்களைக்காட்டிலும் விசேஷ ஞானமுள்ள சர்வக்ஞ பரமாத்மனுக்குப் பெரியோர்கள் உபயோகித்திருக்கிறார்கள். ஸ்ரீ ஆதீஸ்வரஸ்வாமி சர்வக்ஞனாக விருப்பதால், 'பகவன்' என்ற பெயர் அந்த ஸ்வாமிக்குப் பொருத்தமானதாக விருக்கிறது.

பக்ஷபாதமில்லாமல் நாம் உண்மையை விளக்கும் உயர்ந்த பல சாஸ்திரங்களையும் ஆராய்ந்து பார்ப்போமானால், ராக, த்வேஷ, மோக, (காமம்-வெகுளி-மயக்கம்) ஜன்ம, மரண முதலான தோஷங்களுக்கு ஆதீனனாகிய ஜீவன் ஒரு போதும் சர்வக்ஞனாக இருக்க முடியாதென்பது நமக்கு விளக்கமாகத் தெரியவரும். அங்ஙனமிருக்கமயக்க சாஸ்திரங்கள் மேற்சொன்ன ராக த்வேஷ மோக முதலான விகாரங்களுள்ள ஜீவன்களைக் கூட சர்வக்ஞனென்று சொல்லுகின்றன; ஆனால், தத்துவ போதமுள்ள ஞானிகள் இதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆகையால் ராக த்வேஷ மோக முதலான விகாரங்களினின்று சம்பூர்ணமாக நீங்கியிருக்கிற பரமாத்மனே சர்வக்ஞனவன். அதாவது, 'பகவன்' என்ற திருநாமத்திற்குரியவனாவன்.

ஸ்ரீ ஆதிதீர்த்தங்கரஸ்வாமி மேற்சொன்ன சகல விகாரங்களினின்றும் நீங்கியிருப்பவனென்பதும், அதனால் சர்வக்ஞனென்பதும் ஜைநசமய சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்தால் நன்குவிளங்கும். இந்த நியாயம்பற்றி ஆதிநாத ஸ்வாமியையே 'பகவன்' என்று திருக்குறள் ஆசிரியர் கூறியிருக்கின்றார்.

இனி 'பக' சப்தத்திற்கு யஸஸ் என்ற மற்றொரு அர்த்தமிருப்பதால்; இதன்படி, 'பகவன்' என்பதற்கு, 'யஸஸ்ஸுடையவன், என்று அர்த்தமாகும்; ஆதலின், இப்பெயர் மூன்று லோகங்

களிலேயும் வியாபித்திருக்கும் 'யஸஸ்'ஸை அடைந்தவராகிய ஸ்ரீ ஆதீஸ்வரஸ்வாமிக்கே தகும்.

ஸ்ரீ ஆதிபகவான், லோகோத்தாரணத்துக்காகச் சமவசரண விராஜமானராக விருந்தபோது, மூவுலகங்களிலுமுள்ள பவ்விய பிராணிகள் அந்தச்சமவசரணத்துக்குவந்து, பூர்ணசந்திரமண்டலத்தைத் தாராகணங்கள் சுற்றியிருப்பதைப்போல் சுவாமியைச் சுற்றிலும் பக்திவணக்கத்தோடு சூழ்ந்து அவரது தர்மோபதேசமென்னும் அமிர்தபானத்தைச் செய்து* அஜராமரத்வத்தை அகற்றக்கூடிய ஒழுக்கத்தை சம்பாதித்துத் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிப்போய் ஆங்காங்குப்பகவர்தனது'யஸஸ்ஸை'க் கொண்டாடினார்கள். ஆகையால் ஆதிபகவானது திவ்ய 'யஸஸ்' மூவுலகங்களிலும் வியாபித்தது. இப்படி லோகோத்தர 'யஸஸ்ஸை' அடைந்த ஆதீஸ்வர ஸ்வாமியானவர் 'பகவன்' என்று மஹரிஷிகளால் ஸ்துதிக்கப்பட்டிருக்கிறார்.

மேற்கூறியபடி பலரும் பகவானைச்சூழ்ந்து . கொண்டாடினார்களென்பதை,

"நிஷண்ணாய ஸூவநிதா வ்ரதிகா மெளநீ
நாமஸ்த்ரியோ ஜவந மௌநீஜ ஸுஜ டைவா:||
கொஷ்ஷ்டிதா நரவஹரீவ நரோதி யக்ஷெஷு
தக்ஷெஷநீ ஸ்திஷுவந பூஜவெ ஜிநாய"

என்னும் சுலோகம் விளக்கும்.

(இ-ள்.) "ஆதிஸ்வரஸ்வாமியின் சமவசரணத்தில் 12-விதமான கணங்கள் திவ்யோபதேசத்தைக் கேட்கக்கூடினார்கள்" என்பதாம்.

12-விதமான கணங்களின் விவரங்கள் இந்நூலின் 104-வது பக்கத்தில் விவரிக்கப் பட்டிருக்கின்றன: அவற்றை, ஆங்குக் கண்டுகொள்க.

முன்சொன்னபடி 12-வித கூட்டங்களாகக் கூடியிருந்த மூன்றுலோகங்களிலுமுள்ள பவ்விய பிராணிகள் இந்தமூன்றுலோகங்களிலும் சுவாமியின் லோகாதிசாயியான யஸஸ்ஸைக்கொண்

* அஜராமரத்வம் - மூப்பு, சாக்காடு என்பனவாம்.

டாடினதினுலும், அந்த யஸஸ்ஸே, 'பக' என்று சொல்லப்படுவ தாலும் அந்த யஸஸ்ஸுக்குப் பாத்திரராகிய ஸ்ரீ ஆதிதீர்த்தங் கரரே 'பகவன்' என்று சொல்லப்படுகிறார்.

இனி, 'பக' என்பதற்கு 'மாஹாத்ம்யம்' என்ற அர்த்தமும் இருப்பதால் ஸ்ரீ ஆதிதீர்த்தங்கரர் என்னும் ஆதிபகவன் ஸ்வபா வாதிசயம் 10-கர்மக்ஷயாதிசயம் 10-தெய்வீகாதிசயம் 14-ஆகிய *இந்த 34-அதிசயங்கள் தாமே தோன்றிய மாஹாத்ம்ய, முடைய வராதலால் அந்தவகையிலும், 'பகவன்' என்றநாமம் அவர்க்கே தகும்.

இன்னும், 'பக' என்பதற்கு 'முத்தி' என்ற அர்த்தமுமிருப்ப தால், 'பகவன்' என்பதற்கு, 'முத்திக்குரியவன்' என்று பொரு ளாம். ஸ்ரீ ஆதிநாதபகவன் 'முத்தி'யை அடைந்திருக்கின்றார்; பிறருக்கும் மோக்ஷ ஸ்வரூபத்தை உபதேசித்திருக்கின்றார்; இவர் அடைந்ததும், பிறருக்குபதேசிக்கப்பட்டதுமான முத்தியே சரி யானது, இதனை,

"கல்பே ஶதேபி கதேஷ்வபி ந விக்ரியா ஸ்யாத்। உத்பாதோபி யதி ஸ்யாத் த்ரைலோக்ய ஸம்ப்ராந்தி கரண படு:॥"

என்னும் சுலோகம் விளக்கும்.

(இ-ள்.) "நூற்றுக்கணக்கான கல்பங்கள்கழிந்து போனாலும், மூவு லகத்தையும் பிரமிக்கச்செய்யும். ×உத்பாதங்கள் உண்டானாலும் முத்த ஜீவன்களிடத்தில் எவ்விதமான விகாரமும் உண்டாவதில்லை" என்ப தாம்.

அநேக இதரமதக்கிரந்தங்களில் முத்திபடைந்தவர்கள் ஒரு காலததில் மறுபடியும் சம்ஸாராவஸ்த்தைக்கு வருவார்களென்பது சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ஆதிநாதபகவந்தன் அடைந்ததும், பிறருக்குபதேசித்ததுமான 'முத்தி' யானது, பிறவிக்கிடமில்லாத தாயும், சர்வோத் கிருஷ்டமானதாயு மிருக்கின்றது. இப்பேர்ப் பட்ட முத்தியை அவர் அடைந்திருப்பதால் 'பகவன்' என்ற பவித்ரநாமத்திற்கு யோக்கியமானவர் அவரேயாவர்.

* இந்த 34-அதிசயங்களின் விவரங்கள் 102, 103, 104,-ம் பக்கத் தில் எழுதியுள்ளன ஆங்கு கண்டுகொள்க.

× உத்பாதம் - கெடுதல் குறி

பின்னும், 'பக' என்றபதத்திற்கு'ஐஸ்வரிய' மென்ற அர்த்தமு மிருப்பதால், 'பகவன்' என்பதற்கு, "ஈசுவரியமுள்ளவன்" என்றும் பொருளாம். ஆதிநாதசுவாமியின் அவதாரமுதல் கைவல்யபரியந்தம் இவ்வுலகின் சகல ஐஸ்வரியங்களும் மேல்படி சுவாமியின் சரணாரவிந்தங்களில் இருப்பனவாகத் தெரிகின்றன. ஆத்ம சம்பத்தும் மேற்சொன்ன விஷயங்களினாலும், இப்புத்தகத்தில் விளக்கிய இதரவிஷயங்களாலும் அவரிடத்தில் அமைந்திருக்கின்றது என்பது விளங்கும்.,

இப்படி அசாதாரணமாகிய * ஐஹிக பாரமார்த்திகசம்பத்துக்களுக்கு சுவாமி உடையவராதலால், 'பகவன்' என்றபெயர் அவர்க்கேதகும்.

மேலும் 'பக' என்பதற்கு 'வீரியமென்ற அர்த்தமிருப்பதால் 'பகவன்' என்பதற்கு, 'வீரியமுள்ளவன்' என்றும் பொருளாம். ஆத்மபலமே வீரியமென்று சொல்லப்படும். சம்ஸாரத்தில் சகல பிராணிகளுக்கும் ஜன்ம மரண துக்கங்களுக்குக் காரணமாயிருக்கின்ற கர்மங்களைச் சம்பூர்ணமாகச் சம்ஹரித்துக் கைவல்யத்தை அடைந்ததான ஆத்மபலத்தை சுவாமி அடைந்திருப்பதாலும், மூவுலகங்களிலும் இதரர்களுக்கு × அலப்பியமான சகலசம்பத்துக்களும் இந்த ஆதிதீர்த்தங்கரருக்கிருந்தும் இவர் அவைகளைச் சம்பூர்ணமாகத் தியாகம்செய்து பரமவைராக்கியத்தை அடைந்ததினாலும், 'பகவன்' என்ற பெயருக்கிவரே உரியவராவர்.

இன்னும், 'பக' என்பதற்கு, தர்மம் என்ற அர்த்தமிருப்பதால். 'பகவன்' என்பதற்கு 'தர்மத்திற்குரியவன்', என்றும் பொருளாம். ஆதிநாத சுவாமி தாமேதர்ம மூர்த்தியாக விருந்து உலகத்திற்கு அஹிம்ஸை முதலான அநேக தர்மத்தைப் போதித்திருக்கின்றார். ஆதலின் இந்த வகையினும் 'பகவன்' என்றபெயர் அவருக்கே உரியதாகும்.

இவற்றையெல்லாம் நன்கு ஆராய்வோர், திருக்குறளாசிரியர் (ஆதி) பகவன் என்ற சொல்லால் அருகக்கடவுளையே குறிப்பிட்டு வணங்கியிருக்கிறாரென்பதை ஐயமற உணர்ந்து கொள்ளலாம்.

* ஐஹிக பாரமார்த்திகம் - இகபரலோகம்.

× அலப்பியம் - கிடைக்கத்தகாதது.

இன்னும் உருத்திர கோடீஸ்வரசுவாமிகள், " மலர்மிசை ஏகினன் " என்னும் சொற்றொடருக்குப் பல சமயத்தவர்களும் தங்கள் தங்களுக்கிசைந்த பொருள்களைச் சொல்கிறார்கள் " என்றார். அது ஒவ்வாமையாகும். ஏனெனின், ஒவ்வொரு சமயத்தவருடைய கடவுளரின் பிரதானப்பெயர்களை நிகண்டுகளின் ஆசிரியர்கள் வரையறுத்திருக்கிறார்கள். அப்படியிருக்க, மலர்மிசையேகினன்' என்கிறபெயரை ஒவ்வொருசமயத்தவரும் தங்கள் தங்கள் கடவுளரின் பெயராகக் கொண்டு சொல்வது பொருத்தமாகாது. ஒவ்வொரு கடவுளுக்கும் காரணம் பற்றியே பெயர்கள் ஏற்பட்டிருக்கின்றன; எங்ஙன மெனில்,

சிவன் சிரசில் கங்கையைத் தரித்தவனுதலால் 'கங்காதர'னென்றும், சந்திரனைத் தரித்தவனுதலால், 'சந்திரசேகர' னென்றும், ஐந்து முகங்களை யுடையவனுதலால் 'ஐம்முக' னென்றும், சூரியன் சந்திரன் அக்னி யென்னும் மூன்று கண்களையுடையவனுதலால் 'முக்கண்ண' னென்றும், திரிபுராதிகளை நெற்றிக் கண்ணால் தகித்தவனுதலால் 'திரிபுராந்தக' னென்றும், கழுத்தில்பாம்பணிந்தவனுதலால் 'அரவாபரண'னென்றும், கையில் சூலாயுதத்தைத் தரித்தவனுதலால் 'சூலாயுத' னென்றும், மழுவேந்தியவனுதலால் 'மழுவாளி' யென்றும், கபாலத்தைத் தரித்தவனுதலால் 'கபாலி' யென்றும், மானேந்தியவனுதலால் 'மானிடமேந்தி' யென்றும், பாதித்தேகத்தைப் பார்வதிக்குக் கொடுத்தவனுதலால், 'அர்த்தநாரீஸ்வர' னென்றும், விபூதியை அணிந்தவனுதலால்'நீறணிந்தோ' னென்றும், பூதகணங்களுக்கு நாதனுகையால்'பூதநாத' னென்றும், மயானத்தில் ஆடியவனுதலால் 'சுடலைபாடி' யென்றும், விருஷபவாகன முடையவனுதலால் 'விடையோ' னென்றும், மன்மதனைத் தகித்தவனுதலால் 'காமதகன'னென்றும், யமனை உதைத்தவனுகையால் 'கூற்றையுதைத்தோ' னென்றும், யமனுக்கு யமனுகையால் 'காலகால' னென்றும், கைலாயத்தில் வசிப்பவனுதலால் 'கைலையாளி'யென்றும் அவனுக்குப் பல நாமங்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றைப் போலவே மற்றைக் கடவுளருக்கும் காரணப்பெயர்கள் அமைந்திருக்கின்றன. அருகக்கடவுளுக்கும் இவைகளைப் போலவே பலபெயர்கள் ஏற்பட்டிருக்கின்றன; அவற்றுள் 'மலர்மிசை ஏகினன்' என்பதும் ஒன்றாகும்.

அருகக்கடவுள் பாதத்தின் கீழமைந்துள்ள தாமரை புஷ்பம் தவிர சமவசரணத்தின்மிசை செல்லும்போது முன்னேழு பின்னேழு தாமரைபுஷ்பங்கள் தெய்வீகாதிசயத்தால் ஏற்படும். அதன் மிசை அவர்நடப்பர்; அக்காரணம் பற்றியே அவருக்கு, 'மலர் மிசையேகினன்' என்னும் பெயர் அமைந்துள்ளது; இதனையே திருக்குறளாசிரியர் கூறி அருகக்கடவுளை வணங்கியிருக்கின்றார். இங்ஙனம் இப்பெயர் அருகக்கடவுளுக்கே உரியதென்பதை வடமொழி தென்மொழிகளில் ஏற்பட்டிருக்கும் பலநூல்களால் எவரும் ஐயமறகண்குணரலாம். இதனையறியாமல் ஒவ்வொரு மதத்தினரும் தங்கள்தங்கள் மனம் போனபடி இதற்குப் பொருள் செய்தல் பொருத்தமற்றதாகும்.

இன்னும், 'எண்குணத்தான்' என்கிற திருநாமம் அருகனுக்கே உரியதாகும்; அவன் ஞானாவரணாதி அஷ்டகர்மங்களைக் கெடுத்ததின் காரணத்தால் அவனிடத்தே அநந்த ஞானாதி அஷ்டகுணங்கள் உண்டாயின; இக்காரணத்தால் அவனுக்கு இப்பெயர் ஏற்பட்டது, இஃதிங்ஙனமிருப்ப, 'எண்குணத்தான்' என்கிற நாமம் சிவனுக்கும் உண்டென அம்மதத்தினர் கூறுகின்றனர். அங்ஙனமாயின் சிவனுக்கு மேல்கூறியுள்ள ஒவ்வொரு காரணங்களால் ஒவ்வொரு பெயர்கள் உண்டாயினவாறுபோல, எண்குணங்கள் ஏற்பட்டதற்கும் காரணம் சொல்ல வேண்டும்; அங்ஙனம் கூறப்படவில்லை. சிவனுக்கு எண்குணங்கள் இயற்கையெனின், அது பொருத்தமற்றதும், ஒப்பத்தகாததுமாம்.

7-வது, சட்டகலாசாலைப் பேராசிரியர் திருவாளர். கா. சுப்பிரமணியம்பிள்ளை, எம். ஏ. எம். எல். அவர்கள் தம்கருத்தை வெளியிட்டு சொல்லியவற்றில், "சுவாமி உருத்திரகோடீஸ்வரர், 'திருவள்ளுவனார் சமரஸக் கொள்கையினர்' என்று விளக்கிடலாயினார்கள்; அது உண்மையே" என்றுகூறியதோடு, "சிலர், ஆசிரியரைத் தத்தம் மதத்திற் சேர்ந்தவரெனக்கூற விரும்பினும் அதற்கெல்லாம் இவர் குறள் இடங்கொடுக்கின்றதென்பதுமுண்மை" என்றுகூறுகின்றார்கள் இத்தன்மையாக யூகித்தல் முற்றிலும் தவறு எனெனின், ஆசிரியர்,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு,"

என்று கூறியுள்ள குறட்பாவின்படி உட்கருத்தை அறியாமல் எதற்கும்பொருள் சொல்வது பொருத்தமன்று

இதன் "பொருளாவது எவரெவர்வாயினால் எந்தெந்தப் பொருள்களைக் கேட்டாலும் அந்தப் பொருள்களுள் மெய்ப்பொருளைக் காணவல்லது (நன்) ஞானம் என்பதாம். ஒரு பொருளைப் பலர் பலவாறு சொல்லினும் அவைகளில் உண்மைப் பொருள் காண்பதே சிறந்தது" என்பது இக்குறட்பாவின் கருத்தாகும்.

இதன் கருத்தை ஆராயும் போது ஆசிரியர் சமரசகொள்கையுடையவரல்லர் என்பதுவும், உண்மைப் பொருள் ஒன்றே என்பதை உணர்ந்து ஒரு சமயக் கடவுள் வாழ்த்தும் அச்சமயத்தின் தத்துவங்கள் முதலான ஒழுக்கங்களைப் பற்றியும் கூறியுள்ளாரென்பதுவும், இதனால் ஆசிரியர் ஒரு சமயத்தைச் சார்ந்தவரென்பதுவும் ஐயப்பாடில்லாமல் தெளியலாகும்.

இன்னும், "ஆசிரியர் சமரசக் கொள்கையினர் என்பது உண்மையே" என்று ஒப்புக் கொண்ட பிள்ளையவர்கள் பின்பு "ஆசிரியர், தொல்காப்பியம் என்னும் மிகப்பழைய தமிழ் இலக்கணத்தின்கண் குறிப்பிட்டுள்ள கந்தழிபாங் கடவுள் வழிபாட்டுச் சமயத்தினர் என்பது புலப்படும்" என்றும், "அவ்விலக்கணத்திற் கூறப்பட்ட கடவுளின் இலக்கணம், உயிரின் இலக்கணம், உடம்பின் இலக்கண முதலானவைகளையே திருவள்ளுவனார்கைக்கொண்டிருக்கின்றனர் என்பது அவர் தம் திருக்குறள் நூலால் நன்கு விளக்கும்" என்றும், "பண்டைத் தமிழர் சமயமே திருவள்ளுவனார் சமயம் என்பது என் கருத்தாகும்" என்றும் கூறியுள்ளார். திருக்குறளின் கண் எடுத்தாளப் பெற்றுள்ள சமயச் சொற்கள் பலவற்றைக் கண்டு அவர் இன்ன சமயத்தினர் என்று துணிதல் இழுக்காகுமென்று இவர் மேல் சொன்னதற்கு இந்த அபிப்பிராயம் முரணாகின்றது.

இவர் இங்ஙனம் கூறியவை முன்னுக்குப் பின் முரணாகவிருப்பினும் அவற்றில் உண்மை ஒன்றுமுளது. அதாவது தொல்காப்பியத்திற் கூறப்பட்ட கடவுள் இலக்கணம் உயிர் இலக்கணம் உடம்பின் இலக்கணம் முதலானவைகளையே திருவள்ளுவனார் கைக்கொண்டாரென்பதே.

ஆனுல், பிள்ளை அவர்கள், தொல்காப்பியத்திற் சொல்லிய கடவுள், உயிர், உடம்பு ஆகியவற்றின் இல்க்கணங்களின் உட் கருத்தை அறியாமல் தொல்காப்பியர் சைவசமயச் சார்புடையவ ரென்று யூகித்துக் கூறியிருக்கின்ருரென்பது தெளிவாகிறது. இவர் இங்ஙனம் கொண்ட கருத்து பூராவும் தவருகும். ஏனெனின் தொல்காப்பியர் கூறிய கடவுள் இலக்கணம் ஜைன சமயத்தைச் சார்ந்ததாகும். எங்ஙன மெனில்,

"வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முத னூலாகும்."

என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இச்சூத்திரத்தில் கூறியுள்ள ஒவ்வொரு பதமும் அருகக்கடவுளையே குறிப்பிட்டுள்ளதாகும். இதனுல் தொல்காப்பியர் ஜைநர் என்பது தெற்றெனவிளங்கும். இச்சூத்திரத்தின் உரை இப்புத்தகம் 111–ஆம் பக்கத்தில் எழுதப் பட்டிருக்கிறது. அதைப்பார்த்தால் இவ்வுண்மை விளக்கயாகும்.

"வினையினீங்கி விளங்கிய வறிவின், முனைவன்கண்டது முத னூலாகும்" என்றபடி முதநூல் அருளியவர் அருகத்பரமேஷ்டிக ளாவார். இதைக்கொண்டு பனம்பாரனுர் சிறப்புப் பாயிரத்தில், "முந்து நூல்கண்டு முறைபடவெண்ணிப் புலக்தொகுத்தோனே" என்றும் கூறியுள்ளார். இங்ஙனம் அருகக்கடவுள் முதல் நூல் அருளியதைக் கொண்டு தொல்காப்பியர்,

"வழியெனப் படுவ ததன் வழித்தாகும்"

என்றபடி தாம்கூறியது வழிநூலாகும் என்ருர். இவ்வாறு கூறிய தைக்கொண்டு தொல்காப்பியர் அருகக்கடவுளின் சமவசரணத்தில் துவாதசகணங்களுக்கு முதன்மைபெற்ற கணதரபரமரிஷிக ளென்பது தெளிவாகிறது. உண்மை இங்ஙனமிருப்ப, பனம்பாரனுர்,

"அறங்கரை நாவி னன்மறை முற்றிய
வதங்கோட் டாசாற் கரிறபத் தெரிந்து"

என்று சூத்திரம்செய்ததாகச் சிறப்புப் பாயிரத்தில் காணப்படுகின் றது.

இதற்கு உரை, "அறமேகூறும் நாவினையுடைய நான்கு வேதத்தினையும் முற்ற அறிந்த அதங்கோடென்கிற ஊரின் ஆசிரி

யனுக்குக் குற்றமற ஆராய்ந்துகூறி" என்று எழுதப்பட்டிருக்கிறது. இது பொருத்தமன்று. ஏனெனின், தொல்காப்பியர். கடவுள் இலக்கண முதலானவைகள் கூறியிருப்பதைக் கொண்டு அவர் ஜைநர் என்று தெளிவாகின்றது. ஆதலால் மேல்கூறிய கருத்தைக் கொண்ட பாயிரத்தைப் பனம்பாரனார் செய்திரார்; பிற்காலத்துப் புறமதப்புலவர் தங்கள் கருத்திற் கிசைந்தவாறு இச்சூத்திரத்தையும் அதன்கருத்தையும் திருத்திப் பொருளுரைத் திருக்கின்றனர். இச்சூத்திரம்,

"அறங்கரை நாவி னான்மறை முற்றிய
வதங் கோட்டமாசாற் கிற் றபத்தெரிந்து."

என்றே செய்யப் பட்டிருக்கவேண்டும்.

இதன் கருத்து:— "கோட்டம் - (சமவசரணமென்னும்) கோயிலின்கண், அறங்கரை - இல்லற துறவறங்களுக்குரிய வரம்புகளையும், அவதம் - கொல்லாமை முதலான தர்மங்களையும் போதனை செய்கின்ற, நாவின் - அருகக்கடவுளின் நாவினிடத்தே தோன்றிய திவ்யத்வனியினின்றும் உண்டாகிய, நான்மறை - நான்கு வேதங்களையும், முற்ற-முழுமையும், ஆசாற்கு-ஆசாரியனுக்கு, (தொல்காப்பியனென்னும் கணதரபரமரிஷிக்கு)", இல்-இல்லறத்தாருக்கும், தப-துறவறத்தாருக்கும், (உணர்த்தும்படி) தெரிந்து - பதினெண்பாஷைகளினாலறிந்து என்பதே.

இங்ஙனமறிந்து உபதேசஞ் செய்தாரென்று । பின் வருவதோடு சேர்ந்து முடியும், இங்ஙனம் தொல்காப்பியர் கணதர பரமரிஷி என்பதற்கிணங்க மற்றவரும் இருந்தார்களென்பதை விளக்க,

"இனையவாம் விமலனார் கணத்து நாதராய்
வினையெலா மறவெறி வேத நான்கினை
மனைதுற வாணருக் கோதி மற்றவர்
வினைகண்மே னினைவுறீஇ விளித்த மேவினார்"

என்று மேருமந்தரபுராணம் 1356 ஆம் கவியும் கூறப்பட்டிருக்கின்றது.

(இ - ள்.) "மேரு, மந்தரர் ஆகிய இருவர்களும் விமல தீர்த்தங்கரருடைய சமவசரணத்தில் துவாதசகணங்களுக்குத் தலைமை பெற்றவர்க

ளாகிக் கர்மங்களையெல்லாம் கெடுக்கும்படியான நான்குவேதங்களை இல்லற துறவறத்தார்க்கு உபதேசித்துத் தங்களுடைய கர்மங்களைக் கெடுக்க வேண்டுமென்கிற தியானத்தில்பொருந்திக் கணங்களினின்றும் வேறாகிப் பிரிந்து தனியான இடத்தை அடைந்தார்" என்பதாம்.

இக்கவியில்கூறியபடி மேருமந்தர கணதர பரமரிஷிகள் (அருகத் பகவான் அருளிய) நான்கு வேதங்களை இல்லற துறவத்தார்க்கு உபதேசம் செய்ததுபோலவே தொல்காப்பியனாரும் உபதேசித்தார் என்பனவாம்.

இன்னும் தொல்காப்பியத்திற்கூறிய, உயிர் உடம்பின் இலக்ஷணங்களும் ஜைநசமயச் சார்பானவையேயாம். இதைவிளக்குதற்பொருட்டு "ஒன்றறிவதுவே உற்றறிவதுவே" என்றசூத்திரத்தை இப்புத்தகம் 131-ஆம் பக்கத்தில் எடுத்துக்காட்டி அதன் கருத்தையும் விளக்கியுள்ளேன். ஆங்குக்கண்டு கொள்க. இன்னும் இதனைவிளக்கும் "புல்லுமரனு மோரறிவினவே" என்னும் சூத்திர முதல்"மக்கடாமே ஆறறிவுயிரே" என்னும் சூத்திரபரியந்தமுள்ளவற்றின் பொருள்களை இப்புத்தகம் இரண்டாம்பாகத்தில் விவரித்துக்காட்டுவோம். அவற்றை ஆங்கு விரிவாகக்காணலாம். ஆகையால், தொல்காப்பியரும், திருக்குறளாசிரியரும் ஒருசமயத்தவரென்பதும், இவர்கள் ஜைநர்களென்பதும் இப்புத்தகத்தில் காட்டியுள்ள பல காரணங்களைக்கொண்டு அறிந்துகொள்க.

இத்தகை தொல்காப்பியர் கூறிய வழிநூலைக்கொண்டு சார்புநூல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. அவையாவன:—இறையனாரகப் பொருள், நன்னூல், நேமிநாதம், வெண்பாப்பாட்டியல், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை அகப்பொருள் விளக்க முதலான இலக்கணங்களாம். இவைகளில் இறையனாரகப்பொருள் பாண்டியன் கவலையைத் தீர்க்கும் பொருட்டு ஈஸ்வரன் மூன்று செப்பேட்டில் 60 சூத்திரங்களாகச் செய்து பீடத்தின் கீழ்வைக்கப்பட்ட தென்றும், அதை அர்ச்சகப்பிராமணன் கண்டெடுத்துப் பாண்டியனுக்குக் காண்பித்தானென்றும் இதர மதஸ்தர் சிலர் ஒரு கதைசொல்லுகின்றார்கள். அக்கதை பூராவும் நம்பத்தக்கதன்று. தொல்காப்பியர், குறளாசிரியர் ஆகிய இவர்களைப் பற்றிச் சிலர் கூறும் வேறு போலிக்கதைகளைப் போல இதுவுமொரு அண்டப்புளுகாகும்.

இறையனுர் என்கிற பெயர்கொண்டவர் ஜைநமகா முனிவராக இருத்தல் வேண்டும். இவர் இயற்றிய களவு கற்பு என்னும் இலக்கணத்திற்கு உரை செய்த ஆசிரியரும், ஜைநரென்பது விளக்கமாகின்றது. எப்படியெனின் இவர்,

"முதல்வழி சார்பென நூன் மூன்ருகும்"

என்று கூறித்தொல்காப்பியத்திலுள்ள சூத்திரங்களில் சிலவற்றை மேற்கொள்களாகக் காட்டியிருப்பதோடு முதல் நூல் இன்னதென விளக்கும் பொருட்டுத் தொல்காப்பியத்திலுள்ள கடவுள் இலக்கணத்தையும் கூறியுள்ளார். அது,

"வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்"

என்பதாகும்; இவர் இங்ஙனம் முதல் நூல் இலக்கணத்தைக் காட்டி,

"முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி
யழியா மரபினது வழி நூலாகும்"

என்றும்,

"இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபு வேறுடையது புடைநூலாகும்"

என்றும் வழிநூல், சார்புநூல்களின் இலக்கணங்களையும் விளக்கியிருக்கின்ருர்.

"வினையினீங்கி"...என்கிற சூத்திரம் அருகக் கடவுளைக் குறித்ததென மேலே விவரித்துள்ளோம். இதன்படி முதல்நூல் அருளியவர் அருகத்பகவன்; இவர் திவ்யத்வனியில் 'ஓ' வென்கிற சப்தத்தினின்றும் உண்டாகிய வற்றைக் கணதர பரமரிஷிகள் பதினென் பாஷைகளினுல் கிரந்தங்களாக இயற்றினுர்கள்; அவை வழி நூல்களாகும். இவற்றிலிருந்து முனிவர்களால் சுருக்கமாகச் செய்துள்ளவைகள் சார்பு நூல்களாம்.
இந்த விவரங்களை மண்டலபுருடர்,

"பூமலிய சோகினீழற் பொலிந்த வெம்மடிகள் முன்னாள்
ஏமமா முதனூல் சொல்லக் கணதரரியன்ற பாவாந்
றாமொருவழி நூல்சொல்லச்சார்புநூல் பிறருஞ்சொல்ல
தோமிலா மூன்றுநூலுந் துலமெனவு தித்தவன்றே"

என்று சூடாமணிநிகண்டு பாயிரத்தின்கண் கூறியிருக்கின்றார். இது போல வடமொழிநூல்களிலும் நூல்கிரமங்கள் கூறப்பட்டுள்ளன.

இங்குக்காட்டியபடி இறையனாரகப்பொருள் உரையாசிரியர் ஜைநராதலால் ஜைநசமயக்கோட் பாடுகளையே கூறியிருக்கின்றார். இதனாலேயே இறையனாரும் ஜைநரென்று சொல்ல ஏதுவிருக்கின்றது. நன்னூலாசிரியராகிய பவணந்திமுனிவர் தாமியற்றிய சார்பு நூலாகிய இலக்கணத்தில், 'முதல்வழிசார்பு' என்பதற்குமேல் எடுத்துக்காட்டியுள்ள நான்கு சூத்திரங்களையும் எடுத்தாண்டிருக்கின்றார்; யாப்பருக்கல விருத்தி உரையாசிரியராகிய குணசாகரரும் அகப்பொருள் விளக்க்ம் ஆசிரியர் நாற்கவிராஜநம்பியாரும் மேல் சொன்ன நான்கு சூத்திரங்களையும் எடுத்து வழங்கியிருக்கின்றார்.

இன்னும் நன்னூலார், தொல்காப்பியம் 1-எழுத்ததிகாரம் புணரியல் 23-ஆம் சூத்திரம், "அத்தி னகர மகரமுனை யில்லை,'' 2-சொல்லதிகாரம் வேற்றுமைமயங்கியல் 23 - ம் சூத்திரம், "யாத னுருபிற் கூறிற் றாயினும்,'' 3. பொருளதிகாரம். செய்யுளியல் 170 - ஆம் சூத்திரம், 'நேரின மணியை நிரல்படவைத் தாங்கு'' என்கிற சூத்திரமுதலாகச் சிலசூத்திரங்களையும், இறையனார் இலக்கண உரையிலிருந்து 1-"ஆக்கியோன் பெயரே வழியே எல்லை,'' 2-"காலங்களனே காரணமென்றிம்,'' 3-"ஆயிரமுகத்தா னகன்றதாயினும்'' என்கிற சூத்திரங்களையும், தொல்காப்பியம் இளம்பூரணர் உரையிலிருந்து-1-"தன்மகனாசான் மகனே மன்மகன்,'' 2-"நூல்பயிலியல்பே நுவலின்வழக் கறிதல்'' என்ற சூத்திரங்களையும், யாப்பருங்கலக்காரிகை உரையிலிருந்து 1 - "எழுவகைமதமே உடன்படல் மறுத்தல்,''2-"குன்றக் கூறல் மிகைபடக் கூறல்,'' 3-"சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்,'' 4-"நுதலிப்புகுதல் ஒத்து முறை வைப்பே'' என்ற சூத்திரங்களையும் தாம் இயற்றிய நன்னூலில் சேர்த்துக் கொண்டதற்குக்காரணம்: தொல்காப்பியர், பனம்பாரனார், இறையனார், இளம்பூரணர், அமிர்தசாகரர், குணசாகரர், அவிநயனார், பாடலனார், நாற்கவிராஜநம்பி முதலானவர்கள் ஜைநர்களா யிருந்ததுவே.

இவர்கள் ஜைநரல்லாதவரா யிருந்தாலும், முதல் வழி சார் பென்னும் நூல்வகைகள் ஜைநசமய சித்தாந்தங்களைச் சாராதவைக ளாயிருந்தாலும் நன்னூலாரும், நாற்கவிராஜநம்பியாரும் யாப்பருங் கலம்உரையாசிரியரும் மேல்கண்ட முதல்வழி யென்றசூத்திரங்கள் முதலான சிலவற்றைத் தம்முடையனவாகக் கொண்டு தமது நூல் களில் கூறியிருக்கமாட்டார்கள்; மேல்சொன்ன ஆசிரியர்கள் ஜைநர் களாயிருந்ததினாலேயே நன்னூலாசிரியர் இவர்களைத் தமது முன் னோர்களெனக்கொண்டு,

> "முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
> பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கும்—முன்னோரின்
> வேறுநூல் செய்துமெனு மேற்கோளில் லென்பதற்குங்
> கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்."

என்று கூறி இவர்களுடைய சூத்திரங்களையும் எடுத்தாண்டிருக் கிறார். இஃதொன்றே அவர்கள் ஜைநர்களென்பதற்குப் போது மான சான்றாகும்.

நாம் இறையனாரகப்பொருள் உரையாசிரியரைப் பற்றி முன் னுரைத்ததில் அவர் பெயரைக் கூறவில்லை ஆதலின் அவர் பெயர் இன்னதென்பதையும் இங்கு விளக்குவாம்.

திருநெல்வேலி, ஸ்ரீமத். ஞா. சா. துரைசாமி பிள்ளை அவர்கள் வெளியிட்டிருக்கும், "தமிழ் இலக்கிய சங்ககாலம்" என்ற புத்த கத்தில் இறையனாரகப் பொருள் உரையாசிரியரைப் பற்றி எழுதி யிருப்பதாவது:

"உரையாசிரியர் எனச்சிறப்புப் பெயர் பெற்ற இளம்பூரண வடிகள் அதுகாறும் உரையில்லாதனவாய்க் கிடந்த தொல்காப் பிய முதலிய நூல்களுக்கு உரை யெழுதியதோடு இந்நூலுக்கும் (இறையனாரகப் பொருளுக்கும்) உரை யெழுதியிருக்கலாம்; அங் ஙனம் இளம்பூரணரே உரை யெழுதினர் எனக்கொள்ளுதற்கு ஆதாரங்கள் உள்ளன; செந்தமிழ்ப்பத்திராசிரியர். ஸ்ரீமான் மு. இராகவய்யங்கார் அவர்கள் எழுதி வெளியிட்டிருப்பதும் ஒப்பத் தக்கதாயிருக்கின்றது" என்பதே. இவற்றால் தொல்காப்பியத்திற்கு முதல் முதல் உரை செய்தவரும் இறையனார் இலக்கணத்தின் உரையாசிரியரும் இளம்பூரணவடிகள் என்பதும் அவர் ஜைநர் என்பதும் தெளிவாகும்.

இன்னும் திருவாளர். கா. சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள் திருவள்ளுவனார் வினைக்குக் காரணம் அவாவும் அதற்குக் காரணம் அறியாமையும் என்று காட்டினர் என்றும் அவர் கடவுள், உயிர், வினை, மறுபிறப்பு முதலானவைகளைப் பற்றித் தம் நூலில் ஆங்காங்கு எடுத்துக் காட்டினார். உயிர் தன் அறியாமையினின் றும் நீங்கி அவாவறுத்து எங்கும் நிறைந்து நிற்கும் இறைவனடியை அடைந்து முத்திபெறல் வேண்டு மென்னும் சைவசித்தாந்த முத்தி நிலையை உபதேசித்தருளினர் என்றுங் கூறியுள்ளார். இவர் கூறுகிறபடி திருவள்ளுவனார் சைவசித்தாந்த முத்திநிலையை உபதேசித்தருளினரென்பது ஒப்புக் கொள்ளத்தக்கதன்று

ஏனென்னில் சைவசித்தாந்தம் எங்கும்நிறைந்து நிற்கும் இறைவனடியை அடைவது முத்தி நிலை என்பதனாலும், சிவத்தோடு இரண்டறக் கலத்தலே முத்தி யென்பதனாலும், இல்லறத்திலேயே மோக்ஷ முண்டென்பதனாலும். திருவள்ளுவனார் முத்திநிலையை 'நிலமிசை நீடுவாழ்வார்' என்றும், 'வானோர்க்கும் உயர்ந்த உலகம் புகும்' என்றும், மனைவிழைவார் மாண்பய னெய்தார்' என்பும் கூறுவதனாலும் ஆசிரியர் கருத்துக்கும் சைவசமயசித்தாந்தத்திற் கும் பொருந்தாதது விளங்கும்.

ஜைந சமயத்தில் ஜீவன் நித்திய மாதலும் அந்த ஜீவன் மன வசன காயங்களாலுண்டாம் ராக, த்வேஷ, மோக மென்னும் காம வெகுளி மயக்க மிவை மூன்றின் பரிணமத்தால் வினைகட்டுதலும் அவ்வினையால் பிறப்பிறப்புண்டாதலும், அவற்றால் துன்பமெய்த லும் அவ்வினையைக் கெடுத்தற்கு பற்றற்று முற்றுந்துறந்து, தவத் தின் பயனால் முத்தி யெய்தி அழியாவின்பத்தை அடைதல் கூடு மென்றும், இல்லறத்தில் மோக்ஷமில்லை யென்றும் கூறப்பட்டிருக் கும் ஜைநசமய முத்தி நிலையையே திருவள்ளுவனார் அருளியுள் ளாரென்பது வெள்ளிடை மலைபோல் விளங்கும்.

இன்னும் பிள்ளையவர்கள் "தொல்காப்பியத்தில் குறிப்பிட்டது மாகிய பண்டைத்தமிழர் சமயமே திருவள்ளுவனார் சமயம் என்பது எனது கருத்தாகும்" என்றார். இஃதுண்மையே எவ்வாறெனின்மேல் 14ம் பக்கத்தில்திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர் கள்பழைய தமிழருடையசமயம் ஜைந சமயமேயாம் என்று கூறியு ள்ள வற்றாலும் எமது முகவுரையில் விவரித்துள்ள காரணங்களா லும்: பண்டைத்தமிழருடைய சமயம்ஜைநசமயமென்பதுபுலனாகும்.

8-வது, மேற்கூறியபடி சித்தார்த்த புத்தகசாலையார் எழுதியுள்ளவற்றில், "நம்மாழ்வார் கலியுகத்தின் தொடக்கத்திலிருந்தவர்" என்றும், "அவர்கூறியுள்ள,

'ஊாவர் கவ்வை பெருவிட்டன்னே சொன்னீர்படுத்து'

என்ற பாசுரத்தின் கருத்தையும்,

'கண்கேட் டுற்று மோந்துண்டுழலு மைங்கருவி'

என்ற பாசுரத்தின் கருத்தையும்,

துவாபரயுகத்தவர் எனப்படுகின்ற திருமழிசை யாழ்வார் அருளிய,

'வித்து மிடல் வேண்டுங் கொல்லோ விடையார்த்த'

என்ற பாசுரத்தின் கருத்தையும் குறளாசிரியர்,

'ஊாவர் கௌவை பெருவாக வன்னைசொல்'

என்ற திருக்குறளின் கண்ணும்,

'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்'

என்ற குறளின் கண்ணும்,

'வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி'

என்ற குறட்பாவின் கண்ணும் எடுத்தாண்டிருக்கின்றார்" என்றும், "இவற்றாலும், இதனடியில்வரும் குறட்பாக்களாலும் குறளாசிரியர் வைணவரெனக் கூறலாகும்" என்றும் கூறுவது பூராவும் பொருத்தமானதன்று.

ஏனெனின், திருமழிசையாழ்வார்,

"அறியார் சமண ரயர்த்தார் பவுத்தர்"

என்று நான் முகன் திருவந்தாதி 6-ஆம் பாசுரத்திலும்,

நம்மாழ்வார்,

"இலிங்கத் திட்டபுராணத்தீரும் சமணரும் சாக்கியரும்."

என்று திருவாய்மொழி 4-ஆம்பத்து 10-வது 5-ஆம் பாசுரத்திலும் கூறுகின்றார்கள்.

இவர்கள் இவற்றால் புத்தசமயத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பது விளங்குகின்றது. சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் புத்தபிரான், கி. மு. 557-ல் அவதரித்ததாகக் கூறுகின்றார்கள். ஆகவே இவர்கள் புத்தசமயம் தோன்றியகாலத்திற்குப் பிற்பட்டவ ரென்பது துணியப்படும். இது சுமார். கி. பி. 700-ல் உற்பவித்த தாக ஆராய்ச்சிக்காரர்கள் கூறும் திருஞானசம்பந்தர், சமணர் புத்தர் இவர்களை நிந்தித் திருப்பதுபோல தொண்டரடிபொடி யாழ்வார், திருமழிசை யாழ்வார் முதலானவர்கள் நிந்தித்திருக் கின்றார்கள்.

சில காரணங்களால் இந்த ஆழ்வாராதியர்கள் திருஞான சம்பந்தர் காலத்திற்கும் பிற்பட்டவ ரென்றும் சொல்ல இடமிருக் கின்றது.

கி. பி. முதல் நூற்றாண்டில் குறளாசிரியர் அவதரித்தன ரென்று சரித்திர ஆராய்ச்சி செய்யும் பலபண்டிதர்கள் கூறுகின் றார்கள். இவற்றையெல்லாம் ஆராயும்போது மேற்கூறிய ஆழ்வா ராதியர்களின் உற்பவகாலங்கள் பூராவும் நம்பத்தக்கவையல்லவென் பது புலனாகும். இன்னும் கலி, 368-ல் திருமங்கையாழ்வார் அவ தரித்ததாக அவர்சரித்திரம் கூறுகின்றது. இதுவும் பொருத்த மானதன்று; ஏனெனில் அவர்,

"கற்றார் பற்றறுக்கும் பிறவிப் பெருங்கடலே."

என்றுபெரிய திருமொழி 8-வது பத்து, 9-வது திருக்கைம்மானம் 8-ஆம் பாசுரத்தில் கூறுகின்றார்.

இவ்வாறுகூறியதில், "பிறவிப் பெருங்கடல்..." என்னும் திருக்குறள் கடவுள் வாழ்த்திலுள்ள பதத்தை இவர் எடுத்தாண் டிருக்கிறார் என்பது விளங்குகின்றது.

இதுபோலவே சைவசமயத்துத் திருஞானசம்பந்தரும் தமது தேவாரத்தில்; "தாயவடிவளந்தான்" என்று 1-வது திருமுறை திருத்தூங்கானை மாடப்பதிகத்திலும், "அகரமுதலானை" என்று திரு ஆப்பனூர்ப் பதிகத்திலும், திருக்குறளிலுள்ள பதங்களைப்பிர யோகித்திருக்கின்றார்.

இன்னும் ஜைநசமயத்து வாமன முனிவர் மேருமந்தர புராணத்தில்,

"அறத்தினாங் காக்க மில்லை யென்பது மிதனை யாய்ந்து
மறத்தினாங் கில்லை கேடு மென்பது...'

என்று 747 ஆம் கவியில் கூறுகின்றார். இவர் திருக்குறளின் கண்ணுள்ள குறட்பாவை அப்படியே எடுத்துப் பிரயோகித்திருக்கின்றார்.

இன்னும் இம்மாதிரியே ஒவ்வொரு சமயத்தவரும் திருக்குறளின் பதங்களையும், அதிலுள்ள கருத்துக்களையும் தங்கள் சமயத்துக்குப் பொருத்தமாமெனத் தங்கள் தங்கள் சமய நூல்களில் எடுத்தாண்டிருக்கின்றார்கள். இவ்வழக்கப்படியே குறளாசிரியர் அருளிய திருக்குறளின் கண்ணுள்ள கருத்துக்களை நம்மாழ்வார் திருமழிசையாழ்வார் முதலானவர்களும் எடுத்தாண்டிருக்கின்றார்கள். உண்மை இப்படியிருக்க மேற்கூறிய ஆழ்வார்களின் கருத்துக்களைத் திருக்குறளாசிரியர் எடுத்தாண்டிருக்கின்றார் என்பதும், அவர்களுக்குப் பிற்பட்டவ ரென்பதும் பொருத்தமற்றனவாம்.

இன்னும் ஸ்ரீ சித்தார்த்த புத்தகசாலையார்,

"மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்" என்ற குறட்பாவும், "தாமரைக்கண்ணா னுலகு" என்றகுறட்பாவும் திருமாலைச் சிறப்பித்துக் கூறுகின்றனவென்று சொல்வதும் பொருத்தமானதன்று; இக்குறட்பாக்கள் திருமாலை (விஷ்ணுவை) குறித்து ஆசிரியர் கூறப்பட்டனவல்ல வென்பது இப்புத்தகத்தின் சார்பாகவரும் இரண்டாம் பாகத்தில் கூறப்பட்டிருக்கின்றது அதனை ஆங்குக் கண்டுகொள்க.

திருவாளர். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் தலைமையில் உருத்திர கோடீஸ்வரர் கூறியவற்றில் ஜைநர்கள் தம் கடவுள் அநாதிசித்தன் என்றும் ஒரு ஜீவன் என்றும் அவர் உலகை சிருஷ்டிப்பவர் அல்லர் என்றும் கூறுகின்றாரென்று சொல்வது உண்மையே. எஃஞான்றும் நிலைபெற்றுள்ள உலகில் அநாதியாக கர்மபந்தத்துடன் நித்தியமாகவுள்ள பகிராத்மா வென்னும் ஜீவாத்மா அந்தராத்ம ஸ்வரூபத்தைப்பெற்றுக் கர்மநிவாரணம் செய்து பர

மாத்ம ஸ்வரூபத்தை அடைந்து சித்தபதவியாகிய ! மோக்ஷத்தில் தங்கி மேல்செல்லும் கமனமும் கீழ்இழியுந்தன்மையு மிலாகி நிலைபெற்றிருப்ப ரென்பது ஜைநசமய சித்தாந்தமேயாகும்.

இவ்வாறு ஜீவாத்மா, வென்னும் பகிராத்மா அந்தராத்ம ஸ்வரூபத்தையடைந்து ஒழுகுவதின் பயனைக் குறளாசிரியர்,

"பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

என்று கூறியிருக்கின்றார். "நீடுவாழ்வா" ரென்பதற்கு பரமாத்ம ஸ்வரூபமடைந்து "சித்தர் என்கிற திருநாமத்தைப் பெற்று மோக்ஷத்தில் நிலைபெற்று வாழ்வா" ரென்பதாம். இக்குறட்பாவைப் பற்றிய விஷயங்கள் இப்புத்தகம் 92-ஆம் பக்கமுதல் 99 - ஆம் பக்கம்வரையில் விளக்கப்பட்டிருக்கின்றன; அவற்றைப் பார்த்துக் கொள்க.

சுவாமி உருத்திரகோடீஸ்வரர், அநாதிசித்தர் உலகை சிருஷ்டிப்பவர் அல்லர் என்று ஜைநர் கூறுகின்றார்கள் என்பதைப் பற்றி விவரிப்பாம்.

உலகம் கனோததி கனவாத தனுவாத மென்னும் மூன்று மகாகாற்றுகளின் ஆதாரங்களால் எஞ்ஞான்றும் நிலைபெற்றுள்ளன வென்பது ஜைநசமய சித்தாந்தம்.

இதனைக் குறளாசிரியர்,

"அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி"

என்னும் குறட்பாவால் விளக்கியிருக்கின்றார்.

(இ-ள்.) "அருளாள்வார்க்கு - அருளையுடையவருக்கு, அல்லல் - துன்பம், இல்லை - எப்போதுமில்லை, (அதற்கு) வளி - (கனோததி, கனவாத, தனுவாத மென்னும் மூன்று) மகாகாற்றுக்களால் சூழப் பெற்று மல்லல் - வலிபொருந்தி, S வழங்கும் - நிலைபெற்றிருக்கும், மா-பெரிய ஞாலம் - உலகம், கரி - சாக்ஷி" என்பதாம்.

---

S 'வழங்கும், என்னும் பதத்திற்கு, 'நிலை பெற்றிருக்கும், என்பதே பொருளாம். "வானின்றுலகம் வழங்கி வருதலால்" என்ற குறட்பாவின் உரையால் இது தெளியலாகும். இக்குறட்பாவிற்குப்பரிமேலழகர் உரை பொருந்தாது.

இதன் கருத்து: வலி பொருந்திய மூன்று மகாகாற்றுக்களின் ஆதாரங்களால் நிலைபெற்றிருக்கும் உலகத்திற்கு அபாயமில்லா தது போல அருளை ஆளுகின்றவருக்கு யாதொரு துன்பமுமில்லை என்பதாம்.

இதனால் திருவள்ளுவர், 'முதற்கடவுளால் உலகம் சிருஷ்டிக் கப்பட்டனவாகச் சொன்னாரல்லர் என்பது நன்கு விளங்கும்'

உலகம் மூன்று காற்றுக்களால் நிலைபெற்றிருக்கின்ற தென் பதை இப்புத்தகம் 21-ம் **பக்கத்தில்** விளக்கி யிருக்கின்றோம் ஆங்குக் கண்டு கொள்க.

இன்னும், "ஜைநர்கள் உலகம் பரமாணுக்களின் காரியம் என்றூர்கள்" என்று சொல்வதும் உண்மையே. இதனைக் குறளா சிரியர், "சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்" என்றகுறட் பாவால் விளக்கியுள்ளார். இவ்விஷயம் இப்புத்தகம் 173-ஆம் பக்க முதல் 192 ஆம் பக்கம் வரையில் தெளிவாக விவரிக்கப்பட்டி ருக்கிறது. இதனை ஆங்குக் கண்டு கொள்க. இன்னும் "உண்டா மில்லையாம்" என்னும் சப்தபங்கி நியாயம் ஜைநசமயத்திற்குரியதே யாம்.

இன்னும், "ஜைநர்கள் இல்லறம் தீவினையின் கண் அடங்கும், துறவறமே மேம்பாடுடைத்து என்றூர்கள்" என்று சுவாமிகள் சொல்லியதும் சரியே. இவற்றையும் குறளாசிரியர் திருக்குறளில் விளக்கி யிருக்கின்றூர். இல்லறம் தீவினையின்கண் அடங்கு மென் பதனை,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்."

என்ற செய்யுளால் விளக்கியிருக்கின்றூர்.

இதன் கருத்தாவது, "இல்வாழ்க்கையில் அதற்குரிய கொல்லாமை முதலான விரதங்களில் வழுவாமல் வாழ்பவன் மறுமையில் சுவர்க் கத்தில் தேவனைப் பிறப்பான்" என்பதாகும்.

இல்லறத்தில் மிக்க விரதானுஷ்டான சீலாசாரங்களுடன் நடப்பினும் இவ்வொழுக்கம் சுவர்க்க வின்பத்தைத் தருமே

யன்றி மோக்ஷ வின்பத்தைத் தாராது. தேவனுகப் பிறப்பது வும் பின் பிறத்தற்கேது வாதலின் இல்லறம் தீவினையின்கண் அடங்கும்.

இதனுல் துறவறம் மேம்பாடுடைய தென்பதை, ஷெ குறளாசிரியர்,

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்"

என்னும் செய்யுளால் விளக்கியிருக்கின்ருர்.

இதன் கருத்து "யான் எனது என்னும் அகங்காரத்தை யொழிப்பவன், தேவர்க்கும், அடைதற்கரிதாகிய மோக்ஷத்தை அடைவான்" என்பதாம்.

இவ்விரண்டு குறட்பாக்களால் இல்லறம் தீவினையின் கண் அடங்கு மென்பதனையும், துறவறமே இறப்பு பிறப்பில்லாத மோக்ஷவின்பத்தைத்தரும் மேம்பாடுடைய தென்பதனையும் அறிதல் கூடும்.

இன்னும், "அகரமுதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு" என்ற முதல் குறட்பாவில் பரிமேலழகர், "உலகம் ஆதிபகவானுகிய முதலையுடையது" எனக் கூறியுள்ளதைக் கொண்டு உருத்திர கோடீஸ்வரசுவாமிகளும், "உலகம் ஆதிபகவானுகிய முதலையுடையது என்று பொருள்படுகிறது" என்ருர். "இக்காரணத்தைக் கொண்டு திருவள்ளுவனுர் உலகிற்கு முதற்கடவுள் ஒருவர் உளர் என்றும் கூறினுர்" என்ருர். இம்மாதிரி யூகித்தல் பொருந்தாததாம். ஆசிரியர் கருத்தையும் ஜைநசமயசித்தாந்தங்களையும் இவர் அறிந்திருந்தால் இங்ஙனம் கூறமாட்டார். ஜைநசமய கொள்கைப்படி உலகில் அகர முதலாகிய எழுத்துக்களெல்லாம் "ஆதிபகவனை முதலாகவுடையன" என்பதுவே மேற்கூறிய சொற்ருெடருக்குப் பொருளாம். தவிர, "முதற் கடவுள் இவ்வுலகை இயற்றியவர்" என மேல்படி சுவாமிகள் கூறுவதும் தவறு.

எவ்வாறெனின் சைவசமயத்து ஸ்ரீ காகாஜீவவாதக் கட்டளை என்னும் நூல்,

1-சுத்தப் 2-பிரமமாயிருக்கின்ற 3-சர்வ 4-சாக்ஷியினிடத்திலே அக்னியிற் சூடுபோல அபின்னமாக ஒருசக்தியுண்டு; 5-அந்தச்சக்தி அவ் 6-அதீதப்பிரமத்தில் அடங்கியிருக்கும்போது அதற்குச் சுத்தப்பிரம மென்றுபெயர்; அந்தச்சக்தி 7-விசிரிம்பித்துச் சுத்தப்பிரமத்தை 8-வியாபிக்கும்போது அப்பிரமம் 9-பரைவியாபகத்துள்ளிருந்த படியினாலே அதற்குப் பரப்பிரமமென்று பெயராம்; 10-இலக்ஷண சூன்யமாயிருக்கின்ற அந்தச் சக்திக்குப் பிரமத்தினுடைய சன்னிதானத்தில் புருடசமுகத்திலே ஸ்திரீக்கு இன்பஞ் சனித்தாற்போல 11-அவிகிர்த சத்துவ ரஜஸ்தமோ குணங்கள் உண்டாயின" என்று கூறுகின்றது. இன்னும் இவற்

1. சுத்தம் – மாயையும், அதன் காரியமுமான மலமின்றியதாயிருப்பது.

2. பிரமம்–பெரியவைகளுக் கெல்லாம் பெரிதாயுள்ளது; எப்படியெனில் பிருதிவியினும் பத்துமடங்கு அப்புப்பெரிது; அப்புவினும் பத்துமடங்கு தேயுபெரிது; தேயுவினும் பத்துமடங்கு வாயுபெரிது; வாயுவினும் பத்துமடங்கு ஆகாயம் பெரிது; ஆகாயத்தினும் பன்மடங்கு பிரகிருதிபெரிது; பிரகிருதி, சரீரத்துள்ள மச்சம்போல பிரமத்தின் ஏகதேசத்திலிருத்தலின் அதனினும் அநேகமடங்கு பிரமம்பெரிது; இதற்குப்பெரிது யாதொன்றுமில்லை.

3. சர்வம் – சரீரத்திரயம், அபிமானத்திரயம், அவஸ்தாத்திரயம் ஆகியவை.

4. சாக்ஷி–விகாரமற்று உதாசினமாயிருந்து புத்தி முதலியவற்றை விளக்குஞ்சைதன்னியம்; அதாவது பக்ஷபாதமின்றிப் புத்திமுதலிய வனைத்தும் விளக்குஞ் சைதன்னியம் சாக்ஷி எனப்படும்.

5. அந்தச்சக்தி–அந்த அபின்னசக்தி.

6. அதீதபிரமம்–மனோவாக்குக் கடந்தபிரமம்.

7. விசிரிம்பித்து–வெளிப்பட்டு.

8. வியாபிக்கும்போது–சூழ்ந்து கொள்ளும் பொழுது.

9. பரை–பராசக்தி.

10. இலக்ஷண சூன்னிய மாயிருக்கின்ற–பிரமத்தினும் வேறுவகை இலக்ஷணமின்றி இருக்கின்ற; இலக்ஷணம்-சிறப்புத் தர்மம்.

11. அவிகிர்த–நிர்விகாரமான; அதாவது, பிரபஞ்ச ரூபமான விகாரமின்றிய.

றின் பிரிவுகளை எழுதப்புகின் அவை பெருகும். ஆதலின் இங்கு அவஸ்யம் அறிந்துகொள்ள வேண்டியவைகளை மாத்திரம் எடுத்துக்காட்டினேம். இவற்றைக்கொண்டு ஆராயுமிடத்து, சுத்தப் பிரமத்தினின்றும் பலபிரிவுகள் பிரிந்து, சத்துவத்தில் சத்துவம், சத்துவத்தில் ரஜஸு, சத்துவத்தில் தமசு என்னும் முக்குணங்கள் தோன்ற அம்முக்குணவயப்பட்ட பிரமமே முதற்கடவுளாய், ஆக்கல், காத்தல் அழித்தலென்னும் முத்தொழிலுக் குரிமையுள்ளதாயிற்றென்பதும், அக்கடவுள் ஒருவரே பிரம்மா, விஷ்ணு சிவன் என்னும் மூவராய்த் தோன்றினரென்பதும் இம்மூவரில் பிரம்மா உலகமுதலான பலவற்றையும் சிருஷ்டித்தாரென்பதுவும் விளங்குகின்றன.

1929 ஆம் வருஷம் ஜுலை மாதம் 21உ குடிஅரசுப் பத்திரிகையில், "ஆஸ்திகத்தின் அடிப்படையே ஆபாஸம்" என்கிற வியாசத்தில், எம். எஸ். மணி என்பவர்.

"உலகம் தோன்றுவதற்கு முன்னே நெற்றிக்கண்ணுடன் ஓர் பெண் தோன்றியதாகவும், அதனையே ஆதிசக்தி, பராசக்தியென்று கூறுவதுண்டென்றும்,பின்னர் அச்சக்தி பிரம்மா விஷ்ணு ருத்திரன் என்ற மூவர்களைப் பெற்றதாகவும் அவ்வாறு பெற்ற அம் மூவர்களும் மிக்க அழகாயிருந்ததைக் கண்டு மோகித்து அவர்களையே மணம் செய்து புருஷ இச்சை அநுபவித்து வந்ததாகவும், பின்னர்ச்சிவன் தாயும் மனைவியுமாகிய சக்தியைக் குறித்துத்தவம் செய்து அவள் நெற்றிக்கண்ணைப் பெற்றதாகவும், பெற்றவுடன் சிவன் தனக்குக் கண்ணைக் கொடுத்த சக்தியையே சாம்பலாக எரித்து விட்டதாகவும் ஒரு புராணம் கூறுகின்றது.

மற்றொரு புராணத்திலோ தராதலம் படைக்க சக்திதோன்றிச் சக்தியில் சிவம் தோன்றிச் சிவத்தில் நாதம் தோன்றி, நாதத்தில் விந்துதோன்றி, விந்துவில் - விஷ்ணுதோன்றி, விஷ்ணுவில் பிரம்மா தோன்றி, பிரம்மாவில் உலகம் ஆகாயம் வாயு அப்பு பிருதிவி அக்னி மனிதர் மிருகம் பக்ஷி தாவரவர்க்கம் முதலியவைகள் உண்டாயின வென்று இயற்கைக்கும் பகுத்தறிவிற்கும் பொருந்தாதவிதமாக ஒன்றிலிருந்து ஒன்று தோன்றியது முதலான பல விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன, என்று இவ்விஷயங்களைப் பற்றி மிகவும் இழித்துக் கூறியுமிருக்கின்றார். இதுநிற்க,

வைணவ சமயத்தில், "நாராயணன் நான்முகனைப் படைத்தான்; நான்முகன் தானும் நான்முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்" என்று திருமழிசை யாழ்வார் அந்தாதியில் கூறுகின்றார். இன்னும் வைணவ சித்தாந்தத்திலும் பிரம்மர் உலகமுதலாக பலவகைகளையும் சிருஷ்டித்தா ரென்றும் கூறுகின்றது.

சைவ சமயம், பிரம்மமென்பது பெரியவைகளுக் கெல்லாம் பெரிதெனவும், அதற்குப் பெரிது யாதொன்றுமில்லை யென்றும் சொல்வதுடன் அது அசரீரியென்றும், அருவமா மெங்கும் நிறைந்துள்ள முதற்றெய்வ மென்றும், சக்தியென்னும் பெண் பிரம்மா விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூவர்களைப் பெற்றாளென்றும், இன்னும் சக்தி சராதலம் படைக்கத் தோன்றிப் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மனிதர் முதலானவர்களைத் தோற்றுவித்தாளென்றும், இவ்வாறு ஒன்றனுள் ஒன்று தோன்றிற்றென்றும், சத்துவ முதலான முக்குணங்களால் முதற் கடவுள் பிரம்மா முதலான மூவராய்த் தோன்றினாரென்றும் ஒன்றுக்கொன்று மாறுதலாகக் கூறுகின்றது. வைணவசமயத்தில் விஷ்ணு பரமபத (மோக்ஷ)த்தில் இலக்ஷ்மி சகிதம் சர்ப்பத்தின் மீது வீற்றிருப்பதாகவும் கூறுகின்றது.

சைவ வைணவ சமயங்களுக்கு வேதங்கள் ஒன்றாக இருந்தும் மோக்ஷத்திலுள்ள கடவுள் தன்மைகள் பலவாறு ஒன்றோடொன்றொவ்வாமல் பொய்த்தோற்றங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன.

இங்குக் கூறியவற்றைக்கொண்டு ஆராயும்போது மோக்ஷத்திலுள்ள பரம்பொருள் (பிரமம் நாராயணன் இவர்கள்) முதற்கடவுளென்றும் ஆதிபகவனென்றும் சைவ வைணவ சமயங்களில் சொல்லப்படுவது அசரீரியா? அதாவது சரீரமில்லாதவரா? ஸ்திரீலிங்கமா? புருஷலிங்கமா? என மேல்கண்ட புராண முதலான சாஸ்திரங்களால் ஐயப்பாடுண்டாயிருக்கின்றது. அங்ஙனமிருக்க, அபாரஞானத்தையுடைய திருக்குறளாசிரியர், 'ஆதிபகவன், என்று கூறியது சைவ வைணவ சமயங்களில் கூறும் பொருளற்ற முதற்கடவுளைத்தான் குறிக்கும் என்றும், முதற்கடவுள் இவ்வுலகை இயற்றியவ ரெனவும் உயர்திரு உருத்திரகோடீஸ்வர சுவாமிகளும், மற்றும் சில

சைவ வைணவ, பண்டிதர்களும் கூறுவதும், பரிமேலழகர், "உலகிற்கு முதல் ஆதிபகவனென்பது கருத்தாகக் கொள்க" வென்றும், "இச்செய்யுளால் முதற்கடவுளது இருப்புச் சொல்லப்பட்டது" என்றும் முதற் குறட்பாவின் உண்மைக் கருத்தறியாமல் பொருத்தமற்ற பொருள் கூறி யிருத்தலும் கிஞ்சித்தும் பொருந்ாதவை யென்பதை யாவரும் எளிதில் உணரலாம்.

ஆசிரியர் அருளியுள்ள, "இரந்துமுயிர்வாழ்தல்.........உலகியற்றியான்" என்கிற குறட்பாவைப் பற்றியவிஷயம் வருமிடத்துச் சிருஷ்டியைப் பற்றி மறுத்துக்கூறி யிருக்கின்றோம்; அங்கு அவற்றைப் பரக்கக்காணலாம்.

"உலகம் என்ஞான்றும் நிலைபெற்றிருப்பதெனவும் உலகத்தின் ஸ்வரூபமும் சுருக்கமாக இப்புத்தகம் 21-வது பக்கமுதல் 31-ஆம் பக்கம்வரையில் விவரித்துக் கூறியுள்ளேன்; ஆங்குக் கண்டு கொள்க.

மோக்ஷத்தின்ஸ்வரூபமும் அதில் பரஞ்சோதி (பிரமம்) மயமாயுள்ள கடவுள் (சித்தர்) தன்மையையும் இப்புத்தகம் 129-130-ஆம் பக்கத்தில் விளக்கியுள்ளேன்; ஆங்குக் கண்டுகொள்க.

இன்னும் திருவள்ளுவனார் உயிர் நிலைபேறுடையதெனக் கூறியிருக்கின்றாரென்றும், அது ஜைநசமயத்திற்குப் பொருந்தாது எனவும் ஷை சுவாமிகள் கூறியிருக்கின்றார்கள். அது தவறு; உயிர் நிலைபேறுடையதென்பதே ஜைநசமயக்கொள்கை. உயிர் நிலைபேறுடையதன்று என்பதை எந்த ஜைந நூலும் கூறமாட்டாது. அம்மாதிரி எதிலாவது கூறப்பட்டிருப்பின் அதைச் சுவாமிகள் எடுத்துக்காட்டுவார்களாக. அப்படிக்கில்லாமல் சொல்வது சரியன்று. உயிர் நிலைபேறுடையதென்பதே ஜைந சமயசித்தாந்தம். அதைத்தான் குறளாசிரியர்,

"மன்னுயிர் சோம்பி யருளாள்வாற் கில்லெலன்ப
தன்னுயி ரஞ்சும் வினை"

என்று கூறியிருக்கின்றார்.

இதனை,

"தன்னுயிர் தான்பரிந்தோம்பு மாறு போன்
மன்னுயிர் வைகலு மோம்பி வாழுமே
மின்னுயிர்க் கிறைவனு மின்ப மூர்த்தியாய்ப்
பொன் னுயிராய்ப் பிறந்துயர்ந்து போகுமே."

என்று சீவகசிந்தாமணி 3107-ஆம் கவியும் கூறுகின்றது.

இன்னும்,

"மன்னுயிர் வருத்தங் கண்டும் வாழ்வதே வலிக்குமாயி
லன்னவ னுண்மையாவ தலிபெற்ற வழகுபோலாம்."

என்று குளாமணி சீயவதைச் சருக்கம் 203-ஆம் கவியினடிகள் கூறுகின்றன.

இந்தக் கவிகளின் கருத்தை நன்கு ஆராய்ந்தால், "நிலைபேறுடைய உயிர்களை இரக்ஷிப்பவன் சக்கிரவர்த்தி பதவியையும், அருகந்த பதவிக்குள்ள சிறப்பையும், அடைவானென்பதையும், அவ்வுயிர்களின் வருத்தங்கண்டும் வன்மனதுடன் வாழ்பவனுடைய ஆண்மைத்தனம் அலிபெற்ற வழகுபோலாம், என்பதையும் உயிர் நிலைபேறுடைய தென்பதையும், அவ்வாறு சொல்வது ஜைநசமய சித்தாந்த மென்பதையும் அறிதல் கூடும்.

இன்னும் இல்லறம் முன்னும், துறவறம் பின்னுமாக திருவள்ளுவர் கூறுவதால் அவர் ஜைநசமயத்தைத் தழுவினரல்லர் என்று உருத்திரகோடீஸ்வர சுவாமிகள் கூறுகின்றார்கள். ஜைநசமயத்தில் துறவறம்முன்னும் இல்லறம்பின்னுமாக இருக்கவேண்டு மென்பது எந்தச் சாஸ்திரங்களிலும் இல்லை. அப்படியிருக்குமாயின் சுவாமிகள் அதை எடுத்துக் காட்டியிருக்கலாம்; அவ்வாறு காட்டாமல் சொல்வது முழுப்பிசகு.

ஆதிபகவான் கர்மபூமியின் ஆதியில் தாமே விவாக முதலானவைகளைச் செய்து இல்லறத்திற்குரிய தர்மார்த்த காமமென்னும் த்ரிவர்க்கத்தை நடத்திக்காட்டியதின் பிறகு, பிரஜைகளுக்கு நாடு நகரம் முதலியற்றை உண்டாக்கி ஷட்கர்மத் தொழில்களையும், இல்லறத்திற்குரிய விவாக முதலானவைகளையும் உபதேசித்துப் பின் துறவையெய்திக் கேவலஞானத்தைப்பெற்றுத் துறவறத்தை

மக்களுக்கு உபதேசித்தாரென்பது முதல் வேதமாகிய மகாபுராண ஸ்ருதியின் வாக்கியம். இதைக்கொண்டே இல்லறம் முன்னும், துறவறம்பின்னும் இருக்கவேண்டியது ஜைநசமயசித்தாந்த மென்பது துணியப்படும்.

இன்னும் இல்லறம் முன்னும், துறவறம் பின்னும் என்பதைப் பதினன்கு குணஸ்தானங்களின் விஷயங்கள் இப்புத்தகம் 205-வது பக்கமுதல் 215-வது பக்கம்வரையில் விவரித்துள்ளேன்; அங்கு விளக்கமாகக் கண்டுகொள்க.

ஆனல் நாலடியாரில் துறவறம் முன்னும், இல்லறம் பின்னுமாக இருப்பதைக் கொண்டு சுவாமிகள் மேற்கூறிய அபிப்பிராயத்தைச் சொல்லியிருக்கக்கூடும். அக்கருத்து முற்றிலும் தவறு. ஏனெனில், நாலடியார் ஒருவரால் செய்யப்பட்டதல்ல; பலரால் செய்யப்பட்டுப் பிற்காலத்தவரால் அதிகாரமுறையாக வகுக்கப் பட்டது. அங்ஙனம் அதிகாரம் வகுத்தவர் ஜைநராகிய பதுமனுராகவிருந்தும் இங்ஙனம் ஏன் மாறுபட்டதெனின், திருக்குறள். அதிகாரமுறை முதலானவைகளைப் பிற்காலத்தவர் மாற்றியிருப்பதுபோல இதன் இயல்களையும் மாற்றியிருக்கக்கூடும்

ஆகையால் உயர் திரு. உருத்திரகோடீஸ்வர சுவாமிகள் திருவள்ளுவர் ஜைந சமயத்தைத் தழுவி ஒழுகினவரல்லர் என்று கூறியுள்ளது மேல்கண்ட பலகாரணங்களால் தவறு என்பதை எளிதில் உணரலாம்.

ஆதலின் தலைமைவகித்த திருவாளர். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள், "பழைய தமிழருடைய சமயம் ஜைநசமயமேயாம்; திருவள்ளுவனரும் ஜைநரேயாவர்; அவர் தம் நூலும் ஜைந சமயச் சார்பான நூலேயாகும்; ஆகலின் சுவாமிகள் திருக்குறளைப் பொது நூலெனக்கூறுவதை நான் உடன்படேன்" என்று மறுத்துக் கூறியுள்ளது ஒப்புக்கொள்ளத்தக்கதே யாகும்.

10-வது, ஸ்ரீமான். டி. குப்புசாமி சாஸ்திரியார் எம். ஏ. அவர்கள் உண்மையாகவே "திருக்குறளை இயற்றியவர், ஜைந சமயத்தினரென்று மறுக்கக் கூடாத அநேக ருஜுக்களால் நிச்சயப்படுத்தலா மென்று கூறியுள்ளார். அந்த அபிப்பிராயத்தை

இப்புத்தகத்தில் கடவுள் வாழ்த்து முதலாக எடுத்துக் காட்டியுள்ள மேற்கோள்கள் உறுதிப்படுத்தும்.

11-வது, திருவாளர் ஆர். பி. சேதுப்பிள்ளை பி. எ. பி. எல். அவர்கள் எழுதியுள்ளவற்றை ஆராயுமிடத்து, அவர், சைவ சமயத்திற் காணப்படும் உயரிய விழுமிய கொள்கைகளும், கருத்துக்களும் திருக்குறளில் காணப்படுகின்றன வென்பதும் உண்மையே யாகும்'' என்றும், ''ஆசிரியர் கருத்தும் சைவசமய நாற் கருத்தும் ஒன்றே யென்பது தெரியலாகும்'' என்றும், ''திருக்குறள் சைவசமய நூல்களுள் ஒன்றாகவே கருதப்படுதல் தெளிவாக விளங்கும்'' என்றும் எழுதி, மேலும், திருக்குறளில் 'தாமரைக் கண்ணான் உலகு' என்பது இருப்பதைக் கொண்டு வைணவரும் அதைத் தம்சார்பான நூலென்று கருதுகின்றார்கள்.'' என்றும், ''பௌத்த சமண சமயத்தினர் அதைத் தம் சமய நூலென்று பாராட்டி மகிழ்கின்றனர்'' என்றும், ''சமணமதத்தில் பூமேல் நடந்தான், என்ற சொற்றொடர் காணப்படுவதால் திருக்குறளில் 'மலர்மிசையேகினான், என்ற சொல் வருவதைக் கொண்டு அதை அச்சமயத்தினர் தம் சமயநூலென்று கருது கின்றார்கள்'' என்றும், ''தலைப்பட்டார் தீரத்துறந்தார்'' என்பது திருக்குறளில் வருவதைக் கொண்டு பௌத்தமதத்தினர் அதனை அம் மதச்சார்பாய் எழுந்த நூல் என்று கருதுவாரு முளர்'' என்றும் எழுதியிருக்கின்றார்கள். பின்னை அவர்கள் இவ்வாறு எழுதியவற்றில் சைவசமயத்திற்குரிய விஷயங்களை அழுத்தமாகவும், மற்ற சமயத்துக்குரியனவாகத் தாம் சொல்லுமவற்றைப் பற்றி, மகிழ்கின்றார்கள், கருதுகின்றார், கருதுவாருமுளர், என்று சொல்வதால் இவர் சைவ சமயப்பற்றுடையவரென்பது நன்கு விளங்குகின்றது.

இவர் கருத்தின்படி திருக்குறள் சைவசமய நூல்களுள் ஒன்றாகவும், சைவத்தின் உயரிய விழுமிய கொள்கைகளுள்ளதாயும் இருக்குமானால், மேல் 23-ம் பக்கத்தில் மூன்று குறட்பாக்களால் நாம் ஜைநசமயத்திற்குரிய நேரான கருத்தை எடுத்துக் காட்டியது போல இவர்களும் சைவக்கருத்துக்களை நேராக விளக்கும் குறட்பாக்களை எடுத்துக் காட்டித் தம் கொள்கையை நிலைநிறுத்த வேண்டும்; அங்ஙனமின்றிக் கூறுவது பொருத்த மற்றதா

கும். பிள்ளை அவர்கள் கூறுகிறபடி, "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்ற குறள்கருத்து இந்துக்கள் சமயத்தைச்சாராது; ஜைநசமயத்தையே சார்ந்ததாகும்; இது அடியிற் கூறும் விஷயத்தால் தெளிவாகும். அதாவது: மனுஷ்யஜாதி என்பது ஒன்றாகவிருப்பினும் அவரவர்கள் தொழிலின் முறைமையால் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ரென்கிற நான்கு வர்ணாஸ்ரமங்களை யுடையவரானார்கள் என்பது ஜைநசமய முதல்வேதமாகிய மகாபுராண ஸ்ருதியின் வாக்கியம். இதற்கு ஆதாரமுள்ள சுலோகமும், மற்றவிபரங்களும் இப்புத்தகம் 72-73-ஆம் பக்கத்தில் காட்டப்பட்டிருக்கின்றன; ஆங்குக் கண்டு கொள்க.

இன்னும் மேல்கூறியதற் கிணங்க,

> "அன்றியு மறனு மொன்றே யரசன்யான் வணிகனீயே
> யென்றிரண் டில்லை கண்டா யிது நினதில்லமென்றான்"

என்று சீவகசிந்தாமணி 544-ஆம் கவியினடிகூறுகின்றது முணர்க.

(இ - ள்.) அன்றியும் சமய(அற)மும் ஒன்றே, ஆதலின் யான் அரசன், நீ வணிகனென்று இரண்டுஜாதியில்லை, இது நின் இல்லம் என்பதாம்.

இக்கவியில் கூறியுள்ளவற்றாலும் க்ஷத்திரியன் வைசியன் என்கிற ஜாதிபேதமில்லை தொழில்முறைமையால் என்பது கண்டுகொள்க.

இம்மாதிரி திருக்குறளிலிருந்து, தம்கொள்கையை ஸ்தாபிக்க நேரான கருத்துக்களை மேற்கோளாக எடுத்துக்காட்டாமல், திருக்குறளில் உள்ள, 'எண்குணத்தான்' என்ற பெயரை அப்பர், சுந்தரர், முதலியோர் சிவபிரானுக்கு உள்ளதெனச் சொல்வதைக் கொண்டும், உய்யவந்த தேவநாயனர், 'சார்புணர்ந்து' என்கிற குறட்பாவையும், அதற்குப் பரிமேலழகர் எழுதிய விசேஷ உரைகளையும் சேர்த்து ஓர் செய்யுளாக இயற்றியதைக் கொண்டும் அது தம்மதத்தைச் சார்ந்ததெனச் சொல்வது திருக்குறளின் நேரான கருத்தாகாது. 'சார்புணர்ந்து' என்கிற குறட்பாவிற்குப் பரிமேலழகர் உரை பொருந்தாதிருக்கும்போது உய்யவந்த தேவநாயனர் செய்யுள் திருக்குறள் கருத்திற்கு எங்ஙனம் பொருந்தும்; முற்றிலும் பொருத்தமாகாது.

இன்னும், "தேவர் குறளும் திருநான்மறை முடிவும் மூவர் தமிழும் முனிமொழியும்...ஒருவாசகம்" என்பதுவும் பொருந்தாது. இதர நான்மறை முதலானவைகளில் அஜயாகம், பசுயாக முதலானவைகள் செய்யும் விதிகள்கூறப்படுகின்றன. மூவர்தமிழிலும் ஜைநசமத்திற்கு விரோதமான யாகம்முதலியன உடன்பாடாகக் கூறப்படுகின்றன; திருஞானசம்பந்தர், "பறப்பைப்படுத்தெங்கும் 'பசுவேட்டெரி யோம்பும்" என்ற தேவாரத்தினால் யாகத்தைச்சிறப்பித்துக் கூறியிருக்கின்றார். திருக்குறள் "அவி சொரிந்தாயிரம் வேட்டலின்" என்றகுறட்பாவினால் யாகத்தைக்கண்டித்திருக்கின்றது. ஆதலின் திருக்குறள் நான்மறை மூவர்தமிழ் முதலானவைகள் ஒன்றென்பது கிஞ்சித்தும் பொருந்தா தென்பதை உணர்க.

"தாமரைக் கண்ணானுலகு", "தலைப்பட்டார் தீரத்துறந்தார்" என்ற குறள்களும் வைணவ, புத்தசமயங்களுக்குப் பொருந்தியவையெனச் சொல்ல வியலாதென்பதை, இப்புத்தகத்தின் சார்பாக வரும் இரண்டாம்பாகத்தில் அந்தந்தக் குறட்பாக்களைப் பற்றிய விஷயங்கள் வருமிடத்து நாம் விளக்கிக் காட்டியிருக்கின்றோம். அங்குக்கண்டுகொள்க. "மலர்மிசையேகினான்" என்னும் குறள் அருகக்கடவுளுக்குப் பொருத்தமான தென்பதை மேல்விவரித்திருப்பதுடன் இப்புத்தகம் 118-வது பக்கமுதல் 123-வது பக்கம் வரையில் விளக்கமாகக் காட்டியிருக்கின்றோம்.

இன்னும் ஸ்ரீ. சேதுப்பிள்ளை அவர்கள் ஆசிரியரது தாய் தந்தையர் பெயர்கள் 'ஆதிபகவன்' என்னும் சொற்றொடர்கள் ஆசிரியரின் ஆதிக்குறளில் அமைந்துள்ளதால் அறியப்படுவதல்லாமல் வேறு சான்றுகளால் ஆராய்வதற் கிடமில்லை என்றார். இவர் இம்மாதிரியூகித்தல் தவறு. திருக்குறள் இயற்றிய ஆசிரியரின் உண்மைச் சமயமே இன்னதென பல பண்டிதர்களுக்கும் விளங்காமல் பலர் பலவாறு கூறிவருகின்றார்கள். இப்படிக்கிருக்க; ஆசிரியரின் தாய் தந்தையர் பெயர் எவ்விதமிருப்பினுமென்ன? ஆசிரியர் "கடவுள் வணக்கம்," என்ற அதிகாரத்தில் இறைவனைக் குறித்து 'ஆதிபகவன் என ஆதிக்குறளில் மொழிந்திருக்க ஆசிரியரின் தாய் தந்தையர் பெயர்கள் என்பது எக்காரணத்தைக் கொண்டு சொல்ல முடியும்? இவர் இம்மாதிரி கூறுவது பகவன் என்னும் பிராமண

னுக்கும் ஆதி யென்கிற பறைச்சிக்கும் பிறந்ததாகக் கூறும் போலிக் கதையைக் கொண்டு மேல் கண்டவாறு கூறினர் போலும்! திருவள்ளுவனரின் தாய் தந்தையர் உள்பட அவர் சரித்திரம் உண்மையா யிருக்குமாயின் அது அவர் காலத்திலுள்ள புலவர்கள் செய்யுட்களாகச் செய்திருக்க வேண்டும். அஃதில்லை; ஆதலின், அக்கதையைப் பூராவும் நம்பத்தக்கதன்று.

திருவள்ளுவனர் திருக்குறளின் பாக்களைக் கொண்டு அவர் இன்ன சமயத்தினரென்று உறுதிப்படுத்த வேண்டும்; அப்படிக்கில்லாமல் ஏடும் எழுத்தாணியும் கொண்டு கஷ்டப்பட்டு எழுதுங் காலம் கழிந்து அச்சு யந்திரம் ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில் சுலபமாய் கட்டுக்கதைகள் யெழுதி 1000, 10000 புத்தகங்கள் நாவல்களென வெளிப்படுத்தும் கதைகளைப் போல திருவள்ளுவரைப்பற்றியும் தற்கால போலிப்புலவர்கள் பொய்க் கதையினையெழுதித் திருக்குறளோடு சேர்த்து அச்சிட்டிருப்பதைக் கொண்டு பிள்ளை அவர்களும் ஆசிரியரின் உண்மைச்சமயத்தைத் திருக்குறள் பாக்களைக் கொண்டு ஆராய்ந்து அறியாமல் திருவள்ளுவனர் தாய் தந்தையர் பெயர்களை ஆதிக்குறள் தவிர வேறு சான்றுகளால் ஆராய்வதற்கிடமில்லை என்பது முற்றிலும் பொருத்தமற்றதாம்.

இன்னும் பிள்ளை அவர்கள், எல்லாச் சமயங்களுக்கும் எல்லாச் சாதிகளுக்கும் திருக்குறள் பொது நூலாய் விளங்குகின்றதெனவும், நாயனர் பிறந்து வளர்ந்த இடமும் அவர் பெற்றோரது குலமும் நலமும் தெரிய வொண்ணுத புதைப்பொருளாக விருக்கின்றன என்றும் கூறி விட்டு ஆசிரியருக்குச் சைவ சமயத்திற்குரிய சின்னங்களமைந்த போலி உருவப்படத்தைத் தாம் அச்சிற் பதிப்பித்தத் திருக்குறள் புத்தகத்தின் தலைப்பில் சேர்த்திருக்கின்றார். இதனல் திருக்குறளாசிரியரை சைவசமயத்தினர் என்பதாகக் கொண்டு உருவப்படத்தின்மூலமாக வெளியிட்டிருக்கின்றனர்போலும்.

இவ்வாறு திருக்குறள் ஆசிரியருக்குச் சைவசமயத்தின் அடையாளங்களுள்ள உருவப்படத்தை அமைத்துத் திருக்குறள் புத்தகத்தில் சேர்த்திருப்பதைப்பற்றித் "திராவிடன்" 1928 ம் வருஷம் டிசம்பர்மீ 1௨ பத்திரிகையில், "சைவசமயமும் சைவர்களும்" என்ற வியாசத்தில்,: "திருவள்ளுவருக்குச் சைவவேடம் புனைந்தது

அவர் சைவரெனத் தீர்மானிக்கச் செய்த சைவக்குறும்பே ஒழிய வேறில்லை" என்று ஸ்ரீமான். சி. இராஜரத்தினம் அவர்கள் கண்டித்துள்ளதினாலும் அவ்வுருவப்படம் பொருத்தமற்றதென்பது விளங்கும்.

சைவசமய சித்தாந்தத்தின் கருத்துக்கள் திருக்குறளில் அமையாதிருந்தும், அஃதறியாமல், "திருமுடிமிசையார் மயிர் முடியழகுக் தீர்க்க புண்டரநுதலழகும்" எனப்போலிப் புலவர் பாடிய செய்யுளுக்கிணங்க இவர்கள் அவருக்கு உருவப்படத்தை அமைத்ததனாலும், சென்னை மயிலாப்பூரில் சிலவருஷங்களுக்கு முன் திருக்குறளாசிரியர் உண்மைச் சமயத்தை அறியாமல் ஆலயம் நியமித்துக் கொண்டிருப்பதனாலும் ஆசிரியர் சைவரென சொல்லுதல் கிஞ்சித்தும் பொருந்ாது.

இனித் திருவள்ளுவமாலையைப்பற்றி உண்மையையும் சிறிது விளக்குவோம்; இதைப்பற்றி ஸ்ரீமத். ச. சோமசுந்தர பாரதியார் எம். ஏ. பீ. எல் அவர்கள் கூறிய கருத்துக்களையும், உயர்திரு. உருத்திரகோடீஸ்வர சுவாமிகள் நிகழ்த்திய சொற்பொழிவுகளையும் மேலே விவரித்திருக்கிறோம்; அவற்றால், திருவள்ளுவமாலை திருவள்ளுவருக்குப் பிற்காலத்துப்புலவர் செய்தனென்பது ஒருவாறு விளங்கும்; அவ்வாறு செய்ததென்பதற்குப் பலகாரணங்களுண்டு. அவற்றையும் விவரிப்பாம்:

திருவள்ளுவமாலையில் 53 வெண்பாக்கள் காணப்படுகின்றன. அங்ஙனமிருப்ப. "சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர் நாயனாரையும், திருக்குறளையும் புகழ்ந்து 49 வெண்பாக்கள் பாடினர். அவற்றைக்கொண்ட அந்நூல் திருவள்ளுவமாலை எனப் பெயர் பெறும்" என்று திருவள்ளுவர் கதைகூறுகின்றது. மேற்கூறிய 53 வெண்பாக்களில்

"அறம்பொரு ளின்பம் வீடென்னுமக் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்"

என்ற செய்யுள், மாமூலனாரால் செய்யப்பட்டதாகக் காணப்படுகின்றது.

இ - ள்: "அறமுதலாகச் சொல்லப்பட்ட அவ்வேதப் பொருள்களாகிய நான்கினது கூறுபாட்டையும் அறிந்து உலகத்தார்க்குச் சொல்லிய தேவனை மறந்தாயினும் (ஒருமனிதனாக உட்கொண்டு) வள்ளுவனென்று சொல்லுதற்கு ஒருவனுளனாயின் அவன் அறிவில்லாதவனவன்; அவனது வாயிற்பிறந்த அச்சொல்லை அறிவுடையார் கொள்ள மாட்டார்" என்பதாம்.

இவ்வுரையினால் திருக்குறளாசிரியரை வள்ளுவரென்று சொல்லலாகாதென்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அங்ஙனமிருப்ப, மேல்படி 53. வெண்பாக்களில் 7-8 வெண்பாக்கள், நீங்க மற்றவைகள் மாமூலனார் சொல்லுக்கு மாறுதலாக, 'வள்ளுவர்' என்ற பெயரையே குறித்துள்ளன. இவ்வாறு அசரீரி, இறையனார், நாமகள், உக்கிரப்பெருவழுதி அரசன் முதலானவர்கள் பாடியனவாகச் சொல்லப்படும். 45 வெண்பாக்கள் வள்ளுவரென்றே கூறியிருப்பதாலும், மாமூலனார், 'வள்ளுவனென்று சொல்லுதற்கு ஒருவனுளனாயின் அவன் அறிவில்லாதவ' னென்று கூறுவதாலும் மாமூலனார், திருவள்ளுவர் ஆகிய இவர்கள் முன்பாக திருவள்ளுவமாலைப்பாக்களில் ஒன்றேனும் பாடப்பட்டதல்லவென்பது நிச்சயமாக விளங்கும்.

மாமூலனாருடன் மற்றப்புலவர்கள் இருந்தது உண்மையாயின் மற்றவர்கள் வள்ளுவரென்று பாடியிருக்க மாட்டார்கள். அப்படி செய்திருப்பினும், மாமூலனார் செய்யுளைக்கொண்டு திருவள்ளுவனாரின் தாய்தந்தை முதலானவர்களுடைய பாரம்பரையை விசாரித்துப் பிறகு வள்ளுவரென்று பாடியதை மறுத்துத் திருவள்ளுவனாரின் உண்மைச் சமயத்தை வெளியிட்டிருக்கவேண்டும். அங்ஙனமில்லாமையால், திருவள்ளுவமாலை மாமூலனார் முதலாக ஐம்பத்துமூவர்பாடிய தென்பதும், அவர்கள் திருவள்ளுவனார் காலத்தவர் என்பதும் பொருந்தாதென வென்பது வெளியாகின்றது.

இன்னும் திருவள்ளுவமாலை சங்கப்புலவர்கள் பாடியதாகச் சொல்வதில் ஓர் அதிசய மிருக்கின்றது. அதாவது, நக்கீரர் முதலிய சங்கப்புலவர்கள் தாம் அடைந்திருந்த கல்விப் பெருக்கத்தால் கர்வமடைந்து மிகப் பிரசித்திப் பெற்றுப் பலபண்டிதர்களை அவமதித்திருந்தவர்கள்; எல்லாப் பாவினங்களும் பாடவல்லவர்கள்; அப்பேர்ப்பட்டவர்கள் திருவள்ளுவமாலையைச் செய்திருந்தால் தங்கள் தங்களுக்கிசைந்தபடி வெவ்வேறு பாக்களால் செய்திருக்கவேண்டும்;

அங்ஙனமின்றி எல்லாச் செய்யுட்களும் வெண்பாக்களாகவே யிருப்பதால் இவற்றைச் சங்கத்தார்களென்பது முழுப்பொய்யென்றே துணியவேண்டிய தாயிருக்கிறது.

இன்னும் 49 வெண்பாக்கள் தவிர, அசரீரியால் உண்டான சொல்லைக்கொண்டு புலவர்களுள் (பெயரில்லாதவர்) ஒருவர் அதனைப் பாடலாகச் செய்தன ரென்னும் வரலாறொன்று கூறப்படுகின்றது. ஆனால், அவ்வாறு அசரீரியால் உண்டான சொல்லை ஒரு வெண்பாவாக ஒருவர் செய்ததான வரலாறு திருவள்ளுவர் கதையிலில்லை. பின்னும் அசரீரி அருவமாய் எங்கும் நிறைந்துள்ள முதற்றெய்வமென்றும், திருக்குறள் அரங்கேற்றத் தொடங்கிய காலத்து இவ்வசரீரி வாக்கியம் பிறந்ததென்றும் சிலர் கூறுகின்றார்கள். இதுவுமொரு விபரீதமாகும். திருவள்ளுவர் அரங்கேற்றத் தொடங்கிய காலத்து அரூபமாகவுள்ள முதற்கடவுளிடத்து ஐம்பொறிகளிலொன்றாகிய வாய்மாத்திரம் ஏற்பட்டு அதிலிருந்து ஓவென்னும் சப்தம் உதயமாயிற்று போலும்! உருவமில்லாதவர் ஓ வென்று ஒரு சொல் சொன்னா ரென்பதுவும் ஒரு பெரிய விசித்திரம்.

இன்னும் திருவள்ளுவமாலையில் இறையனாரென்னும் கடவுள், நாமகள் (சரஸ்வதி,) உக்கிரப்பெருவழுதி அரசன் ஆகிய இவர்கள் மூன்று வெண்பாக்கள் பாடியதாக ஒரு வரலாறு கூறப்படுகின்றது. இது திருவள்ளுவர் கதையிலில்லை. இம்மூவருக்குங்கூட சங்கப்புலவர்கள் போல வெண்பாக்கள் தவிர வேறு விதச்செய்யுட்கள் செய்யும் திறமை இல்லைபோலும்!

இவற்றை யெல்லாம் ஆராயுமிடத்துத் திருவள்ளுவமாலை திருவள்ளுவர் காலத்துச் சங்கப்புலவர்களால் பாடப்பட்ட செய்யுட்களைக்கொண்ட தென்று சொல்லத்தகுதியற்ற தாயிருக்கின்றது.

சங்கப்புலவர்களோ முதலில் திருவள்ளுவரோடு வாதாடிப் பின்னர் அவரால் அவமானமடைந்து அவரைப் புகழ்ந்தவர்கள். அப்பேர்ப்பட்டவர்கள் அந்த வரலாற்றையும் கூறியிருக்கவேண்டும்; அங்ஙனமின்றித் திருவள்ளுவரையும், திருக்குறளையுமாத்திரம் புகழ்ந்து பாடியிருக்கின்றார்கள்; திருவள்ளுவர் சங்கத்தைப் பங்கஞ் செய்த வரலாற்றை ஒரு வெண்பாவிலேனும் சொல்லவில்லை.

இதனாலும் அசரீரி, இறைபனர், சரஸ்வதி முதலானவர்களும் சங்கப்புலவர்களும் வெண்பாக்களை பாடியதாகக்கூறப்படும் வரலாறு அண்டப் புளுகென்பதற் கையமில்லை.

12-வது ஸ்ரீமத் ச. சோமசுந்தரபாரதியார், அவர்கள், "திருவள்ளுவமாலையை ஒருவர் அல்லது ஒருசிலரே முன் சாவதான யோசனையுடன் பாடித்தொகுத்த பான்மையினை, அப்பாக்களே நிரூபிக்கின்றன வென்றும், அச்செய்யுட்களையுற்று நோக்குவார்க்கு அவைத்திருத்தமாகப் பொருத்தங்காட்டும் குறிப்புடன் எண்ணித் துணிந்து பாடிவைத்த பாட்டுகளென்பது விளக்கமாகுமென்று கூறியுள்ளது ஒப்புக்கொள்ளத் தக்கதேயாகும்.

13-வது உயர்திரு உருத்திர கோடீஸ்வரஸ்வாமிகள், "திருவள்ளுவமாலையின் வெண்பாக்கள் பண்டைப்பாட்டுகளின் நடையிலிருந்து வேறுபட்டிருக்கின்றன வென்றும் 'ஒரேவிதமான கருத்துக்கள் பலபாட்டுக்களில் வந்துள்ளன' வென்றும் அன்றியும் அப்பாட்டுக்களெல்லாம் யாரோ ஒருவரால் பாடப்பட்டிருக்கலாம்" என்று ஊகிப்பாரும் உளர் என்றும் மொழிந்துள்ளார். இவ்வாறு ஸ்வாமிகள் சொல்வதும் உண்மையென்றும் ஒப்புக்கொள்ளத்தக்கதே.

14-வது கடவுள், மன, வசன, காயங்கள் முதலிய பஞ்சேந்திரிய விஷயஸ்வரூபங்களின்றி, த்ரிலோகத்திலும், த்ரிகாலத்திலும் உற்பத்தி, ஸ்திதி, விநாசங்களோடுக் கூடிய உயிர்ப்பொருள், உயிரில்பொருள் சகலமும் ஒருங்கே க்ஷணப்பிரதி சமயந்தோறும் அறியும் தன்மையுடையவனாகலால் அரூபமாகவுள்ள முதற்கடவுளும் ரூபமாகவுள்ள கடவுளும் சங்கப்புலவர்களோடு திருவள்ளுவமாலை வெண்பாக்களைப்பாடினார்க ளென்பது கட்டுக்கதை, என்பதற்கையமில்லை. சரஸ்வதி பாடினாளென்பதும் இத்தன்மைத்தே என்பது துணிவு. மற்றும் யான் மேல் எடுத்துக் காட்டிய காரணங்களாலும் திருவள்ளுவமாலையும் திருவள்ளுவர் கதையைப்போல போலிப்புலவரால் செய்யப்பட்டதென்பதை நன்கு உறுதிப்படுத்துகிறது.

இதுவரையில் திருக்குறளைப் பற்றியும், அதன் ஆசிரியரைப் பற்றியும், பல ஆராய்ச்சிகள் நிறைந்த பண்டிதர்களின் அபிப்பிரா

யங்களைப் பற்றியும், தொல்காப்பியம் இறையனாரகப்பொருள் ஆகிய இரண்டு இலக்கணங்களை இயற்றிய ஆசிரியர்களைப் பற்றியும் ஆராய்ந்து, அவர்கள், ஜைனர் என்பதற்கேற்பட்ட ஆக்ஷேப சமாதானங்களை எடுத்துக்காட்டி அந்த மூன்று ஆசிரியர்களும் ஜைன மகாமுனிவர்களே என்பதை ருஜுப்படுத்தி யுள்ளோம்.

இனி அகஸ்தியர் அல்லது அகத்தியர் என்னும் முனிவருடைய சரித்திரத்தையும் ஆராய்ந்து வெளியிடுவாம். போகத்தியஞ் செய்த அகத்தியரும் ஜைனர் என்பது விளக்கமாகின்றது. அதற்குரிய ஆதாரங்களை எடுத்துக்காட்டி, அவர், ஜைனர் என்பதின் உண்மையை விளக்குவாம்:

திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பட்ட தொல்காப்பியம் எழுத்ததிகாரம் தலைப்பில், திருவாளர். கா—சுப்பிரமணியம் பிள்ளை எம்-எ-எம்-எல் அட்வகேட் அவர்கள் எழுதியுள்ள முகவுரையில்,

"தொல்காப்பியர் காலத்தே சமணம், புத்தம் முதலியன இடையா; வைணவம் ஒரு சமயமாகப் பரிணமிக்கவில்லை; மால் வழிபாடு மாத்திர மிருந்தது; ஆசிரியர் அகத்தியனாரது சமயம் சைவம் என்பது தெளிவாதலால் தொல்காப்பியரது சமயமும் அஃதே வென்று கொள்ளுதல் பொருத்த முடைமை காண்க" என்றும், "புத்தம், சமணம் முதலிய மதங்கள் உண்டாவதற்கு முன்னேயும், கி. மு. நான்காம் நூற்றாண்டிற் றிகழ்ந்த பாணினி முனிவர் காலத்திற்கு முன்னேயும் தொல்காப்பியம் இயற்றப்பட்ட தென்பது தெளிவு" என்றும், "இந்நூலுட் சிலபகுதிகள் பிற்காலத்துச் சேர்க்கப்பட்டனவாகக் கருத இடமுண்டு; அவைகளிற் பல ஆரியக் கலப்பு மிகுந்த பின்னரே சேர்க்கப்பட்டன வென்று கொள்ள வேண்டும்" என்றும் "தொல்காப்பியரையும், அகத்தியரையும், புத்தர் அல்லது சமணரென்று சொல்வது உண்மைச் சரித்திரத்திற்கு முற்றும் மாறாகவுள்ள ஒரு தப்பு மொழியாகும்" என்றும் கூறுகின்றார்.

பிள்ளை அவர்கள் கூறும் கூற்றுக்கள், சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் ஒப்புக்கொள்ளக் கூடியனவல்ல. அகத்தியர், தொல்காப்பியர் ஆகியவர்களின் காலத்தில் தென்தேசத்தில் சைவ சமயமும்

சிவன் வழிபாடும் இல்லை யென்பது சில நூல்களின் ஆதாரங்களால் தெளிவாகின்றது. பிள்ளை அவர்கள் இதனை அறியாமல் அப்போதிருந்த சமணமதத்தை இல்லை என்றும், தொல்காப்பியரது சமயமும் அகத்தியனாரது சமயமும் சைவம் என்றும் கூறுவது முற்றிலும் பொருத்தமுடையதன்று. தொல்காப்பியர் காலத்தில் புத்தமதம் இல்லையென்று சொல்ல ஆதாரமுண்டு சமணமதம் இல்லையென்று எவ்வாறு கூறுதல் முடியும்? மேலே பண்டிதர்களின் அபிப்பிராயங்களில் எடுத்துக்காட்டிய விஷயங்களால் தொல்காப்பியர் சமணரென்பதும், அவர்காலத்திற்கு முன்னேயே சமணமதம் இருந்திருக்கின்றதென்பதும் தெற்றென விளக்கமாகும். இதனடியில் வரும் விஷயங்களால் அகத்தியரும் சமணரென்பது தெற்றென விளங்கும்.

பாணினி முனிவர் காலத்தில் சமணமத மில்லை என்பது பிள்ளை அவர்கள் கருத்து.

பாணினிமுனிவர் காலத்திற்கு முன்னமேயே சாகடாயனாசாரிய ரென்னும் ஜைநமுனிவர் சாகடாயனம் என்னும் வியாகரணத்தை இயற்றியுள்ளார். இதைப்பிள்ளை அவர்கள் அறிந்தாரில்லை, பாணினி முனிவர் காலத்திற்கும் முந்தியவர் சாகடாயனர் என்பது,

பாணினி அத். 8. பாதம். 4 சூத்திரம் 50-ல்

"த்ரிப்ர ப்ருதிஷு சாகடாய நஸ்ய

(த்ரிப்ர ப்ருதிஷு சாகடாய நஸ்ய "

என்று பாணினிமுனிவர் கூறியிருப்பதால் விளக்கமாகும்.

இச்சூத்திரத்தில் பாணினிமுனிவர் சாகடாயனர் கருத்தை மேற்கோளாகக் கூறியுள்ளார். இதுதவிர சாகடாயன முனிவர் வியாகரணத்திலிருந்து சிலசூத்திரங்களையும் எடுத்து ஆண்டிருக்கின்றார். இவற்றைக்கொண்டே ஜைந (சமண) முனிவராகிய சாகடாயன ஆசாரியரும், அவர் இயற்றிய வியாகரணமும் பாணினிமுனிவர் காலத்திற்கு முன்னமேயே இருந்திருப்பது வெளிப்படையாகும். இதனால் சமணமதத்தின் காலநிர்ணயத்தைப் பிள்ளை அவர்கள் அறிந்து கொள்ளலாம்.

தொல்காப்பியம் பொருளதிகாரம் பதிப்புரையில் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் கூறுவதாவது :—

"அகத்தியர் பால் தமிழ் நன்கு கற்றுணர்ந்த அவர் மாணாக்கர் திரணதூமாக்கினி, அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவிநயன், காக்கைபாடினியன், நற்றத்தன், வாமனன் ஆகிய பன்னிருவருள் முதல் மாணாக்கர் திரணதூமாக்கினி யென்னும் இயற்பெயருடைய தொல்காப்பியரவர்; தொல்காப்பியர் ஒருகாலத்துத் தமக்கு அகத்தியனாரால் வந்ததோர் மனத்தாபத்தினிமித்தம் இட்ட சாபத்தின் வலிமையினாலும் அகத்தியம் இறந்துபோக நேர்ந்தது, இல்லாவிட்டால் என்றென்றும் சிரஞ்சிவியா யிருக்கப் பெற்றுள்ள அகத்தியனார் அருளிச்செய்த நூல் சங்கத்தார் காலத்திற்றானே வீழ்ந்து போகாது; அதுவன்றே அவர் (தொல்காப்பியர்) ஆசாரியரைச் சபியாது அவராற் செய்த நூலைச் சபித்த தென்க' என்பதேயாம்.

போகத்தியத் திரட்டு என்னும் நூலின்கண் திருவாளர். ச. பவாநந்தம்பிள்ளை எம். ஆர். ஏ. எஸ் (லண்டன்) எப். ஆர். எச். எஸ் (லண்டன்) அவர்கள் முகவுரையில் எழுதியுள்ளதாவது:—

"அகத்தியமுனிவர் காசியம்பதியிலிருந்த வடமொழி வாணரோடு மாறுபட்டு அம்மொழிக்கு இணையான மற்றொன்றினை யருளுமாறு முருகக்கடவுளை இரப்ப, அக்கடவுள், 'இவ்விரக்கம் அறிவின் பாலதாகலின் இவற்கருள் செய்தும்' எனத் திருவுளங்கொண்டு ஓர் இடத்தைச்சுட்டி, 'அன்ப! அம்மூலைக்கண் உள்ளது சென்று கொள்க' எனலும், முனிவரர் விரைந்தோடி, 'தமிழ்! தமிழ்!!' எனக்கூவி அவ் வோலைச்சுவடிகளை வாரிக்கொண்டு வெளிப்போந்து முருகக்கடவுளை வணங்கி விடைபெற்றுத் தமிழ்மொழியை இவ்வுலகின்கண் நிலவவைத்தனர்"

"சிவபெருமான் பார்வதியைத் திருமணங்கொண்டகாலத்து முனிவர் அனைவோருந் திரண்டு வடக்கின் கண்ணுள்ள இமயமலையை யடைதலும், வடதிசை பொறை யாற்றாது தாழவும், தென்றிசை பொறையின்றி மேலெழவுங் கண்டபெருமான், அகத்தியரை நோக்கி, 'நீ விரைந்து சென்று தென்றிசைக் கண்ணுள்ள பொதியையில் தங்குக' எனலும், முனிவர், அவ்வருண் மொழியைச் சிரமேற்கொண்டு, 'எம்பெருமானே! தமிழ் மொழி தலைசிறந்து விளங்கும் அத்திசைக்கண் அடியேன் சென்று வாழ்ந்திருத்தல் எங்ங

னம்?" என்று விண்ணப்பஞ்செய்து அம்மொழியைச் சிவபெருமான் அருளப்பெற்றுச் சந்தனப்பொதியையடைய பூமி சமனுறக் கண்டு மகிழ்ந்து ஆண்டேவதிந்து தமிழ்மொழியை நன்குஆராய்ந்து இலக்கணமும் செய்து வைத்தனர்; இக்கூற்றுக்களின் உண்மை எவ்வாறாயினும் தமிழ்மொழி அகத்தியனுருந்து முன்னமே இந்நாட்டின்கண் நின்று நிலவிற்று என்பது பொய்மையாகாது. இவை போல்வன இன்னும் பல" என்பதே.

வீரசோழியம் பதிப்புரையில் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் கூறுவதாவது:—"ஆதியிற்றமிழ் நூலகத்தியர்க் குணர்த்திய மாதொரு பாகனை வழுத்துதும் எனவும், வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத் தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்தக் குடமுனிக்கு வற்புறுத்தார் கொல்லேற்றுப்பாகர் எனவும் தமிழுக்கும் ஈஸ்வரோற்பத்தியே கூறுவாருமுளர்; ஸம்ஸ்கிருதத்திற்குப் பாணினீயம் போலத் தமிழிற்கு ஆதிஇலக்கணம் செய்தவரன்றித் தமிழ் மொழியைத் தந்தவர் அகத்தியரல்ல ரென்றறிக; அகத்தியர் தமிழ்மொழியை அவலோகித முனிவர்பாற் கற்றுணர்ந்தா ரென்னும் அருகர் மதமும், சுப்பிரமணியக்கடவுளிடம் தமிழ்மொழியையும், சுவாமியிடம் அதன் இலக்கணத்தையும் ஓதியுணர்ந்தா ரெனக்கூறும் தமிழ் மதமும் அகத்தியர்க்கு முன்னும் தமிழுண்மைக்குச் சான்றாம்" என்பதே,

அகத்தியரைப்பற்றி கந்தபுராணம் அசுரகாண்டம் வில்வலன் வாதாபிப் படலத்திலும், அவர்களின் வதைப்படலத்திலும் கூறியிருக்கும் கதையின் சுருக்கமாவது:—

அசமுகி என்னும் இராட்சத ஸ்திரீக்கும், துருவாச முனிவருக்கும் வில்வலன் வாதாபி என்னும் இரண்டுபுத்திரர்கள் பிறந்தார்கள்; இவர்களிருவருக்கும் பிதாவாகிய துருவாசமுனிவர் சாபம் கொடுக்க அச்சாபத்திற்கிணங்க இருவரும் ஞானிகளாகிய தபஸிகளைக் கொல்வதே பலப்பிராப்தியென்று கருதிக்குடக காடு சென்று ஒருவனத்தில் காளுபகாத்தின் வழிகூடுமிடத்தில் ஓர் ஆஸ்ரமம் உண்டு பண்ணி அவ்வழிகளில் வரும் முனிவர்களைக் கொன்று புசித்து வந்தார்கள்.

அகத்தியர் ஒருநாள் வில்வலன் வாதாபி இவர்களின் ஆஸ்ரம வழியாகச் சென்றபோது வாதாபி வனத்தில் ஆடாக மேய்ந்து கொண்டிருந்தான்; வில்வலன் ரிஷிவேஷம் பூண்டு அகத்திய முனிவரைக் கண்டு தமதிடம் ஆகாரம் புசிக்கும்படி வேண்டிக்கொள்ள அகத்தியரும் சம்மதிக்க வில்வலன் முனிவரரை அழைத்துக் கொண்டு ஆஸ்ரமத்தில் உட்காரச் செய்தான். பிறகு ஆகாரத்துக்கு வேண்டிய அறுசுவை பதார்த்தவர்க்கங்களையும் தயார் செய்து விட்டு வனத்தில் மேய்ந்துகொண்டிருந்த தம்பியாகிய ஆட்டை குறு (அகத்திய) முனிவரெதிரில் வலித்து வந்து இருகூறாக வாளினுற் கண்டித்துத் தூக்கித்தோலைப் போக்கி உறுப்புகளை வெவ்வேருக்கிப் பதமாக பொரியல் குழம்பு வறல் முதலான பலவகைகளாகச் செய்தனன்.

பிறகு அகத்தியரை பீடத்தில் உட்காரவைத்துப் பொன்மயமான வாழையிலையைப் பரப்பி அதில் அன்னம் முதலிய அறுசுவை வர்க்கங்களை வெவ்வேருக வைத்து நெய் ஏராளமாக விட்டு ஆட்டினிறைச்சி வகைகளையும் புஷ்டியாக வைத்துப் பழவகைகளையும் வைத்தான். முனிவர் போஜனம் செய்யும் தருணத்தில் சுவாமி இந்தக் கறி பதார்த்தங்கள் மதுரமாகவிருக்கும்; இந்த மாமிசம் திவ்யமாகவிருக்கும் என்று சொல்ல, அகத்தியர் மனங்களித்து ஆகாரங்களைப்புசித்தபிறகு கைகால் சுத்தி செய்து உட்கார்ந்தார். வில்வலன் பழயபடி அப்பா தம்பீ வாதாபி சீக்கிரத்தில் வெளிவருவாய் எனக் கரங்களைத் தட்டியழைத்தான். அச்சத்தங்கேட்ட வாதாபி அகத்தியர் வயிற்றில் ஆட்டி னுருவம் பெற்று அண்ணு இதோ வந்துவிட்டேன் என்று சிங்கத்தைப் போன்று முழங்கிச் சொன்னுன். அதைத் திரிலோகங்களிலும் புகழ்ந்து வணங்கும் தவசிரேஷ்டராகிய கும்பமுனி கேட்டமாத்திரத்தில் இது கொடிய இராட்சதர் வஞ்சகமென்றறிந்து திருநீற்றைக் கரத்திலள்ளி 'ஓ மாம்ஸவகைகளினுற் செய்யப்படுங் கறியாகப் புசிக்கப்பெற்ற வாதாபி அவ்வாறே சீர்ணமியாகக் கடவை' யென்று மூன்று தரம் வயிற்றைத் தடவினுர். அப்போது உதராக்கினி கொளுத்த அப்பாதகன் மலமாய் விட்டான். இக்காரணங்களை எதிரிலிருந்த வில்வலன் தெரிந்து ரௌத்திராகாரமாகக் கோபித்து மாயவடிவை நீக்கிப் பழய கோலங்கொண்டு தண்டமொன்றை எடுத்துச் சுழற்றிப்பாய்ந்து முனிவர் சிரசில் மோதிக்கொல்ல வந்தான். அதை அகஸ்தியர் கண்டு உடனே தருப்பையைக் கிள்ளி பாசுபத மந்திரத்தை யுச்சரித்

துப் பிரயோகித்தார். அம்மாத்திரத்தால் தம்பியைப் போலவே வில்வனுஞ் சாம்பலாய் விட்டான்'' என்பதே.

"திராவிடன்'' 1929 ஆம் வருஷம் பிப்ரவரிமாதம் 5ம் தேதி பத்திரிகையில், "அகத்தியர் வெறும் கட்டுக்கதை'' என்னும் தலைப்பின்கீழ் வெளிவந்திருக்கும் உயர் திரு கா. ரா. நமசிவாய முதலியார் அவர்கள் சொற்பெருக்கின் சுருக்கமாவது:—

"நூல்களிலே திருவள்ளுவரது திருக்குறள் மேலாக மதிக்கப்படும் நூல். அதற்குப் பல உரைகளிருந்தும் நாம் அதிகமாகப் பார்ப்பது பரிமேலழகர் உரைதான். இவ்வுரையே அதிகமாக அச்சிடப்பட்டிருக்கின்றது. அதனைப் படிக்கும் போது சில ஆட்சேபங்கள் தோன்றுகின்றன. பல உரைகளும் வெளிப்பட்டிருக்குமானுல் இன்னும் பல விஷயங்களும், பல புதுக்கருத்துக்களும் தோன்றுமன்றோ. அது போல நான் எடுத்துக் கொண்டவிஷயமான அகத்தியரைப்பற்றி நூல்களில் என்ன சொல்லியிருக்கின்றதென்று பார்ப்போம்:

முதன் முதலாக ருக்வேதத்தில் இவர் பெயர் காணப்படுகிறது. அங்கே இவருக்கு, 'மாண்ய' என்ற பெயரிட்டழைக்கப் படுகின்றது. இதற்கு, 'மானவின் புத்திரர்' என்று பொருள். மான என்பது பிரம்மனுக்கு ஒரு பெயர். அதே நூலில் மித்திரவருணரது பிள்ளை யென்பது கூறப்பட்டிருக்கிறது. அது உண்மையா? இஃது தண்மையா? வென்று யோசனை செய்யவேண்டும். அகத்தியர் என்ற சொல்லுக்குப் பொருள் இன்னதென்று விளங்கவில்லை. இவ்வகத்தியர் உலோபாமுத்திரைஎன்ற பெண்ணைச் சந்தித்துப் பேசுகிறார்; அவர்கள் சம்பாஷனை இவ்விடம் சொல்வதற்குத் தகுதியற்றது.

இனிப்புராணங்களில் என்ன சொல்லுகிறதென்று பார்ப்போம்: மச்சபுராணத்திலே மித்திரவர்ணன் காமக்கிலேசனாகத் தனது வீரியத்தைக் குடத்தில் பெய்தானென்றும், அதுஒரு பிள்ளையாயிற்றென்றும், அதனாலேயே அவருக்குக் கும்பயோணி யென்ற பெயரொன்றும் ஒருகதை காணப்படுகிறது. கந்தபுராணத்தைக் கவனிப்போம்: அதில் அவர் பிறப்பு வளர்ப்பு ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனல், பூமி தென்பாலுயர்ந்தது வடபால்தாழ்ந்தது

என்பதும் வாதாபி வில்வலன் கதையும் அகத்தியர் பொதிகைமலை யடைந்ததும் கூறப்படுகின்றன. பூமி தாழ்ந்த கதைக்குச் சிவபெருமான் திருமணம் கூறப்படுகிறது. பூமி ஒருபக்கம் தாழ்தலும், ஒரு பக்கம் உயர்தலும் கூடாத காரியமென்பது அனைவரும் அறியத் தக்கது. இந்கதையை நாலாவது வகுப்புப் பையன் கூட நம்ப மாட்டான் என்றால் பிறர் எப்படி நம்புவார்கள்? (பிறகு மேல்குறித்த வாதாபி வில்வலன் கதையை எடுத்துக் காட்டியிருக்கின்றார்.)

"இனி அகத்தியர், முதற்சங்கமிருந்த காலம் 4440 யாண்டு; இடைச்சங்கமிருந்த காலம் 3700 யாண்டு; ஆக 8140 ஆண்டு ஜீவித்திருந்ததாக இறையனாரகப் பொருளுரை கூறுகிறது. அதன் பின் இரண்டாயிரம் ஆண்டுகள் சென்றிருக்கின்றன. எண்ணாயிரமாண்டுகளுக்குமேல் ஜீவித்திருந்த அகத்தியர் இன்னுமொரு இரண்டாயிரமாண்டு இருந்தாரானால் யூனிவர்சிடி சரித்திர ரீடரான நமக்கு முன்னிருக்கும் திரு. பி. டி. சீனிவாச ஐயங்காரவர்கள் அகத்தியரை நேரேகேட்டு எல்லாவற்றையும் எழுதிவிடுவார். ஆனால், அகத்தியர் இன்னுமிருக்கின்றார் என்று சொல்லி அகனை முற்றும் நம்பும் ஜனங்களும் உண்டு. (கரகோஷம்) இன்னும் இது போல பலவுண்டு: அகத்தியர் புலத்தியரிடம் சென்று உலோபா முத்திரையைப் பெற்று, அவளை அங்கேயே வைத்துவிட்டுச்சமதக்கனியிடம் சென்று திரணதுமாக்கினியைப் பெற்று அழைத்துக் கொண்டு, கங்கையிடம் சென்று காவிரியைப் பெற்றுத் தென்னாடு சென்றாராம்; திரணதுமாக்கினி என்ற சொல்லுக்குச்சரியான பொருளில்லை; ஈண்டு இச்சொல்லில் திரணம் என்பது துகள் என்றும், தூமம் என்பது புகை என்றும், அக்கினி என்பது நெருப்பு என்றும் பொருள்படும். ஆகவே திரணதுமாக்கினியைக் கொள்ளி வைப்போன் என்று சொல்லலாம். (சிரிப்பு) இவ்வாறு ஒரு பெயர் இருக்குமா வெனச் சபையினர் ஆலோசிக்க வேண்டும்.

"மற்றொரு கதையைக்கேளுங்கள்: அகத்தியர் தமது மனைவியை யழைத்து வரும்படி தொல்காப்பியரை அனுப்பினாராம்; அவர் எவ்வாறு அழைத்துவர என்று கேட்டகாலத்து முன்பின் நாலுகோல் நின்று அழைத்து வரும்படி கட்டளையிட்டாராம்; ஒரு கோல் 16 அடிஎன நண்பரொருவர் தெரிவிக்கின்றார்; அறுபத்துநாலடி தூரத்தில் நின்று அழைத்துவரச் சொன்னாராம். இவ்வாறு அழைத்து வரும்போது மதுரையில் ஓடும் வைகையாற்றில் வெள்ளம் பெருகி

விட்டதாம்; அவ்வம்மையாரை வெள்ளம் அடித்துச் சென்றதாம்; அப்பொழுது தொல்காப்பியர் அங்கே முறிந்து நின்ற மூங்கிற் கோலை ஒடித்து நீட்டினாராம்; அதனைப்பிடித்துக்கொண்டு அவ் வம்மையார் கரையேறினாராம்; இச்செய்தியை அகத்தியருக்கு மாணாக்கர் சொன்னாராம்; அவர் வெகுண்டு மாணாக்கரைச் சுவர்க்கம் போகாமலிருக்கக்கடவது எனச்சபித்தனராம்; சீடரும் ஆசிரியரைச்சபித்தாராம்; இந்தப்படி ஒரு கதை கேட்டதுண்டாவென யோசியுங்கள்! வைகையில் தண்ணீர் எத்தனைநாளைக்கு ஓடும் அன்றியும் தண்ணீர் அடித்துக்கொண்டுபோன ஒரு உயிரைக் காப் பாற்றியதற்கு மனிதர் மகிழ்ச்சி யடைவார்களா வருத்தப்படுவார் களா? அதற்கு வந்தனம் கூறுவதா சாபமிடுவதா? (பெருங்கர கோஷம்) இப்படிப் பலவிதத்திலும் நம்பமுடியாத கட்டுக்கதைகளே மலிந்து கிடக்கின்றன" என்பதே. இந்தச்சொற்பெருக்கு சென்னை அரசாங்கக் கலாசாலை இங்கிலீஷ் லெச்சர் மண்டபத்தில் நிகழ்த் தியதாகும்.

இம்மாதிரியாகக் கற்பனைசெய்திருக்கும் பல கட்டுக்கதை களில் இக்காலத்துப் புலவர்கள் பிரத்தியக்ஷமாகக் கற்பனைக் கதை யென்று நம்புவதற்குத் தகுதி வாய்ந்த மற்றொரு கதையுமுண்டு, அதாவது, தொல்காப்பியம் பாயிரத்தின் கண்

"அறங்கரை நாவி னான்மறை முற்றிய
S வதங்கோட் டாசாற் கரிறபத் தெரிந்து."

எனவரும் அடிகளைக் கொண்டு, (அகத்தியர்க்கு பன்னிருமாணாக்க ரென்றுகூறும் கதையில்) S அதங்கோட்டாசான் என்னும் பெய ருடைய மாணாக்கரொருவரிருந்தா ரென்று கற்பித்துக் கூறுவதாம். அதில் சொல்லப்படுவதாவது:—

"அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி, 'நீ தொல் காப்பியன் செய்த நூலைக் கேளற்க' வென்று கூறுதலானும், தொல் காப்பியனாரும் பல்காலுஞ் சென்று, 'யான் செய்த நூலை நீர் கேட் டல் வேண்டும்' என்று கூறுதலானும், இவ்விருவரும் வெகுளாமல் இந்நூற்குக் குற்றங்கூறி விடுதலெனக்கருதி அவர் கூறிய கடா விற் கெல்லாம் விடைகூறுதலின், 'அரிறபத் தெரிந்து' என்றார் என்பதே. இதுகற்பனைக் கதையென்பதுமேலே பண்டிதர்கள்

அபிப்பிராயங்களில் 33,34 ஆம் பக்கங்களில் தொல், சிறப்பு - இரண்டு அடிகளுக்கு வகுத்திருக்கும் உரைகளால் வெள்ளிடைமலைபோல விளக்கமாகும். மேற்கூறியபடி, சைவர் அகத்தியரைப் பற்றி பற்பல சரித்திரங்களைப் பலவிதங்களாகக் கூறுவதால் அவையெல்லாம் கம்பத்தகாதனவாம். அவற்றில் முனிவர்க்குரிய இலக்ஷணங்களுமில்லை.

இன்னும் அகத்தியர் மாணாக்கர்களில் வாமனன் என்பவர் வேறு ஒருவர் இருந்ததாகக் கூறுவதுந் தப்பு மொழியேயாகும். வாமனன் என்னும் பெயர் சைவர்களுக்கு உரியதன்று. இப்பெயர் வடமொழியாம். வாமனன் என்றால் குள்ளன் எனப்பொருள். வாமனன் என்னும் பெயர் விஷ்ணுவுக் குரியது; ஜைநர்களுக்குமுரியது; ஜைநசமய நூல்களில் வாமனசூரி என்றும், வாமனுரிய ரென்றும், வாமனர் என்றும், வாமனுசாரி யென்றும் ஜைநசமய முனிவர்களுக்குப் பெயர்கள் வழங்கி வந்திருக்கின்றன. தொல்காப்பியர், அகத்தியர் ஆகியவர்கள் காலத்தில் தென்தேசத்தில் சைவ சமயமின்றி எங்கும் சமண சமயமே மிகுத்திருந்ததால் வாமனன் என்பவர் சமணரென்றும், இவரே அகஸ்த்திய ரென்றும், குறுமுனி என்றும் சொல்வதற்குத் தக்க ஆதாரங்களிருக்கின்றன. இப்பெயர் பெற்ற ஜைன முனிவரரை, கற்பனைக் கதைக் காரர் அதங்கோட்டாசான் என்னும் பெயருடையவர் ஒருவர் இருந்ததாகப் போலிக்கதை கூறுவதுபோன்று, மேற்கூறிய பொய்க்கதைகளுக்கு நாயகராக்கி விட்டார்கள். வாமனன் வேறு, அகத்தியர் வேறெனப் பிரித்து விட்டார்கள் என்று கருதுதற்கிடமுண்டு. இவ்விவரம் பின் வரும்.

பிற்காலத்தில் ஏற்பட்ட சைவ சமயப்புலவர்கள், தொல்காப்பியரும் அகத்தியரும் சைவரென்றும், இவர்கள் காலத்தில் சமண மதமில்லை யென்றும் கருத்துக்கொண்டு, தொல்காப்பியரை அகத்தியர் வடக்கினின்றும் தென்திசை போகின்றபோது உடன்கொண்டு போந்தாரென்றும், அகத்தியர் காசியம்பதியிலிருந்தவரென்றும், அங்கு வடமொழி வாணரோடு மாறுபட்டு அம்மொழிக்கு இணையாக மற்றென்றினை யருளுமாறு முருகக்கடவுளை வேண்டினரென்றும், அக்கடவுள் அம்மூலைக்கண்ணுள்ளது சென்று கொள்க என்றதும் முனிவரர் 'தமிழ்! தமிழ்!' எனக்கூவி ஓலைச்சுவடிகளை வாரிக்கொண்டு தமிழ்மொழி கற்றாரென்றும், சிவபிரா

னிடம் இலக்கணம் கற்றாரென்றும் பொய்க்கதைகளைக் கட்டி விட்டார்கள்.

இவ்விரண்டு ஆசிரியர்கள் காலத்தில் சமணமதம் தென்தேசத்திலும் இருந்ததுண்மை. தொல்காப்பியர் அகத்தியர் ஆகியவர்கள் பிராகிருதம் சமஸ்கிருதம் கற்றவர்கள். ஆதலால் தமிழுடன் அச்சொற்களைக் கலந்து அருகக்கடவுள் அருளிய முதனூலைக் கொண்டு தொல்காப்பியர் வழிநூல் செய்திருக்கின்றார். இவ்வுண்மைகளை உணராமல் அகத்தியர் காசியம்பதியில் வடமொழி கற்றாரென்றும், அவர் 8110 ஆண்டு ஜீவித்திருந்தாரென்றும், தொல்காப்பியத்தில் பிற்காலத்து ஆரியக்கலப்புச்சேர்க்கப்பட்டதென்றும், அகத்தியர் இலக்கணம் முதனூலென்றும், அதைக்கொண்டு தொல்காப்பியர் செய்தது வழிநூலெனறும், அகத்தியர் தொல்காப்பியருக்குச் சுவர்க்கம் போகாமலிருக்கக்கடவதெனச் சாபமிட்டாரென்றும்,தொல்காப்பியரும் ஆசிரியருக்குச் சுவர்க்கம் போகாதிருக்ககடவதெனச் சாபமிட்டாரென்றும், இன்னும் இதற்கு மாறாகத் தொல்காப்பியர், அகத்தியர் இலக்கணம் இறந்துபோகச் சாபம் கொடுத்தாரென்றும், அக்காரணத்தால் அவர் இலக்கண்ம் சங்க காலத்திலேயே இறந்துபட்டதென்றும் பலவிதமாகக் கூறுவனவெல்லாம் திருவாளர் கா. ரா. நமசிவாய முதலியார் அவர்கள் சொற்பொழிவிற் கண்டபடி வெறுங்கட்டுக்கதைகள் என்பதற்கையமே இல்லை.

ஆயினும் அகத்தியர் பலவைத்திய நூல்கள் செய்துள்ளாரென்றும். அவைகளிலுள்ள சான்றுகளால் அவரைச்சைவரென்றுருஜுப்படுத்தக் கூடுமென்றும் சில சைவர்கள் சொல்லக்கூடும். அப்படிக் கூறுவதற்கும் சமாதானம் உரைப்பாம்:

தெய்வத்தன்மை பொருந்திய திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளிய ஞானவெட்டி 1500-க்குச் சுருக்கம் என்றும், நவரத்தின வைத்தியசிந்தாமணி 800-என்றும், கெவுனமணி வயது 100-என்றும், ஆக 900 என்றும் சிலநூல்களை அவர் பெயரால் அச்சிட்டுப் பதிப்பாசிரியர் பெயர்முதலியவைகளை டைடல்பேஜில் காட்டி திருக்குறளிலுள்ளதுபோல திருவள்ளுவநாயனார் உருவப்படமும் அவர் சரித்திரமும் அவற்றில் பதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் நவரத்தின வைத்தியசிந்தாமணி என்னும் நூலின்கண் மகிபூபதிதைலம் உண்ணப்பத்தியங்கூறும் 574-ஆம் செய்யுள்,

"விதியால் மதிவரு மேவிடும் வித்தால் விளைவாகும்
விளைவாம் வினை விரகந்தனில் மிகவே வினைப் பழியாந்
ததிகாணெடுந் தைலந்தனிற் றனிக்குன் றிடைக் கிருதந்
தனைத்தாக்கிடு வினைபா ளர்டன் சருகா தொருபட்சங்
கதிர்மேகமுங் கருமேகமும் வலமாகவும் பணியும்
கடற் புக்கிடு * மெரிப்பூச்சியுங் கவிச்சான து மாகா
நதிநீர் பசும்பாலுந் தயிர்நன் மேஷமு 0 மதுவாம்
நளினக் காடைகவுதாரியும் நண்பா மெனு முறையே"

என்று கூறுகின்றனது.

இத்தன்மையாக மருந்தின் பொருட்டுப் பத்தியமிருக்க ஆட்டினிறைச்சி, காடை, கௌதாரி முதலிய மாமிசங்களை உண்ணும்படி கூறப்படும் வைத்திய நூல் திருக்குறளாசிரியர் செய்ததாயிருக்குமா? அவர் பெயரை அமைத்து இப்பேர்ப்பட்ட புத்தகங்களைப் போலிப் புலவர் பொருள் சம்பாதிக்கும் பொருட்டு வெளியிட்டிருக்கிறார்கள்.

திருக்குறளாசிரியர் திருக்குறளில், 'மருந்து' என்னும் அதிகாரத்தை அமைத்து அதில்,

"மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு"

என்று கூறுகின்றார்.

இ - ள்: "மறுத்து-(புலால் கலந்த மருந்து முதலிய ஆகாரங்களை) நீக்கி, மாறுபாடில்லாத-விகற்பமில்லாத, உண்டி-பரிசுத்தமுள்ள மருந்து முதலிய உணவுகளை, உண்ணின் - (ஒருவன்) உண்பானாயின், உயிர்க்கு - (அவன்) உயிர்க்கு, ஊறு - கொலைச்சார்பினாலுண்டாம், பாடு - துன்பம், இல்லை-உண்டாவதில்லை" என்பதாம்.

"மருந்து முதலிய ஆகாரங்களில் மாமிஸ மிஸ்ர முள்ளதை நீக்கி ஒன்றினோடொன்று மாறு கொள்ளாத பரிசுத்தமுள்ள மருந்து முதலிய வுணவுகளை உண்பவன் உயிர்க்கு கொலையின் சார்பினாலுண்டாம் துன்பம் இல்லை என்பது" இதன் கருத்து.

---

* எரிப்பூச்சி. மச்சமுதலியகவுச்சி 0 மேஷம், ஆட்டினிறைச்சி

கொலையின் சார்பாவது—செய்தல், செய்வித்தல், உடன்படல், ஆகிய மூன்றுவகைகளில் மாமிசங்கலப்புள்ள மருந்து முதலியவைகளை உட்கொள்ளும் பட்சத்தில் வியாதியைக் கண்டிக்குமென்று * வைத்தியர் சொல்வதற்கு உடன்பட்டு புசித்தலாம்; அவ்வாறு உட்கொள்வது துன்பமே. அத்துன்பத்தை இருமையிலும் அனுபவித்தல் உயிரேயாதலால் அதன்மேல் வைத்துக் கூறினர். ஊறு என்னும் பதத்திற்கு உயிர்க்கொலையென்று சொல்வது பொருத்தமாம். மண்டலபுருடர், "ஊறென்ப தீமை தீண்டலுயிர்க்கொலை யிடையூறென்ப" என்று 11-வது தொகுதி றகரவெதுகையில் கூறுவதனல் இதனையுணர்க.

பின்னும் திருக்குறளாசிரியர்,

"இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய்"

என்றும் கூறுகின்றார்.

இ-ள்: "இழிவறிந்து (புலால்மிஸ்ரமுள்ள மருந்து முதலியவைகள்) குற்றமென்றறிந்து, உண்பான்கண் (பரிசுத்தமுள்ள மருந்து முதலிய உணவுகளை) உண்பவனிடத்து, இன்பம்போல-இன்பத்தைப் போன்று, கழிபேரிரையான்கண் (வியாதிகளுக்கு) மிகப்பெரிய வனுகூலமென்று புலால்கலப்புள்ள மருந்துமுதலியவைகளை உண்பவனிடத்து, நோய்-துன்பம, நிற்கும்-நீங்காது தங்கும்" என்பதாம்.

"புலால் கலந்த மருந்துமுதலிய உணவுகளை இழிந்ததென்று அறிந்து பரிசுத்த முள்ள மருந்து முதலிய அன்னாகாரங்களை உண்பவனிடத்து இன்பமும், வியாதிகளுக்குப் புலால் கலந்துள்ள மருந்து முதலிய வுணவுகள் மிகப்பெரியன வென்று சாப்பிட்டவனிடத்து துன்பமும் இம்மை மறுமையில் நீங்காது நிற்கும்" என்பது இதன்கருத்து.

---

* வைத்தியர்களில் சிலர் அண்டவாதமுதலிய நோய்களுக்கு முட்டை முதலிய மாமிசங்களை எண்ணெயில் கலந்து கொடுப்பதாகவும், ஆஸ்பத்திரிகளில் தேகபுஷ்டிக்காக மீன் எண்ணெய் கொடுப்பதாகவும் பலர் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம்; இத்தன்மையுடைய எண்ணெய் முதலிய மருந்துகளை மறந்துண்பவன் உயிர்க்கு ஊறுபாடில்லை என்றார். என்றறிக.

இக்குறட்பாக்களில், 'மருந்து' என்பது வருவித்துச் சொல்லப்பட்டது, இது, அதிகாரத்தின் தன்மையைப்பற்றிக் கூறியதாம். யானை, குதிரை, மாடு முதலிய மிருகங்களைக் குறித்து 'இது இரை எடுக்கவில்லை' 'தீனி எடுக்கவில்லை' என்று சொல்வது உலக வழக்கு. அதனால். புலால் கலப்புள்ள உணவுகள் புசிப்பவனை மிருகத்தோடொற்றுமையாக்கி, 'இரையான்' என்று இழித்துக் கூறினர் ஆசிரியர்.

பரிமேலழகர் இக்குறட்பாக்களின் ஆழ்ந்த கருத்துக்களை ஆராய்ந்தறியாமல் இவற்றிற்குப் பொருத்தமற்ற உரைகளையும், அவற்றிற்கேற்ற விரிவுரைகளையும் எழுதியுள்ளார். இவர் கருத்திற்கு ஆக்ஷேப சமாதானங்களையும், அவற்றிற்கு உதாரணங்களையும் காட்டவேண்டின் முன்பின்னுள்ள குறட்பாக்களின் கருத்துக்களையும் எழுதவேண்டும். அவ்வாறு எழுதப்புகின் இங்கு விரிவெய்துமென அவற்றை விடுத்தனம். ஆயினும் பரிமேலழகரின் பொருத்தமற்ற கருத்தை இங்குக் கிஞ்சித்து எடுத்துக்காட்டுவாம்:

"இழிவறிந்து" என்னும் குறளில், "குறைவாக வுண்பவனிடத்து இன்பமும், மிகுதியாக வுண்பவனிடத்துத் துன்பமும் நீங்காது நிற்கும்" என்றார் அவ்வின்ப துன்பம் ஆகாரம் குறைவாகவும் மிகுதியாகவும் உண்ணும் அந்தந்த வேளைபரியந்தமா? அந்நாள் பரியந்தமா? அல்லது அந்த ஜன்மம் இறுதிவரையிலுமா? மறுஜன்மத்திற்குமா? என்பதை அறிஞர்கள் அறிந்து உண்மைக் கருத்துக்களை உணர்தல் வேண்டும். மருந்தின் அதிகாரத்திலுள்ள குறட்பாக்களைப்பற்றிய விஷயங்களை இரண்டாம்பாகத்தில் விளக்கிக்காட்டுவாம்.

திருக்குறளாசிரியர் புலான் மறுத்தலென்னும் அதிகாரத்தில்,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்"

என்று புலால்மறுத்தலை வெள்ளிடைமலைபோல் கூறியிருப்பினும்,

'மருந்து' என்னும் அதிகாரத்திலும் புலால்கலந்துள்ள மருந்து முதலியவுணவுகளை மறுத்துண்ண வேண்டு மென்று ஆழ்ந்த கருத்துடன் ஜைனசமயக்கோட்பாடுகளை விளக்கியுள்ளார்.

இவ்வாறு மருந்து வகைகளிலும் புலாலை மறுத்துண்ண வேண்டுமென்று அருள்மொழி அருளிய திருவள்ளுவநாயனார் பெயரை அமைத்துச்சிலர் மேல்குறித்த வைத்திய நூல்கள் செய்திருப்பது போல, அகத்தியர் பெயரை அமைத்து பலவைத்திய நூல்கள் ஏன் செய்திருக்கக் கூடாது?

அகத்தியர் சரிதை இவ்வாறு பலராலும் பலவிதமாகக் கூறப்பட்டிருப்பதால், சைவவைணவர்கள்கூறும் எதுவும் உறுதியாகக் கொள்ளமுடியாது. அகத்தியருடைய உண்மைச்சரித்திரத்தை ஆராய்ந்து கூறுவதுதான் சிறந்தது. ஆதலின் அவர் சரிதையை உள்ளவாறு கூறுவாம்.

நடுநிலையில் நின்று ஊகிக்குமிடத்து, அகத்தியர் என்னும் பெயருடையவர் ஜைந (சமண) மதத்தில் ஒருவரும், சைவமதத்தில் ஒருவரும் இருந்திருக்கின்றார்களென்றுகூற ஏது விருக்கின்றது. எவ்விதமெனின், "ஆரியா" பத்திரிகையின் ஆசிரியர் தி. அ. சாமிநாதய்யர் எழுதிய ஸ்ரீமத் சங்கராசாரியர் சரித்திரத்தில், "சங்கரர் மிக்க சாக்தியோடு கூடி வளர்ந்து விளங்குங் காலத்தில், தம் அருமை மகனுக்குக் கலியாணம் செய்விக்க வேண்டுமென்று ஸதீதேவி (சங்கரர் தாயார்) நிச்சயித்துக் கொண்டிருக்கையில் மகாத்துமாவாகிய அகத்தியமாமுனிவர் அவ்வம்மையாரைத் தேடிவந்து, 'அம்மா உன்மகன் எல்லாச் சாத்திரங்களிலும் வல்ல மகா மகிமையுடையவனே யாவன்; ஆனால் பூர்ணாயுளில்லாதவன்" என்று சொல்லி நீங்கினர்" என்றவரலாறு கூறப்படுகின்றது. இம்மாதிரி இன்னும் வேறு பதிப்பாசிரியரும் கூறுகின்றார்.

இதனால் ஆதிசங்கரர் காலத்தில் (கி. பி. 677-ல்) அகத்திய முனிவர் என்னும் பெயருடையவர் ஒருவர் இருந்தாரென்பதும் இவரே சைவசமயத்து அகத்தியரென்பதும் விளக்கமாகின்றன.

இவற்றிற்கிணங்க வீரசோழியம் பாயிரத்தின்கண்,

"ஆயுங் குணத்தவ லோகிதன் பக்க லகத்தியன் கேட்
டேயும் புவனிக் கியம்பிய தண்டமிழீங் குரைக்க"

என்ற செய்யுளடிகள் காணப்படுகின்றன.

இவ்வடிகளின் கருத்தைக் கொண்டும், பாயிரத்தின் செய்யுளைக் கொண்டும் வீரசோழியம் பதிப்பாசிரியர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களும், ச. பவாநந்தம்பிள்ளை அவர்களும், "அவலோ

கித முனிவர்பால் அகத்தியர் தமிழ்மொழியைக் கற்றுணர்ந்தா ரென்று அருசர்மதம் கூறுவதாகச் சொல்லுகின்றார்கள். இவர் களைப்போன்ற இன்னுஞ்சிலர் வீரசோழியம் இயற்றிய ஆசிரியர் சமணர் என்றும், சிலர் புத்தசமயத்தினர் என்றும் கூறுகின்றார்கள். ஆயினும், நூலாசிரியர் பாயிரத்தில்,

"மிக்கவன்போதியின் மேதக்கிருந்தவன் மெய்த்தவத்தாற்
றொக்கவன்யார்க்குந் தொடரவொண்ணுதவன் றூயனெனத்
தக்கவன்பாதந் தலைமேற்புனைந்து தமிழுரைக்கப்
புக்கவன்பைம்பொழிற் பொன்பற்றி மன்புத்த மித்திரனே''

என்று கூறுகின்றார்.

இச்செய்யுளின் கருத்து அருகக்கடவுளையும், புத்தக்கடவுளை யும், குறிக்குமாயினும் நூலாசிரியர் பெயர் புத்தமித்திரன் என்று கூறப்பட்டிருப்பதனாலும், ஜைநசமயத்தில் புத்தமித்திரன் என் னும் பெயர்வழங்காமையாலும் வீரசோழியம் ஆசிரியர் புத்தசம யத்தின ரென்பதற்கையமில்லை. அகத்தியர் அவலோகித முனிவரி டம் தமிழ் கற்றுணர்ந்தாரென்று புத்தமித்திரர் கூறுவது தப்பு மொழியல்லவென்பது ஒப்புக்கொள்ளத் தக்கதேயாகும்.

இவற்றைக்கொண்டு, புத்தசமயம் வடநாட்டில் தோன்றி தென் னாட்டில் பரவியபிறகு சைவசமயத்தில் அகத்தியர் என்னும் பெயர் பெற்றவர் ஒருவர் தோன்றி அவலோகித முனிவரிடம் தமிழ் கற் றுணர்ந்து பிரசித்தி பெற்றாரென்பதும் இவரே சங்கரருக்குப் பூர் ணயுளில்லை என்று சொன்ன அகத்தியர் என்பதும் பொருத்தமா கும். இவர்தவிர வாமனர் (குறுமுனிவர்) என்ற அகத்தியர் ஒருவர் இருந்திருக்கின்றா ரென்பதற்கும் அவரே பேரகத்தியம் முதலியன செய்தவரென்பதற்கும், ஜைநமதத்தைச் சார்ந்தவரென்பதற்கும் பல ஆதாரங்களிருக்கின்றன. இனி அவற்றை ஆராய்வாம்:—

அகத்தியர் இருவர் என்பதற்கிணங்க, கா. சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள் தொல்காப்பியத்தின் முகவுரையில், "அகத்தியர் அனுமதியின்றிப் பொருநையாற்றைக் கடத்தல் அரிதென்னும் குறிப்பு வான்மீகத்தில் காணப்படுகின்றது'' என்றும், "சிலபிரதி களில் காணப்பட்டதாகக் கூறும் தண்டகந்திருந்திய அகத்திய ரென்பவர் தமிழ்முனியன் வேறாய் ஆரியர் தலைவராய்க் குறுமுனி வர் பெயரைக் கொண்டவராகிய மற்றொருவரென்று யூகிக்கவேண் டியதாயிருக்கிறது'' என்றும் கூறியுள்ளார். தமிழ்மொழி அகராதி

யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலரவர்கள் மாணாக்கரின் மாணாக்கராகிய மேலைப்புலோலி வித்வான். ந. கதிரைவேற்பிள்ளையவர்கள் பதிப்பில், புலத்தியர் என்னும் மொழிவருமிடத்து, "இவர் பிரமனது மானஸபுத்திரருளொருவர்; இவருக்கு ஹவிர்புக்குவினிடத்திலே அகத்திய ரென்றொருவரும், விசிவரசு வென்றொருவரும் பிறந்தார்கள்; இந்த அகத்தியர் வேறு; கும்பமுனிவேறு" என்று வரைந்துள்ளார்.

இங்கு எடுத்துக் காட்டிய சரித்திரங்களால், அகத்தியர் என்னும் பெயருடையவர் இருவர் இருந்திருக்கின்றார்களென்பது நிச்சயமாக விளக்கமாகின்றது. இவ்விருவரில் கணிதசாஸ்திரங்களும், பேரகத்தியம் என்னும் இலக்கணமும் இயற்றிய ஆசிரியர் வாமனர் என்னும் அகத்தியர் என்பதும், இவர் ஜைந (சமண) மதத்தின ரென்பதும் கீழ்வரும் சான்றுகளால் தெற்றென விளக்கமாகும்.

வாமனமுனிவரால் இலக்கம், கெல்லிலக்கம், எண்சுவடி, பெருங்குழி, சிறுகுழி முதலிய கணிதசாஸ்திரங்கள் செய்யப்பட்டனவென்பது எமது முகவுரையில் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது.

இம்முனிவர்க்குத் தென்மொழியில் அகஸ்தியர் அல்லது அகத்தியர் என்னும் பெயர் இருந்ததென்பதற்குத்தக்க காரணமிருக்கின்றது:

இவர் இயற்றிய எண்சுவடி கடவுள் வழிபாட்டில், "முத்தணிந்த முக்குடைக்கீழ் மூவா முதல்வனை" என்று அருகக்கடவுளைக்குறித்தும், முக்காணிவாய் பாட்டில், "நாலைம்பதனை இருபத்து நால்வர்க்கு" என்று இருபத்துநான்கு தீர்த்தங்கரரைக் குறித்தும், மூன்றுமா வாய்பாட்டில், "விண்ணுளார் முக்குடைக்கீழ் வீரனடிதொழுவார்" என்று அருகக்கடவுளைக்குறித்தும், நாழிவாய்பாட்டில், "பறுவறு காட்சியவர் அதாவது குற்றமற்ற நற்காட்சியுடையவர்" என்று (திருக்குறள் மெய்யுணர்வில் மாசறு காட்சியவர்) என்று வருவதற்கிணங்க நற்காட்சியைப் பற்றியும், கலம் வாய்பாட்டில் "புத்தன் (அருகக்கடவுள்) கடைநெறி காட்சியவர்" என்று அருகனைக் குறித்தும் சொல்லியிருப்பதோடு அரைக்காணி வாய்பாடு பரிவாயில் தமிழ்மொழியில் தமது பெயரையும் அமைத்து,

"ஆறைந்து பூவி * னகத்தியனு ரேழ்கோட்டைக்
காலென் றெழிலார்க் கவி நான்கெனுங் கவியின்
பூவொன்றே பூவிலெயு மொன்று
அலகுநிலை 37–4–0 நாலும்மா அரைக்காணி"

என்று மொழிந்துள்ளார்.

இதனாலேயே வாமனர் என்னும் முனிவரே * அகத்தியரென்றும், இவரே இலக்கணமுதலிய கணிதநூல்களை இயற்றியவரென்றும், இவர் ஜைநசமயத்தினரென்றும் ஐயமற உணர்ந்து கொள்ளலாம்.

இவர் ஜைநர் என்று சொல்லுதற்கு மற்றோர் தகுந்த காரணமும் இருக்கின்றது; அஃதியாதெனில், தென்தேசத்தில் வசிக்கும் ஜைநத்தமிழர்களில் சென்ற காலத்திலும், நிகழ் காலத்திலும், 'அகஸ்தியப்பநயினர்' என்னும் பெயரைத்தரித்தவர்கள் அநேகர் பலவூர்களிலும் இருந்தார்கள், இருக்கின்றார்கள். இது, பல சைவ வைணவர்கள் அறிந்ததேயாம்.

இன்னும்பேரகத்தியம் இயற்றிய வாமனர் என்னும் அகத்தியர் ஜைநரே என்பதற்கு உதாரணமாக, ச. பவாநந்தம்பிள்ளை அவர்கள் அச்சிட்டு வெளிப்படுத்திய பேரகத்தியத்திரட்டு என்னும் நூலின்கண்

"இலக்கண மெட்டமை யிறைவற் றொழுதெழுத்
திலக்கணக் காண்ட மியம்புவல் யானே"

என்ற தற்சிறப்புப் பாயிரச்சூத்திரம் காணப்படுகின்றது.

இ-ள்: "இலக்கணம் எட்டமை (அநந்தஞானாதி) எண்குணங்களின் இலக்ஷணம் பொருந்திய, இறைவன்-அருகக்கடவுளை, தொழுது-வணங்கி, எழுத்து-எழுத்துக்களின், இலக்கணக்காண்டம்-இலக்ஷணக்காண்டத்தை, யான் இயம்புவல் - நான் சொல்லுவேன்" என்பதாம்.

"அஷ்டகுணங்களின் இலக்ஷணத்தைப் பொருந்திய அருகக் கடவுளை வணங்கி எழுத்துக்களின் இலக்ஷணக்காண்டத்தைச் சொல்லுவேன்யான்" என்பது இதன்கருத்து.

இச்சூத்திரத்தினாலும் அகத்தியர் ஜைநத்தமிழர் என்பது தெற்றென விளக்கமாகும். ஆயினும் தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல் முதலிய எண்குணங்கள் சிவபெருமானுக்குண்டென்று ச. பவாநந்தம்பிள்ளை

அவர்கள் உரைவகுத்திருக்கின்றனர். சிவபிரானுக்கு அணிமாதி அஷ்டகுணங்கள் தவிர முற்றுமுணர்தல் முதலிய எண்குணங்கள் பொருந்தாவென்பதை இப்புத்தகம் 125ஆம் பக்கமுதல் 134ஆம் பக்கம் வரையில் யாம் விவரித்துள்ளோம். இன்னும் மேலேபண்டிதர்கள் அபிப்பிராயங்களிலும் 30-31ஆம் பக்கங்களில் விளக்கியுள்ளோம். ஆங்காங்குக்கண்டு கொள்க.

இனி, இரண்டு அகத்தியர்களுக்கும், அகத்தியமென்னும் நூலுக்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றியும் சிறிதுஆராய்ந்து உண்மையை விளக்குவாம்: அகத்தியம் என்பதில், சிற்றகத்தியம், பேரகத்தியம் எனஇரண்டுநூல்கள் கர்ண பரம்பரையாக வழங்கிவருகின்றன. ஒரே ஆசிரியர் சிற்றகத்தியம் பேரகத்தியமென ஒரே வகையில் இரண்டு நூல்கள் செய்வதற்குக் காரணமில்லை. ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரே செய்திருப்பர். இதனாலும் அகத்தியர் என்னும் பெயருடையவர் இருவர் இருந்திருப்பார் களென்பதற்கையமில்லை. பேரகத்தியம் இயற்றிய ஆசிரியர் மேல்கண்டசூத்திரத்தினாலும் அவர் இயற்றிய கணிதநூல்களினாலும், ஜைநரென்றும், இவர் தொல்காப்பியரின் சமகாலத்தவரென்றும் சொல்லப் பொருத்தமென்பதற் கையமில்லை.

சிற்றகத்தியம் இயற்றியவர் சைவசமய அகத்தியனாக இருத்தல் கூடுமென்றும், இவர் புத்தசமயத்து அவலோகித முனிவரிடம் தமிழ் சற்றுணர்ந்தா ரென்றும், இவரே ஆதிசங்கராசாரியருக்குப் பூர்ணயுளில்லை என்றும் சங்கரர் காலமாகிய கி. பி. 677ல் வசித்திருந்தவரென்றும் சொல்லப் பொருத்தமாக விருக்கின்றன. இவை, யாவரும் ஒப்புக்கொள்ளத் தக்கவைகளே. வைத்திய நூல்களிலும் பல,அகத்தியர் செய்திருக்கின்றாரென்று கூறுவதைக்கொண்டு அகத்தியர் இருவர் இருந்திருக்கின்றார்களென்று ஏற்படுவதால் அந்நூல்களை ஆராய்ச்சி செய்தவர்க்கு அவற்றைச்செய்தவர் இன்னாரென்று உண்மை விளங்கும்.

தொல்காப்பியரைப் பற்றிக்கூறும் கதைகளையும்,அகத்தியரைப் பற்றி ருக்வேதம், கந்தபுராணம், காஞ்சிபுராணம் முதலிய ஒவ்வொரு நூல்களிலும் சொல்லப்பட்ட கதைகளையும் சங்கிலித்தொடர் போன்று ஒன்றோடொன்று இணைத்து வாசித்துப் பார்க்கும் புலவர்களுக்கு "தொல்காப்பியரையும் அகத்தியரையும் ஜைந (சமண) ரென்று சொல்வது உண்மைச் சரித்திரத்திற்கு முற்றும் மாறாக

வுள்ள ஒருதப்பு மொழியாகும்" என்று கா. சுப்பிரமணியம்பிள்ளை அவர்கள் சொன்னது சிறிதும் பொருந்தாதென்பது ஐயமறவிளங்கும். இவ்விரண்டு ஆசிரியர்களைப்பற்றி அவர் சொல்லும் அபிப்பிராயத்தை அரிச்சுவடி படிக்கும் ஐந்துவயதுபிள்ளையும் ஒப்புக்கொள்ளான் என்றால் மற்றவர் எப்படி ஒப்புக்கொள்வார்கள்? கா. ரா. நமசிவாயமுதலியார் அவர்கள்போன்று நடுநிலையில்நின்று உண்மையைச்சொல்ல முற்படும் நல்லறிவாளரின் அபிப்பிராயத்தைக்கொண்டே இவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

மேல் எடுத்துக் காட்டிய பிரமாணங்களால், திருக்குறளாசிரியர், தொல்காப்பியர், இறையனார் ஆகியவர்களைப் பற்றிக்கூறும்போலிக்கதைகளைப் போன்று அகத்தியனாரைப்பற்றிக் கந்தபுராணம் முதலிய பல நூல்களில் கூறும்கதைகளும் நம்பிக்கையற்றவைகளே.

ஜைநக்ஷத்திரியர்கள் மாறுதலடைந்ததின் காரணமாக ஜைநர்களின் ஜனப்பெருக்கமும், கல்வி அறிவு ஆற்றல் செல்வச் செழிப்பு ஆகியவைகளும் குறைந்த பிறகு ஜைந மகாமுனிவர்களால் இயற்றிய தொல்காப்பியம், வாமனர் என்னும் அகத்தியர் இலக்கணம், * இறையனாரகப்பொருள், திருக்குறள் முதலானவைகள் மிகத்தொன்மையானவைகளும், சிறப்பு வாய்ந்தவைகளும், தமிழுக்குப் பிரதானமானவைகளும், ஆதலால், இத்தன்மையான தமிழ்நூல்கள் சைவசமயத்தைச் சார்ந்தவைகளாக விருந்தால், தென்தேசத்தில் சைவம்பழமையாக விருந்ததென்றும் பெருஞ்சிறப்புடையதென்றும் பலராலும் கருதப்படுமென்று சைவர்கள் தூர் அபிப்பிராயங்கள் கொண்டு ஜைநசமயத்தின் கருத்துக்களுக்கு மாறுதலாகச் செய்யுட்கள் முதலியவைகளைத் திருத்தியும், பொருத்தமற்ற உரைகளைச் செய்தும் அந்நூல்களைத் தம்முடையனவாக மாற்றியிருக்கின்றார்கள். மேலே பண்டிதர்கள் அபிப்பிராயங்கள் என்பது முதலாக இதுபரியந்தம் யான் விளக்கிக் காட்டியிருக்கும் சாஸ்திரப் பிரமாணங்களால் தொல்காப்பியர், இறையனார், திருக்குறளாசிரியர் முதலியவர்போன்று அகத்தியனாரும், ஜைந மகாமுனிவரென்பதும், இவர் இயற்றிய இலக்கணங்களில் கூறும் கடவுள் இலக்ஷணங்களும் ஜைநசமயத்திற் குரியனவென்பதும் சகலர்க்கும் ஐயமற விளங்கும்.

---

* இறையனாரகப்பொருள் உரையில் முச்சங்கங்களைப்பற்றிக் கூறும் கூற்றுக்கள் முழுப்பொய் என்பதற்கு ஐயமேயில்லை.

# ஜைநசமய உண்மை வரலாறு.

ஜைநமதத்தின் உண்மையான வரலாறு ஒரு விதமாயிருக்க அதனையுணராத சிலர்பற்பல விகற்பங்களாகக் கூறிவருகின்றார்கள். இந்த ஆராய்ச்சி நூலைப்படிப்பார்க்கு ஜைநமதத்தின் உண்மையான வரலாறு தெரிந்திருக்க வேண்டுமாதலின், அதனை இங்குச் சுருக்கமாக எடுத்து விளக்கிக் காட்டுவாம்.

உலகம், கடவுள், வேதம், ஆத்மா, புண்ணியம், பாவம் (கர்மம்), காலமுதலானவைகள் அநாதியாகவுள்ளன. இவைகளைப் போலவே ஜைநசமயமும் உலகில் அநாதியாகவுள்ளது. எவ்வாறெனின், இவ்வுலகில் மனுஷ்ய க்ஷேத்திரப்பிரமாணம் நாற்பத்தைந்து லக்ஷம் யோசனை விஸ்தீர்ணமுடையது. இதில்விதேகக்ஷேத்திரங்களென நூற்றறுபது தர்மகண்டங்களுள்ளன. இந்த க்ஷேத்திரங்களில் எக்காலமும் அருகக்கடவுளும், ஜைநசமயமும், ஷட்கர்மத்தொழில்களும், க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் மூன்று வர்ணாஸ்ரமங்களும் உள்ளன. இவை தவிர வேறு சமயம் கிடையாது.

இவையன்றி இன்னும் இவ்வுலகில் ஐந்துபரதம், ஐந்து ஐராவதக்ஷேத்திரங்களென்று பத்துதர்ம கண்டங்களு முள்ளன. இத்தப்பத்து தர்மகண்டங்களிலும் உத்சர்ப்பிணி, அவசர்ப்பிணி என்னும் ஏற்றிழிவு காலதோஷங்களும், பிரளயங்களுமுண்டாம். ஷை பத்துக்கண்டங்களில் நாம் வசிக்கும் இத்தப்பரத க்ஷேத்திரத்தில் அவசர்ப்பிணி மூன்றாங்காலம் அந்தியத்தில், சர்வார்த்த சித்தியென்னும் பஞ்சாநுத்தரத்துள்ள அகமிந்திரர் மதி ஸ்ருதா வதியென்னும் மூன்றுஞானத்துடன் அவதரித்தார். இவரே விருஷப தீர்த்தங்கரர், ஆதிதீர்த்தங்கரர், ஆதீஸ்வரர், ஆதிபகவான்முதலிய 1008 திருநாமங்களை யுடையவர். இவர் மேல் சொன்ன விதேகக்ஷேத்திரங்களில் எக்காலமும் நிலைபெற்றுள்ள ஷட்கர்மத்தொழில்களையும், க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் மூன்று வர்ணாஸ்ரமங்களையுடைய ஜைநசமயத்தையும், அதற்குள்ள இல்லற, துறவற முதலிய பலதர்மங்களையும் இந்தப் பரதக்ஷேத்திரத்து ஆரியகண்டத்திலுள்ள மக்களுக்கு அவசர்ப்பிணி மூன்றாங்காலத்து போக பூமி கழிந்து, கர்மபூமி ஏற்பட்ட ஆரம்பத்தில் உபதேசித்தார்.

இவ்வாறு ஆதிபகவான் இந்தப் பரதக்ஷேத்திரத்து ஆரியகண்டத்தில், கர்மபூமியின் ஆரம்பத்தில் மேல்சொன்ன விதேகக்ஷேத்திரங்களிலுள்ள ஷட்கர்மத்தொழில்களையும், S க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்னும், மூன்று வர்ணாஸ்ரமங்களையும், ஜைநசமய முதலானவற்றை உண்டு பண்ணினரென்ற வரலாறு மகாபுராணத்திலிருப்பதால் இவ்வுலகில் ஜைநசமயம் அநாதியாக வுள்ளதென்று சொல்லப்படும். இத்தன்மையாகவுள்ள ஜைநசமயத்தைப் பற்றிய உண்மைச் சரித்திர ஆராய்ச்சி யில்லாதார்களிற் சிலர் ஜைநமதம் முதன்முதல் மகாவீரரால் உண்டாக்கப்பட்டதென்றும், இவர்இந்துக்களின் ஆரியக்ஷத்திரியரென்றும், சிலர் ஜைநமதம் புத்தமதத்தின் பிரிவென்றும், சிலர் இவ்விரண்டு மதங்களிலுமுள்ள வித்தியாசங்களை அறியாமல் ஜைநம் புத்தம் இரண்டும் ஒன்றேஎன்றும், சிலர் ஜைநர்கள் புத்தர்கள் தனித்தனி மதத்தினர்களென்றும் சிலர் ஜைநர்கள் தென்தேசத்தில் இடையில் குடியேறினர்களென்றும், சிலர் ஜைநமதத்தின் காலம், அருகக்கடவுளின் தன்மை, அவரால் போதிக்கப்பட்ட இல்லற துறவற முதலான உண்மைத் தத்துவங்கள் ஆகியவற்றை அறியாமல் ஜைநர்கள் உலகமுதலான சிருஷ்டியையும், ஜீவன்களை ஹிம்சித்து, செய்யப்படும் யாகங்களைக்கூறும் வேதங்களை ஒப்புக்கொள்ளாமையால் நாஸ்திகர்களென்றும் பலவாறு கூறுகின்றார்கள். இவையனைத்தும் தப்பான அபிப்பிராயங்களாம். ஜைநமதத்தின் உண்மைகள் வேறுவகைகளா யிருக்கின்றன. அவை, இதனடியில்வரும் விஷயங்களால் விளங்கும்.

வைணவ சமயத்து யோக வாசிஷ்ட கிரந்தத்தில் 15-வது வைராக்கிய பத்ததியில், வசிஷ்டர் இராமனை என்ன வேண்டுமென்று கேட்டதற்கு இராமர் பதில் கூறுவது.

> "நாஹம் ராமோ ந மே வாஞ்சா
> பாவேஷு ச ந மே மனஃ
> சாந்தி மாஸ்தாது மிச்சாமி
> ஸ்வாத்மன் ஏவ ஜிநோ யதா"

என்னும் 8-வது சுலோகம் இராமருடைய கூற்றாகக் கூறப்பட்டிருக்கிறது.

---

S பிராம்மண வர்ணாஸ்ரமம் ஆதிபகவானால் உண்டாக்கப்படவில்லை, பின்னர் அவருடைய புத்திரர் பரதசக்கிரவர்த்தியால் உண்டாக்கப்பட்டது.

இ - ள்: "நான் இராமனல்ல; எனக்கு வேறு எந்தப் பதார்த்தத்தின் மேலும் ஆசையானது இல்லை; ஜிநேஸ்வரனுக்கு(அருகக்கடவுள்) சமானமாக என்னுடைய ஆத்மன் சாந்தத்தை ஸ்தாபனம் பண்ண இச்சிக்கிறது" என்பதாம்.

இதில் ஸ்ரீராமர் அருகக்கடவுள் போல சாந்தமாக விருப்பதற்கு விரும்புகிறேன் என்று சொன்னரென்பது விளங்குகின்றது. இன்னும் மேருமந்தர புராணம் பதிப்பாசிரியர் தமது முகவுரையில், "வால்மீகி இராமாயணம் ஸ்ரீராமர் தென்னாட்டிற் போந்துழி சமணர்கள் ஆஸ்ரமத்தைக்கண்டதையும், ஏனையோர் சிறப்பையும் கூறுகிறது" என்று சொல்கிறார். இந்தக்காரணங்களால் ஸ்ரீராமர் காலத்திற்குமுன்னமேயே ஜைநமதம் இருந்திருக்கிறதென்பதையும், தென்னாட்டிலும் ஜைந ஆஸ்ரமங்களிருந்திருக்கின்றனவென்பதையும் யாவரும் அறிதல்கூடும்.

இன்னும் பிராமணர்களாலும் மற்றைய ஹிந்துக்களாலும் மிகச்சிறப்புடன் கொண்டாடப்படும் சதுர் வேதங்களுலொன்றாகிய ருக்வேதத்தில் அஷ்டகம் 2 அத்யாயம் 7–வர்க்கம் !7–ல்

"அருகன் பிபர்ஷி சாயகாநி தன்வார்ஹ நிஷ்கம் யஜதம் விஸ்வரூபம்
அருகன் நிதம் தயஸேவிஸ்வம் மங்வமநவர் ஔஜீயா ரித்திரத்வ
[தஸ்தி"

என்ற சுலோகத்தால் அருகக்கடவுள் துதிகூறப்படுகிறது.

இன்னும் ருக்வேதத்தில்,

'திரைலோக்ய ப்ரதிஷ்டிதான் சதுர்விம்சதி தீர்த்தகரான்
விருஷபாத்யா வர்த்தமானந்தான் ஸித்தாந் ஸரணம் பிரபத்யே"

என்னும் சுலோகம் கூறப்பட்டிருக்கிறது.

இ - ள்: "மூவுலகத் தோராலும் வந்திக்கப் பெற்ற சித்தர்களாகிய விருஷப தேவர் முதல் வர்த்தமான ரீருக உள்ள 24-தீர்த்தங்கரர்களை நான் சரணமாக அடைகிறேன்" என்பதாம்.

இன்னும் யஜுர்வேதம் அஷ்டகம் 9 மந்த்ரம் 25-ல் 22-வது தீர்த்தங்கரராகிய நேமிஸ்வாமி துதி கூறப்பட்டிருக்கின்றது.

இன்னும் இந்துமத பதினெண்புராணங்களாகிய சிவபுராணம், பிரமாண்டபுராணம், நாகபுராணம், அக்னிபுராணம், பிரபாஸ புராண முதலியவைகளில் ஜைநசமய கடவுளாகிய விருஷபதேவ

(அருகக்கடவுள்) பகவானைப்பற்றி துதிசெய்யுமவற்றில் சிலவற்றை இங்கு எடுத்துக்காட்டுவாம்.

சிவபுராணத்தில்,

"அருகன் இதி தந்நாமதேயம் பாபப் பிரணாஸனம்|
பவத் பிஸ்சைவ கர்த்தவ்யம் கார்யம் லோக சுகா வஹம்||

என்று 31-ஆம் சுலோகம் கூறுகின்றது.

இ-ள்: "அருகன் என்னும் சுபநாமமானது பாபத்தை போக்கடிக்கின்றது. ஆகையால் ஜகத்துக்கு சுகத்தைக் கொடுக்கக்கூடிய இந்த நாமத்தை நீயும் உச்சாரணம் செய்வாயாக" என்பதாம்.

இன்னும் சிவபுராணம்,

கைலாஸே பர்வதே ரம்மியே விரஷபோயம் ஜிநேஸ்வரః|
சுஷகார ஸ்வாவதாரம் ச சர்வக்ஞః ஸர்வகః சிவః||

என்று 56வது சுலோகம் கூறுகின்றது

இ-ள்: "கேவலஞானத்தினுல் சர்வவியாபியாகி கலியாண ஸ்வரூப"த்தையுடையவனுகி சர்வக்ஞனுகிய விருஷபநாத ஜிநேஸ்வரர் (அருகக்கடவுள்) மனோஹரமான கைலாஸ பர்வதத்தின் மிசை எழுந்தருளினர் என்பதாம்.

இன்னும் நாபிராஜன், இவர்பத்தினி மருதேவி இவர்களுக்கு புத்திரராகிய விருஷபதேவர் என்பவர் க்ஷத்திரிய ஜ்யேஷ்டர் என்றும் இவருடைய வீரபுத்திரர்கள் பரதன்முதலியவர்கள் நூற்றுவரென்றும் பரதனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்வித்து விருஷபதேவர் தபஸை அடைந்தாரென்றும் பிரமாண்டபுராணத்தின் கண்

"நாபிஸ்த்வ ஜநயத் புத்ரம் மருதேவ்யாம் மனோஹரம்|
விருஷபம் க்ஷத்ரிய ஜ்யேஷ்டம் சர்வ க்ஷத்ரஸ்ய பூர்வஜம்,,||

"விருஷபாத் பாதோ ஜக்ஞே வீரःபுத்ர ஸதாக்ரஜோ|
பிஷிஜ்யம் பரதம் ராஜ்யே மஹாப்ரா வ்ராஜ்ய மாஸ்திதः||

என்ற சுலோகங்களால் விளக்கியுள்ளன.

இன்னும் நாகபுராணத்தில்

அஷ்டஸஷ்டிஷு தீர்த்தேஷு| யாத்ராயாம் யத்பலம் பவேத்||
* ஆதிநாதஸ்ய தேவஸ்ய ஸ்மரணே நாபி தத்பவேத்

என்ற சுலோகம் கூறப்படுகின்றது.

* ஆதிநாதர் என்பது விருஷப தீர்த்தங்கரர்.

இ-ள்: "அறுபத்தெட்டு தீர்த்தங்கள் யாத்திரை செய்வதால் உண்டாகும் பலன் ஆதிநாதபகவானை ஸ்மரிப்பதால் உண்டாகின்றது,, என்பதாம்.

இவற்றால் இந்துக்களின் வேத புராண காலங்களுக்கு முன்னமேயே ஜைந(சமண)மதம் இருந்திருக்கிறதென்பது நண்பர்களுக்குத் தெற்றென விளங்கும்.

இன்னும் ஜைநசமயத்துப் பாண்டவபுராணம், கிருஷ்ணன் பாண்டவர்கள்மீது கோபமடைந்து, அவர்களை அஸ்தினப்புரத்தினின்றும் விலக்கி அபிமன்யு புத்திரனுக்கு இராஜ்யபதத்தினைக்கொடுத்துப் பாண்டவர்களைத் தென்மதுரைக்கு அரசராகச் செய்வித்தானென்று கூறுகின்றது. இன்னும் இவ்விவரம் ஹரிவம்ஸ புராணம் பர்வம் 54. சு. 73-74லும் கூறப்படுகிறது. இன்னும் ஸ்ரீபுராணம் துவாரகை அழிந்ததையும், கிருஷ்ணனுடைய மரணத்தையும் பாண்டவர்கள் கேள்விப்பட்டு தக்ஷிண மதுரையினின்றும் புறப்பட்டு ஊர்ஜயந்தகிரி (கிர்னார்) வந்து நேமிபகவானைக்கண்டு நமஸ்கரித்து தங்களது பூர்வ பவத்தினை வினவ, பகவான் கூறியருளக் கேட்டு சம்ஸார வைராக்கியமடைந்து ஜிநதீக்ஷையைப் (நிர்க்கந்த தபஸை) பெற்றனரென்று கூறுகின்றது.

இன்னும் 22-வது தீர்த்தங்கரராகிய நேமிபகவானைப்பற்றி,

"கைலாய மெனுந் திருமலைமே லுறைகின்றவர்
கணநாயகர் தென்றமிழ் மலைநாயகர் செம்பொன்"

என்று திருக்கலம்பகம் 74-ஆம் செய்யுளடி கூறுகின்றது.

இ - ள்: "கைலாய மென்று சொல்லப்படும் திருமலையின்மீது வாழ்பவர்; பன்னிரண்டு கணங்களுக்கும் நாதரானவர்; தெற்கிலிருக்கும் பொதியமலைக்கும் நாதரானவர்; செம்பொன்னாலாகிய மும்மதில்கள் சூழ்ந்த சமவசரணத்தை யுடையவர்" என்பதாம்.

இச்செய்யுளில் கூறியவற்றில் கைலாயமென்னும் திருமலை போளூர் தாலுகாவில் உள்ளது. இந்த மலையின்பேரில் இரண்டுவில் (12-அடி உயரம்) பிரமாணம் நேமிதீர்த்தங்கரஸ்வாமி சிலாவிக்ரகம் உள்ளன. அது பாண்டவர்களால் செய்வித்ததென்பது ஜைநப் பெரியோர்களின் கர்னபரம்பரையான வர்த்தமானம். அந்த மலையின்கீழ் ஆலயமும், சிலாவிக்கிரகங்களும், தாம்பிரவிக்கிரகங்களும், அநேக சாஸனங்களும் உள்ளன. அந்த சாஸனங்களை கவர்ன்மெண்டார் எழுதிக்கொண்டு போயிருக்கிறார்கள்.

‘நேமிதீர்த்தங்கரர் தெற்கிலுள்ள பொதியமலைக்கும் நாதரானவர்’ என்றதனால் இந்தப்பகவான் சர்வதர்ம க்ஷேத்திரங்களிலும் ஸ்ரீவிஹாரம் செய்து தர்மோதேசம் செய்தது போலவே தெற்கிலுள்ள பொதியமலையிலும் செய்திருப்பா ரென்பதும் அவருக்குக் கோவிலும், சிலாவிக்ரகங்கள் முதலானவைகளும் திருமலையிலுள்ளதுபோல ஏற்பட்டி ருக்கவேண்டுமென்பதும் நன்கு விளங்குகின்றன.

மற்கூறியவைகளை ஆராயுமிடத்து, நேமிஸ்வாமி, கிருஷ்ணன், பாண்டவர் முதலானவர்களுடைய காலத்திற்கு முன்னமேயே தென்தேசத்தில் ஜைநமதம் இருந்திருக்கின்றதென்பதும், ஜைநராகிய பாண்டவர்கள் தென்மதுரையை அரசாட்சி செய்திருப்பதாலும், நேமிசுவாமி அங்கே தர்மோபதேசம் செய்திருப்பதாலும் இவர்களுக்கு முன்னமேயே தென்மதிரைமுதலான பலவிடங்களில் ஜைநர்கள் நிலைபெற்றிருந் திருக்கின்றார்களென்பதும் தெற்றென விளங்கும்.

இன்னும் ஸ்ருதாவதார மென்னும் கிரந்தத்தில், கி. மு. 365-வது ஆண்டில் பத்திரபாகுமுனிவர் (24000) இருபத்து நாலாயிரம் முனிவர் சங்கத்துடன் உஜ்ஜெயினி நகரத்து உத்தியானவனத்தில் வந்திருந்தாரென்றும், அவர் வந்ததை வனபாலகன் கண்டு அந்நகர மன்னனாகிய சந்திரகுப்தனுக்கு அறிவிக்க, அவன் உத்தியானவனம் சென்று பத்திரபாகு ஸ்வாமியை நமஸ்கரித்து, தான் இரவில்கண்ட ஸ்வப்னங்களைச்சொல்ல அவற்றின் பலனைக்கேட்டு சம்ஸார வைராக்கியமடைந்து பத்திரபாகு முனிவரிடம் ஜிநதீக்ஷையைப்பெற்றுத் தவம்செய்திருக்க, பத்திரபாகு முனிவர் ஜிநதாஸ ஸ்ரேஷ்டி (வணிகன்) மனைக்கு ஆகாரத்திற்குச்சென்று, அங்கு ஆகாரம்பண்ண ஆரம்பிக்கும்சமயத்தில் அன்னியகிருகத்தில் 60நாளைய குழந்தை தொட்டிலில் அழுத துக்கத்தைக்கேட்டு ஆகாரங்கொள்ளாமல், 12-வருஷம் க்ஷாமம் வரப்போவதையறிந்து, சம்யமத்திற்கு (நல்லொழுக்கத்துக்கு) கெடுதி யுண்டாகுமென்று தெரிந்து வனத்திற்குச் சென்றனர் என்றும், அங்கு ஆகாசத்வனியைக் கேட்டு சுவல்ப ஆயுஷ்யம் தமக்கு இருக்கின்றதென்பதை யறிந்து, விசாகாசாரியருக்கு தமது பதவியிலிருக்கும்படி கணதிபதத்தைக் கொடுத்து, இவ்விவரத்தை 24000 முனிவர் சங்கங்களுக்குச் சொல்லி அவர்களை தக்ஷிணதேசம் போகும்படி ஆக்ஞாபிக்க அவர்களில் பன்னிரண்டாயிரம் முனிவர்கள் தக்ஷிணதேசம் சென்றனர்

என்றும், பின்னர்ப் பத்திரபாகு முனிவரும், சந்திரகுப்தமுனியும் உஜ்ஜெயினி உத்தியான வனத்தைவிட்டு ஸ்ரவணபெளிகுளம் வந்து சின்னமலையின்மீது வாசமாய்த் தவஞ்செய்திருக்க பத்திரபாகுஸ்வாமி மேல்படி சின்னமலையின்மிசை சுவர்க்க லோகமடைந்தார் என்றும் பிறகு சந்திரகுப்தமுனிவரும் அவ்விடத்தில் 12-வருஷம் தவம் செய்து சுவர்க்கமடைந்தார் என்றும், மற்ற பன்னிரண்டாயிரம் முனிவர்கள் ஸ்ராவகர்கள் (இல்லறத்தார்) நிர்ப்பந்தத்தால் உஜ்ஜெயினியிலிருந்து, சத்தர்மம் கெட்டு அவர்களில் இராமஸ்தூலபத்திராச்சாரியர் முதலானவர்கள் பத்திரபாகு சுவாமிகளின் திகம்பர மதத்திற்கு மாறுபாடாக தபோபிரஷ்டராகி * சுவேதாம்பரமதம், காஷ்டசங்கமதம், அர்த்தபாலகமதம் முதலான பலமதங்களை உண்டாக்கி விட்டார்கள் என்றும் பத்திரபாகு (முனிவர்.) ஸ்வாமி, சந்திரகுப்தன் ஆகிய இவர்கள் சரித்திரங்கள் விரிவாகக் கூறப்படுகின்றன.

சென்னை பிரசிடன்சி கலாசாலை தத்துவ சாஸ்திர போதகாசிரியர் ஸ்ரீமான் சக்கிரவர்த்தி எம். ஏ. ஐ. இ. யஸ். அவர்கள் 1922 வருஷம் ஜனவரி பிப்ரவரி மாதத்திய ஜைநா கெஜட்பத்திரிகையில் தமது ஆராய்ச்சியைக் கொண்டும், மேல் நாட்டார் ஆராய்ச்சியைக் கொண்டும் விரிவாக ஆங்கிலபாஷையில் எழுதியிருக்கும் வியாசத்தில்,

இந்துதேச சரித்திரத்தில் சந்திரகுப்த மௌரியர் மிகவும் பிரசித்திபெற்றவர்; மகத தேசத்தை யாண்ட இந்தப் பெரிய சக்கிரவர்த்தியைப்பற்றிய விஷயங்களை இந்தியாவின் அநேக பெரிய காவியங்கள் கூறுவதுமல்லாமல், அயல் நாட்டுச் சரித்திரக் காரர்களும்-முக்கியமாக கிரேக்கர்கள் முதலியவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள்; இந்தச் சந்திரகுப்த சக்கிரவர்த்தியின் சரிதையை ஜைநர்களின் பூர்விக சரித்திரத்தை ஆராய்ச்சி செய்கின்றவர்கள் அறிய வேண்டியது முக்கியமாக விருக்கின்றது; அந்தக்காலத்துக்குரிய

---

* சுவேதாம்பர மதமென்பது ஜைநசமயத்தில் ஒருபிரிவாக இந்த பத்திரபாகு ஸ்வாமிகாலத்தில் ஏற்பட்டது. சுவேதாம்பரர்களுக்கும், திகம்பரர்களுக்கும் இல்லற ஒழுக்கங்கள் ஒற்றுமையாக விருப்பினும் துறவற ஒழுக்கங்களில் சிறிது பேதமுண்டு, சுவேதாம்பரர்களின் புராண சரித்திரங்களில் சில திகம்பர சாஸ்திரங்களுக்கு வேறுபட்டன வாயிருக்கின்றன. மற்றமதங்கள் பிரசித்தியில்லாத வெவ்வேறு கொள்கைகளையுடையன.

அநேக விஷயங்களையும், சிலாசாஸனங்களையும், பழய கட்டிடங்களையும் நன்கு பரிசை்ஷசெய்து அநேக உண்மைகளை லூயிரைஸ் என்பவரும், டாக்டர் எப். ட்ப்ள்யூ - தாமஸ் என்பவரும் வெளிப்படுத்தி யிருக்கின்றார்கள்; அவர்கள் செய்தது இந்தநேச சரித்திரத்துக்கு மிகவும் உதவியாக விருக்கின்றது; அசோகனுடைய பூர்வீக மதமும் பத்திர பாகுஸ்வாமி சந்திரகுப்தனுடன் தென்னாட்டிற்கு வந்ததும் சரித்திர பூர்வமாக உண்மைகள் என்று ஒப்புக்கொள்ளப் படுகின்றன என்றும்

மதுராவில் தோண்டி யெடுக்கப்பட்ட ஜைநஸ்தூபிகளைப்பற்றி வின்சர்செண்டு ஸ்மித் என்பவர்,"இந்த மாதிரியுள்ள ஸ்தூபிகளெல்லாம் பொதுவாக பௌத்தர்களுடையன வென்று கருதப்படுகின்றன; ஆனால் கி பி-157—க்குப்பின் இருக்கும் சாசனங்களையும், ஸ்தூபிகளையும் ஆராயும்போது மதுராவில் உள்ள ஜைநர்களின் ஒட்வா ஸ்தூபி வெகுகாலத்திற்கு முந்திய தென்பதும், பழைமையான தென்றும், அது தேவர்களால் நிர்மாணம் செய்யப்பட்டதென்றும் கருதப்படுகின்றது. ஆகையால், அது கிறிஸ்து சகாப்தத்திற்கு அநேக நூற்றுண்டுகளுக்கு முன்னமேயே செய்யப்பட்டிருக்க வேண்டும்.

"மகாவீரர் கி. மு. 527ல் பரிர்நிவாணம் அடைந்தார் என்று கருதலாம். அதற்குப் பிறகு 1300-வருஷங்கள் கழித்து அல்லது கி. பி. 750-ல் இந்த ஸ்தூபி புதுப்பிக்கப் பட்டிருக்கவேண்டும். அது முதன்முதலில் * பார்சுவ நாதர்காலத்தில் அதாவது கி. மு. 600 வருஷங்களுக்கு முன்னமேயே செங்கற்களினால் கட்டப்பட்டிருக்கவேண்டும். ஆகையால்அதனுடைய அஸ்திவாரத்தைப் பரிசை்ஷசெய்த டாக்டர் பாரர் என்பவரின் அபிப்பிராயப்படி இதுவே இந்தியாவிலுள்ள கட்டிடங்களில் மிகப்புராதன மானதென்று தோன்றுகிறது" என்று சொல்கிறார் என்றும், இந்தச்சரித்திர உண்மைகளோடு தீர்த்தங்கரர்களைப்பற்றி ஜைநர்கள் கூறுவதையும் கவனித்தால், ஜைநசமயம் மகாவீரருக்கு முன்னமேயே இருந்ததாகத் தெரிகிறது; உத்தர இந்தியாவில் ஸ்தூபிகள் கட்டுவதற்காக கி. மு. 600 வருஷங்களுக்குமுன் ஜைநர்கள் இருந்தார்களென்றால் தென் இந்தியாவிலும் பத்திரபாகுஸ்வாமி வருவதற்கு முன்பே ஜைநர்கள் இருந்திருக்க வேண்டுமென்பது மிகையாகாது,

* 23-வது தீர்த்தங்கர ராகிய பார்சுவநாதர் காலம், கி. மு. 777

அஃதல்லாமலும் இவ்விடத்தில் ஜைநர்கள் இல்லாதிருந்தால் பத்திர பாகுஸ்வாமி அநேக ஆயிரக்கணக்கான ஜைநமுனிவர்களை அழைத்துக்கொண்டு வந்திருக்க மாட்டார்; ஏனெனின் ஜைநமுனிகள் ஜைநர்கள் வசிக்காத அன்னிய நாடுகளுக்குப் போகமாட்டார்கள்; பண்டைக்காலம் தொட்டு பாண்டிய அரசர்கள் ஜைநர்களாக இருந்தார்க ளென்பதுவும், பத்திரபாகு ஸ்வாமிகள் அவர்களுடைய ஆதரவை எதிர்பார்த்தன ரென்று சொல்வதுவும் சரித்திர பொருத்தமுடையனவேயாகும். என்றும் சொல்கிறார்.

இதுநிற்க, தமிழ்நூல்களுக்கெல்லாம் மிகப்பழமையானதும், சிறப்புள்ளதும் தொல்காப்பியம்; இதை இயற்றிய ஆசிரியர் ஜைநர் என்பதை மேலேபண்டிதர்கள் அபிப்பிராயத்தில் கூறியுள்ளேன் இவர் காலத்தைப்பற்றிப் பலபண்டிதர்கள் பலவாறு கூறியிருக்கிறார்கள். அவர்களில் யாழ்ப்பாணம். சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள், "தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் பதிப்புரையில் தொல்காப்பியம் இயற்றிய பின் சென்றகாலம் எவ்விதத்தாலும் பன்னீராயிரம் வருடங்களுக்குக் குறையாது; இக்காலவிவரம் வீரசோழியம் பதிப்புரையில் விரிவாக ஆக்ஷேபநிவாரணத்தோடும் எழுதியிருக்கின்றேன்; ஆங்குக்கண்டுகொள்க" என்று எழுதியுள்ளார்.

இன்னும் விஜயநகரம் மகாராஜா கலாசாலை சரித்திர போதகாசிரியர் ஸ்ரீமான் எம். எஸ். இராமசாமி அய்யங்கார் எம். ஏ. அவர்கள் 1920–ஆம் வருஷம் ஜூலை மாதத்திய ஜெயினு கெஜட்பத்திரிகையில் ஆங்கிலத்தில் எழுதிய வியாசத்தில்,

"பத்திரபாகு ஸ்வாமியின் காலத்திற்கு முன்னமே அதாவது கி. மு 297–வது வருஷத்துக்கு முன்னுடியே ஜைநர்கள் தென்னுட்டிற் குடியேறி இருந்தார்களென்பது தெரிகிறது. இந்த விஷயத்தை நிச்சயப்படுத்த இராஜாவளி கதையைவிட வேறு எந்த ஆதாரமுமில்லை என்றும், எழுதியிருக்கிறார்.

இன்னும் சென்னை சட்டகலாசாலைப் பேராசிரியர் திருவாளர் கா. சுப்பிரமணியம் பிள்ளை எம். ஏ. எம். எல் அட்வகேட் அவர்கள், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் பதிப்பித்த தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தின் முகவுரையில் * "பாரதகாலத்திற்கு

(* பாரத காலம்-பாண்டவ சகாப்தம். 5033.)

முன்னேயே தொல்காப்பியர் நூல் செய்தனர் என்பது தெளிவு" என்று கூறுகிறார்.

இன்னும், மேல்படி எம். யஸ். இராமசாமி ஐயங்கார் எம். எ அவர்களாலும், சேஷகிரிராவ் எம். ஏ. அவர்களாலும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட 'தென்னிந்திய ஜைநர்கள்' என்ற புஸ்தகம் 3-வது அத்தியாயம் 33–ஆம் பக்கத்தில்,

'மகா நாமா' என்பவரால் எழுதப்பட்ட, 'மகாவம்ஸம்' என்னும் சரித்திரம், இலங்கை தீவில் அரசாண்ட பாண்டுகபயா என்பவன் காலத்தில் கி. மு. 437 ஆம் ஆண்டில் அவனால் அநுராதபுரம் என்னும் தலைநகரம் ஸ்தாபிக்கப்பட்ட தாகவும், அவ்விடத்தில், 'கிரி' என்கிற நிர்க்கந்த முனிவருக்கு இடவசதிகள் கொடுக்கப்பட்டன என்றும், 'கும்பந்த' என்கிற நிர்க்கந்த முனிவருக்கும் ஆலயவசதிகள் செய்து கொடுக்கப்பட்ட தாகவும் கூறுகின்றது. இதனால் நமக்கு ஜைநமதம் பத்திரபாகு முனிவருக்கு முன்னமேயே தென்னிந்தியாவைத்தாண்டி இலங்கை வரையில் பரவியிருந்ததாகத் தெரிகிறது என்று கூறுகின்றார்கள்.

இவ்வரலாறுகளைக் கொண்டு ஜைநமதம் மிகப்பழைமையாய் எப்பொழுது முள்ளதென்பதை உணரலாம். இப்பரத க்ஷேத்திரத்தின்கண் இந்த ஆரியகண்டம் முழுமையும் இத்தகைய ஜைநமதமே நிறைந்திருந்தது. இருபத்து நான்காம் தீர்த்தங்கரராகிய மகாவீரர் காலத்திற்கு முன்னமேயே ஜைநமதத்திலிருந்து சைவம், வைணவம் முதலான தொண்ணூற்றாறு பாஷண்டி மதங்களும் அவற்றில் முந்நூற்றறுபத்து மூன்று விகல்பமாய் வர்த்திக்கும் மதங்கள் தோன்றியிருந்தன; அவை திவாகரன்முன் ஏற்றிய, தீபம் பிரகாசமில்லாதிருத்தல்போன்று ஜைநசமயத்தினது பிரகாசத்தின் முன் மின்மினிபோல பிரகாசமின்றி மழுங்கி இருந்தன. பிறகு வடநாட்டிலிருந்த அந்தச் சைவர் வைணவர்முதலான ஆரியர்கள் தென்னாட்டிற் குடியேறிச் சைவம், வைணவம் முதலிய சமயங்களை நிலைநாட்டினர்கள். அக்காரணத்தாலேயே சைவம் என்கிற வடசொல் சிவமதத்திற்கும், வைணவம் என்னும் வடசொல் விஷ்ணுமதத்திற்கும் பெயர்களாயின.

வடநாட்டிலிருந்துவந்த சைவஆரியர்கள் தென்தேசத்திற் குடியேறிச் சைவசமயத்தை நிலைநாட்டினகாலம் தொல்காப்பியர் காலத்

திற்குப் பின்னும், கூன்பாண்டியன் காலத்திற்கு முன்னும் உள்ள காலமென்பது விளக்க மாகின்றது.

எவ்வாறெனின், தொல்காப்பியர்,

"சகரக் கிளவியு மவற்றோ ரற்றே
அ ஐ ஔவெனு மூன்றலங் கடையே"

என்ற எழுத்ததிகாரம் மொழிமரபு 62-ஆம் சூத்திரத்தில் விளக்கிக் காட்டியபடி ச சை செள என்ற எழுத்துக்களை முதலாக வுடைய பதங்கள், அதாவது சங்கம், சபை, சைவம், செளரியம் என்பன போன்ற சொற்கள் தமிழ் மொழிகளல்ல வென்பது தெளிவாகும். ஆதலின் சைவம், என்கிற பெயரும், சைவசித்தாந்தமென்பதும், சிவன்கோயில் சிவன்வழிபாடு ஆகியவைகளும் தொல்காப்பியர் காலத்தில் இல்லை யென்பது தெரியவருகின்றது. மேலும் தொல்காப்பிய ஆசிரியர் தமிழ்நாட்டின் தெய்வங்களைச் சொன்ன விடத்துப் புத்தரைப்பற்றிக் கூறுவதுபோல சிவனைப்பற்றியும் சொல்லவில்லை; அருகன், விஷ்ணு, முருகன், இந்திரன், வருணன் ஆகியவர்களையே கூறியுள்ளார். எங்ஙன மெனின்,

"வினையி னீங்கி விளங்கிய வறிவின்"

என்னும் சூத்திரத்தினல் அருகக்கடவுளையும்,

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலக மும்
வருணன் மேய பெருமண லுலகமும்"

என்னும் சூத்திரத்தினல் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் முதலான நிலங்களுக்குரிய விஷ்ணு, முருகன், இந்திரன், வருணன் ஆகிய நான்கு தெய்வங்களையுமே ஆசிரியர் கூறியிருக்கின்றார். இந்த விஷ்ணு முதலிய தேவர்களை யாதவர், வேடர், கானவர், பரதர் (மீன்பிடிப்போர்) ஆகிய இனத்தார்கள் வழிபட்டு வந்தார்களென்பது விளக்கமாகின்றது. இவ்வகைகளைப் புகழேந்திப் புலவர்,

"காடாகு முல்லை கழி நெய்தலாகுங் கல்லாங் குறிஞ்சி
நாடா மருத நடலை வெம்பாலையி னாட்டிற் றெய்வங்
கோடார்கான் வருணன் குக னிந்திரன் கூறுதுர்க்கை
மாடாயர் மீன்புல்லர் குன்றவர் கானவர் மள்ளருமே"

என்ற இரத்தினச் சுருக்கம் என்னும் நூலில் விளக்கியுள்ளார்.

தொல்காப்பியர் இங்கு மாயோனைக் குறித்துக் கூறியிருப்பதைக்கொண்டு விஷ்ணு, முல்லை நிலத்துக்குரியவரென்றும் அக்கடவுள் வழிபாடு செய்தவர் யாதவர் என்றும் விளக்கமாகின்றது. இதனால், அந்தத் தொல்காப்பிய ஆசிரியர் காலத்திற்குமுன் வைணவ பிராம்மணர் தென் தேசத்தில் குடியேறி இருந்ததாகத் தெரியவில்லை ஒருவாறு பிராம்மணர்கள் இருந்திருக்கக்கூடும் எனினும், அவர்கள் அக்காலத்தில் பிரபலமாயில்லை. இதற்குத்தக்க ஆதாரங்களிருக்கின்றன: வைணவ பிராம்மணர் முதலானவர்களுக்கு வடமொழி வேதாகமபுராண இதிகாசங்கள் தவிர அக்காலத்தில் தமிழ்நூல்கள் இருந்ததாகத் தெரியவில்லை. பிற்காலத்தில் ஜைனர்கள் போட்ட அடிப்படையான தமிழ் நூற்களைக்கற்று ஆழ்வாராதியர்கள் திருவாய்மொழி முதலியவற்றைச் செய்திருக்கிறார்கள். அக்காலத்தின் தொடக்கத்திலிருந்து வைணவம் தமிழில் விருத்தியாகத் தொடங்கி, இராமானுஜர் காலத்தில் வைணவசமயம் பிரபலமாகியிருக்கிறது. இவவாறானதற்கு வைணவர்கள் இயற்றியுள்ள தமிழ் நூற்களே போதுமான சான்றாகும்.

வைணவசமயம் இராமானுஜர் காலத்தில் பிரபலமாயிற்றென்று சொல்வதற்கிணங்க,

"தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ்சடையோன்
சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் நான்மறையும்
நிற்கக் குறும்புசெய் நீசரும் மாண்டனர் நீணிலத்தே
பொற்கற்பகம் எம்பிராமா நுஜமுனி போந்த பின்னே"

என்ற இராமாநுஜ நூற்றந்தாதி 99-ஆம் செய்யுள் கூறுகின்றது முணர்க.

இதுநிற்க தொல்காப்பியர் முருகக்கடவுளின் வழிபாடு கூறியிருக்க, அக்கடவுள் சிவபிரான் புத்திரராகவுமிருக்க, சிவபிரான் வழிபாடு ஆசிரியர் கூறவில்லையென எவ்வாறுசொல்லக்கூடுமென்று சிலர் கருதவுங்கூடும் முருகக்கடவுள் சிவபெருமான் புத்திரரென்று சொல்வது பொருத்தமன்று. எவ்விதமெனின்,

வைணவ சமயபுராணங்களில், *விஷ்ணு அல்லது அவர் அம்சம் ஸ்ரீராமராக அவதரித்துச்சீதையை விவாகம்செய்து பின் இரு

* கடவுள், தேவர், கடவுளனுமதியில் அவர்பக்தர் ஆகியவர்கள் அவரவர் மனதிற் கியைந்தவாறு அவர்களாவது அல்லது அவர் அம்சமாவது இப்பூமியில் அவதாரம் செய்தார்களென்று சைவ வைணவ புராணங்களில் கூறுவது கிஞ்சித்தும் ஒப்புக்கொள்ளத் தக்கதன்று. இவ்வாறு கூறுவது ஜைனசமய வேதத்திற்கு முற்றும் முரண்பாடுடையதாம்.

வரும் கலந்து குசலன் என்னும் புத்திரனைப் பெற்றார்கள் என்று கூறுகின்றன. இவைபோல சைவசமயத்தினர் சுத்தப்பிரமத்திலிருந்து தோன்றியவர் ஈஸ்வரன் என்றும், அவர் பார்வதியை விவாகம் செய்துகொண்டார் என்றும் கூறுகின்றார்கள். ஆயினும் இவ்விருவர்களும் சங்கமம் செய்து ஸ்ரீராமருக்கும் சீதைக்கும் குசலன் பிறந்தது போன்று இவர்களுக்குப்பிள்ளை பிறந்ததாகச் சொல்லவில்லை. முருகக்கடவுளென்று சொல்லப்பட்டவர் இவர்களின் சங்கமத்தால் பிறந்தவரல்லர்; எங்ஙனமெனின்:

சிவபெருமான் நுதல் விழிமூலமாக அதாவது நெற்றிக்கண் மூலமாக தீட்சண்ணியமுள்ள ஆறு தீப்பொறிகள் வெளிப்பட அப்பொறிகளை கங்கையாற்றில் விடும்படி அக்கினி வாயு ஆகிய தேவர்களுக்குக் கட்டளையிட அக்கினிதேவனும் வாயுதேவனும் அவற்றை ஏற்றுக்கொண்டுபோய்க் கங்கையில்விட தீட்சண்ணியமுள்ள அப்பொறிகள் கங்கா ஜலத்தோடு சரவணப்பொய்கையில்போய் சேர்ந்து ஆறுபிள்ளைகளாகத் தாமரைமலரின்மீது எழுந்தருளியிருக்க உமையவள் சரவணப் பொய்கையிற் சென்று அறுவகைத் தோற்றங்களையும் அன்புமிகுதியால் கரங்களை நீட்டி அக்குழந்தைகளை வாரியெடுத்து மார்பினிடத்துச் சேர்த்து இறுகவணைத்துச் சண்முகங்களும் பன்னிருகரங்களும் விளங்கும்படியான ஒருருவாகச் செய்தனள் என்று கந்தபுராணம் உற்பத்தி காண்டம் சரவணப்படலம் கூறுகின்றது இதன்விரிவு கந்தபுராணத்தில் கண்டுகொள்க.

ஆதலின் சிவபிரானுடைய நுதல்விழிகளின் மூலமாக உண்டான தீட்சண்ணியமுள்ள தீப்பொறிகள் கங்கா ஜலத்தோடுசென்று சரவணப் பொய்கையில்சேர அவற்றினின்றும் உற்பவித்ததாகக் கூறும் ஆறுமுகக்கடவுள் சிவபெருமானுடைய அம்சமென்று ஒருவாறு சொல்லலாமே யன்றிப் புத்திரரென்று சொல்லுதல் கிஞ்சித்தும் பொருந்தாது.

இன்னும் காஞ்சிபுராணம் சுரகரீசப்படலத்தில் ஆறுமுகக் கடவுள் பிறப்பைப்பற்றி கூறுவதாவது:—

சிவபெருமான், "பனித்த முத்துருக்கியன்ன வெண்புனல் பருகுமின்கள்," (தமது வீரியத்தை உண்ணுங்கள்,) என்று திருமால் முதலிய தேவர்களுக்குச் சொல்ல அக்கினிதேவன் உட்கொள்ள

அவ்விந்து அக்கினிதேவன்முதல் திருமால் பிரம்மா இந்திரன் முதலிய சகல தேவர்களுக்கும் கருப்பம் ஓங்க ஜுரநோயில் கட்டுண்டு பிறகு சகல தேவர்களும் காஞ்சிப்பதியில் சரகா தீர்த்தத்தில் ஸ்நானம்செய்ய ஜுரநோய் நீங்கிய தென்றும், பிறகு மேருமலையை அடைய கர்ப்பவேதனைநீங்கி தேவர்களின் வயிற்றினின்றும் பொன்மயமானஜோதி எங்கும்பரவித்தோன்றி கங்கையின் வழியால் சரவணப்பொய்கையை அடைந்து ஆறுமுகங்களுடைய முருகக்கடவுள் உதயமானாரென்றும் கூறுகின்றது.

இம்மாதிரி கூறுவது கடவுள், தேவர்கள் ஆகியவர்கள் தன்மைக்கு கிஞ்சித்தும் பொருத்த மில்லாமையால் இக்கதையை விரிவாக எழுத மனங்கொள்ளவில்லை. ஆயினும் முருகக்கடவுள் பிறப்பைப்பற்றி புராணத்திற் கொருவிதமாக இருப்பதை இங்குச்சுட்டிக் காட்டநேர்ந்தது.

இயற்கையைக் கூறும் தொல்காப்பியர், இவ்வாறு கந்தபுராணத்திலும், காஞ்சிபுராணத்திலும் கூறும் இயற்கைக்கு விரோதமான பிறப்புள்ள முருகரைக் கூறியிருக்கவே மாட்டார். இக்கதைகளடங்கிய புராணங்கள் தொல்காப்பியர் காலத்திற்குப் பிற்பாடு சில் லாயிரவாண்டுகளுக்குப்பின் இயற்றிய தென்பது யாவரும் எளிதில் உணரலாம்.

மேலும் தொல்காப்பியர் வேடுவர்க்குக் கடவுள் முருகர் என்று கூறியுள்ளாரே யொழிய அக்கடவுள் சிவபிரான் புத்திர ரென்று கூறவில்லை. மேல் 89-ஆம் பக்கத்தில் கண்ட புகழேந்திப்புலவர் பாடிய செய்யுளில் முருகர் குறிஞ்சி நிலத்துக் குடையவ ரென்றும் வேடுவர்க்குக்கடவுள் என்றும் கூறியுள்ளார். இக்காரணத்தாலும் சிவன்வழிபாடு செய்யும் சைவசமயம் தொல்காப்பியர் காலத்திலில்லை யென்று சொல்லுதல் மிகப்பொருத்த முடையதே என்பது மேல்குறித்த பிரமாணங்களால் விளக்கமாகிறது.

இவை இங்ஙனமிருப்ப, தொல்காப்பியம் பொருளதிகாரம் 88 ஆம் சூத்திரத்தில் கூறப்பட்டிருக்கும்,

“கொடிநிலை கந்தழி வள்ளி”

என்றபதங்களில், கந்தழி, என்பது சிவனைக்குறித்ததென்று சைவர்கள் கூறிச்சிவமதம் தொல்காப்பியர் காலத்திலேயே இருந்ததென்று ஸ்தாபிக்கப் பார்க்கின்றனர்.

நச்சினார்க்கினியர் உரையைக்கொண்டே இவ்வாறு கூறுகின்றனர். நச்சினார்க்கினியர் இச்சூத்திரவுரையில் "கொடிநிலை - கீழ்திசைக்கண்ணே நிலைபெற்றுத்தோன்றும் வெண்சுடர் மண்டிலம்" என்றும்,"கந்தழி, ஒருபற்றுக்கோடின்றி அருவாகித்தானே நிற்குந் தத்துவங்கடந்த பொருள்" என்றும், "வள்ளி–தண்கதிர் மண்டிலம்" என்றும் கூறியுள்ளார். இவ்வாறு கூறி

"சார்பினாற் றோன்றாது தானருவா யெப்பொருட்கும்
சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த
தூய்மையதா மைதீர் சுடர்"

என்றசெய்யுளை 'கந்தழி' என்னும் மொழிக்கு உதாரணம் காட்டியுள்ளார்.

இச்செய்யுள் ஒருபற்றுக்கோடின்றி அருவாகித்தானே நிற்குந் தத்துவங்கடந்த பொருள் என்ற கருத்திற்கியைந்ததே தவிர கந்தழி யென்னும் மொழிக்கு உதாரணமாகாது. இவ்வாறு 'கந்தழி' யென்னும் மொழிக்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையைக்கொண்டே சைவசமயத் தவர்கள், அதுசிவனைக்குறித்த தென்கின்றனர். இதில் ஆசிரியர், எச்சமயத்தையும் குறித்துக் காட்டாமையால் ஜைநர், வைணவர் முதலிய சமயத்தவர்களும் இம்மொழி தங்கள் தங்கள் கடவுளைக்குறித்த தென்று சொல்லக்கூடும். இச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் உரையே பொருந்தாதிருக்க, 'கந்தழி' என்பது கடவுளைக்குறித்த தென்பது எங்ஙனம் பொருத்தமாகும்.

கந்தழி என்பதின் பொருள் வேறாகும். "கந்து-பற்றுக்கோடு, அழி-அழிதல்" என்பதுவே இதன் பொருளாம். இதைக்கொண்டு தனக்குள்ள பற்றுக்கோடு அழிதலையுடைய பொருள் என்று இதற்கு ஒருவாறு பொருள்கூறலாம். எனினும் இதுவும் சரியான பொருத்தமுள்ள பொருளன்றாம் ஏனெனில் இயற்கையிலேயே பற்றுக்கோடின்றி அருவாகித்தானே நிற்குந் தத்துவங்கடந்த பொருளை, 'தனக்குள்ள பற்றுக்கோடு அழிதலையுடைய பொருள்' என்று கூறுதல் பொருத்த மற்றதாம். பற்றுக்கோடு இருந்தாலல்லவோ அதற்கழிவு கூறுதல் பொருந்தும்.

இச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் வகுத்த உரைகளுக்கு மாறாக அடியிற்காணும் சான்றோர்கள் வேறுவகையான உரைகளைக் கூறியிருக்கின்றார்கள்:

இளம்பூரணர், 'கொடிநிலை' என்னும் மொழிக்கு,

"பூங்க ணெடுமுடிப் பூவைப்பூ மேனியான்
பாம்புண் பறவைக் கொடிபோல வோங்குக
பல்யானை மன்னர் பணியப் பனிமலர்த்தார்க்
கொல்யானை மன்னன் கொடி"

என்றும், 'கந்தழி' யென்னும் மொழிக்கு

"அன்றெறிந் தானு மிவனு லாண்வலித்
தின்றிவன் மாறு வெதிர்வார்யா ரென்று
மடையார் மணிப்பூ ணடையாதார் மார்பிற்
சுடராழி நின்றெரியச் சோ"

என்றும், 'வள்ளி' என்னும் மொழிக்கு 'வள்ளியிற் சார்ந்து வரு மாறு வந்தவழி கண்டுகொள்க' என்றும் பொருளதிகாரம் புறத் திணை இயல் 85-ஆம் சூத்திரத்தில் கூறியுள்ளார்.

இன்னும் வைத்தியநாத தேசிகர் இலக்கணவிளக்கத்தில் பொரு ளதிகாரம் 6 7-ஆம் சூத்திரத்தினடிகளில்

"மூவர் கொடியுளு மொன்றொடு பொரீஇ
மேவா வுரைத்த வியன் கொடி நிலையுஞ்
சோவினை யழித்த தளவணி மாயோன்
மேவரு விறலினை வியந்த கந்தழியு
மெரிசுடர் வேலவர்க் கிளகிய வுள்ளத்
தரிமலர்க் கண்ணிப சாடிய வள்ளியும்
விரும்பிய தரூஉம் விண்ணவர் தம்முறை"

என்றும் விளக்கியுள்ளார்.

இன்னும் வீரசோழியம் பொருட்படலம் 21 ஆம் செய்யுளில்,

"புகட்சி பரவல் குறிப்புக் கொடிநிலை கந்தழியே
யிகட்சி மலிவள்ளி யென்றிவை யாறு நெறிமுறையில்"

எனவரும் அடிகளில், கொடிநிலை, கந்தழி, வள்ளி யென்ற மொழி களுக்கு உரை கூறியவிடத்து, "கொடிநிலையாவது கொடியினது தன்மை கூறுவது; கந்தழியாவது செருவிற்றொட்பமுடைமை; வள்ளி யாவது முருகனைக்குறித்தது" என்று கூறியிருக்கின்றார். இன்னும் ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலையில், இளம்பூரணர், வைத்தியநாத தேசிகர், வீரசோழியக்காரர் ஆகியவர்களின் கருத்

துக்களையே கூறியுள்ளார். இவைகளை ஆராயுமிடத்து; "கொடிநிலை கந்தழி, வள்ளி" யென்ற தொல்காப்பிய சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டிய மேற்கோள்களும், உரைகளும், பொருத்தமற்றன வென்பது நன்கு விளங்கும். ஆதலின், தொல்காப்பியர் சிவனைக்கூறவில்லை யென்பது நிச்சயமாகத் துணிபப்படும்.

தொல்காப்பியர் காலத்திற்குப் பிறகுதான் சைவ ஆசிரியர்கள். சைவம் என்னும் விதையை விதைத்தனர். அவ்விதை முளைத்துச் சிறுபயிராக வளர்ந்து வருங்காலத்தில், மங்கையர்க்கரசி, குலச்சிறையார், திருஞானசம்பந்தர் ஆகிய மூவர்களும் அச்சைவச் சிறு பயிர் ஓங்கும்படி அதாவது, உயர்ச்சி பெறுதற்குச் சமணர்களென்றகாடுகளை அழித்தால் சைவப்பயிர் செழிக்குமென்று தமது மனதுட்கொண்டு சமணர்களைக் காப்பாற்றிக் கொண்டுவந்த கூன் பாண்டிய அரசனைத் தமது சுவாதீனம் செய்து சமணர்களை வேரொடுங்களையத் தொடங்கினர். அவ்வாறு ஆரம்பம் செய்வதற்கு முன்னமே அதாவது கூன்பாண்டியன், திருஞானசம்பந்தர் ஆகிய இவர்கள் இளம்பிராயமாயிருக்குங் காலத்தில் சைவசமயம், சைவசித்தாந்தம், சிவன்கோவில், சிவன் வழிபாடு முதலியவைகள் ஜைனமதப்பிரகாசத்தின்முன், சந்திரனுக் கெதிர்ப்பட்ட மின்மினிபோல அதிகப்பிரகாசமின்றி இருந்தன வென்பது,

"இருவரு மீண்டு தத்த மிருக்கையிற் போகி யன்றை
பருவமங் கலப்பின்னுட் பாண்டிமா தேவியாரும்
பெருமதி யமைச்சரேறும் பிள்ளையார் மடத்திற் போகி
யருகரை வெல்லுஞ் சூழ்ச்சி யாதென வளந்து தேர்வார்"

"பேரரு ணிறைந்தகாழிப் பெருந்தகை யுடன்போய்த் தங்கோன்
சிரவை குறுகி யீது செப்புவார் செய்ய கோலாய்
காரமண் காடே யெங்குங் கழியவு மிடைந்தவின்ன
வேரொடுங் களைந்தாற்சைவ விளைபயி ரோங்கு மென்றார்"

"அவ்வண்ணஞ் செய்வ தேயென் றரசனு மனுச்சை செய்ய"

என்றுவரும் திருவிளையாடற் புராணம் சமணரைக் கழுவிலேற்றிய படலச் செய்யுட்களால் விளங்கும்.

இச்செய்யுட்களின் கருத்தாவது:—"பாண்டியன் தேவியும் அவர் மந்திரியும் சம்பந்தரிருக்கும் மடத்திற்போய்ச் சமணர்களைக் களைந்து வெற்றியடையும் சூழ்ச்சியாதென ஆராய்பவராய்த் தேர்

ந்து, சம்பந்தருடன் கூன்பாண்டிய வரசனிடம் போய்ச் சொல்லத் தொடங்கி, "காடுபோல அடர்ந்திருக்கும் சமணர்களை எங்குமில்லாமல் வேரொடுக்களைந்தால் சைவ விளைபயிர் ஓங்கும்" என்று சொல்ல, அரசன், "அவ்வண்ணமே செய்க" வென்று சம்மதித்தான்" என்பதாம்.

மேலே, "காசமண் காடேயெங்கும்" எனத்திருவிளைபாடற் புராணத்தில் கூறியதற் கிணங்கத் திருஞான சம்பந்தரும், "எண்ணிறந்த வமணர்களும்" என முதல்திருமுறை திருவிழி மிழலைப் பதிகத்தில் கூறியுள்ளார். இதனால் திருஞான சம்பந்தர் காலத்திற்கு முன்னமேயே ஜைந (சமண) மதம் அபரிமிதமாகப் பரவி விருத்தியடைந்திருந்த தென்பதை யாவரும் நன்குணர்தல் கூடும்.

ஆதிபகவான், பரதசக்கிரவர்த்தி ஆகியவர்கள் சிருஷ்டிசெய்த பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்னும் நான்குவர் ணாஸ்மாத்தவர்களும் அயோத்திபா முதலிய தேசங்களில் வியாபித்திருந்தது போல தமிழ் தேசத்திலும் ஆதிகாலமுதல் ஜைநத்தமிழர்கள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு பகுப்பினையுடையவர்களாய் வசித்திருந்தார்கள்; அப்படி யிருந்ததனாலேயே தொல்காப்பியர்,

> "நூலே காக முக்கோல் மணையே
> யாயுங் காலை யந்தணர்க் குரிய"

என்றும்,

> "அந்தணா ளர்க் குரியவு மரசர்க்
> கொன்றிய வருஉம் பொருளுமா றுளவே"

என்றும்,

> "வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை"

என்றும்,

> "வேளாண் மாந்தர்க் குழுது ணல்ல
> தில்லெண மொழிய பிறவகை நிகழ்ச்சி"

என்னும் பொருளதிகாரம் 625-627-632-633-ஆம் சூத்திரங்களால் நான்கு வருணத்தார்களின் இயற்கைகளை விளக்கிக்காட்டியுள்ளார்.

இவற்றைக்கொண்டே தொல்காப்பியர் காலத்திற்கு முன்னமேயே தென்தேசத்திலும் ஜைநத்தமிழர்களில் நான்கு வர்ணாஸ்ரமங்கள் இருந்தன வென்பதை ஐயமறவுணரலாம்.

சென்னைச் சட்டகலாசாலைப் போராசிரியர் திருவாளர் கா. சுப்பிரமணியம் பிள்ளை எம். ஏ., எம். எல்., அவர்கள், "செந்தமிழ்ச் செல்வி" என்னும் பத்திரிகை சிலம்பு 7 பரல் 9 பக்கம் 525-ல், 'தமிழிற்சிறந்த பண்டை நூலாகிய தொல்காப்பியம் இயற்றப்பட்ட காலத்தே இப்போது வழங்குகின்ற இருக்காதி வேதங்கள் தொகுக்கப்படவில்லை யென்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுகின்றாராதலின், தமிழ்மக்களுக்குரிய ஆதிவேதங்கள் அவையல்ல வென்பது போதரும்' என்றும், "தொல்காப்பிய நூலுள் தமிழருடைய முதனூல் கடவுளாலே இயற்றுவிக்கப்பட்டது என்னும் கருத்துடைய, 'வினையினீங்கி விளங்கிய வறிவின், முனைவன் கண்டது முதனூலாகும்' என்ற சூத்திரம் காணப்படுதலால் தொல்காப்பியத்திற்கு முற்பட்ட முதனூல் தமிழர்க்கிருந்த தென்பது தெளியப்படும்" என்றும், "தொல்காப்பியம் பாயிரத்துட் குறித்த நான்மறை யென்பதும் அதுவே எனக்கருத இடமுண்டு" என்றும் கூறுகின்றார். இவர் கருத்து முழுதும் பொருத்த முடையதன்று.

நச்சினார்க்கினியர், தொல்காப்பியர் காலத்தே இருக்காதி வேதங்கள் தொகுக்கப்படவில்லை என்றுகூறியது சரியேயெனினும் சைவத் தமிழருடைய முதனூல் கடவுளாலே (சிவபெருமானால்) இயற்றுவிக்கப் பட்டதென்பதும், நான்மறை என்பது பாயிரத்துட் குறித்ததுவே என்பதும், பிள்ளை அவர்கள் கருத்தாம். இக்கருத்து பொருத்தமற்ற தென்பது மேலேபண்டிதர்களின் அபிப்பிராயத்தில் 33-34-35-ஆம் பக்கங்களில் கூறியிருப்பவைகளால் தெளிவாகும்.

ஆரியர்களென்ற பிராம்மணர்கள் தொல்காப்பியர் காலத்திற்குப்பின் தென்தேசத்தில் குடியேறிய பிறகு தங்களுக்குரிய இருக்காதிவேதங்களையும், பதினென் புராணங்கள் முதலியவைகளையும் தமிழ்பாஷையில் வெளிப்படுத்த முயன்றார்களென்று தெரிகின்றது. அவர்களில் முக்கியஸ்தர்கள் சமயாசாரியர்களென்று சொல்லப்படும் நால்வரில் மாணிக்கவாசகர், சுந்தரர், திருஞான சம்பந்தர் ஆகியவர்களே. இவர்கள் தமிழிற்பாடிய தேவார திருவாசகங்களுக்கு

* அடிப்படையான முதனூல் யாது மிருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் தமிழ் ஜைநர்களால் இயற்றிய சுயாகரம், திவாகரம், பிங்கல முதலிய நிகண்டுகளையும், தொல்காப்பிய முதலிய இலக்கணங்களையும், வளையாபதி சிலப்பதிகாரம் S ஜீவகசிந்தாமணி முதலிய காவியங்களையும், மற்றுமுள்ள நீதிநூல்களையும் கற்றறிந்து, வடமொழியிலுள்ள சிவனுக்குரிய பெயர்களையும், அவர் தொழில்களையும், அவர் குணங்களையும் விளக்கித் தமிழ்பாஷையில் தேவாரம், திருவாசக மென்னும் நூல்களை இயற்றி யிருக்கின்றார்கள்.

ஜைந சமயத்தினின்றும் பிரிந்த அப்பரும் இவர்களைப்போல தேவாரங்கள் இயற்றியுள்ளார். பிராம்மணரல்லாத சைவர்கள், இந்நால்வர்களையும் சமயாசாரியர்களென்றும், இவர்களியற்றிய தேவார திருவாசகங்களைத் தமிழ்நான்மறைகளென்றும் கொண்டாடுகிறார்கள்.

இதனால் சைவத் தமிழர்களின் காலத்தினது உண்மையைத் தெரிந்துகொள்ளலாம். சைவர்களுக்கு மாணிக்கவாசகர் முதலிய மூன்று பிராம்மணர்களும், ஜைநராகிய அப்பரும் தவிர, இவர்களுக்கு முற்பட்டகாலத்தில் பரம்பரையாக ஆசாரியர்களில்லையென்பது தெற்றென விளக்கமாகும். ஆரியர்கள் தென்தேசத்தில் நிலைநாட்டிய சைவ சமயம் கிரமமாகப் பெருகி நால்வர்களால் ஸ்திரம் பெற்றதனால் இவர்களைச் சைவர்கள் சமயாசாரியர்களென்று பலவகைகளால் பூஜித்துப் போற்றிப் புகழ்கின்றார்கள். இதனாலும் ஆதிகாலமுதல் தென் தேசத்தில் சைவசமயமும் அச்சமயத்திற்குரிய கடவுளும் ஆசாரியர்களும் இல்லை யென்பதை நிச்சயமாகச் சொல்லலாம்.

---

* யசோதர காவியம் அச்சிட்ட தில்லையம்பூர் வேங்கடராம ஐயங்காரவர்கள், தமது முகவுரையில் "ஜைநர்கள் போட்ட அடிப்படையை வைத்துக்கொண்டே பின்னாளில் சைவர் வைணவர் முதலியோர் தங்கள் சமயக்கோட்பாடுகளைச் சேர்க்கின்றார்கள்" என்றெழுதி யிருக்கின்றார். இதனாலும் மேற்கூறிய உண்மையை உணரலாம்.

S ஜீவகசிந்தாமணி இயற்றிய காலத்தைப்பற்றி சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் வீரசோழியம் பதிப்புரையில் சிந்தாமணி இயற்றி இப்போது ஆயிரத்தெண்ணூறு வருஷமிருக்கலாம் என்று எழுதியுள்ளார். வீரசோழியம் பதிப்பு விஷு-வருஷம் சித்திரைமீ (1881)

மற்றும் சைவத்தமிழர்கள் இலக்கிய இலக்கண முதலான பொது நூல்களையும் கி. பி. எழுநூறு (700)க்கு முன் இயற்றின தாகத் தெரியவில்லை. சமய புராணங்களும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், காஞ்சிபுராணம், பலவூர் ஸ்தலபுராணங்கள், மற்றுமுள்ள புராணங்கள் முதலான பல நூல்களும், ஜைநத்தமிழர்கள் செய்த அடிப்படையான நூல்களின் ஆதாரவைக் கொண்டு நால்வர் காலத்திற்குப் பிறகே பெரும்பான்மையும் சைவர்களால் செய்யப்பட்டனவாகும். இவ்வாறு சைவத்தமிழர்கள் செய்திருக்கும் நூல்களில் பதினாறில் பதினைந்தரை பங்கு நால்வர் காலத்திற்குப் பிற்பட்டனவேயாகும்.

மேற்கூறியபடி அடிப்படையான முதனூலில்லாமலிருந்த சைவர் முதலிய வர்களுக்கு, ஆரியர்களின் 0 நான்குவேதங்கள், பதினெண்புராணங்கள் முதலானவைகள் ஒருவகையில் முதனூல்களாயின. அவ்வாறாகவே யாகம் முதலானவைகளில் ஆடு, பசு முதலான ஜீவன்களை ஹிம்சை செய்வதனால் புண்ணிய முண்டென்று சொல்லும் அந்த வேத புராண ஸ்மிருதிகளை ஒப்புக்கொண்டு சைவர் முதலான தமிழர்கள், ஒரு நூலின்கண் கொலை பாவத்திற்கு முதன்மையென்றும், சொல்லாமை புண்ணியத்திற்கு முதன்மை யென்றும், யாகநிமித்தம் செய்யும் கொலை புண்ணிய மென்றும், அந்த யாகத்தில் மந்திரத்தால் ஏற்படும் புலால் விசிஷ்ட மென்றும் முன்னுக்குப்பின் முரணாகத் தங்கள் நூல்களிலும் கூறுகின்றார்கள். இதற்குக் கொலை மறுத்தலென்னும் நூல் ஒன்றே போதுமான சான்றாகும்.

கொலை செய்தல், புலாலுண்ணல் ஆகியவைகள் எவ்விதக் காரணங்களைக் கொண்டும் அனுஷ்டிக்கக் கூடாதென்பது ஜைநசமய வேதம். ஜைநர்கள் இயற்றிய திருக்குறள், நாலடியார், பழமொழி,

---

0 ஸ்மார்த்த, வைணவ பிராம்மணர்களுக்கு நான்கு வேதமென்பது இல்லை. முக்கியமான வேதம் மூன்றுதான். அதாவது ருக்வேதம், யஜுர் வேதம், சாமவேதம் ஆகிய மூன்றாகும். இதனை அமரகோசம் வாக்வர்க்கில்,

ஸ்ரியாம் ருக் ஸாமே யஜுஷி இதி வேதாஸ்த்ரயஸ்த்ரயீ ||

என்று கூறியுள்ளதனாலுணர்க.

ஆதலின் மேல்கண்ட மூன்று வேதங்களிலிருந்து சில பிராம்மணங்களும் சில சம்ஹிதாக்களும் எடுத்துச் சேர்த்தது அதர்வணமாகும்.

ஏலாதி, சிறுபஞ்சமூலம், அறநெறிச்சாரம் முதலிய நூல்களைத் தழுவி சைவத்தமிழர்கள் கொல்லாமை, புலாலுண்ணமை ஆகியவை களைப்பற்றி பலநூல்கள் செய்திருக்கிறார்கள். இதற்கு சிவஞான வள்ளலார் நூல் ஒன்றே போதுமான சான்றாகும். இன்னும் உயி ரின் இலக்கணம், உடம்பின் இலக்கணம் ஆகியவைகளைப்பற்றி ஜைநர்களால் இயற்றிய தொல்காப்பியம், நன்னூல், திவாகரம், பிங் கலம் ஆகிய நூல்கள் தவிர இவர்களுக்கு வேறு ஆதாரமுள்ள நூல்கள் இல்லையென்பது தெற்றென விளங்கும்.

இவ்வாறு சைவத்தமிழர்கள் ஜைநசமய நூல்களைத்தழுவி செய்திருப்பினும், இதற்கு மாறாகவுள்ள பொருத்தமற்ற பலவகை நூல்களைச் செய்திருக்கிறார்கள். இதற்குக்காரணம் ஆரியர்களு டைய தெய்வ வழிபாட்டையும், அவர்களின் வேதாகம புராணஸ்மி ருதி இதிகாசங்கள் முதலியவைகளையும் ஒப்புக்கொண்டும், அவர் களே குருவென்றுசொல்லி அவர்களின் கொள்கைகளில் சிலவற்றை ஏற்றுக்கொண்டும், அவர்களைக்கொண்டு சுபாசுபகாரியங்கள் முத லானவைகளைச் செய்வித்துக்கொண்டும் வந்ததும், வருவதுமாகும்.

இக்காரணங்களாலும்,மேல் எடுத்துக் காட்டிய பலசான்றுகளா லும் சைவஆரியர்கள் தொல்காப்பியர் காலத்திற்குப் பிறகு தென் தேசத்தில் குடியேறிச் சைவசமயத்தை நிலைநாட்டி விருத்தியடை யச் செய்தார்களென்பதும், வைணவ பிராம்மணர்களும் தொல்காப்பியர் காலத்திற்குப்பிறகு தென்தேசத்தில் குடியேறி இருக்கக்கூடுமென்று ஊகிக்கவும் இடமுண்டென்றும் நடுநிலைமை யுள்ளவர்களுக்கு நன்கு விளங்கும்.

ஜைநமதம் ஆதியில் இவ்வாறு பலவகைகளிலும் உயர்வுபெற் றிருந்தும் 24-வது தீர்த்தங்கரராகிய மகாவீரர் பரிநிர்வாணமடைந்த பின், சுமார் 1200-ஆண்டுகளுக்குப் பிறகு ஜைநனுகவிருந்த பல்ல வன், கூண்பாண்டியன், பெட்டவர்த்தனன், ஆகியவர்களுடைய காலமுதலாக ஆரியர்களுடைய சூழ்ச்சி அதிகரித்தது; அப்பர், திருஞான சம்பந்தர், ஆதி சங்கராசாரியர், மத்வாசாரியர், இராமா நுஜாசாரியர் ஆகிய இவர்கள் காலத்திலும், செஞ்சியில் இராஜ்ஜியம் நடத்திய துமால் கிஷ்டப்பநாய்க்கர் அவருடைய பிராம்மண மந்திரி ஆகிய இவர்கள் காலத்திலும் அநேக ஜைநர்கள் ஜைநசமயத்தினின் றும் பிரிந்து சைவம், வைணவம், முதலான சமயங்களுட் புகுந்து

பலவகுப்பினர்களாக மாறுதலடைந்தார்கள். அதன்பிறகு சைவம், வைணவம் முதலிய சமயங்கள் இந்தியாமுழுமையும் பிரபலமாய் வியாபித்தன. இவ்வாறு ஆரியர்களால் ஜைநமதம் செல்வாக்குக் குறைந்ததற்குக் காரண மென்னவெனில் அது பின்வரும் விஷயங் களால் விளங்கும்.

இந்நூல் 55-ஆம் பக்கம் முதல் 58-ஆம் பக்கம் வரையில் கூறப்பட்டிருக்கிறபடி ஆதிபகவான் புத்திரராகிய பரதேஸ்வர சக்கிரவர்த்தி, பிராமணசிருஷ்டி செய்தபின், 16-சுவப்னங்கள் கண்டார். அதாவது 1-வது எதிரின்றி எங்கும் சஞ்சரிக்கும் 23 சிம்மங்கள் தோன்றியதாகவும், 2-வது பலமிருகங்கள் பின்தொடர ஒரு சிம் மக்குட்டி தோன்றியதாகவும், 3-வது யானையால் சுமக்கப்பட்ட குரங்கு தோன்றியதாகவும், 4-வது உலர்ந்த தழையையும் சருகுகளையும் தின்னும் சில ஆடுகள் காணப்பட்டதாகவும், 5-வது யானையின் அம்பாரியைச் சுமக்க மாட்டாத ஒரு குதிரையைக் கண்டதாகவும், 6-வது, காகங்களால் எதிர்க்கப்பட்ட கூகைகள் தோன்றியதாகவும், 7-வது களிக்கின்ற பூதங்கள் தோன்றியதாகவும், 8-வது சுற்றிலும் நீர் இருக்க நடுவில் உலர்ந்த தடாகம் தோன்றியதாகவும், 9-வது மாசுற்ற மணிக்கூட்டம் தோன்றியதாகவும், 10-வது பூஜாதிரவியங்களை நாய் சாப்பிட்டதாகவும், 11-வது இளம் பருவமான விருஷபந்தோன்றிய தாகவும், 12-வது பரிவேடசந்திரன் காணப்பட்டதாகவும், 13-வது இணைந்துதிரிந்த இரண்டு ஏறுகள் தோன்றியதாகவும், 14-வது மேகஞ்சூழ்ந்த சூரியன் காணப்பட்டதாகவும், 15-வது உலர்ந்தமரம் தோன்றியதாகவும், 16-வது சருகிலைகூட்டந் தெரிந்ததாகவும்16 சுவப்னங்கண்டு, அந்தப் பிராமண சிருஷ்டியின் பயனையும், ஷை சுவப்னங்களின் பயனையும் தெரிந்துகொள்ள விரும்பி, ஒருசமயம், ஆதிபகவான் சமவசரணத்தில் சென்று பகவானை துதித்து, "பகவானே! உன்னால் அருளிச் செய்யப்பட்ட உபாஸகாத்யயன மென்கிற பரமாகமத்தில் கூறிய ஸ்ராவகாசாரங்களை யனுஷ்டிக்கும்பொருட்டுப் பிராம்மண சிருஷ்டி என்னால் செய்யப்பட்டது. இப்போது 16 சுவப்னங்கள் எனக்குத் தோன்றியிருக்கின்றன. இந்தப் பிராமண சிருஷ்டியின் பயனையும், என்னால் காணப்பட்ட 16 சுவப்னங்களின் பலன்களையும் விளக்கியருள வேண்டும், என்று விண்ணப்பஞ் செய்தான்.

பகவான் அவ்வாறே பிராம்மண சிருஷ்டியின் பயனையும், பதினாறு சுவப்ன பலன்களையும் துவாதச கணங்கட்கும் தெரியும்படி

கூறத்தொடங்கி, "சக்கிரவர்த்தியே! உன்னால் சிருஷ்டிக்கப்பட்ட பிராம்மணர் உபாஸகாத்யயனத்துட்சொன்ன ஆசாரங்களைக் கொண்டு முற்பட்ட காலங்களில் ஒழுகுவார்கள்; பின்னர்க் கலியுகத்தில் சன்மார்க்கங்களுக்கு விரோதிகளாகித் தங்களுக்குப் பிறர் செய்யும் மரியாதைகளாலும், தானதர்மங்களாலும் கர்வங்கொண்டு, தங்களை லோகத்திலுள்ளவர்களுக்கெல்லாம் மேலானவர்களாகப் பாவித்து, உபாஸகாத்யயன மென்னும் வேதத்தில் தங்களுக்கு இஷ்டமாகிய வாக்கியங்களைக்கொண்டும், அனிஷ்டமாகிய வாக்கியங்களை நீக்கியும், தாங்கள் வேண்டியபடியெல்லாம் அவ்வேதத்தைப் பூர்வாபர விருத்தமாக (முன்னுக்குப்பின், முரண்பட) ச்செய்து அஹிம்ஸா தர்மத்தைத் தூஷித்து ஹிம்ஸையே தர்மமென்று கோஷித்து அதனை எவர்க்கும் உபதேசித்து, ஜகத்திலுள்ள மனிதர்களைக்கெடுத்து துர்க்கதி அடையச் செய்வதோடு, தாங்களும் துர்க்கதி அடைவர். இவ்வண்ணம் இவர்கள் காலாந்தரத்தில் பாப கர்மோதயத்தால் பிரஷ்டராவார்கள். இக்காலத்து இவர்கள் தர்மப் பிரபாவனையைப் பண்ணும்பொருட்டு நீ இவர்களை சிருஷ்டித்தது தோஷமுமன்று.

"நீ கண்ட சுவப்னங்கள் கலியுகத்தின்கண் தர்மத்தினது க்ஷயத்தை அறிவிப்பனவாகும். அவற்றுள் முதலில் பரதக்ஷேத்திர மெங்கும் எதிரின்றித் திரிந்த இருபத்துமூன்று சிம்மங்களைக் கண்டதனால், நாம் முதலாக இருபத்துமூன்று தீர்த்தங்கரர் தோற்றமுண்டாகும். இவர் காலங்களில் பாஷண்டிகள் மிகவும் உத்பவியார்; உத்பவித்தவர்களும் அந்தந்தக் காலங்களில் வசிப்பார்கள் (ஒடுங்குவார்கள்);

இரண்டாவது:—தனியே திரிகின்றதொரு சிம்மக்குட்டியின் பின் மிருகங்கள் சென்றதைக் கண்டதனால், ஸ்ரீ மஹாவீரவர்த்தமான தீர்த்தங்கரர் காலத்தில் பாஷண்டிகள் எங்கும் பரவி மிகவும் தோன்றுவார்கள்.

மூன்றாவது:—யானையின் மிசை குரங்கு ஏறிக்கொண்டிருந்ததை சுவப்னத்தில் கண்டதால் பிராசீன (பழமையாயிருந்த) க்ஷத்திரியர்கள் வம்ஸம் நாசமடைந்து, நீச குலஸ்தர்கள் இந்த பூமியை பரிபாலிப்பார்கள்;

நான்காவது:—உலர்ந்த தழை சருகுகளைத் தின்னும் ஆடுகளைக் கண்டதால், லௌகிக ஜனங்கள் நல்ல ஆசாரங்களை விடுத்து துராசாரங்களைக் கொள்வர்.

ஐந்தாவது:—யானையின் அம்பாரியைச் சுமக்க மாட்டாத குதிரையைக்கண்டதால் சுல்ப பலத்தினராகிய முனிகள், மகாமுனிவர்களால் தரிக்கப்பட்ட மூலோத்தர குணங்களைத் தரிக்கமாட்டாமல் சில குணங்களைத் தரிப்பார்கள்.

ஆறுவது:—காகங்களால் சூழப்பட்ட கூகைகளைக் கண்டதால் ஜனங்கள் அக்ஞானிகளாகிய பாஷண்டிகளிடம் தர்மங் கேட்பர்.

ஏழாவது:—களித்துக் கூத்தாடாநின்ற பூதங்களைக் கண்டதால் மனிதர்கள் உத்கிருஷ்டமாகிய நாமங்களைவிட்டு நிக்கிருஷ்டமாகிய நாமங்களைத் தரிப்பர்.

எட்டாவது:—நடுவில் உலர்ந்த தடாகத்தைக் கண்டதால் தர்மம் மத்திம தேசங்களில்கெட்டுத் தேசாந்தரங்களில் உண்டாகும்.

ஒன்பதாவது: — மாசற்ற மணிக்கூட்டத்தைக் கண்டதால் தபோதனர்க்கு சப்தரித்திகள் உண்டாகா.

பத்தாவது:—பூஜா திரவியங்களை நாய்தின்னக் கண்டதால் சத்பாத்திரங்களன்றி மித்தியாதிருஷ்டிகள் பூஜாதிகளைப் பெறுவர்.

பதினொன்றுவது:—இளம்பருவமுள்ள எருதைக்கண்டதால், மனிதர் தர்மானுஷ்டானங்களைப் பாலியத்தில் மாத்திரம் செய்வர்.

பனிரண்டாவது: — பரிவேட சந்திரனைக்கண்டதால், அவதிமனப் பரியய ஞானங்கள் உண்டாகமாட்டா.

பதின்மூன்றுவது: — இணைந்த இரண்டு ரிஷபங்களைக்கண்டதால், பல மில்லாமையால் முனிவர் இருவராயல்லது தனியே சஞ்சரிக்க மாட்டார்.

பதினான்காவது:—மேகஞ்சூழ்ந்த சூரியனைக்கண்டதால் கேவல ஞானிகள் உண்டாக மாட்டார்கள்.

பதினைந்தாவது:—உலர்ந்தமரத்தைக் கண்டதால், ஸ்திரீகளும் புமான்களும் சத்தியமும், சௌசமுங்கெட்டுத் தத்தம் ஒழுக்கங்களைக் கைவிடுவர்.

பதினாறுவது:—சருகிலைக் கூட்டத்தைக் கண்டதால், அன்னபானங்களும், ஔஷதங்களும் தத்தம் திவ்யரசங்களை விட்டிருக்கும்.

என்று கூறி யருளினர்.

இக்காரணத்தாலேயே ஆதியில் தோன்றிய பிராமணர் க்ஷத்திரியர், முதலியவர்கள் ஜைந தர்மத்தினின்றும் மாறுபட்டுப் புறமதந் தழுவி மேற்கூறியபடி ஜைந மதத்திற்கு இடையூறு செய்ய ஆரம்பித்தனர். அவ்விவரங்கள் பின் வருவனவற்றால் உணரப்படும்.

பரதசக்கிரவர்த்தி ஆதியில் பிராமணர்களுக்கு ஓதல், ஓதுவித்தல்; வேட்டல், வேட்பித்திட்டல்; ஈதல், ஏற்றல், ஆகிய ஆரிய ஷட்கர்மங்களையும் பிரதிதினமும் தம் தம் கிருகங்களிலும் ஆலயங்களிலும் அருகத் பகவானுக்குச் செய்யும் ஔபாசனம் பூஜை முதலியன செய்யும் கிரமங்களையும் உபதேசித்தார். ஔபாஸனம் என்பது ஹோமம், யக்ஞம், யாகம், வேள்வி யெனப் பல நாமங்கள் பெறும். பரதேஸ்வரன் உபதேசம்செய்த ஹோம (யாக)த்தில் நெய், நெற்பொரி ஹோமத் திரவியங்கள், சமித்து முதலானவைகளைச் சேர்த்து ஆகுதி செய்வதாகும். இந்தக் கிரமமாகச் செய்துவந்த யாகத்தில் சேர்க்கும் பொருள்களை, இருபதாம் தீர்த்தங்கரர் காலத்தில் நாரதன் பர்வதன் என்னும் இரண்டு பிராம்மணர்களில் நுட்ப புத்தியுள்ள நாரதன்மீது பர்வதன் பொறாமை யுடையவனாகி யாகத்தில் ஆகுதி செய்யும் பொருளை வேறுவகையாகச்சொல்லி தர்க்கஞ் செய்து ஹிம்ஸாயாகத்தை ஸ்தாபித்தான். இவ்விவரங்கள் ஸ்ரீபுராணம் 20-வது தீர்த்தங்கரர் பகுதியில் விரிவாகக் கூறியுள்ளன. அவற்றை இங்குச் சங்கிரகமாக எடுத்துரைப்பாம்.

சுவஸ்திகாவதி என்னும் நகரத்து இராஜன் விஸ்வாவசு. இவன் புத்திரன் வசு. அந்நகரத்தில் வசிக்கும் பிராம்மணன் க்ஷீரகடம்பாசாரி; இவன் புத்திரன் பர்வதன். க்ஷீரகடம்பனிடம் அத்யயனார்த்தமாக வந்தவன் நாரதன் என்னும் பிராம்மணன். இராஜபுத்திரன் வசுவும், பர்வதனும், நாரதனும் ஆகிய மூவர்களும் க்ஷீரகடம்பனிடம் சாஸ்திராப்பியாசம் செய்து வந்தார்கள். விஸ்வாவசு இராஜன் வசுபுத்திரனுக்கு இராஜ்ய பதங்கொடுத்துத் தபோவனமடைந்தான். சிலநாள் கழித்து க்ஷீரகடம்பன் தன்னுடைய சிஷ்யனாகிய வசு இராஜனைக்கண்டு "பர்வதனையும் அவன் மாதாவினையும் பரிபாலிப்பாயாக நான் தபஸைப் பெறவேண்டுமென்ற அபிப்பிராயமுடையவனாக இருக்கின்றேன்" என்றான். அவனும் "பூஜ்யனே! எனக்கிது சொல்ல வேண்டுங்கொல்?" என்றனன். க்ஷீரகடம்பன் தபஸைப்பெற்று சுவர்க்கலோக மடைந்தான்.

பர்வதன் பித்ரு ஸ்தானத்திநின்றும் சமஸ்த சாஸ்திர வியாக்கியானஞ்செய்து செல்கின்றகாலத்து உபாஸகாத்யயன மென்னும் வேதத்தில் 'அஜைர் ஹோத்தவ்யம்' என்னும் வாக்கியத்தை நிரூபணையின்கண் பர்வதன் நாரதன் ஆகியவர்களுக்கு விவாதமுளதாயிற்று. நாரதப் பிராம்மணன் அஜம் என்கிற பதத்திற்கு முளைக்குந் தன்மையற்ற மூன்றுவருஷத்திய நெல்லைக்கொண்டு பொரி பொரித்து யக்ஞம் செய்ய வேண்டுமென்று சொன்னான். அக்ஞானியாகிய பர்வதப் பிராம்மணன் நாரதன்மீது பழமையாக விருந்த பொறாமையின் பொருட்டு அஜசப்தத்திற்கு ஆடு என்று பொருள்கூறி தத்விகாரத்தாலே அக்னி ஹோத்ரம் செய்வது யக்ஞம் என்றனன். அதுகேட்ட தார்மீகராகிய விப்ரோத்தம ரெல்லாம் கூடி * பர்வதன் மகா பாப ஹேதுவாகிய ஆட்டின் வதையினால் யக்ஞ விதிசொல்லி மகா பாபி கர்ம சண்டாளனாயினன் சகசம்பாஷணைக்கு யோக்கியனல்லவென்று கைதட்டி நிராகரித்து விட்டனர். பர்வதன் மானபங்கமடைந்து தன்னுடைய வசனத்தினை ஸ்தாபிக்க நினைத்து வனப்பிரதேசமடைந்தான்.

இதுநிற்க, பௌதனபுராதிபதி மதுபிங்கலன் என்னும் இராஜபுத்திரனுக்கு, சாரணயுகள நகராதிபதி சுயோதனன் என்னும் இராஜனுடைய புத்திரியாகிய சுலஸா தேவியை விவாகம் செய்விக்க நிச்சயஞ் செய்திருந்தார்கள். அவ்வாறிருக்க அயோத்தியா நகரத்தைப் பரிபாலனஞ் செய்துவந்த பரதசக்கிரவர்த்தி, ஸகரசக்கிரவர்த்தி, வம்ஸத்தில் உற்பவித்த ஸகரன் என்னும் இராஜன் சுலஸா தேவியின்மீது விருப்பமுடையவனாயிருந்தான். மதுபிங்கலன்

* பர்வதப் பிராம்மணன், ஆட்டினைக் கொலைசெய்து யக்ஞவிதி சொல்லி மகாபாபகர்ம சண்டாளனாயினன் என்று தார்மிக பிராம்மணர் கருதியதற்கிணங்க திருக்குறளாசிரியர்.

"கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து"

என்று கூறிய குறட்பாவில் பரிமேலழகர், "கொலைத்தொழில் இழிந்ததென அறிந்தோர் அது செய்வோரைப் புலைத்தொழிலர் அதாவது சண்டாளர் என்று எண்ணுவர்" என உரைகூறி, விசேஷவுரையில் "கொலைவினைய றென்றபடியினாலே யாகக்கொலை யல்லாமை யறிக" என்று வலிந்து பொருளுரைத் திருக்கின்றனர். யாகம் செய்வதினிமித்தம் கொலைசெய்வது தீவினையில்லை போலும்! இதன் உண்மையை அறிவின்மிக்க கல்விமான்கள் நடுநிலைமையோடு ஆராய்ந்துணரவேண்டும்.

சுலஸா தேவியை விவாகம் செய்துக்கொள்ள நிச்சயித்திருப்பதை யறிந்து வியாகூல மடைந்திருந்தான். இதனை ஸகரன் மந்திரியாகிய விஸ்வபூதி அறிந்து மாயாசாஸ்திரம் உண்டுபண்ணி சுலஸாதேவி சுயம்வரத்தில் மதுபிங்கலனுக்கு ஆயுள்க்ஷய மென்றும், விவாகம் நடந்தால் சுலஸாதேவி வைதவ்ய முடையவளாவாளென்றும், வாசிக்கச் செய்தான். இதுகேட்ட சுலஸாதேவி அங்குவந்திருந்த ஸகர இராஜனுக்கு மாலையிட்டாள். மதுபிங்கலன் அவமானமடைந்து ராஜ்யத்தினை விடுத்து ஜிநதீக்ஷையைப் பெற்றுத் தபோவனமடைந்தான்.

பிறகு விஸ்வபூதி மந்திரியினால் மாயாசாஸ்திரம் உண்டுபண்ணி ஸகர இராஜன் சுலஸாதேவியை விவாகம்செய்துகொண்டான் என்னும் விஷயம், மதுபிங்கல முனிவர் வீதியில் ஆகாரத்திற்குச் செல்கின்ற காலத்தில் ஜோஸ்யர்கள் பேசிக்கொண்டிருப்பதைக் கேள்விப்பட்டு ஸகரன் முதலானவர்கள்மீது வைராக்கிய முடையவனாய் 'ஸகர வம்ஸத்தை நாசம் செய்வேன்' யென்று நிதான முடையவனாய் தபஸ் செய்து மரணமடைந்து பவணலோகத்தில் மகாகாளன் என்னும் அசுரனாகப் பிறந்தான். பிறகு விபங்கஞானத்தால் பூர்வபவத்தினை யறிந்து ஸகரன் மீதுள்ள வைராக்கியத்தைப் பூர்த்தி செய்ய நினைத்து மாயா *பிராம்மண ரூபந்தரித்து பர்வதப் பிராம்மணன் தங்கியிருந்த வனத்தில் வந்து சேர்ந்தான்.

அசுரனாகிய மாயாப்பிராம்மணன் பர்வதனைக்கண்டு 'நீ இங்கு தனியே தங்கி இருப்பதற்குக் காரணம்' யாதென்றுகேட்க பர்வதன் தன்னுடைய விருத்தாந்தத்தைச்சொல்ல மாயாப் பிராம்மணன் அதுகேட்டு தன்னுடைய வைரியாகிய ஸகர வம்ஸத்தை தகனம் செய்யக்கருதி சொல்லுவான்: "பர்வதனே உன்னுடைய பிதாவும், விஷ்ணுவும், ஸ்தண்டிலனும், யானும் சகாத்யயனம் செய்தவர்கள். உன்பிதா எனது மித்திரர், உன்னுடைய எண்ணத்தை யான்பூர்த்தி செய்து வைப்பேன்" என்று சொல்லி ஹிம்ஸா யாகத்திற்குரிய (6000) ஆறாயிரம் கிரந்தங்களையும் அதற்குள்ள மந்திரங்களையும் கற்பித்து, அயோத்தியா நகரமெங்கும் விஷரோகங்களை உண்டுபண்ணும்படி தனது பரிவார தேவர்களுக்குச் சொல்லி தானும் பர்வதனுடன் அயோத்தியை அடைந்தான்.

மகா காளன் ஆக்ஞையால் பர்வதன் ஸகர ராஜனைக்கண்டு 'மகாராஜாவே புராதனமாகிய வேதவிதியின்படி பிராணி ஹிம்ஸா

யாகத்தினைச் செய்வாயாகில் இந்த நகரத்திலுள்ள ரோகங்களெல்லாம் நீங்கு" மென்று சொன்னான் ஸகரனும் "பிராணிஹிம்ஸையாகிய யக்ஞம் செய்யத்தக்க தன்று" என மறுத்துச் சொன்னான். பர்வதன் "வேதவிதியின்படி ஹிம்ஸாயாகம் செய்யின் நகரத்திலுள்ள ரோகங்களும் நிவர்த்தியாகும்; மேலும் ஹிம்ஸையாகும் ஜீவன்களும் பிரத்தியக்ஷம் சுவர்க்கலோகப் பிராப்தியாகு" மென்றனன். அதுகேட்ட சாதாரண ஜனங்களும் ஸகரராஜனும் தற்காலத்திலுள்ள ரோகபாதை நிவாரணார்த்தத்தின் பொருட்டு ஹிம்ஸாயாகத்திற்குச் சம்மதித்தார்கள். பிறகு இராஜனுடைய அரண்மனையிலிருந்து பர்வதனாகிய மகா பாபிஷ்டன் ஜீவஹிம்ஸையைக் கொண்டு அக்கினி ஹோத்ரம் செய்து சாந்தி மந்திரம் ஜபித்தான். ரோகங்கள் மகாகாளன் மாய்கையால் சுவல்பம் உபசாந்தமாயிற்று.

சன்மார்க்க விருத்தராகிய துஷ்டஜனங்களும் ஸகரனும் பர்வதனுக்குச் சம்மானஞ் செய்து உங்கட்கு வேண்டுவதியாதென, "நாங்கள் சுவர்க்கப்பிராப்தி ஏதுவாகிய மகாயாகம் செய்யவேண்டும் அதற்கு வேண்டிய முபகரணவஸ்துக்க ளெல்லாம் தந்து நீங்களும் அநுமதிப்பண்ண வேண்டு" மென்று சொல்ல, பர்வதன் அநுமதியின்படி ஸகராஜன் (6000) ஆறுயிரம் ஆடுகளும், உபகரண வஸ்துக்களும் வரவழைத்துக் கொடுத்தான். பர்வதன் அவைகளை வதைசெய்து மந்த்ரபூர்வகமாக யஜித்ததும் அசுரன் மாய்கையால் நகரத்திலுள்ள சர்வ ரோகங்களும் நிவாரணமாயிற்று.

மகாகாளாசுரன் மாய்கையால் யாகத்தில் ஹிம்ஸையான ஜீவன்களும் ஆகாயத்தில் விமானத்தின்மீது சுவர்க்கலோகம் போகின்றனவாகத் தோன்றிற்று. உடனே ஒருஜாதி அஸ்வத்தை யாகத்தில் ஹூதம் (பஸ்பம்) செய்ய அதுவும் ஆகாயத்தில் நின்று 'ஸகரராஜனே! சுலஸா தேவியுடன் சுவர்க்கலோகம் பிராபித்து தேவசுகத்தை அநுபவிப்பதற்கு விருப்பமுளதாயின் சுலஸாதேவியினையும் அக்கினிஹோத்ரம் செய்யு" மெனச்சொல்ல அரசன் சுலஸா தேவியை யாகத்தில் தகனம்செய்தான். மகாகாளன் மாய்கையினால் சுலஸாதேவிபோல மணிமயமாகிய விமானத்தின்மீது ஆகாயத்தில் தோன்றி "மகாராஜனே! உன்னுடைய பிரசாதத்தால் சுவர்க்கலோகப் பிராப்தியும் தேவவிபவமும் யாகபலனால் பெற்றேன். இனி நீயும் என்மேல் அநுக்கிரகபுத்தியும் இந்திரவிபவ அபிலாஷையும் உளதாயின் வேதவிஹித யாகவிதியினை துடங்குவாயாக"வென்று சொல்லி

தன்னுடைய திவ்விய ரூபலாவண்ணிய விலாசங்களை மிகவும் பிர சித்தி செய்து சென்றனள்.

ஸகரனும் ஹிம்ஸாநந்த பாவசனுகி, யாகவிதிகள் பலவுஞ் செய்து அசனிபதத்தால் அதாவது இடிவிழுந்து சப்தம நரகப் பிராப்தியானன். மகாகாளனும் விஸ்வபூதியாகிய மந்திரியினையும் அதோகதிச்செய்ய நினைத்து தனது மாய்கையாலே காணுவித அலங் கிருதமாகிய விமானத்தில் சுலஸாதேவியுடன் ஸகரராஜன் ஆகாயத் தில் தோன்றி "விஸ்வபூதியே! இனி பர்வதோப தேசத்தின்படி யாகங்களைச் செய்வாயாக" வென்று பிரமாணஞ் செய்துபோனன்.

நாரதாதி பிராம்மணர் முதலானவர்கள் பர்வதன்செய்த யாகாதி களைக் கேள்விப்பட்டு அயோத்தியா நகரத்தை அடைந்து விஸ்வபூதி மந்திரியைக்கண்டு "புத்திமானே! சத்தியஞ்சொல்லுவாயாக; உன் னாற் காணப்படாத தர்மசாஸ்திரங்களில்லை; அவை யொன்றிலும் பிராணிஹிம்ஸை தர்மமாகச் சொல்லியது மில்லை; மந்திரி புங்க வனே! ஸகரவம்ஸத்தை நிர்மூலம் செய்வானெரு வைரியின் மாயா விலஸிதமே. இதனைச் சத்தியப் பிரமாணமாகச் செய்கின்ற பர்வத னும் மாயாபரவசனுகி செய்கிறுன். இவனுடைய பிதாவாகிய க்ஷீர கடம்ப பிரசித்த உபாத்தியாயனுனும் பிராணி ஹிம்ஸை லக்ஷணத்த தாகிய யாகவிதானம் உபதேசித்ததுமில்லை. ஆதலால் ஸ்ரீமானே! நியாய பரிபாலகனே! உன்னுடைய இருதயத்தினை 'அஹிம்ஸா லக்ஷணோதர்ம:' என்னும் ஆருகத வசனத்தினை உறுதியாகச்செய்து துன்மார்க்கப் பிரவர்த்தியை நிவர்த்திசெய்து கருணாகரனுகுக" என்றனர்.

பர்வதனும் நாரதனைக்குறித்து இவன் அதிக கர்வியாதலால் "எனக்கே ரகஸ்யமாக என் பிதா யாகவிதியினை உபதேசித்தார். இதன்கண் பிரத்யக்ஷமாக அறியவேண்டுமாயின் சக சாஸ்திராத் யய னம் செய்தவனும் சத்தியவிரத பிரசித்தனுமாகிய வசுராஜனை பிரஸ் னம் செய்துக்கொள்ளலா" மென்றனன். நாரதர்முதலிய பிராம் மணர்களெல்லாம், 'நன்று சொல்லினை' அவ்வண்ணமே செய்வோ மென்று ஒப்புக்கொண்டு வசுராஜனுடைய நகரம் சென்ருர்கள்.

நாரதன் முதலிய பிராம்மணர்களும் பர்வதன் முதலிய பிராம் மணர்களும் வசுராஜனுடைய நகரமடைந்தார்கள். பர்வதன் தன் னுடைய மாதாவினைக்கண்டு தனது விஷயங்களைச்சொல்லி ரகஸ்ய

மாக வசுராஜனிடம் அனுப்பினன். அவனும் சென்று இராஜனைக் கண்டு "உம்முடைய ஸ்ருத குருவாகிய எனது சுவாமி சொல்லிய வற்றை மறதியின்றி பரிபாலிக்கவேண்டும். இப்பொழுது நாரத னோடு பர்வதனுக்கு விவாதமுளதாயிற்று. அதற்கு உம்மையே அத்தியக்ஷனாக (பிரதானபுருஷனாக) நியமித்து வந்திருக்கிறார்கள் பர் வதனுக்கு விவாத பங்கமுளதாயின் மானபங்கத்தால் எங்களுக்கு மரணம் உண்டாகும். ஆதலால் எங்களுடைய ஜீவிதமெல்லாம் உன் னுடைய பிரசாதமே கண்டாய்" என்று சொல்ல வசுஇராஜனும் இரக்ஷிப்பதாக வாக்களித்தான்.

பர்வத நாரதாதி பிராம்மணர்களெல்லாம் வசுராஜன் சபை சென்று இராஜனைக் கண்டு "தர்மராஜனே நீயும் துலா தண்டம் போன்று யதார்த்தத்தை சந்தேகமின்றி சொல்லும் சாமர்த்திய முள் ளவரென்று உம்மையே தர்மசாஸ்திரார்த்த நிரூபணையின்கண் அத் தியக்ஷனாக நினைத்து வந்தோம்." என்றனர். நாரதாதி பிராமணர்க ளெல்லாம் அரசனைநோக்கிப் பின் வருமாறு கூறினர். "யக்ஞாதி தர்மானுஷ்டானங்களெல்லாம் அஹிம்ஸா லக்ஷணத்ததே யென்பது குருபதேசம்; இது உண்மையுமாகும். இதற்கு மாறுதலாக பர்வ தாதி பிராமணர்கள் பிராணி ஹிம்ஸையால் யக்ஞம் செய்வதென்று உபாத்தியாயராலே சொல்லப்பட்ட தென்கின்றனர். நீவிர் எம் முடன் கலைபயின்றதனால் இவற்றுள் யாது உண்மையான சத்தர்ம மாகும் என்பதை ஆலோசித்துச் சொல்லுவாயாக" என்றனர்.

வசுராஜன் பர்வதனையும் அவன் மாதாவினையும் ரக்ஷிக்கும் பொருட்டும் மித்யாத்வ கர்மோதயத்தாலும் காலதோஷத்தாலும் சப் தம நரகபந்தமுடையவனாகி சொல்லுவான்: "இங்கு பர்வதனுடைய வசனமே பிரமாணமாகும் உபாத்தியாயனாலும் அவ்வண்ணமே உப தேசிக்கப்பட்டது. ஆதலின் அதன்கண் சந்தேகம் வேண்டியதில்லை" என்று சொன்னான். நாரதர் முதலிய தார்மீக ஜனங்களெல்லாம் காதில் கையைவைத்துக்கொண்டு ஹந்த ஹந்த (கஷ்டம் கஷ்டம்) வசுகுமார வக்ரமுகத்து நின்றும் மகாபாப ஹேதுவாகிய வசனம் கலிகால விலசிதம் (விளையாடல்) உற்பவித்ததென்று விலகிவந்து விட்டார்கள்.

அது பொழுதே வாபிகூப தடாகங்களும் சுஷ்க ஜலமாயிற்று. ரத்தவருஷமும் உண்டாயிற்று. சபாமத்திய பூதலம் வாய்விட்டலறு வது போன்று மகாத்வனியுடன் பூமிதேவியால் விழுங்கப்படுகிறான்

போன்று வசுராஜன் நிலத்து ளழுந்தி மரணமடைந்தான். நாரதாதி பிராம்மணர்கள் துஷ்காலானு ரூபமாக துர்மதியினாலே பிர்வர்த்தமாகிய துர்மார்க்கம் இனி இது நீங்குதலரிதென்று நினைத்து சம்ஸார வைராக்கிய மடைந்தார்கள்.

பிறகு பர்வதனும் மந்திரி விஸ்வபூதியும் உபயலோக ஸ்ரேயோவிக்னமாகிய யாகத்தினை நிர்விக்னமாக முடித்தபின் இருவரும் நரகப்பிராப்தியானார்கள். மகாகாளாசுரன் தனது மாயாபிராம்மணரூபத்தினை நிவர்த்திசெய்து சுயரூபத்தினைக் கொண்டு பிரஜைகளுக்குத் தன்னுடைய விருத்தாந்தங்களெல்லாம் எடுத்துரைத்து சத்தர்மோபதேசம் செய்து தர்மீக ஜனங்களை க்ஷமை கொண்டு தன்னுடைய மாயா பரவசமாகிய ஜனங்களை நோக்கி "பாபி ஜனங்களே! ஹிம்ஸையினைத் தர்மானுஷ்டானமாக பிரவர்த்தித்துப் பிழைசெய்தீர்கள். இனி யதை செய்யவும் அனுமதி பண்ணவும் தகாதென்று திக்கரித்து அஹிம்ஸாலக்ஷண தர்மத்தினை அனுஷ்டிப்பீராக" வென்று சிக்ஷித்துச் சென்றான். பின் மகா ரிஷிகளையடைந்து குரோத கஷாயத்தினைச் சொல்லி பிராயச்சித்த சுபபரிணாமத் தோடு பவணலோகம் சென்றான்.

பிறகு மற்றுமுள்ள தர்மீக ஜனங்களாலும் ஹிம்ஸாயாகத்தினை திக்கரித்தும் சிக்ஷித்தும் நிவர்த்த துர்மார்க்கராகி சத்தர்மத்தில் தலைநின்றனர். தீர்க்ககாலம் சம்ஸார சீலத்தராகிய நீச ஜனங்களெல்லோரும் மகாகாளனுடைய சத்திய கோஷோப தேசத்தினை நாரதாதி கிருத மாயைபோலென்று கருதி துர்மதியாகிய பர்வதோபதிஷ்ட ஹிம்ஸாயாகத்தினை அனுஷ்டித்து வருவாராயினர்.

அந்தக்காலமுதல் அஜயாகம், அஸ்வயாகம் முதலிய ஹிம்சாயாகங்கள் ஏற்பட்டது. அக்காலத்திலேயே பிராம்மணர்களில் பர்வதன்முதலிய அநேகப்பிராம்மணர்கள் பிரஷ்டராய்த்தோன்ற தார்மீகராகிய விப்ரோத்தமர், ஹிம்ஸாயாகம் செய்தவர்களை மகாபாபி கர்மசண்டாளரென்றும் சகசம்பாஷணைக்கு யோக்கியரல்லரென்றும் தூஷிக்கப்பட்டு பிராம்மண வர்ணாஸ்ரமத்தில் ஜைநப் பிராம்மணர்களென்றும் மித்யா பிராம்மணர்களென்றும் இருபிரிவினை யுடையவரானார்கள். அதன் பிறகு மித்தியா பிராம்மணர்களில் ஏற்பட்ட பிரிவுகள் அதிகம் சொல்லவேண்டியதில்லை.

அப்படிப் பிரிந்தவர்கள் ஆரியர்களென்று சொல்லப்பட்டு வடநாட்டில் தங்கள் கொள்கைகளைப் பரப்பினார்கள். தங்களுக்கென்று நூல்கள் இல்லாததால், ஜைநமதக் கொள்கைகளில் சிலவற்றைத் தழுவியும், தங்கள் நூதன கொள்கைகளில் பலவற்றைச் சேர்த்தும் ஒரு கிரமமின்றி முன்னுக்குப்பின் முரணாக வேதங்களையும், வேதாங்கமங்களையும், புராண இதிகாசங்களையும், இதர நூல்களையும் செய்தார்கள். அவற்றில் ஓரிடத்தில் ஜீவஹிம்சை கூடாதென்றும், மற்றோரிடத்தில் கடவுள் பொருட்டாக கூடுமென்றும், ஒரு நூலில் ஒரு தெய்வத்தை உயர்த்தியும், மற்றொரு நூலில் அதே தெய்வத்தைத் தாழ்த்தியும், ஒரு நூலில் ஒரு விதியைச் சொல்லியும், மற்றொரு நூலில் அதை விலக்கியும் இவ்வாறு இன்னும் பல தாறுமாறுகளைச்செய்து வந்தார்கள். பலமத விகற்பங்களையும் உண்டாக்கினார்கள். ஜனங்களையும் தங்கள் வழிக்குத் திருப்பினார்கள். உலகத்தில் ஜீவ ஹிம்சைமுதலிய கொடுந்தொழில்கள் தலைவிரித்தாட ஆரம்பித்தன. இவற்றைக்கண்ட ஜைநர் மனம்பொறாது அவர்கள்செய்த யாகங்களையும், நூல்களையும், கூடா வொழுக்கங்களையும் கண்டிக்க ஆரம்பித்தனர்.

அதுகண்ட ஆரியர்கள், ஜைநர்களை ஒடுக்கித் தங்களுடைய ஆதிக்கத்தை அதிகப்படுத்த எண்ணி, வட இந்தியாவிலுள்ள பல அரசர்களையும் தம் வசப்படுத்தியதோடு தென் இந்தியாவிலிருந்த அரசர்களையும் வசப்படுத்தி அவர்களின் உதவியைக்கொண்டு ஆங்காங்குள்ளவர்களைத் தம் கொள்கைகளில் திருப்பினார்கள். சைவம், வைஷ்ணவம் முதலிய மதங்களை விருத்தி செய்தார்கள். ஜைநர்கள் வடமொழியிலும், தென்மொழியிலும் செய்த அடிப்படையான நூல்களைப் புரட்டினார்கள்; அநேக சாஸ்திரங்களை அக்னிக்கு இரையாக்கினார்கள்; ஜைநர் ஆலயங்களை மறைத்தார்கள்; ஜைநர்களையும் உயிர்வதைசெய்து ஜைந சமூகத்தை ஒடுக்கினார்கள். மித்தியா பிராமணர்களாலும், அவர்கள்வழி வந்தவர்களாலும் செய்யப்பட்ட கொடுங்காரியங்களிற் சிலவற்றை இதனடியில் விளக்குவாம்.

1929ஆம் வருஷம் செப்டம்பர்மீ 8உ குடிஅரசு பத்திரிகையில் திருநெல்வேலி சைவ மெய்யன்பர் மகாநாடு திரு. பி. சிதம்பரம் பிள்ளை அவர்களின் வரவேற்புப் பேருரையில் 'ஹிந்து சமணப்போர்' என்பதைப்பற்றி வரைந்துள்ளார். அதன் சங்கிரகமாவது:—

சமணப் போரைப்பற்றியும் அதனால் சமணர்களுக் குண்டான விபத்தைப்பற்றியும் நாம் சிறிதளவு ஆராய்ந்தறிய வேண்டும். ஒரு நூற்றாண்டுக்கு முன் தென்னிந்தியாவில் வாழ்ந்திருந்த பிரஞ்சு கனவானான திரு ஆபேடுபோய்ஸ் கூறியிருப்பதாவது:—"சமணமதம் தென்னாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்ததனால், பிராம்மண மதத்தை இலகுவில் தென்னாட்டில் பரப்ப பிராம்மணர்களுக்கு முடியவில்லை. எனினும், பிராம்மணர்கள் சமணர்களோடு நீண்டகாலம் போர் புரிந்து பிராம்மண மதத்தைத் தென்னாட்டில் நிலைநாட்டி விட்டனர். பிராம்மணர் சொற்படி நடக்க சமணர்கள் கட்டாயப்படுத்தப் பட்டனர். அந்த ஹிந்து சமணப்போர் நிகழ்ந்து இப்பொழுது ஆயிரம் வருடங்களுக்கு மேலாகிவிட்டதெனினும், ஹிந்து சமணப்பகை இன்னும் ஒழிந்தபாடில்லை. எத்தகைய பகைமையும் தணிக்க காலச் சக்கரத்திற்குச் சக்தியுண்டெனினும் ஹிந்து சமணப் பகையை ஒடுக்க காலச் சக்கரத்துக்கு சக்தியில்லாமலே இருக்கிறது"

இதற்கெல்லாம் மூலகாரணம் பிராமணர்கள் யாகம்செய்து உயிர்க்கொலை புரிவதேயாகும். சாதாரணமாக இத்தகைய யாகங்களில் ஒரு ஆடு கொலை செய்யப்படுகிறது. யாகம் ஒரு புண்ணிய கருமம் என்று பிராமணர்கள் நினைக்கின்றார்கள். யாகம் செய்கிறவர்களுக்கும் செய்விக்கிறவர்களுக்கும் அஷ்டைஸ்வர்யங்களும் மோக்ஷமும் கிடைக்குமென்பது பிராமணர்கள் நம்பிக்கை. இதைக் குறித்து ஆபேடுபாய்ஸ் கூறுவதாவது:—

"யாகம் ஹிந்துமதக் கொள்கைகளுக்கு முற்றிலும் விரோதமென்றும் எக்காரணம்பற்றியும் உயிர்க்கொலை புரியக்கூடாதென்று இந்துமதம் போதிக்கின்றதென்றும் சமணர்கள் கூறுகிறார்கள். ஹிந்துமதத்தின் சுத்தமான ஆதிக்கக் கொள்கைகளைச் சமணர்கள் ஆதரித்தார்கள். சமணர்களுக்குள்ளும் பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு வகுப்பார் இருந்தனர்."

"சமணர்களுக்கும் பிராம்மணர்களுக்கும் நிகழ்ந்துவந்த வாய்ச்சண்டைமுற்றி, கடைசியில் இருவகுப்பாரும் கைகலக்கத் தொடங்கினர். கொலைகளும் பிரதிதினமும் ஏராளமாக நடைபெற்றன. முதலில் சமணர் வெற்றிபெற்றனர் எனினும் பிற்காலத்தில் சமண க்ஷத்திரியர்களும் வைசியர்களும் பிராம்மணர்களுடன் சேர்ந்துக்கொண்டு தம்மினத்தவரைக் காட்டிக்கொடுத்து துரோகம் செய்த

தனல் சமணர்கள் தோற்கடிக்கப்பட்டனர். பிராம்மணர்கள் சமண ஆலயங்களையும், மடங்களையும், தரைமட்டமாக்கினர். சமணர்களுடைய மதசுதந்தரங்களும் பிரஜாசுதந்தரங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. சமணர்களைக் கழுவேற்றினர்கள். அவர்கள் ஆலயங்களையும் கொள்ளையடித்தார்கள். அவர்களுடைய இலக்கியங்களையும் நாசஞ்செய்தார்கள். சமணர்களுடைய செல்வாக்கும் ஒழிக்கப்பட்டது. சமணர்கள் அநாமதேயப் பேர்வழிகளாயினர்.

“சைவர்களும் பிராம்மணர்களும் சேர்ந்துக்கொண்டு சமணர்களைத் தொலைக்கச் சூழ்ச்சிகள் செய்ததனல் தென்னட்டில் சமண மதம் ஒழிந்தது. இந்தப் பிராம்மண சமணப்போர் திப்புசுல்தான் மலையாளத்தில் நடத்திய போருக்கு இணங்க அநேகமாக ஒப்புக்கொள்ளலாம்”. இஸ்லாயத்தைத் தழுவுகிறாயா? அல்லது வாளுக்கிரையாகிறாயா? என்பதுதான் திப்புசுல்தான் போர்முழக்கம். அதுபோலவே சைவசமயத்தைத் தழுவுகிறாயா? அல்லது கழுவேறுகிறாயா? என்று திருஞான சம்பந்தரும் போர்முழக்கம் செய்தார். திருஞானசம்பந்தர் போர்முழக்கம் வீண்மிரட்டானலும் அவரது உத்தேசம் சாத்தியமாயிற்று என்று கூறியிருக்கின்றார்.

கவர்ன்மெண்டு மியூஸியம் ஆர்கியலாஜிகல் அஸிஸ்டெண்டு ஸ்ரீமான் தி. ந. இராமச்சந்திர சாஸ்திரியார் அவர்களால் தெரிவதியாதெனின்:—,

கி. பி. 550ல் இருந்து 600 வரையில் காஞ்சிபுரத்தை சிம்மவிஷ்ணு என்னும் ஜைந பல்லவ அரசன் அரசாட்சிசெய்தான். இவ்வரசன் திக்விஜயம் செய்ததாக பாண்டியநாட்டில் காணப்படும் ஸாஸனங்களால் தெரியவருகிறது. இவன் புத்திரன் * மஹேந்திரவர்மன்,

* மஹேந்திரவர்மனென்னும் ஜைந பல்லவ அரசனுடைய முன்னோர்களில் பல்லவன் என்னும் அரசன் 22-வது ஸ்ரீநேமிதீர்த்தங்கரர் காலத்தில் காஞ்சீபுரத்தை அரசாண்டு வந்தானென்று விளக்கமாகிறது. எங்ஙன மெனின்:—

ததஃ காஞ்சீவாஸம் ப்ராபதத்ராஜாஸீத் பல்லவஃ |
தேநாயஞ் பாமூர்த்தி ஸமவாஸம் ஸ ப்ரவேஶிதஃ ||

என்னும் நாககுமார காவியம் 4-வது சர்க்கம் 91-வது சுலோகத்தால் விளக்கமாகிறது. இதன் உரையை பின் பக்கம் பார்க்கவும்.

கி. பி. 600-ல் இருந்து 630 வரையில் அரசு செலுத்திவந்தான். மஹேந்திரவர்மனை அப்பர் சைவசமயத்தில் சேரும்படி செய்தார். இவன் புத்திரன் நரசிம்மவர்மன் வைணவசமயத்தை அனுஷ்டித்தான் என்பதே.

ஆயினும், அப்பர் என்பவர் மஹேந்திரவர்மன் என்னும் ஜைந, பல்லவ அரசனை சைவசமயத்தில் சேரும்படி செய்ததனால் இவர்கள் காலத்தில் (இராஜா எவ்வழி அவ்வழி குடியென்னும் பழமொழிக்கிணங்க) ஜைநர்கள் சைவசமயத்தில் சேர்ந்திருக்கக் கூடுமென்பதற் கையமில்லை.

"ஆரியா"பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீமான், தி. அ. சாமிநாதய்யர் அவர்கள் எழுதிய ஆசாரிய சரித்திரமாலை என்னும் புத்தகத்திலுள்ளவற்றின் சங்கிரகம் யாதெனின்:—

ஆதிசங்கராசாரியார் கி. பி. 677ல் ஜனித்து. 709 வரையில் ஜீவித்திருந்ததாகவும், அவர் அக்கினி, கபில, குபேர, சார்வாக, யம, இரவி, இலிங்கதாரி, வருண, வாயு, க்ஷமண,(சமண) முதலிய 72 மதங்களைக் கண்டித்து சைவம், வைணவம், காணபத்தியம், ஸ்காந்தம், ஸௌரம், சாக்தேயம் ஆகிய ஆறுமதங்களை ஸ்தாபித்தனர் என்பதே.

ஆனால் காஞ்சீபுரத்தில் ஜைநர்களுக்குரித்தாகிய ஸ்ரீதர்மதேவி அம்மன்கோயிலை சங்கரர் தமது சுவாதீனம் செய்துகொண்டு ஸ்ரீகாமாக்ஷி அம்மன் கோயிலென்று மறுபெயர் வைத்துக்கொண்டார். இக்கோயில் ஜைநர்களுடைய தென்பதற்குத் தக்க ஆதாரங்கள்

---

இ-ன் "பிற்பாடு (நாககுமாரர்) காஞ்சீபுரத்தை அடைந்தார் அவ்விடத்தில் பல்லவனென்னும் பெயரையுடைய இராஜாவானவன் பாதி வழியை அடைந்து தன்னுடைய பட்டணத்திற்கு நாககுமாரரை பிரவேசிக்கச் செய்தான்" என்பதாம்.

இச்சுலோகத்தால் 22-வது தீர்த்தங்கரர் நேமிஸ்வாமி (கிருஷ்ணன், பாண்டவர்) காலத்தில் பல்லவன்என்னும் பெயரையுடைய ஜைநஅரசன் காஞ்சீபுரத்தை அரசாண்டு வந்தானென்றும் இவன் பரம்பரைக்குத்தான் பல்லவன், பல்லவன்என்ற பட்டப்பெயர் வழங்கிவருகிறதென்றும் இவன் காலமுதல் கி. பி. 6-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து அரசுபுரிந்த மஹேந்திரவர்மனென்னும் பல்லவன் சைவசமயத்தில் சேரும். காலபரியந்தம் ஜைநபல்லவ அரசர்கள் காஞ்சீபுரத்தை இராஜ்ஜியம் செய்து வந்தார்களென்ற மேல்குறித்த ஜைநசமய உண்மை வரலாறுகளால் தெளிவாகிறது.

உண்டு. அது பின் வருவனவற்றில் கண்டுகொள்க. சங்கரர்காலத்திலும் அவர் (அத்வைத) மதத்தில் ஜைநர்கள் சேர்ந்திருக்கக் கூடுமென்று ஊகித்தற்கு அவர் ஸ்ரீதர்மதேவி அம்மன்கோயிலை கைப்பற்றிக்கொண்டதே போதுமான சான்றாகும்.

கி. பி. 7-வது நூற்றாண்டில் அதாவது அப்பர் காலத்தில் திருஞானசம்பந்தர் பிதாவாகிய சிவபாத விருதயர் முதலான பல பிராம்மணர்கள் ஆடு, பசுமுதலான ஹிம்ஸாயாகம் செய்து வந்ததை சமணர்கள் அறிந்து அவர்கள் * வேதத்தையும் வேள்வியையும் வழக்கப்படி கண்டித்து பிரசாரம் செய்தவர்களாதலால் யாகங்களால் பிராம்மணர்களுக்குண்டாகும் பொருள் வருமானமும் ஐஸ்வர்யமும் குறைந்து போக, அதனால் திருஞானசம்பந்தர் சமணர்கள்மீது மிக்கதுவேஷமுடையவராய் அச்சமயத்தைஅழிக்க எண்ணங்கொண்டு ஜைந அரசனாகிய கூன்பாண்டியனை தமது சுவாதீனம் செய்யவேண்டி, தமது சூழ்ச்சியினால்அரசனுக்கு வெப்பநோய் உண்டுபண்ணி,மந்த்ர வாதம், அனல் வாதம்,புனல் வாத முதலிய வாதங்கள் செய்துதோற்றார்களென்று சாஸ்திர வாதம் செய்யும் சமணர்கள்மீது பொய்க்கதையைக் கல்பித்துத் தாம் உண்டுபண்ண நோயைதாமேதீர்த்து கூன்பாண்டியனை தமதுசுவாதீனம் செய்து அவன் சகாயத்தைக்கொண்டு பலசமணர்களைக் கழுவிலேற்றியும்அநேகரை சைவசமயத்தில் சேரும்படி கட்டாயப்படுத்திச் சேர்த்திருக்கிறார்களென்பதும் தமிழ்நாடறிந்ததே.

இன்னும். கி. பி. 11 அல்லது 12-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் இராமானுஜாசாரியார் (துவாரசமுத்திரம் இராஜதானி ஹொய்சலா இராஜ்ஜியம்)தொண்டனூர் சென்றார். அத்தேசத்து ஜைந அரசனாகிய பெட்டவர்த்தனன் என்னும் பிட்டிதேவன் மகள் பிசாச அவஸ்தையாயிருக்க அரசனும் பலமந்திர வாதிகளைக்கொண்டு தீர்க்

---

* சமணர்கள் வேதவேள்வியை கண்டிப்பவர்களாதலால் திருக்குறளாசிரியரும் சமணரென்பதற்கு அவர்,

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று

என்றும்,

நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை

என்றும் யாகத்தைக் கண்டித்துக் கூறுகின்றதே போதுமான சான்றாகும். இக் குறட்பாக்களுக்குப் பரிமேலழகர் செய்திருக்கும் உரைகள் பொருத்தமற்றதாகும். ஆதலின் இக் குறட்பாக்களின் உண்மைக் கருத்துக்களை மேற்கோள்களுடன் இரண்டாம் பாகத்தில் எடுத்துக் காட்டுவோம்,

கும்படி செய்தும், திராமையால் தாக்கிதனுயிருக்க பிறகு தொண்டனூர் நம்பிமூலமாய் இராமாநுஜரை வரவழைத்து அவரைக்கொண்டு பிலாசை போக்கடிக்க அதன் காரணமாக பெட்டவர்த்தனன் வைணவமதத்தைச் சேர்ந்தான். அவனுக்கு இராமாநுஜர் விஷ்ணு வர்த்தனராயன் என்று மறுபெயரிட்டுச் சிஷ்யனுகச் செய்து கொண்டார்.

அவ்விதம் செய்தபிறகு எங்கள் சிஷ்யனை நீர் மயக்கி சிஷ்யனுக்கிக் கொள்ளும்போது எங்களை ஜெயித்தன்றோ செய்யவேண்டும் என்று பன்னீராயிரம் சமணர்கள் ஏககாலத்திலே வந்து தர்க்கிக்கத் தொடங்க இராமாநுஜரும் ஒரு திருமண்டபத்திலே திரையை வளைத்துக்கொண்டு உள்ளே (1000) சகஸ்ரபணு மண்டலமுடைய திருவனந்தாழ்வானுய் ஒவ்வொருவர்க்கும் அநேகப் பிரகாரமாக பிரதியுத்தர மருளிச்செய்து அவர்களை வாய் மூடுவித்து ஜயிக்க அவர்களிலே சிலர் இராமாநுஜர் திருவடிகளிலே ஆஸ்ரயிக்க அவர்களை அடிமைக்கொண்டு வைணவ சமயத்தில் சேரும்படி செய்தாரென்று குருபரம்பராப்ரபாவ மென்னும் நூலில் கூறுகின்றது.

ஆசாரிய சரித்திரமாலை யென்னும் நூலில் வைணவ மதத்தைத் தழுவாதாரைச் செக்கிலிட்டு ஆட்டும்படி பிட்டிதேவன் கட்டளையிட்டான். ஆயினும், அங்ஙனம் செய்ய வொண்ணுதென இராமாநுஜர் தடுத்து விட்டா ரெனவும் கூறுகின்றது.

இன்னும ஜைந (சமண)ர்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் பல கர்னபரம்பரையாக வழங்கி வருகின்றன. தற்காலம் தானுகாவாயிருப்பதும் முன்தேசிங்குராஜன் அரசாக்ஷி செய்ததுமாகிய செஞ்சியில் சுமார் 450. வருஷங்களுக்குமுன் துமால் கிஷ்டப்ப நாய்க்கர் அரசாட்சி செய்து வந்தகாலத்தில் தமதிடம் மந்திரியாக விருந்த பிராம்மணனிடத்தில் தாம் இரண்டாவது விவாகம் செய்துக்கொள்ள விருப்பமிருப்பதாகவும், பிராம்மண வம்ஸத்தின்பெண்ணை விவாகம் செய்விக்க ஏற்பாடு செய்யவேண்டு மென்றும் சொன்னுன், அம்மந்திரி யாதொரு தடையும் சொல்லாமல் தகுந்தவிடத்தில் ஒழுக்கமுள்ள பெண்ணைப் பார்த்து விவாகம் செய்து வைப்பதாக வஞ்சக புத்தியுடன் சொன்னுன். பிறகு சிலநாட்கள் கழித்து, சிலபிராம்மணர்களை விசாரித்ததில் அவர்கள் ஜைநர்களிடம் முந்தி ஒரு பெண் விவாகம் செய்வித்துக் கொண்டால் பிறகு தாங்கள் தருவதாகவும், இல்லாவிட்டால் தங்களை ஜைநர்கள் ஏளனம் செய்

வார்களென்று சொல்லுகிறார்க ளென மோசமாகச் சொன்னான். இராஜன் அதற்குச் சம்மதித்து அக்காலத்தில் மிக்க ஐஸ்வரிய வான்களாக செய்யூர், சூணாம்பேடு, மரக்காணம் ஆகிய இந்தக் கிராமங்களிலிருந்த ஜைநர்களிடம் பெண்கேட்கத் தூதனை அனுப்பினான்.

தூதன் அவ்வூர்களுக்குப்போய் பலவிதத்திலும் செழிப்புள்ளவராயும் பெருந்தன முடையவராயு மிருந்த ஜைநரிடம் சென்றார். அவர் அத்தூதனுக்குத் தக்கமரியாதை முதலானவைகள் செய்து அவரைக் கௌரவப் படுத்தினார். பிறகு தூதன் அவரிடம் "எங்கள் இராஜா ஜைநவம்ஸத்தில் பெண் ஒருத்தியை விவாகம் செய்துக்கொள்ள விருப்பங்கொண்டு அதற்குத்தக்க ஏற்பாடு செய்யத் தங்களிடம் என்னை அனுப்பினார்" என்று சொன்னான்.

தூதன் கூறியவற்றைக் கேட்டு அவர் என்னிடம் பெண் சந்ததியில்லை. வேறு ஜைநர்களிடம் உங்கள் அரசனுக்காக பெண்கேட்பது தகுதியன்று. ஏனெனின் ஜைநரல்லாதாருக்கு யான் பெண்கேட்டால் எல்லா ஜைநர்களும் என்னை நிந்திப்பார்களென்று சமாதானம் சொல்லி தூதனை அனுப்பி விட்டார். இவ்விவரங்களை தூதன் அரசனிடம் சொன்னான். அரசன் மந்திரியுடன் யோசித்து தூதனை நோக்கி நீமறுபடியும் அந்த ஜைநரிடம் சென்று உங்கள் மதத்தில் அவஸ்யம் ஒரு பெண்ணைவிவாகம் செய்விக்கவேண்டுமென்றும் அவ்வாறு செய்விக்கரவிட்டால் ஜைநர்களின் மண், பொன் முதலான பொருள்கள்யாவும் அரசன் கைப்பற்றிக்கொண்டு மிக்க துன்பப் படுத்துவதாயும்கூறும்படி கோபத்துடன் தூதனை மறுபடியும் அனுப்பினார். தூதன் மேல்படி தனவந்த ஜைநரிடம் சென்று அரசன் கோபக்குறியுடன் கூறியவற்றைச் சொன்னான்.

அதைக் கேட்டவுடனே அந்தத் தனவந்த ஜைநர் பயந்து மற்ற ஜைநர்களோடு கலந்தாலோசித்து சொல்வதாக தூதனுக்கு சொல்லி விட்டு அவர் அவ்வூரிலுள்ள மற்ற ஜைநர்களை ஏகாந்தமான விடத்தில் வரவழைத்து தூதன் இரண்டுமுறை வந்த விஷயங்கள்யாவும் சொன்னார். அதன்பிறகு எல்லோரும் அரசனும், மந்திரியும் இயற்கையில் துஷ்டர்கள் என்பதைக்கருதி தங்களுக்குள் ஒருமித்த யோசனை செய்துகொண்டு பிறகு தூதனிடம் பெண்தருவதாகவும், நிச்சயதார்த்தத்திற்காக ஒருதேதியைக் குறிப்பிட்டுக்கொடு

த்து அத்தேதியில் வரும்படி தூதனிடம் சொல்லி அனுப்பிவிட்டார்கள். தூதவனும் ஜைநர்கள் கூறியவற்றை அரசனுக்குச் சொன்னன். அரசனும் மந்திரியும் ஆனந்தக் கடலில்மூழ்கினர்கள். ஜைநர்கள் தூதுவனை அனுப்பியபின் தாழ்ந்தஜாதியினனுகிய அவ்வரசனுக்குப் பெண்கொடுக்க சம்மதமற்றவராய் தாங்கள் மாறுபாடான எண்ணங்கொண்டு சொல்லி அனுப்பியதை நிறைவேற்றக் குறிப்பிட்டத்தேதிக்கு இரண்டுநாள் முன்னமேயே வீட்டை அலங்கரித்து ஒரு கறுப்புப்பெண்நாயை சிங்காரித்து வாசலிலுள்ள கம்பத்தில் கட்டிவிட்டு கறுப்புநாயை வெள்ளைநாயாக அரசன் செய்வானயின் ஜைநர்கள் பெண்கொடுப்பார்களென்று ஒரு சீட்டெழுதி நாயின் கழுத்தில் கட்டிவிட்டு அவ்வூரிலுள்ள ஜைநர்கள் யாவரும் அந்தஇராஜ்யத்தைவிட்டு ஓடிவிட்டார்கள்.

இராஜனுடைய கட்டளைப்படி அந்தத்தேதியில் பலபெரியோர்கள் சகலவிருதுகளோடுஞ் சிறப்போடும் ஷை ஜைநகிராமத்திற்கு வந்தார்கள். அவ்வூரோ மனிதசஞ்சாரம் அற்றிருந்தது. வந்தவர்கள் ஆச்சரிய முற்றவர்களாய் பெண்கேட்ட ஜைநர் வீட்டை தூதுவன் மூலமாகப் போய்ப்பார்த்தார்கள். அவ்வீட்டின் அலங்காரத்தையும் அவமானத்தைத்தரும் கறுப்பு பெண்நாயின் பெருங்கோலத்தையும் அதன் கழுத்திலிருந்த சீட்டையும் கண்டு பெருமூச்சுவிட்டு கோபத்தோடு அரண்மனைபோய், அரசனிடம் நாயின்கழுத்தில் கட்டியிருந்த சீட்டையும்கொடுத்து அவ்வூரில் நடந்திருந்த விஷயங்களையும்சொன்னர்கள். அரசனும் அதிககோப முடையவனுய் மந்திரியுடன் யோசித்து தன் இராஜ்ஜியத்திலுள்ள ஜைநர்களை ஒழிக்க வேண்டுமென்று தீர்மானித்து ஒன்பது ஜைநர்கள் தலையைவெட்டி ஒரு ஜைநன் தலையின்மீது வைத்து தன்முன்னிலையில் கொண்டுவரும்படி செய்து சுமந்தவன் தலையையும் வெட்டும்படி கட்டளையிட்டான். இந்த கோரச்செய்கையை "சுமந்தான் தலைப்பத்தென்று" இன்னும் கூறுகின்ருர்கள்.

இவ்வாறு ஜைநர்களின் தலைகள் வெட்டுண்டு வரும்போது சில ஜைநர்கள் அந்த இராஜ்யத்தைவிட்டு ஓடிவிட்டார்கள். அநேகர் மதத்தைவிட மனம்வராமல் மரணத்திற்காளானர்கள். பலர் உயிரைப்பெரிதாக விரும்பி பூணூலைக்களைந்துவிட்டு விபூதியும், நாமத்தையும் தரித்துக்கொண்டு சைவம், வைணவமென்று சொல்லிக்கொண்டு தலைத்தப்பினர்கள்.

இவ்வாறு தலைவெட்டி வீரர்கள் ஒன்பது ஜைநர்கள் தலையை வெட்டிவிட்டு சுமப்பதற்கு ஒருஜைநனைதேடும்போது வீரசேனுசாரியார் என்னும் முனிவர் இவர்கள் பார்வையில் அகப்பட்டுக்கொண்டார். இவர்தலையின்மீது வெட்டுண்ட ஒன்பது தலைகளை சுமக்கவைத்து அரசனிடம் கொண்டுபோனுர்கள். அன்று அக்கொடுங்கோல் அரசனின் மனைவிக்கு ஒருபுத்திரன் உற்பத்தியானுன். அச்செய்தியைக்கேட்ட அரசன் ஆநந்த சாகரத்தில் மூழ்கி இருந்தமையால் அம்முனிவரை உயிருடன் விட்டுவிடும்படி உத்திரவு செய்ததோடு இனி இப்படிகொலைவேண்டா மென்றும் தடுத்துவிட்டான். மரண பயத்துக்கஞ்சாத மாமுனிவர் எஞ்சிய ஜைநர்களின் உயிர்கள் நிலைபெற்றதற்காக மகிழ்வுற்று வெளியேறிவிட்டார். வழியில் உயிருடன் பிழைத்துவந்த காங்கேய நயினுரென்பவரைக்கண்டு தாம் ஸ்ரவணபெளிகுளம்போவதாய் சொல்லிப்போய்விட்டார். காங்கேய நயினுரும் இந்த இராஜ்யத்திலிருக்க விருப்பமற்றவராய் திருச்சினுப்பள்ளியைச்சேர்ந்த உடையார்பாளையம் ஜமீன்தாரரை அடுத்தார். அவரும் சிலநிலங்களை நயினுருக்களித்து ஆதரித்தார்.

இவ்வாறு அவர் அங்குசிலகாலம் ஜீவித்திருந்து பிறகு ஸ்ரவணபெளிகுளம்சென்று வீரசேனுசாரியரைக்கண்டு செஞ்சியைச்சேர்ந்த கிராமத்தில் பிரஷ்டரான ஜைநர்களை பழையபடி ஜைநமதத்தில் நிலைநிறுத்தக்கருதி இருவரும் ஸ்ரவணபெளிகுளத்திலிருந்து புறப்பட்டு செஞ்சிமுதலான கிராமங்களில் வந்து பிரஷ்டரான ஜைநர்களுக்குப் பூணூல் தரிக்கச்செய்து மந்திரங்களை உபதேசித்து பழையபடி ஜைநமதஸ்தர்களாக பலகிராமங்களில் நிலைநிறுத்தினுர்கள். வீரசேனுசாரியார் ஸ்ரவண பெளிகுளத்திலிருந்து வந்து முயற்சித்த உண்மைஉப்புவேலூர் என்னும் கிராமத்தின் கோயிலில் ஷெடி முனிவர் கொண்டுவந்த ஸ்ரீபார்சுவதீர்த்தங்கரரை ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து விளங்குகிறது. காங்கேய நயினுரும் உடையார் பாளையத்திலிருந்து வீரசேனுசாரியாருடன் ஜைநர்களைச் சீர்திருத்தம் செய்தாரென்பதற்கு அத்தாக்ஷியாக தற்காலம் ஷெடியார் பரம்பரை தாழனூரில் உடையார் என்ற பட்டப்பெயர் பூண்டு வாழ்ந்து வருகின்றுர்கள். ஷெடியார் செய்த நன்றிக்காக அவர்களுக்கு மற்ற ஜைநர்கள் வீடுகளிலும் கோயில்களிலும் முதல் மரியாதை செய்துவருகின்றுர்கள்.

மேல்கண்ட வரலாற்றைப்பற்றி மதராஸ் கவர்மெண்ட் காட்சிசாலையில் சூப்ரண்டண்ட் ஹெட்கார் தர்ஸ்டன் C. I. E. அவர்களால்

எழுதப்பட்ட தென்னிந்தியாவின் ஜாதிகளும் மதங்களும் என்ற 2-ம் பகுதியில் ஜைநர்களைப்பற்றிக் கூறுமவற்றிலும் எழுதியிருக்கின்றார்.

இம்மாறுதல் காலத்தில் மறுபடி ஜைநசமயத்தில்சேராதவர்கள் பலர் திருவண்ணாமலை, திருக்கோயிலூர், போளூர், கலசவாக்கம், செல்லிகுப்பம், காராமணிகுப்பம், சோழவல்லி, குடைமங்கலம், திருநறுங்கொண்டை, செய்யூர், சூணம்பேடு முதலான பல வூர்களிலிருக்கிறார்கள். இவர்கள் வேறுமதஸ்தராக மாறுதலடைந்திருப்பினும் வாசுதேவநயினார், சந்திரசேகர நயினார், ஏகாம்பரநயினார், ஆறுமுகநயினார், சபாபதிநயினார், முருகப்பநயினார், முதலான பட்டப்பெயர்களைவைத்து வழங்கி வருகிறார்கள். இது அநேக சைவ, வைணவர்களுக்குத் தெரிந்தவிஷயம். இவர்கள் ஜைநசமயத்திலிருந்து பிரிந்தவர்களாயிருந்தும் ஜைநர்களுக் குரிமையுள்ள நயினார் என்கிற பட்டம் விலகாமல் இன்றும் வழங்கி வருகின்றன.

இன்னும் ஜைந சமயத்தினின்றும் பிரிந்து, மேல்கண்ட கிராமங்கள் முதலான பலவூர்களி லிருப்பவர்களில் அநேகர் பிள்ளை, முதலியார் என்கிற பட்டப்பெயர்வைத்து சைவ, வைணவ சமயத்தில் பலவகுப்பினர்களாக இராநின்றார்கள். இங்ஙனம் திருஞான சம்பந்தர் காலத்திலும் மதுரை, நாகர்கோயில், திருநெல்வேலி முதலிய பல நாடுகளிலிருந்த ஜைநர்கள் சைவசமயத்தில் சேர்ந்து மேல்குறித்த பட்டப்பெயர் வைத்திராநின்றார்கள். மற்றும் நயினார் என்கிற பட்டமுள்ள ஜைநர்களும், நயினார் என்கிற பட்டமுள்ள சைவர்களும், விரணமல்லூர் முதலான சிலகிராமங்களில் வசித்துவருகின்றார்கள்.

இவ்வாறு பிரிந்த சைவ, வைணவர்கள் முதலான தமிழர்களுக்குத் தனிமையாய் வேதங்களும் அவற்றைக் கற்றுணர்தற்கு அடிப்படையாகவுள்ள இலக்கிய, இலக்கண முதனூல்கள் இல்லையென்றும் இவர்கள் மித்தியா பிராம்மணர்களுடைய சாஸ்திரங்களைத் தழுவியும் ஜைநர்களுடைய சாஸ்திரங்களைத் தழுவியும் அநேக நூல்கள் செய்திருக்கிறார்களென்பதை மேல் 99-ம் பக்கத்தில் விளக்கியுள்ளவற்றால் நன்குணர்தல் கூடும்.

ஜைநர்களுடைய சாஸ்திரங்கள் அப்படிப்பட்டதன்று. ஆதி பகவான் (அருகக்கடவுள்) அருளிய அஹிம்ஸா வேதங்களை முதல் நூற்களாகக்கொண்டு வழி நூலும், சார்பு நூலும், இந்தி, மகாராஷ்டிரம், கன்னட முதலான பல தேசங்களுக்கு அந்தந்தப் பாஷைகளில் உலகம், மோக்ஷம், கடவுள், ஜீவன்களின் சுபாவ முதலானவைகளின்

ஸ்வரூபகுணாதிசயங்களைச் சொல்லும் பிராணி சாஸ்திர முதலிய கணித, ஜோதிஷ, வைத்திய, இலக்கிய, இலக்கண சாஸ்திரங்களும் பூர்வகாலத்திலேயே செய்யப்பட்டிருக்கின்றன. அவைபோல தமிழ் தேசத்திலுள்ள ஜைநத்தமிழர்களுக்கும் அடிப்படையாக இலக்கம் முதலிய கணிதசாஸ்திரங்களும், வைத்தியம், ஜோதிஷ சாஸ்திர முதலிய இலக்கிய இலக்கண சாஸ்திரங்களுமாகிய பலநூல்கள் பூர்வ காலத்திலேயே தமிழ் பாஷையிலும் செய்யப்பட்டிருக்கின்றன. சமஸ்த சாஸ்திரங்களும் சமஸ்கிருத பாஷையிலும் ஒவ்வொரு தேசங்களிலும் பூர்வத்தில் செய்துள்ளன வென்பது தெரியவருகிறது. அதுபோல தமிழ் பாஷைக்கும் அடிப்படையான நூல்கள் முதலிய பலசாஸ்திரங்கள் ஜைநத்தமிழர்களால் செய்யப்பட்டிருக்கின்றன. இக்காரணங்களால் தென்தேசத்தில் ஆரியர்களால் சைவ, வைணவ சமயங்கள் ஏற்படு முன்னமேயே ஜைந சமயம் நிலைபெற்றிருந்த தென்பது தெற்றென விளக்கமாகும்.

மற்றும் ஜைந சமயத்திலும், அவர்கள் சாஸ்திரங்களிலும், கொள்கைகளிலும் தவறாக எண்ணங் கொண்டவர்கள்செய்த தீமைகளைக் கிஞ்சித்து விவரிப்பாம்:—

கெட்ட எண்ணங்கள் மேற்கூறிய ஜைநமத விரோதிகளான மனிதருடைய மனதில் புகுந்த நாள்முதல், அவர்கள் நன்மையானதும், அழகானதும், உண்மையானதுமான ஜைநமதக் கொள்கைகளைத் தூஷிக்க ஆரம்பித்தார்கள். அவர்களிடம் அக்ஞானம் பெருகி ஓங்கிவளர ஆரம்பிக்கவே ஜைநமதஞானம் குறைந்து மறைய வேண்டியதாயிற்று. பொறாமை, வெறுப்பு, கர்வம், மடமை ஆகிய தீயகுணங்கள் உண்மையை வெறுக்கவும், அதற்கு விரோதமாகச் சண்டை செய்யவும் அந்த மனிதர்களைத் தூண்டிவிட்டன. சில ஜனங்கள் கெட்டகுணங்களால் வெறிகொண்டவர்களாய் உண்மையை அலக்ஷியஞ்செய்து ஜைநசமயத்தின் கொள்கைகளைத் தவறாகப்படித்தனர்; ஜைநசமயம் தவறாக அவர்களால் வாசிக்கப்பட்டது; அதில் தவறாகப்பொருள் கொள்ளப்பட்டது; அது தவறாகப்போதிக்கப்பட்டது; தூஷிக்கப்பட்டது;ஜைநசமய விரோதிகள் போதுமான ஞானமில்லாதவர்களாய் ஜைநசமயத்தின் பெரிய உண்மையை அறிய முடியாதவர்களாயினர்.

அவர்கள் மனதில் கலக்க முள்ளவர்களாகி ஜைநர்களிடத்தும், ஜைநசமயத்தினிடத்தும் கோபம் கொண்டனர்; உண்மையை எதிர்த்து அதை அழிக்க முயற்சிசெய்தனர்; ஜைந ஆகமங்களைப்படகுகளில் ஏற்றிச்சென்று அவற்றைச் சமுத்திரங்களிலும், நதிகளிலும் எறிந்தார்கள்; புத்தகாலயங்களில் எரியிட்டார்கள்; ஞான நூல்கள் அக்கினிச்சுடருக்கு இரையாவதைக்கண்டு சந்தோஷமடைந்தார்கள்; உண்மையைப் பின்பற்றிய ஜைநர்களைக் கழுமரங்களில் ஏற்றினார்கள்; பலவிதங்களால் வதைசெய்தார்கள்; உண்மை அழிந்து போகாமல் அது மறைந்து கிடக்கவேண்டியதாயிற்று; பிசாசுகள் கொலுவீற்றிருக்குமிடத்தில் தேவதூதர்களுக்கு இடம் ஏது? பொய்யான மதங்களும், சாஸ்திரங்களும் எங்கும் கூச்சலிட்டுப் பரவிவருங்காலத்தில் உண்மை நூல்கள் இருட்டறைகளிலும் பெட்டிகளிலும் ஒடுங்க வேண்டுவனவாயின.

இக்காரணங்களால் ஜைநர் (சமணர்)களின் வடமொழி தென்மொழி சாஸ்திரங்கள் கடலுக்கும், நதிக்கும், அக்கினிக்கும் இரையானபின் ஜைநர்களில் ஜாதிப்பிரஷ்டரானவர்கள் போக மிகுதியாயிருந்தவர்கள் வடமொழி நூல்கள் பலவற்றைக் கன்னடமுதலான பாஷைகளிலிருந்து மொழிபெயர்த்துவந்தார்கள்; மேல்கண்ட காரணத்தால் தமிழ் தேசத்தின்கண் ஜைநத்தமிழர்களின் தமிழ்வேத முதலான இலக்கிய நூற்கள் இல்லாமற்போயின. அவை முதலில் இருந்து பின் இல்லாமற்போயினவென்பதற்கு அவற்றைக்கொண்டு இயற்றப்பட்டதொல்காப்பியம், அகத்தியம் முதலிய இலக்கண நூல்களேசான்றாகும். எதனாலெனில்,இலக்கியமில்லாமல் இலக்கணமியற்றுவதில்லை. ஜைநர்களுக்கு இடையூறுகள் ஏற்பட்டதின் முன்னும் பின்னும் ஜைநர்களால் இயற்றிய தமிழ்நூற்களில் விரோதிகளாலும் பூச்சிகளாலும் அழிந்தவை போகச் சில நூல்களே இப்போது வழங்கிவருகின்றன.

இன்னும் ஜைந(சமண)ர்களுடைய கோவில்களின் கதி என்னவாயிற்றெனின், மகேந்திரவர்மன், கூன்பாண்டியன், பெட்டவர்த்தனன் முதலிய இராஜாக்களும் பிரஜைகளும் ஜைநமதத்தினின்றும் பிரஷ்டரானதின் பிறகும், திமால் கிஷ்டப்ப நாய்க்கன் காலத்திலும், நாகர்கோயில், திருநெல்வேலி, மதுரை, திருவாரூர், திருவண்ணாமலை, சிதம்பரம், காஞ்சிபுரம் முதலான பல ஊர்களிலிருந்த ஜைநர்களுடைய கோவில்களைச் சைவ வைணவர்கள் தங்கள் சுவா

தீனம் செய்துகொண்டு மூலஸ்தானங்களிலிருந்த ஜைநவிக்ரகங்களை விலக்கியும், கோவில்களில் மற்றவிடங்களிலுள்ள அடையாளங்களைப் போக்கியும் சைவ வைணவ சமயத்திற்குப் பொருத்தமாகத்திருத் தஞ்செய்து, அவற்றிற்குப் பதிகங்களைப் பாடிப் பாடல்பெற்ற ஸ்த லங்களென்றும், புராதீன ஸ்தலங்களென்றும் ஸ்தலபுராணங்களைக் கல்பித்துப் பெரிய மாறுபாடுகள் செய்து விட்டனர்.

எங்கும் பிரபலமாகப் பரவியிருந்த சமணமதத்தை அழித்துச் சைவசமயத்தைப் பெருகச்செய்வதற்கு எண்ணங்கொண்ட திரு ஞானசம்பந்தர் தமது தேவாரப் பதிகத்தில்,

"அந்த ணாளர் புரியு மருமறை
சிந்தை செய்யா வருகர் திறங்களை
சிந்த வாதுசெய் யத்திரு வுள்ளமே"

என்றும்,

"வேட்டு வேள்வி செய்யாவமண் கையரை
யோட்டி வாதுசெய் யத்திரு வுள்ளமே"

என்றும்,

"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே"

என்றும் 3-வது திருமுறை திருவாலவாய்ப்பதிகத்தில் கூறியிருக் கின்றார்.

இதற்கிணங்கத் திருவிளையாடற்புராணம் சமணரைக்கழுவிலேற்றிய படலத்தில்,

"நீயுரை செய்தவேத வேள்வியை நிந்தை செய்யும்
தீயரை யொறுத்தல் செய்யத் திருவுளஞ் செய்தி யென்றார்"

என்னும் சம்பந்தர் கேள்விக்கு,

"வெம்மத வேழங்கொண்ட விடையவர் விசும்பிற் சொல்வா
ரெம்மனோ ராவீர் நுங்கட் கிசைந்ததே யெமக்கும் வேண்டும்"

என்று சிவபிரான் விடையளித்ததாகக் கூறுகின்றது.

இன்னும் திருவிளையாடற் புராணத்தில்,

''காரமண் காடே யெங்குங் கழியவு மிடைந்த வின்ன
வேரொடுங் களைந்தாற் சைவ விளைபயி ரோங்கும்''

என்பது கூறப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு $ திருஞான சம்பந்தர் முதலியவர்கள் சமணர்களை அழிக்கத் திருவுள்ளமேயென்றும், அவர்களை வேரொடுங்களைந்தாற் சைவவிளைபயிர் ஓங்குமென்றும் கூறியிருத்தலால் மேல்கண்ட விஷயங்கள் யாவும் நடந்தனவென்பது ஐயமற விளங்கும்.

இன்னும், (கி. பி. 1170-ம் ஆண்டில்) ஹொய்ஸலா இராஜ்யம் துவாரசமுத்திரப் பட்டணத்தை அரசாண்டிருந்த பெட்டவர்த்தனனென்னும் ஜைநன் இராமாநுஜர் சூழ்ச்சியினால் வைணவ சமயத்தில் சேர்ந்தபிறகு (790) எழுநூற்றுத் தொண்ணூறு ஜைநகோயில்களை நாசஞ்செய்திருக்கிறான்.

இன்னும் தென்கன்னடம் ஜில்லா பாரகூர் கிராமத்தில் 5 ஜைந கோயில்களை பிராம்மணர்கள் கைப்பற்றிக்கொண்டு அவற்றிலிருந்த ஜைந விக்கிரகங்களை எடுத்துவிட்டுச் சிவலிங்கத்தை ஸ்தாபித்துக் கொண்டார்கள். மூலஸ்தானமுதலிய சிலவிடங்களிலிருந்த ஜைநபிம்பத்தைப் படியாகப்போட்டு மிதித்துக் கொண்டும்வருகிறார்கள். இன்னும் கன்னட தேசத்திலிருந்த ஜைநர் கோவில்கள் பிராம்மணர்களால் கைப்பற்றிக் கொண்டவை அநேகம். இவ்விவரம் தர்மஸ்தளம் ம-ா-ா-ஸ்ரீ புட்டுசாமி ஐயா அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

தற்காலம் காஞ்சிபுரத்தில் ¶ காமாக்ஷியம்மன் கோவிலென்று வழங்கிவருவது பூர்வத்தில் ஜைநர்களுடைய தர்மதேவி அம்மன்

---

$ திருஞானசம்பந்தர் சமணர், புத்தர் ஆகியவர்களை வாதில்வென்றழிக்கச் சிவனை திருவுள்ளமேயெனக் கேட்க அப்பெருமானும் ஆகாயத்தினின்றும் அதற்குப்பதில், 'எம்மனோராவீர் உமக்கிசைந்ததே யெமக்கும் விருப்பம்'' என்று கூறியவிவரம் தெரிகின்றது இவ்வாறு,கூறும் கடவுளின் குணம் எத்தன்மைத்து என்பதை, அறிஞரே! ஊன்றிப்பாருங்கள். கடவுளென்று பெயர்பெற்ற சிவபிரானுக்கும் மதத்துவேஷம் உண்டுபோலும்!

¶ காமாக்ஷியம்மன் கோவில் பூர்வத்தில் புத்தர் கோயிலென ஸ்ரீமான். தி. அ. கோபிநாதராவ் அவர்கள் அபிப்பிராயப் படுகின்றார்கள் என்பது அவர்கள் மதுரை செந்தமிழ்த்தொகுதி 16-பகுதி 5-ல். எழுதியுள்ளவற்றால் தெளிவாகிறது. அக்கருத்து ஒவ்வாமையாகும்.

கோவிலென்று ஜைநப் பெரியோர்கள் கர்னபரம்பரையாகக் கூறிவருகின்றார்கள். இஃதுண்மை யென்பதை விளக்கிக்காட்டுதற்கு மேற்படி அம்மன் கோவில் முன்மண்டபத்தில் இப்போதும் ஜைநசமயத்திற்குரிய மானஸ்தம்பம் சுமார் 25 அடி உயரமுள்ளதொன்றிருக்கின்றது. மேற்படி * மான ஸ்தம்பத்தின் உச்சியில் நான்குபக்கங்களிலும் அருகத்பகவான் பிம்பமுள்ள ஸ்தூபியும் இருந்திருக்கவேண்டும்; மேற்கூறிய விரோதிகள் அதைநீக்கி நான்குபக்கங்களிலும் ரிஷிகள்பிம்பமுள்ள ஸ்தூபி அமைத்திருக்கின்றனர். கோயிலில் உள்ள குளத்தின் கிழ்பக்கம் கரையின்கீழ் ஜைநபிம்பங்கள் இரண்டு தனித்தனி உயர்ந்த கட்டிடத்தில் சுமார் 30-வருஷத்திற்குமுன் இருந்தன. பிறகு அதில் ஒன்று இல்லாமல் மற்றொன்றுமாத்திரம் தலையற்றுப் போயிருந்தது. இதை நான் பார்த்திருக்கிறேன். பிறகு அதனையும் விலக்கி ஆண்பூதம் பெண்பூதம் ஆகிய இரண்டு பூதங்கள் புதியனவாக 5, 6 வருஷங்களுக்குமுன் இக்காலத்தவர் மேல்கண்ட ஜைநபிம்பம் இருந்த விடத்தில் செய்வித்திருக்கிறார்கள். 4, 5 வருஷங்களுக்குமுன் ஷை கோயில் குளத்தின் வடபக்கம் கரைக்குச்சமீபத்தில் புஷ்பச்செடி வைப்பதற்கு மண்ணைத்தோண்டியபோது மண்ணின்கீழ் ஜைந சிலா விக்கிரகம் பின்னப்பட்டுக் கவிழ்த்துப்போடப்பட்டிருந்தது. அதை எடுத்துக் கோவிலார் அருகாமையில் வைத்துவிட்டு அங்குச்செண்பகச் செடிவைத்திருக்கிறார்கள். அந்தப் பின்னப்பட்ட பிம்பமும், குளத்தின்கீழ் இருந்தவைகளில் தலையற்ற பிண்டிக்கல் பிம்பமும் ஆகிய இரண்டு பிம்பங்களும்மேல்படி புஷ்பச்செடியின் கிராதிக்கட்டிடத்தின் அருகாமையில் இப்போதும் இருக்கின்றன. இன்னும் மூலஸ்தானத்தில் இரண்டு அம்மன் விக்கிரகங்கள் இருக்கின்றன வென்றும், அவற்றில் ஒன்று தர்மதேவி அம்மனென்

* மானஸ்தம்பத்தின் உச்சியில் நான்கு பக்கங்களிலும் அருகத்பகவான் பிம்பமுள்ள ஸ்தூபியை இக்காலத்திலும் காஞ்சீபுரத்திற் கருகாமையிலுள்ள திருப்பறம்பூர் ஜிநாலயத்திலும், மற்றும் சில கிராமங்களிலும் பிரத்தியக்ஷமாகப் பார்க்கலாம்.

இவ்வாறிருக்கும் ஸ்தம்பத்தைப்பற்றி அங்குள்ளார் ஒருகல்பனைக் கதை கட்டிவிட்டார்கள். அதாவது ரிஷிகளை அசுரர் துன்பம் செய்ய, அத்துன்பத்தை நிவர்த்தி செய்யும்படி காமாக்ஷியம்மனை அவர்கள் வேண்டிக்கொள்ள, அம்மன் அசுரர்களை ஜெயித்து ஜெயஸ்தம்பம் நாட்டி அவற்றின்மிசை நான்கு பக்கமும் நான்கு ரிஷிகளை ஸ்தாபனம் செய்ததாகக் கூறுவது. இது, அக்கோயில் ஸ்தலபுராணத்திலுள்ளதென்று சிலர் கூறுகின்றனர்.

றும் சுமார் 35-வருஷங்களுக்கு முன்னமேயே நான் கேள்விப்பட்டு அதை நேரில்பார்க்கமுயன்றேன். அர்ச்சகப்பிராம்மணர்கள் அதற்கு இடந்தரவில்லை. ஆயினும் அர்ச்சகப்பிராம்மணர்கள் இரண்டு அம்மன் இருக்கின்றனவென்றும், ஒன்று காமாக்ஷி அம்மன் என்றும், மற்றொன்று தபோகாமாக்ஷி அம்மனென்றும் கூறுகின்றார்கள். இத் தத்தர்மதேவி அம்மன்கோவிலை ஆதிசங்கராச்சாரியார் கைப்பற்றிக் கொண்டன ரென்பது மேலே விவரித்துள்ளேன்.

இன்னும் காஞ்சீபுரத்தில் கச்சீஸ்வரர் கோவிலென்று வழங்கும் ஆலயம் பூர்வத்தில் *புத்தர் கோவிலெனத் தெரிகிறது. இக் கோவில் முன் கோபுரத்தின் அஸ்திவாரக்கல் கட்டிடத்தில் சில புத்த விக்கிரகங்கள் இப்போது மிருக்கின்றன. இன்னும் சில முன்பு இருந்த உருவம் தெரியாமலிருக்குமாறு அழிக்கப்பட்டிருக்கின்றன. ஷை கோவில் உள் மண்டபத்திலும் சில கல்தூண்களில் புத்தவிக்கிரகங்கள் இப்போது மிருக்கின்றன. இது புத்தர் கோவிலென்பதற்கு மற்றோர் ஆதாரமிருக்கிறது. அதாவது: இக்கோவில் மேற்புறம் வீதிக்கடைசியிலிருந்து வரும் ஏரிக்கு, 'புத்தேரி' என்றும், வீதிக்கு 'புத்தேரித் தெரு' வென்றும் பெயர்கள் ஏற்பட்டு இப்போதும் வழங்கி வருகின்றன.

இன்னும் காஞ்சீபுரத்தில் வரதராஜப் பெருமாள் கோவில், ஏகாம்பரேஸ்வரர்கோவில் எனப்பெரியகோயில்கள் இரண்டு உள்ளன. இவற்றில் வரதராஜப்பெருமாள் கோவில் என்பது ஆதியில் ஜைநர்களுடைய 24-வது தீர்த்தங்கரராகிய வர்த்தமானர் கோவிலென்றும், அதனை வைணவர் வரதர்கோவிலென நியமித்துக் கொண்டார்களெனவும், மலையின் மிசை மூலஸ்தானத்திலிருக்கும் பெருமாள் சிலாவிக்கிரகத்திற்குப் பின்புறம் ஜைந விக்கிரக மிருப்பதாகவும், பிரம்மோற்சவத்தில் புறப்பாடாகிவரும் தாம்பிர விக்கிரகமும் ஜைந விக்கிரகமென்றும், அதன் உருவம் தெரியவொட்டாமல் 3-4-கவசங்கள் போடப்பட்டிருக்கின்றன வென்றும் ஜைநப்பெரியோர்கள் கூறுகின்றார்கள். இவ்வுண்மைகள் ஷை கோவில் அர்ச்சகப்பிராம்மணர்களுக்குத்தான் தெரியவரும்.

---

* புத்தர்கோவில் மாறதலைச் சொல்ல வேண்டியது அவஸ்யமில்லையெனினும் இதுவும் ஜைந கோவில்களைப் புரட்டியவர்களுடைய செய்கையாதலால் இங்குக்கூறப்பட்டது.

இன்னும் ஏகாம்பரேசஸ்வரர் கோவில் ஆதியில் புத்தர் கோவிலெனவும் கர்ணபரம்பரையாகப் பெரியோர்கள் கூறுகின்றார்கள். இக்கோயில் முன்கோபுரத்தின் கிழண்டைப் பக்கம் மதில் கல் சுவரின் கண் ஏழு புத்த விக்கிரகங்களுமிருக்கின்றன.

மதுரை செந்தமிழ் பத்திரிகை தொகுதி 16-பகுதி 5-ல் ஸ்ரீமான். து. அ. கோபிநாதராவ் எம். ஏ. அவர்கள் எழுதியுள்ள வியாசத்தில்,"யுவங்கவங்" என்னும் § சீனதேசத்துப் பௌத்தயாத்திரிகர் காஞ்சிபுரத்தைத்தரிசித்த அந்நாள் (கி. பி. 610ல்) அந்நகரில் (100) நூறு பௌத்த சைத்யங்கள் இருந்தனவென்றும், அவைகளில் (10000)பதினாயிரம் ஸ்தவிர சங்கத்தவர் இருந்தார்களென்றும், பின்னும் அவ்விடத்தில் ஜைநர் கோயில்கள்(80)எண்பது இருந்தனவென்றும், அவைகளிலநேகம் திகம்பரமதத்தார்களுக்குரியன வென்றும், அறிவிக்கிறார். இப்படியிருக்க முதலில் ஆசாரியர் குமாரில பட்டரும், பின்பு சைவ நாயன்மார்களும், சங்கரபகவத் பாதாசாரியரும் புத்த மதத்தின் வலியை முற்றிலும் தொலைத்தனர்; நாளடைவிலேயே இம்மதத்தார் இந்துக்களில் ஒருஜாதி வைஷ்ணவர்களாய் மாறிவிட்டார்கள். † ஜைநர்களும் இங்ஙனமே இந்துக்களாவதை இன்றைக்கும் காணலாம். இராமஸ்வாமி நயினார் முதலியபெயர்கள் தரித்திருக்கும் ஜைநர்களைத் தஞ்சாவூர்க் கருந்திட்டைக் குடியிலும், மன்னார்கோவில் முதலிய விடங்களிலும் காணலாம்" என்றும் கூறுகின்றார்.

மேலும், பௌத்தர்களும், ஜைநர்களும் இங்ஙனம் இந்துக்களானவுடனே சைவ வைணவர்கள் அவர்களுடைய கோவில்களையும்,

---

§ சீனதேசத்து பௌத்தயாத்திரிகர் காஞ்சிபுரத்தைத் தரிசித்த அந்நாளில் (கி. பி. 610-ல் 100 பௌத்த (புத்த) ஆலயங்களையும், 80-ஜைந ஆலயங்களையும குறித்துக் கூறியவர் சைவ,வைணவர் ஆலயங்களைக்குறித்துச்சொல்லாமையால் இவ்விரண்டு சமயத்தவர்களும் ஆலயங்களும் அக்காலத்தில் இல்லையென்ற தனியக்கூடும்; அல்லது, அச்சமயங்களும் ஆலயங்களும் இருந்திருப்பினும் அவைகள் சுலபமாகவும், பிரபலமின்றியும் இருந்திருத்தல் வேண்டுமென்பது தெளிவாகும்.

† ஜைநர்களும் இங்ஙனமே இந்துக்களாவதை இன்றைக்கும் காணலாம் என்பதை ஜைநர்கள் இராமஸ்வாமிநயினார் முதலிய பெயர்கள் தரித்திருப்பதைக்கொண்டு, து-அ. கோபிநாதராவ் அவர்கள் கூறுகின்றார்கள். இஃது தப்பான அபிப்பிராயமாகும். இராமசாமி நயினார் என்னும் பெயர் தரித்திருப்பதற்குக் காரணம், இப்புத்தகம் 1?-ஆம் பக்கத்தில் விளக்கமாகும்.

ஜைநர்களுடைய கோவில்களையும் தம்முடையனவாக்கிக்கொண்டு அவற்றிலிருந்த பௌத்த ஜைந விக்கிரகங்களைப் பறித்தெடுத்து அக்கோவில்களின் பிராகாரங்களில்வைத்துவிட்டுத் தம்மதத்தின்தெய்வங்களாகிய விஷ்ணு, சிவன், தேவி முதலியவர்களின் விக்கிரகங்களை ஸ்தாபித்துக்கொண்டார்கள் என்றும், ஆசாரியர் இராமாநுஜர் ஐந்து ஜைநகோவில்களைக் கைப்பற்றிக்கொண்டு அவற்றில் கீர்த்தி நாராயணன், சத்தியநாராயணன் முதலிய பஞ்சநாராயணரை ஸ்தாபித்தாரென்று ஸ்ரீ வைணவ குருபரம்பரைகளும், சிலாசாஸனங்களுங்கூறுகின்றன வென்றும் வரைந்துள்ளார்.

இன்னும் ஸ்ரீமான்-எம். எஸ். இராமசாமி ஐயங்கார், எம். எ. அவர்கள், 1920ஆம் வருஷம் ஜூலை மாதத்திய, "ஜைநகெஜட்" பத்திரிகையில் எழுதியுள்ள வியாசத்தில், "ஜைநர்களுடைய பண்டைக் காலத்திய பின்னமான விக்கிரகங்களும், பாழடைந்த குகைகளும், கிலமான கோயில்களும் தென்னிந்தியா முழுவதிலும் ஆங்காங்கே சிதைந்து கிடப்பதைப் பார்க்கும்போது அச்சாதி எவ்வளவு தூரம் பரவி யிருந்ததென்பதுவும், அது பிராம்மணர்களுடைய மத வைராக்கியத்தினல் அழிக்கப் பட்டதென்பதும் நம்முடைய ஞாபகத்திற்கு வருகின்றன" வென்றும் கூறியிருக்கின்றார்.

இவர்கள் சொல்லியவற்றிற்கிணங்க இன்னும் இந்தியா முழுவதிலும் அநேக இடங்களில் சிதைக்கப்பட்ட எண்ணிறந்த ஜைநவிக்கிரகங்களும், கோயில்களும் பூமிக்கு மேலும், கீழும் காணப்படுகின்றன. உலகத்தில் பிறரால் செய்யக்கூடியனவல்ல என்று கண்டவர் அதிசயிக்கும்படி மலைகளையே உருவாகவகுத்து ஜைநர்களால் பண்டைக்காலத்தில் செய்யப்பட்ட பிரம்மாண்டமான ஜைநவிக்கிரகங்களுமிருக்கின்றன. இதற்குச்சான்றாக சமீபகாலத்தில் பம்பாய் மாகாணம் இந்தூருக்கு 100 மைல் தூரத்திற்கப்பால் சூளகிரிகிராமத்தில் உள்ள மலையில் ஓர் விக்கிரகம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி 1930ஆம் வருஷம் ஏப்ரல்மாதத்திய, "ஜைநகெஜட்" பத்திரிகையில் கூறியுள்ளதாவது:—

"84 அடி உயரமுள்ள ஆதிநாதபகவானின் கல்சிலை"

சூளகிரிஜீ ஸ்ரீ திகம்பர சித்தக்ஷேத்திரத்தின் காரியதரிசி நாகர்சேட் நாதுவால் ஜெயின் என்பவர் பொருள் உதவிக்காக எழுதியுள்ள ஒரு பிரார்த்தனையில் எழுதியுள்ளதாவது:—

“பட்வானி சமஸ்தானத்தில் சூளகிரி கிராமத்தில் ஒரு குன்றின் மேல் செதுக்கப்பட்ட (84) எண்பத்து நான்கு அடி உயரமுள்ள அழகாக வெகுகாலமாயுள்ள ஆதிபகவன் கல் சிலை ஒன்று இருக்கிறது. இந்தியாமுழுவதிலும் இவ்வளவு உயரமும் கம்பீரமும் உள்ள சிலை எங்கும் இதுவரையில் கண்டுபிடிக்கப் படவில்லை. வெயிலிலும் மழையிலும் வெகுகாலமாக அடிப்பட்டு இச்சிலையின் சிலபாகங்கள் தேய்ந்து போயிருக்கின்றன. இன்னும் கெட்டுப் போகாமலிருக்கும்பொருட்டு மால்வாதேசத்து மாகாணசபை பட்வானியில்நடந்த வருஷாந்தர கூட்டத்தில் இச்சிலையின் சிகரத்தை மூட மேல் கொட்டகை போடுவதற்கு ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள். ரூபா 7840 அந்த இடத்தில் எல்லோரும் கொடுத்தார்கள். பிறகு இதற்காகச் சுற்றுப்பிரயாணம் சென்று முனீம் குலாப் சன்ட்ஜீ அவர்கள் ரூபாய் 15000 வசூலித்துக்கொடுத்தார்கள். இத்தொகைகளைக் கொண்டு ஒரு குடைபோன்ற கொட்டகை ஒன்று போடப்பட்டது. இப்போது சிலையைச் சீர் திருத்தம்செய்யும் வேலை எடுத்து கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்குப் பணம் அதிகம் தேவையானதால் ஜைநர்களெல்லோரும் பொருளுதவி செய்யும்படி பிரார்த்திக்கப்படுகிறார்கள்” என்பதே.

இன்னும் ஷை (84) எண்பத்துநான்கு அடிஉயரமுள்ள சிலாவிக்கிரகத்திற்கு மஹாமஸ்தகாபிஷேகம் செய்தகாலத்தில் தென்தேசத்திலிருக்கும் ஜைநர்களுக்கு இந்திபாஷையில் பத்திரிகைகிடைத்திருக்கின்றது. அப்பத்திரிகை விளம்பரம் செய்தவர்களாகிய இந்தூர் நிவாசி சேட்பரசுராம்ஜீ, தூளிசந் ஜீ பௌத்திரர் கன்னிராம்ஜீ, அவர் புத்திரர் பதேசந், அவர் புத்திரர் ராஜமல், லால்சந், மாணிக்சந், காலூராம்சேட் இவர்கள் நமஸ்காரம் செய்து தெரிவித்திருப்பதாவது:

“ஸ்ரீ ஸ்ரீ பாலன்கஜாஜ், பிராசீன, ஸ்ரீ ஆதீஸ்வர பிரபுவினுடைய மஹாமஸ்தகாபிஷேகமும், நூதனபிம்பத்திற்கு பஞ்சகல்யாண மஹோத்ஸவமும் செய்வதாக அபிப்பிராயப் படுகிறோம்; 8-1-31-ல் ஆரம்பம்;முடிவு 29–1–31” என்பதே. இந்தத்தினங்களில் நூதனபிம்பத்திற்கு செய்யப்படும் சிறப்பு விபரமும் அப்பத்திரிகையிலுள்ளது. தவிர மாகசுத்ததசமி குருவாரம், 29-1-31 பிராதக்காலத்தில் மேல்கண்ட 84-அடி உயரமுள்ள சிலா பிம்பத்திற்கு மஸ்தகாபிஷேகம் செய்வதாகவும் அவர்கள் வரைந்துள்ளார்கள். இவைமேல் கண்ட காலங்களில் நடந்தேறியுள்ளன.

இன்னும் மேல்படி மஸ்தகாபிஷேகப் பத்திரிகையுடன் வரவேற்புப்பத்திரிகை ஒன்றுகிடைத்திருக்கிறது. அதில், மேல்கண்ட பிம்பம் காலாங்காலத்தில் அவதரித்த விருஷபதீர்த்தங்கரர் (ஆதிபகவான்)ஞாபகார்த்தபிம்பம் என்றும், B. B. & C. I. Ry. மார்க்கமும், G. I. P. தூலியா கர்டான மார்க்கமும் போகலாம் என்றும், மஹூ ஸ்டேஷனிலிருந்து ரூ. 3-4-0, இந்தூர் ஸ்டேஷனிலிருந்து ரூ. 3-8-0 மோட்டார்சார்ஜு என்றும், க்வாலியர் மோட்டார் சர்வீஸ்கம்பெனியார் பஸ்ஸும் மேல்படி பிம்பமுள்ள சூளகிரி கிராமத்திற்குச் செல்கின்றனவென்றும் பிரயாண விவரங்கள் வரையப்பட்டுள்ளன.

இன்னும் மைசூர் இராஜ்யத்தைச்சேர்ந்த ஸ்ரவணபெளிகுளத்தில் 60-அடி உயரமுள்ள (ஆதிபகவான் புத்திரரும், பரதசக்கிரவர்த்தி சகோதரருமாகிய) கோமடேஸ்வரஸ்வாமி சிலாவிக்கிரகமொன்றிருக்கிறது. தென்கன்னடம் ஜில்லா கார்காளாவில் 42-அடி உயரமுள்ள சிலாவிக்கிரகமொன்றிருக்கிறது. ஷி ஜில்லா வேணூரில் 36-அடி உயரமுள்ள சிலாவிக்கிரகமொன்றிருக்கிறது.

ஜைநர்களின் பழயவிக்கிரகங்களும், கோயில்களும் பூமிக்குக் கீழும் மேலும் காணப்படுகின்றன வென்று மேல்கூறியதற்கிணங்க, ஹெச்பவர் என்பவர் எழுதிய ஜைநசமய சித்தாந்தம்என்பதிலும்கூறியிருக்கிறார்;இதைப்பற்றியவிவரம் பின்வரும்; ஆங்குக்கண்டுகொள்க.

தவிர மேல்நாட்டு ஐரோப்பியர்களில் சிலர் ஜைநசமய தத்துவ முதலிய அநுஷ்டானங்களை ஆசரித்துவருகிறார்கள். அவர்களில், "அலெக்ஜாண்டர் கார்டன்" என்பவர் கூறுவதின் சுருக்கமாவது:—

"புண்ணியத்தை விருத்திசெய்வது மிகவும்அவஸ்ய மென்பதை ஜைநமதக் கொள்கைகள் உறுதியாய் உணர்த்துகின்றன. ஆகையால் இதிலடங்கிய நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் என்கிற மூன்று கொள்கைகளையும் நான்மிகவும் ஆநந்தத்துடன் வரவேற்கிறேன். இதுவுமல்லாமல் இவ்வுலகில் எவரும் தங்கள் மனவுறுதியினாலே பாவத்தை ஜெயித்து பரமாத்மநிலையை அடையக்கூடுமென்பதும், அந்நிலையில் உள்ளார் அநந்தசுகம், அநந்தஞானம், அநந்தவீர்யம், அநந்ததரிசனம் முதலியவைகளை நித்தியம் அநுபவிப்பார்கள் என்பதும் ஜைநமதக்கொள்கைகளாயிருக்கின்றன.

"இந்தக் கொள்கைகளனைத்தும் லண்டனிலுள்ள நம் ஜைந சகோதரர் மிஸ்டர். ஹெர்பெர்ட் வாரனாலே எனக்கு தெரியவந்தது. அவருடைய "ஜைநமதம்" என்னும் புத்தகம், ஜைந மதாபிமானத்தையும், தத்துவத்தையும் நன்குவிளக்குகிறது. ஆகையினால் நானும் ஷட்திரவ்வியத்தில் முழு நம்பிக்கையுள்ளவனா யிருக்கின்றேன்.

"சத்தியந்தான்உலகத்தினரைரக்ஷிக்கக்கூடியதென்பதுஎவருக்குந் தெரிந்திருக்கிறபடியால் நம்மனதிலிருந்திற *அழுக்காற்றை முற்றும் நீக்கிவிடுவதே நம்முடையமுதற்கடமையாகும். இவ்விதசத்தியமாகிய உண்மையை ஜைநகிரந்தங்களிற்றான் தேடிக் கண்டுபிடித்தேன்.

"ஜைநர்கள் மற்றொரு சமயத்தையாவது மதத்தையாவது, அல்லது ஜாதியையாவது களிழ்க்க முயலுகிறதில்லை. ஆனால் ஜைநர்கள் உலகத்திலுள்ள பற்பலதிமைகளுக்குக் காரணமாயிருக்கிற (கெட்ட இருதயங்களை நல்லவைகளாக்குகிறதற்காக) மனிதர்களுக்கு உபந்நியாசிப்பதோடு கூட உதவியும் புரிந்து வருகின்றனர்.

"இவ்வித உண்மையான சத்யமும் நித்யசமயமுமாகிய ஜைந மதத்தை உலகத்தில் பிரசித்திசெய்வதே என் வாழ்நாளில் நான் செய்யவேண்டிய ஒரே வேலையென்று எண்ணுகிறேன். மேல்நாட்டிலுள்ள எல்லாமதங்களைவிட இந்தியாவிலுள்ள ஜிநமதமே மேன்மையானதாயிருக்கிறது. ஆகையால் என் இந்திய ஜைந சகோதரர்கள் கைக்கொள்ளும் ஜிநசமயத்தை நானும் ஆனந்தத்துடன் கைக்கொண்டவனாய் அவர்களுக்கு என் அன்பார்ந்த ஆத்மத்துவமான வாழ்த்துக்களை நான் இத்துடன்அனுப்புகிறேன்." என்றுகூறுகிறார்.

இவ்விவரங்கள் தருமசீலன் பத்திரிகை புத்தகம்—1 சஞ்சிகை 6-ல் உள்ளன.

ஜெர்மனிதேசத்தில் ஹால்லி யென்னும் ஊரில் பிறந்து வளர்ந்த "டாக்டர் சார்லொட்டி கிராஸ்" என்னும் பெயர்பூண்டபெண்மணி ஜெர்மன், ஆங்கிலம் முதலியபாஷைகளைக்கற்றறிந்தும் சமஸ்கிருதம் கற்றறிந்து வேதங்களையும்,உபநிஷத்துக்களையும்,பிராம்மணங்களையும்

---

* அழுக்காறு என்பது குரோத, மான, மாயா, லோப மென்னும் நால்வகையாம்.

பலகாவியங்களையும் கற்றும் பிறகு ஜைநமத மூலகிரந்தங்களையும்குந்த குந்தர் இயற்றிய தத்வார்த்தஸூத்ரத்தையும் அதன் வியாக்யானங் களையும் நன்கு உணர்ந்து பின் ஜைநமத சம்பந்தமாய் ஜெர்மன் பாஷை யில்அநேக வியாஸங்கள் யெழுதியிருக்கிறார். பிறகு இந்த அம்மை யார் 1925-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் பம்பாய் முதலிய பல விடங்களுக்குவந்து சிவபுரியில் முனிராஜஸ்ரீ வித்யா விஜயரிடத்தில் ஜைநசமயசித்தாந்தத்தை மீண்டும் கற்றார். ஜைந சமய நியாய சாஸ் திரத்தில் நன்றாகத்தேர்ச்சியடைந்தார். ஜைநசமயத்தின்பெருமையை யும் உண்மையையும் அறிந்து தாம் ஜைநசமயத்தில் பிரவேசிக்க எண்ணங்கொண்டு தம்முடைய விருப்பத்தை ஸ்ரீ வித்யா விஜயரி டத்திலும், ஸ்ரீ விஜய இந்திர சூரியிடத்திலும் தெரிவித்தார்.

அவர்கள் அதற்கிணங்க, சுமார் 5000 பேர்கள் கூடிய ஒரு சபையில் தாம் சிராவகிகள் அனுஷ்டிக்க வேண்டிய அணுவிரதம் 5, குணவிரதம் 3, சிக்ஷாவிரதம் 4 ஆகிய பன்னிரண்டு விரதங்களை யும் ஏற்றுக்கொண்டார். உடனே அந்த அம்மையாருக்கு அவர்கள் ஸ்ரீமதி சுபத்திராதேவி யென்னும்பெயர் கொடுத்தார்கள். அவர் தாம் ஜைனியான பிறகு தம்முடையகாலத்தை ஜைந சமயத்திற்காகவே செலவழிக்கிறார். ஜைந சாஸ்திரம் கூறும்வண்ணம் அடிக்கடி உபவா ஸமிருந்துவிரதங்களை அனுஷ்டித்துக்கொண்டுவருவதுடன் பம்பாய், மதராஸ், ஜாகிர் ஆரணி முதலான பல விடங்களுக்குச் சென்று ஜைநசமய உண்மைத் தத்துவங்கள் முதலிய அநேகவிஷயங்களைப்பிர சாரம் செய்திருக்கிறார். இது அநேகர் அறிந்ததேயாம்.

இந்த அம்மாள் சரித்திரம் விரிவாக ஜைநாகெஜட் பத்திரிகை யில் கூறப்பட்டுள்ளது.

## அகில இந்திய ஜைந மஹா சபை

**ஸ்ரவணபேளி குளத்தில் (14-3-25-ல்) கூடிய காலத்தில் மைசூர் மஹாராஜா அவர்கள் செய்த சொற்பெருக்கின் சுருக்கமாவது:—**

"சபையோர்களே! சர் ஹுகம்சந்த் அவர்களே!

"நீங்கள் இன்று எனக்குச் செய்த மரியாதைக்கும் சந்தோஷ வரவேற்பிற்கும் நான் என் மனமார்ந்தவந்தனம் செய்கிறேன். நீங்கள் என்னை மதித்து வரவழைத்ததற்கு மிகவும் சந்தோஷிக்கிறேன்.

"இம்மகத்தான பூஜைக்கு இந்தியாவின் பற்பல பாகங்களிலிருந்து பல ஆயிரக்கணக்கான மனிதர் கூடியிருக்கும் இச்சமயத்தில் நானும் உங்களில் ஒருவனாக இருப்பது எனக்கு அளவிலா மகிழ்ச்சியை அளிக்கிறது. இம் மைசூர் ராஜ்ஜியத்திற்கு இந்தியாவில் பற்பல பாகங்களினின்று தலைமுறைதலைமுறையாக யாத்திரை செய்து கொண்டிருக்கும் ஜைநர்களை வரவழைக்க நான் மறக்கமாட்டேன். பல ஆயிரம் தலைமுறைகட்கு முன் ஸ்ரீபகவான் ஸ்ருதகேவலியாகிய பத்ரபாகு ஸ்வாமி ஜைநர்களோடு தென்தேயத்து வளைகுடாவிலுள்ள அடவியில் குடியேறியபோது இப்பீட பூமியின்மேலிருக்கும் மலைக் குகையைத் தமக்கு வாசஸ்தல மாக்கிக்கொண்டு இம்மலையிலேயே தம் திருவடிகளை விட்டுவிட்டுச் சல்லேகனா விரதமகிமையால் முக்தியடைந்தார். தக்ஷிணகாசி என்று சொல்லப்படும் இப்புண்ணிய பூமியின்கண் ஐரோப்பா தேசத்தில் மிக்க கீர்த்திபெற்ற, "அலெக்ஸாண்டர் தி (Alexander the great) க்ரேட்" என்று கீர்த்தி பெற்ற மன்னனைப்போல் மௌரிய வம்சத்து அரசனாகிய சந்தர குப்த மஹாராஜன் தன் அந்தியகாலத்தில் மேற்சொன்ன ஸ்ருத கேவலியின் திருவடிகளைப்பணிந்தான். அன்றுமுதற்கொண்டு தென்தேயத்தில் அநேக மன்னர்களும், வடதேயத்திலிருந்து அநேக தபோதனர்களும் இந்துக்களின் சமாதி மரணத்தைவிட மிக்க மகிமை பெற்ற சல்லேகனா விரதத்தை கைக்கொண்டனர்.

"இப்புண்ணிய ஸ்தலமானது ஸ்ரீ பரதேஸ்வர சக்ரவர்த்தியின் இளையசகோதரராகிய கோமடேஸ்வர முனிவருடைய தபோவனமாகவும் இருந்தது. அதனால் இந்த மைசூர் பிராந்தியமானது ஸ்ரீ பரதேஸ்வர சக்ரவர்த்தியின் ஆளுகையினாலும் ஸ்ரீ கோமடஸ்வாமியின் தபோபலத்தாலும் ஆளப்பட்டு வந்தது. மேலும் பெரிய பிம்பங்கள் செய்வதில் பிரக்யாதியான ஈஜிப்ட்டு தேசத்திலும், ஆஸ்டிரியா தேசத்திலுமில்லாதது இம்மகத்தானபிரதிமை உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளின் மனதையும் கவரும்வண்ணம் ஒரு பெரிய பாறையில் மிக்க உன்னதமாக கோமடமுனியின் ஆயிரம் வருடங்கட்குப் பிறகு பல மைல்கள் தெரியும்படி மேல்சொன்ன முனீஸ்வரரின் பிரதிமை ஸ்தாபிக்கப்பட்டது.

"ஆனால் ஜைநமதம் கன்னடதேசத்தில் தனக்கு இரண்டாவது ஜனன ஸ்தானத்தைக்கண்டது மன்னரியில் பிறவிக்கேற்ற வேலையையும் செய்தது. ஏனெனில் ஜைநமதம் கன்னடதேசத்தில் தோன்

ருமலிருந்தால் கன்னட பாஷை தன்னுடைய பூர்வசரித்திர ஆராய்ச்சிக்குரிய ஆதாரங்களை இழந்துவிடும். கன்னடபாஷையில் தேர்ந்த ஜைந பண்டிதர்கள் பண்டைநாள் முதல் இன்றுவரைக்கும் கன்னட பாஷைக்கு உதவிக் கொண்டே இருக்கின்றனர்.

"ஆத்மவழியிலும் தத்துவவழியிலும் ஜைநமதம் இந்தியாவில் செய்துள்ள வேலையை என்றும் மறக்க முடியாது. ஜைநமதம் ஜீவனோபாயத்திற்கு வேண்டிய எல்லாவழிகளையும் காட்டியிருப்பதால் மற்றமதங்கள் ஜைநமதத்தைக் கவனிக்க வேண்டியிருக்கின்றன. ஜைநமதம் தன்முக்ய கொள்கையாகிய அஹிம்சையை நியாய வாதத்தின் மூலமாகக்காண்பிப்பது மன்னியில் ப்ரத்யக்ஷமாயும் காண்பிக்கின்றது. ஜைநமதம் ஆத்மனுக்கு சுகத்தை அளிக்கும் கொள்கைகளைத் தெளிவாய் விளக்குகிறது இதனால் ஜைநமதம் மற்ற மதங்களைவிட தத்துவ விஷயங்களில் உன்னதமாய்விளங்கி உண்மைச் சாரித்திரத்தைக் கண்டுபிடித்து ஞானத்தையும் ஒரு வித நம்பிக்கையையும் அளிக்கின்றது! மேலும் ஜைந மதம் தத்துவங்களிலும் பாஷாபிவிர்த்திகளிலும் சர்வ தர்மங்களிலும் மற்ற மதங்களைவிட முன் நிற்கிறது. இன்னும் சொன்னால் சில்பசாஸ்திரத்திலும் முதன்மையாய் நிற்கின்றது. பூலோகத்திலுள்ள சில்பசாஸ்திர அதிசயங்களில் முஸல்மான்களுக்கு தாஜ்மஹால் இருப்பதுபோல் நமக்கு மவுண்ட் ஆபும், இந்த ஸ்ரீ கோமட சுவாமியும் இருக்கின்றன.

"ஆயினும் மனிதர்கள் நாளுக்கு நாள் ஆயுளிலும் புத்தியிலும் பலத்திலும் வித்தையிலும் குறைந்துகொண்டே போகவேண்டியதுதான். இதுபற்றி உங்கள் பழையபுராணங்களே கூறுகின்றன. அதிர்ஷ்டம் ஒரு வண்டிச்சக்கரம் போலாகும். எப்படியெனின் ஒருமுறை வண்டிச்சக்கரம் ஏறினால் இறங்கியே ஆகவேண்டும். உற்சற்பிணியும் அவசற்பிணியும் மாறி வரும். அப்படியே அதிர்ஷ்டமும் தரித்திரமும் மாறிமாறி வரும். எவனொருவன் அடிக்கடி காலங்களின் மாறுதல்களைக் கவனித்துக்கொண்டே வருகிறானோ அவன் நாளுக்கு நாள் ஜைநமதம் க்ஷீணத்திற்கு வருவதைக் கவனிப்பான். ஆகையால் இனி நீங்கள் உங்கள் இருகட்சிக்குமுள்ள சச்சரவுகளை ஒழித்துவிட்டு நியாய ஸ்தலங்களுக்குப் போவதை நிறுத்தி விட வேண்டும். நீங்கள் இனி ஒத்தச் சகோதரர் போலிருக்கவேண்டும். நீங்கள் இனிமேல் உங்கள் பண்டை வழக்கப்பிரகாரம் ஆத்மத்யானத்தின் மகிமையை எல்லாருக்கும் எடுத்துக்காட்டி ஆதிகாலங்

களில் ஸ்ரீ ஜிநேஸ்வரன் உபதேசித்தருளிய தத்துவங்களை நிலைநிறுத் துங்கள். மதத்தை விருத்திசெய்வதற்கு முக்யமான வஸ்துவாகிய கல்வியைக் கற்றுக்கொடுப்பதற் கேற்ற வழியைத்தேடுங்கள். பத்ர பாகு ஸ்வாமிகள் எவ்வளவு கஷ்டப்பட்டு உங்களை இங்குக்கொண்டு வந்தாரோ அவ்வளவு கஷ்டப்பட்டு நீங்களும் இம்மதத்தை விருத் திக்குக்கொண்டுவர வேண்டும். கடைசியில் உங்கள் இன்றியமை யாத பொக்கிஷங்களாகிய சாஸ்திரங்களை உலக நன்மைக்காக வெளி யிட்டு ஒருபெரிய அகராதியால் முடிசூட்டி மாதாந்த வாராந்தப்பத் திரிகைகள் மூலமாக வெளியிட்டு உங்களைச் சீர்திருத்திக்கொண்டு நீங்கள் முன்னிருந்த நிலைமைக்கு வருவீராக.

"சபையோர்களே! நீங்கள் எல்லாம் ஒரே மதத்தினராகையால் நீங்கள் முதல்முதல் தற்சமயம் உங்கள் மதத்திற்கு வேண்டிய சீர் திருத்தங்களைச்செய்து கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் மதத்தைவிரு த்தி செய்து கொள்ள என்னென்ன வழிகள் உண்டோ அவைகளை ஆலோசனைசெய்து சீர்திருத்திக் கொள்ளுங்கள்.

"ஒவ்வொருமதத்தினரும் தங்கள் தங்கள் மதங்களைக்கல்வியி லும், மதாபிமானத்திலும், அபிவிருத்தி செய்யவேண்டும்.

"சபையோர்களே! நீங்கள் இன்று எனக்குச்செய்தமரியாதைக் கும் நல்வரவேற்பிற்கும் நான் மற்றொரு தரம் என்மனமார்ந்த வந்தனமளித்து உங்கள்கோரிக்கைகள் எல்லாம் நிறைவேறுவதற்கு எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்." என்பதே.

மகாராஜா அவர்கள் ஆங்கிலபாஷையில் மொழிந்த இவைகள் ஜைநகெஜட் பத்திரிகை புத்தகம்-7 சஞ்சிகை 11-12-ல் தமிழில் மொழிபெயர்த்து யெழுதப்பட்டுள்ளன.

மகாராஜா அவர்கள் கன்னட பாஷையைப்பற்றிக் கூறியதற் கிணங்க, எல். ரைஸ் என்பவரும், ரவாண்டு கிட்டல் என்பவரும் கன்னட நூற்கள் ஜைநர்களுடையனவேயென்று கூறுகிறார்கள். இவ் விவரம் மேலேபண்டிதர்கள் அபிப்பிராயம் 5-6-வது பக்கங்களில் பாக்கக்காணலாம்.

இதுவரையில் ஜைநசமயத்தைப்பற்றியும், ஜைநர்களால் இயற் றிய அடிப்படையான நூல்கள்முதல் பல நூல்களைப்பற்றியும், அவர்

கள்கோவில் முதலான விக்கிரகங்களைப்பற்றியும், மேல்கண்டவைகளு க்குநேர்ந்த இடையூறுகளைப்பற்றியும், ஜைநர்களின் பண்டைக்காலத் திய பிரமாண்ட விக்கிரகங்களைப்பற்றியும், ஐரோப்பியர் ஜைந சம யத்தின் ஆசாரத்தை அநுஷ்டிப்பதைப் பற்றியும், மைசூர் மஹா ராஜா அவர்கள் ஜைநசமய சல்லேகனு விரதத்தைப்பற்றியும், தத்து வங்களின் உயர்வைப் பற்றியும் கூறியுள்ளவைகளை நாம் விளக்கி யுள்ளோம். இனி ஜைநசமயத்திற்குச் சம்பந்தமுள்ள பாஷைகளின் விவரங்களையும் விளக்குவாம்:—

வீரசோழியம் பதிப்புரையில் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர் கள் கூறுவதாவது:—

"பரதகண்டத்தில் வழங்கும் பாஷைகளுள் ஆதிகாலந்தொட் டுள்ளன சமஸ்கிருதமும், தமிழுமாம். இவற்றில் ஒன்று சிவபெரு மானிடத்தும், மற்றொன்று சுப்பிரமணியக்கடவுளிடத்தும் உற்பவித் தன என்னும் ஆகம ஐதீகப்பிரமாணங்களே இதற்குச்சான்றாகும்" என்று வரைந்துள்ளார். இவர்கருத்தும் ஆகம ஐதிகப்பிரமாணங் களும் பூராவும் தவறு என்பது இதனடியில் எடுத்துக்காட்டியுள்ள வற்றால் தெற்றென விளக்கமாகும்.

கர்மபூமியின் தொடக்கத்தில் ஆதிபகவான் (அருகக்கடவுள்) துவாதச கணபரிவேஷ்டிதனுகிப் பதினெண்மகாபாஷைகளுக்கும், எழுநூறு (700) க்ஷுல்லக பாஷைகளுக்கும் ஏகமாயிருக்கப்பட்ட திவ்யத்வனி எழும்ப, அர்த்தமாகதியென்னும் திவ்ய பாஷாமிர்தத் தினால் இல்லற துறவற தர்மங்களை உபதேசித்தார் என்ற விவரம்மகா புராணம்,கர்மஸ்வரூபமுதலிய நூல்களில் விவரிக்கப் பட்டிருக்கிறது. இவ்வாறு பகவான் பதினெண்மகா பாஷைகளை திவ்யத்வனி ஒன்றி னால் உபதேசித்தருளினுரென்பதை, மேருமந்தர புராணத்தில்,

"மற்றிந்த வைய மளந்தான்வைய நின்ற பெற்றி
முற்றுமுரைத்தா னுரையீ றொன்பதாய தொன்றால்"

என்ற கடவுள் வாழ்த்துச் செய்யுளடிகள் விளக்குகின்றன.

இ - ள்: "இந்த உலகத்தை பரமாணுவினுல் அளந்தவன் இவ்வுல கத்தில் நிலை பெற்றிராநின்ற ஜீவாதி பதார்த்தங்களின் தன்மை முழுமை யும் திவ்யத்வனி ஒன்றினுல் ஏற்பட்ட பதினெட்டுவித பாஷைகளால் அருளிச் செய்தான்" என்பதாம்.

பதினெண் மகாபாஷைகளில் சமஸ்கிருதம், பிராகிருதம், மகராஷ்டிரம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய பாஷைகளும் விளங்குகின்றனவென்றும், மற்றவை இன்னஇன்னவையென்பது தெரியவில்லையென்றும் ஜைநப்பெரியோர்கள் கூறுகின்றார்கள். மேலும் தமிழ் முதலாக துளுவம் பரியந்தமுள்ள ஐந்து பாஷைகளும் பஞ்சதிராவிடமென்றும் சொல்கிறார்கள். மற்றுமுள்ள மகாபாஷைகளுக்கும், 700 க்ஷுல்லக பாஷைகளுக்கும் விவரங்கள் தெரியவில்லை என்றும் கூறுகின்றார்கள்.

"டாக்டர். ஸ்வராஹப்சந்திரஜெயின் ஸரோஜ் யச். யம். பி. யம். ஆர். ஏ. எஸ், (லண்டன்)" என்ற பட்டப்பெயர் வாய்ந்த ஜைநராகிய கான்பூர். பண்டிதர். அவர்கள் கான்பூரிலிருந்து காஞ்சிபுரம் வந்து எனது கிருகத்தில் ஒருநாள் தங்கினார்கள். அவர்களிடம் நான் சாஸ்திரசம்பந்தமாகப்பேசியபோது சமஸ்கிருதபாஷை 18 மகாபாஷைகளுக்குட்பட்டதென்றும், இப்பாஷை ஒருகாலத்தில் சகல தேசங்களிலும் வழங்கிவந்திருக்கிறதென்றும் சொன்னார்கள்.

இந்த உண்மை என்பது பின்வரும் விஷயங்களால் விளங்கும்:—

இந்த ஆரியகண்டம் ஆதியில் போகபூமித் தன்மையையுடையதாயிருக்கும்போது அப்பூமியில் வசித்திருந்த மக்களுக்கு * ஆரியர்களென்று பெயர்வழங்கி வந்தது. இவ்விவரம் முதல்வேதமாகிய மகாபுராண ஸ்ருதியில் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆரியர்களுக்கு பாஷை ஆரியம். ஆரியமென்பது சமஸ்கிருதம். மூன்றுங்காலம் அந்தியத்தில் தோன்றிய பதினான்கு மனுக்களில் எட்டாவது மனுவின் கால முதலாகப் பிரஜைகள் விருத்தியாகத் தொடங்கி, ஆதிபகவான் காலம்வரையில் அதிகமாக விருத்தியடைந்தார்கள்.

* ஆரியர் என்பதற்கு உயர்ந்தோர், பெரியோர், அறிஞர், அறவோர் என்பது பொருள். உயர்கள் ஓரறிவுள்ள ஜீவன்களுக்கும் பாதை உண்டாகாமல் நடப்பவர். இத்தன்மையுடையவர்களுக்குத்தான் அந்தணர், ஆரியர் அறவோர் என்னும் பெயர்கள் பொருத்தமானவைகளாம்.

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்"

என்னும் குறளால் இது விளங்கும்.

அதன் பிறகு பகவான் ஐம்பத்தாறு நாடு நகர தேசங்களை உண்டு பண்ணி ஆங்காங்குப் பிரஜைகளைப் பரவச்செய்தார். போகபூமியானது ஆதியில் வடதிசையின் கோடியில் இருந்ததனாலும், அங்கிருந்தவர்கள் ஆரியமென்னும் சமஸ்கிருதபாஷை பேசிவந்ததனாலும், இதற்கு வடமொழியென்றும் பெயராயிற்று. தமிழ்தேசம் தென் திசையின் கோடியில் உண்டுபண்ணப்பட்டது. ஆகையால் தமிழ் பாஷைக்குத் தென்மொழி என்ற பெயராயிற்று.

ஆதியில் போகபூமியிலிருந்த ஆரியர்கள் 56 தேசங்களிலும் பரவி வந்தவர்களாதலால் சமஸ்கிருதம் சகல தேசங்களிலும் வழங்கிவந்து, பிறகு காலதேச விகற்பங்களால் மாறுபடலாயிற்று. இதற்கிணங்க பேரகத்தியத்திரட்டு என்னும் இலக்கணத்தின்கண் உள்ள சூத்திரம்,

"எல்லா நாட்டினு மியல்வது பாகதம் (பிராகிருதம்)"

என்று கூறுகின்றது. இதனால் பிராகிருத பாஷையும் சகல தேசங்களிலும் பண்டைக்காலத்தில் வழங்கி வந்திருப்பதாக விளக்கமாகின்றது. இக்காலத்தில் பிராகிருதம் வழங்கவில்லை. சமஸ்கிருதபாஷையும் இதுபோன்றதெனபது தெற்றென விளங்கும். மேற்கூறியபடி சமஸ்கிருதம் போகபூமியின் காலமுதலாக 56-தேசங்களிலும் வழங்கி வந்திருப்பதனாலும், ஆதிபகவான் சமவசரணத்தில் சென்று சர்வ க்ஷேத்திரங்களிலும் அர்த்த மாகதியென்னும் பிராகிருத பாஷையில் தர்மங்களை உபதேசஞ் செய்திருப்பதனாலும் இவ்விரு பாஷைகளும் ஒருகாலத்தில் உலகமுழுமையும் வியாபித்திருக்தல் கூடுமென்பதற்கையமேயில்லை.

இன்னும் முன்காலத்தில் கப்பல் வியாபாரம் முதலியவைகளைச்செய்த ஜைந ஸ்ரேஷ்டிகள் (வணிகர்) முதலியவர்கள் பல தேசங்களுக்கும் சென்று வியாபாரம் செய்யவும், இராஜக்களிடம் சென்று காணிக்கை வைத்துத் தயவைப்பெறவும், உத்தியோகத்திலமர்தல் முதலான பல காரியங்களைச்செய்யவும் எங்கும்பரவியிருந்த சமஸ்கிருத, பிராகிருத பாஷைகளை பொதுவான பாஷைகளாக வழங்கியிருத்தல் கூடுமென்பதும் விளக்கமாகின்றது. கப்பல் வியாபார முதலியவைகளைச் செய்யும் ஜைந வணிகர் புதிதாக ஓர் தேசத்திற்குச்சென்றால் அந்தத்தேசத்து அரசனிடம் சென்று அபூர்வமாகவுள்ள வஸ்துவை வெகுமதியாக வைத்து வணங்குவதும், தமக்கு

வேண்டிய விஷயங்களைச் சொல்வதும், தாம் வியாபாரம் செய்து வந்த தேசங்களில் நூதனங்கள் ஏற்பட்டிருப்பின் அவைகளை அரசனுக்கு அறிவிப்பதும் வழக்கம். இவ்விவரமானது ஜைநசமய நூல்களாகிய ஸ்ரீபுராணம், ஸ்ரீபாலர் சரித்திரம், நாககுமாரகாவியம் முதலான பல நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. அதற்காகவே எங்கும் வியாபித்திருந்த சமஸ்கிருதம், பிராகிருதம் முதலியவைகளைச் சகல தேசங்களுக்கும் பொதுபாஷைகளாக அவர்கள் உபயோகித்து வந்தார்கள். ஆதலால் இவற்றில் எதையாவது, ஒருதனித்தேசத்துப் பிரஜையென்றாவது, ஒரு ஜாதிக்குமாத்திரம் உரிமையுள்ளதென்றாவது சொல்ல வியலாது.

ஜைநத்தமிழ்ப் பண்டிதர்கள், மேற்கூறிய பிராகிருதம், சமஸ்கிருதம் முதலிய பாஷைகளின் நூல்களை நன்குக் கற்றறிந்தார்கள். ஆதலின், இவர்கள் செய்த தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் பிராகிருத ஸமஸ்கிருத பதங்களைக் கலந்துள்ளார்கள். இவ்விவரம் பண்டைநூலாகிய தொல்காப்பியத்திலும் காணப்படும். இரண்டு மூன்று பாஷைகளைக் கற்றறிந்தவர்கள், ஒரு பாஷையில் பேசும்போது மற்றொருபாஷையின் சொற்கள் கலப்பதும், ஒருதனிப்பாஷையின் நூலை இயற்றும்போது மற்றொருபாஷையின் பதங்கள் அதில் கலத்தலும் இயற்கை. இவ்வாறு சமஸ்கிருத, பிராகிருத மொழிகளைக்கலந்து ஜைநர்கள் இயற்றிய நூல்களைக்கண்டு பிற்காலத்திலேற்பட்ட ஜைநரல்லாத தமிழ்ப்பண்டிதர்களும் தாங்கள் இயற்றியுள்ள தமிழ் நூல்களில் சமஸ்கிருத பிராகிருத பதங்களை உபயோகித்திருக்கின்றார்கள்.

இவ்வுண்மைகளை உணராதார் சிலர் சமஸ்கிருதம் தற்காலம் ஆரியரென்றுகருதப்படும் பிராம்மணர்களுக்கு மாத்திரம் உரிமையுள்ளதென்றும், சிலர் வடமொழி முந்தினதென்றும், சிலர் தென்மொழி முந்தினதென்றும், சிலர் ஒன்றிலிருந்து மற்றொன்றுண்டாயிற்றென்றும், சிலர் தமிழ் தனிபாஷை யென்றும், இதில் பிற்காலத்தில் ஆரியக்கலப்பு அதாவது சமஸ்கிருத பிராகிருத சொற்கள் கலந்து விட்டன வென்றும் பலவாகக் கூறுகின்றார்கள். தமிழ்பாஷை மாத்திரம் தனிபாஷையென்பது தவறு; ஒவ்வொரு தேசத்திற்கும் அந்தந்த தேசபாஷை தனிப்பாஷையேயாம். சமஸ்கிருத பிராகிருத பாஷைமட்டும் ஆதிகால முதலாக எல்லாத்தேசங

களிலும் வியாபித்திருந்ததனுல் எவர்க்கும் பொதுமொழிகளாம். ஆதலினுலேயே அப்பாஷைகளின் நூற்களைக் கற்றவர்களும், கல்லாதவர்களும் இக்காலத்திலும் மாதா, பிதா, ஷண்முகம், இரஸம், இராஜன், க்ஷேமம், மோக்ஷம், ஸ்திரம், ஆக்ஷேபனே, கண்டனம், ஸ்தம்பம், ஆலயம், வீணே, கீதம், சபா, சங்கம், சரீரம், சம்பூர்ணம், பரிஹாஸம், அன்னம், ஆகாரம், ஸ்வர்க்கம், நரகம், பாபம், புண்ணியம், பிரதமைமுதல் அமாவாஸை பூரணேபரியந்தமுள்ள திதிமுதலான அநேக சமஸ்கிருத சொற்களைத் தமிழ்தேசமுதல் பல தேசங்களிலும் உபயோகித்து வருகின்றூர்கள்.

இன்னும் ஆதிபகவான் அருளிய பதினெண் மகாபாஷைகளுள் தமிழ்பாஷையும் ஒன்றுகும். இதனை நன்னூலாசிரியர்,

"முனிவற வருளிய மூவறு மொழியுளும்
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனு நான் கெல்லேயி னிருந்தமிழ்க் கடலுள்"

என்னும் சிறப்புப் பாயிரச் சூத்திரத்தில் விளக்கியுள்ளார்.

இ - ள்: "(அருகக்கடவுள்) வெறுப்பில்லாமல் அருளிச்செய்த (மூவறு) பதினெண் மகா பாஷைகளுள்ளும் குணகடல் குமரி குடகம் வேங்கடமென்னும் நான்கு எல்லேக்குட் பட்டபெரிய தமிழ்பாஷை என்னும் கடலில்" என்பதாம்.

இதனுல் அருகக்கடவுள் தமிழ்பாஷையையும் அருளினர் என்பதும், இது பதினெண்மகா பாஷைகளுள் ஒன்றென்பதும் ஐயமறத் தெளிவாகும்.

சமஸ்கிருதபாஷை வடமொழி என்றும், தமிழ் பாஷை தென்மொழி என்றும் பெயர்பெற்றதற்குக் காரணத்தையும், மகாபாஷை 18-க்ஷுல்லக பாஷை 700 இந்தியாவில் வழங்கிவரும் உண்மையையும் அறியாதார் பலர் பலவாறு கூறுவதுந்தவிரப் பொருத்தமற்ற கதைகளைத் தங்கள் தங்கள் சமய நூல்களில் எழுதியுள்ளார்கள். ஆதலின் பாஷைகளின் உண்மையை அறியும் பொருட்டு ஜைநப் பெரியோர்களின் சொற்களைக் கேட்டும், ஜைநசமய சாஸ்திரங்களை ஆராய்ந்தும் இதனை விவரித்துள்ளேன். நண்பர்கள் உண்மையை உணர்வார்களாக.

மேலே ஜைநசமயத்து பாஷையின் சம்பந்தத்தைப்பற்றி விளக்கினேம். இனி ஜைநசமயத்தில் வித்தியாதரர், மகாமுனிவர்கள் ஆகியவர்கள் சைவ, வைணவ, புத்தம் முதலிய சமயத்தவர்களுடன் சாஸ்திரமூலமாய் எதிர்த்து நின்று, தர்க்கம் செய்து ஜெயித்திருப்பதையும், அதன் நிமித்தம் அச்சமயத்தவர்கள் ஜைந சமயத்தில் சேர்ந்திருப்பதையும் பற்றிக் கிஞ்சித்து எடுத்துரைப்பாம்.

விஜயார்த்த வெள்ளியம்பெருமலையில் பவனவேகன் அல்லது வாயுவேகன் என்றும், மனோவேகனென்றும் இரண்டு வித்தியாதரர்கள் மிக்க மித்ருக்களாய் வசித்துவந்தார்கள். இவர்களில் வாயுவேகன் மித்தியாதிருஷ்டி; மனோவேகன்சம்மியக்திருஷ்டி. மனோவேகன் வாயுவேகனைத் தனது மார்க்கத்தில் கொண்டுவர விருப்பங்கொண்டு அவனை, பரதக்ஷேத்திரத்து பாடலீபுத்ர நகரத்திற்கு அழைத்துச் சென்று அந்நகரத்தில் மித்தியாபிராம்மணர்கள் ஆலயத்திற் பிரவேசித்து பேரியடிக்க, அங்கிருந்த பிராம்மணர்கள் அந்த வித்தியாதரர்களைக் கண்டு, "நீங்கள் எங்களுடன் சாஸ்திரவாதம் செய்து ஜெயித்தால் பேரியடிக்கலா" மென்றும், "அப்படிக்கில்லையாகில் பேரியடித்தல் தகா"தென்றும் சொன்னார்கள்.

மனோவேகன் வாதத்திற்கிசைந்து அவர்களுடன் சைவ வைணவ வேதாகம புராண சாஸ்திரங்களிலுள்ள ஆபாஸங்களையும், அக்கடவுள்களின் அவகுணங்களையும் எடுத்துக்காட்டி, தலதினம் தர்க்கம் செய்து பிரதிதினமும் ஜெயித்து ஒவ்வொருநாளும் ஜெயப்பத்திரம் பெற்றான். பிறகு மித்தியா பிராம்மணர்கள் கரகமலமுகுளிதராய் மனோவேகனைப் பார்த்து, "சகல ஜனங்களும் அறியத்தக்கதாக உங்களுடைய ஜிநவேதாகம சஸ்திரங்களை சொல்லவேண்டு" மென்றனர். மனோவேகன் அதற்கிசைந்து அருகக்கடவுளின் சிறப்புக்களையும், அவரால் அருளிச்செய்த வேதாகம சாஸ்திரங்களிலுள்ள மெய்ப்பொருள்களையும், இல்லற துறவற ஆஸ்ரமங்களின் பெருமையையும் எடுத்துரைத்தான்.

இவற்றைக்கேட்ட பிராம்மணர் முதலானவர்கள், அவனை நோக்கி, "உத்கிருஷ்ட வித்தியாதர சக்கிரவர்த்தியே! உம்முடைய தயவினாலே சத்தர்ம சன்மார்க்கத்தைக் கேட்டு நாங்கள் கிருதார்த்தரானேம்; சம்ஸார சமுத்திர சுழியுள் மூழ்கியிருக்கும் எங்களை தாங்கள் கிருபையினலெடுத்து உம்முடைய நிர்மலதர்மமென்கிற

கப்பலில் நிறுத்தி விரதங்களைத் தயவுசெய்து கொடுத்தருளவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள். மனோவேகன், அவர்களை அநகார கேவலியாகிய வாசு பூஜ்ஜியபகவானிடம் அழைத்துச் சென்று அந்த பகவானைத் துதித்து,"ஸ்ராவக விரதத்தை இவர்களுக்குக்கொடுத்து இவர்களை இருதார்த்தராகச் செய்யவேண்டும்"என்று விண்ணப்பஞ்செய்தான். அவ்வாறு பகவானும் அந்த மித்தியாப் பிராம்மணர் முதலானவர்களுக்கு அணுவிரதம், குணவிரதம், சிக்ஷா விரதம் ஆகிய ஸ்ராவக விரதங்களை உபதேசஞ்செய்தார். அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு ஜைநதர்மானுஷ்டானங்களை அனுஷ்டித்தார்கள். இவற்றிற்கூறியவிஷயங்கள் யாவும் தர்மபரிக்ஷையென்னும் நூலில் பரக்கக் காணப்படும்.

இன்னும் வாதத்தின்சம்பந்தமாக ஸ்ரவண பெளிகுளத்திலுள்ள சிலாஸாஸனங்களில் 67-ம் நெம்பருள்ள ஸாஸனத்தில் சமந்தபத்திராசாரிய மாமுனிவரைப்பற்றி கூறியுள்ள சுலோகங்களைப்பற்றியும், 64-ம் நெம்பர் ஸாஸனத்திலுள்ள சுலோகங்களின் கருத்துக்கள் முதலானவைகளைப் பற்றியும் உள்ளவிஷயங்களை இங்குக் கிஞ்சித்து எடுத்துக்காட்டுவாம்: 67-நெ. ஸாஸனத்தில்,

'𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌪𑌾𑌟𑌲𑌿𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑌧𑍍𑌯𑌨𑌗𑌰𑍇 𑌭𑍇𑌰𑍀 𑌮𑌯𑌾 𑌤𑌾𑌡𑌿𑌤𑌾
𑌪𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌮𑌾𑌲𑌵𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌠𑌕𑍍𑌕𑌵𑌿𑌷𑌯𑍇 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌪𑍁𑌰𑍇 𑌵𑍈𑌦𑌿𑌶𑍇।
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋𑌹𑌂 𑌕𑌰𑌹𑌾𑌟𑌕𑌂 𑌬𑌹𑍁𑌭𑌟𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑍋𑌤𑍍𑌕𑌟𑌂 𑌸𑌙𑍍𑌕𑌟𑌂
𑌵𑌾𑌦𑌾𑌰𑍍𑌥𑍀 𑌵𑌿𑌚𑌰𑌾𑌮𑍍𑌯𑌹𑌂 𑌨𑌰𑌪𑌤𑍇 𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲𑌵𑌿𑌕𑍍𑌰𑍀𑌡𑌿𑌤𑌮𑍍॥"

என்ற விஷயங்கள் கூறப்படுகின்றன.

இ - ள்: "ஆதியில் பாடலீபுத்ரமென்னும் நகரில் என்னால் பேரியானது அடிக்கப்பட்டது; பிற்பாடு மாளவ, சிந்து, தாக்க (பஞ்சாப்) தேசங்களிலும், காஞ்சீபுரத்திலும், வைதிசாவிலும், என்னால் பேரியானது அடிக்கப்பட்டது; கல்வி செல்வமுதலியவைகளாலும், மிக்க போர்வீரர்களாலும் நிறைந்திருக்கும் கரஹாடமென்னும் பட்டணத்திற்கு சார் வந்தேன்; வாராய் அரசனே! வாதம் செய்வதில் இச்சையுள்ளவனாக சிங்கப் புலியின் விளையாட்டைப்போன்று சஞ்சரிக்கின்றேன்" என்பதாம்.

இன்னும்,

"𑌅𑌵𑌟𑍁𑌤𑌟𑌮𑌟𑌤𑌿 𑌝𑌟𑌿𑌤𑌿 𑌸𑍍𑌫𑍁𑌟𑌪𑌟𑍁𑌵𑌾𑌚𑌾𑌟 𑌧𑍂𑌰𑍍𑌜𑌟𑍇

[𑌰𑌪𑌿 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾 ।

𑌵𑌾𑌦𑌿𑌨𑌿 𑌸𑌮𑌨𑍍𑌤𑌭𑌦𑍍𑌰𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌵𑌤𑌿 𑌤𑌵 𑌸𑌦𑌸𑌿 𑌭𑍂𑌪 𑌕𑌾𑌸𑍍𑌥𑌾𑌨𑍍𑌯𑍇

[𑌷𑌾𑌂 ॥

என்ற சுலோகமும் காணப்படுகின்றது.

இ - ள்: "ஹே அரசனே! உம்முடைய சபையில் வாதியாயிருக்கிற சமந்தபத்திரனைவன் இருக்கும் சமயத்தில் சுத்தமாயும், சாமர்த்தியமாயும், சாதுர்யமாயும் பேசுகின்ற நல்லவருடைய நாவானது கழுத்திற்குள் சஞ்சரிக்குமென்றால் மற்றவர்களுடைய நாவானது எங்கேயிருக்கும்?" என்பதாம்.

சமந்தபத்திராச்சாரியர் முன்னின்று வாதம் செய்பவர்கள் இல்லை யென்பது இதன் கருத்து.

இன்னும் 54 - நெம்பர் ஸாஸனத்திலுள்ள சுலோகத்தின் கருத்து: "வாதத்தில் சிம்மம்போன்றவர்; கணங்களுக்குத் தலைவர்; பஸ்மகவியாதியைப் போக்கடித்தவர்; பத்மாவதி அம்மனால் உத்கிருஷ்டமான பதவியைப் பெற்றவர்; தம்முடைய வாக்சாமர்த்தியத்தினால் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் பிம்பத்தைத் தோன்றும்படி செய்தவர்; இந்தக் கலியுகத்தில் எவரால் பவித்ரமான ஜைநதர்மமானது பிரகாசிக்கின்றதோ, அப்பேர்ப்பட்ட சமந்தபத்திருக்கு நமஸ்காரம்" என்பதாம். இவரைப்பற்றி இன்னும் சில ஸாஸனங்களுமுள்ளன.

மேலும் சமந்தபத்திராசாரியார் சகல தேசங்களுக்குஞ்சென்று பேரியடித்து, எதிரின்றியே சிம்மம்போன்று சஞ்சரித்து வாரணாசிபுரம்சென்று (பனாரஸ்) அப்பட்டணத்தை அரசுபுரிந்திருந்த சிவகோடியென்னும் சைவ இராஜனைக்கண்டு, "ஹே இராஜனே! யாராகிலும் என்னிடம் வாதஞ்செய்ய சக்தியுள்ளவர்களிருந்தால் என் முன்வந்து வாதம் செய்யட்டும்" என்று கூறினர். அவ்வாறுகூறிய வசனத்தைக்கேட்ட இராஜன், ஸ்வாமி! சமந்த பத்திரரின் சரித்திரத்தைகேட்டும், இவர் மகிமையை நேரில்கண்டும், இவர் பெரிய வித்வானும் ஆசாரியருமாக விருக்கிறார் என்றுமதித்து, சரணாகதியடைந்து சிராவக விரதம் கைக்கொண்டு ஜைநனானான். அரசனுடன் அநேக ஆயிரம் சைவர்முதலிய ஜனங்கள் ஜைநதர்மத்தைக் கைக்கொண்டார்கள்.

அதன்பிறகு சிவகோடி இராஜனும் ஸ்வாமி சமந்தபத்திரருக்கு சிஷ்யனுகி அநேகநாட்கள் அவரிடம் அத்யயநம் செய்து வித்தியா சம்பத்தை யடைந்து கடைசியாக இராஜலக்ஷ்மியைவிட்டு மோக்ஷ லக்ஷ்மியை அடையும்பொருட்டு ஜிநதீக்ஷையைக் கைக்கொண்டான். பிறகு அவனும், “பகவதீ ஆராதனு” என்ற பிரசித்த கிரந்தத்தை பிராகிருதபாஷையில் இயற்றினுன். அதில் சதுர்வித ஆராதனைகளும், விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. சுவாமி சமந்தபத்திராசரியர் பிறகு அநேகதேசங்கள் சென்று ஆங்காங்கே ஏகாந்த வாதிகளை ஜெயித்து அநேகாந்த வாதத்தின் மகிமைகளைப் பிரகடனம் செய்து ஜைநமதத்தின் விஜயதுந்துபியை முழக்கினுர். இவர் கந்தஹஸ்தி மஹாபாஷ்யம், ரத்னகரண்டகம், தத்துவானுஸாஸனம், தேவாகமஸ்தோத்திரம்,(ஆப்தமீமாம்ஸம்)முதலான பலகிரந்தங்களை இயற்றியுள்ளார். இவர் காலத்திற்குப் பிறகு வந்த ஆசாரிய ஸ்ரேஷ்டர்களாகிய ஜிநசேனுசாரியர், மஹாகவி வாதீப சிம்மர், வசுநந்தி, சித்தாந்த சக்ரவர்த்தி, சுபசந்திரர், வீரநந்திமுதலான அநேக முனிவர்கள் தாங்களியற்றிய நூல்களில் இவரை மிகவும் புகழ்ந்து போற்றியிருக்கிறுர்கள். இந்த சமந்தபத்ரஸ்வாமி ஸாவிகால உத்சர்ப்பிணியில் தீர்த்தங்கரராக அவதாரம் செய்யப் போகிறுரென்பது சாஸ்திரப்பிரமாணம்.

இன்னும் அகளங்கமாமுனிவர் புத்த சமயத்தவர்களிடம் வாதம் செய்து ஜெயம் பெற்றிருக்கின்றுர். இதைப்பற்றி,

“𑌨𑌾𑌹𑌂𑌕𑌾𑌰 𑌵𑌶𑍀𑌕𑍃𑌤𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌨 𑌦𑍍𑌵𑍇𑌷𑌿𑌣𑌾 𑌕𑍇𑌵𑌲𑌂
𑌨𑍈𑌰𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯 𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 𑌜𑌨𑍇 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌮
[𑌯𑌾 |
𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌶𑍍𑌰𑍀 𑌹𑌿𑌮𑌶𑍀𑌤𑌲𑌸𑍍𑌯 𑌸𑌦𑌸𑌿 𑌪𑍍𑌰𑌾𑌯𑍋 𑌵𑌿𑌦𑌗𑍍𑌧𑌾𑌤𑍍𑌮𑌨𑍋
𑌬𑍌𑌦𑍍𑌧𑍌𑌘𑌾𑌨𑍍 𑌸𑌕𑌲𑌾𑌨𑍍 𑌵𑌿𑌜𑌿𑌤𑍍𑌯 𑌸𑍁𑌗𑌤𑌃 𑌪𑌾𑌦𑍇𑌨 𑌵𑌿𑌸𑍍𑌫𑍋
[𑌟𑌿𑌤𑌃 ||”

என்ற ஸ்லோகம் அகளங்க தோத்திரக் கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

இ - ள்: “அகங்காரத்தினுலேயே அல்ல, துவேஷமுள்ள மனதினுலே அல்ல, மிகவும் ஆத்மஸ்வரூபமில்லை யென்கிற பௌத்தருடைய உபதேசத்தைக்கேட்டு ஜனங்கள் நாசத்தை அடைகிறுர்களென்கிற இரக்கமாகிய

புத்தியினாலே (அகளங்கனாகிய) என்னால் ஹிமசீதள னென்னும் இராஜனுடைய சபையிலே மிகவும் சாமர்த்தியவான்களான புத்தகுருஜனங்களுடைய சமூகங்களை ஜெயித்து புத்த தேவதாநிவாஸமான கன்குடம் காலினாலே உதைக்கப்பட்டது" என்பதாம்.

புத்தர்கள், கள்குடத்தை வைத்து தாராதேவியை வஸ்யம் செய்து குடத்தில் நிவாஸமாக அமைத்து, அத்தேவியின் சகாயத்தினால் வாதம்செய்ய, அகளங்க ஸ்வாமி ஒருக்ஷணநேரமும் என் எதிரில் நின்று வாதம் செய்வதற்கு சாமர்த்திய மில்லாத இந்தப்புத்த குரு என்னுடன் எட்டு நாளாக வாதம் செய்கிறார் என்னும் விசாரத்திலிருக்க, அன்றிரவு ஸ்ரீ தர்மதேவி அம்மன் பிரத்தியக்ஷமாய், "ஹே அகளங்கதேவா! உன்னுடன் வாதம் பண்ணுகிறவள் குடத்திற்குள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் புத்தரது தாராதேவியாகும்; அவளே திரைக்குள்ளிருந்து உன்னைக்கேள்வி கேட்கிறாள்; அக்கேள்வியை மறுமுறை சொல்லும்படிகேள்; அவள் மௌனமாகவிருப்பாள்; ஏனெனின், சாமான்யதேவதைகள் ஒருமுறை சொன்னதை மறுமுறை சொல்வதற்கு சமர்த்துள்ளவைகளல்ல" என்று சொல்லித்தனதிட மடைந்தது. அதைக்கேட்டு அகளங்கர் மறுநாள் இராஜசபையை யடைந்து, "இன்றோடு இந்த வாதத்தை முடித்து விடுகிறே"னென்று சொன்னார். அவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கையில் படுதாவிற்குள்ளிருந்து பிரஸ்னையுண்டாயிற்று. அகளங்கர் "இப்போது சொன்னதை மறுமுறை சொல்" என்றார். பதில் கிடைக்கவில்லை. அதனால் அகளங்கர் படுதாவை அறுத்துக் குடத்தைக்காலினால் உடைத்துஉதைத்துத்தள்ள தேவதைவிலகிவிட்டது. பிறகு புத்தகுரு முதலானவர்கள் வாதஞ் செய்யமுடியாமல் தோற்றார்கள். புத்தர்கள் தோல்வியடைந்ததைப் பார்த்து ஹிமசீதள மகாராஜன் அவர்களைத் தன்தேசத்தினின்றும் துரத்திவிட அவர்கள் தேசாந்தரம் ஓடிப்போய் விட்டார்கள்.

புத்தர் அவதாரம் செய்தபிறகு பலஜைந க்ஷத்திரியர்களும், பிரஜைகளும் புத்தசமயத்தை அனுஷ்டித்து வந்தவர்களாயிருந்தும், அகளங்கதேவர் வாதத்தின்பயனால் ஹிமசீதள மகாராஜன் முதல் சிலபுத்தர்களும் ஜைநசமயதர்மானுஷ்டானத்தைக் கைக்கொண்டனர். அகளங்கர் பலதேசங்களுக்கும் சென்று ஜைநமததாந்துபியை முழக்கியுள்ளார். ( அப்பர், திருஞானசம்பந்தர் ஆகியவர்களின்

காலத்திற்குப் பிறகு) இவர்காலத்தில் ஜைநமதம் பிரகாசத்திற்கு வந்திருக்கிறது. ஆயினும் சுமந்தான் கலைபத்து என்பது கடந்த பிறகு ஜைநமதம் குறைந்துவிட்டதென்பது விளங்குகிறது.

அகளங்கரைப்பற்றி ஸ்ரவணபெளிகுளம் ஸாஸனத்தின் 64-ம் நெம்பரில் அகளங்கர் த்ரைவித்யதேவர் என்பது வரையப்பட்டுள்ளது.

***(இதனால் இவர் வியாகரணம், தர்க்கம். தத்துவம் ஆகியனவைகளில் நிபுணர் என்பது விளக்கமாகிறது.)***

இன்னும் 67. நெ. ஸாஸனத்தில் அகளங்கர், புத்தர்கள் மண்குடத்தில் தாராதேவியை வஸ்யம் செய்திருந்ததை வெளிப்படுத்தி ஜெயமடைந்தவர் என்பதும், 127. நெ. ஸாஸனத்தில் ஆறுவித தர்க்க சாஸ்திரங்களில் வல்லமையுடையவர் என்பதும் கூறப்பட்டிருக்கின்றன.

***(இவற்றால் அகளங்கர் ஷண்மத தர்க்க சாஸ்திரங்களை நன்கு கற்றுணர்ந்தவரென்பது தெளிவாகிறது.)***

258. நெ. ஸாஸனத்தில் பூஜ்ஜியபாத ஆசாரியருக்குப் பின்னிட்டு முனிகளுக்குத் தலைவராக அகளங்கர் தோன்றினார்; மித்யாத்வமென்கிற இருளை நீக்கி உண்மையை உலகத்தில் பிரகாசிக்கச் செய்தார் என்பவைகளும் வரையப்பட்டுள்ளன.

***(கி. பி. 8. வது நூற்றாண்டில் இம்மாமுனிவர் புத்த காலேஜியில் புனதகை நகரத்தில் வாசித்தவர் என்று வில்சன்துரை கூறியுள்ளார்.)***

இன்னும் அகளங்கர் கியாதியைப்பற்றிய விஷயங்கள் பல ஷெடி ஸாஸனங்களில் கூறப்பட்டுள்ளன; அவற்றை இங்கு எழுதிற் பெருகுமென விடுத்தனம்.

அகளங்க தேவரால் இயற்றப்பட்ட கிரந்தங்கள்: சூர்ணி, மஹாசூர்ணி, சூளிகா, ராஜவார்த்திகம், அஷ்டாஸதி, நியாய விநிச்சயாலங்காரம், அகளங்காஷ்டகம் முதலானவைகள்.

இன்னும் 67. செ. ஸாஸனத்தில் இந்திரநந்திமுனிவருக்கு, "பாவாதிமல்லர்" என்னும் பெயர் வரையப்பட்டுள்ளது. பிறருடைய கொள்கைகளை வாதம் செய்து ஜெயித்தவர் என்பது இதன் கருத்து. இவ்வாறே அஜிதசேனருக்கு வாதிப சிம்மரென்ற பெயரும், புஷ்பசேனருக்கு பாவாதிமல்லரென்ற பெயரும் வரையப்பட்டுள்ளன. ஆதலின், புறமதத்தை ஜெயித்த ஜைநமகாமுனிவர்கள் அநேகர் இருந்திருக்கிறார்களென்பது ஸாஸனங்களாலும், சாஸ்திரங்களாலும் விளக்கமாகின்றது.

இன்னும் ஜைந (சமண) முனிவர்களைப்பற்றி,

"ஜோஇஸ வெஂஜ மஂதொ ஜீவண வாய வஂஸ வவஹாரஂ |
தண்ணதாஂண படிஂகஹணஂ ஸமணாணஂ தூஸணஂ ஹோஇ ||"

என்று ரயணஸாரம் 95-வது சுலோகம் கூறுகின்றது.

**இ - ள்: "ஜோஸ்யம், வைத்தியம், சூன்னிய முதலிய மந்திரவாதங்கள், தாதுவாதங்கள், க்ஷுத்ர தேவதையை வஸ்யம் பண்ணுதல், தனதானிய பரிக்கிரகங்கள் ஆகிய விவகாரம் பண்ணப்பட்ட மனதையுடைய முனிவர்களுக்கு தூஷணம் உண்டாகும்" என்பதாம்.**

ஜோஸியம், வைத்தியம், மந்திரவாதம், க்ஷுத்ர தேவதை வஸ்யம் முதலியவைகளுக்குமுற்றுந்துறந்த முனிவர்கள் உடன்படமாட்டார்கள் என்பது இதன் கருத்து.

இவ்வாறிருக்க சாஸ்திரங்களைக் கொண்டு தர்க்கம் செய்து ஜெயிக்கும் தன்மையுடைய சமணர்கள் திருஞானசம்பந்தரிடம்மந்திரவாதம், அனல்வாதம், புனல்வாத முதலியவைகள் செய்துதோற்றார்களென்று பெரியபுராணத்தில் கூறுகின்றது. இவ்விதம் கூறுவது கல்பனையேயாம். எவ்விதமெனின் மேல்கண்ட சுலோகத்தால் சமணர் வைத்தியம், மந்திரவாத முதலியவைகளுக்கு உடன்பட மாட்டார்களென்பது விளங்கும். நவிர திருஞானசம்பந்தரே தமது தேவாரத்தில் சமணர் தர்க்க சாஸ்திர முடையவரென்று விளக்கியுள்ளார்.

அதாவது,

"தடுக்கமருஞ் சமணரொடு தர்க்க சாத்திரத் தவர்சொல்
இடுக்கண் வருமொழி கேளாதீசனை யேத்துமின்கள்"

என்று 1-வது திருமுறை திருக்கோளிலி பதிகத்திலும்,

"சாவாயும் வாதுசெய் § சாவகர் † சாக்கியர்
மேவாத சொல்லவை கேட்டு வெகுளேன்மின்"

என்று 2-வது திருமுறை சீகாழி பதிகத்திலும் கூறியுள்ளார்.

இவ்விதம் சமணர்கள் தர்க்க சாத்திரத்தையுடையவரென்றும் அவர்கள்சொல்லால்துன்பம் வருமென்றும் அவர்கள்மொழிகேளாது ஈசனைப்போற்றுமின்க ளென்றும் அவர்சாமளவும் வாதம் செய்பவரென்றும் திருஞானசம்பந்தர்கூறியதற்குப் பெரியபுராணத்தில் கூறுவதுமுரண்பாடுடையதா யிருத்தலால் கல்பனை யென்பதற்கு திருஞானசம்பந்தர் கூறியுள்ள தேவாரங்களே போதுமான சான்றாகும்.

சங்கரர் 72-மதங்களுடன் சமணமதத்தையும் கண்டித்து ஷண்மதஸ்தாபனம் செய்தாரென்று சங்கரர் சரித்திரம் கூறுகிறது. ஜைநசமயத்தில், இல்லறம், துறவறம், ஜீவாதிதத்துவம், மோக்ஷத்தைப்பற்றிய தத்துவங்கள், மோக்ஷத்தில் பிரம்மஸ்வரூபமுள்ள கடவுள் ஆகியவைகளைப்பற்றிக் கூறுமவற்றைவிட சங்கரர் தம் மதத்தில் எவ்வித ஸ்ரேஷ்டமுள்ள பதார்த்தத்தைச் சொல்லி கண்டித்தா ரென்பது விளங்கவில்லை.

பன்னிரண்டாயிரம் சமண முனிவர்கள் இராமாநுஜரைக் கேட்டகேள்விக்கு, அவர், திரைக்குள் ஆயிரம் தலையுள்ள சர்ப்பமாகத்தம்மை நிர்மித்துக் கொண்டிருந்து, ஒரு முறையில் பதிலளித்து ஜெயித்தாராம்! இது இராமாநுஜர் சரித்திரத்தில் கூறப்படுகிறது. 1000-தலையுள்ள சர்ப்பமாக சிருஷ்டித்துக்கொண்டு பதிலளிக்கும் சாமர்த்திய முடையவர் தமது இயற்கை யாகவுள்ளமனிதஸ்வரூபத்துடன் ஏன் பதிலளிக்கக் கூடாது? தர்க்கம் செய்வதானால் 12-ஆயிரம் முனிவர்களா ஏககாலத்தில் கேள்வி கேட்பார்கள்? இவைகள் என்ன விசித்திரம் அறிஞரே! உற்று நோக்குங்கள்.

§ சாவகர்-சமணர்களில் இல்லறத்தார். † சாக்கியர்-புத்தர்கள்.

இக்காரணங்களைக்கொண்டு, திருஞானசம்பந்தர், சங்கரர், இராமானுஜாசாரியர் முதலானவர்கள் ஜைநமுனிவர்களிடம் தர்க்கம் செய்து ஜெயித்தார்களென்று கூறும் கூற்றுக்கள் முழுமோசமென்பதற்கையமேயில்லை.

இராமானுஜாசாரியர் ஜைந அரசனாகிய பெட்டவர்த்தனன் (பிட்டிதேவன்) வைப்பாட்டியைக்கொண்டு பல சூழ்ச்சிகள் செய்து வைணவசமயத்தில் சேரும்படி செய்வித்திருக்கிறார். இதற்குச் சான்று ஜைநசமயத்தில் கன்னடபாஷையில் சாஸ்திரமுள்ளது.

அப்பர், சம்பந்தர், ஆகியவர்கள்தேவாரங்களிலும், சங்கரர், இராமானுஜர் இவர்களின்சரித்திரங்களிலும், நாலாயிரப்பிரபந்தம், பெரிய புராணம், திருவிளையாடற்புராணம் ஆகியவைகளிலும், சமணர்களைப் பற்றிப் பலவாறு நிந்தித்திருப்பதைப்பற்றியும், சமணசமயத்திற்குப் பொருத்தமற்ற விஷயங்களை கூறுமவற்றைப்பற்றியும், மறுப்பெழுதுவது பயனற்றதெனவும் ஜைநசமயத்தின் உண்மைப்பொருள்களை வெளியாக்குவது ஆத்மனுக்கு ஹிதத்தை உண்டுபண்ணுமென்பதும் எமது கருத்தாம்.

மேல் எடுத்துக்காட்டிய பல விஷயங்களால் ஜைநசமயம் அநாதியென்பதும், இச்சமயம் பலவிதத்திலும் உயர்ச்சி பெற்றிருந்ததென்பதும், ஆதிகாலமுதல் தமிழ்தேசமுதலான 56-தேசங்களிலும் அந்தரத்வீபங்களிலும் (கடல் மத்தியிலுள்ளவை) நிறைந்திருந்ததென்பதும், எல்லாச் சமயங்களுக்கும் ஜைநசமயம் ஆதியென்பதும் ஜைநசமயத்திலிருந்தே மற்ற சமயங்களெல்லாம் காலதோஷத்தால் பிரிந்தனவென்பதும், பரத சக்கிரவர்த்தி தாம்கண்ட 16-சுவப்னங்களில் யானையின் மிசை குரங்கு ஏறிக்கொண்டிருந்ததை சுவப்னத்தில்கண்டதால் பிராசீன (ஜைந) க்ஷத்திரியர்கள் வம்ஸம் நாஸமடையுமென்று மேல்காட்டியதற்கிணங்க நாசமடைந்ததென்பதும், தனியே திரிகின்றதொரு சிம்மக்குட்டியின்பின் மிருகங்கள் சென்றதைக்கண்டதால்மகாவீரர்காலத்தில் பாஷண்டிகள் எங்கும்பரவிமிகவும்தோன்றுவார்களென்று மேற்கூறியதற்கிணங்க அவர்கள் தோன்றினார்களென்பதும், ஆதிபகவான் அருளியதற்கிணங்க மேல்கண்ட மித்தியாபிராம்மணர்கள், அப்பர் ஆகியவர்கள் ஜைநசமயபாமரஇராஜாக்களை அச்சமயத்தினின்றும் பிரஷ்டராக்கித் தங்கள் சுவாதீனம்

செய்துகொண்டு ஜைநர்களை துன்பம்செய்ததினாலும்; ஆசாரத்தினாலும் மோக்ஷமுண்டு, ஞானத்தினாலே மோக்ஷமுண்டு, அதுவுமன்றி இறைவன்மேலுண்டாகிய பக்தியினாலேயும் மோக்ஷமுண்டு, அதுவுமல்லாமல் இல்லறத்திலேயே மோக்ஷமுண்டென்று கூறியதனாலும் அவர்களுடைய சொற்கிணங்கி பல ஜைநர்கள். நற்காக்ஷி, நன்ஞானம், நல்லொழுக்கம் ஆகிய மும்மணிகளை ஒருங்கே அநுஷ்டித்தால்தான் மோக்ஷமடைதல்கூடும், இல்லறத்தில் மோக்ஷம் கிடைக்காது என்று கூறும் ஜைநசமய உண்மைத்தத்துவங்களைக் காலதோஷத்தால் நழுவவிட்டு மித்யாத்வத்தினை எய்தி ஜாதிப்பிரஷ்டராக மெய்யாகிய ஜைநமதம் மூன்றாம் பிறைபோன்று மழுங்கி ஜைநர் எண்ணிக்கை குறைந்துபோக, பொய்யாகிய சைவம், வைணவம் முதலிய பல சமயங்கள் பூர்ணசந்திரன் போன்று மிகவும் விருத்தியடைந்து எங்கும் பிரகாசமாகத் தோன்றின வென்பதும் விளங்கும். இன்னும் இவை, அந்தந்த சமயசாஸ்திரங்களாலும் தெற்றென விளக்கமாகும்.

இவற்றை யெல்லாம் இந்த உண்மை வரலாற்றினால் நன்கு உணர்தல்கூடும். யான் இந்நூலைக்கொண்டு ஜைநசமயத்தைப்பற்றிப் புகழ்ந்து கூறவந்தவனல்லன்; திருக்குறள் ஆராய்ச்சியுடன் ஜைநசமயத்தின் உண்மைவரலாற்றை அறியாதார் தெரிந்துகொள்ளும்பொருட்டு இவற்றை வரைந்தேனேயன்றி வேறில்லை. ஆதலின், இவ்வரலாற்றைக்கொண்டு இந்த ஆராய்ச்சி நூலில் நாம் சொல்லியிருப்பன வெல்லாம் சத்தியமுள்ளவை யென்பதை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

ஸ்ரீ ஜிநாயநம:

ஸ்ரீ தர்மதேவி சகாயம்.

# திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைநசமய சித்தாந்த விளக்கமும்.

ஜைநமதமானது புராதீன ஓர் உயரிய மதமென்பது உலகறிந்தவிஷயம்; இதன் உண்மை உணராதார் சிலர் இம்மதக்கொள்கைகளையும், திருக்குறள் முதலிய ஜைந நூல்களையும், சரித்திரங்களையும் புரட்டி மனம்போனவாறே பல மாறுபாடுகளைச்செய்து வருகின்றனர். ஆதலின் அவற்றை நீக்கி உண்மையை ஸ்தாபிக்க இதனடியில் இரண்டு பகுப்பான நூல்களை வெளியிடுகின்றேன். அவற்றை நன்கு ஆராய்வார்க்கு அவ்வேறுபாடுகள் ஒழிந்து ஜைநமத உண்மைத்தத்துவம் தெள்ளிதில் விளங்கும்.

---

**1868-ம் வருஷம், "ஹெறச், பவர்" என்பவர்**

**ஜீவகசிந்தாமணி நாமகள் இலம்பகம் வரையில்**

அச்சிட்டு வெளிப்படுத்திய புத்தகத்தின்

முகவுரையில் எழுதிய

## ஜைநசமய சித்தாந்தம்.

ஜைநசமயத்தார், ஆதிகாலத்திலே இந்த உலகத்தில் ஜைந சமயம் ஒன்றே அநாதியாயிருந்த சமயம் என்றும், மற்றச் சமயங்களெல்லாம் இதிலிருந்தே உண்டானவையென்றும், இந்தச் சமயத்தில் தானே நன்றாய்க் கற்றுணர்ந்த கல்விமான்கள் கால தோஷத்தினாலே அநேக சமயங்களை உண்டு பண்ணினார்களென்றும், மோட்சசுகம் இந்தச் சமயத்திலல்லாமல் மற்ற யாதொரு சமயத்திலுங் கிடையாதென்றும், உண்மையான சமயம் இது ஒன்றே என்றும், மற்றச் சமயங்களெல்லாம் பொய்யை மெய்யென்று நம்பின சமயங்களென்றும், உண்மையாய் நம்பியிருக்கிறார்கள்.

## உலகம்.

இந்த உலகம் அநாதியாய் நிலைபெற்றிருக்கிறதென்றும், ஒருகாலத்திலும் அழியாத நிலைமையை உடையதென்றும், கடவுள்முதலிய யாவராலும் உண்டாக்கப்பட்டதல்லவென்றும், நிச்சயமாய்ச் சொல்லுகிறார்கள். இதுவுமல்லாமல் இந்த உலகம் கீழுலகமென்றும், நடுவுலகமென்றும், மேல் உலகமென்றும் மூன்றாயிருக்கிறதென்றும்சொல்லுகிறார்கள். மேலும் இந்தஉலகத்தினுள் அடியிலே அதோகதியென்று பேருடைய ஒரு உலகமுண்டென்றும், அதற்குமேல் ஏழு நரகலோகமுண்டென்றும், அதற்குமேல் பத்துப் பவணலோகமுண்டென்றும், அதற்குமேல் இந்தமண்ணுலகம் உண்டென்றும், இதற்குமேல் சோதிலோக முண்டென்றும், வியந்தரலோகமும் வித்தியாதரலோகமுமாகிய இந்த இரண்டு உலகங்களும் இந்த மண்ணுலகத்திலேயே உண்டென்றும், மேலே பதினாறுவகைப்பட்ட தேவலோகமுண்டென்றும், அதன்மேல் அகமிந்திரலோகமுண்டென்றும், அதன்மேல் இந்த உலகங்களுக்கெல்லாம் கர்த்தாவாகிய அநாதிசித்த பரமேஷ்டியென்னப்பட்ட பராபரவஸ்து இருக்கப்பட்ட மோக்ஷ உலக முண்டென்றும் சொல்லுகிறார்கள்.

இந்த உலகம், பதினாலு கயிறு உயரமும், ஏழு கயிறு அகலமுமாயிருக்கிற தென்றும் நம்பியிருக்கிறார்கள். இந்தக் கயிற்றளவோவென்றால், மனிதர் புத்தியினால் கண்டறியப்பட்டதல்ல, ஞானிகளே அறியத்தக்கதென்பது தோன்றுகிறது. பூமியிலிருக்கிற சமுத்திரங்களும் தீவுகளும் மனிதர் புத்தியினாற்கண்டு கணக்கிடக்கூடாதன என்றும், பூமிநடுவிலே மகாமேரு பர்வத முண்டென்றும், அதற்குத் தென்புறமெல்லாம் பரதநாடு, வடபுறமெல்லாம் ஐராவதநாடு, கீழ்ப்புறமும் மேற் புறமும் விதேகநாடு என்னும் பேர்களால் வழங்கப்படுகின்றன என்றும் சொல்லுகிறார்கள். மகாமேருவுக்கு இரண்டு பக்கத்திலும் மூன்றுவித போக பூமிகளுண்டென்றும் சொல்லுகிறார்கள். இந்தப் போகபூமியில் பிறந்தமனிதர்களுக்கு ஆயுசும் சரீரவுயரமும் மிகவும் அதிகம்; மேற்கூறியநாடு மூன்றிலும் ஒரு நாட்டார் மற்றொரு நாட்டுக்குப் போகக்கூடாது; ஒரு நாட்டிற் பகலாயிருக்கிற வேளையில் மற்றொருநாட்டில் இராத்திரி யாயிருக்கும்; விதேகநாட்டாருக்கு சரீரவுயரமும் ஆயுசும் அதிகம் என்றும் சொல்லுகிறார்கள்.

## கடவுள்.

ஜைநர்கள் அருகதேவனைத் தங்களுக்குப் பிரதானமான கடவுளாக எண்ணித் தொழுதுகொண்டு வருகிறார்கள். இந்தத் தேவனுக்கு ஜினனென்றும் பிரசித்தமான பேருண்டு. இந்தப் பேர்பற்றியே இவர்களுக்கு ஜைநர் என்று காரணப்பேர் வந்ததாம். இந்தத் தேவனுக்கு ஆயிரத்தெட்டுத் திரு நாமங்களுமுண்டு. இவர், உலகமூன்றும் தொழுது வணங்கும்படியான பெருமையினையுடையவர். உயிருள்ள பொருள்களையும், உயிரில்லாத பொருள்களையும், நினைத்தவைகளையும், நினைப்பவைகளையும், உலகங்களையும், உலகமல்லாத பிரதேசத்தையும், யாவையுமொருங்கே அறியும் படியான மகத்துவமுடையவர். எவ்வகைப்பட்ட சீவகோடிகளும் தங்கள் தங்கள் பாஷைகளில் அறிந்துகொள்ளும் படியாக ஒரே சமயத்திலே, மனோவாக் காயங்களின் சம்பந்தமின்றிக் கருணையுடன் சுபப்பிரயோசனத்தைக் கருதாமல் தர்மோபதேசஞ் செய்தருளும் வல்லமை யுள்ளவர். ஒன்றை உண்டாக்குவதும் ஒன்றை இரட்சிப்பதுமான செய்கையில்லாதவர். ஜனனமரணமில்லாதவர். எல்லா உயிர்கள்மேலும் மிகுந்த கிருபையையும் அன்பையும் இரக்கத்தையுமுடையவர். முடிவில்லாத ஞானத்தையுடையவர்; முடிவில்லாத காட்சியையுடையவர்; முடிவில்லாத பலத்தினையுடையவர், முடிவில்லாத சுகத்தினையுடையவர். இந்த உலகத்தில் ஆதியிலே எல்லா உயிர்களுக்கும் இன்பத்தையுண்டு பண்ணும்படியாக அநாதியான வேதங்கள் பன்னிரண்டையும் வெளிப்படுத்தினவர். மூன்றுகுடையினையுடையவர். ஆதியந்தமில்லாதவர். மூன்று தர்மசக்கரமுடையவர். அசோகமரத்தி னிழலின்கீழமர்ந் தருளிய நான்கு திருமுகங்களையுடையவர். கருமங்கள் நூற்று நாற்பத்தெட்டையு மொழித்தவர். தம்மைப்போலவே வேதமும், உலகமும், காலமும், உயிர்களும், கர்மமும், தர்மமும் என்றென்றைக்கும் அழியாமல் நித்தியமாயிருக்கப்பட்ட பொருள்களென்று அறிவித்தவர்.

இந்த அருகதேவரானவர் தம்மையல்லாமல் வேறே தெய்வமில்லையென்றும், தம்மைத்தொழுது வணங்கினவர்களெல்லாரும் முத்தி சுகமடைவார்களென்றும், தம்மைத் தொழாதவர்களுக்கெல்லாம் முத்திசுகமில்லையென்றும், எல்லாவுயிர்களும் தாஞ் செய்த நல்வினை தீவினைப் பயன்களைத் தாமே அனுபவிக்குமென்

றும், பாவமிகுதியால் நரகம் புகுமென்றும், புண்ணியமிகுதியால் தெய்வலோகம் புகுமென்றும், புண்ணியபாவமிரண்டுங் கலந்தவிடத்து மனிதசென்மத்தை அடையுமென்றும், பாவத்தினுல் விலங்கு ஜனனமெடுக்குமென்றும், புண்ணியமும் பாவமுமிரண்டும் நாசமாய்ப் போனவிடத்து மோட்சம் அடையுமென்றும், திருவுளம் பற்றியருளினுராதலால், இதுவே உண்மையான தத்துவமென்று இந்தச் சமயத்தார் மிகவும் உறுதியாய் நம்பியிருக்கிறுர்கள். மற்ற எல்லாச் சமயங்களும் அவற்றின் தத்துவங்களும் இடையே ஒருவராலாக்கப்பட்டமையால் அவையெல்லாம்பொய்ச் சமயங்களென்று மிகவும் நிச்சயமாய்த் துணிந்துமிருக்கிறுர்கள்.

## இந்தச் சமயம் அநாதியாயிருந்த தென்பதற்கு வரலாறு.

காலம் நித்தியமாகையால் அழியாமலிருக்கும் இயல்பினையுடையதாகி, உச்சற்பிணியென்றும் அவசற்பிணியென்றும் இருவகைப்படும். இவற்றுள் அவசற்பிணிகாலம், நன்னற்காலம், நற்காலம், நற்றீக்காலம், தீநற்காலம், தீக்காலம், தீத்தீக்காலம் என்று சொல்லப்பட்ட ஆறுவகையினையுடையது. இப்படியே உச்சற்பிணிகாலமும் இந்த ஆறுவகையினைக்கீழ்மேலாகவுடையது; இந்த உச்சற்பிணிகாலம் தீத்தீக்காலந்தொடங்கி நடக்கும். இந்தக்காலத்தில் மனிதர்களுக்கு ஆயுஷ்யமும் சரீரவுயர்வும் சுக்கிலபட்சத்துச் சந்திரனைப்போல வளர்ந்துகொண்டேவரும்; அவசற்பிணிகாலத்திலோவெனில், நன்னற்காலந்தொடங்கி நடக்கும்; இந்தக்காலத்தில் மனிதர்களுக்குச் சரீரவுயர்வும், ஆயுஷ்யமும் அபரபட்சத்துச் சந்திரனைப்போலக் குறைந்துவரும். உயர்வுங் குறைவும் ஆருயிரம் வில்லும் ஒரு முழமுமாகும். ஆயுஷ்யத்தில் உயர்வுங்குறைவும் மூன்றுபல்லமும் பதினைந்து வருடமுமாகும். இந்தப் பல்லத்தின் கணக்கு மனிதரால் கண்டறியப் படுவதல்ல. மேற்சொல்லியகாலம் ஆறிலே முதற்காலத்துக்கு நாலுகோடாகோடி கடல்வருஷம்; இரண்டாங்காலத்துக்கு மூன்றுகோடாகோடி கடல்வருஷம், மூன்ருங்காலத்துக்குஇரண்டுகோடாகோடி கடல்வருஷம்; நாலாங்காலத்துக்கு (42,000)வருஷங்குறைய ஒரு கோடாகோடிகடல்வருஷம்; அஞ்சாங்காலத்துக்கு (21,000) வருஷம்; ஆருங்காலத்துக்கு (21000) வருஷம். இந்தக் கடலின் கணக்கும் மனிதரால் கண்டறியப்படுவதல்ல. இப்பொழுது நடக்கிற

காலம் அஞ்சாங்காலமாகிய தீக்காலம். இந்த உச்சற்பிணி அவசற்பிணியிரண்டும் ஒருதரம் நடந்து முடிந்தவிடத்து இதனையோர் யுகமென்று அவர்கள்சொல்லுகிறார்கள். உச்சற்பிணியென்பதற்கு வளருங்காலமென்றும், அவசற்பிணியென்பதற்குக் குறையுங்காலமென்றும் அர்த்தமாம்.

இப்போது நடந்துவருகிறகாலம் அவசற்பிணிகாலமாகையால், முதல் மூன்றுகாலமும், இந்தப் பரதநாடும் ஐராவதநாடும் போகபூமியாயிருந்தன வென்றறியப்படும். அக்காலத்து மனிதர்களெல்லாரும் முன் சொன்னபடியே காலத்துக்குத் தகுந்த சரீர வுயர்வும் ஆயுஷ்யமுமுள்ளவர்கள். இவர்கள் பிறந்த நாற்பத்தொன்பது நாளைக்குள்ளாக நல்லயௌவன புருஷராகி, சகலகலாஞானமும், காலபலத்தினால் தாமே அறிந்துகொள்ளுவார்கள். மேலும் இந்த மூன்றுகாலத்திலும் சூரியசந்திரருடைய பிரகாசங் கிடையாது. கற்பகவிருட்சங்களின் பிரகாசத்தினாலும் பிரகாச ஹீனத்தாலும் இரவும்பகலுமுண்டாயின. இந்த மனிதர்கள் அந்தியகாலத்தில் தேவலோகம் போவார்கள்; நரகம்போவதேயில்லை. மேலும் இவர்களுக்கு வியாதியும், மலமூத்திரங்களும், சரீரமலங்களும், இவைமுதலாகியவற்றால் வரும் உபத்திரவங்களுமில்லை.

இவ்வண்ணமாய்ப் போக பூமியான பின்பு மூன்றாங்காலத்தில் எட்டிலொரு பங்கு காலமிருக்கப் பதினாலுமனுக்கள் தோன்றினார்கள். இந்த மனுக்களுடைய காலங்களில் சூரியசந்திரர் தோன்றினார்கள். நட்சத்திரங்களும், மேகங்களும், வருஷமாத வேறுபாடுகளும், அயனம், பட்சம், ருது, நாள், பகல், இரவு முதலான காலபேதங்களும், துஷ்டமிருகங்களாலுண்டாகிய உபத்திரவங்களை நீக்கிக்கொள்ளும் உபாயங்களும், ஆறுகளும், குளங்களும், ஏரிகளும், மலைகளும், சகல ஜீவனோபாயங்களும் உண்டாயின. மேற்கூறிய மனுக்களில் பதினான்காம் மனுவின்பேர் நாபிமகாராசா என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இந்த மனுவினுடைய காலத்திலே சனங்கள் நாபிக்கொடியோடே பிறந்தபடியால் நாபியென்னும் பேருண்டாயிற்று. இவருடைய காலத்தில் மேகங்கள் தோன்றி மழைபெய்தன. அப்போது மரங்களும் பயிர்களும் தோன்றின. பழங்களும், தானியங்களும், மனிதர் சாப்பிடுமுபாயங்களும், இந்தமனுவினாலே காட்டப்பட்டன. நூலினாலே வஸ்திரங்களை உண்டுபண்ணு முபாயங்களும், அவற்றை உடுத்

திக்கொள்ளு முபாயங்களும், புஷ்பமாலைகள் முதலானவைகளைச் சூடிக்கொள்ளு முபாயங்களும், சந்தனபரிமள வஸ்துக்கள் முதலானவைகளையும் ஆபரணங்களையும் அணிந்துகொள்ளு முபாயங்களும், இவை முதலாகிய சகல உபாயங்களும் காட்டப்பட்டன.

இந்த நாபிமகாராசாவைப் பிரமாவென்றும் ஜைனர்கள் சொல்லுகிறார்கள். இவருடைய மனைவி மருதேவியம்மாள். இவர் காலத்தில் விருஷப தீர்த்தங்கரர் என்று பேருடைய முதல் அவதார புருஷர் தோன்றினார். இவருக்குப் பிற்பாடு இருபத்து மூன்று தீர்த்தங்கரர்கள் இவரைப்போலவே அவதாரபுருஷர்களாய்ப் பிறந்தார்கள். இவர்கள்காலத்திலே சக்கரவர்த்திகள் பன்னிரண்டு பேர்களும், ஒன்பது பலதேவர்களும், ஒன்பது வாசுதேவர்களும், ஒன்பது பிரதிவாசுதேவர்களும், இந்த நாலாங்காலத்திலேதானே தோன்றினார்கள். இவர்கள் அறுபத்து மூவருக்குஞ் சலாகா புருஷரென்றும் பேருண்டு.

இந்தத் தீர்த்தங்கரர் இருபத்து நால்வரும் குருபதேசமில்லாமலே சகல கலா வல்லமையுமுடையவர்களாகியும், தேவர்களாலே செய்யப்பட்ட ஐந்து கலியாணங்களையுடையவர்களாகியும், நால்வகைப்பட்ட தேவராசிகளாலே எப்பொழுதும் பூசிக்கப்பட்ட பெருமையையுடையவர்களாகியும், பிறந்த பொழுதே மூன்று ஞானங்களையுடையவர்களாகியும், தங்கள்முயற்சிகளாலே சீவகோடிகள் நினைத்தவையெல்லாம் அறியும்படியான நாலாவது ஞானத்தையுடையவர்க ளாகியும், பிற்பாடு லோகாலோகங்களையெல்லாம் ஒரேசமயத்தில் அறியும்படியான கேவலஞானமென்று சொல்லப்பட்ட அஞ்சாவது ஞானத்தையுடையவர்களாகியும், தேவேந்திரர்களால் செய்யப்பட்ட சமவசரணமென்னும் பேருடைய கோவிலிலே சிங்காசனத்தின் பேரில் வீற்றிருந்து, மூன்று குடையினையும் அசோகமரத்தினையும் உடையவராகியும், தேவதேவர்களென்றும், சர்வத்தையும் அறிந்தவர்களென்றும், உலக மூன்றினுக்கும் கர்த்தர்களென்றும், எல்லாப்பாவங்களையும் நீக்கி மோட்சசுகத்தைக் கொடுப்பவர்களென்றும், எல்லா உயிர்களாலும் புகழ்ந்தேத்தப்பட்ட திவ்விய குணங்களையுடையவராகியும், ஆயிரத்தெட்டுத் திரு நாமங்களையுடையவர்களாகியும், ஆயிரத்தெட்டுத் திருமருக்களைத் தங்களுடைய திவ்விய தேகத்திலுடையவர்களாகியும், எல்லாவுயிர்கள்மேலும் மிகுந்த தயவும் அன்பும்

இரக்கமுமுடையவர்களாகியும், தேவலோகத்தாருக்கும், மண்ணுலகத்தாருக்கும், நாக லோகத்தாருக்கும், வியந்தர லோகத்தாருக்கும், சோதி லோகத்தாருக்கும், விலங்கு சீவன்களுக்கும், தங்கள் தங்கள் பாஷையிலே அறிந்துகொள்ளும்படியாகப் பன்னிரண்டு வேதங்களிலுள்ள சகலமான கொல்லாமைமுதலிய தர்மங்களை உபதேசித்தருளாநின்ற மகத்துவமுள்ளவர்களாகியும், ஞானமே திரு மேனியாக வுடையவர்களாகியும், அவதார மெடுத்து மோட்சானந்த சுகத்தை அநுபவித்துக் கொண்டிருக்கிற திவ்வியமான பரம அவதாரபுருஷராகையால், இந்தத் தீர்த்தங்கரர் இருபத்து நால்வரையும் இந்த அவசற்பிணி காலத்திலிருக்கிற கடவுட் டன்மைபொருந்திய அருக தேவராகிய சுவாமிகளென்று இந்த ஜைநர் முக்கியமாய் நம்பியிருக்கிறார்கள். இந்தத் தீர்த்தங்கரசுவாமிகளுக்குக் கோவில்களை உண்டாக்கி, இவர்களைப்போலச்சிலைகளினாலும், தாருக்களாலும், சுவர்ணங்களாலும், இரத்தினங்களாலும் விக்கிரகங்களை உண்டுபண்ணி, இந்த விக்கிரகங்களை அருக தேவராகப் பாவித்து, நித்திய பூசைகளும் விசேஷ பூசைகளும், திருவிழா முதலான உற்சவங்களும் நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

மேலும் இந்தச் சமயத்தில் பிராமணர்களும், இராசாக்களும், வைசியரும், சூத்திரர்களுமாகிய இந்த நால்வகை வர்ணத்தாரும் * விருஷப தீர்த்தங்கரருடைய காலத்தில்பரதேசுவரன் என்று சொல்லப்பட்ட முதற்சக்கரவர்த்தியினால் உண்டாக்கப்பட்டார்களென்று சொல்லுகிறார்கள்.

மேலும் முதல் தீர்த்தங்கரராகிய விருஷப சுவாமிகாலத்தில் சைவ சமய முண்டாயிற்றென்றும், அக்காலத்திலே தானே மரீசிகுமாரனென்று சொல்லப்பட்ட ஒரு மகாபுருஷனாலே கால தோஷத்தால் தொண்ணூற்றாறு பாஷண்டி மதங்களுண்டாக்கப்பட்டன என்றும், பதின்மூன்றாந் தீர்த்தங்கரராகிய விமல சுவாமி காலந்தொடங்கி வைஷ்ணவ சமயமுண்டாயிற்றென்றும், இருபத்து மூன்றாந் தீர்த்தங்கரராகிய பார்சுவநாத சுவாமிகாலத்தில் துலுக்கர்மத முண்டானதென்றும், இதுவல்லாமல் மூந்நூற்றறுபத்தாறு பொய்மதங்களுண்டாயினவென்றும்சொல்லுகிறார்கள்.

* விருஷபதீர்த்தங்கரரென்னும் ஆதிபகவானால் க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, மூன்றுவர்ணாசிரமமும், பரத சக்கிரவர்த்தியால் பிராம்மண வர்ணாசிரமமும் சிருஷ்டிக்கப் பட்டன.

மேலும் இருபதாந் தீர்த்தங்கரர் காலத்தில் மகாகாளாசுரனென்று சொல்லப்பட்ட ஒரு அசுரனாலே, காலதோஷத்தால் யாகங்களுண்டாக்கப்பட்டனவென்றும், இந்த யாகங்களுண்டான பின்பு, சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் கோவில்களுண்டாயினவென்றும் சொல்லுகிறார்கள்.

இதுவுமல்லாமல், இந்த இந்துதேசத்திலிருக்கப்பட்ட மற்றச் சமயத்தாரெல்லாரும் தொழப்பட்ட*சிவன், பிர்மா, விஷ்ணு, கணபதி, சுப்பிரமணியன் முதலாகிய தேவர்களெல்லாரும், முன் சொல்லப்பட்ட தீர்த்தங்கரருக்கு மிகுந்த பக்தர்களாயிருந்தார்களென்பது ஜைனவேதங்களிலே சொல்லப்பட்டிருக்கிறபடியால், இந்த ஜைனர்கள் இவர்களைத் தங்களுக்குத் தொழத்தகாத தெய்வங்களென்று நினையாமல், இவர்கள் அருகதேவனுடைய அடியார்களாகையால், இவர்களையும் தாங்கள் ஜைநசமயத்துத் தேவர்களென்றே பாவித்துப் பூசைகளும் ஆராதனைகளும் செய்துவருகிறார்கள்.

இவர்களுடைய கோவில்களும் விக்கிரகங்களும் எந்தக் கிராமங்களிலும் எந்தத்தேசங்களிலும் மண்ணின்கீழேயும் காணப்படுகிறபடியால், இவர்கள் வேதத்தில் சொல்லுகிறபடியே, இந்தச்சமயமே இந்துக்களுக்குள்ளே அநாதியாயிருந்ததென்பதை எளிதாய்க்கண்டறியலாம். மேலும் இந்த ஜைநவேதத்தை நன்றாயாராய்ச்சிசெய்யும்போது, அநேகவிஷயங்கள் மிகவும் நன்மையாய்க்காணப்படுகிறபடியாலும், எந்தெந்தத் தேசங்களிலும் இந்த ஜைநவிக்கிரகங்கள் காணப்படுகிறபடியாலும், எல்லாராலும் தொழப்பட்டதெய்வங்களெல்லாம் தங்கள் அருகதேவனுடைய பக்தர்களென்றே ஜைனர் நம்பியிருக்கிறபடியாலும், அருகதேவனால் கட்டளையிடப்பட்ட கட்டளைகளெல்லாம் எல்லாவுயிர்களுக்கும் நன்மையையே காண்பிக்கிறபடியினாலும், ஓரறிவுயிரைக்கூடக் கொல்லாமலிருக்கவேண்டுமென்றிருக்கப்பட்ட பெரிய கோட்பாட்டினாலும், அநேக சங்கதிகள் மனிதர் புத்திக்கு எட்டாதனவும் ஒருவித உபாயத்தாலும் அறியப்படக்கூடாதனவுமாயிருக்கிறபடியாலும், மற்றச் சமயங்களெல்லாம் தங்களாலேதானே காலதோஷத்தாலும் புத்தியீனத்தாலும் உண்டாக்கப்பட்டனவென்று அநேக திருஷ்டாந்தங்கள் இவர்கள் வேதத்திலும் அநுபோகத்திலுங் காண்கிறபடியினாலும், இன்னும் அநேக காரணங்களாலும், இந்தச் சமயம் அநாதியாயிருந்ததென்று தோன்றுகிறது.

---

* இதற்கு ஆதாரம் பின்னே சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தச் சமயத்தார் சுவேதாம்பரிகள் என்றும், திகம்பரிகளென்றும் இருவகைப்பட்டிருக்கிறார்கள். இந்த இருதிறத்தாருக்கும் வேதம் ஒன்றாயிருந்தும் சிலகாரியங்களில் மாத்திரம் ஒவ்வாத விகற்பத்தையுடையவர்களாயிருக்கிறார்கள். சுவேதாம்பரிகள் அநேகம் உட்பிரிவுகளை உடையவர்களாயிருக்கிறார்கள். திகம்பரிகளும் சில உட்பிரிவுகளையுடையவர்களாய்க் காணப்படுகிறார்கள்.

வடக்கே இந்தச் சமயத்தார் மிகவும் பிரபலமாயிருக்கிறார்கள். இவர்கள் நடக்கைகளும் ஆசாரங்களும் என்னவெனில், யாதொரு உயிரையுங்கொல்லாமலிருக்கிறதே மிகவும் பெரிதான தர்மமென்று நம்பியிருக்கிறார்கள்; பொய்சொல்லாமலிருப்பதும், ஒருத்தருடைய பொருள்களை அபகரிக்காமலிருப்பதும், ஒருவனுடைய ஸ்திரீயை விரும்பாமலிருப்பதும், தனம் தானியம் வீடு தோட்டம் பூமி வாகனம் உடுப்பு முதலான வஸ்துக்களில் மிதமான ஆசையுடைத்தாயிருப்பதும், ஆகிய இந்த நான்கு விரதங்களையும், மேற்கூறிய கொல்லாமையைப்போலவே பெரிதானவிரதங்களாகவுடையவர்களாயிருக்கிறார்கள்.

இராத்திரியில் சாப்பிடாமலிருப்பதையும், நீரைவடிகட்டிச் சாப்பிடுவதையும், மேலான தர்மமாகக் கைக்கொண்டிருக்கிறார்கள். இதுவுமல்லாமல் கள்ளைக்குடியாமலிருப்பதையும், தேனையுஞ் சாராயத்தையும் குடியாமலிருப்பதையும், தங்களுக்கு முக்கியமான விரதங்களென்று நம்பியிருக்கிறார்கள். அத்திக்காய், ஆலங்காய், அரசங்காய், கோளிக்காய், இலந்தைக்காய், புடலங்காய், சுரைக்காய், கஞ்சா, அபினி, வெங்காயம், பெருங்காயம், வெள்ளைப்பூண்டு, முள்ளங்கி, காளான் இவைமுதலானபொருள்களையும், மற்றும் அதிக விரையுள்ள பொருள்களையும் இறந்துபோகும்படியான இக்கட்டடைந்த இடத்திலும், சாப்பிடுவதற்கு மனதினாலே கூட நினைக்கமாட்டார்கள். யாதொரு மாமிசத்தையும் மறந்துங் கையினாலே தொடவுமாட்டார்கள்.

இன்னும் இவைமுதலான அநேக தர்மங்கள் இல்லறத்தார்களுக்கு உண்டு. இதனை விரித்து எழுதத்தொடங்கினால் அநேகம் புத்தகங்கள் வேண்டுமாதலால் சுருக்கிச் சொல்லுகிறதாவது யாதெனில் : இந்தப்பிரகாரமாகப் பதினெண்ணாயிரஞ் சீலாசாரங்களை நடத்திக்கொண்டு வருகிறார்களென்பதே. துறவறத்தார்

களுடைய தர்மமோவென்றால் எழுதுவதற்கும் அறிவதற்கும் மிகுந்த அவகாசம் வேண்டுமாதலால் எழுதப்படவில்லை. இல்லறத்திலே மோட்சமில்லையென்றும், துறவறத்திலேயே மோட்சமுண்டென்றும் இம்மதத்தினர் சொல்லுகிறார்கள். ஸ்திரீஜன்மத்தில் மோட்சமில்லையென்றும், விலங்குஜன்மத்திலும் தேவர்களிலும் நரகர்களிலும் சூத்திரர்களிலும் மோட்சமில்லையென்றும், நிச்சயமாய் நம்பியிருக்கிறார்கள். ஆனால் இந்த அஞ்சாங்காலத்திலும் ஆறாங்காலத்திலும் யாவருக்கும் மோட்சமில்லையென்று துணிந்திருக்கிறார்கள்; இதற்குக் காலமே காரணமென்று காண்பிக்கிறார்கள். எப்போதும் பூமியில் மூன்று குறைந்த ஒன்பது கோடி முனிவர்களிருக்கிறார்களென்றும் சொல்லுகிறார்கள்.

மேலும் இவர்களுடைய ஸ்தலங்களாகத் தெற்கே திருநறுங்கொண்டையென்றும், தீபங்கொடியென்றும், சிற்றாமூரென்றும், பெருமண்டூரென்றும், ராசமகேந்திர மென்றும்; மேற்கே காஞ்சிபுரமென்றும், திருப்பருத்திக்குன்றமென்றும், பெளிகுள மென்றும், மூடுபத்திரையென்றும், ஸ்ரீரங்கபட்டணமென்றும், கனககிரியென்றும், ரத்தினகிரியென்றும்; வடக்கே சம்மேதகிரியென்றும், விபுலாசலமென்றும், காசியென்றும், பாவாபுரியென்றும், சம்பாபுரியென்றும், ஊற்சயந்தகிரியென்றும், பட்ணாவென்றும், ஜெயபுரமென்றும், சோதிபுரமென்றும், டில்லியென்றும், கொல்லாபுரமென்றுஞ் சொல்லப்பட்ட பட்டணங்களும் மலைகளும் பிரசித்தமாயும், பிரபலமாயும், மிகவும் மகிமையுடையனவாயும் இருக்கின்றன.

இவர்களுடைய வேதங்கள் இக்காலத்தில் வழக்கமில்லாமலும், முற்காலத்திலும் உபதேசமூலமாயிருந்ததேயல்லாமல், புத்தகத்திலெழுதும் வழக்கமில்லாமலும் இருந்தபடியால், அந்த வேதங்கள் பன்னிரண்டிலுமுள்ள சில பொருள்கள்மாத்திரம் எடுத்துப் பிராகிருதபாஷையிலும் சமஸ்கிருதபாஷையிலும் முன்னிருந்த பெரியோர்களாகிய சன்னியாசிகளால் விளக்கப்பட்டும் பின்னோர்களாலே படித்துவரப்பட்டும் இருக்கின்றன. இப்போது வழங்கிவரும்படியான உண்மையுள்ள சாஸ்திர புத்தகங்கள் மகாபுராணம், திரிலோகசாரம், கோமடசாரம், பதார்த்தசாரம், ரத்தினகரண்டகம், தர்மபரீட்சை, சிந்தாமணி, சூடாமணி, மேருமந்தரபுராணம், நீலகேசிவாதம், அமரம், சாகடாயனம், நயசக்கரம்,

சப்தபங்கி, தவளம், விசயதவளம், மகாதவளம், சுபோதினி இவைமுதலாகியவைகளாம். தமிழில் சிந்தாமணி, சூளாமணி, நீலகேசிவாதம், மணிமேகலை, நாலடி, குறள், நிகண்டு, நன்னூல், மேருமந்தரபுராணம் இவைமுதலானபுத்தகங்கள்வழங்குகின்றன·

இவர்களுக்கு டில்லியிலும், கொல்லாபுரத்திலும், பெளிகுளத்திலும், பிரபலமான ஆசாரியமடங்களுண்டு. இவையல்லாமல் சுவேதாம்பரிகளுக்கும் அநேகம் ஆசாரியமடங்களுண்டென்று அவர்கள் சொல்லுகிறார்கள். இந்த ஆசாரியர்கள் மடாதிபதிகளாகையால் இவர்களுக்கு அநேகம் பிருதுகளும், அநேகம் பரிவாரங்களும், யானை பல்லக்கு முதலாகிய வாகனங்களும் உண்டாயிருக்கின்றன. மற்றச் சன்னியாசிகளுக்குக் கமண்டலமும், மயில் பிஞ்சமும் இருக்கின்றன. இவர்களுக்குள்ளே வேதங்களை வாசிக்கிறதற் குரியரானவர்கள் துறவறத்தாரேயொழிய இல்லறத்தார் வாசிப்பதற்குரியரல்லர் என்று ஜைநர்சொல்லுகிறார்கள்.

எல்லாவுயிர்களும் அநாதியான வேதத்திலே சொன்னபடி நடந்துவருவதற்காக வேதத்தை எல்லா உயிர்களுக்கும் அன்போடும் இரக்கத்தோடும் அருளிச் செய்ததே கடவுளினுடைய செயல் என்றும்; புண்ணிய பாவங்களைச் செய்வதும், அவற்றின் பயனை அநுபவிப்பதும் மோட்சத்தைப் பெறுவதும், நரகத்தை அடைவதும், உயிர்களுடைய செய லென்றும்; பாவத்தையொழிக்கவும் புண்ணியத்தை உண்டாக்கவும் உயிர்களுக்கேவல்லமையுண்டென்றும், இதுவே உறுதியான தத்துவமென்றும் நம்பியிருக்கிறார்கள்.

குறிப்பு:—8-ஆம்பக்கத்தில் கூறியபடி சிவன், சுப்பிரமணியர், விஷ்ணுமுதலானவர்கள் அருகக்கடவுளுக்கு அடியார்களென ஜைநர்களால் பூஜிக்கப்படுகிறார்களென்பதை இதனடியில் என்னால் எழுதப்பட்டிருக்கும் சுலோகங்களாலும் அவற்றின் கருத்துக்களாலும் உணரலாம்.

இங்ஙனம்,

காஞ்சீபுரம் தி· அநந்தநாத நயினார்.

[illegible]

[illegible]
[illegible] (1)

இ - ள்:—விருஷபதீர்த்தங்கரர் (ஆதிபகவான்); இவருக்குப்பிதாநாபி மனு; மாதாமருதேவி; ஜன்மஸ்தானம் அயோத்தி; உத்திராட நக்ஷத்திரம் ஜநனம்; உன்னதம் ஐந்நூறுவில்; தேகம் கனகவர்ணம். இவர்விருஷபலாஞ்சனத்தையுடையவர். வடவிருக்ஷத்தின்கீழ்கேவலஞானம்; மோக்ஷஸ்தானம்கைலாசபர்வதம்; கோமுகயக்ஷன், சக்ரேஸ்வரியக்ஷிசாஸனதேவதேவி சமேதரர். இப்பேர்ப்பட்டவராகிய விருஷபஸ்வாமிக்கு நமோஸ்து நமோஸ்து நமோஸ்து. எ - று.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

இ - ள்:—எருதுமுகம்போன்ற முகத்தையுடையவனும், மேலேதூக்கிய தனது இரண்டு கரங்களில் கோடாரியையும் ஜபமாலையையும், மற்ற இருகரங்களில் கத்தியையும் மாதளம்பழத்தையும், சிரவில் தர்மசக்ரத்தையும் தாங்கி எப்போதும் விருஷபதீர்த்தங்கரரின் பாதகமலங்களுக்கு வண்டுபோன்றவனுமான கோமுகயக்ஷனே பூஜிக்கின்றேன். எ - று.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] (2)

இ - ள்:—ஸ்ரேயாம்ஸநாதஸ்வாமிக்குப் பிதாவிஷ்ணுராஜன்; மாதாவைஷ்ணவீதேவி; ஜன்மஸ்தானம் சிம்மநாதபுரம்; ஜன்மநக்ஷத்திரம் ஸ்ரவணம், எண்பதுவில் உன்னதம்; தேகம்கனகவர்ணம். இவருக்கு கண்டவாஞ்சனம். கேவலஞானம் திந்துவிருக்ஷம். சன்மேதபர்வதம் முத்திஸ்தானம். இவர் ஈஸ்வரயக்ஷன். (கௌரி) பார்வதி யக்ஷிசாஸநதேவதேவி சமேதரர். இத்தகைய ஸ்ரேயாம்ஸபகவானுக்கு நமோஸ்து நமோஸ்து நமோஸ்து. எ - று.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

இ-ள்-:இடதுகையில் சூலந்தரித்தவரும்,தடிஜபமாலையுடையவரும், மூன்று நேத்திரங்களையுடையவரும், ஸ்ரேயாம்ஸ தீர்த்தங்கரருடைய சோபைவாய்ந்த பாதத்தில் வைக்கப்பட்ட மனதையுடையவருமான ஈஸ்வரன் என்கிறபெயரையுடைய யக்ஷனை திருப்தி செய்கிறேன். எ-று.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

இ-ள்:-பார்வதியுடன் கூடினவரும், எருதுவாகன முடையவரும், ஜடையையும் கிரீடத்தையும் சிரஸில்தரித்தவரும், சர்ப்பபூஷணாலங்கார சரீரமுடையவரும், கையில் சூலாயுதத்தையுடையவரும், கங்கையெனும் ஸ்திரீக்கு எஜமானருமான ஈஸ்வரதேவனே சணல், பால், அன்னம், ஆகிய இவைகளை கிரகித்துக்கொள்வீராக எ-று.

## பூஜைசெய்யும் மந்திரமுதலானவைகள்—

ஓ° ஆம், ஹ்ரீ° க்ரோம், ப்ரஸஸ்தவர்ண, ஸர்வலக்ஷண, ஸம்பூர்ண, ஸ்வாயுதவாஹந, வதுச்சின்ன, ஸபரிவாராஹெ, ஈஸ்வர யக்ஷதேவா, அத்ர, ஆகஸ்ச, ஆகஸ்ச ஸம்வெளஷடு, அத்ர திஷ்ட, திஷ்ட, டட, மமஸன்னிஹிதொ, பவபவ, வஷடு, ஸம் வெளஷடுசுவாஹா, ஓ° ஆம், ஹ்ரீ° க்ரோம் ஹே, ஈஸ்வரயக்ஷ தேவ, அர்க்யம், பாத்யம், கந்தம், அக்ஷதம், புஷ்பம், சரும்,தீபம், தூபம், பலம்,பலிம், வஸ்திரம்,ஆபரணம், தாம்பூலம், ஸ்வஸ்திகம், யக்ஞபாகம், யஜாமஹெ, ப்ரதிக்ரஹ்யதாம், ப்ரதிக்ரஹ்யதாமிதிஸ் வாஹா, என்பனவாம். இம்மாதிரியாக இருபத்துநான்கு தீர்த்தங் கரருக்கு உள்ள இருபத்து நான்கு யக்ஷன்யக்ஷிதேவ தேவிகளை ஷோடசோப சாரங்களால் பூஜிப்பதுண்டு.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

இ-ள்:-நான்குகைகளோடு பிரகாசிக்கின்றவனாயும், தாமரஸபுஷ்பம், கலசம், ஆகியவைகளைத்தரித்தவனாயும், மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்பவனாயும்,அநேகவிக்னங்களைத்வம் ஸம்செய்பவனாயும், ஸ்ரேயாம்ஸ தீர்த்தங்காருடைய சோபைபொருந்திய திருவடித்தாமரைக்குப் பெண்

வண்டு போன்றவளாயும் இருக்கின்ற கௌரியென்னும் பார்வதியக்ஷிதேவதையை பூஜிக்கின்றேன் எ-று.

மேல்சொன்னபடி ஓம் ஆம். ஹ்ரீம் க்ரோம். ஹெபார்வதி யக்ஷிதேவாயஎன்று ஷோடசோபசாரங்களால் பூஜிப்பதுண்டு.

[illegible] (3)

இ-ள்:—விமலதீர்த்தங்கரருக்குப் பிதா-கிருதவர்மா; மாதா-ஸுசர்மாதேவி; ஜன்மஸ்தானம்-காம்பில்யபட்டணம்; ஜன்மநக்ஷத்திரம்-உத்திராஷாடம்; அறுபதுவில் உன்னதம்; தேகம் ஸ்வர்ணவர்ணம்; பன்றிலாஞ்சனம்; கேவலஞானம் நாவல்விருக்ஷம்; சம்மேதபர்வதம் மோக்ஷஸ்தானம். இப்பேர்ப்பட்ட ஷண்முகயக்ஷன்வைரோடியக்ஷி சாஸனதேவதேவி சமேதராகிய விமலநாதபகவானுக்கு நமோஸ்து நமோஸ்து நமோஸ்து எ - று.

[illegible]
[illegible]

இ - ள்:—கிருதவர்மராஜனுக்கும் ஸுசர்மாதேவிக்கும் புத்திரரும், பன்றிதுவஜசகிதரும், வைரோடியக்ஷியினலும் ஷண்முகயக்ஷனலும் பூஜிக்கப்பட்டவருமான விமலதீர்த்தங்கர பரமதேவர் என்னல் பூஜிக்கப்படுகிறார். எ - று.

இன்னும் சீதளதீர்த்தங்கரருடைய யக்ஷனுகிய பிரம்மதேவர் ஐயனப்பனென்றும், பார்ஸ்வநாத தீர்த்தங்கரருடைய யக்ஷனுகிய தரணேந்திரன் ஆதிசேஷனென்றும் சொல்லப்படுவார்கள். இருபத்துநான்கு யக்ஷன்யக்ஷிகளின் விவரங்கள் எழுதுவதானல் வளருமென நந்திதேவர், ஈஸ்வரன், சுப்பிரமணியர், என்றுசொல்லப்பட்டவர்களைமாத்திரம் விளக்கியிருக்கின்றேன். மேல்கண்ட பூஜாகிரமங்களில் ஷோடசோபசாரங்களுக்குச் சமுதாயஸ்லோகங்களும், கந்தபுஷ்ப முதலானவைகளுக்குத் தனித்தனிஸ்லோகங்களும் சொல்லிப் பூஜிப்பதுண்டு.

* மேல்கண்ட 1-2-3-இலக்கம் கொடுத்துள்ள சுலோகங்கள் த்ரிஷஷ்டிஸலாகா புருஷபவாவளியென்னும் கன்னடநூல்களிலிருந்து மொழிபெயர்த்து எழுதப்பட்டவை; மற்றஸ்லோகங்கள் வடமொழிபூஜாங்கிரந்தத்தில்உள்ளன.

மகாவிஷ்ணுவானவர் ஸ்ரீராமலக்ஷ்மணராக அவதாரம் செய்தாரென்று வைணவபுராணங்கள் கூறுகின்றன. ஜைநசமயநூல் சனத்குமாரகல்பத்து ஸ்வர்ணசூளனென்னும்தேவன் ஸ்ரீராமராகவும், தத்கல்பத்து மணிசூளனென்னும்தேவன் இலக்ஷ்மணனாகவும் அவதரித்தனரென்று கூறுகின்றது. அவர்களில்ஸ்ரீராமர், கௌஸலாதேவிக்கும், லக்ஷ்மணர்கைகேயிக்கும், மற்றொருபத்தினிக்குப்பரதசத்ருக்கனுமாக ஜனித்தார்களென்பதும்,இவர்கள் ஜைநக்ஷத்திரியரென்பதும், இக்ஷ்வாகுவம்ஸத்தில் ஜனித்தவரென்பதும், ஜிநதீக்ஷையைப்பெற்றுத் தவஞ்செய்து ஸ்ரீராமர் முத்தியடைந்தாரென்பதும், சுக்ரீவன், அனுமகான், நளன், நீலன், மகாநீலன் இவர்களும் ஜிநதீக்ஷையைப்பெற்று இராமஸ்வாமியுடன் தவஞ்செய்து மோக்ஷமடைந்தனர் என்பதும், மகாபுராணம் ஸ்ரீபுராணம் இவைகளில் காணலாகும். இவர்கள் முத்தியடைந்தஸ்தானத்தை அடியிற்கண்ட கிரியாபுஸ்தகம் பரிநிர்வாணபக்தியின் சுலோகத்தால் உணரலாம்.

𑌰𑌾𑌮𑍋 𑌸𑍁𑌗𑍍𑌗𑍀𑌵 𑌹𑌣𑍁𑌓 𑌗𑌵𑌯 𑌗𑌵𑌕𑍍𑌖𑍋 𑌯 𑌣𑍀𑌲 𑌮𑌹𑌣𑍀𑌲𑍋
𑌣𑌵𑌣𑌵𑌦𑍀 𑌕𑍋𑌡𑍀𑌓 𑌤𑍁𑌂𑌗𑍀𑌗𑌿𑌰𑌿𑌣𑌿𑌵𑍍𑌵𑍁𑌦𑍇 𑌵𑌂𑌦𑍇 ॥

இ - ள்:— ஸ்ரீராமர், சுக்கிரீவன், அனுமகான், நளன், நீலன், மகாநீலன் ஆகிய இம்மகாபுருஷர்கள் துங்கியென்னும் பர்வதத்தின்மிசை பரிநிர்வாணமடைந்ததால் அவர்களை நமஸ்கரிக்கின்றேன் எ-று.

“அனுமகான்”என்னும் நாமம்,காரணப்பெயர்; அதாவது விஜயார்த்தபர்வத தக்ஷிணஸ்ரேணியில் வித்யுத்காந்தார நகராதிபதியாகிய பிரபஞ்சன நரபதிக்கும், அஞ்சனாதேவிக்கும் புத்திரன் அமிதவேகன். இவன், குலபரம்பரையாகவந்த சகலவித்தைகளிலும் அதிநிபுணனாகிய நிரவிசேஷவியாகரண சமுத்திரபாரங்கதனுமாயினன். ஒருநாள் சகலவித்தியாதர குமாரர் சமூகத்து,பரஸ்பரவித்தியா பிரபாவ பரீக்ஷணசமயத்து, இவன் விஜயார்த்த பர்வதசிகரதலத்துதக்ஷிணபாதத்தை நிறுத்தி, வாமபாதத்தை ஆதித்தியமண்டலத்துவைத்து விஜ்ரம்பிதமகாகாயத்தினை அப்பொழுதே அணுப்பிரமாணமாகப்பண்ணினன். இவனது இத்தகைய வித்தியாபிரபாவங்கண்டு விஸ்மிதராகிய வித்தியாதரகுமாரர்கள் இவனுக்கு அனுமகானென்று நாமங்கொடுத்தனர். அந்தக் காரணத்தினால்அமிதவேகனென்கிற நாமம்தவிர்ந்து அனுமகானென்கிறநாமம் வழங்கலாயிற்று. இந்த அனுமகான் குரங்குமுதலான பல ரூபங்கள் எடுக்கும் வித்தியா சக்தியுமுடையவன். வாலி,

சுக்ரீவனும் வித்தியாதரர்கள்; இராவண கும்பகர்ணாதிகளும் வித்தியாதரர்கள் என்பதும், அருகக்கடவுளின் பக்தர்கள் என்பதும் ஜைநசமயசித்தாந்தம். வைணவசமையத்தில் சொல்லுகிறபடி வாலி, சுக்ரீவன், ஹனுமான் முதலானவர்கள் குரங்குருபமுடையரல்லரென்பதும், இராவண கும்பகர்ணாதிகள் இராக்ஷசரல்லரென்பதும், ஸ்ரீராமர் மானைத்தொடர்ந்துபோனகாலத்தில் இராவணன் இராமஸ்வாமியைப்போல ரூபத்தை எடுத்துச் சீதையைக் கொண்டுபோனனென்பதும், இலக்ஷ்மணர்வாலியை சம்ஹாரம்செய்து பிறகுஇராவணனை சம்ஹாரம் செய்தாரென்பதும், ஸ்ரீராமர் இந்திரஜித்தைசம்ஹாரம் செய்தாரென்பதும்,பாண்டவர்களில் அர்ச்சுனன் ஒருவனுக்குத்தான் த்ரௌபதி பத்தினியென்பதும், ஜைநசமயசித்தாந்தம். இத்தன்மையாக ஜைந இராமாயண பாரதங்களுக்கும் வைணவ இராமாயணபாரதங்களுக்கும் பலவித்தியாசங்களுண்டு என்பதை இதனல் அறியலாம்.

இதுதவிர, மகாவிஷ்ணுவானவர் கிருஷ்ணஸ்வாமியாக அவதாரம் செய்தாரென்பது வைணவசித்தாந்தம்.

சமுத்திர விஜயமகாராஜன்முதல், வசுதேவர் பரியந்தம்பிராதாக்கள் பதின்மர். இவர்களில் கனிஷ்டனுகிய வசுதேவனுக்கும் தேவகிக்கும்,பத்தாவதாகிய மகாசுக்ரகல்பத்துதேவன்கிருஷ்ணஸ்வாமியென்னும்புத்திரனுக கம்ஸன்கிரஹத்தில் அவதரித்தவர்என்பதும், சமுத்திரவிஜய மகாராஜனுக்கும் சிவதேவிக்கும் புத்திரராகஇருபத்திரண்டாந் தீர்த்தங்கரராகிய நேமி ஸ்வாமியானவர் துவாரகையில் அவதரித்தார் என்பதும், இவர்கள் ஹரிவம்ஸத்தினர் என்பதும், இவர்களில் நேமிஸ்வாமி இளையவர்என்பதும், இவர்கள் ஜேஷ்டகனிஷ்டர்களின் புத்திரர்களாதலால் இருவரும் சகோதரர்களென்பதும் ஜைநசமய சித்தாந்தம்.

இவைதவிர, பாண்டவர்களும் ஜைநக்ஷத்திரியரென்பதும், குருவம்ஸத்தில் ஜனித்தவர்களென்பதும், இவர்களில் தருமர், பீமன், அர்ச்சுனன், மூவரும் ஜிநதீக்ஷையைப்பெற்று தவப்பிரபாவத்தால் முத்தியடைந்தனர் என்பதும், நகுல சகாதேவர் ஜிநதீக்ஷையைப்பெற்று தவப்பிரபாவத்தால் சர்வார்த்த சித்தியென்னும் அகமிந்திர கல்பத்தையடைந்தனர் என்பதும் ஜைநசமயசித்தாந்தத்தில் கூறப்பட்டிருக்கின்றன. தருமர், பீமன், அர்ச்சுனன் மூவரும் முத்தியடைந்த க்ஷேத்திரம் இன்னதென்பது கீழ்க்கண்ட கிரியாபுஸ்தகம் பரிநிர்வாணபக்தியின் சுலோகத்தால் விளங்கும்.

பஂசபாஸபா தா க்ஷிணிஜினா டிவிபணமிஂஷாண ஜகுகொடீஜ
ஸத்ருஂஜய கிரிவிஷஶெர ணிவாணமயா ணமொகெவிஂ॥

இ-ள்:-பாண்டுபுத்திரர்களாகிய, தருமர், பீமன், அர்ச்சுனன் மூவரும் எட்டுக்கோடி முனிவர்சகிதம் சத்ருஞ்சய பர்வதத்தின்மிசை பரிநிர்வாண மடைந்ததால் அவர்களை நமஸ்கரிக்கின்றேன்; எ-று.

நேமிதீர்த்தங்கரர், கிருஷ்ணஸ்வாமிஆகிய இவர்கள் சரித்திரங்கள் மகாபுராணத்திலும், ஸ்ரீபுராணத்திலும் சுருக்கமாயும், ஹரிவம்ஸபுராணத்தில் விரிவாயும் காணப்படுகின்றன. இன்னும் பாண்டவர்களின் சரித்திரத்தைப் பாண்டவபுராணத்தில் பரக்கக் காணலாம். இக்காலத்திலும் தெற்கு வடக்கு முதலான இடங்களிலுள்ள ஜைநர்கள், ஸ்ரீராமர், சுக்ரீவன், அனுமகான், நளன், நீலன், மகாநீலன், பாண்டவர்முதலானவர்கள் மோக்ஷமடைந்துதுங்கி பர்வதம், சத்ருஞ்சயகிரி முதலான புண்ணியக்ஷேத்திரங்களைத் தரிசனைசெய்து வருகின்றார்கள். பாண்டவர் முக்திபடைந்த ஸ்தானமாகிய சத்ருஞ்சயகிரி, பாலிடாணு சமஸ்தானத்தைச்சேர்ந்தது. ஸ்ரீராமர், அனுமகான், சுக்ரீவன், நளன், நீலன்முதலானவர்கள் முக்தியடைந்தஸ்தானமாகிய, துங்கி என்னும்பர்வதம், பம்பாய்ராஜ்ஜியத்தைச்சேர்ந்த வார்சிதாலூக்காவில் உள்ளது.

பரதன் முதலாகப் பன்னிரண்டு சக்கிரவர்த்திகளையும், ஸ்ரீராமர்முதலாக ஒன்பதுபலதேவரையும், லக்ஷ்மணர் கிருஷ்ணன்முதலாக ஒன்பது வாசுதேவரையும், இராவணன் ஜராசந்தன்முதலாக ஒன்பது பிரதிவாசுதேவரையும், நவநாரதர்களையும், ஏகாதஸருத்திரர்களையும் மகாபுண்ணியாஹ வாசனைமுதலான பலவிஷயங்களாலும், அர்ச்சனை செய்வதுமுண்டு. மேல்கண்டவர்களில் சிலர்ஆவி காலத்தில் தீர்த்தங்கரராக அவதாரம் செய்யப்போகின்றார்களென்பதை அடியில் கண்ட ஸ்லோகம் விளக்குவதாகும்:—

ஸத்தஷரி நவபவிஷரி வஉக்ஷக்ஷி வஸக்ஷபைஐஹஷெ।
ஷெணீ ஸத்கிவாஶெத்ரா ஸமேஂதபையூா வஉவீஷொ॥

இ-ள்:-லக்ஷ்மணர், கிருஷ்ணன் முதலாக ஏழு வாசுதேவர்களும், இராவணன், ஜராசந்தன் முதலாக ஒன்பது பிரதிவாசுதேவர்களும், நான்கு சக்கிரவர்த்திகளும், ஒருபலதேவரும், ஸ்ரேணிகமகாராஜன், ஈஸ்வரன், சமந்தபத்திரரும் ஆகிய இருபத்துநால்வரும் ஆவிகாலமாகிய உத்ஸர்ப்பிணிகாலத்தில் தீர்த்தங்கரராக அவதாரம் செய்யப்போகின்றமையால் இவர்களையும் பூஜிப்பதுண்டு; எ-று.

மேல்கண்ட காரணங்களால், இராமஸ்வாமி, கிருஷ்ணன் முதலானவர்கள் ஜைநர்களாதலின், இக்காலத்திலும் ஜைநர்கள், இராமஸ்வாமி நயினர், இராமநாதநயினர், இராமச்சந்திரநயினர், கிருஷ்ணஸ்வாமிநயினர், பலதேவநயினர், வாசுதேவநயினர், கைலாசநாதநயினர் என்பவைமுதலான பெயர்களைவைத்து வழங்கி வருகின்றனர். இது அநேக நண்பர்கள் நன்கு அறிந்த விஷயம்.

தேவதாஶ்சதுர்பேதைர்தேவை: ப்ரோக்தாஸ்ததேவதா:।
ஸத்க்ரியா தேவதாஶ்சைவ தேவதா குலதேவதா॥

இ - ள்:–தேவதைகள் நான்கு பேதங்களாகச் சொல்லப்படுகின்றன; அவை நித்தியதேவதைகள், சத்காரதேவதைகள், கிரகதேவதைகள், குல தேவதைகள் என்பனவாம்; எ - று.

அர்ஹத்ஸித்தாதயோதேவா நித்யதே பஞ்சதாஶ்ரிதா:।
சக்ராதபத்ரத்ரயமாஹுர் ஜ்யோதிர்யா ஸ்தா॥

இ - ள்:–முந்தின நித்திய தேவதைகள் அருகசித்தர் முதலான ஐந்துபேதங்களாகவகுக்கப்பட்டிருக்கின்றன; மற்றைய சத்காரதேவதைகள் தர்மசக்ரமும், ஸ்வேதசத்ரத்ரயமும் (முக்குடையும்), கார்கத்பத்தியம், ஆஹவநீயம், தக்ஷிணாக்னியும் ஆகிய மூன்றுவிதமாகமதிக்கப்படும்; எ-று.

விஶ்வேஶ்வரீ வைஶ்ரவணோ யக்ஷேந்த்ரஶ்ச தஸ்வரா:।
ஸ்ரீதேவதாவிஶேஷ்யா சதுர்த்தா க்ருஹதேவதா॥

இ - ள்:–கிரகதேவதைகள் விஸ்வேஸ்வரியும், வைஸ்ரவணனும், பிற்பாடு தாணேந்திரனும், உத்கிருஷ்டமான ஸ்ரீதேவதையும் என நான்குவிதமாக அறியப்படுவார்கள்; எ – று.

ஸம்ப்ரவர்த்தாதநேமிஷா யாவஶாஸந தேவதா।
சக்ரிணீ ஜ்வாலினீ பத்மா ந்யாத்யாஸா குலதேவதா॥

இ - ள்:–சக்ரேஸ்வரியும், ஜ்வாலாமாலினியும், பத்மாவதியும் அர்தர்தவம்ஸத்திலே முன்னேயிருந்த பெரியோர்களாலேவாஞ்சித்து ஆராதிக்கப் பட்டார்கள். இவர்கள் முதலான சாஸனதேவதைகள் எத்தனைகளுண்டோ அந்தசாஸனதேவதைகள் குலதேவதைகளாவர்; எ - று.

பூஜ்யாதேவதாஸத்பி: ஸம்யக்த்வே முக்தி காரணம்।
ஸ்திதியாஸ்ருஷ்டே தமோஹே ஶாஸ்த்ரத்ருஷ்டி நீதிபி:॥

இ-ள்:–சத்புருஷர்களாலே,முந்தினவர்களான நித்திய தேவதைகள் (அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள்) மோக்ஷகாரண

மாக பூஜிக்கப்படுவார்கள்; மனுஷ்யர்களாலே பிந்தின சத்காரதேவதைகள் தர்மசக்ரம், சத்ரத்ரயம். அக்னித்ரயம் முதலானதேவதைகள் ஹோமத்திலே (சாந்திக) விக்னவிநாஸத்தின்பொருட்டும், (பௌஷ்டிக) சம்பத்துண்டாகும் நிமித்தமும் அர்ச்சிக்கப்படுகின்றன; எ - று.

𑌤𑌥𑌾 𑌶𑌾𑌸𑌨𑌦𑍇𑌵𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌪𑍂𑌜𑌿𑌤𑌾 𑌨𑍈𑌵 𑌵𑌿𑌘𑍍𑌨𑌕𑍃𑌤𑌃 ।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌹𑌾𑌨𑌾𑌮𑌨𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌯𑌦𑌿 𑌚𑍇𑌚𑍍𑌛𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑍇𑌵 𑌚 ॥

இ - ன்:—அப்படியே சாஸனதேவதைகளைப் பூஜித்த அளவில் விக்னங்களுக்கு உற்பத்தியில்லை; அவை உற்பத்தியானாலும் சாந்தியாகும்; எ - று.

𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌦𑌰𑌣𑌸𑌮𑍍𑌪𑍂𑌜𑌨𑌂 ।
𑌵𑍈𑌶𑍍𑌵𑌦𑍇𑌵𑌂 𑌸𑌦𑍈𑌵 𑌤𑌤𑍍 𑌗𑍃𑌹𑌿𑌣𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌯𑌸𑌮𑍍𑌮𑌤𑌂 ॥

இ — ன்:—இப்படிப்பட்ட வாஞ்சையோடு கூடிய சமஸ்ததேவர்களுடைய பூஜார்ச்சனையானது (வைஸ்வதேவமானது) கிரகஸ்தர்களுக்கு ஆகும். இது, நாள்தோறும் மதித்துப்பண்ணப்படும்; எ - று.

𑌏𑌵𑌮𑌾𑌰𑌾𑌧𑌿𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌘𑍍𑌨𑌵𑌿𑌨𑌾𑌶𑌕𑍃𑌤𑍍 ।
𑌶𑍁𑌭𑌾𑌭𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌕𑌰𑌂 𑌭𑌾𑌵𑌿 𑌸𑌮𑍍𑌪𑌦𑌶𑍍𑌚 𑌕𑌾𑌰𑌣𑌂 ॥

இ - ன்:—இப்படி ஆராதிக்கப்பட்ட கர்மமானது சமஸ்தவிக்னங்களையும் கெடுத்து, நன்மையைப்பண்ணும்; அபிவிருத்தியையும் பண்ணும்; இனிமேலாகப்போகிற சம்பத்துக்கும் காரணமாகும். எ — று.

இந்த சுலோகங்களின்கருத்துக்களைக்கொண்டும்,இவற்றினடியில்கண்டவிஷயங்களாலும் பூஜிப்பதாலுண்டாம்பலன்களாவன:- சத்கார தேவதைகளாகிய தர்மசக்ரம், சத்ரத்ரயம், அக்னித்ரயம் முதலானதேவதைகளைஹோமத்திலே பூஜிப்பதனுல் சர்வவிக்னங்களும் விநாசமடைந்து சம்பத்துண்டாகுமென்றும், ஸ்திரீகள் கிரகத்தில் ஜிநமாதாவாகிய விஸ்வேஸ்வரியை பூஜிப்பதனுல் வைதவ்விய மில்லாமல் மங்கல்யவர்த்தனைகளாக அவரில்லங்களில் சுபகாரியங்களுண்டாகுமென்றும்,வைஸ்ரவணனுகிய குபேரனுடைய பூஜையானது ஐஸ்வரியமுளதாகுமென்றும், தரணேந்திரயக்ஷனை பூஜிப்பதனுல் நல்லபுத்திரனுண்டாவானென்றும், ஸ்ரீதேவதையைப் பூஜிப்பதனுல் துர்த்தேவதைகள் எக்காலமும் வீட்டில் பிரவேசிக்கமாட்டாரென்றும்,அப்படியே சகல சாஸனதேவதைகளை அதாவது கோமுகயக்ஷன், த்ரிமுகயக்ஷன், பிரம்மயக்ஷன், ஈஸ்வரயக்ஷன், ஷண்முகயக்ஷன் சர்வாண்ஹயக்ஷன் முதலான இரு

பத்துநான்கு ஸாஸனதேவர்களாகிய யக்ஷர்களையும், சக்ரேஸ்வரி, ஜ்வாலாமாலினி, பத்மாவதி, பார்வதிதேவி, தர்மதேவிமுதலான இருபத்துநான்கு ஸாஸனதேவதைகளாகிய யக்ஷிகளையும், மேல் சொன்ன தேவதைகளையும் பூஜிப்பதனால் இகத்திலும், பரத்திலும் அர்த்தகாமங்கள் மிகுதியாக உண்டாகுமென்றும், அவற்றால் பிற விக்குக் காரண மென்றும், நித்திய தேவர்களாகிய அருகத்பரமே ஸ்வரன் முதலான பஞ்சபரமேஷ்டிகளை பூஜை, அர்ச்சனை, ஜபம், தியான தோத்திரங்கள் ஆகியவற்றால் வழிபடுவதாலும், துறவை எய்தி,தவம்செய்வதுமுதலான ஒழுக்கங்களாலும் மோக்ஷகதிக்கு சாதனமாகுமென்றும் கூறுவது ஜைநசமயசித்தாந்தம்.

மேல்கண்ட சுலோகங்கள் த்ரைவர்ணிகாசாரமென்னும் பிரதிஷ்டாதிலகம் சுலோகம் 180-முதல் உள்ளவை.

ஓம்

பரமாத்மனேநமஃ

ஸ்ரீ தர்மதேவி சகாயம்.

# திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைநசமய சித்தாந்த விளக்கமும்.

(எம்மால் எழுதப் பெற்றவை)

---

புரந்தரரும் பூமிமேல் மாந்தர்களு மாங்கே
நிரந்தரம் வந்திறைஞ்ச நேரின்-வரந்தருநல்
வாம னடிவணங்கி மன்னு முலகியல்பை
நாம வகையுரைப்பா நன்கு.

## உ ல க ம்.

உலகமானது-நிச்சயலோகம், விவகாரலோகமென இரண்டு விதம். நிச்சயலோகமென்பது, ஒருசைத்தியாலயத்தின் கல்,செங்கல், சுண்ணும்புமுதலியவைபோன்றது; விவகாரலோகமென்பது அதிலமைந்த கர்ப்பக்கிரகம், மண்டபாதிகள் போன்றது. அவற்றுள், நிச்சய லோகமென்பது ஷட்திரவ்விய பரிபூர்ண மாகும்.

விவகாரலோகமென்பது அநந்தாகாச, அநந்தாநந்தப் பிரதேசமாகிய ஆகாஸமத்தியத்தில் அக்ருத்திமமாகி (ஒருவரால் சிருஷ்டிக்கப்படாததாகி) அநாதி சம்ஸித்தமாகி (அநாதியாய் நிலைபெற்றிருப்பதாகி), கனோததி, கனவாத, தனுவாதமென்னும் மகாவாதத்திரயங்களால் (மூன்றுவிதமான பெரியகாற்றுக்களால்) பரிவேஷ்டிதமாகி (சூழப்பெற்று), வேத்ராஸனம் (பிரம்பினால்பின்னப்பட்ட ஆசனம்), ஜல்லரி(உடுக்கை),மிருதங்கம் (மத்தளம்) ஆகியவற்றின் ரூபங்களை, ஆதி, நடு,அந்தத்தில் முறையே உடையதாகி, * நாளிகா தத்பாகிய பேதத்தை உடையதாகி, தெற்கு வடக்கு அளவு ஆதிமத்தியாவசானம் (கீழ், நடு, மேல்) எழுகயிறுப் பிரமாணம் உடையதாகி, கிழக்கு மேற்கு அளவு அடியில் எழுகயிறுப்பிரமாணம் உடையதாகி, பிற்பாடு கிரமத்தால் சுருங்கிச்சென்று மகாமேருமூலத்தில் (அடிப்பாகத்தில்) நாளிகையின் வியாசமாகிய (அளவாகிய) ஒருகயிறுப் பிரமாணத்தையுடையதாகி, அதன்

---

* நாளிகை-(வாழைமரத்துக்குமத்தியில் தண்டிருப்பதுபோல) லோகத்தின்மத்தியில் உள்ளது. இது, ஒருகயிறு அகலம், ஒருகயிறுகனம், ஸமசதுரமாகப் பதினன்கு கயிறு நீளம் உள்ளது.

மேல் கிரமத்தால் விரிந்துசென்று பிரம்மகல்பத்தில் ஐந்துகயிறுப் பிரமாணத்தை யுடையதாகி, அதன்மேல் கிரமத்தால் சுருங்கிச் சென்று சித்தக்ஷேத்திரபார்ஸ்வத்தில் ஒரு கயிறுப்பிரமாணத்தை யுடையதாகி, ஆகமொத்தம் பதினான்கு ரஜ்ஜு(கயிறு) உயரத்தை யுடையதாகி, (அதாவது 343 - குழிப்பிரமாண முடையதாகி) அதோ, மத்திம, ஊர்த்துவ (கீழ், நடு, மேல்) லோக மென்னும் மூன்றுபேத முடையதாகும். இது, விவகாரலோகமாகும். இந்த ரஜ்ஜுப் பிரமாணம், கேவல ஞானத்தினால் அறியத்தக்கது.

இந்தலோகத்தை பரிவேஷ்டித்திருக்கும் (சூழ்ந்திருக்கும்) கனோததி, கனவாத, தனுவாதமென்னும் மகாவாதத்ரயங்களுக்கு கனப்பிரமாணம் எவ்வண்ணமெனில், அதோலோகமுதல் ஏழாநரகபரியந்தம் முறையே ஒவ்வொன்றும் இருபதினாயிரம், இருபதினாயிரம் * யோசனையும், ஏழாநரகத்துக்குமேல், ஸதர்ஸபார்சுவத்தில் (லோகத்தின் நான்கு பக்கத்திலும்) 7-5-4 ஆயிரம் யோசனையும், மத்தியமலோகத்து நான்கு பக்கமும், 5-4-3 ஆயிரம்யோசனையும், அதன்பிறகு விரிந்து பிரம்மலோகத்து நான்குபக்கமும் 7-5-4 ஆயிரம் யோசனையும், பிற்பாடு குறைந்துசென்று மோக்ஷஸ்தானத்துநான்குபக்கமும், 5-4-3 ஆயிரம்யோசனையும், லோகாக்ரத்தில் அதாவது, உச்சியில் , 2-1-425 வில் குறைந்த ஒன்று ஆன குரோஸங்களுமாகும்.

லோகத்தின் உச்சியில் காற்றுக்களின்கனம் யோசனைக்குக் குறைந்திருப்பதால் குரோசங்களின் கணக்கில் சொல்லப்பட்டிருக்கிறது. (2000)வில் கொண்டது ஒரு குரோஸம்; நான்கு குரோஸம் கொண்டது ஒரு யோசனையாகும். லோகத்தின் உச்சியில் கனோததி இரண்டு குரோசமும், கனவாதம் ஒரு குரோஸமும், தனுவாதம் நானூற்று இருபத்தைந்து வில்குறைந்த ஒரு குரோசமுமாகும். அதாவது. 1575 வில் கனமாகும்.

---

*அங்குலம் ஆறுகொண்டது ஒரு திர்யக்பாதம் (அரைஜாண்); திரியக்பாதம் இரண்டுகொண்டது ஒரு ஜாண்; ஜாண் இரண்டுகொண்டது ஒரு முழம்; முழம்இரண்டுகொண்டது ஒருகிஷ்கு (ஒரு கஜம்); கிஷ்கு இரண்டுகொண்டது தண்டம் அல்லது ஒருவில்; வில் இரண்டாயிரம் கொண்டது ஒருகுரோஸம்; குரோஸம் நான்குகொண்டது ஒருயோசனை யாகும். இது விவகாரயோசனை அல்லது சுல்லகயோசனை யென்று சொல்லப்படும். மேல் சொன்ன விவகாரயோசனை ஐந்நூறு கொண்டது பிரமாணயோசனை அல்லது மஹா யோசனையாகும்.

* சர்வலோகமும், ஸ்தாவரஜீவன்கட்கு இருப்பிடமாகும். §நாளிகை ஸ்தாவரஜங்கம ஜீவன்களுக்கு இருப்பிடமாகும். நாளிகையினது அதோபாகம் (அடிப்பாகம்) தொடங்கி ஏழாநரக அடிவரையிலும் நிகோதமாகும்; இது ஏகரஜ்ஜுப் பிரமாணத்ததாகும்; இதுவும், ஸ்தாவர ஜீவன்கட்கே இருப்பிடமாகும். இதன்மேல் ஐந்து நரகங்கள் உள்ளன; அவை ஐந்து கயிற்றளவாகும். இவற்றின்மேல், இரண்டாம் நரகமும், முதல் நரகமும், பவணலோகமும் உள்ளன; இவைகள் ஒரு கயிற்றளவாகும். இவற்றின்மேல் மகாமேரு மூலந்தொடங்கி சௌதர்மகல்பம், ஈசானகல்பமிறுதிவரை ஒன்றரைக்கயிற்றளவும், ஸநத்குமார, மாஹேந்திரம்வரை ஒன்றரைக் கயிற்றளவும் பிரம்ம, பிரம்மோத்தரம் வரையில் அரைக்கயிற்றளவும், லாந்தவ, காபிஷ்டம் வரையில் அரைக்கயிற்றளவும், சுக்கிர, மகாசுக்கிரகல்பம் வரையில் அரைக்கயிற்றளவும், சதார, ஸஹஸ்ராரம்வரையில் அரைக்கயிற்றளவும், ஆநத, பிராணதகல்பம் வரையில் அரைக்கயிற்றளவும், ஆருண, அச்சுத கல்பம் வரையில் அரைக்கயிற்றளவும், இவற்றின்மேல் அகமிந்திரலோகமாகிய நவக்ரைவேயகம், நவாநுதிசை, பஞ்சாநுத்தரம், மோக்ஷமாகிய சித்தி க்ஷேத்திரபரியந்தம் ஒருகயிற்றளவும் ஆகும். ஆக ரஜ்ஜுக்கள் பதினான்காகும்.

---

* சர்வலோகமும் அதாவது நாளிகையுள்ளும் வெளிப்புறமுமாகிய லோகத்திலும் ஸ்தாவர ஜீவன்களுக்கு இருப்பிடமாகும். ஸ்தாவர ஜீவன்கள் என்பது ஏகேந்திரிய ஜீவன்களுக்குப் பெயர். இவற்றில், பாதர ஏகேந்திரியம், சூக்ஷ்ம ஏகேந்திரியமென இரண்டுவிதம். இன்னும் ஸ்தாவர ஜீவன்கள் பிரத்விகாயிகம், அப்புகாயிகம், தேஜஸ் (அக்னி) காயிகம், வாத (காற்று) காயிகம், வனஸ்பதிகாயிகம் என ஐந்து பேதங்களாகவும் உள்ளன. பாதர ஏகேந்திரியம் வனஸ்பதிகாயிகம் என்பன இரண்டும் புல், செடி, கொடி, விருக்ஷமுதலானவைகளுக்குப் பெயர். சூக்ஷ்ம ஏகேந்திரியமென்பது. கண்களுக்குப் புலனாகாத ஜீவன்கள்.

§ நாளிகை-என்பது ஸ்தாவர, ஜங்கம(த்ரஸ) ஜீவன்களுக்கு இருப்பிடமாகும். ஜங்கம (த்ரஸ) ஜீவன்களென்பது-த்வீந்திரியம், த்ரீந்திரியம், சதுரிந்திரியம், பஞ்சேந்திரியம் எனநான்குவிதமாகும். த்வீந்திரியமுதல் பஞ்சேந்திரியமுள்ள ஜீவன்கள்வரை உள்ளவை நாளிகையின் வெளிப்புறமாகிய லோகத்தில் இல்லை. இந்தக்காரணத்தினால் நாளிகைக்கு த்ரஸநாளிகையென்ற பெயர். நிகோதம் ஸ்தாவர ஜீவன்களுக்குமாத்திரம் இருப்பிடமாகும். நிகோதமென்பது ஏழாவது நரகத்தின் கீழ் உள்ளது.

நிகோதம், நரகலோகம், பவணலோகம் ஆகியமூன்றும் அதோலோகமெனப்படும். மகாமேரு மூலம் தொடங்கி மனுஷ்யலோகமும், வியந்தர லோகமும், ஜோதிர்லோகமும், மகாமேரு சூளிகாக்ரமான ருதுவிமான பரியந்தமும் மத்தியம லோகமாகும்.

பதினாறு கல்பங்களும், அகமிந்திரலோகமும், சித்திக்ஷேத்திரமும், ஊர்த்துவலோகமெனப்படும் மற்றும் அதோலோகத்தில் நரககதிக்ஷேத்திர துக்கங்களும், அவற்றிலுள்ள ஜீவன்களின் ஸ்வரூபங்களும், மத்தியமலோகத்து மனுஷ்ய திர்ய ஜீவன்களுடைய ஸ்வரூபங்களும், பவண, வியந்தர, ஜோதிஷ்க, கல்பவாசிகளென நால்வகைப்பட்ட தேவநிகாய ஸ்வரூபங்களும், அவர்களுடைய க்ஷேத்திரஸ்வரூபங்களும். அந்த க்ஷேத்திரத்தில் இருக்கிற சைத்தியாலய ஸ்வரூபங்களும், அதன்மேல் சித்த க்ஷேத்திரமென்னும் மோக்ஷ ஸ்வரூபங்களும், மகாமேரு முதலாகிய பர்வதங்களும், அந்தப்பர்வதங்களின் அக்ரத்திலிருக்கிற (உச்சியிலிருக்கிற) அக்ருத்திம சைத்தியாலயஸ்வரூபங்களும், ஜம்பூத்வீப முதலாகிய அஸங்கியாத த்வீபங்களும், லவண சமுத்திரமுதல் ஸ்வயம்பூரமண சமுத்திரம் இறுதியாகிய அஸங்கியாத சமுத்திரங்களுடைய ஸ்வரூபங்களும், அவற்றுளிருக்கிற பாதாள ஸ்வரூபங்களும், ஒரு கொம்பர், ஒருகாலர் முதலான பேரிருக்கிற குபோக பூமியாகிய தொண்ணூற்றாறு அந்தரத்வீபங்களின் ஸ்வரூபங்களும், கங்கா, சிந்து முதலாகிய நதிகளும், தேவாரண்ணிய, பூதாரண்ணிய முதலானவனங்களும், பத்மை முதலாகிய பொய்கைகளும், அந்தப் பொய்கைகளினுள் ளிருக்கிற தாமரை ஸ்வரூபங்களும், அந்தத் தாமரையிலிருக்கிற லக்ஷ்மீமுதலாகியதேவிகள் ஸ்வரூபங்களும், ஜம்பூவிருக்ஷ முதலாகிய ஸ்வரூபங்களும், விதேக நாட்டின் ஸ்வரூபங்களும், த்ரிவித போகபூமிஸ்வரூபமும், வித்தியாதரலோக ஸ்வரூபங்களும், பரத ஐராவதத்தில் எற்ற இழிவுகால ஸ்வரூபமும், மிலேச்சக்கண்ட ஸ்வரூபங்களும், பரதம் ஐராவதமாகிய தர்மகண்டங்கள் யுகப்பிரளயத்தாக்குட்பட்டுத் திரும்ப ஜீவன்கள் வந்து உற்பத்தியாய் எற்படும் உத்ஸர்ப்பிணிகால ஸ்வரூபங்களும், இந்த பரத கண்டத்தில் விருஷபஸ்வாமி முதலாகிய தீர்த்தங்கரர் இருபத்து நால்வரும், பரத, சகராதி முதலிய சக்ரவர்த்திகள் பன்னிருவரும் இராமஸ்வாமி முதலாகிய பலதேவர் ஒன்பதின்மரும், லக்ஷ்மணன்,

கிருஷ்ணர் முதலாகிய வாசுதேவர் ஒன்பதின்மரும், இராவணன் ஜராசந்தன் முதலான பிரதிவாசுதேவர்கள் ஒன்பதின்மரும், ஆக இவ்வகைப்பட்ட அறுபத்துமூன்று சலாகாபுருஷருடைய சரித்திரங்களும், நவநாரதர் ஏகாதஸ ருத்ரர்களுடைய சரிதங்களும், முன் சொல்லப்பட்ட மஹாமேரு முதலாகிய க்ஷேத்திரங்களுக்குப் பிரமாண அளவுகளும், அந்தந்த க்ஷேத்திரத்திலிருக்கிற ஜீவன்களுக்குச்சரீர அளவும், ஆயுஷ்யப் பிரமாணங்களும், ஆகார விஹாரங்களும், மற்றும் நானாவித ஸ்வரூபங்களும் த்ரிலோகஸார், த்ரிலோக ப்ரக்ஞப்தி, ஜம்பூத்வீப ப்ரக்ஞப்தி, த்வீபசாகர ப்ரக்ஞப்தி, லோகாணி முதலாகிய சாஸ்திரங்களில் விரிவாகக்காணப்படும். முன்சொன்ன நிச்சய லோகத்தின் ஷட்திரவியபரிபூர்ணமாவது யாதெனில்,

ஷட்திரவியங்கள் ஜீவத்திரவ்வியம், புத்கலத்திரவ்வியம், தர்மத்திரவ்வியம், அதர்மத்திரவ்வியம், ஆகாசத்திரவ்வியம், காலத்திரவ்வியம் என ஆறுவிதமாகும். இவற்றுள் ஒவ்வொன்றும் தானே லோகமெங்கும் பரிபூர்ணமாய் நிறைந்திருக்கும்.

இவைகளினுடைய ஸ்வரூப மெப்படியெனில், ஜீவத்திரவ்வியமாவது ஞானதர்ஸனாதி குணங்களுடையதாகும்; புத்கலத்திரவ்வியமாவது வர்ண கந்த ரஸ ஸ்பரிஸ குணங்களையுடையதாகும்; தர்மத்திரவ்வியமாவது ஒருபக்ஷியின் இறகு அதுசெல்வதற்கு ஸககாரியாயிருப்பதுபோல முன்சொன்ன ஜீவபுத்கலங்களின்கதி அல்லது செல்லுகைக்கு, சககாரியாகும்; அதர்மத்திரவ்வியமென்பது ஒருபக்ஷியின் காலானது அது நிற்பதற்கு ஸககாரியாயிருப்பதுபோல முன்சொன்ன ஜீவபுத்கலமிரண்டினுக்கும் ஸ்திதிக்கு (நிற்பதற்கு)க் காரணமாகும். ஆகாசத்திரவியமானது சகல திரவ்வியங்கட்கும்இருப்பிடத்துக்கு இடங்களைக்கொடுக்கும் அவகாஹநசக்தியாகும். கால திரவ்வியமென்பது சகல திரவ்வியங்களுடைய உற்பத்தி ஸ்திதி விநாசங்களுக்கு வர்த்தனாஹேதுவான குணங்களாகும்.

இந்தஷட்திரவ்வியங்களுள் புத்கலம் ஒன்றுதான் மூர்த்தம் மற்ற ஐந்து திரவ்வியங்களும் அமூர்த்தம்; மூர்த்தமாவது-வர்ண, கந்த, ரஸ, ஸ்பரிஸங்களையுடையது; அமூர்த்தம் இவைகளில்லா

தது என்றறிக. இவற்றுள் ஜீவபுத்கல மிரண்டினுக்கும் விசேஷ ஸ்வரூபம் சொல்லுதும்:—புத்கலமென்பது முன்சொன்ன வர்ணாதி குணங்களோடுகூடி, ஸ்தூல ஸூக்ஷ்ம பரிணதியால் (பேதத்தால்) ஆறுவகை ஸ்கந்தமாகும்.

அவையாவன:—

(1) ஸ்தூலஸ்தூலம் (4) ஸூக்ஷ்மஸ்தூலம்
(2) ஸ்தூலம் (5) ஸூக்ஷ்மம்
(3) ஸ்தூலஸூக்ஷ்மம் (6) ஸூக்ஷ்மஸூக்ஷ்மம்
என்பனவாகும். இவற்றுள்,

(1) ஸ்தூல ஸ்தூலமென்பது-உடைந்த விடத்துத் தமக்குத் தாமே கூடாத கல் மண்முதலாகியவைகளாகும்.

(2) ஸ்தூலமென்பது-உடைந்த விடத்துத் தமக்குத்தாமே கூடவல்ல ஜல தைலாதிகளாகும்.

(3) ஸ்தூல ஸூக்ஷ்மமென்பது-பிடிக்கவும், எடுக்கவும் ஸாத்தியமில்லாத நிழல் வெய்யில் முதலானவைகளாகும்.

(4) ஸூக்ஷ்ம ஸ்தூலமென்பது-சதுரேந்திரியங்களுக்கு (ரஸம், கந்தம், ஸ்பரிஸம், ஸப்தம் என்பவற்றுள் ஒவ்வொன்றுக்கும்) தனித்தனி புலனாகக் கூடியவை.

(5) ஸூக்ஷ்மமென்பது-அநந்தம்பரமாணுக்களின்கூட்டம். இவை கர்மவர்க்கணையென்று சொல்லப்படும். இவை ஆத்மகுணத்திற்குத் தக்கவாறு ஆத்மனில்பந்தித்துக் கருமசரீரத்தை ஆக்கும்.

(6) ஸூக்ஷ்ம ஸூக்ஷ்மமென்பது-இரண்டு பரமாணு கூடினவை முதல் ஒன்று குறைந்த அனந்தம் பரமாணுக்கள் கூடினவை வரையில்.

முன்சொன்ன கர்மவர்க்கணையென்பது லோகமெல்லாம்நிறைந்திருப்பதாகும். அதைப்போல சம்ஸாரஜீவனும் லோகமெல்லாம் நிறைந்திருப்பதாகும். அந்த சம்ஸாரஜீவனுடைய மன, வசன, காயங்களாலுண்டான ராக, த்வேஷ, மோஹ, க்ரோத, மான, மாயா, லோப பரிணமத்தினால், அக்கினியில் காய்ந்த இரும்பில் நீர் சேர்வதுபோல அந்த ஜீவனிடத்தில் கர்மங்கள் ஆஸ்ரவமாகும் (அதாவது சேரும்). அவ்வாறு சேர்ந்து, அந்தஜீவன் எடுத்த சரீரப்பிரமாணம் எத்துணையுண்டோ அவ்வளவுபிரதேசமெல்லாம் அக்கர்மங்கள், பரிணமித்து அநாதிகாலந்தொடங்கி சமயந்தோ

றும் இடைவிடாமல் பந்தித்து அந்தந்தக் கர்மங்களுக்குச் சொல்லப்பட்ட காலஸ்திதி யளவும் இருந்து, சமயந்தோறும் உதயம் கொடுத்துவிட்டுப் போவனவாகும். ஜீவனுடைய ராகத்வேஷாதி பரிணதிக்குத் தக்கவாறு கர்மஸ்வரூப பரிணதிகுணங்கள் தமக்குத்தாமேயாகும். எவ்வாறெனில்,

சுண்ணும்பு ஸ்வபாவத்தன்மையினுல் வெண்மை நிறமுடையதாயிருந்தபோதிலும் மஞ்சளின் சேர்க்கையால் சிவப்பு நிறமடைவதுபோல, ஜீவன் ஸ்வபாவத்தன்மையினுல் சுத்தனுயிருந்த போதிலும், அநாதியாய்க் கர்மத்தின்சேர்க்கை(சம்பந்த)த்தன்மையால் ஸ்வபாவகுணம் மாறி ராகத்வேஷாதிகளால் விபாவகுணம்பெற்று சம்ஸார நிகழ்ச்சியை அடைகிறுன்.

இனிமத்தியமலோகத்தின் ஸ்வரூபம் அபாரமானவிஷயமாக இருப்பினும் அதைப்பற்றி இங்குச் சிறிது விவரிப்பாம்:—

மத்தியமலோகத்தின்கண் உள்ள அநந்தாநந்தத்வீபங்களில் ஜம்பூத்வீபம், தாதகிஷண்ட த்வீபம், புஷ்கரார்த்த த்வீபம் என்னும் இரண்டரை த்வீபங்களும் மனுஷ்யக்ஷேத்திரமாகும். இவைகள் நாற்பத்தைந்து லக்ஷம் யோசனைவிஸ்தீர்ணமுள்ளவை. இவற்றுள் ஜம்பூத்வீபத்திற்கு மந்தரமேருவென்றும்பர்வதம் ஒன்றும், தாதகிஷண்டத்வீபத்திற்குப்பூர்வபாகத்தில் மகாமேருவென்னும் பர்வதமொன்றும், அபரபாகத்தில் சுதர்ஸனமேருவென்னும் பர்வதமொன்றும், புஷ்கரார்த்த த்வீபத்திற்குப்பூர்வபாகத்தில்மேருவென்னும் பர்வதமொன்றும், அபரபாகத்தில் வித்யுன்மாலினிமேருவென்னும் பர்வதமொன்றும், ஆகமேருபர்வதங்கள் ஐந்து உள்ளன. தாதகிஷண்டம், புஷ்கரார்த்தம் ஆகிய இரண்டு த்வீபங்களுக்கும் மத்தியில்உள்ளது ஜம்புத்வீபமாகும். இந்தத்வீபங்கள் மூன்றில் ஜம்பூத்வீபத்தை மகாலவணசமுத்திரமும், தாதகிஷண்டத்வீபத்தை காளோதக சமுத்திரமும், புஷ்கரார்த்தத்வீபத்தை புஷ்கரவாசமுத்திரமும் வட்டமாகச்சூழ்ந்திருக்கின்றன. மத்தியிலுள்ள ஜம்பூத்வீபத்தை மேல் சொல்லிய இரண்டுத்வீபங்களும் மூன்று சமுத்திரங்களும் ஒன்றின்மேலொன்ருய் வளைந்து சூழ்ந்திருக்கின்றன.

ஜம்பூத்வீபம் ஆதித்ய பிம்பாக்ருதிபோன்று (சூரியவட்டம் போன்று) லக்ஷம் யோசனைவிஸ்தீர்ணமுள்ளதாகும். ஜம்பூத்வீபத்

திற்கு மகம்மேரு நாபியாகவுள்ளது. மகம்மேரு பூமியின்கீழ் ஆயிரம் யோசனை ஆழ்ந்தும், தொண்ணூற்றொன்பதினாயிரம்யோசனை பூமிக்குமேல் உயர்ந்துமிருப்பதாகும். மேருவின் தென்புறத்தில் ஹிமவான், மகாஹிமவான், நிஷதம் என்னும் மூன்று குலபர்வதங்களும், வடபுறத்தில் நீலி, ருக்மி, சிகரி என்னும் மூன்று குல பர்வதங்களும் இருக்கின்றன. மேருவுக்கு ஈஸான்னிய, அக்னி, நைருதி, வாயுவென்னும் நான்கு விதிக்குகளிலும் முறையே மால்யவான், சௌமனஸா, வித்யுத்பிரபா, கந்தமாதனவென்னும் நான்கு கஜதந்தபர்வதங்களும் யானைக்கொம்புகள்போல மேருவைமுட்டியிருக்கும். மேருவின்தென்புறத்தில் தேவகுருவென்னும் உத்தம போகபூமியும், நிஷதத்திற்குத்தென்புறத்தில் ஹரிவருஷமென்னும் மத்தியமபோகபூமியும், மகாஹிமவானுக்குத் தென்புறத்தில் ஹைமவதமென்னும் ஜகன்னியபோகபூமியும் உள்ளன. மேருவின்வடபுறத்தில் உத்தரகுருவென்னும் உத்தம போகபூமியும், நீலிபர்வதத்தின் வடபுறத்தில் ரம்யகமென்னும் மத்யமபோகபூமியும், ருக்மி பர்வதத்தின் வடபுறத்தில் ஹைரண்ணியவதமென்னும் ஜகன்னிய போகபூமியும் உள்ளன. இந்த மேருவின் தென்புறத்திலும் வடபுறத்திலும் உள்ள உத்தம, மத்திம ஜகன்னியபோகபூமிகள் ஆறும் நித்திய போகபூமிகளாகும்.

மேல்சொன்ன ஹிமவான் பர்வதமுதல் சிகரிபர்வதம்வரையுள்ள ஆறு குல பர்வதங்களின்மிசை முறையே பத்மை, மகாபத்மை, திங்கிஸ்சை, கேசரி, மகாபுண்டரீகை, புண்டரீகை என்னும் ஆறுபொய்கைகளும், இந்தப் பொய்கைகள் ஒவ்வொன்றிலும் தாமரைபுஷ்பத்தின்மீது முறையே ஸ்ரீ, ஹ்ரீ, த்ரதி, கீர்த்தி, புத்தி, லக்ஷ்மி என்னும் ஆறு குலவாசதேவதைகளின் வாஸஸ்தானங்களும் உள்ளன. மேல்சொன்ன பொய்கைகளில் பத்மையென்னும் பொய்கையில் கங்கா, சிந்து, ரோஹிதாஸ்யஎன்னும் மூன்று நதிகளும், மகாபத்மையென்னும் பொய்கையில் ரோஹிதும், ஹரிகாந்தா வென்னும் இரண்டுநதிகளும், திங்கிஸ்சையில் ஹரிது, சீதோதாவென்னும் இரண்டுநதிகளும், கேசரியென்பதில் சீதா, நரகாந்தாவென்னும் இரண்டுநதிகளும், மகாபுண்டரீகையில் நாரி, ரூப்யகூலாவென்னும் இரண்டுநதிகளும், புண்டரீகையில் சுவர்ணகூலா, ரக்தா, ரக்தோதாவென்னும் மூன்றுநதிகளுமாகப் பதினான்குநதிகள் உற்பத்தியாய் அவற்றுள் ஏழுநதிகள் கிழக்கிற்சென்

லும், ஏழுநதிகள் மேற்கிற்சென்றும் மகாலவண சமுத்திரப்பிரவேசமாகும். இந்த மகாநதிகள்பதினான்குக்கும் அநேக பரிவாரநதிகளுண்டு.

ஹிமவானுக்குத் தென்புறத்தில் மூன்றுமிலேச்சகண்டங்களும், இந்தமிலேச்ச கண்டங்களின் தென்புறத்தில் விஜயார்த்த பர்வதமென்னும்வெள்ளியம் பெருமலையும், இதன் தென்புறத்தில் இரண்டுமிலேச்ச கண்டங்களும், இவற்றின் தென்புறத்தில் ஆரிய கண்டமும் உள்ளன. இவைகளில் கங்காநதி பத்மையென்னும் பொய்கையிலிருந்து தென்புறம் நோக்கிப் பிறகு கீழ்புறம்சென்று மகாலவண சமுத்திரத்தில் சேருவதின் பிரிவாலும், சிந்துநதி தென்புறம்நோக்கிப் பிறகு மேல்புறம்சென்று மகாலவணசமுத்திரத்தில் சேருவதின் பிரிவாலும் இந்தஆறுகண்டங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த ஆறுகண்டங்களும் பரதசகராதி சக்ரவர்த்திகள் பன்னிருவரும் திக்விஜயம்செய்து ஆண்டுவந்த க்ஷேத்திரங்களாகும். இந்த ஆறுகண்டங்களுக்கும் பரத க்ஷேத்திரமென்று பெயர். இம்மாதிரி மகம்மேருவின் வடபுறத்திலுள்ள ஆறுகண்டங்களுக்கும் ஐராவத க்ஷேத்திரமென்று பெயர்.

மகம்மேருவின் கீழ்ப்புறத்திலும் மேல்புறத்திலும் உள்ளவற்றிற்குவிதேகநாடுகளென்றுபெயர். இவற்றில் மேல்புறமுள்ளவிதேகக்ஷேத்திரத்தின் மத்தியில், சீதோதாநதி மேற்குமுகமாய்ச்சென்று மகாலவணசமுத்திரத்தில் பாய்வதின்பிளவாலும், இந்தச்சீதோதாநதியின் தென்புறத்திலும், வடபுறத்திலும் இருக்கும் நான்குநான்கு வக்ஷாரபர்வதங்களின் பிரிவாலும், மும்மூன்று விபங்கநதிகளின் பிரிவாலும் பதினாறுநாடுகள் ஏற்பட்டுள்ளன. இம்மாதிரியே கீழ்ப்புறமுள்ள விதேக க்ஷேத்திரத்தின் மத்தியில் சீதாநதி கிழக்கு முகமாய்ச்சென்று மகாலவண சமுத்திரத்திற்பாய்வதின் பிளவாலும், மேல்சொன்னபடி தென்புறம் வடபுறமுள்ள வக்ஷார பர்வத விபங்கநதிகளின் பிளவாலும் பதினாறு நாடுகள் பிரித்துள்ளன. இந்த முப்பத்திரண்டு நாடுகளும் தர்மகண்டங்களென்று சொல்லப்படும். இந்தத் தர்மகண்டங்கள் ஒவ்வொன்றிலும் பரத க்ஷேத்திரம்போல தேசங்களும் நாடுநகர கிராமங்கள் முதலானவைகளுமுண்டு.

இந்த விதேகக்ஷேத்திரங்களில் உத்ஸர்ப்பிணியாதி ஏற்றிழிவுகாலபேதமில்லை; பிரளயங்களுமில்லை. இவற்றில்வசிக்கும் சகல

மனுஷ்யர்களுக்கும் ஆயுஷ்யம் ஜகன்னியம் (குறைந்தது) அந்தர்முகூர்த்தம்; உத்கிருஷ்டம் பூர்வகோடி வருஷமாகும். உன்னதம் ஐந்நூறுவில். இந்த க்ஷேத்திரத்தில் மனிதர் க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்கிற மூன்றுவர்ணாஸ்ரமத்தை உடையவர்களாய் ஷட்கர்மத்தொழில்களினால் ஜீவிப்பவராவார்கள். இந்த க்ஷேத்திரத்தின்கண் காளமேகமென்னும் மேகம், வருஷாகாலத்தில் நாற்பத்தொன்பதுநாள் மழை வருஷிக்கும். தவளவர்ண துரோணமேகம் எண்பத்து நாலுநாள் மழை வருஷிக்கும். துர்பிக்ஷமில்லை; அதிவிருஷ்டி அனுவிருஷ்டியுமில்லை; கோமாரிமுதலான வியாதிகளுமில்லை; குதேவதைகளுமில்லை; அன்னியலிங்கிகளுமில்லை; சதாகாலமும் கேவலிகளும், சலாகாபுருஷர்களும், ரித்திசம்பன்ன சாதுக்கள் முதலானவர்களு முண்டு.

இத்தன்மையாகவே தாதகீஷண்டத்வீபம், புஷ்கரார்த்தத்வீபம் இரண்டுக்கும், ஜம்பூத்வீபத்திற்கு மேல் சொன்னவைகள் போல சகலமும் உள்ளவைகளாகும். ஆகமேருக்கள் ஐந்துக்கும் கிழ்ப்புறத்திலும், மேல்புறத்திலும் உள்ள விதேகக்ஷேத்திரங்களில் தர்மகண்டங்கள் நூற்றறுபதாகும்.

தவிர ஐந்து மேருவிற்கும் தென்புறத்திலும் வடபுறத்திலுமுள்ள பரதம் ஐந்தும், ஐராவதம் ஐந்தும் ஆகிய பத்து தர்மகண்டங்களில், உத்ஸர்ப்பிணியாதிகால தோஷத்தினால் ஏற்றிழியும், போகபூமி கர்மபூமிகளின் பாகுபாடுகளுமாய்ப் பிரளயங்களும் உண்டாகி நடந்துவரும்.

மேருக்களின் தென்புறத்திலும் வடபுறத்திலும் நித்தியமாயுள்ள உத்தம மத்திம ஜகன்னிய போக பூமிகளின் ஸ்வரூபங்களாவன:—

இந்த மூன்றுவகைப்போகபூமிகளுட் பிறந்த ஆரியர்களுக்கு ஆயுஷ்யம்முறையே மூன்று, மிரண்டும், ஒன்றுமான பல்யோபங்களாகும். இவர்கள் சரீரோத்ஸேதம் முறையே ஆறாயிரம், நாலாயிரம், இரண்டாயிரமான வில்களாகும். இவர்கள் சரீரவர்ணம் முறையே பவழவர்ணமும், பால்நிறமும், பச்சைவர்ணமும் ஆகும். இவர்கள் மூன்றும் இரண்டும் ஒன்றுமான நாள்கள் இடைவிட்டுக் கடலைப்பிரமாணமும், நெல்லிக்காய்ப் பிரமாணமும், விளாங்காய்ப்பிரமாணமும் ஆகிய அமிர்தாகாரம் புசிப்பார்கள். இவர்கள், வஜ்ஜிரம்போன்ற அஸ்திபலத்தையும், சுந்தரமான ஆகார

முடைத்தாகிய சரீரத்தையுமுடையவராகி, முடிகடககேயூரஹா ராதி சர்வாபரணபூஷிதராகி, அகாலமரணமும் நித்திரையும் சோம்பலும் அநாசாரமும் பொறாமையும் வியாதியுமில்லாதவராகி, அநேகவிதமான கல்பகவிருக்ஷங்கள்போகசாதனங்களானவஸ்துக் களைக்கொடுப்ப அநுபவித்து, தத்தம் ஆயுஷ்பாவஸானத்து ஆணும் பெண்ணுமானவிரட்டைக் குழந்தைகளைப்பெற்று புருஷர் மார்த்தவ குணங்களால் சுரலோகம்பிரவேசிப்பர். இவர்களது சரீரம்மேகவினைசம்போல் மாய்ந்துபோகும். இவருள் சம்யக்தரிசன முடையவர் சௌதர்மகல்பம் ஈசானகல்பவாசியராவர்; ஒழிந்தமித் யாதிருஷ்டிகள் பவணவியந்தரஜோதிஷ்கதேவர்களாவார். அவற்றி ல்உள்ளதிரியக் (விலங்கு) ஜாதிகளும் இந்நிலைமைகளை அடையும்.

அநித்திய போகபூமியின் ஸ்வரூபங்க ளாவன:—

பஞ்சபரதங்களிலும், பஞ்சஐராவதங்களிலும், அவஸர்ப்பிணி உத்ஸர்ப்பிணிஎன்னும் இரண்டுகாலபேதத்தால் ஷட்கர்மவிருத்தி ஒருவிதமாக நில்லாமல், போகபூமிகர்மபூமி என்னும் பாகுபாடுண் டாகி நடைபெறும். அந்த உத்ஸர்ப்பிணியாதி கால அளவு எத் தகையதெனில், அவை, தனித்தனி பத்துக் கோடாகோடி கடற் கால முடையனவாகும்.

கடற்கால விவரம்:—

பரமாணுவினது புடைபெயர்ச்சி அதாவது: அணு, தான் நின்ற க்ஷேத்திரத்தைக் கடந்து அடுத்த க்ஷேத்திரத்தில் சேரும் நேரமாகிய சீக்கிரகாலமென்பதுஸமயமெனப்படும்; சமயம் அஸங் கியாதங்கொண்டது ஆவளி; ஆவளி அஸங்கியாதங் கொண்டது உச்வாஸம்; உச்வாஸம் ஏழுகொண்டது ஸ்தோகம்; ஸ்தோகம் ஏழுகொண்டது லவம்; லவம் முப்பத்தெட்டரை கொண்டது நாழிகை; நாழிகை இரண்டுகொண்டது முகூர்த்தம்; முகூர்த்தம் முப்பதுகொண்டது திவஸம்; திவஸம் பதினைந்துகொண்டது பக்ஷம்; பக்ஷம் இரண்டுகொண்டது மாதம்; மாதம் இரண்டுகொ ண்டது ருது; ருது மூன்றுகொண்டது அயனம்; அயனம் இரண் டுகொண்டது சம்வத்ஸரம்; சம்வத்ஸரம் ஐந்துகொண்டது பஞ்ச; சம்வத்ஸரம் எண்பத்து நான்குநூறாயிரம்கொண்டது பூர்வாங் கம்; பூர்வாங்கம் எண்பத்துநான்கு நூறாயிரம்கொண்டது பூர்வம்; பூர்வம் அசங்கியாதங்கொண்டது பல்லம்; பல்லம் பத்துக்கோடா

கோடிகொண்டது கடலாகும். (இவ்விவரம்மேருமந்தர புராணத்தில் (94-வது கவியில்) உள்ளது; இதன் விரிவை மகாபுராணம், கோமடசாரம் முதலிய நூல்களிற் கண்டுகொள்ளலாம்.)

உத்ஸர்ப்பிணி பத்துக் கோடாகோடி கடற்காலம். இதில்ஜீவன்களுடைய பலங்களும், ஆயுஷ்யங்களும், சரீர உன்னதமும், சுக்லபக்ஷத்துசந்திரகலைபோல வர்த்தித்து(வளர்ந்து)வருவனவாகும். அவஸர்ப்பிணி பத்துக்கோடாகோடி கடற்காலமாகும். இதில்கிருஷ்ணபக்ஷத்து சந்திரகலைபோல நாள்தோறும் பலங்களும், ஆயுஷ்யமும், சரீரோத்ஸேதமும் குறைந்து வருவனவாகும். இவ்விரண்டு காலமுங்கொண்டது ஒருகல்பமாகும். இந்த இரண்டுகால பேதங்களிலும் ஒவ்வொன்றிற்கும் ஆறுபேதங்களாகும். அவை யாவன:—

ஸுஷமஸுஷமை என்கிற நன்னற்காலம், ஸுஷமை என்கிற நற்காலம், ஸுஷமதுஷ்ஷமைஎன்கிற நற்றீக்காலம், துஷ்ஷமஸுஷமைஎன்கிற தீநற்காலம், துஷமைஎன்கிற தீக்காலம், அதிதுஷ்ஷமைஎன்கிற தீத்தீக்காலம் என்னும் ஆறுமாகும். அவஸர்ப்பிணிகாலத்தில் இவை இந்தக்கிரமமாக அமையும்; இரண்டாவது உத்ஸர்ப்பிணிகாலத்தில் முன்சொன்ன ஆறுகாலம் கடைசியிலிருந்து ஆரம்பித்துக் கீழ்மேலாகவரும். இவையிரண்டும் அபரபூர்வ பக்ஷத்து சந்திரன்போல நிரந்தரம் முறையே பரிவர்த்தித்து வருவனவாகும்.

இந்த அவஸர்ப்பிணி ஆறுகாலத்திற்கும் காலஸ்திதிகளாவன:— முதற்காலம் நாலுகோடாகோடி கடற்காலமும், இரண்டாங்காலம் மூன்றுகோடாகோடி கடற்காலமும், மூன்றாங்காலம் இரண்டுகோடாகோடி கடற்காலமும், நாலாங்காலம் நாற்பத்திராயிரவருஷம் குறைந்த ஒருகோடாகோடி கடற்காலமும், ஐந்தாங்காலம் இருபத்தோராயிரவருஷமும், ஆறாங்காலம் இருபத்தோராயிரவருஷமும் கொண்டவை.

இந்த ஆறுகாலங்களிலும், ஜீவன்களுக்கு உள்ள ஆயுஷ்யப் பிரமாணங்களாவன:— முதற்காலத்தாதியில் மூன்றுபல்லம்; அந்தியத்தில் இரண்டுபல்லம். இரண்டாங்காலத்தாதியில் இரண்டு பல்லம்; அந்தியத்தில் ஒருபல்லம். மூன்றாங்காலத்தாதியில்ஒருபல்லம்; அந்தியத்தில் பூர்வகோடி. நாலாங்காலத்தாதியில் பூர்வகோடி;

அந்தியத்தில் நூற்றிருபதுவருஷம். ஐந்தாங்காலத்தாதியில் நூற்றிருபதுவருஷம்; அந்தியத்தில் இருபதுவருஷம். ஆறாங்காலத்தாதியில் இருபதுவருஷம்; அந்தியத்தில் பதினைந்துவருஷம்.

இந்தக் காலங்களில் மனுஷ்யர் சரீரோத்ஸேதங்களாவன:- முதற்காலத்தாதியில் ஆறாயிரம்வில்; அந்தியத்தில் நாலாயிரம்வில். இரண்டாங்காலத்தாதியில் நாலாயிரம்வில்; அந்தியத்தில் இரண்டாயிரம்வில். மூன்றாங்காலத்தாதியில் இரண்டாயிரம்வில்; அந்தியத்தில் ஐந்நூறுவில். நாலாங்காலத்தாதியில் ஐந்நூறுவில்; அந்தியத்தில் ஏழுமுழம். ஐந்தாங்காலத்தாதியில் ஏழுமுழம்; அந்தியத்தில் இரண்டுமுழம். ஆறாங்காலத்தாதியிலிரண்டுமுழம்; அந்தியத்திலொருமுழம்.

இந்த ஆறுகாலங்களில் வர்த்திக்கின்ற மனுஷ்யருடைய சரீரவர்ணங்களாவன:— முதற்காலத்து மனுஷ்யர் உதயகால சூரியவர்ணம்; இரண்டாங்காலத்து மனுஷ்யர் பூர்ணசந்திரவர்ணம்; மூன்றாங்காலத்துமனுஷ்யர்பச்சைவர்ணம்; நாலாங்காலத்து மனுஷ்யர் பஞ்சவர்ணம்; ஐந்தாங்காலத்து மனுஷ்யர் காந்திஹீனமாயிருக்கிற மிஸ்ரவர்ணம்; ஆறாங்காலத்து மனுஷ்யர் தாமஸ்யாம வர்ணம்.

இந்த ஆறுகாலங்களில் வர்த்திக்கின்ற மனுஷ்யர்களுக்கு ஆகாரக்கிரமங்களாவன:—முதற்காலத்து மனுஷ்யருக்கு மூன்றுநாளிடைவிட்டுநாலாநாள் கடலைப்பிரமாணமாகிய திவ்வியாகாரம்; இரண்டாங்காலத்து மனுஷ்யருக்கு இரண்டுநாளிடைவிட்டு மூன்றாம்நாள் நெல்லிக்காய்ப் பிரமாணமாகிய திவ்வியாகாரம்; மூன்றாங்காலத்து மனுஷ்யருக்கு ஒருநாளிடைவிட்டு இரண்டாநாள் விளாங்காய்ப் பிரமாணமாகிய திவ்வியாகாரம்; நாலாங்காலத்துமனுஷ்யருக்குப் பிரதிதினம் ஆகாரம்; ஐந்தாங்காலத்து மனுஷ்யருக்குப் பிரதிதினமும் பலதடவை ஆகாரம்; ஆறாங்காலத்து மனுஷ்யருக்குப் பிரதிதினமும் எந்தவேளையினும் ஆகாரம்.

முதல் மூன்று காலங்களில் உள்ள மனுஷியர்களுக்குகல்பக விருக்ஷங்கள்கொடுக்கும் பலன்களாவன:—மத்தியாங்கமென்னும் கற்பகதரு, திவ்வியசாரமாகிய நானாவித பானங்களைக்கொடுக்கும்; தூர்யாங்கமென்னும் கற்பகவிருக்ஷம் நானாவிதமாகிய வாத்தியங்களைக்கொடுக்கும்; பூஷணாங்கமென்னும் கற்பகத்தரு அநேகவித

மாகிய ஆபரணங்களைக்கொடுக்கும்; மால்யாங்கமென்னும் கற்பகம் நானுவிதமாகிய புஷ்பமாலைகளைக் கொடுக்கும்; தீபாங்கமென்னும் கற்பகத்தரு ரத்தின தீபங்களைக்கொடுக்கும்; கிரகாங்கமென்னும் கற்பகம் பிராசாத மண்டபாதிகளைக் கொடுக்கும்; ஜோதிராங்கமென்னும் கற்பகம் சந்திராதித்தியரொளியையும் அடக்கும் பிரகாசத்தைக்கொடுக்கும்; (இதினுடைய ஒளியினுல் அக்காலத்திரவுபகலில்லை.) போஜனாங்கமென்னும் கற்பகம் நானுவிதரஸத்தவாகிய உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன என்னும் நான்குவகைப்பட்ட உணவுகளைக்கொடுக்கும்; பாஜனாங்கமென்னும் கற்பகம் வேண்டியபாத்திரங்களைக் கொடுக்கும்; வஸ்திராங்கமென்னும் கற்பகம் விசித்திரமாகிய வஸ்திரங்களைக் கொடுக்கும். இப்பத்து வகைப்பட்ட கல்பகதருக்கள் பாத்திரதாநுதிகளால் வந்த புண்ணியபலத்தால் மனுஷ்யர்களுக்கு இந்தப்பலன்களை உபகரிக்கும்.

இன்னும், இந்தத்திரிகாலத்திலும், போகபூமி தேவோத்தரகுருமுதலாகிய நித்தியபோக பூமிகளை நிகர்த்திருக்கும். இதில் பால்போலவும், கரும்பு ரஸம்போலவும், தேன்போலவும், நெய்போலவும் உள்ளரஸம் சதுரங்குலஉயரம் நிறைந்திருக்கிற வாபிகளும், பொய்கைகளும், நல்லகந்தமும், மிருதுவாயிருக்கிற த்ரணங்களும் (புற்களும்,) தர்ப்பணம் கண்ணுடி) போன்ற பூமிகளும் இருக்கும். இந்தப்பூமியில்பிறந்தமனுஷ்யர், பிறந்தநாள்முதல்எழுநாள்வரை அங்குளியினை ஆகாரமாக உண்பர்; அதற்குப்பின் எழுநாள் தவழ்ந்து திரிவர்; அதற்குப்பின் எழுநாள் தளர்நடைநடந்து திரிவர்; அதற்குபின்எழுநாள் மழலைச்சொல் மொழிவர்; அதற்குப்பின் எழுநாள் தளர்வின்றிநடந்து திரிவர்; அதற்குப்பின் எழுநாள் சகலகலா ஞானமும் பயில்வர்; அதற்குப்பின் எழுநாள் சம்பூர்ண யௌவனராவர். இவ்வாறுனவர்களில் ஆணும்பெண்ணுமாகிய தம்பதிகள், வஜ்ஜிரவிருஷபநாராசஸம்ஹனனதேகமும், ஸமசதுரஸ்ரஸம்ஸ்தானமுமுடையவர்களாயும், ஆரியரென்கிற நாமமுடையவராயும், பஞ்சேந்திரிய விஷயங்களை சுலபத்திலே யனுபவித்து திருப்தியாயிருப்பர் இவர்கள் தங்களாயுஷ்ய முடிவில் ஆணும், பெண்ணுமாகிய இரட்டைப்பிறவிகளைப் பெற்றுவிட்டு, அப்பொழுதே கொட்டாவிக்கொண்டாவது, தும்மியாவது, சரீரம் விட்டு ஸ்வபாவ மார்த்தவத்தால் தேவலோகம் புகுவர். இவர்கள் சரீரம் மேகவிநாஸம்போலமாய்ந்துபோம். இவர்களுள் மித்யாதிர்

ருஷ்டி ஜீவன்கள் பவணவியந்தரஜோதிஷ்க தேவர்களாவார்கள். ஸம்யக்திருஷ்டி ஜீவன்கள் ஸௌதர்ம ஈசானகல்பத்தில் பிறப்பார்கள். அக்காலத்துள்ள விலங்குகளும் மணிமயபூதலத்தெழுந்து, அமிர்த ரஸத்தவாகிய த்ரணங்களை (புற்களை) மேய்ந்து, ஸ்வச்ச மதுர ஜலங்களைப் பருகித் தத்தம்மிற் செற்ற மின்றிச்சேர்ந்து திரியும். அவைகளுக்கும் கத்தியாகதிகள் முன்சொன்னபடியாகும். அக்காலத்துள்ளார் நித்திரையும், சோம்பலும், கார்ப்பண்ணியமும், அநாசாரமும், அகாலமரணமும், மனோதுக்கங்களும், சீதோஷ்ண பாதைகளுமிலராகி, மகுடகுண்டல கடககடிசூத்ரபிரம்மசூத்ராங்கதகேயூரஹாராதிகளால் அலங்கிருதமுடையவராகி, நிர்வியாதியாய், மூத்திரபரீஷங்களும், வியர்வையும், சரீரமலங்களுமின்றி, சுகந்திகளாய், நரைமூப்பின்றி, திவ்வியசரீரத்தோடிருப்பர். இவைமேற்கண்ட நித்தியபோகபூமிக்கும் உரியவை.

இனி இந்தப்போகபூமி, கர்மபூமியாகமாறிய கிரமங்களாவன:— மூன்றாங்காலம் அந்தியத்தில், ஒருபல்லத்தின் எட்டிலொரு கூறு கழிந்தபோது பிரதிஸ்ருதிஎன்னும் முதல்மனு தோன்றினான். அவனாயுஷ்யம் பல்லத்தில் பத்திலொருகூறு; அவனுக்குச் சரீரோத்ஸேதம் ஆயிரத்தெண்ணூறுவில்; சரீரநிறம் கனகவர்ணம்; அவன்காலத்தில் ஆடிமாதத்து பௌர்ணமிதினம் அஸ்தமயகாலத்து, கிழக்கே பூர்ணசந்திரமண்டலமும், மேற்கே இரத்னமயமாகிய ஆதித்யமண்டலமும் தோன்றின. பண்டுகண்டறியாத இவ்விரண்டினையுங்கண்டு பீதராகிய போகபூமி மனுஷியர்கள், பயத்தின் நீங்கியிருந்த பிரதிஸ்ருதியைக் கண்டுவணங்கி, "சுவாமி! இங்குத்தோன்றியவிவை என்?" என்றுவினவ, அவதிஞான சகிதனாகிய அவன், "இவர்கள் சந்திராதித்யராவர்; இவர்கள் முன்பே உளராயினும் ஜோதிராங்கமென்னும் கல்பகவிருக்ஷங்களின் ஒளிப்பிழம்பினால் உங்கட்குத்தோன்றாதிருந்தனர். இப்பொழுதுகாலவிழிவினால் ஜோதிராங்கங்களிலொளி மழுங்கினமையாற் றோன்றினர். இவர்களெப்பொழுதும் ஆகாசதலத்தில் மேருவை வலமாகச்சுற்றிச் சஞ்சரிப்பர்; இவர்களாலுங்கட்குப் பயமில்லை" என்று அவர்களின் பயத்தினை நீக்கினன்.

இந்தமனு ஆயுஷ்யாவசானத்து ஸ்வர்க்கலோகமடைந்தபின், அசங்கியாதகோடி வருஷஞ் சென்றபின் காலம்முறையாயிழிந்துவாராநிற்ப, ஸந்மதிஎன்னும் இரண்டாமனு தோன்றினான். அ-

னுக்கு ஆயுஷ்யம் அம்மம்; சரீரோத்ஸேதம் ஆயிரத்து முந்நூறு வில்; சரீரநிறம் கனகவர்ணம். அவன்காலத்து ஜோதிராங்கமென்னும் கற்பகத்தருக்கள்மிகவும் ஒளிமழுங்கியதால் ஆகாசதலத்து நிறைந்தெழுந்த தாரகைகளைக்கண்டு மனிதர் பயப்பட்டார்கள். அவன் அந்தமனுஷ்யருடைய பயத்தினைத்தீர்த்து, அவர்கட்கு அகோராத்திரி விபாகத்தினையும், பக்ஷமாசசங்கராந்திகளையும், ருதுவிஷவயன சம்வத்ஸரங்களையும், கிரஹணத்தினையும், நவக்கிரகங்களின் ஸ்வரூபத்தினையும், அவற்றினது சம்யோக விபாகத்தாற்றோன்றும் பலன்களையும் உபதேசித்தான்.

இந்தமனு ஆயுஷ்யாவஸானத்து ஸ்வர்க்கமடைந்தபின் அஸங்கியாதகோடி வருஷம் சென்றபின் காலம் முறையாலிழிந்து வாராநிற்ப, க்ஷேமங்கரரென்னும் மூன்றாம்மனு தோன்றினான். அவனாயுஷ்யம் அட்டம்; சரீரோத்ஸேதம் எண்ணூறுவில்; சரீரநிறம் கனகவர்ணம். அவன்காலத்தில் காலவிழியினால் மிருகங்கள் நக, தந்த, ஸ்ருங்கங்களால் (கொம்புகளால்) பலவற்றைப் பிளந்தும், கடித்தும், பாய்ந்தும் திரிந்தன. அத்துஷ்ட மிருகங்களைக்கண்டு மனிதர் பயப்பட்டார்கள். க்ஷேமங்கரன் "நீங்களிவற்றின்பாற் செல்லாதொழிமின்" என்று அம்மனிதருக்குச்சொல்லிப் பயந்தீர்த்தான்.

இந்தமனு ஆயுஷ்யாவஸானத்து ஸ்வர்க்கமடைந்தபின், முன்போலவேகாலம் முறையாலிழிந்துவாராநிற்ப க்ஷேமந்தரனென்னும்நான்காம்மனு தோன்றினான். அவனாயுஷ்யம் துடிகம்; சரீரோத்ஸேதம் எழுநூற்றெழுபத்தைந்துவில்; சரீரநிறம் கனகவர்ணம். அவன் காலத்தில், காலவிழியினால் மிருகங்கள் மனிதர்மேல்விழுந்து தொடர்வனவாயிருந்தன. அவ்வாறு தொடர்ந்த துஷ்ட மிருகங்களைக்கண்டு மனிதர்பயப்பட்டார்கள். அந்தமனு, "கல்லுந்தடியுங்கொண்டு உங்களைப் பாதுகாத்துக்கொண்மின்" என்று அவர்கட்கு உபதேசித்தான்.

இந்தமனு ஆயுஷ்யாவஸானத்து ஸ்வர்க்கமடைந்தபின், முன்போலவே காலம் முறையாலிழிந்து வாராநிற்ப, ஸீமங்கரனென்னும் ஐந்தாம்மனுதோன்றினான். அவனாயுஷ்யம் கமலம்; சரீரோத்ஸேதம் எழுநூற்றைம்பது வில்; சரீரநிறம் கனகவர்ணம். காலவிழியினால் அவன் காலத்தில் கற்பகவிருக்ஷங்கள் அல்பங்களாயின; பலன்களும் குறைந்தன. அப்போதுமனிதர் அந்தக் கற்பக

விருக்ஷங்கட்குப் பிணங்கிநின்றார்கள். அந்தமனு மேற்கூறிய ஜன ங்கட்கு அவையிற்றை வசனத்தால் எல்லை (அளவு) குறித்துக் கொடுத்தான்.

இந்தமனு ஆயுஷ்யாவஸானத்து சுவர்க்கமடைந்தபின், முன் போலவேகாலம் முறையாகிழிந்து வாராநிற்ப, ஸீமந்தரனென னும் ஆறுமனுதோன்றினன். அவனுயுஷ்யம் நளினம்; சரீரோத் ஸேதம் எழுநூற்றிருபத்தைந்துவில்; சரீரநிறம் கனகவர்ணம். அவன்காலத்தில் காலவிழிவினல் கற்பகவிருக்ஷங்கள் சிலவுள்வாய் மிகவும் மந்தபலன்களாயின. இவையிற்றின்பொருட்டு மனிதர் மிகவுமெய்ப்பற்றி (அவயவங்களைப் பிடித்து)க் கலகஞ்செய்தார் கள். அந்தமனு மேற்கூறிய மனுஷ்யர்க்கு மரங்களையும் புதர்களை யும் எல்லை வரைந்து காட்டிக் கொடுத்தான்.

இந்தமனு, ஆயுஷ்யாவஸானத்து சுவர்க்கமடைந்தபின்முன் போலவேகாலம் முறையாகிழிந்துவாராநிற்ப, விமலவாகனனென னும் எழாமனு தோன்றினன். அவனுயுஷ்யம் பத்மம்; சரீரோத் ஸேதம் எழுநூறுவில்; அவன் சரீரநிறம் கனகவர்ணம். அவனல் மனுஷ்யருக்கு, கரி, துரகாதி, வாகனங்களேறும் விதமும், அவற் றைப்பண்ணும் (அலங்கரிக்கும்) விதமும் காட்டப்பட்டன.

இந்தமனு ஆயுஷ்யாவஸானத்து சுவர்க்கமடைந்தபின் முன்போலவேகாலம் முறையாகிழிந்து வாராநிற்ப, சக்ஷுஷ்மா னென்னும் எட்டாம்மனு தோன்றினன். அவன் ஆயுஷ்யம் பத் மாங்கம்; சரீரோத்ஸேதம் அறுநூற்றெழுபத்தைந்துவில்; அவன் சரீரநிறம் ஸ்யாமவர்ணம். அவன்காலத்தில் காலவிழிவினல் பிர ஜைகள்மக்களைப்பெற்று அவர்கள் சிறிதுபொழுது உய்ந்திருந்து அப்பிள்ளைகளைக் காணுதகண்டு பயந்தார்கள். அந்தமனு மேற் கூறிய மனுஷ்யருக்கு அவ்விவரத்தையுள்ளபடிசொல்லிப் பயந் தீர்த்தான்.

இந்தமனு ஆயுஷ்யாவஸானத்து ஸ்வர்க்கமடைந்தபின் முன்போலவேகாலம் முறையாகிழிந்து வாராநிற்ப, யஸஸ்வானெ ன்னும் ஒன்பதாம்மனு தோன்றினன். அவனுயுஷ்யம் குமுதம்; சரீரோத்ஸேதம் அறுநூற்றைம்பதுவில்; அவன்சரீர நிறம் ஸ்யா மவர்ணம். அவன்காலத்தில் மனிதர் புத்திரரைப்பெற்றுச் சிலநா ளிருந்ததால், அவர்களைக்கண்டு பயப்பட்டார்கள். இந்தமனு

அந்த மனுஷ்யரிடம் "இருகால சுபாவம்" என்றுசொல்லி அவர்களுடைய பயத்தினைத்தீர்த்தான்.

இந்தமனு ஆயுஷ்யாவஸானத்து சுவர்க்க மடைந்தபின், முன்போலவே காலம் முறையாலிழிந்து வாராநிற்ப, அபிசந்திரனென்னும் பத்தாமனு தோன்றினான். அவன் ஆயுஷ்யம் குமுதாங்கம்; சரீரோத்ஸேதம் அறுநூற்றிருபத்தைந்துவில்; அவன் சரீரநிறம் கனகவர்ணம். அவன்காலத்து மனிதர் புத்திரரைப் பெற்று அவர்களைச்சந்தோஷத்தோடுபார்த்துப்பிரீதியால் இரவில் குழந்தைகளுக்குச்சந்திரனைக்காட்டி விளையாடிக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு சந்திரனைக்காட்டி விளையாடும்படி அவர்களுக்கு இந்த மனுவேசொன்னான். இக்காரணத்தினாலேயே இந்தமனுவுக்கு அபிசந்திரனென்று பெயராயிற்று.

இந்தமனுஆயுஷ்யாவஸானத்து சுவர்க்கமடைந்தபின், முன்போலகாலம் முறையால் இழிந்துவாராநிற்ப, சந்திராபனென்னும் பதினோராமனுதோன்றினான். அவனாயுஷ்யம் நயுதம்; சரீரோத்ஸேதம் அறுநூறுவில்; அவன்சரீரநிறம் தவள(வெள்ளை) வர்ணம். அவன்காலத்தில் மனிதர் நெடுநாள் பிள்ளைகளோடு ஜீவித்து பயப்பட்டார்கள். இந்தமனு அந்த ஜனங்களுக்குப் பயந்தீர்த்தான்.

இந்தமனுஆயுஷ்யாவஸானத்து சுவர்க்கமடைந்தபின், முன்போலகாலம்முறையே இழிந்து வராநிற்ப, மருதேவனென்னும் பன்னிரண்டாமனுதோன்றினான். அவனாயுஷ்யம் நயுதாங்கம்; சரீரோத்ஸேதம் ஐந்நூற்றெழுபத்தைந்துவில்; சரீரநிறம் கனகவர்ணம். அவன்காலத்தில் மனிதர் பலவாண்டு (சந்ததிகளாகிய) பிரஜைகளுடனுய்ந்திருந்ததால், பயப்பட்டார்கள். இந்தமனு, அந்த ஜனங்களின் பயத்தினைத்தீர்த்தான் இவனுடையகாலத்திலே சில மேகங்கள்தோன்றின; உபசமுத்திரமும், பலஆறுகளும் உண்டாயின. இவனால் ஜலதுர்க்கங்களைக் கடக்குமுபாயங்களாகிய படகு, ஓடமுதலாயினவும், கிரிதுர்க்கங்களிலேறுமிடத்துப் படிகளும் வகுக்கப்பட்டன.

இந்தமனு ஆயுஷ்யாவஸானத்து சுவர்க்கமடைந்தபின் மேற்கூறியபடி அசங்கியாதகோடி வருஷம் சென்றபின், காலம் முறையாலிழிந்து வாராநிற்ப, பிரஸேனஜித்தென்னும் பதின்மூன்றா மனு தோன்றினான். அவனாயுஷ்யம் பூர்வம்; சரீரோத்ஸே

தம் ஐந்நூற்றைம்பதுவில்; சரீரநிறம் தவள (வெண்மை) வர்ணம். அவன்காலத்தில் பிள்ளைகள் ஜராயுபடலத்தால் மூடப்பட்டுப்பிறந்தார்கள். அப்பிள்ளைகளைக்கண்டு மனிதர்பயப்பட்டார்கள். அப்போது அந்தமனு மேற்கூறிய ஜனங்கட்கு அதனை நிவர்த்திபண்ணு முபாயத்தினைக்காட்டினன்.

இந்தமனு ஆயுஷ்யாவஸானத்துசுவர்க்கமடைந்தபின், முன்போல அசங்கியாதகோடிவருஷம் சென்றபின் §காலம்முறையால் இழிந்து வாராநிற்ப, நாபிமகாராஜனென்னும் பதினான்காமனு தோன்றினன். அவனாயுஷ்யம் பூர்வகோடி; சரீரோத்ஸேதம் ஐந்நூற்றிருபத்தைந்துவில்; அவன்சரீரநிறம் கனகவர்ணம். அவன் காலத்தில் பிரஜைகள் நாபிநாளத்தோடுங்கூடிப் பிறந்தார்கள். அவன் அதனைப்போக்குமுபாயத்தினையும்ஜனங்களுக்கு உபதேசித்தான். அதனால் அவனுக்கு நாபியென்னும் நாமமாயிற்று. அவன் காலத்தில் கற்பகவிருக்ஷங்கள் மறைந்தன; மேகங்களெழுந்து மழைபொழிந்தன; எல்லாத்தானியங்களும் உழுதவித்தாமற் காலசுபாவத்தினாற்றாமே விளைந்தன. கற்பகவிருக்ஷங்கள் மேற்கூறியபடி மறைந்தபின் நானாவிதமாகிய விருக்ஷங்கள் முதலியவை தாமே தோன்றிப் பலனளித்தன. அக்காலத்துஜனங்கள், தாமேவிளைந்தும் பழுத்தும் கிடந்ததானியங்களையும் பலங்களையும் கண்டும், அவை தங்களால் உபயோகிக்கக் கூடியவை யென்பதையும், அவற்றைஉபயோகிக்குமுபாயத்தினையுமறியாது,பசியால் வருந்திவியாகுலராகி, நாபிமகாராஜன்பாற்சென்று "நாதனே! எங்களை இரக்ஷிக்கும் கல்பகவிருக்ஷங்கள்போனபின் நாங்கள் பசியால்வருந்துகின்றோம்; இத்தகைய எங்கட்கு ஜீவனோபாயமாவது யாதென்றறிகிலம்; அதற்கு உபாயங்களை நீர் உபதேசித்து எங்களை இரக்ஷித்தருளவேண்டும்" என்று விக்ஞாபித்தனர். அப்போது நாபிமகாராஜன், கருணாபரவசனாகி அவர்களை நோக்கி உபதேசிக்கத் தொடங்கி, தெங்கும், மாவும், பலாவுமாகிய விருக்ஷங்களினுடைய பலங்களையும், சாலிமுதலாகிய தானியங்களையும், தினைசோளமுதலாகிய க்ஷுத்ரதானியங்களையும் தீங்கரும்புமுதலாயினவற்றையும், பூசனிமுதலாகிய வல்லிவிசேஷங்களையும், கருணைமுதலாகியகந்த (கிழங்கு) விசேஷங்களையும், அவற்றை உபயோ

§காலதோஷத்தினால் ஒவ்வொரு மனுவின் காலத்திலும், மனுக்கள் முதலான மனுஷ்யர்க்கு ஆயுஷ்யம் பலம் உன்னதமுதலானவைகள் கிரமமாகக் குறைந்துவருவனவாம்.

கிக்கும் உபாயங்களையும் அவர்களுக்குக் காட்டி, மேலும் சுகந்த புஷ்ப சந்தனாதிகளை அணியும் விதங்களையும், பருத்திமுதலாயின வற்றால் வஸ்திராதிகளையாக்கும் உபாயங்களையும், இன்னும் இப்பெற்றிப்பட்ட அநுபவசாதனோபாயங்களையுங்காட்டினன். இவன் இக்ஷுதண்டங்களை உபயோகிக்கும் உபாயத்தை மனிதர்க்கு உபதேசித்ததால் இக்ஷ்வாகுவென்னும் பெயருடையவனாயினன்.

இந்தப் பதினால்வரும் பூர்வபவத்தில் விதேகக்ஷேத்திரத்தில் சத்பாத்திரனுக்குக்கொடுத்த பரிசுத்தாகாரதான பலத்தால் போகபூமி ஆயுஷ்பத்தினைப்பெற்று க்ஷாயிகஸம்யத்வத்தினையெய்தி, பரதக்ஷேத்திரத்தில் ஸுஷம துஷமை யென்னும் திரிதீய காலாந்தத்து இவ்வாறு க்ஷத்திரிய வம்சத்து ஜனித்து, சிலர் அவதிஞானத்தாலும், சிலர்ஜாதிஸ்மரணத்தாலும் (முன்பவத்துள்ள விஷயங்களையறிதலாலும்) இப்பெற்றிப்பட்ட உபதேசத்தினைச் செய்து மனுக்களென்றும், குலதரரென்றும், பிரம்மாக்களென்றும் சொல்லப்படுகின்றனர்.

இந்தமனுக்களுள் முதல் ஐவர்காலத்தில் அபராதம் செய்தோர்க்குத்தண்டனையாவது-ஹாவென்பதாகும்; அதன்பின்ஐந்து மனுக்கள் காலத்தில் தண்டனையாவது-ஹாவென்பதும், மாவென்பதுமாகும்; அதன்பின் நான்கு மனுக்கள்காலத்தில் தண்டனையாவது-ஹாவென்பதும், மாவென்பதும், திக் என்பதுமாகும். இவர்களுக்குப்பின் தோன்றிய விருஷபசுவாமிகாலத்திலும் இவ்விததண்டனையே ஏற்பட்டிருந்தது; பரதேஸ்வரன்காலத்தில் சரீர தண்டனை தோன்றிற்று.

ஸ்ரீ நாபிமனுவின் புத்திரராகிய விருஷப தீர்த்தங்கரரென்னும் ஆதிபகவான் அவதாரமும், போகபூமி தன்னாமமிழந்து கர்மபூமியாக மாறிய ஆதியில் பகவானால் ஏற்பட்ட சாஸ்திரங்கள், ஷட்கர்மத்தொழில், புரங்கள், பட்டணங்கள், கிராமங்கள் முதலானவற்றின் விவரமும், லோகவிவகாரங்கள், தயாமூலதர்மங்கள் முதலியவற்றின் விவரங்களும் சுருக்கமாகக்கூறப்படும்.

மேற்கூறப்பட்ட பதினான்காம் மனு நாபிமகாராஜாவுக்கும், அவர்பத்தினி மருதேவி அம்மாளுக்கும் புத்திரர், "விருஷபதீர்த்தங்கரர்" என்னும் ஆதிபகவான். இவர் சர்வார்த்த சித்தியினின்றும் மதி, ஸ்ருதா, அவதியென்னும் மூன்றுஞானத்துடனும்

சகஜாதிசயம் பத்துடனும் அவதரித்தனர். மதிஞானமென்பது-இயற்கைஅறிவு; ஸ்ருதஞானமென்பது-நூலுணர்ச்சி; அவதிஞான மென்பது-குறிப்பிட்ட த்ரவ்விய க்ஷேத்ர கால பாவங்களில் ரூபத் திரவியங்கள் முதலானவைகளை அறிதல். இவர் இம்மூன்றுவித ஞானத்துடன் அவதரித்தவராகையால்,

> "ஓதாதுலகிற் பொருளனைத்து முடனே யுணர்ந்தா னுணர்ந்த
> வேதாகமங்க ளாறேழால் விரித்தான் விமலன்" [வற்றை

என்று திருக்கலம்பகத்தில் கூறியபடி,

ஒருவருடைய உபதேசமில்லாமலே சகல கலைகளிலும் வல்லமை அடைந்தவர். இனி சகஜாதிசயப்பத்தும் திருக்குறள் கடவுள்வாழ்த்து 6-வது குறளில் நன்குவிளங்கும். இன்னும் இந்தப் பகவானுக்கு கனகவர்ணத்ததாகிய திவ்விய தேகோத்லே தம் ஐந்நூறுவில்; பரமாயுஷ்யம் எண்பத்துநான்கு நூறாயிரம் பூர் வமாகும். இவர், தமக்கு சௌதர்மேந்திராதி தேவர்களால் நாள் தோறும் ஸமர்ப்பிக்கப்பட்ட திவ்வியவஸ்திரமால்யாபரணாதி போக சாதனங்களை அனுபவித்து, வயக்காலானு ரூபமாக வர்த் திப்பாராகிக் கிரமமாக யௌவனவஸ்தையினை அடைந்தருளினர்.

இந்தப்பகவானது ரூபலாவண்ணிய யௌவனாதி குணங்களைக் கண்டு நாபிமகாராஜன் அதிப்ரீதனாகி, இவருக்கு விவாகமகோ த்ஸவத்தினைச் செய்வான் வேண்டி, இவர் சமீபம்குறுகி, "த்ரி லோகநாதனே! ஜெகத் உபகாரார்த்தமாக நீ ஸர்வார்க்காக்ரத்தினி ன்றும் அவதரித்தனை; ஆதலால், கிரஹஸ்த தர்மத்தினையும், நிவர்த்தி தர்மத்தினையும், ஹிதாஹித சூன்யமாகிய லோகத்து க்கு விளக்கிக்காட்டியருளுதல் கருணாகரனாகிய உனக்குத் தகுவ தாதலின், நீமுந்துறப் பிரவர்த்திதர்மத்தினைக்காட்டி அருளவேண் டும்; கிரஹஸ்தாதர்மத்தினைக் கண்டு அவ்வண்ணமே லோகமும் அநுஷ்டிப்பதாகவேண்டும்" என்றிரப்ப, பகவானும் பித்ரு தா க்ஷண்ணியத்தாலோ, லோகானுக்கிரஹத்தாலோ, தர்மதீர்த்த ப்பிரவர்த்தனம் அவ்வண்ணமாவதினாலோ அதற்கிசைந்தனர். அதன்மேல் நாபிமகாராஜன்,சௌதர்மேந்திரனது நியோகத்தால், குலசீலாசார ரூப சௌந்தரிய கலாகுண விக்ஞான கிரியாதி குண ங்களால் அலங்கிரதைகளாகியவர்களும், யௌவன பிராப்தை களாகியவர்களும், கச்சன், மகாகச்சன் என்னும் வித்தியாதர

நரபதிகளுடன் பிறந்தவர்களுமான எஸஸ்வதி, சுநந்தை என்னும் இரண்டு கன்னிகைகளையும் மகாவிபூதியினல் ஸ்வாமிக்கு விவாகம் செய்வித்தனர்.

அதன்மேல் பகவானுக்கு பரதன், பாகுபலிகுமாரன் முதலாக நூறுபிள்ளைகளும், பிராம்மி, சுந்தரி, என்னும் இரண்டு பெண்களும் பிறந்து வளர்ந்து வந்தார்கள். அப்படி வளர்ந்து வரும்காலத்தில், ஸ்வாமி ஒருநாள் ஆஸ்தானமண்டபத்து சிம்மாசனத்தின்மிசை எழுந்தருளியிருந்தபோது, கலாவிக்ஞானநிதி சகல சாஸ்திரங்களையும் இவ்வுலகத்திற்குப் பிரகாசிக்கச்செய்வோமென நினைந்தருளினர். அந்த அவசரத்திலே யௌவனரம்பத்தையடைந்து ரூபசௌந்தரியாதி குணங்களால் விளங்கி, ஸ்ரீதேவி, சரஸ்வதிபோன்றிருந்த பிராம்மி, சுந்தரி, ஆகிய இரண்டு புத்திரிகளும் மங்களாபரணலங்கிரதைகளாகிவந்து விநயோபசார சகிதமாக த்ரிலோகஸ்வாமி சரணங்களில் நமஸ்கரித்தனர். ஸ்வாமியும் அவர்களை ஆநந்தத்தோடெடுத்துத் தமது மருங்கின்மிசை வைத்து, உச்சியைமோந்து தத்காலோசிதமாகிய மதுரவசனங்களால் உபலாளித்து அவர்களைநோக்கி, கலாஞானங்களை உபதேசித்தருளினர். அவை,

" 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌯𑌶𑌸𑍍𑌕𑌰𑍀 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑍍𑌕𑌰𑍀 𑌸𑌦𑌾
𑌸𑌮𑍍𑌯𑌗𑌾𑌰𑌾𑌧𑌿𑌤𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌦𑍇𑌵𑌤𑌾 𑌕𑌾𑌮𑌦𑌾𑌯𑌿𑌨𑍀
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌕𑌾𑌮𑌦𑍁𑌧𑌾 𑌧𑍇𑌨𑍁𑌃 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌮𑌣𑌿𑌰𑍍𑌨𑍃𑌣𑌾𑌂
𑌤𑍍𑌰𑌿𑌵𑌰𑍍𑌗𑌫𑌲𑌦𑌾𑌂 [illegible] 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 [illegible]
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌬𑌨𑍍𑌧𑍁𑌶𑍍𑌚 𑌮𑌿𑌤𑍍𑌰𑌂𑌚 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌕𑌾𑌰𑌕𑌂
𑌸𑌹𑌾𑌯𑌾 [illegible] 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌸𑌾𑌧𑌨𑍀
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அகாராதி ஹகாராந்தாம் ஶுத்தாம் முக்தாவளீமிவ
ஸ்வரவ்யஞ்ஜநபேதேந த்விதா பேதமுபேயுஷீம்
அயோகவாஹபர்யந்தாம் ஸர்வவித்யாஸு ஸங்கதாம்
ஸம்யோகாக்ஷரஸம்பூதிம் நைகபீஜாக்ஷரைஶ்சிதாம்

ஸமவாதீதத்ப்ராஹ்மீ மேதாவிந்யதிஸுந்தரீ
ஸுந்தரீ கணிதம் ஸ்தாநக்ரமை: ஸம்யகதாரயத்
ந விநா வாங்மயாத் கிஞ்சிதஸ்தி ஶாஸ்த்ரம் கலாபி வா
ததோ வாங்மயமேவாதௌ வேதா ஸ்மை வ்யுபாதிஶத்

உதிஹ்ருத்யைஸ்த நிஶ்லேஷ விசேஷேத ஸாவகுநா த்ருஹாஸ:
வாடீவதாவ தாராய ஸநேந்த்வா வாத்ருக்ஷ தீபதா: ”

என்ற மகாபுராணம் பர்வம் - 16-சுலோகம் 99-முதல் 110-வரையில் உள்ள சுலோகங்களில் கூறப்பட்டுள்ளன. மேல்கண்ட ஸ்லோகங்களின் கருத்துக்கள் ஸ்ரீபுராணத்தில் ஆதிபகவான் பகுதியில் சொல்லப்பட்டிருக்கிருக்கின்றன; அவையாவன:—

“அன்னைமீர்! நீங்கள் பாலைகளாகவிருக்கின்றீர்களெனினும், சிலவிநயங்களால் பரிணதைகளாக விருக்கின்றீர்கள்; ஈத்ருஸமாகிய ரூபயௌவனவஸ்தா சிலாசாரங்கள் வித்தையால் அலங்கிருதமாகில் அன்றோ ஸ்ரேஷ்டமாகும்; ஜன்மபலமாவது வித்தையே; எஸஸ்ஸினையும், ஸ்ரேயஸ்ஸினையும் தருவது வித்தையே; வேண்டியவற்றைச் சுரக்கும் காமபியாவதும் வித்தையே; கருதியவற்றைத்தரும் சிந்தாமணியாவதும் வித்தையே; தர்மார்த்தகாமங்களுள் சம்பத்பரம்பரையைத் தருவதும் வித்தையே; பந்துவாவதும், மித்திரராவதும், சர்வார்த்தங்களையும் சாதிக்கும் தேவதையாவதும் வித்தையே; ஆகையால், நீங்கள் வித்தையினைக் கைக்கொள்வீர்களாக” என்பனவே.

பகவான் இவ்வாறுசொல்லி அவர்களை ஆசீர்வாதவசனங்களால் வாழ்த்தித் தமது ஹிருதயகமலத்தெழுந்தருளியிருந்த ஸ்ருததேவியினை ஸ்வர்ணபட்டகத்தின்மிசை பூஜாபுரஸ்ஸரம் அதிவசிப்பித்து, ஸ்ரீ அஸ்தமிரண்டினுலும் ஒருமுறையிலேயே எழுத்தினையும் எண்ணினையும் அவர்கட்குக் காட்டியருளினர்.

அங்ஙனம்காட்டி, அவருள் பிராம்மியென்னும் பெண்ணிற்கு தக்ஷிண அஸ்தத்தால், ‘சித்தங்நம:’ என்றெடுத்துக்கொள்ளப்

பட்ட மங்களத்தையும், * அகாராதி ஹகாராந்தமாகிய ஸ்வரம் வியஞ்சனமென்னும் இரண்டு பேதத்தினை உடைத்தாகியதும், அயோகவாகங்கள் இரண்டாகவுடையதுமாகிய அக்ஷரமாலையினையும், சம்யோகாக்ஷரங்களது பிறப்பினையும் உபதேசித்தனர்.

சுந்தரியென்னும் பெண்ணிற்கு வாமஅஸ்தத்தினல், ஒன்று, பத்து, நூறு, ஆயிரமுதலாக ஒன்றிற்கொன்று பதின்மடங்காகிய கணிதஸ்தானங்களையும், பெருக்குதல், ஈதல் முதலாகிய ஷோடசபரிகர்மங்களையு முபதேசித்தருளினர். இங்ஙனம் ஸ்வாமி தமது தக்ஷிண அஸ்தத்தினல் எழுத்துக்களை உபதேசித்ததால் எழுத்துக்கள் வலமாகவளர்ந்தன; வாமஹஸ்தத்தினல் எண்களை உபதேசித்தருளியதால் எண்களது ஸ்தானம் இடமாகவளர்ந்தது. சகலசாஸ்திரங்களும் அக்ஷரங்களின்றி நிகழாவாதலின் பிரஜாபதி முந்துற அக்ஷரங்களை, உபதேசித்தருளிப் பின்னும் இருவருக்கும் வியாகரணமும், சந்தோவிஸ்சித்தியும், அலங்காரமுமாகிய ஸப்த சாஸ்திரங்களையும் உபதேசித்தருளினர். அவ்விருவரும் பிரக்ஞாபலத்தால் (புத்திவிசேஷத்தால்) பகவானுல்உபதேசிக்கப்பட்ட சகலவித்தைகளையும் உணர்ந்தனர்.

பிறகு ஆதிபகவான், பரமேஸ்வரனுக்கு அர்த்தசாஸ்திரத்தினையும், பாதசாஸ்திரத்தினையும், விருஷபசேனர்க்குக் கீதவாத்தியங்களைப்பற்றிக் கூறும் கந்தர்வசாஸ்திரத்தினையும், அநந்தவிஜயனுக்குச் சித்திரகலாவித்தையையும், வாஸ்து வித்தையினையும், பாகுபலிகுமாரனுக்குக் காமசாஸ்திரத்தையும், நீதிசாஸ்திரத்தை

* அகாராதி ஹகாராந்தமென்பது, அகரமுதலும், ஹகாரம் அந்தியமுமென்று கொள்ளப்படுவதாகும்.

𑌅 𑌆 𑌇 𑌈 𑌉 𑌊 𑌋 𑍠 𑌌 𑍡 𑌏 𑌐 𑌓 𑌔 𑌅𑌂 𑌅𑌃

ஆகிய இந்தப்பதினாறும் ஸ்வராக்ஷரங்களாகும்.

𑌕 𑌖 𑌗 𑌘 𑌙 𑌚 𑌛 𑌜 𑌝 𑌞 𑌟 𑌠 𑌡 𑌢 𑌣 𑌤 𑌥 𑌦 𑌧 𑌨
𑌪 𑌫 𑌬 𑌭 𑌮 𑌯 𑌰 𑌲 𑌵 𑌶 𑌷 𑌸 𑌹

ஆகிய இந்த முப்பத்துமூன்றும் வியஞ்சனாக்ஷரங்களாகும்.

𑌕𑍍𑌷 𑌤𑍍𑌰 𑌜𑍍𑌞 ஆகிய இவைமூன்றும் சம்யோகாக்ஷரங்களெனப்படும்.

அயோகவாஹங்களை ஈருக உடைத்தாகியவை-விஸர்க்கத்தோடுகூடிய அக்ஷரங்கள். அவையாவன: 𑌅𑌃 என்பது முதலானவைகள் ஷோடசபரிகர்மங்கள் என்பது-கூட்டல், கழித்தல், பெருக்குதல், ஈதல் முதலான பதினறுவிதமான கணக்குகளாகும்.

யுர், ஆயுர்வேதம் தனுர்வேதம் ஸ்திரீபுமான்லக்ஷணங்கள் ஆகிய
வற்றைச்சொல்லும் சாஸ்திரத்தையும், இரத்ன பரீக்ஷையையும்
உபதேசித்து, இன்னும் இப்பெற்றிய லோகோபகாரமாகிய சாஸ்
திரங்களையெல்லாம் மற்றுமுள்ள குமாரர்களுக்கும் உபதேசித்
தருளினார்.

பகவானுக்கு இருபதுநூறாயிரம் பூர்வமாகிய குமாரகாலங்
கடந்தபின், முன்பு உழுதுவிதைகளைவித்தாமல் தாமே முளைத்
தெழுந்து விளைந்த தானியங்களும் விருக்ஷங்கள்முதலாகிய ஜீவ
னோபாயங்களும் காலவிழிவினாற் றாமே விளையாமல் போயின. அத
னால் பிராணிகள் ஜீவனோபாயமின்றிப் பசியால் வருந்தித் தாங்க
ளதனைத்தீர்க்கு முபாயமறியாமையால் த்ரிகால ஞானியும்,
கல்பதருப்போல் அடைந்தார்க்கிடர் தீர்த்தற்கமைந்துநின்ற பக
வானுமாகிய ஆதிபரமேஸ்வரனுடைய ஸ்ரீ பாதகமலங்களையடை
ந்து, தண்டநமஸ்காரம்பண்ணி, "பகவானே! எங்களுக்கு ஜீவனோ
பாயமாகிய சஸ்யங்களும், விருக்ஷங்களும் முன்போல இப்பொழு
து, தாமேவிளைந்து பயன்நல்கவில்லை; அவை விளையாமையால் பசி
எங்களை மிகவும் வருத்தாநின்றது; மற்றும் வெய்யில், மழை,
காற்று, குளிர், பனி முதலானவற்றால் நாங்கள் மிகவும் வருந்தா
நின்றோம்; இவைகளையெல்லாம் தீர்க்குமுபாயம்எங்களுக்கு அரு
ளிச்செய்யவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தனர் அதைக்
கேட்ட பகவான் தமக்கு ஸ்வபாவமாகிய கருணையால் அவர்களை
நோக்கி, 'அஞ்சன்மின்' என்று அருள்மொழிகூறி அவர்களின்
வருத்தந் தீர்க்குமுபாயத்தினை திவ்விய ஞானத்தால்பார்த்து,
"இனி இவர்களுக்கு விதேகக்ஷேத்திரம்போல பரதக்ஷேத்திரத்
தையும், கிராம நகராதிகளையும், ஷட்கர்மத்தொழில்களையும், வர்
ணாஸ்ரமவிவஸ்தைகளையும் ஏற்படுத்திக் கொடுப்போம்" என்று
திருவுள்ளத்திற் கருதினார்.

இவரது திருவுள்ளமறிந்த தேவேந்திரன்வந்து சுபமாகிய
நக்ஷத்திரமுகூர்த்தத்து, நாடுநகரமுதலானவைகளை வகுத்தற்கு,
விக்னந்தீர்க்கும் விநாயகராகிய ஆதிபகவான் ஜகத்குருவை, 'மங்
களமாக' வென்றுபூஜித்து பகவான் எழுந்தருளுதற்கு பவித்திர
மாகிய உத்தமக்ஷேத்திரத்து நடுவிலும், மகாதிக்குகள்நான்கிலும்
நாநாவித ரத்தினங்களால் ஜிநாலயங்களை அழகுபெறவமைத்து,
பகவானுக்கு யோக்கியமாகும்படி மகாமேருவைப்போல மாட

மாளிகை முதலானவைகளையும் அமைத்து, திரு அயோத்தியென்னும் நகரத்தை அழகுபெறப்பண்ணினன். பிறகு அயோத்தியைச் சூழ கௌசலை, அவந்தி, காசி, கலிங்கம், பாஞ்சாலம், மாளவம், மகதமுதலான ஐம்பத்தைந்து தேசங்களையும்படைத்தனன். இந்தத்தேசங்களுக்கு நடுவாக ராஜதானிகளையும் பண்ணினன். அவற்றைச்சூழ கிராமம், துரோணமுகம், கேடம், மடம்பம், பட்டணம், கர்வடம், புரம், ஸம்வாகனம் என்பவற்றைஉண்டாக்கினன். இவற்றின் விவரங்கள் மகாபுராணத்தில் விரிவாகச் சொல்லப்படுகின்றன; அவற்றை எழுதப்புகின்விரிவெய்தும்; ஆகலின், நாககுமாரகாவியத்தில் இவற்றைப்பற்றிச் சுருக்கமாய்க் கூறப்படும் ஸ்லோகத்தால் இவற்றை விளக்குவாம்:

"𑌗𑍍𑌰𑌾𑌮𑍈𑌃 𑌦𑍍𑌰𑍋𑌣𑌮𑍁𑌖𑍈𑌃 𑌖𑍇𑌟𑍈𑌃 𑌕𑌰𑍍𑌵𑌟𑍈𑌃 𑌮𑌡𑌂𑌬𑌪𑌤𑍍𑌤-
𑌨𑍈𑌃। 𑌪𑌤𑍍𑌤𑌨𑍈𑌃 𑌸𑍁𑌮𑌹𑍈𑌰𑍍 𑌪𑍁𑌰𑍈𑌶𑍍𑌚𑍈𑌵 𑌭𑌾𑌤𑌿 𑌸𑌂-
𑌵𑌾𑌹𑌨𑍈𑌰𑍍𑌯𑌤𑍅"॥

என்பதுநாககுமாரகாவியத்தின் ஸ்லோகம்.

இ - ள்: "கிராமம், துரோணமுகம், கேடம், மடம்பம், பட்டணம், கர்வடம், புரம், ஸம்வாகனம்," என்பதாம். இதனால், மேற்கூறியவற்றின் பெயர்களின் விவரங்கள் தணியப்படும். இவற்றுள்,

கிராமமாவது சுற்றுவேலியையுடைத்தாகி, விளைவயல்களால் சூழப்பட்டு, உழுதுண்பார் குழுமியிருக்குமிடம். இவ்வகைக்கிராமங்களுள் நூறுகுடியுள்ளது க்ஷுத்ரக்கிராமம்; ஐந்நூறுகுடியுள்ளது மகாகிராமம். க்ஷுத்ரக்கிராமங்கள் ஒன்றிற்கொன்று ஒருகுரோஸ மாத்திரமிடையுடையன; மகாகிராமங்கள் ஒன்றிற்கொன்று இரட்டி இடையுடையன. இவ்வற்றுக்கெல்லை: ஆறு, மலை, குளமுதலாயினவை.

துரோணமுகமாவது-ஆற்றங்கரையுள்ளவூர்.

§ கேடமாவது-நதியினாலும் பர்வதங்களாலும் சூழப்பட்டது.

மடம்பமாவது-கிராமங்கள் ஐந்நூற்றினால் சூழப்பட்டது.

பட்டணமாவது - சமுத்திரத்திலுள்ள மரக்கலச்சரக்குகள் விற்குமூர்.

---

§ "இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு"

(திருக்குறள்.)

கர்வடமாவது-கிரிகளால் சூழப்படுவது.

புரமாவது-பரிகா கோபுராட்டாலய வப்ரப் பிராகாராதிகளால் அலங்கிருதமாகி நாநாபவன விந்நியாஸத்ததாகி, உத்தியானஜலாசயங்களோடு கூடிப் பிரதான புருஷரிருக்கு மிடம்.

ஸம்வாகனமாவது-தலைச்சுமையால் செல்லும் பிறவும்புகும் மலைமேலுள்ள ஊர்.

இப்படிப்புரங்களை வேறுவேருக வகுத்ததால், தேவேந்திரன் அப்பொழுது புரந்தரனென்ற பெயரும் பெற்றனன். இவ்வண்ணம் கிராமமுதலானவைகளைப்பண்ணி, பகவான் ஆக்ஞையால் ஜனங்களையும் ஆங்காங்கேதிரளச்செய்து பகவானைநமஸ்கரித்து இந்திரனும் தேவர்களோடுகூட ஸ்வர்க்கலோக மடைந்தனன்.

இவ்வண்ணம் பகவான் ஆக்ஞையால் இந்திரன் நாடு, நகரம், கிராமமுதலானவைகளை அமைத்தபின், பகவான் ஜனங்களுக்கு ஜீவனோபாயமாக, கல்வி, உழவு, வரைவு, தொழில், வாணிஜ்யம், சில்பம், என்னும் ஷட்கர்மத்தொழில்களையும் உபதேசித்தருளி, க்ஷத்திரியர், வைஸியர், சூத்திரர்என்னும் மூன்றுவர்ணாஸ்ரமங்களையுமுற்பட வகுத்தனர். பின் க்ஷத்திரியவகுப்பில், ÷ இக்ஷ்வாகுவம்ஸம், ஹரிவம்ஸம், நாதவம்ஸம், குருவம்ஸம், உக்கிரவம்ஸம் என ஐந்துவம்ஸங்களையும், சூத்திரர்களில் காருக்கள், அகாருக்கள், ஸ்ப்ரஸ்யர், அஸ்ப்ரஸ்யர் முதலான வர்ணபேதங்களையும் சிருஷ்டித்து, அவர்களுக்குத்தக்க விருத்தியினையும் காட்டி, மாமன், மருமகன், மைத்துனன் முதலிய முறைமைபேதங்களையும், விவாகக்கிரமங்களையும் உபதேசித்தருளினர்.

ஆதிபிரம்மாவால் இப்படி யாவும்கிருதமானபடியால் இந்தக் காலத்திற்குக் கிருதயுகமெனப் பெயராயிற்று. பரதக்ஷேத்திரம் ஷட்கர்மங்களாலே பிரவர்த்தித்ததால் போக பூமியென்னும் பெயர்தவிர்ந்து கர்மபூமியென்னும் பெயர்பெற்றது. பகவானும்

---

“ ÷ ஐவகை மரபி னரசர் பக்கமும்”
என்பது-(தொல்காப்பியம் புறத்திணையியல்-சூ. 20)
“ அலகை யாகிய வைம்பெருங் குலத்துக்
கொலைகெழு செவ்வேற் குருகுலக் குரிசில்”
என்பது-உதயணன்-பெருங்கதை-ராவாணகாண்டம், 3-வரி - 111
112ல் கூறப்படுகின்றது.

இந்தக்கிருதயுகத்தைச் சிருஷ்டித்துப் பிரஜாபதியென்றும், ஆதிபிரம்மாவென்றும், விதாதாவென்றும், மனுவென்றும் பெயர் பெற்றனர்.

இவை ஸ்ரீபுராணம் விருஷபஸ்வாமிபகுதியில் கூறப்படுகின்றன. மேலும், ஷட்கர்மத்தொழில்களைப்பற்றியும், வர்ணாஸ்ரமங்களைப்பற்றியும், மகாபுராணத்தில் அடியில்கண்ட சுலோகங்கள் சொல்லப்படுகின்றன:

“ அஸிர் மஷி: க்ருஷிர் வித்யா வாணிஜ்யம் சில்பமேவ ச
கர்மாணீமானி ஷோடா ஸ்யு: ப்ரஜா ஜீவந ஹேதவே”

இ - ள்: “ வாள்வலியாலுண்டாம் தொழிலும், எழுத்தாமூலத்தினுலுண்டாம் தொழிலும், உழுது பயிரிடுவதும், சாஸ்திரப்பயிற்சியும், வியாபாரத்தொழிலும், சித்திரத்தொழிலும் ஆகிய இந்த ஆறு தொழில்களும் பிரஜைகள் ஜீவிக்கும்பொருட்டு உண்டானவையாம்” என்பதாம்.

“ தத்ர வ்ருத்திம் ப்ரஜாநாம் ஸ பகவாந் மதிகௌசலாத்
உபாதிக்ஷத் ஸராகோ ஹி ஸ ததாஸீஜ் ஜகத்குரு:”

இ - ள்: “பிரஜைகளுக்கு மேற்சொன்ன ஆறுதொழில்களையும் த்ரிகாலஞானியாகிய ஆதிபகவான் தமது ஞானசாமர்த்தியத்தினுல் உபதேசித்தார்; அது காரணத்தினுல் அவர் ஜனங்களின்மீது பிரீதியுள்ளவராய் ஜகத்குருவென்கிற திருநாமம் பெற்றார்” என்பதாம்.

“ தத்ராஸி கர்மஸேவாயாம் மஷிர் லிபிவிதௌ ஸ்ம்ருதா
க்ருஷிர் பூகர்ஷணே ப்ரோக்தா வித்யா சாஸ்த்ரோபஜீவநே

இ - ள்: “ஆயுதம் தாங்குகிறதொழில் அஸியென்றும், எழுத்து எழுதும் தொழில் மஷியென்றும், பூமியை உழுது பயிரிடுவது கிருஷி என்றும், வைத்தியம், ஜோஸ்யம், காதனம், நர்த்தனம் முதலானவைகளால் ஜீவிக்கிறதற்கு வித்தை என்றும் பகவானுல் பெயர்கள் சொல்லப்பட்டன” என்பதாம்.

“வாணிஜ்யம் வணிஜாம் கர்ம சில்பம் ஸ்யாத் கரகௌசலம்
தச்ச சித்ரகலாபத்ரச்சேதாதி பஹுதா ஸ்ம்ருதம் ॥

இ-ள்: “வியாபாரத்தொழில் வாணிஜ்யமென்றும், கைகளின் சாமர்த்தியத்தினுல் செய்யும்தொழில் சில்பமென்றும், அந்தக்கரகௌசலமான சில்பமானது-சித்திரம் எழுதுவது இலை உருவமாகக் கத்திரிப்பது, முதலானவைகளையுடையதென்றும், வேறு அநேகவிதமானதென்றும் நினைக்கப்படுகின்றன” என்பதாம்.

"உத்பாதிதா ஸ்த்ரயோ வர்ணா ஸ்ததா தேநாதிவேதஸா ।
க்ஷத்ரியா வணிஜ ஶூத்ராः க்ஷதத்ராணாதிபிர் குணை:॥"

இ - ள்: "ஆதிபிரம்மாவினால், துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனாதி குணங்களினால், க்ஷத்திரியர்கள், வைஸ்யர்கள், சூத்திரர்கள் என்கிற மூன்றுவர்ணங்கள் உண்டுபண்ணப்பட்டன." என்பதாம்.

"க்ஷத்ரியா: ஶஸ்த்ரஜீவித்வ மநுபூய ததா(அ)பவந் ।
வைஶ்யாஶ்ச க்ருஷிவாணிஜ்ய பாஶுபால்யோபஜீவிந:॥"

இ - ள்: "அந்தச்சமயத்தில் வாள்முதலிய ஆயுதங்களினால் யுத்தத் தொழில்செய்து ஜீவித்தவர்கள் க்ஷத்திரியர்களானார்கள்; பயிர், வர்த்தகம், பசுபாலனம் முதலிய தொழில்களினால் ஜீவித்தவர்கள் வைஸ்யர்களானார்கள்." என்பதாம்.

"தேஷாம் ஶுஶ்ரூஷணாச்சூத்ராஸ்தே த்விதா காருகாரவ: ।
காரவோ ரஜகாத்யாஸ்ஸ்யு: ததோ(அ)ந்யே ஸ்யுரகாரவ:"॥

இ - ள்: "மேற்கண்ட க்ஷத்திரியவைஸ்யர்களுக்கு, சுஸ்ருஷைசெய்பவர்கள் சூத்திரர்கள்; அந்தச் சூத்திரர்கள்-காருக்கள், அகாருக்களென இருவகையினராயினர்; அவர்களில் வண்ணான்முதலிய தொழிலாளர் காருக்கள்; மற்றவர்கள் அகாருக்களாவர்." என்பதாம்.

"காரவோ(அ)பி மதா த்வேதா ஸ்ப்ருஶ்யாஸ்ப்ருஶ்ய விகல்பத: ।
தத்ராஸ்ப்ருஶ்யா: ப்ரஜாபாஹ்யா: ஸ்ப்ருஶ்யா: ஸ்யு: கர்த்தகாதய:"।

இ - ள்: "அந்தக்காருக்களில், ஸ்ப்ரஸ்யர்கள், அஸ்ப்ரஸ்யர்கள் என இருவகையினர்; அவர்களில் நாவிதன்முதலிய தொழிலாளர் ஸ்ப்ரஸ்யர்கள்; மற்றவர்கள் அஸ்ப்ரஸ்யர்கள்; இவர்கள் இதராளுக்கு வெளியில் இருக்கக்கூடியவர்கள்" என்பதாம்.

"யதாஸ்வம் ஸ்வோசிதம் கர்ம ப்ரஜா தத்யுரஸங்கரம்॥
விவாஹ ஜாதிஸம்பந்த வ்யவஹாரஶ்ச தந்மதம்"॥

இ - ள்: "பிரஜைகள் சங்கரதோஷமின்றித் தங்கள் தங்களுக்கு யோக்கியமான காரியத்தைத் தரித்தார்கள்; கல்யாணம், ஜாதிசம்பந்த விவகாரங்கள் முதலியவற்றை ஆதிபகவானது ஆக்ஞைப்படி நடத்தினார்கள்" என்பதாம்.

"யாவதீ ஜகதீவ்ருத்தி ரபாபோபஹதா ச யா।
ஸாஸர்வாஸ்ய மதேநாஸீத் ஸஹிதாதா ஸநாதந:" ॥

இ - ள்: "பாபம்வராத ஜீவனம் எதுவோ, அதைப்பிராணிகட்கு பகவான் உபதேசித்தார். ஆகையால் அந்த ஆதிபகவான் தாதா, புராதனர் என்னும் திருநாமங்களை அடைந்தார்" என்பதாம்.

"யுகாதௌ ப்ரஹ்மணா தேந யஸ்மாத் க்ருதயுகம் க்ருதம்।
ததஃ க்ருதயுகம் நாம்நா தம் புராணவிதோ விதுஃ"॥

இ - ள். "யுகாதி பிரம்மாவாகிய அந்த ஆதிபகவானுல், அந்தயுகமானது இந்தப்பிரகாரம் ஏற்படுத்தப்பட்டது; ஆகையினுல் புராணத்தை அறிந்தவர்கள் அந்த கிருதயுகமென்று தெரிந்துகொண்டார்கள்." என்பதாம்.

"ஆஷாடஸ்ய பஹுல பக்ஷஸ்ய ப்ரதிபத் திவஸே க்ருதீ।
க்ருத்வா க்ருதயுகாரம்பம் ப்ராஜாபத்யம் உபேயிவாந்"॥

இ - ள்: "ஆடிமாத கிருஷ்ணபக்ஷ பிரதமை திதியில் கிருதயுகாரம்பத்தைச் செய்தமையால், கிருதியாகிய ஆதிபகவான் பிரஜாபதியென்னும் திருநாமத்தை அடைந்தார்" என்பதாம்.

"இயத்யபி மஹாதேவோ ஷட்கர்மாணி விநியோஜதஃ।
யதாஸௌஸ்த்யம் ததா யாதாஃ ப்ரஜாஃ க்ஷேமேண யோஜிதாஃ"

இ - ள்: "இந்தப்பிரகாரம் ஷட்கர்மங்களையும் ஆதிபகவான் பிரஜைகளுக்கு உபதேசித்தபின், அவர்கள் எப்பொழுது நல்ல இருப்பை அடைந்தார்களோ, அதுமுதல் க்ஷேமமாயிருந்தார்கள்" என்பதாம்.

இந்தச்சுலோகங்கள், மகாபுராணப்-பர்வம்-16-ல் சு 179-முதல் 192-வரை உள்ளவைகள்.

இவ்வாறு ஆதிபகவான் அருளிய ஷட்கர்மத்தொழில்களையும் திருக்குறளாசிரியர் எடுத்து வழங்கியிருப்பது அடியிற்கண்ட குறள்களால் உரைப்படும்:—

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை"

"சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா
லுழந்து முழவே தலை"

"அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்"

"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்"

"ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை"

"முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்"

என்று கூறியிருத்தல் காண்க.

இன்னும் இதற்காதாரமாக ஆதிபகவானருளிய ஷட்கர்மத் தொழில்களை மண்டலபுருடர்செய்த சூடாமணிநிகண்டு தொகுதி. 12-ல்,

"வரைவொடு தொழிலே வித்தை வாணிக முழவே சிற்பம்
உரைசெயும் போக பூமி பொழிவினி லாதி காலம்
விரைசெறி பிண்டி வேந்தன் விதித்தலி னஃதே யம்ம
கருமபூ மியெ னும்பேர் கண்டதுண் டொன்று ஞாலின்"

என்று கூறியிருத்தல் காண்க.

இதுதவிர, ஆதிபகவான், ஜாதித் தொழில்களை அருளிய விவரங்களை மண்டலபுருடர் ஷை சூடாமணிநிகண்டில்,

"ஓதலே யோது வித்த லுடன்வேட்டல் வேட்பித் திட்டல்
ஈதலே யேற்ற லாறு மேற்குமந் தணர் தொழிற்பேர்
ஓதலே வேட்ட லீத லுலகோம்பல் படை பயிற்றல்
மேதகு போர்செய் திட்டல் வேந்தர்செய் தொழில்க ளாறே"
"படைகுடி கூழ மைச்சுப் பற்றிய நட்பி னோடு
நெடுமதி லரசி யற்கு நிகழ்த்திய வாறு பேதம்
மிடையற வோதல் வேட்டல் வேளாண்மை வாணி கத்தி
னுடனிரை காத்த லேரை யுழலாறும் வைசி யர்க்காம்"
"வசியமூ வகையு ளார்க்கு வகுத்தமுத் தொழில்க ளான
பசுவோம்பல் பொருளை யீட்டல் பாரிலேர்த் தொழிலைச் செய்தல்
இசையவே தியருக் கேவல் குயிலுவத் தொழிலி யற்றல்
அசைவில்கா ருக வினைக ளாக்கல்சூத் திரருக் காற்றே"
* "பட்டுநூல் பருத்தி நூலைப் பதனமைத் தாடை யாக்கல்
ஒட்டிய சுமத்த லோடே யாத்தல்கா ருகத்திற் செய்கை
கொட்டலே யூத லெல்லாங் குயிலுவத் தொழிலிற் செய்கை
இட்டஜா திகளுக் கென்றே யிறைமுறை யமைத்த வாறே"

என்ற செய்யுட்களில் கூறுதல் காண்க.

---

* பட்டுப்பூச்சிகளை உற்பத்திசெய்து, பின் அவற்றைக்கொன்று பட்டுநூல் எடுக்குந்தொழில் இப்போது பலவிடங்களில் நடந்தேறிவருகிறது; இது ஜீவஹிம்ஸைக் கேதுவாதலால் ஜைநசமயக் கொள்கைக்கு முற்றும் விரோதமாகும். அப்படியிருக்க நிகண்டாசிரியர் பட்டுநூல்தொழிலை ஏன் சொன்னாரெனில், ஜீவஹிம்ஸையில்லாத சார்ப்பட்டுமுதலாயின உற்பத்திசெய்யுந்தொழில் இருப்பதனாலும், அதுவே முன் அனுசரிக்கப்பட்டு வந்ததாலும் அதையே கூறினாரென்க.

இவ்வண்ணம் பிரஜைகள், ஆதிபகவானருளிய ஷட்கர்மத் தொழில் முதலானவைகளாலே சுகமாக ஜீவித்து வந்தார்கள். அங்ஙனம் ஜீவித்து வருங்காலத்தில் நெடுங்காலஞ் சென்றபின் ஒரு சமயம் பகவானுக்கு தேவேந்திரன் ராஜ்யாபிஷேகம் செய்வதற்கு இதுகாலமெனநினைந்து, தேவர்களோடுங் கூடவந்து விசித்திரமாக மகாபிஷேகமண்டபத்தினை யமைத்து, அதில் சசிமகாதேவியால் பஞ்சரத்ன சூர்ணத்தைக் கோலஞ் செய்வித்து, புஷ்பரத்ன தாமங்களால் அதனை அலங்கரித்து அதனடுவே ஸ்வர்ணரத்னங்களால்சிம்மாதனத்தை நிர்மித்து, அதன்மிசை சுபதின முகூர்த்தத்து பூர்வாபி முகமாக பகவானை எழுந்தருளுவித்தனன்.. பின், ஆநந்தமகாபேரிகள்பத்துத்திசைகளும்செவிடுபடமுழங்க, சுந்தரிகள் நயனாநந்தநர்த்தனம்பண்ண, மங்களங்கள்பாட, தேவசேனை ஜெய ஜெயவென்று துதிக்க, கனககும்பங்களில் நிறைந்த கங்கைமுதலான தீர்த்தங்களாலும், க்ஷீரசமுத்திரஜலங்களாலும் சௌதர்மேந்திரன், ஈசானேந்திரன் முதலான இந்திரர்கள் பகவான் முடிமிசை அபிஷேகம் செய்தனர்; பின்மாகதர் முதலான வியந்தர தேவர்கள் ஸ்வாமியின் ஸ்ரீபாதங்களில் அபிஷேகம் செய்தனர்; பின், நாபிமகாராஜன் அபிஷேகம்பண்ணினன்; பின்னர் சகலஜனங்களும் பகவான் ஸ்ரீபாதங்களில் ஸரயூநதிஜலத்தால் அபிஷேகம் பண்ணி அர்ச்சித்தனர்; பின் திருவாலத்திசுற்றி தேஜோமயமாகிய ஆபரணவஸ்திரங்களாலும் சுகந்த புஷ்பதாமங்களாலும் பகவானை அலங்கரித்து, சனத்குமாரன், மாகேந்திரன் ஆகியவர்கள் சாமரைவீச, சௌதர்மேந்திரன் தவளசத்ரம் (வெண்குடை) எடுப்ப, சிம்மாதனத்தின்மிசை மகம்மேரு போலவீற்றிருந்த பகவான் திருமுடிமிசை நாபிமகாராஜன் த்ரிலோகத்திற்கும் இவனே மகாராஜாவென்று சூளிகை போல முடியைச் சூட்டினன்.

இவ்வண்ணம் சர்வாபரண பூஷிதராகியபகவானை இந்திரன் தன்னுடைய ஆயிரங் கண்களாலும் கண்டு ஆச்சரியமடைந்து ஆநந்த நர்த்தனம்பண்ணி அந்த பகவான் ஸ்ரீபாதங்களை தேவர்களோடு அர்ச்சனைசெய்து சுவாமியிடம் விடைபெற்றுக்கொண்டு சுவர்க்கலோக மடைந்தனன்.

இவ்வாறு சாம்ராஜ்யாபிஷேகத்தை யடைந்தபின் இக்ஷ்வாகு வம்ஸத்திற்கு முதல்வனாகிய பகவான், சோமப்பிரபனையும், ஹரியையும், அகம்பனனையும், காஸ்யபனையும் அழைத்து, இவர்கள் புண்ணியவான்களும் புத்திமான்களும் சௌர்யவான்களு

மாவரென்று திவ்யஞானத்தால் நிச்சயித்து, சோமப்பிரபனுக்கு குருராஜனென்று நாமங்கொடுத்து, அவனை குருவம்ஸத்திற்கு முதல்வனாகவும், ஹரிக்கு ஹரிகாந்தனென்று நாமங் கொடுத்து அவனை ஹரிவம்ஸத்திற்கு முதல்வனாகவும், அகம்பனனுக்கு ஸ்ரீதரனென்று நாமங்கொடுத்து, அவனை நாதவம்ஸத்துக்கு முதல்வனாகவும், காஸ்யபனுக்கு மகவானென்று நாமங்கொடுத்து அவனை உக்ரவம்ஸத்துக்கு முதல்வனாகவும் நியமித்து, அவர்களுக்குப் பட்டங் கட்டி, அவர்களொவ்வொருவரையும் நாலாயிரம் இராஜாக்கள் சேவிக்கும்படி பண்ணியருளி, அவர்களுக்கு நாடுகளும் வகுத்துக்கொடுத்து, "நீங்கள் பாற்பசுவில் பால் கொள்வதுபோலப் பிராணிகள் வருந்தாமல் பிரஜைகளிடம் இறைகொண்டு ஜீவிப்பீர்களாக" என்று அவர்களுக்கு ஆக்ஞாபித்து மேலும், "துஷ்டஜனங்களை நிக்ரகித்தும், சிஷ்டஜனங்களைப் பரிபாலித்தும், குற்றத்துக்குத்தக்கதண்டனை வகுத்தும் அரசு நடத்துமின்" என்றும் கட்டளையிட்டருளி, அவர்களை பிரஜாரக்ஷகராகப்பண்ணியருளினர்.

இவ்வாறு செய்த பகவான், தம்முடைய ஏகச்சத்ரசாயையாலே 63-நூறாயிரம் பூர்வமாகிய சாம்பிராஜ்ஜியகாலமெல்லாம் ஜகத்தினை ரக்ஷித்தருளினர். அங்ஙனம் ரக்ஷித்து வரும்போது ஒருநாள் பகவான், சிம்மாதனத்தின்மிசை இந்திராதி தேவர்களும், பரதாதி புத்திரர்களும், குருராஜன் முதலாகிய நரபதிகளும்போற்ற மேருவைப்போல எழுந்தருளியிருந்து, திவ்விய ஸ்திரீகளினுடைய நர்த்தனங்கண்டருளினர். அப்போது நீலாஞ்சனையென்னும் திவ்விய ஸ்திரீ நர்த்தனப்பண்ணி ஆயுஷ்யம் க்ஷயமாகி ஒரு இமைப்போதில் மின்னல்கொடிபோல அத்ரஸ்யமாயினள்.

பகவான், அதைக்கண்டு சம்ஸார விரக்தராகி சாம்பிராஜ்ஜிய விபவத்தை வெறுத்து ஜேஷ்டபுத்திரனாகிய பரதனுக்கு ராஜ்ஜிய பதத்தினையும், பாகுபலி குமாரனுக்கு யௌவராஜ்ய பதத்தினையும் அபிஷேக புரஸ்ஸரமாகக்கொடுத்து, மற்றபுத்திரர்களுக்கும் நாடுகளை வேறுவேறாகப்பிரித்தும் கொடுத்தனர். பின்பு தேவேந்திரர்களாற் பண்ணப்பட்ட பரிநிஷ்க்ரமணமென்னும் தீக்ஷாகல்யாணத்தை அடைந்தனர்.

பின்னர், ஆதிபகவான் புத்திரனும், ஆதிசக்ரவர்த்தியுமாகிய பரதேஸ்வரன் ஒருசமயம் ஆஸ்தானமண்டபத்திலிருக்கும்போது

ஒருவன் அதிப்ரீதியினோடும் அவனிடம்வந்து, பகவானது கேவ
லோற்பத்தியினை அறிவித்தனன்; மற்றொருவன்வந்து ஆயுதசாலை
யுள் சக்கரோற்பத்தியினை அறிவித்தனன்; மற்றொருவன் வந்து
அர்க்ககிர்த்தி குமாரனாகிய புத்திரோற்பத்தியினை அறிவித்தனன்.
சக்ரவர்த்தி, ஏககாலத்தில் மூன்றினையுங்கேட்டு "தர்மார்த்தகாம
மென்னும் த்ரிவித புருஷார்த்தங்களும் ஏககாலத்தே நமக்கு எய்
தியவாறென்னே!" என்று சந்துஷ்டனாகி, மூன்றினுள் தர்மமே
மூலசாதனமாதலால் தர்மகாரியமாகிய பகவத்பூஜையைப் பண்ணு
வோமென்றுநிச்சயித்து, தன்பிராதாக்களோடும், அந்தப்புர பரி
வாரத்தோடும், பௌர ஜனங்களோடும், பூஜாதிரவியங்களையுங்
கொண்டு, ஆனந்தமகாபேரிமுழங்க, மகாபக்திமிகுந்து, சமவசரண
மடைந்து, மானஸ்தம்பம், ஸ்தூபை, தர்மசக்ரம், மற்றுமுள்ள
மங்கலங்கள் ஆகியவற்றைப்பூஜித்து, ஆலயத்துட்புகுந்து அஷ்ட
மகாப்ராதிஹார்யங்களால் விளங்கி எழுந்தருளியிருந்த பகவானைக்
கண்டு நானாவித ஸ்துதிகளால் துதித்தும், அர்ச்சித்தும் பின்பு
பகவானிடம் புருஷார்த்த சாதனமாகிய தத்வஸ்வரூபத்தினை
பிரஸ்னம்பண்ணினன்.

பகவானும், அவன் விருப்பத்திற்கிசைந்து, அபிநவமேகத்
வனிபோன்று, ஸ்ரவணமதுரமாகிய நாநாபாஷைகளாக விரியும்
திவ்வியபாஷையினால், ஜீவ, புத்கல, தர்ம, அதர்ம, ஆகாச, கால
மென்னும் ஷட் திரவியங்களையும், அவற்றினுடைய பேதாபேதங்
களையும், சம்யக்தரிசன ஞான சாரித்திரமாகிய மோக்ஷமார்க்கங்
களையும். அவற்றின் பலமாகிய புருஷார்த்தங்களையும் விரிவாகக்
கூறி அருளினர். அவற்றைக்கேட்டுத் தத்வார்த்தங்களை விளக்க
மாக வுணர்ந்த பரதேஸ்வரன், சம்மியக்தரிசனாகி மகாரத்னத்திர
யத்தை நாயகமணியாக உடைத்தானவையாகிய விரத சிலங்களெ
ன்கிற முக்தாபலங்களால் செய்த மகா ஆரத்தை, முக்திசாம்பி
ராஜ்ஜியத்திற்குரிய கர்ணிகைபோல இருதயத்திடைத்தரித்தனன்.

பின்பு பரதசக்ரவர்த்தி, சக்ரபூஜையினையும், புத்திரோற்பத்
திக்குரிய கல்யாணத்தையும் செய்துகொண்டு, ஜயத்தின்பொரு
ட்டு மகுடபத்த ராஜாக்களோடும், கரிதுரக ரதபதாதிகள் சூழ,
ரத்தினத்தினால் நிர்மிக்கப்பட்ட அஜிதஞ்செயமென்னும் திவ்விய
ரதமேறி, அறுபதினாயிரம் சம்வத்ஸரம் ஷட்கண்டங்களினும் திக்
விஜயம்செய்து, மாகதன் முதலான வியந்தரதேவர்களையும், வித்
தியாதரர்களையும் ஜெயித்து, நரர்சுரர் முதலானவர்களையும் தன்

வசமாக்கி, மகுடபத்த ராஜாக்களோடும், கணபத்தராகிய தேவர்களோடும், வித்தியாதரர்களோடும், தன்மகாசேனையோடும் திரும்பி அயோத்திவந்தடைந்து, ராஜபவனம் பிரவேசித்துச் சுபதினத்து நரசுரவித்தியாதராதிபதிகள் துதிக்கச் சிம்மாசனத்தின்மிசை அமர்ந்து, மனுவென்றும், சக்கரவர்த்தியென்றும், ராஜராஜனென்றும், ஷட்கண்டாதிபதியென்றும் மகாவிபூதியோடுஞ் சாம்பிராஜ்ஜியாபிஷேகம் பண்ணப்பெற்றுத் தன் ஏகசக்ராசனையாலே உலகத்தைப் பரிபாலனம் பண்ணிவந்தான்.

இவ்வாறு அரசுபெற்ற பரதசக்கரவர்த்தி, காள, மகாகாள, பாண்டு, மாணவ, சங்க, நைசர்ப்ப, பத்ம, பிங்கல, நாநாரத்னமென்னும் ஒன்பது நிதிகளுடனும், சக்கரம், சத்ரம், (குடை), வாள், தண்டம், சூடாமணி, சர்மம், (தோல்), காகிணீ என்கிற ரத்னம் ஆகிய ஏழு அஜீவரத்னங்களுடனும், கிரகபதி, சேனாபதி, விஸ்வகர்மா, புரோகிதன், அஸ்வம், கஜம், ஸ்திரீ ஆகிய ஏழுஜீவரத்னங்களுடனும், மற்ற போக சாதனங்களோடும் பூர்வகிருத புண்ணியோதயத்தால் சாம்பிராஜ்ஜிய சுகம் அநுபவித்துவரும் நாளில், தன்னுள்ளத்தே, "நமது புஜபலத்தால் ஆர்ஜிதமான அபரிமிதமாகிய பொருள்களெல்லாம் பரோபகாரார்த்தமாக உபயோகமாகும்படி பண்ணவேண்டும்; ஜிநபூஜையினையும், பாத்திரதானத்தினையும் பண்ணுதல் முக்கியம்; பாத்திரங்களுள் நிவர்த்தராகிய தபோதனர்கள் வஸ்துவாகனபூமியாதிகளை நம்பக்கல் பரிக்கிரகியார்; இதற்கு என்னசெய்யலாம்" என்று யோசித்தான். இதற்கிணங்கத் திருக்குறள் ஆசிரியரும்,

"இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந் தற்று"

என்று கூறியிருக்கின்றனர்.

மேற்கூறிய படி நினைத்த சக்கரவர்த்தி, அக்காலத்தில் ஆதிபகவான் அருளிய ஷட்கர்மத்தொழில்களாலே பிரஜைகள் சுகமாய் ஜீவித்து வந்தமையாலும், பொருள்களையாசிப்பாரில்லாததாலும், ஆதிபகவானால் வகுக்கப்பட்ட க்ஷத்திரியர், வைஸ்யர், சூத்திரர், முதலான கிரகஸ்தருள் தானம் பெறப் பாத்திரமாவார் யாவரோவென நினைத்து அவர்களைப் பரீக்ஷித்தறியும்பொருட்டு மகுடபத்தராகிய நரபதிகளை அழைத்து, "உங்கள் உறவின்முறையாரையும், பரிஜனங்களையும், உங்கள் தேசத்தில் வசிக்கும் விசிஷ்

டஜனங்களையும் அழைத்துக்கொண்டு நீங்கள் பௌர்ணமிதினத்து யான் பண்ணுகிற பகவதருகத் பூஜைக்கு வருவீராக" வென்று அவர்களிடம் சொல்லி, அவர்களை அனுப்பிவிட்டுப் பருவதினத்து, மலர்ந்தபுஷ்பங்களாலும், நனைந்த அங்குரங்களாலும், சிவந்த தளிர்களாலும், விரிந்தகனிகளாலும் தன்கிரக வெளியினை நிரப்பிவைத்தான். அப்போது முன்னே அவன் ஆக்ஞைபெற்றுச் சென்ற ராஜாக்கள் தங்களைச்சார்ந்த பரிஜனங்களோடு வந்து, மகாஜனங்களை ராஜாங்கண புறத்தே நிறுத்திவிட்டுத் தாங்கள் மட்டும் உட்புகுந்து சக்கரவர்த்தியைக் கண்டு நமஸ்கரித்து, "நாங்கள் நின்னேவலைச் செய்தோம்" என்று விக்ஞாபித்தனர்.

அப்போது சக்கரவர்த்தி, "உங்களுடன் வந்தவர்களை அழைமின்" என, அவர்கள் அவ்வாறே அவர்களை அழைத்தார்கள். அவர்களிற் சிலர் உட்புகுந்து சக்கரவர்த்தியைக்கண்டு நமஸ்கரித்து நின்றனர். அப்போது சக்கரவர்த்தி அவர்களைநோக்கி, "இன்னமும் சிலர்புறத்தே நிற்கின்றனரோ?" வென்றுவினவ, அவர்கள், "இன்னும் சிலருண்டு" என்று உரைத்தனர். சக்கரவர்த்தி, "அவர்களையும் அழைமின்" என்றனன். அவர்கள் சக்கரவர்த்தியின் ஆக்ஞைப்படி வெளியில் நின்றவர்களை, பிராசுகமாகிய வழியினாலழைத்துக்கொடுவந்தார்கள். வந்தவர்கள் சக்கரவர்த்தியை வணங்கினார்கள். அவ்வாறு நமஸ்கரித்தவர்களை சக்கரவர்த்திபார்த்து, "நீங்கள் முன்பக்கம் வாராததற்குக்காரணமென்ன?" என்று கேட்டான். அவர்கள், "ராஜாதிராஜனே! நின்னுடைய ராஜாங்கணம் புஷ்பபல்லவாதிகளால் நிரப்பப்பட்டிருத்தலின், நாங்கள் ஏகேந்திரிய ஜீவஹிம்ஸாநிவர்த்த ரல்லோமாகிலும் இன்று பருவமாதலின் அந்நிவர்த்தராகி, உபவாசவிரதத்தையுந் தரித்து, தயாளர்களாகி, சாவத்திபத்திற்குப் பயப்பட்டு, அவ்வழியில் வந்தால் அவற்றிற்கு ஹிம்ஸை உண்டாகுமென்று புகுதாதொழிந்தனம்; நாங்கள் பகவான்திருவாய்மொழியிலே அங்குரமுதலாகிய ஹரிதங்களுள் அநந்தநிகோத ஜீவன்களுளவென்று கேட்டறிந்துளோம்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

இத்தன்மையுடையவர்களின் நெறியைத்தான் குறள் ஆசிரியர்

"நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி."

என்று கூறினர்.

பின்னர் பரதசக்ரவர்த்தி, இவர்களை * அணுவிரததாரிகளென்று நினைந்து, முன்புபுகுந்த மகாஜனங்களை நீக்கி, இவர்களுடைய பதினொருகுணஸ்தானமுறைமையாலே சன்மானம் பண்ணுதற்கு லக்ஷணமாக பத்மமென்னும் நிதியினில் வாங்கிய ஸூத்ரங்களால் இவர்களுக்கு குணஸ்தான கிரமத்தாலே ஒருஸூத்ரமுதலாகப் பதினொரு ஸூத்ரமீருகயக்ஞோபவீதங்களை இட்டுப் பின் கிரமத்தோடுசன்மானம் பண்ணி, வஸ்துவாகனபூமிகளையும்தானம் பண்ணி, ஏழாம்அங்கமாகிய உபாஸகாத்யயனவேதத்துள் அருளிச் செய்யப்பட்ட ஆரியஷட்கர்மங்களை விருத்தியாக உபதேசித்தான்.

(இங்கு ஒரு ஸூத்ரம் முதலாகப் பதினொரு ஸூத்ரமீருக யக்ஞோபவீதம் பெற்றுக் கொண்டவர்கள்தாம் தரிசனிகன் முதலாக உத்திட்டபிண்டன் வரையில் உள்ள பதினொருநிலை ஶ்ராவகர்கள்.)

## ஆரியஷட்கர்மங்களாவன:

அத்தியயநம், அத்தியாபகம், யஜநம், யாஜநம், தாநம், பிரதிக்கிரஹணம் என்பனவாம்.

இவற்றை மண்டலபுருடரும் சூடாமணிநிகண்டில்,

“ஓதலே யோது வித்த லுடன்வேட்டல் வேட்பித் திட்டல்
ஈதலே யேற்ற லாறு மேற்குமந் தணர் தொழிற்பேர்”

எனவிளக்கியிருக்கின்றனர்.

இவ்வண்ணம் அணுவிரததாரிகட்கு ஜீவனோபாயமாக சக்கரவர்த்தி, ஆரியஷட்கர்மங்களை உபதேசித்து, மீண்டும் இந்தக் கிரியைகளுக்கு அனுஷ்டிக்கவேண்டிய ஐம்பத்துமூன்று கர்ப்பான்வயகிரியைகளையும், நாற்பத்தெட்டு தீக்ஷான்வய கிரியைகளையும், ஏழு கர்த்ருன்வயகிரியைகளையும், அதிபாலசைத்திய முதலான பத்துவகைப்பட்ட அதிகாரங்களையும், இவைகளுக்கு அங்கமாக தீர்த்தங்கர பரமதேவர்களை அதிதேவதைகளாகவுடைய கார்கபத்தியமென்னும் அக்னியினையும், கணதர தேவர்களை அதிதேவதைகளாகவுடைய ஆஹவநீய மென்னும் அக்னியினையும், ஒழி

---

* அணுவிரதமாவது:
“பெரிய கொலைபொய் களவொடு காமம்
பொருளை வரைதலோ டைந்து”
என அருங்கலச்செப்பில் கூறுவனவற்றை அகற்றி யிருத்தலாம்,

ந்த கேவலிதேவர்களை அதிதேவதைகளாகவுடைய தக்ஷிணாக்னி யென்னும் அக்னியினையும், இவைகளின் வேதிகையுள்வைத்து பூஜிக்கப்படும் ஜிநேந்திரப்பிரதிமையினையும், சத்ரத்ரயத்தினை யும், இவற்றைப் பூஜிக்கும் கிரமங்களையும் உபதேசித்து, மீண்டும் முன்சொன்ன கிரியைகளுக்கும், புண்ணியாக்னி மூன்றினும் ஹோமம் பண்ணுவதற்கும் ஜிநேந்திரப்பிரதிமை முதலானவற் றைப் பூஜித்தற்கும் சாதனமாகிய பீடிகாமந்திரங்களையும், ஜாதி மந்திரங்களையும் அவர்களுக்கு உபதேசித்தான்.

இவ்வண்ணம் மனுவாகிய சக்ரவர்த்தி பிராம்மணவர்ணா ஸ்ரமத்தைச் சிருஷ்டித்து, த்ரைவர்ணத்தார்க்கும் யோக்கிய மாகிய விருத்தியினையும், கிரியைகளையும், புண்ணியாக்னிகளையும் அவர்களுக்கு உபதேசித்து சன்மானத்தோடுங்கூட தானங்களை யும் பண்ணினான்.

பரதேஸ்வரசக்ரவர்த்தி மேற்சொன்னபடி பிராம்மணரைச் சிருஷ்டித்து, உபாஸகாத்யயன வேதத்தினையும், புண்ணியாக்னி மூன்றினையும், ஹோமம்பண்ணுதற்குச் சாதனமாகிய பீடிகாமந் திரங்களையும், ஆரியஷட்கர்மதொழில் முதலானவற்றையும் உப தேசித்ததுபற்றிக் குறளாசிரியர்,

“ அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியா
நின்றது மன்னவன் கோல்.”

என்று கூறியிருக்கின்றார்.

பரதசக்ரவர்த்தி, இவ்வண்ணம் பிராம்மணர்களுக்கு சன்மா னம்செய்ததினாலேயே லோகத்திலுள்ளக்ஷத்திரியர் முதலானசகல ஜநங்களும் அவர்களுக்கு அன்றுமுதல் சன்மானம் பண்ணிப்பா த்ர தானமென்னும் தானங்களையும் பண்ணினார்கள்.

மேற்கண்டபடி, பரதசக்ரவர்த்தி, ஸ்ராவணசுத்த பூரணை யும், ஸ்ரவணநக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் பிராம்மணவர் ணாஸ்ரமத்தைச் சிருஷ்டித்துப் பதினோருநிலை ஸ்ராவகாசாரங்களை யும், யஜநமுதலான ஆர்யஷட்கர்மத்தொழில்களையும் பிராமணர் களுக்கு உபதேசித்து, அவர்கள் யக்ஞோபவீதம் தரிக்கச்செய் தனர். அந்தகாளாகிய ஸ்ராவணமாஸபருவதிதியில் ஸ்ரவண நக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் ஜைநர்கள் இக்காலத்திலும் ஜிநா லயத்தின்கண், அருகத்பகவானுக்கு விசேஷபூஜைகளையும், ஹோம

ங்களையும்செய்து, யக்ஞோபவீதத்திற்கு நாற்றெட்டுச் சாந்திமந்திரங்களையும் ஆஹூதிசெய்து, அடியில்கண்ட சங்கல்பத்தைச்சொல்லி யக்யோபவீதம் தரித்துக்கொண்டு வருகின்றனர்.

## சங்கல்பமாவது:—

ஓம், அத்தியபகவதோ, மஹாபுருஷஸ்ய, ஸ்ரீமதாதி, பிரம்மணோமதே, த்ரைலோக்கியமத்திய மத்தியாஸீனே,மத்தியமலோகே, திவ்விய ஜம்பூவிருக்ஷ, லக்ஷித, ஜம்பூத்வீபே, சுமேரோர் தக்ஷிணே, பரதக்ஷேத்ரே, ஆரியக்கண்டே, பிரதிபன்ன தக்ஷிண, துண்ட்ரதேஸே, அஸ்மின்விஷயே, ஜிநதாபிராமக்கிராமே, ஜிநகஞ்சிநகரே, ஏததவசர்ப்பிணி, காலாவஸான,பிரவர்த்தமான கலியுகாபிதானே, பஞ்சமகாலே, ப்ரதமபாதே, மஹாதிமஹா வீரவர்த்தமான தீர்த்தங்கரோபதிஷ்ட, சத்தர்மவ்யதிகரே, ஸ்ரீ கௌதமஸ்வாமி பிரதிபாதித, ஸன்மார்க்க ப்ரவர்த்தவே, ஸ்ரேணிக மகாமண்டலேஸ்வா, சேலினி ப்ரபர்த்தி சமாசரித, ஸன்மார்க்காவசேஷ, ஸகாப்தகால, பிரவர்த்தமான, அக்ஷயநாமஸம்வத்ஸரே, தக்ஷிணயனே, வருஷருது, ஸ்ராவணமாஸே, சுக்கிலபக்ஷபௌர்ணமிதிதௌ, சோமவாஸரயுக்தாயாம், ஸ்ரவண (அவிட்ட) நக்ஷத்திரயுக்தாயாம், சர்வோத்தமே பர்வணி, துஷமஸுஷமாபிதானே, (இநற்காலம்), துரியகாலப்ராரம்பே, அதித்யாதியாபநுதி, விஸிஷ்ட, கர்மானுஷ்டான, நிஷ்டாபாராயண, பிராம்மணாபி ஜநவிதித்ஸாயாம், ஆத்யேனசக்ரிணா, அந்தியேன வேதஸாஷோடஸஸதமேன, குலதரேண, * ராஜரிஷிணா பரதேஸ்வரேண, மங்களார்த்தம், பரீக்ஷார்த்தம்வா, ஸமுத்பாதித. சர்வதான்யாங்குர, பிரஸ்தாரிதப்ரதேஸே, பரீக்ஷயைவ, சம்யக்த்ரஸோ, பிராம்மணா: பிரம்மோபலக்ஷித, யக்ஞஸூத்ரஸந்தாரணாதாவிர்ப்பூதா: தேஷாம், யக்ஞோபவீத, ஸந்தாரணார்த்தம், விதியமானஸ்ய, ஹோமகர்மணே, நாந்திமுகே,புண்யாஹவாசனம் கரிஷ்யே, யக்ஞோபமந்த்ரேண, யக்ஞோபவீதாஹூதிம், தத்வாயக்ஞோபவீதம் ஸந்

* பரதசக்ரவர்த்திக்கு ராஜரிஷியென்று நாமமுண்டாயினதற்குக் காரணம்: இவர்ராஜ்யாதி விபவங்களெல்லாம் அநுபவிக்குந் தன்மையுடையவராயிருந்தும், தாமரையிலையின் மேலிலின்ற ஜலம் பற்றில்லா திருத்தல்போல, சகலவிஷயங்களிலும் பற்றற்று அந்தரங்கசுத்தியுடையவராயிருந்ததனாலும், முற்றுந்துறந்து தவத்திற்குச்சென்றதும் அந்தர்முகூர்த்தத்தில் கேவலஞானத்தை அடைந்து மோக்ஷமடைந்ததனாலும் இவருக்கு இப்பெயர் ஏற்பட்டது.

தார்ய, ஆசம்ய, ஓம்பூர்ப்புவஸ்வாஹா இத்தியாதினுதிலஹோர்ம கிருத்வாவாசனும், க்ரண்ணியாது. (இதித்ரைவர்ணிக ஸ்ராவண சங்கல்ப)

யக்ஞோபவீதம் தரித்துக்கொள்ளும் மந்த்ரம்:

𑌓𑌂 𑌅𑌤𑌿 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾 𑌸𑌮 𑌉𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌂 𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤
𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 । 𑌰𑌤𑍍𑌨𑌤𑍍𑌰𑌯 𑌮𑌿𑌤𑌿 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍋𑌮𑌿 𑌕𑌲𑍍𑌮𑌷𑌾𑌪
𑌹𑌾𑌰𑌣 𑌭𑍂𑌷𑌣𑌂 ॥

இ-ள்: "அத்யர்தம் நிர்மலமான முத்துக்களைப்போல மஞ்ஜுளமாயிருக்கிறதும், அத்யர்தம் பரிசுத்தமாயிருக்கிறதுமான யக்ஞோபவீதத்தை ரத்னத்ரயமென்று பாபத்தைப் போக்கும்படியான ஆபரணமாகச் செய்கிறேன்" என்பதாம்.

𑌕𑍇𑌵𑌲𑌜𑍍𑌞𑌾𑌨 𑌸𑌾𑌮𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌯𑍌𑌵𑌰𑌾𑌜𑍍𑌯 𑌪𑌦𑌾𑌪𑍍𑌤𑌯𑍇 ।
𑌰𑌤𑍍𑌨𑌤𑍍𑌰𑌯 𑌮𑌿𑌤𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌕𑌣𑍍𑌠𑌾𑌭𑌰𑌣 𑌭𑍂𑌷𑌾𑌸𑍍𑌤𑍁 𑌨𑌃 ॥

இ-ள்: கேவலஞானத்தையே சக்ரவர்த்திபதமாக வடைத்தாயிருக்கிறதும், ரத்னத்ரயங்களினல் பரிமிதமாயிருக்கிறதுமான யக்ஞோபவீதமானது, யுவராஜ்யத்தை அடையும்பொருட்டு எங்களுக்குக் கண்டத்துக்குப் பூஷணமாக ஆகக்கடவது" என்பதாம்.

இவற்றால் பிராம்மண, க்ஷத்ரிய, வைசியரென்னும் மூன்று வர்ணாஸ்ரமத்தினர், உபநயனமுதலான க்ரியைகளையுடையவர்களாய் யக்ஞோபவீதம் தரித்துக்கொள்ளக்கூடியவரென்பதை, சாஸ்திரம் உறுதிப்படுத்துகிறதுவிளங்கும். இந்தமூன்றுவர்ணாஸ்ரமத்தினரும், ஆதிபகவானுலும், பரதசக்ரவர்த்தியாலும், உபதேசஞ்செய்யப்பட்ட தரிசனிகன் முதல் பதினொரு நிலேஸ்ராவகாசாரத்தின் விரதானுஷ்டான சீலாசாரங்களின் ஒழுக்கத்தை ஏற்றுக்கொண்டமுறைமையால்ஸ்ராவகர்களெனப்பொதுப்பெயரும்,தொழிலின் காரணத்தால் பிரம்ம, க்ஷத்ரிய, வைசியரென்னும் பேதங்களுமுடையவர்களாய் கர்மபூமியின் ஆதிகாலந்தொடங்கி யக்ஞோபவீதம் தரித்துக்கொண்டு வருவாராஞர்கள். இன்னும்,

சிலப்பதிகாரத்தின் சரித்திரநாயகனுகிய கோவலன், ஜைந வைசியனுயிருந்ததுபற்றி அவனை இளங்கோவடிகள் சிலப்பதிகாரம்-கொலேக்களக்காதைவரி 18ல் "சாவக (ஸ்ராவக) நோன்பிகளடிகளாதலின்" எனக்கூறியதற்கு, அரும்பதவுரையாசிரியர் "இரவில் உண்ணூர்" என்றும், அடியார்க்கு நல்லார், "துறவாது

விரதங்காத்தலால் அடிகளென்றார் கோவலனரை" என்றும் விள க்கியிருப்பதலால் பிரம்ம, க்ஷத்ரிய, வைசியர் மூவர்களுக்கும் ஸ்ராவகர் என்றபெயர் உண்டென்பதை நன்கு அறிதல்கூடும். தவிர, இம்மூவர்களுக்கும் சமத்துவமுண்டென்பதை அடியிற் கண்ட த்ரைவர்ணிகாசாரமென்னும் பிரதிஷ்டாதிலகம்-26-வது சுலோகம் விளக்குகிறது.

"𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌗𑍃𑌹𑍇 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾 𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑌦𑍍𑌮𑌨𑌿 ।
𑌵𑍈𑌶𑍍𑌯𑌾 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌗𑍃𑌹𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌭𑍁𑌂𑌜𑌂𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑌸𑌦𑍍𑌮𑌨𑌿 ॥

இ-ள்: "க்ஷத்திரியர் மனையிலே பிராம்மணர்களும், வைசியர் வீட்டிலே க்ஷத்தியர்களும், க்ஷத்தியர்மனையிலே வைசியர்களும், பிராம்மணர் மனையிலே சமஸ்தர்களும் போஜனம் செய்கிறார்கள்" என்பதாம்.

இனி, காயத்ரிமந்த்ரங்களைப்பற்றி ஆராய்வோம்: இந்தமந்திரத்தை, ஜைநர்களும், ஸ்மார்த்தம், மார்த்வம், வைணவம் முதலான சமயங்களிலுள்ள பிராம்மணர்களும் ஜபம்செய்துகொண்டு வருகிறார்கள். ஆகையினால் சகல நண்பர்களும் இதன் உண்மைக் கருத்தை அறியும்பொருட்டு இதை, வடமொழி தென்மொழி அக்ஷரங்களில் எழுதி விளக்குவாம்.

𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀 𑌮𑌂𑌤𑍍𑌰𑌂 ॥

𑌓𑌂 𑌭𑍂𑌰𑍍𑌭𑍁𑌵𑌸𑍍𑌸𑍁𑌵𑌃 𑌤𑌤𑍍𑌸𑌵𑌿𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌂 𑌭𑌰𑍍𑌗𑍋 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌧𑍀𑌮𑌹𑌿 𑌧𑌿𑌯𑍋 𑌯𑍋 𑌨𑌃 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 𑌆𑌪𑍋 𑌜𑍍𑌯𑍋𑌤𑍀 𑌰𑌸𑍋𑌽𑌮𑍃𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 ॥

𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌯𑌾𑌃 [illegible]

𑌆𑌪𑍋 𑌜𑍍𑌯𑍋𑌤𑍀𑌰𑌸𑍋𑌽𑌮𑍃𑌤𑌂 ॥ 𑌆𑌪𑌃 𑌜𑌗𑌜𑍍𑌜𑍀𑌵𑌨𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌾 [illegible] 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿 [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

தேவஸ்ய — [illegible]

வரேண்யம் — ஶ்ரேஷ்டம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

(இந்தக் காயத்ரி மந்த்ரம் ஸம்ஸ்கிருத வியாக்யானம் பழைய ஏட்டுப் பிரதியிலிருந்து எழுதப்பட்டது).

மேல் சொன்ன காயத்ரி மந்த்ரம் விருஷப தீர்த்தங்கரராகிய ஆதிபகவானை எண்பித்திருக்கிறது. இந்த மந்திரமும் இதன் தாத்பர்யமும் சம்ஸ்கிருதத்தில் பயிற்சியில்லாத பல நண்பர்களுக்கு விளங்காதாதலால் அவர்களுக்கும் விளங்கும்பொருட்டு இவற்றைத் தென்மொழியிலும் சுருக்கமாக விளக்குவாம்:

## காயத்ரி மந்த்ரம்.

ஓம் பூர்ப்புவஸ்வஹ தத்ஸ விதுர் வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி-தியோ யோ நஃ பிரசோதயா தாபோ ஜ்யோதி ரஸோ ம்ரதம் பிரம்ம.

இ - ள்: யஃ-எவர், நஃ-(காலாங்காலத்தில், புக்தி முக்தி மார்க்கங்கள் தெரியாமலிருக்கிறவர்களும், பசியினால் துக்கிதர்களானவர்களுமாகிய) எங்களுக்கு, ஆபஃ - (ஸ்நாணபாநாதிகளுக்கு உபயோகமான

ஜலத்தையும், ஜ்யோதிஃ-(ஆகாராதிகளின் சமையல் முதலானவற்றிற்கு உபயோகமான) அக்னியையும், ரஸஃ- (உணவுகளுக்கு உபயோகமான தித்திப்பு முதலாகிய) ஷட்ரஸவஸ்துக்களையும், அம்ருதம்-(பசுமுதலான வற்றில் கறவைசெய்யும்) பால்முதலானவற்றின் உபயோகமுறைமையையும், ப்ரம்ம-அன்னம் பவ பக்ஷணத்யனுபவ முறைமையையும், நிபஃ - (ஆர்கர்த்ய பதமடைந்த பிறகு கிரகஸ்தர் முனிவர் முதலானவர்களுக்கு சம்ஸாரமோக்ஷ பிரவர்த்தி நிவர்த்தி நியமங்களையும்) புத்திவிசேஷத்தாலும் கேவல ஞானத்தினாலும், ப்ரசோதயாத் - உபதேசித்தாரோ, தஸ்ய - அப்படி பிரசித்தராயிருக்கிறவரும், பூர்ப்புவஸ்வஹ அதோ மத்திய ஊர்த்வலோகங்கள் மூன்றுக்கும், ஸவிதுஃ-சிருஷ்டிகர்த்தாவா யிருக்கிறவரும், பர்க்கஃ - வினையைவென்றவரும், தேவஸ்ய - (சதுர்த்ரிம் ஸதிசய பஞ்சகல்யாண அஷ்டமகா ப்ராதி ஹார்யங்களால் பிர காசியா நின்றவருமாகிய) ஆதிபகவானுடைய, வரேண்யம் - ஸ்ரேஷ்ட மாயிருக்கிற. ஓம்-ஓங்காராத்மக பிரம்மஸ்வரூபமாயிருக்கிற, அல்லது சத்யோஜாதாதி பஞ்சநாம ஸ்வரூபமாயிருக்கிற, அல்லது, ஆசார்ய உபா த்தியாய, ஸாது, அர்கத்ஸித்தாத்ம பஞ்சபரமேஷ்டி ஸ்வரூபமாயிருக் கிற, அல்லது தேவமயம், தத்வமயம், தபோமயம், என்கிற பரமாத்ம ஸ்வரூபமாயிருக்கிற,தத்-அர்த தாத்ரஸ ஸ்வரூபத்தை, ரத்நத்ரயாராதக த்ரைவர்ணிகாத்விஜர்களாகிய நாங்கள், தீமஹீ - தியானிக்கின் றோம்." என்பதாம்.

காயந்தம்-த்ராயத-இதி-காயத்ரி.

இ - ள்: "இந்த காயத்ரி மந்த்ரத்தை ஜபம்செய்கிற மனுஷ்யனை இது ரக்ஷிக்கிறது" என்பதாம்.

இப்படி முன்னிருந்த கிருதயுகாதி யுகங்களில்உள்ள மனுஷ் யர்களும், கணதராதிபரும், பரதாதிமுதலானவர்களும் காயத்ரிச் சந்தவிதியினால் ஏற்பட்ட காயத்ரிஎன்கிற பேருள்ளமந்திரத்தினால் (ஆதிபகவானை) விருஷபேஸ்வரரை ஸ்தோத்திரம்செய்தார்கள். இக்காலத்திலும் ஜைநர்கள் செய்துவருகின்றார்கள்.

இதிற்குறிப்பிட்ட பஞ்ச பரமேஷ்டிகளை, முப்பத்தைந்து அக்ஷரங்களாலும், பதினாறு அக்ஷரங்களாலும், ஆறு அக்ஷரங்க ளாலும், ஐந்து அக்ஷரங்களாலும், நான்கு அக்ஷரங்களாலும், இரண்டு அக்ஷரங்களாலும், ஹ-ம் அல்லது இங்குக்கூறிய ஓம் என்கிற ஒரு அக்ஷரத்தினாலும், நிர்வாண சுகாபேக்ஷயினால் ஜபம் த்யானமுதலானவைகளால் தியானிப்பதுண்டு. ஆதலின், இதில் ஓங்காரம் பஞ்சபரமேஷ்டிகளின் ஸ்வரூபமென்று கூறப்பட் டது. அவ்வாறு ஓங்காரம் பஞ்சபரமேஷ்டிகளின் ஸ்வரூபமென் பதை விவரிப்பாம்:

# ஸ்ரீ ஓங்காரத்தின் மகிமை.

நமது பிள்ளைகளுக்கு வித்தியாரம்பம் செய்யுங்காலத்திலும், நமது புராணங்களைப் படிக்க ஆரம்பிக்குங் காலத்திலும், 'ஓம்' என்னும் அக்ஷரத்தை நாம் பிரதமத்தில் உச்சரிக்கும் விஷயம் நம் சகோதரர்கள் அனைவரும் அறிந்ததே. ஆயினும், 'ஓம்' என்பதை எதற்காக பிரதமத்தில் உச்சரிக்கவேண்டும்? ஓம் என்னும் அக்ஷரத்தில் என்ன அர்த்தம் அடங்கியிருக்கிறது? என்பவைகளைப் பற்றி நம் சகோதரர்களில் என்னைப்போன்ற சாமானியர் தெரிந்து கொண்டார்களில்லை. அடியிற்கண்ட (ഗാഥൈ) காதை சம்பந்தமானவைகளைக் கவனித்தால் 'ஓம்' என்னும் அக்ஷரத்தில் எவ்வளவு அர்த்தம் அடங்கியிருக்கிற தென்பது தெளிவாய் விளங்கும்.

"അരഹംതാ അസരീരാ ആഇരിയാ തഹ ഉവജ്ഝായാ മുണിണോ ।
പംചക്ഖരണിപ്ഫംണ്ണോ ഓംകാരോ പംചപരമേട്ഠീ" ॥

"இதன் பொருள்: അരഹംതാ=அருகர், അസരീരാ=சரீரமில்லாதவர், அதாவது ஸித்தர், ആഇരിയാ=ஆசாரியர், ഉവജ്ഝായാ=உபாத்தியாயர், മുണിണോ=ஸாதுக்கள், പംചക്ഖരണിപ്ഫംണ്ണോ=இவர்கள் பெயரின் பிரதமாக்ஷரத்தினாலாகிய, ഓംകാരോ പംചപരമേട്ഠീ ஓங்காரம் பஞ்சபரமேஷ்டி ஸ்வரூபமாகும்" என்பதாம்

ஷை காதா அர்த்தத்தைத் திருக்கலம்பகத்தில் அடியிற் கண்டவாறு ஷை நூலாசிரியர் கூறுகிறார்,

"அறிவரிய குணத்தருக னசரீரி யாசிரிய
 னுவாத்தி கோதஞ்
செறிவரிய முனிவரெனுந் திருநாம முதலெழுத்தோ
 ரைந்துஞ் சேர்ந்து
பிறிவரிய வோங்கார முன்னுரைப்பர் பின்னுமதன்
 பெருமை யோரார்
பொறிவழியில் வருநாதர் பொருளில்வறும் பெயர்புனையும்
 புவனத் தாரே."

இ - ள்: "அறிதற்கு அரிதாகிய குணங்களையுடைய,அருகரும், (அசரீரியாகிய)சித்தரும், ஆசார்யரும், உபாத்தியாயரும், முனிவரும் (சாது,) என்றுசொல்லப்படும் திருப்பெயர்களிலுள்ள ஆதியெழுத்துக்களைத்தும்

கூடிப்பிரிதற்கரிதாகிய ஓங்காரத்தை முன்னே சொல்லுவார்; பின்பும் அவ்வோங்காரத்தினுடைய உற்பத்தியினது மேன்மையைப் பகுத்தறியார். ஐம்பொறியினுடைய மார்க்கத்தில் திரிகின்ற தெய்வங்களுக்குப் பொருளில்லாமல், வறுமையாகிய நாமத்தை அலங்கரித்துச் சொல்லும் உலகத்தார்” என்பதாம்.

பதார்த்தஸாரம் உபயோகாதிகாரத்தில்,

“பஞ்சபாரமேஷ்டி நாமாத்யாக்ஷரஸந்தி லக்ஷணத்தில் ஓங்காரமூலமாகுமென்றறிவது” என்று மாகணந்தி ஸித்தாந்த சக்கிரவர்த்தி சொல்லுகிறார். மேற்கண்ட இலக்கண ஸந்தி லக்ஷணத்தைக்கவனிப்போம்:

| | பஞ்சபரமேஷ்டிகளின் பெயர் | முதல் எழுத்து | ஸந்தி லக்ஷணத்தினலாகிய எழுத்து |
|---|---|---|---|
| 1 | அருகர் | ... அ-(a) } | ... அ(a)+அ(p)—ஆ(A) |
| 2 | அசரீரி (ஸித்தர்) | ... அ-(b) } | |
| 3 | ஆசாரியர் | ... ஆ-(c) | ... ஆ(A)+ஆ(c)—ஆ(B) |
| 4 | உபாத்தியாயர் | ... உ-(d) | ... ஆ(B)+உ(d)—ஓ(C) |
| 5 | *முனிகள் (ஸாதுக்கள்) | ... ம் (e) | ... ஓ(C) +ம் (e)—ஓம் (D) |

* இதில் முதலெழுத்து உயிர்மெய் எழுத்தாகிய ‘மு’—ம்+உ.

இலக்கண எழுத்தியல் சந்தி விதிகளின்படி, இரண்டு குற்றெழுத்துக்களாகிய ‘அ+அ’ ஒன்று சேர்ந்தால் “ஆ” என்னும் நெட்டெழுத்தாக மாறும். உதாரணம்:—பரம+அமிர்தம்—பரமாமிர்தம். இந்தநெட்டெழுத்தாகிய “ஆ” (A) வில் முதல் இருவர்களின் முதல் எழுத்துக்களாகிய “அ+அ” இரண்டுமடங்கி யிருக்கின்றன.

நெட்டெழுத்துக்களாகிய “ஆ(A)+ஆ(c)” இரண்டும்சேர்ந்தால் “ஆ(B)” ஒரே நெட்டெழுத்தாகவே நிலைபெறும். உதாரணம்:—“ஸ்ரீஜின+ஆயதனம்—ஸ்ரீஜினாயதனம்.” இந்நெட்டெழுத்தாகிய “ஆ(B)” என்பதில் முதல் மூவர்களுடைய முதலெழுத்துக்களாகிய, அ(a)+அ(b)+ஆ(c) மூன்றும் அடங்கியிருக்கின்றன.

“ஆ(B)” என்னும் நெடிலும், “உ(d)” என்னும் குறிலும் சேர்ந்தால் ஓ “(C)” என்னும் நெட்டெழுத்தாக மாறும். உதாரணம்:—கங்கா+உதகம்—கங்கோதகம். இந்த நெட்டெழுத்தாகிய “ஓ(C)” என்பதில் முதல் நால்வர்களின் முதலெழுத்துக்களாகிய “அ (a)+அ(b)+ஆ(c)+உ(d)” நாலும் அடங்கியிருக்கின்றன.

"ஓ (c)" என்னும் நெடில் "ம் (e)" என்னும் மெய்யெழுத்துடன் சேர்ந்து ஆகிய "ஓம்" என்னும் ஏகாக்ஷரத்தில் ஐவர்களினுடையபெயரின் முதல் அக்ஷரங்களாகிய "அ(a)+அ(b)+ஆ(c)+உ(d)+ம்(e)" ஐந்தும் அடங்கியிருக்கின்றன.

ஓமென்று உச்சரிக்கும்போது, மேற்கண்டபடி அவர்கள் பெயரின் பிரதமாக்ஷரத்தினின்றும், பஞ்சபரமேஷ்டி ஸ்வரூபமும், அவர்களுடைய குணமஹிமையும், அவர்களே வியவஹார நிச்சயரத்னத்ரயமாகிய மோக்ஷமார்க்க வழியில் நின்று மோக்ஷபலத்தை அடைந்தவர்களென்றும், சர்வ ஜீவதயையோடு ஸவ்விய பிராணிகள் ஸம்ஸாரக்கடலைக்கடக்குமாறு தங்கள் ஸ்வய அநுபவத்தை சாஸ்திர மூலமாயஉலகிற்கு நிலை நிறுத்தினவர்களென்றும், இவை முதலிய ஹேயோபாதேய ஞானமடைந்து, ஸமஸ்தஜீவராசிகளுள் ஸவ்விய ஜீவன்கள் உபாதேயமென்றும், அவர்களுள் வியக்தி அபேக்ஷையால் பஞ்சபரமேஷ்டிகளுபாதேயமென்றும் இவை முதலிய பரமார்த்தஸார முழுமையும் மின்னலைப்போல் மனதில் பிரதி பிம்பிக்கவேண்டும். ஓங்காரத்தினின்றும் ஸர்வதத்வத்தையும் அறியும் ஞானமயிற்சியானது, த்ரிகரணத்தில் முக்கியமாகிய மனதை ஓர்வழியில் நிறுத்தி, தர்மசுக்லத் தியானமாகிற ஏகாக்ரசிந்தனைக்கு ஹேதுவாகிறது. இந்த இவ்வளவு அர்த்தம் அடங்கியிருப்பதென்பது அடியில்வரும் பெரியோர்கள்வாக்கினாலும்பிரஸித்தமாகும்.

ஓங்காரம் பிந்து ஸம்யுக்தம் நித்யம் த்யாயந்தி யோகிந: ।
காமதம் மோக்ஷதம் சைவ ஓங்காராய நமோ நம: ॥

இ - ள்: "அபீஷ்டத்தைக் கொடாநின்றதும், மோக்ஷத்தைக் கொடாநின்றதும், பிந்துவுடனே அதாவது சுன்னத்துடனே கூடியிருக்கிறதுமான ஓங்கார அக்ஷரத்தை சதாகாலமும் யோகீஸ்வரர்கள் தியானிக்கின்றார்கள்; அந்த ஓங்காரத்தின் பொருட்டு நமோநம:" என்பதாம்.

" ஓங்காரஸ்ச ஜகத்ஸாரம் நிர்மலம் த்ரைலோக்ய விஸ்தாரகம் ।

இதன்கருத்து: "ஓங்காரமானது உலகில் முக்கியஸாரமுள்ளதாயும், நிர்மலமாயும், அதின் அர்த்தம் த்ரிலோக விஸ்தாரமுள்ளதாயுமிருக்கிறது" என்பதாம்.

இனிவர்ணாஸ்ரமங்களின் உண்மையையும் விளக்குவாம்.

அவஸர்ப்பிணிகால தோஷத்தினால், ஜைநசமயத்தினின்றும் பரதசக்ரவர்த்தி குமாரன் மரீசிமுதலானவர்களால் சைவம், வைணவம், முதலான சமயங்கள் ஏற்பட்டதுபோல, ஆதிபகவான் பரத சக்கரவர்த்தி இவர்களால் ஏற்பட்ட மேற்சொன்ன வர்ணாஸ்ரமங்களினின்றும் சைவ, வைணவ, மார்த்வ, பிராம்மண, க்ஷத்திரிய வைசிய முதலான வர்ணாஸ்ரமப் பிரிவுகள் ஏற்பட்டனவாம். சைவ, வைணவசிந்தாந்தங்கள் சொல்லுகிறபடி பிரம்மாவின் முகத்தில் பிராம்மணரும், புஜத்தில் க்ஷத்ரியரும், துடையில் வைஸ்யரும், பாதத்தில் சூத்ரரும் உண்டாகுமாறு அவர்களை பிரம்மாசிருஷ்டித்தாரென்பது பொருத்த மற்றதாம். ஜைநசமய சித்தாந்தம் மேற்சொன்ன சிருஷ்டியை ஒப்புக்கொள்ளவில்லை. ஏனென்றால் ஜைனமத சித்தாந்தத்தில் பிறப்பின் பேதங்கள் வேறுவகையாகச் சொல்லப்படிருக்கின்றன. அவற்றை,

" ஸம்மூர்ச்சந கர்ப்போபபாதா ஜந்ம "
" ஜராயுஜாண்டஜ போதாநாம் கர்ப்ப: "
" தேவ நாரகாணாம் உபபாத: "
" சேஷாணாம் ஸம்மூர்ச்சநம் "

என்ற தத்வார்த்த ஸூத்ரங்களாலும், இந்த ஸூத்ரங்களின் கருத்திற் கிணங்க

"உரைத்தவிப் பிறப்புப பாத மூர்ச்சனை
கருப்பமு மாமும்மைத் தேவர் நாரகர்க்
குரைத்த வற்றுப பாதஞ் சராயுகவ்
கருப்பமா னவர்களுக் காவ தாகுமே."

" நம்பினுண் ணியவர் நாலறிவு காறுளார்
சம்முச்சப் பிறவியர் விலங்கி லேம்பொறி
விம்மினர் சம்முச்சங் கருப்பத் தாவதாந்
தம்பி லுஞ் சராயுக மண்டம் போதமாம்."

எனவரும் மேருமந்தரபுராணம். 1350, 51 ஆம் கவிகளாலும் நன்குணரலாம்.

இ - ள்: "உயிர்களின் ஜனனமானது உபபாதமென்றும், சம்மூர்ச்சனையென்றும், கருப்பமென்றும் மூன்றுவிதமாகும். இவைகளில் தேவர்களுக்கும், நரகர்களுக்கும்உபபாதப்பிறப்பாகும்; மனிதர்களுக்கு ஜராயு படலத்தோடுகூடிய கருப்பமானது பொருந்தியதாகும்; நமக்குள்

நண்ணியராகிய பஞ்சேந்திரிய லப்தியபரியாப்தகமனுஷ்யருக்கும், ஏகேந்திரிய, த்வீந்திரிய, த்ரீந்திரிய, சதுரிந்திரியஜீவன்கள் வரையில்உள்ளவற்றிற்கும் சம்மூர்ச்சனப் பிறப்பு ஏற்பட்டதாம்; திரியக்ஜீவன்களில் பஞ்சேந்திரியங்களோடுண்டாம் பிறப்புக்களுள் சில சம்மூர்ச்சனப் பிறப்பிலும், சில கருப்பங்களிலும் ஜனிப்பனவாகும்; அந்ததிரியக்கதி கருப்பங்களிலும் ஜராயுபடலத்தோடு கூடிப்பிறப்பதும், முட்டைகளில் பிறப்பதும், குட்டிகளாகப் பிறப்பதும் உண்டு" என்பதாம்.

இன்னும் கோமடஸாரம் ஜீவகாண்டத்தில் உள்ள பிராக்ருத சுலோகங்களின் கருத்துக்களடங்கிய சம்ஸ்கிருத சாயையிலும் யோனிபேதங்களைப்பற்றிய விஷயங்கள் கூறப்படுகின்றன; அவையாவன:—

ஸ்திரீகளின் ஆகாரயோனியின்பேதம் இது அடியிற்கண்ட ஸ்லோகங்களாலும் அவற்றின் கருத்துக்களாலும் விளங்கும்.

"ஶங்காவர்த்தக யோநி: கூர்மோந்நத வம்ஶபத்ர யோநீ ச।
தத்ர ச ஶங்காவர்த்தே நியமாத்து விவர்ஜ்யதே கர்ப்ப:॥

இ - ள்: "ஸ்திரீகளின் ஆகாரயோனி அதாவது உற்பத்திஸ்தானத்தின் வடிவம் மூன்றுவிதங்களாம்; அவையாவன: சங்காவர்த்தயோனி, கூர்மோன்னதயோனி, வம்ஸபத்ரயோனி என்பனவாகும். இவற்றில் சங்காவர்த்தயோனியில் கர்ப்பம் உண்டாவதில்லை" என்பதாம்.

"கூர்மோந்நத யோநௌ தீர்த்தங்கரா: த்விவித சக்ரவர்த்திந:
ராமா அபி ஜாயந்தே ஶேஷாயாம் ஶேஷக ஜநாஸ்து" ॥

இ - ள்: "கூர்மோன்னத யோனியில், விருஷபதீர்த்தங்கராகிய ஆதிபகவான் முதல், மகாவீரர் பரியந்தம் இருபத்துநான்கு தீர்த்தங்கரரும், பாதசகராதி சக்ரவர்த்திகள் பன்னிருவரும், இராமஸ்வாமிமுதலான பலதேவர்கள் ஒன்பதின்மரும், இலக்ஷ்மணர் கிருஷ்ணன்முதலான வாசுதேவர்கள் ஒன்பதின்மரும், இராவணன் ஜராஸந்தன் முதலான பிரதிவாசு தேவர்கள் ஒன்பதினமரும், ஆக அறுபத்து மூன்று சலாகா மகாபுருஷர்கள் பிறப்பார்கள்; வம்சபத்ரயோனியில் இதரஜனங்கள் பிறப்பார்கள்" என்பதாம்.

ஜன்ம பேதவிபரமும் குணயோனி ஒன்பதின் விவரமும் அடியிற்கண்ட சுலோகத்தால் விளங்கும்:

"ஜந்ம வா ஸம்மூர்ச்சந கர்ப்போபபாதாஸ்து பவதி தத்யோநய: ।
ஸசித்த ஶீத ஸம்வ்ருத ஸேதர மிஶ்ராஶ்ச ப்ரத்யேகம்" ॥

இ - ள்: "ஜீவன்கள் உற்பத்தியாகிற ஜன்மபேதங்கள் மூன்றுவகை அவையாவன, சம்மூர்ச்சனம், கர்ப்பம், உபபாதமென்பனவாம். இம்மூன்று பேத ஜன்மங்களில் உற்பத்தியாகும் ஜீவன்களின் யோனிகளின் அதாவது, உற்பத்திஸ்தானங்களின் குணங்கள் ஒன்பது பேதங்களாம். அவற்றிற்கு குணயோனிகளெனப் பெயர்" என்பதாம்.

அந்தஒன்பதுவகைகளாவன:

| | | |
|---|---|---|
| ஸசித்தம். | சீதம். | சம்வ்ரதம். |
| அசித்தம். | உஷ்ணம். | விவ்ரதம். |
| ஸசித்தாசித்தம். | சீதோஷ்ணம், | ஸம்வ்ரதவிவ்ரதம். |

என்பனவாம்.

இனி எண்பத்துநான்கு லக்ஷம் யோனிபேதங்களை அடியிற்கண்ட சுலோகம் விளக்கும்:

"நித்யேதரதா⁴து ஸப்த ச தரு தஶ விகலேந்த்ரியேஷு ஷட் சைவ ।
ஸுரநிரயதிர்யக் சதஸ்ர: சதுர்தஶ மநுஷ்யே ஶதஸஹஸ்ரா:" ॥

இதில் கூறப்படுவன.

| | | | |
|---|---|---|---|
| நித்தியநிகோதஜீவன் | 7-லக்ஷம் | த்வீந்திரியஜீவன் | 2-லக்ஷம் |
| சதுர்கதிநிகோதஜீவன் | 7 ,, | த்ரீந்திரியஜீவன் | 2 ,, |
| ப்ரத்வீகாயிகஜீவன் | 7 ,, | சதுரிந்திரியஜீவன் | 2 ,, |
| அப்புகாயிகஜீவன் | 7 ,, | பஞ்சேந்திரியதிர்யக்ஜீவன் | 4 ,, |
| தேஜஸ்காயிகஜீவன் | 7 ,, | தேவர் | 4 ,, |
| வாதகாயிகஜீவன் | 7 ,, | நாகர் | 4 ,, |
| வனஸ்பதிகாயிகஜீவன் | 10 ,, | மனுஷ்யர் | 14 ,, |

ஆக எண்பத்து நான்குலக்ஷம் யோனிபேதங்களாம்.

இவ்விவரத்தைக்கொண்டு நிலைபேறுடையஜீவன்கள், கர்ப்ப, ஜராயுஜ, அண்டஜ (முட்டை) குட்டிமுதலான எண்பத்துநான்கு லக்ஷம் யோனிபேதங்களில் உற்பவிக்கக்கூடியன வென்பதும், தேவநாரகர்களுக்கு பெட்டிமயமானதில் உற்பத்தியென்பதும், மற்றவை (சம்மூர்ச்சனம்) தனக்குத்தானே உற்பத்தி என்பதும் விளங்கும். ஆதலால் ஐந்துபரத க்ஷேத்திரங்களிலும், ஐந்துஐராவதங்களிலும் பிரளயகாலமுண்டானவிடத்தும், அவை நீங்கிய காலத்தும் ஜீவன்கள் சதுர்க்கதிகளிலேயே உழன்றலைவார்கள் என்பது ஜைநசமயசித்தாந்தம்.

மேற்கூறியவற்ருல் இந்தப்பாதக்ஷேத்திரத்தில் ஆரியகண்டம் போகபூமியாக இருந்தபோது, சர்வஜனங்களும் வர்ணுஸ்ரமங்களின்றிக் கற்பகவிருக்ஷங்களின் பலன்களால் போகோபபோகங்களை அநுபவித்து, அந்தக் கற்பகவிருக்ஷங்கள் மறைந்தபின், தாமே உற்பத்தியான தானியம், பழமுதலானவைகளால் ஜீவித்துவந்தபிறகு, ஆதிபகவான், தம்மால் உபதேசிக்கப்பட்ட, ஷட்கர்மத்தொழில் முதலானவைகளின் முறைமையைக்கொண்டு பூர்வகிருத புண்ணியபாபோதயத்திற்குத் தக்கவாறு யார் யார் எங்தெந்தத் தொழில்களை ஏற்றுக்கொண்டார்களோ அவர்களை திவ்விய ஞானத்திலுலறிந்து, க்ஷத்ரிய, வைசிய, சூத்ரரென்றும், வண்ணுன், நாவிதன், முதலானவர்களை ஸ்ப்ரஸ்யஜாதியென்றும்,சண்டாளன் முதலானவர்களை அஸ்ப்ரஸ்யஜாதியென்றும்வர்ணுஸ்ரமநாமங்களை நியமித்தனரென்பதும், பரமேதஸ்வர சக்ரவர்த்தி, தான்செய்யப்போகும்தானத்திற்குசத்பாத்திரங்கள்யாவரென்பதை அறிய க்ஷத்திரியர் முதலானவர்களை, சிவந்ததளிர் அங்குர முதலானவைகளால் பரீக்ஷித்துப்பார்த்து, அவர்களில் கொல்லாமை முதலாகிய அணுவிரதங்களின் ஒழுக்கத்தை அநுஷ்டித்தவர்களை பிராம்மணர்களென்று ஏற்படுத்தியதாலும் வர்ணுஸ்ரம பேதங்கள் உண்டாயினவென்பதும் தெள்ளிதில்விளங்கும்.
இன்னும்மனிதர்களின் ஒழுக்கங்களிலுலேயே வர்ணுஸ்ரமபேதம் ஏற்பட்டதென்பதை சாகாரதர்மம் அத்-2, சு-22ல்.

"𑌶𑍂𑌦𑍍𑌰𑍋𑌽𑌪𑍍𑌯𑍁𑌪𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌚𑌾𑌰𑌵𑌪𑍁𑌃𑌶𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌤𑌾𑌦𑍃𑌶𑌃
𑌜𑌾𑌤𑍍𑌯𑌾 𑌹𑍀𑌨𑍋𑌽𑌪𑌿 𑌕𑌾𑌲𑌾𑌦𑌿𑌲𑌬𑍍𑌧𑍌 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌸𑍍𑌤𑌿 𑌧𑌰𑍍𑌮𑌭𑌾𑌕𑍍"॥

என்று கூறுதலாலும் உணரலாம்.

இ- ள்: "சூத்ரனுயிருந்தாலும், ஆஸனாத்யுபகரணம் மத்தியாதி; (கள் மாம்ஸம் தேன்) முதலானவைகளின் நிவர்த்தியும், ஆசாரமும், சரீரசுத்தமும் (உடையவனுயிருந்தால்) இவைகளினுலே ஜிநதர்மம் கேட்பதற்கு யோக்கியனுகிறுன்; (ஆதலின்) அந்த ஜீவன் காலப்பிராப்தி பெற்ற விடத்தில் ஸ்ராவகதர்மத்தை அனுஷ்டிப்பவனுகின்ருன்" என்பதாம்.

ஸ்ராவக தர்மத்தை இப்புத்தகத்தில் இல்லறத்தைப்பற்றி வருவனவற்றில் கண்டுகொள்க.

தவிர திருநூற்றந்தாதிச் செய்யுள்-28-ல்,

"அந்தர மேயொரு மந்தரம் வந்தென வம்மலர்மேல்
வந்த பிரானடிக் கன்பில ராயின் மறையவரே

னிந்தர்கள் சாதியி னீசர்கண் மராந் நீசரும்ச்
சுந்தர னேசர்களாயின்வின் ணேரினுஞ் சுத்தர்களே''

எனக் கூறுதலும் அறிக.

இ - ள்: "**பிராம்மணர்களாயிருந்தாலும் அருகக்கடவுளடிக்கு பக்தியில்லாதவர்களாயிருப்பின் அவர்கள், நிந்திக்கத் தக்கவரேயாவார்கள்; சாதியிலும் நீசரேயாவார்கள்; அப்படிப்பட்டபுலையரும் பகவானுக்கு அடியார்களானால் தேவரினும் பரிசுத்தராவார்கள்**" என்பதாம்.

இதனால் மனிதர் உயர்குடிப்பிறந்தாலும் பகவான்மீது அன்பிலராயின் அவர்கள் தாழ்ந்தவர்கள் என்பதும், நீசகுலத்தில் பிறந்தாலும் அருகக்கடவுளின் மீது அன்பும் நல்லொழுக்க முதலானவைகளும் உடைத்தானவர்களாயிருப்பின் அவர்மேலானவரென்பதும் விளங்கும். இதனை,

"பறையன் மகனெனினுங் காட்சி யுடையான்
இறைவ னெனவுணரற் பாற்று"

என்னும் அருங்கலச் செப்புச்செய்யுள் உணர்த்தும்.

இ - ள்: "**நீசகுலத்திலே பிறந்தவனானாலும் சம்மியக்திருஷ்டியாயிருப்பானானால் அவனுடைய தன்மை இறைவன் தன்மையென்றுணரற்பாலதாம்**" என்பதாம்.

காட்சியுடையாரென்றது - சம்மியக்திருஷ்டிகளை. இவ்விவரத்தை இரண்டாம் பாகத்தில் கண்டு கொள்க.

இன்னும் மனுஷ்யஜாதி என்பது ஒன்றாயிருப்பினும் அவரவர்கள் தொழிலின்முறைமையால், வேறு வேறு பிரிவுகள் ஏற்பட்டுள்ளன வென்பதை, மகாபுராணம் 48-வது பர்வம்-45-வது சுலோகத்தாலும் அறியக்கூடும். அதாவது:—

"மநுஷ்ய ஜாதி ரேகைவ ஜாதி நாமோதயோத்பவா |
வ்ருத்திபேதாஹி தத்பேதாச் சாதுர்வித்ய மிஹாச்நுதே ||"

என்பதாம்.

இ - ள்: "**மனுஷ்யஜாதி நாமகர்மத்தினுடைய உதயத்தினால் உண்டாகிய மனிதரெல்லோரும் ஒரேவிதமாக விருந்தபோதிலும் ஒவ்வொருவரும் தம்தம் கைக்கொண்டு அனுஷ்டித்து வந்த தொழில்களின் பேதத்தினால் பிரம்ம, க்ஷத்திரிய, வைஸ்ய, சூத்திரரென்கிற நான்குவர்ணாஸ்ரமங்களாகப் பிரிந்தார்கள்**" என்பதாம்.

மேற்சொன்னதற் கிணங்கத் தொழிலின் முறைமையால் வர்ணாஸ்ரமங்கள் ஏற்பட்டதைக் குறிப்பிட்டுக் குறளாசிரியரும்,

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

என்றும்,

"பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்."

என்றும் கூறியிருக்கின்றார்.

"நல்ல குலமென்றுந் தீயகுலமென்றுஞ்
சொல்லள வல்லாற் பொருளில்லைத் — தொல்சிறப்பி
னொண்பொரு ளொன்றோ தவங்கல்வியாள்வினை
யென்றிவற்றா னாகுங் குலம்."

என்ற நாலடியார்ச்செய்யுளாலும் இதனை அறிதல் கூடும்.

இவை தவிர அன்பார்ந்த பண்டிதர்களே! ஆதிபகவானாகிய விருஷபதீர்த்தங்கரருக்குப் பிறகு அஜிதநாதர், சம்பவநாதர், அபிநந்தனர், சுமதிநாதர், பத்மப்பிரபர், சுபார்ஸ்வநாதர், சந்திரப்ரபர், புஷ்பதந்தர், சீதளநாதர், ஸ்ரேயாம்ஸநாதர், வாஸுபூஜ்யர், விமலநாதர், அநந்தநாதர், தர்மநாதர், சாந்திநாதர், குந்துநாதர், அரநாதர், மல்லிநாதர், முனிஸுவ்ரதர், நமிநாதர், நேமிநாதர், பார்ஸ்வநாதர், மகாவீரவர்த்தமானர் என இருபத்துமூவர் அவதரித்தனராதலாலும், இந்த இருபத்துமூவருக்கும் விருஷப தீர்த்தங்கராகிய ஆதிபகவான் முதற்கடவுளானதாலும், இந்த பரதக்ஷேத்திரமானது போகபூமி என்கிற நாமமிழந்து கர்மபூமி யெனப்பெயர்பெற்ற ஆதியில் அவதரித்தவராகையினாலும், இந்த விருஷபதீர்த்தங்கரருக்கு ஆதிபகவான் என்கிற திருநாமமுண்டாயிற்று. இங்ஙனம் இவர், ஆதிபகவானனதினாலும், கர்மபூமியின் ஆதியில் மக்களுயிர்களுக்கு அக்ஷரம், கணிதமுதலான எல்லாவெழுத்துகளையும் உபதேசித்தருளியதாலும், இவற்றை விளக்குதற்கே திருக்குறளாசிரியர் கடவுள் வாழ்த்தின் தொடக்கத்தில்,

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

என்றார்.

இ - ள்: "உலகு-உலகில், அகரமுதல-அகரமுதலாகிய, எழுத்தெல்லாம்-எண், எழுத்து ஆகிய எல்லாவெழுத்துக்களும், ஆதிபகவன் - ஆதிபகவனை, முதற்று-முதலாக வுடையன" என்பதாம்.

"எழுத்துக்களை எழுத்தென்றது ஜாதியொருமைப்பற்றி யென்க. எழுத்தென்றதற்குத்தக முதற்று, என்னும் ஒருமைமுடிபு

கொடுத்தார் ஆசிரியர். உலகு; என்பதில் ஏழாம் வேற்றுமையுருபு தொக்கது. என், எழுத்துக்கள் ஆதிபகவனிடத்திலிருந்தே உண்டானவையாதலின் அக்கடவுள் அவற்றிற்கு மூலபுருஷராயினர்.

ஆதிபகவான் லோகத்திற்குச் சகல சாஸ்திரங்களையும் பிரகாசிக்கச்செய்வோமென நினைத்தசமயத்தில் தமது ஹிருதயகமலத்தில் எழுந்தருளியிருந்தஸ்ருததேவியினை, பிராம்மி, சுந்தரியென்னும் இரண்டுபெண்களுக்கும் ஸ்வர்ணபட்டகத்தின் மிசை எண்ணெழுத்துக்களின் ரூபமாக உபதேசித்தார் என்பதினால் எண்ணெழுத்துக்கள் முதலான சாஸ்திரங்கள் ஆதிபகவானை முதலாகவுடையன என்பது யாவரும் தெளிவாகவும், சுலபமாகவும் அறியலாகும்.

எண்ணெழுத்துக்களே எல்லா விருத்திக்கும் காரணமாதலின் அவற்றிற்கு நாயகன் கடவுளெனவே எல்லாவற்றிற்கும் நாதன் ஆதிபகவான் என்பதாயிற்று. இங்ஙனம் எல்லாவற்றிற்கும் பகவான் முதல்வன் எனவே நமக்கும் அவனே நாயகன் ஆதலின் நாம் எடுத்த காரியம் இனிது முடிதற்பொருட்டு அவனை வணங்குவாம் என்பது இசை யெச்சமாக அமையும்.

இங்ஙனமே மண்டலபுருடரும் தாம் இயற்றிய நிகண்டின் நாலாவது தொகுதி தெய்வவணக்கத்தில்,

"விருப்புறு பொன்னனை யிற்குள் விளங்கவெண் ணெழுத்திரண்டும் பரப்பிய வாதிமூர்த்தி பங்கயப்பாதம் போற்றி."

என்று கூறுகின்றார். எண்ணெழுத்திரண்டும் பரப்பிய ஆதிமூர்த்தியென்பது: கணித இலக்கண சாஸ்திரங்களை ஆதிபகவான் சமவசரணத்தில் விளங்க விரிவாய் உபதேசித்தா ரென்பதை விளக்கும்.

இதுபோலவே 12-வது தொகுதியிலும், ஷை ஆசிரியர்,

"சொல்வகை யெழுத்தெண் ணெல்லாந் தொல்லைநாளெல்லை
நல்வகை யாக்கும் பிண்டி நான்முகன்" [யாக

என்றும், தெய்வவணக்கம் கூறியிருக்கின்றனர்.

**இ - ள். "சொல்வகை - சொல்லும்படியாகிய வகுப்புக்களையுடைய, எழுத்து-அக்ஷரங்களையும், எண் - கணிதங்களையும், எல்லாம்-ஷட்கர்மத் தொழில் முதலிய மற்றைய வெவற்றையும், தொல்லைநாள்- கர்மபூமியின் ஆதிகாலத்தில், எல்லையாக-அளவாக, நல்வகையாக்கும் - நன்மையாகச்**

செய்தருளும், பிண்டி-அசோக விருக்ஷத்தினடியிலிருக்கும், நான்முகன்-அதிசயத்தால் நான்கு திருமுகங்களையுடையவன்" என்பதாம். *

இவ்விதம் மேற்கூறியவாறே, பகவான், எண்ணையு மெழுத்தையும் உயிர்களுக்காதாரமாக உபதேசித் திருப்பதற்கிணங்க குறளாசிரியரும் மற்றோர் அதிகாரத்தில்,

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு."

என்றும் கூறியிருக்கின்றனர். குறளாசிரியர் கருத்து இங்ஙனமிருப்ப, திருக்குறளுக்கு உரைவகுத்த பரிமேலழகர், "அகரம் முதல..." என்னுங்குறளுக்கெழுதியஉரையில்,"தமிழெழுத்துக்களுக்கு மாத்திர மல்லாமல் வடவெழுத்துக்களுக்கும் அகரம் முதலாதலை நோக்கி எழுத்தெல்லாமென்றார்" என்றும் கூறுகிறார். இவர் தமிழெழுத்துகளுக்குக்கூறுவது போன்று,வடவெழுத்துகளுக்கும் அகரம்முதலெனச்சுட்டிக் காட்டுவதானால் மற்றும் கன்னடம், மகராஷ்டிரம், தெலுங்கு முதலான வெழுத்துகளுக்கும் அகரம் முதலெனவே சொல்லவேண்டும். இவ்விதம்கூறும் கருத்து பொருத்தமல்லவென்பது மேலே விளக்கி யுள்ளவற்றால் விளக்கும். மற்றும் "எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக வுடையன; அது போல உலகம் ஆதிபகவானை முதலாக உடையது" என்றும், "தலைமைபற்றி வந்த அகரத்திற்கும் ஆதிபகவானுக்கும் பிம்பப்பிரதிபிம்பபாவம் சொல்லுதலால் இது எடுத்துக்காட்டுவமையணி" என்றும் கூறிப் பகவானுக்கு அகரத்தை உவமை கூறியிருக்கின்றார் குறளாசிரியர் அக்கடவுள் வாழ்த்திலேயே,

"தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது."

என்றுகூறியிருப்பதால் பரிமேலழகர் ஆதிபகவானுக்கு அகரத்தை உபமானமாகச்சொல்லுவது பொருந்தாது. ஆதிபகவான் உபமாதீதர் என்பதை மேற்கூறிய குறளில் ஸ்பஷ்டமாக ஆசிரியர்சொல்லியிருக்கிறார். மேலும் ஆசிரியர், "அகரமுதல" என்கிற குறளை

* இச் செய்யுளுக்குப்பலவித்வாம்சர்கள், அவரவர்கள் மனதிற்கிசைந்தபடி பொருளுரைத்திருக்கின்றார்கள். அவைபொருத்தமற்றனவாகும். ஆதிபகவான் முதல்முதல் அக்ஷரங்களும், கணிதங்களும் உபதேசித்ததைக் குறளாசிரியர் கூறியதுபோல, மண்டல புருடரும் 4-வது12-வது தொகுதியில் கூறியிருக்கிறாரென்பதை நன்கு அறிதல்கூடும்.

இயற்றி, அதற்குப்பின், "கற்றதனாலாய பயனென்கொல்" என்கிற குறளை அமைத்திருப்பதும் அவஸ்யம் ஆராய்ந்தறியத்தக்கது.

ஆஸ்திகர்கள் கடவுளை வணங்கும்போது, "ஆஸீர்நமஸ்கிரியா வஸ்துநிர்தேசம்" என மூன்றுவகையால் பகவானைத் துதித்தல் முறைமை. ஆதலால், திருக்குறளாசிரியர் முதல் குறளில் கடவுளை வணங்காது இரண்டாவது குறளில் வணங்கினார். இனி, முதல, முதற்று என்னும் இரண்டு பயனிலைகளையும் பற்றி ஆராயுமிடத்து, பாகலக்ஷணத்தின்படி இவ்விரண்டு பயனிலைகள் இருப்பது சிறப்பாகாதென்பதும், முதற்று என்னும் ஒருபயனிலையிருப்பதே பொருத்த முடைத்தென்பதும்விளங்கும். செய்யுளமைப்பில் திராக்ஷாபாகம், நாரிகேளபாகம் என இரண்டுவகையுண்டு. அவற்றுள் திராக்ஷாபாகமானது திராக்ஷைக்கனி உள்ளும் புறம்பும் இனிய சுவையைத்தருவதுபோல் கவியின் எல்லாப் பாகமும் சுவையாயிருப்பதாகும்; நாரிகேளபாகமாவது தேங்காய் புறத்தில் கடினமாயும் உள்ளேசுவையாயும் இருப்பதுபோல, கவி மேலுக்குக்கடினமாயும் உள்ளே பொருளமைதியாயு மிருப்பதாம். குறளாசிரியர் திராக்ஷாபாகத்தின்படி செய்யுளமைக்கக்கூடியவராதலின் முதற் செய்யுளை அங்ஙனமே இயற்றினரெனக்கொள்ளவேண்டும். அங்ஙனம்கொள்ளுமிடத்து.

"அகரமுதலாகிய எழுத்துக்களெல்லாம் பகவானை முதலாகவுடையன" என்று பொருள்கொண்டு முதற்று, என்னும் ஒருபயனிலையைக்கொண்டு முடித்தலே திராக்ஷாபாகத்திற்குப் பொருத்தமானதாம். இவ்வாறு ஆதிபகவான் (அருகக்கடவுள்)ஜனங்களுக்கு அகரமுதல் எல்லாவெழுத்துக்களையும் உபதேசம் செய்தாரென்பதை, இரண்டாவதாகிய, "கற்றதனாலாயபயன்" என்னுங் குறள் நன்குவிளக்கும். எங்ஙனமெனில், "கற்றதனால்" என்பது, "முன்னுரைத்தவற்றைப் படித்ததனால்" என்று அதனைச்சுட்டிக்காட்டும்.

நூலாசிரியர்கள், தாம் இயற்றும் நூல்களில் தமது சமயக்கடவுளைத்துதிப்பரேயொழிய வேறுசமயக்கடவுளைத்தொழாரென்பது எல்லோருக்கும் ஒப்பமுடிந்தவிஷயம். ஆதலின்ஆசிரியர் ஆதிபகவானாகிய அருகக்கடவுளைத் தாம் வணங்கியதுடன் பிறரும் வணங்கும்படி இதனால் விளக்கியிருக்கின்றனர். மேலும் குறளாசிரியர், அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றைக்குறித்து

இந்நூல் செய்தனராதலின் அப்புருஷார்த்தங்களை அநுஷ்டித்த ஆதிபகவானையே துதித்திருக்கின்றனர்.

இந்தக்கொள்கை எந்தச்சமயத்திற்குப் பொருந்து மென்பதை நாம் யோசிக்கவேண்டும். சைவம், வைணவம் ஆகிய இந்தச்சமயங்களில்அகாராதி அக்ஷரங்களைமானிடர்களுக்குக் கடவுள் நேராக உபதேசித்தார் என்பதற்கு வேதப்பிரமாணமில்லை. கடவுளர் நந்திதேவர் மூலமாகவும், பிரம்மாவின் மூலமாகவும் வேதத்தை உபதேசித்தனரென அம்மதத்தினர் கூறுகின்றனர். புத்தக் கடவுள் அக்ஷரங்கள் முதலானவைகளையும், கல்விகளையும் பாலாவஸ்தையில் தான் கற்றுக்கொண்டு லோகாசாரியராய் விளங்கினரெனப் புத்தர்சரித்திரம் கூறுகின்றது. ஜைநசமயக்கடவுள், மதிஸ்ருதாவதியென்னும் மூன்றுஞானத்துடன் அவதரித்து மானிடர்களுக்குத் தாமே நேராக அக்ஷரம் முதலானவற்றைக்கூறி யருளினரென்பதை ஜைநவேதம் ருஜுப்படுத்துகின்றது. ஆதலால், திருக்குறள் ஜைநசமயம் தவிர மற்ற சமயங்களுக்குப் பொருந்தாதென்பதை மேல்கண்டகாரணங்களால் அறிதல்கூடும்.

இனி, முதற்கடவுளாகிய விருஷபதீர்த்தங்கரரென்னும் ஆதிபகவானுக்கு விருஷபநாதர், விருஷபதேவர், விருஷபேஸ்வரர், முதல்வன், முதலோன், முனைவன், ஆதி, ஆதிமூர்த்தி, ஆதிகர்த்தா, ஆதிநாதன், ஆதிஸ்வரன், ஆதிபட்டாரகர், ஆதிதேவர், ஆதிபரமேஸ்வரன், ஆதிராஜா, ஆதிஜிநன், ஆதிதீர்த்தங்கரன், ஆதிபிரம்மா, ஆதிபகவான் எனப் பல திருநாமங்கள் வடமொழி தென்மொழிநூல்களில்வழங்கப்படுவதை இங்கு கொஞ்சம் விவரிப்பாம்.

"த்வாம்தேவ மாதிம கர்த்தாரம் கல்பவ்ருக்ஷமிவோந்நதம் |
ஸமாச்ரிதா: கதம் ஸேத: பதம்ஸ்யாம வயம்விபோ" ||

என்பது மகாபுராணம் பர்வம் 16 சு. 140ல் கூறப்பட்டிருக்கிறது.

இ - ள்: "பிரபுவே! ஆதிகர்த்தாவாயும், தேவராயுமுள்ள உம்மை, கற்பகத்தருப்போன்றவர் என்று நாங்கள் அடைந்தோம்; ஆகையால் பயத்தினுடையஸ்தானத்தை எப்படி அடைவோம்? அடையமாட்டோம்" என்பதாம்.

இன்னும்,

"த்வத்தஸ் ஸம்பவா நாபிதேவோ தேவதேவ: க்ருதாவதார: |
தீக்ஷாவஸ்ய விஷ்டக: கல்பவ்ருக்ஷ இவாபவத்" ||

என்பது மகாபுராணம் பர்வம்-17-சு-221-ல் கூறப்பட்டிருக்கிறது.

இதன் கருத்து: "நால்வகைத்தேவர்களினல் பூஜிக்கப்பட்டவரும், தீக்ஷையென்கிற கொடியினல் சூழப்பட்டவருமாகிய ஆதிதேவர், கல்ப கத்தருபோல் விளங்கினர்" என்பதாம்.

"பகவாநாதிதேவா" என்பதில் பகவான்என்பதற்குப் பொருள் கேவலஞானி என்பதாம்; அதாவது திரிகால வுணர்ச்சியுடையவர் என்பதாம்.

இன்னும்,

"த்ரிஜகத் ஸ்வாமி ஸ்ரீமாந் பகவா நாதி வேதஸ: ।
ப்ரவ்ரஜ்ய விஜயோத்யோகம் யத்ரைவகாயி நாயக:" ॥

என்பது மகாபுராணம் பர்வம்-25-சு-244-ல் கூறப்பட்டிருக்கிறது.

இதன் கருத்து: "மூவுலகிற்கும் எஜமானரும், தர்மசக்கராதிபதியும், (அறவாழிக்குநாதனும்), உள்ளும் புறமும் சோபையை யுடையவரும் அதாவது (கோடிசூரிய சந்திரர்களுடைய பிரகாசம்பொருந்தியவரும்), இருபத்துமூன்று தீர்த்தங்கரர்களுக்கு முந்தினவருமாகிய ஆதிபகவான் அஹிம்ஸாதர்மத்தை பிரஜைகளுக்குபதேசிப்பான் வேண்டி ஸ்ரீவிஹாரம்செய்தார்" என்பதாம்.

மேலும்,

"யஸ்ஸம்ஸ்துத ஸகலவாங்மய தத்வபோதா
துத்பூத புத்தி படுபி ஸ்ஸுரலோக நாதை:
ஸ்தோத்ரைர் ஜகத்த்ரிதய சித்த ஹரை ருதாரை:
ஸ்தோஷ்யே கிலாஹ மபி தம் ப்ரதமம் ஜிநேந்த்ரம்"

என்பது பக்தாமரம் சுலோகம்-2-ல் கூறப்பட்டிருக்கிறது.

இதன் கருத்து: "ஸமஸ்தமானசாஸ்திரங்களின் ஸ்வரூபத்தை அறிந்ததினல் உண்டாயிருக்கிற புத்தியில் சமர்த்தர்களாயுள்ள தேவர்களுக்கெல்லாம் எஜமானர்களாகிய தேவேந்திரர்களினல் கூறப்பட்ட மூன்று லோகத்திலுள்ள ஜனங்களது மனதைக்கவரக்கூடிய ஸ்தோத்திரங்களினல் எந்தவிருஷபஸ்வாமி நன்றாகத் துதிக்கப்பெற்றாரோ அப்படிப்பட்ட பிரதமதீர்த்தங்கரரான ஆதிபகவானை நானும் ஸ்தோத்திரம் செய்கிறேன்" என்பதாம்.

பின்னும்,

"அஸ்யா மவஸர்ப்பிண்யாம் வ்ருஷபஜிந: ப்ரதம தீர்த்த கர்த்தா
பர்த்தா."

என்பது கிரியாபுஸ்தகம் நந்தீஸ்வரர் சு-29-ல் கூறப்படுகிறது.

இதன் கருத்து: "இந்த அவசர்ப்பிணிகாலத்திலே முதல் தீர்த்தங் கரரானவர் பவ்வியரை போஷித்த (விரஷபஜினஃ) ஆதிபட்டாரகர்" என்பதாம்.

மேல்கண்டஸ்லோகங்களினல் ஆதிகர்த்தா, ஆதிதேவர், ஆதிபக வான் என்கிற திருநாமங்கள் அருகக்கடவுளுக்கு வருதல் காண்க.

இன்னும் சிலப்பதிகாரத்தில் நாடுகாண்காதை வரி. 177ல்

"செறிவன் சிநேந்திரன் சித்தன் பகவன்"

எனவருவதில், உரையாசிரியர் அடியார்க்குநல்லார், பகவன் என்ப தற்குக் கேவலஞானியென்று உரைவகுத்திருக்கின்றார். ஆதலால், குறளாசிரியர் ஆதிபகவன் என்று கூறியதற்கு கர்மபூமியின் பிர தமத்தில் முதன்முதல் கேவலஞானத்தை அடைந்தவர் ஆதிபக வான் என்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும். மேலும்,

"ஆதி வேதம் பயந்தோய்நீயலர்பெய்ம் மாரியமைந்தோய்நீ"

என்று, சிவகசிந்தாமணி, 1242ஆம் கவியிலும்,

"ஆதிவே தத்து நாதன் புருவிந்த வுலகமேத்த"

என்று மேருமந்தரபுராணம் 187. ஆம் கவியிலும்,

"அவனிநாடு கன்குளிரவாடகப்போது மீதுலா மாதிநாதரே"

என்று திருக்கலம்பகம். 42. ஆம். செய்யுளிலும்,

"ஆதிபகவனை யருகனை மாதுயர்நீங்க வழுத்துவம்பலவே"

என்று, திருக்கலம்பகம். 109. ஆம் செய்யுளிலும்,

"ஆதாரமே யாதிநாதா பிரானேயருட்குன்றமேயென்னை
யஞ்சலென்றருளே"

என்று, திருத்தீபங்குடித் தீபநாதர் தோத்திரத்திலும்,

"அண்டர்புகழ் தொண்டர்மகிழ் எண்டிசையும் பேர்பெற்ற
ஆதிநாதக்கடவுளே"

என்று ஆர்ப்பாக்கம் ஆதிபட்டாரகர் பஞ்சரத்தினத்திலும்,

"பாக்கவிஞர்கொண்டாடும் பாகையின்வாழ் ஆதிஸர்
மாக்கமல பாத மதி"

என்று, ஆர்ப்பாக்கம் ஆதிபட்டாரகர் இரட்டைமணிமாலைத் தோ த்திரத்திலும்,

"போதுவிண்ட புண்டரீக மாதரோடு வைக வேண்டின்
ஆதிநாத ராய்ந்தநூலின் நீதியோதி நின்மினீடு"

என்று, யாப்பருங்கலவிருத்தி 2வதுபகுதி 409-வது பக்கத்திலும்

"போதுசாந்தம் பொற்பவேந்தி ஆதிநாதற் சேர்வோர்
சோதிவானந் துன்னுவரே"

என்று, யாப்பருங்கலக்காரிகை. 53-ஆம். பக்கத்திலும்,

"அத்தனே யென்னை யாளீர் சரணம்
ஆதி பகவா னருளே சரணம்."

என்று தோத்திரத்திரட்டிலும்,

"பரப்பிப வாதி மூர்த்தி பங்கயப் பாதம் போற்றி"

என்று, சூடாமணிநிகண்டு நான்காம் தொகுதியிலும்,

"ஆதியே யாதி யின்றி யகிலமும் பரந்து நின்ற"

என்று திருக்கலம்பகத்திலும்

இப்பெயர் அருகக்கடவுளுக்கே எடுத்து மிகுதியும் வழங்கப்பட்டிருத்தல் காண்க.

இன்னும் இது,

"ஒருத்தரு மத்தர்கள் போதுனை ராருயி ரோம்புமெங்க
டிருத்தரு மத்தரல் லாச்சிறு மானிடர் சேர்ந்தவர்க்குத்
தருத்தரு மத்தரை யோடுவின் ஞேர்பதந் தந்துபின்னு
மருத்தரு மத்தரை யாதிபட் டாரக ராம்பரிசே"

என்னும், திருநூற்றந்தாதி-15-வது செய்யுளிலும், வருகிறது.

இதன் கருத்து: "தம்மையடைந்தவர்க்குத் தருவைப்போல நரேந்திரபதத்தையும், தேவேந்திரபதத்தையும் தந்து, முறையே சித்த பதத்தையும் தருகின்ற ஸ்வாமியாமவரை, ஆதிபட்டாரகர் (ஆதிகர்த்தா) என்னும் முறைமையை எமது ஜிநதர்மத்துள்ளாரல்லது பிறரொருத்தரும் உன்மத்தரைப்போல அறியார்" என்பதாம்.

இதனாலும் மேற்சொன்ன ஆதிநாதன், ஆதிலன், ஆதிபகவான் முதலாகிய இப்பெற்றிய முறைமையான நாமங்கள், அருகக்கடவுளுக்கு உண்டென்பதை, ஜைநரல்லது பிறரொருத்தரும் அறியாரென்பது நன்கு விளங்கும்.

இனி ஆதிபகவான் கேவலஞானமுடையவரென்பதைத் திருக்குறளாசிரியர் கூறியருளியிருப்பதைப்பற்றி ஆராய்வாம்; இதை அவர்,

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்று டொழாஅ ரெனின்"

என்ற குறளால் விளக்கியிருக்கிறார்.

இதன் கருத்து: ("மிகுதியான) கேவலஞானத்தையுடைய அருகக்கடவுள் பாதகமலங்களை, மனிதர் வணங்காராகில் அந்தப்பகவானுல், அருளப்பட்ட அக்ஷரங்கள்முதலான கல்வியைக்கற்றதனுல் பயனில்லை" என்பதாம். வால்-மிகுதி, அறிவன்-கேவலஞானத்தையுடையவன்; கேவல ஞானமென்பது-திரிகாலவுணர்ச்சி.

" ஸர்வத்ரவ்ய பர்யாயேஷு கேவலஸ்ய ஜ்ஞாநம்."

என்ற தத்வார்த்த ஸூத்ரத்தின்படி ஞானமானது,

மதிஞானம், ஸ்ருதஞானம், அவதிஞானம், மனப்பர்யய ஞானம், கேவலஞானம், என ஐந்தாகும். இவற்றில் ஐந்தாவதான கேவலஞானமென்பது மற்றநான்கு ஞானத்தை விடச் சிறந்தது; அதனையுடையவர் கடவுள் ஆதலின் அவரை ஆசிரியர் வாலறிவன் என்ருர். இங்ஙனம் பகவான் கேவலஞானத்தையுடையவரென்பதையும், அதன்குணத்தையும் விளக்குவாம். இவை,

" த்ரைலோக்யம் ஸகலம் த்ரிகால விஷயம்
ஸாலோகமாலோகிதம்
ஸாக்ஷாத்யேந யதா ஸ்வயம் கரதலே
ரேகாத்ரயம் ஸாங்குலி
ராகத்வேஷ பயாமயாந்தகஜரா
லோலத்வ லோபாதயோ
நாலம் யத்பதலங்கநாய ஸ மஹா
தேவோ மயா வந்த்யதே "

என்னும் அகளங்காஷ்டக ஸ்லோகத்தால் விளங்கும்.

இதன் கருத்து: "எப்படி விரல்களுடனே கூடின உள்ளங்கையிலே உள்ள மூன்று ரேகைகளை மனிதர் ப்ரத்தியக்ஷமாகக் காண்கின்ருர்களோ அப்படி அலோகத்துடன்கூடியிருக்கிற மூன்றுலோகங்களையும், சமஸ்தமாயிருக்கிற த்ரிகாலவிஷயங்களையும் ப்ரத்தியக்ஷமாகக் கேவலஞானத்தால் பார்க்கின்றவனுய், ராகத்வேஷமுதலான பதினெட்டுத்தோஷங்களை எவன்கெடுத்தானு அப்படிப்பட்ட குணமுள்ளவனே மகாதேவன்; அவனே ,,சுவாமி; அப்படிப்பட்டசுவாமிக்கு நான் நமோஸ்து பண்ணுவேன்" என்பதாம்.

இன்னும் குறளாசிரியர் வாலறிவன் என்பதற் கிணங்க, தொல்காப்பிய ஆசிரியரும் பொருளதிகாரம் மரபியல் சூ-94-ல்,

"விளங்கிய வறிவின்" என்றார்.

இன்னும் இதைப்பற்றிச் சிலப்பதிகாரம் நாடுகாண்காதை 176 வது அடியிலும்,

"அறிவன் அறவோன் அறிவுவரம்பிகந்தோன்"

என்பது கூறப்படுகிறது. இதற்கு,

"எல்லாப்பொருள்களையுமறியும் அறிவையுடையோன்
அறஞ்செய்தலையே தொழிலாகவுடையோன்
யாவராலும்அறியப்படும் அறிவெல்லையைக்கடந்தோன்"

என்று அடியார்க்குநல்லார் உரைவகுத்திருக்கின்றனர்.

இதற்கிணங்க, மேருமந்தரபுராணம் 173 ஆம் செய்யுளில்,

"மதிகணான்கையுங்கடந்தனை யடைந்தனை
யுலகெலா மதியொன்றின்"

என்பது கூறப்படுகிறது.

இதன்கருத்து, "மதிகள் நான்கையுங்கடந்தனை-மதி, ஸ்ருதி, அவதி மனப்பரியமென்னும் நான்கு ஞானங்களையும் தாண்டினாய், உலகெலா மதியொன்றில்-லோகா லோகஸமஸ்தங்களை கேவலஞான மொன்றினால் அடைந்தனை-அடைந்தாய்" என்பதாம்.

பின்னும் மேருமந்தரபுராணம் 630-வதுசெய்யுளிலும்,

"அறிவினாலறியாத வறிவனீ"

என்பது கூறப்பட்டிருக்கிறது.

இ - ள். "அறிவினாலறிதற்கேதுவாகிய மதி, ஸ்ருதி, அவதி, மனப் பர்யயம்என்பவைகளில் விஷயமாகிய நான்கு ஞானங்களாலும் கிரகித்தறியாத அறிவனீ; சர்வத்திரவிய பரியாயயுகபத் பிரத்தியக்ஷமாகிய கேவல ஞானத்தை யுடையவனீ" என்பதாம்.

இன்னும் இதைப்பற்றிய விஷயம்,

"அறிவனடிக்கிழரசஞ்சித்துறந்தவாறும்"

என்று சீவகசிந்தாமணி 27-ஆம் செய்யுளிலும்வருகிறது

இ - ள். "கேவலஞானத்தையுடைய ஸ்ரீவர்த்தமான சுவாமி சமவசரணத்தில் ஜீவகன் அரசாட்சியை நீக்கித்துறந்தான்" என்பதாம்.

மேலும்,

"அறிவரடிமுதலார்வம் பெருக்க"

என்று சூளாமணி துறவு சருக்கம் 172 ஆம் செய்யுளிலும்,

"அருந்தவனுப்அறம்பகர்ந்த அறிவனீயே"

என்று சிவசம்போதனை அத்தியாயம் 1 செய். 29 லும்,

" அறிவனைத்தொழாதவர்தொலையாத
சண்டவெந்துயர்நரகினில் வெருவுறவிலங்கினிற்பசியாலே"

என்று, திருக்கலம்பகம் செய்யுள் 90 லும்,

"அறிவனதடியிணைபரவப் பெறுகுவர்
யாவரும் பிறவாநெறியே"

என்று யாப்பருங்கலவிருத்தி சூ-93 லும் இது கூறப்பட்டிருக்கின்றது.

இவற்றில்வரும் அறிவன் என்னும் திருநாமம் கேவலஞானியென்பதை யுணர்த்தும்; அருகன் என்றும் பொருள் படுத்தப் பொருந்தும். இத்தகைய கேவலஞானமென்பது பிறசமயங்களுக்கு இல்லை யென்பது அறியக்கூடியது. இதுதவிர, குறளாசிரியர் கல்வி கல்லாமையைப்பற்றி இரண்டதிகாரங்கள் செய்திருப்பினும் கடவுள் வாழ்த்து முதல் குறளில், பகவான் அக்ஷரமுதலான சாஸ்திரங்களை உபதேசித்ததையும், இரண்டாவது குறளில் அந்தக் கல்விகற்றதின் பயனாக ஆதிபகவானாகிய அருகக்கடவுளை வணங்கவேண்டுமென்பதையும் நன்குவிளங்கவைத்திருக்கின்றதை அறிஞர்கள் அறிவார்களாக.

இனி, திருக்குறள், அருகக்கடவுள் வேதப்பொருள்களுக்குரியவன் என்பதையும் விளக்கி, தான், அருகமதத்தைச் சார்ந்திருப்பதையும் காட்டுகின்றது. அதைப்பற்றியும் சிறிது ஆராய்வாம்:

"இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்னும் குறள் இதனை விளக்குகின்றது.

இதன்கருத்து. " இறைவன் - அருகக்கடவுளது, பொருள் சேர்- (நான்குவேதங்களின்) மெய்ம்மையைச்சேர்ந்த,புகழ்-கீர்த்தியை,புரிந்தார் மாட்டு-தியானம் செய்பவரிடத்து, இருள்சேர் - மித்தியாத்வமென்னும் மயக்கத்தால் உண்டாகிற, இருவினையும் - நல்வினை தீவினை இரண்டும்,

சேரா-உண்டாகமாட்டா" என்பதாம். மித்யாத்வமென்பதுபொய்யைமெய் யென்று நம்புவது; பொருள் என்பது ஜீவபுத்கல, தர்மாதர்ம, ஆகாச, காலமென்னும் ஷட்திரவியங்களென்றும் சிலர் சொல்லக்கூடும்: ஷட்திர வியமென்னும் தத்துவங்கள், நான்காம் வேதமாகிய திரவியானுயோக மென்னும் வேதத்தில் அடங்கியனவாதலால் அது, பொருள்தாமெனக.

குறளாசிரியர் இங்குக் கூறியதற்கிணங்க,

"இருள்புரி யுலகஞ் சேரா வியனெறி பயந்த பெம்மான்
பொருள்புரி விழவு காண்பார் புண்ணிய வுலகங் காண்பார்."

என்று சூளாமணி துறவுச் சருக்கம் 27-ஆம். செய்யுளிலும்,

"இருள்புரி வினைகள் சேரா திறைவன தறத்தை யெய்தின்
மருள்செய வருவ துண்டோ வானவ ரின்ப மல்லால்"

என்று யசோதரகாவியம் 5 வது சருக்கம். 46. ஆம் செய்யுளிலும், இதுவருதல் காண்க.

குறளாசிரியர், "இறைவன் புகழ்புரிந்தார் மாட்டு" அதாவது "ஆதிபகவானுடைய கீர்த்தியைவிரும்பினவரிடத்து" எனப்பகவா னது கீர்த்தியைச் சொல்லாமல், "இறைவன்பொருள்சேர்புகழ் புரிந்தார்" எனப் பொருளை விசேஷித்துச் சொல்லுவதால் கடவு ளால் அருளப்பட்ட பொருள் சேர்புகழை அதாவது நான்கு வேதங்களைச்சேர்ந்த கீர்த்தியை விரும்பினவரிடத்து நல்வினை தீவினை இரண்டும் சேராதென்றார். ஆகையால்,பகவானுடைய கீர் த்தி, ரூபம், குணமுதலானவைகள் வேதங்களில் சொல்லப்பட் டிருப்பதால் பகவான் வேதங்களில் அடக்கமென்பதும், மக்க ளுயிர்களுக்குப் பகவானுடைய குணங்கள் முதலானவைகளை அறியவும் தோத்திரம்செய்யவும் அவை முக்கிய காரணமாதலின் வேதங்களின் பொருள்களைப் புகழ்வது இறைவனை புகழ்ந்ததாகு மென்பதும் உணரப்படும்.

மேலும் பொருளென்பதைப்பற்றி,

"தலைமகனும் நூலு முனியுமிம் மூன்றும்
நிலைமைய தாகும் பொருள்"

என்பது அருங்கலச்செப்பில் கூறியிருத்தல்காண்க.

(இ - ள்.) "(தலைமகன்) இறைவன், ஆகமம், முனிவர் இம்மூன்றும் நிச்சயமான பொருள்" என்பதாம்.

இன்னும் திருக்குறளாசிரியர் இறைவனால் அருளப்பட்ட வேதங்களின் பொருளைத் தியானிப்பவரிடம் இருவினையும் சேரா தென விளக்கியதற்கிணங்க திருநூற்றந்தாதி செ-ள் 26-னும்,

"இடரார் பவக்கங்கு லின்கண்மற் றென்னையுங்
 காணவொட்டாப்
படரார் வினைத்தொல் லிருள்போ யிரியப்பைம்
 பொன்னணைமே
லடரார் மலர்ப்பிண்டி யோடும் புகுந்தென்
 னகத்திருந்த
சுடரார் விளக்கைமெய்ஞ் ஞானங் குலிகொண்டு
 தூண்டுவனே."

என்பது கூறப்படுகின்றது.

(இ - ள்.) "என்னைப்பிறப்பாகிய இரவின்கண்ணே வைத்து ஞானக் கண்ணையுமறைத்த வினையிருள்கெட என்மனத்துட்புகுந்திருந்த பரஞ் சோதியுடைய அருகாது (பரமாகமமென்னும்) விளக்கை மெஞ்ஞான மென்னும் விரலைக்கொண்டு தூண்டுவேன்" என்பதாம்.

இதனால் பரமாகமம் உணர்ந்தன்றிப் பிறப்பும் வினையும் நீங்கா என்பதும், பரமாகமம் (நான்குவேதங்கள்) எல்லாப்பொருள்களையும் விளக்கிக்காட்டுவதால் விளக்கென்பதும் கூறினார்.

இதனை எலாதி ஆசிரியர்,

"அறுநால்வ ராய்புகழ்ச் சேவடி யாற்றப்
பெறுநால்வர் பேணி வழங்கிப்—பெறுநான்
மறைபுரிந்து வாழுமேன் மண்ணொழிந்து விண்ணோர்க்
கிறைபுரிந்து வாழ்த லியல்பு"

எனக்கூறும் கடவுள்வாழ்த்துச் செய்யுளும் விளக்கும்.

இதன்கருத்து:. "அறுநால்வர் - (விருஷபதீர்த்தங்கரராகிய ஆதிபக வான்முதல் மகாவீரவர்த்தமானர்பரியந்தம்உள்ள) இருபத்துநான்குதீர்த் தங்கரர்களுடைய, ஆய்-(யாவரும்) ஆராய்ந்து தேருதற்குரிய, புகழ்-கீர்த் தியையுடைய, சேவடி-சிவந்தபாதகமலங்களை, ஆற்றப்பெறும்-மிகுதியாக வணங்கி அடைந்த, நால்வர் - (பவண, வியந்தர, ஜோதிஷ்க, கல்பவாசிக ளாகிய) நால்வகைத் தேவர்கள், பேணி - போற்றி, வழங்கி-பகவானாலே கொடுக்க, பெறு-பெற்ற, நான்மறை-நான்குவேதங்களை, புரிந்து-விரும் பிச்சொல்லித் துதித்து, வாழுமேன்-(மண்ணுலகத்துள்ள ஒருவன்) வாழ் வானாயின், மண்ணொழிந்து-இந்தக் கர்ம பூமியைவிட்டுநீங்கி, விண்ணோர்

க்கு-தேவர்களுக்கு, இறை-சுவாமியாக, புரிந்து - (தேவர்கள்செய்யும் சிறப்பையடைந்து) விரும்பி, வாழ்தலியல்பு-நீடூழிவாழ்தல் சுபாவமாகும்," என்பதாம்.

இதில், "நால்வர்" என்பதற்கு, "சக்ரவர்த்திகள் பன்னிருவர், பலதேவர் ஒன்பதின்மர், வாசுதேவர்கள் ஒன்பதின்மர், பிரதிவாசுதேவர் ஒன்பதின்மர்" என இவர்களைக்குறிப்பிட்டு உரையாசிரியர் உரையில் விளக்கியிருக்கின்றார்; அது பொருந்தாது; ஆதலின் பொருத்தமான இவ்வுரையை விளக்கமாக நாம் இங்கு எழுதிக் காட்டினேம்.

குறளாசிரியர், "பொருள்சேர் புகழ்புரிந்து." என்பதும், இச்செய்யுளில் ஏலாதிஆசிரியர், "நான்மறைபுரிந்து" என்பதும் ஒத்திருத்தல்காண்க.

இனி இங்குக்கூறிப நான்குவேதங்களின் தன்மைகளை விளக்குவாம்:

ப்ரதமாநு யோகமர்தாக்யாநம் சரிதம் புராணமபி புண்யம்
போதி ஸமாதி நிதாநம் போதயதி போத: ஸமீசீந:[௪௩]

என்னும் ரத்னகாண்டகம்-பரிச்சேதம். 2, சு. 2-ல் முதல் வேதத்தின் தன்மை கூறப்படுகிறது.:

இதன் கருத்து:"ஷத்ரிஸஷ்டி சலாகாபுருஷர்களுடையசரித்திரத்தினையும். அஞ்சனசோராதி முதலானவர்களுடைய சரித்திரத்தினையும், சொல்லும், அர்த்தாக்கியானங்களுக்கும், ரத்னத்ரயங்களான தர்மங்களுக்கும், சுக்லத்தியானமான தியானங்களுக்கும் இருப்பிடமானது பிரதமாநுயோகமென்னும் முதல்வேதமாம்; இது நன்றாகிய ஞானத்தை அறிவியாநின்றது." என்பதாம்.

த்ரிஷஷ்டிசலகா புருஷராவார்-இருபத்துநான்கு தீர்த்தங்கரர்களும், பரதன், சகரன், மகவான், சனத்குமாரன், சாந்திநாதன், குந்துநாதன், அரநாதன், சுபௌமன், பத்மன், ஹரிஷேணன், ஜெயசேனன், பிரம்மதத்தன் என்ற சக்கரவர்த்திகள் பன்னிருவரும், விஜயன், அசலன், தர்மன், சுப்பிரபன், சுதர்சனன், நந்தி, நந்திமித்திரன், இராமன், பத்மன் என்னும் பலதேவர் ஒன்பதின்மரும், திப்பிரஷ்டன், த்விப்பிரஷ்டன், சுயம்பு, புருஷோத்தமன், புருஷசிம்மன், புருஷவரன், புண்டரீகன், இலக்ஷ்மணன், கிருஷ்ணன் என்னும் வாசுதேவர்கள் ஒன்பதின்மரும், அஸ்வக்ரீவன், மேரகன், தாரகன், நிசும்பன், மதுகைடன், புஜபலி, பிர

ஹரணன், இராவணன், ஜராசந்தன் என்னும் பிரதி வாசுதேவர் ஒன்பதின்மரும் ஆகிய அறுபத்துமூவர்களுமாவார்கள்.

இந்தப்பிரதமாநுயோகமென்னும், முதல்வேதமானது மகாபுராண ஸ்ருதியென்றும் சொல்லப்படும். இதில் அநேக சரித்திரங்கள் சொல்லப்பட்டிருப்பினும், சரித்திரநாயகர்கள் இந்த அறுபத்துமூவரேயாதலால் அவர்களைப்பற்றிவரும் சரித்திரம், த்ரிஷஷ்டி சலாகாபுருஷர்கள் சரித்திரம் எனப்பெயர் பெற்றது.

"[illegible]"

என்னும் ரத்னகரண்டகம் பரிச்சேதம் 2. சு. 3-ல், இரண்டாவது வேதத்தின் தன்மை கூறப்படுகின்றது.

இதன்கருத்து.. "லோகாலோகங்களுடைய விவரத்துக்கும், உத்ஸர்ப்பிணியாதியுகங்களின்பரிவர்த்தனகிரமத்தினுக்கும், சதுர்க்கதிகளுடைய ஸ்வரூபத்தினுக்கும், கண்ணாடிபோன்றிருப்பது கரணாநுயோகமென்னும் இரண்டாவது வேதம்; இது ஸ்ருதஞானத்தை அறிவியாநின்றது" என்பதாம்.

"[illegible]"

என்னும் ரத்னகரண்டகம் பரிச்சேதம் 2. சு 4-ல் மூன்றும் வேதத்தின் விவரமுணரலாம்.

இதன்கருத்து: "கிரகஸ்தர்களுக்கும், ரிஷிகளுக்கும், உரிய சாரித்திரத்தின் அதாவது நல்லொழுக்கத்தின் உற்பத்திக்கும், விருத்திக்கும், ரக்ஷணைக்கும், காரணமான ஸம்யக்ஞானத்தை சரணாநுயோகமென்னும் மூன்ரும் வேதமானது அறிவியாநின்றது" என்பதாம்.

"[illegible]"

என்னும் ரத்னகரண்டகம்-அத் 2, சு. 5-ல் நான்காம் வேதம் விளக்கப்பட்டிருக்கிறது.

இதன்கருத்து:. "ஜீவாஜீவன்களென்ற தத்துவங்களையும், புண்ணிய பாபங்களையும், ஞானுவரணுதி கர்மங்கள் கட்டுகிறதும், விடுகிறதுமாகிய ஸ்வரூபங்களையும், ஸ்ருதஞானத்திற்குக் கண்ணுன திரவ்யாநுயோகமென்ற தீபமானது (நான்காம்வேதமானது) விளக்காநின்றது" என்பதாம்.

1-வதாகிய பிரதமாநுயோக மென்னும் முதல்வேதத்தை வாசிப்பதனால், போகபூமியின் மானிடர்களுடைய குணங்களையும், பதினன்கு மனுக்களின்விவரங்களையும், அறுபத்து மூவர் சரித்திரங்களையும், இன்னும் பலசரித்திரங்களையும், ஒவ்வொருவரும் நல்லொழுக்கம் தீயொழுக்கங்களினால் பஞ்சமகதிகளாகிய நரககதி, விலங்குகதி, மனுஷ்யகதி, தேவகதி, மோக்ஷ முதலானவைகளின் சுகதுக்கங்களை அனுபவித்த காரணங்களையும் அறிதல் கூடும். இந்த முதல்வேதத்தை நன்கு உணர்ந்தவன் கொலைமுதலாகிய தீயவொழுக்கங்களுக்கு உடன்படான்.

2 வதாகிய. கரணாநுயோகமென்னும் லோகஸ்வரூபவேதத்தை வாசிப்பதால், உத்ஸர்ப்பிணியாதி பரிவர்த்தனைகளையும், நரகலோகம், பவணலோகம், மனுஷ்யலோகம், வித்தியாதர, வியந்தர, ஜோதிஷ்கம், கல்பவாசி, அகமிந்திரம், மோக்ஷ முதலான ஸ்தானங்களிலேற்படும் சுகதுக்கங்களையும், மேற்சொன்னலோகங்களின் பிரமாணங்களையும், ஜீவன்களின் உச்வாஸ நிச்வாஸம் ஆயுஷ்யம் உன்னதமுதலானவைகளையும், ஜீவன்கள் வசிக்கும் ஸ்தானங்களையும், ஜம்பூத்வீபம் தாதகிஷண்ட முதலான த்வீபங்களையும், இவற்றில் உள்ள ஐந்துமகம்மேருக்களையும், ஐந்து பரதக்ஷேத்திரங்களையும், ஐந்து ஐராவதக்ஷேத்திரங்களையும், விதேகக்ஷேத்திர முதலானவைகளையும், மகாலவண சமுத்திரம், க்ஷீரம், ததிமுதலான சமுத்திரங்களின் விவரங்களையும், அந்தாத்வீபமுதலான பலவகைகளையும் மோக்ஷஸ்வரூபத்தையும், அதன் சுகத்தையும், இன்னும் அநேக விவரங்களையும் அறிந்துகொள்ளலாம்.

3-வது சரணாநுயோகமென்னும் வேதத்தைப் படிப்பதனால், நல்வினை தீவினைகளின் காரணங்களை அறிந்தபின்உணரும் இல்லறம் துறவறமென்னும் சாரித்திரத்தை அறிந்து, பாவத்திற்குப் பயந்து நல்லொழுக்கத்தைக்கண்டு அநுஷ்டிக்கும்தன்மை உண்டாகும்.

4-வது திரவ்யாநுயோகமென்னும் வேதத்தை வாசிப்பதனால் நல்லொழுக்கத்தை அடைந்தபின் ஜீவாதிஷட்திரவியங்கள் முதலான ஹேயோபாதேயதத்வ ஸ்வரூபங்களையுணர்ந்து,மோக்ஷ சாதனமடைய ஏதுவாகும். இவைகளின் பிரிவுகள்-அங்காகமம் 12-ம், பூர்வாகமம், 14-ம், பகுஸ்ருதியாகமம் 16-ம், ஆம்.

மேற்சொன்ன வேதங்களில், முதல்வேதமானது இரண்டு நூறாயிரத்தைப்பத்தையாயிரத்து நானூற்று நாற்பத்திரண்டு கோடியே முப்பத்தொருநூறாயிரத்தைந்நூற்றெழுபது கிரந்தசங்கியையினையுடையது; மற்றமூன்றுவேதங்களும் இப்படியே அதிக கிரந்தங்களையுடையனவாம்.காலதோஷத்தினால் மனுஷ்யர்களுக்கு இவற்றை அறியும்சக்தியும், அறிவும், ஆயுளும், குறைந்துவந்ததினால் முன்னிருந்த மகாமுனிகள் இந்த வேதங்களைச் சுருக்கி உபதேசித்துவந்தார்கள்; பிறகு ஏற்பட்ட முனிவர்கள் இந்த வேதங்களைச் சிறுசிறுநூல்களாகச் செய்தருளியிருக்கின்றார்கள். இப்போது வழங்கிவரும் முதல் வேதமாகிய மகாபுராண ஸ்ருதியானது இருபதினாயிரம் கிரந்தங்களையுடையது.

2-வது வேதமான லோகஸ்வரூபத்தைப்பற்றி இப்போது வழங்கிவரும் நூல்கள் திரிலோகசாரம், திரிலோக ப்ரக்ஞப்தி, ஜம்பூத்வீப ப்ரக்ஞப்தி, த்வீபசாகர ப்ரக்ஞப்தி, மகாலோகாணி, லோகஸ்ரூபம் ஆகியவைகளாம்.

இவற்றைப்போலவே 3-வது வேதமான இல்லற துறவறத்தைப்பற்றியும், 4-வது வேதமான ஜீவாதி தத்வங்களைப்பற்றியும் பலநூல்கள் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இனி அருகக்கடவுள் விருப்பு வெறுப்பில்லாதவர் என்பதைத் திருக்குறளாசிரியர் விளக்கியிருப்பதைப்பற்றி ஆராய்வாம்: இதனை அவர்,

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில"

என்னும் குறளால் விளக்கியிருக்கின்றனர்.

இதன்கருத்து: "விருப்புவெறுப்பு இல்லாத அருகக்கடவுள் பாதத்தைச்சேர்ந்தவர்க்கு எக்காலத்திலும் பிறவித்துன்பங்கள் உண்டாவனவல்ல" என்பதாம்.

இன்னும்,

"வேண்டுதல் வேண்டாமை யில்லாத வீரனடி
பூண்டுகிடந்தாற் புறத்திறுத்த வெங்கூற்றம் போகும்போ [லும்"

என்று திருக்கலம்பகம்-செய்யுள்.58-லும்,

"ஆழ்த்துதி யார்வமுஞ் செற்றமு நீக்கிய வச்சுதனே"

என்று திருநூற்றந்தாதி-20-ஆம் செய்யுளிலும் இவ்விவரம் கூறப்பட்டிருக்கின்றது. மேலும் இது,

"உவத்தல் காய்தலா வுன்றிரு வடித்தலத் தெழுந்தோர்க்
குவத்தல் காய்தலுன் றிருவுளத் தொன்றுநீ யிலையேற்
சுவர்க்க மாநர கத்தவர் துன்னுவ துனது
தவத்தின் றன்மையோ தம்வினைத் தன்மையோ வருளே"

என்று மேருமந்தரபுராணம்-128-ஆம் செய்யுளிலும் கூறப்பட்டிருக்கின்றது.

இதன்கருத்து: "சந்தோஷித்தலாலும், கோபித்தலாலும், உன்னுடைய அழகியபாதகமலத்து வந்தடைந்தவர்களுக்கு நீ உன்னுடைய அழகியமனதில் சந்தோஷிப்பதும் கோபித்தலும் இல்லை; அங்ஙனம் உன்னிடத்தில் அக்குணங்கள் இல்லையானால், அவ்விருதிறத்தவர்களில், சந்தோஷித்தவர் சுவர்க்கத்தையும், கோபித்தவர் பெரியதுக்கத்தையுடைய நரகத்தையும் அடைவது உன்னுடைய தபவினது குணமோ, அவர்களுடைய வினையினது குணமோ எங்களுக்குத் தெரியும்படி கூறியருள்வாயாக" என்பதாம். இதனால் அருகன் விருப்புவெறுப்பு இல்லாதவனென்பது விளங்கும்.

இன்னும்,

"காவுந்தி யையையோர் கட்டுரை சொல்லு
நலம்புரி கொள்கை நான்மறை யாள
.......................................
காமுறு தெய்வங் கண்டடி பணிய
நீபோ யாங்களு நீணெறிப் படர்குது
மென்றம் மறையோற் கிசைமொழி யுணர்த்தி"

என்று, சிலப்பதிகாரம் காடுகாண்காதையில், கவுந்தியடிகள் பிராம்மணனிடம் உயர்நெறி சொன்னதாகவரும் அடிகளில், "காமுறுதெய்வங் கண்டடிபணிய நீபோ" என்றதொடரிலுள்ள 'காமுறுதெய்வம்' என்றதற்கு, "காமக்குரோதாதிகளெல்லாமுடைய தெய்வ மென்பதுவுமாயிற்று" என்று, அடியார்க்குநல்லார் உரை வகுத்திருப்பதனாலும், அருகக்கடவுளன்றி மற்றதெய்வங்கள் விருப்பு வெறுப்புடையனவென்பது துணியப்படும்.

சீவகசிந்தாமணி 2874-ஆம் செய்யுளிலும்,

"காம முடையார் கறுவொடார்வ முடையாருந்
தாம மொடு சாந்து புனைவார் பசியிலுண்பா

வேம முடையார்க ளிவரல்ல ரிவையில்லா
வாம னடியல்ல பிறவந்தி யன்மினென்றார்''

என்று இவ்விவரங் கூறப்பட்டிருக்கின்றது.

இதன்கருத்து: "காமத்தையுடையாரும், செற்றத்தோடு ஆசையை யுடையாரும், தாமத்தையும் சார்தையும் புனைவாரும், பசியாலே இல் லிலேசென்று பலிகொள்வாருமாகிய இவர்கள், நம்மை உய்யக்கொள்ளு மவரல்லர்; ஆதலின், இத்தீக்குணங்களில்லாத வாமனடியல்லாத பிற வடிகளை வணங்கன்மினென்று கூறினார்'' என்பதாம்.
இன்னும்,

பிரம்மா இந்திரப்பட்டம் வேண்டுமென்று மூன்றரைக்கோடி வருஷம் தவஞ்செய்தார் என்பதும், விஷ்ணு வேண்டுமென்றே மச்சகூர்ம நரசிங்க முதலான தசாவதாரங்களையெடுத்து இவ்வுல கில் அநேக ஹிதாஹிதங்களைச் செய்திருக்கின்றார் என்பதுவும், சிவபெருமான் விருப்பத்தினால் பக்தர்களுக்கு வேண்டியவரங்க ளைக் கொடுத்து வெறுப்பினால் திரிபுராதிகளை நெற்றிக்கண்ணால் சுட்டெரித்தார் என்பதும் அந்தந்தச் சமயசாஸ்திரங்கள் கூறு கின்றன.

மேற்கண்டகாரணங்களால் அருகன் விருப்புவெறுப்பு அற்ற வனென்பதையும், மற்றகடவுளர் விருப்பு வெறுப்பு உள்ளவரென் பதையும் உணரலாம்.

இனி அருகக்கடவுள் ஐந்தவித்தானென்பதைப்பற்றி ஆராய் வாம்: இது,

"பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்''

என்னும் திருக்குறளில் கூறப்பட்டிருக்கிறது.

இதன்கருத்து: "மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் பஞ் சேந்திரியங்களையும் அவித்த அருகக்கடவுளது மெய்யான ஒழுக்க வழி யிலே நின்றவர் நீடூழிவாழ்வார்'' என்பதாம்.

பரிமேலழகர், ஐந்தவித்தானது ஒழுக்கவழி அவனாற் சொ ல்லப்பட்ட வேதமார்க்கம் என்றார். இது, பொருத்தமாகாது.

ஐந்தவித்தான் மெய்யான ஒழுக்கவழியாவது - பகவான் நின்ற தவத்தின் மார்க்கம்.

இதனை,

"மெய்த்தவத் தன்மை தானும் வென்றவர் படிமந் தாங்கிச்
சித்தமெய் மொழிகண் மூன்றி விருதொடர்ப் பாட்டி னீங்கி
பத்தறம் பன்னி ரண்டாந் தவத்தொடு பயின்று தன்கண்[ப்
உத்தமக் காட்சி ஞான வொழுக்கத்தை யழுத்தல்கண்டாய்"

என்னும் மேருமந்தரபுராணம் 411-ம் செய்யுளால்நன்குணரலாம்.

இ - ள். "உண்மையாகிய தபவினுடைய குணமானது யாதென்ருல், (ஒருவன்,) காதிகர்மங்களை ஜெயித்திராநின்ற அருகபரமனுடைய ரூபமாகிய நிர்க்கந்தரூபத்தைத்தரித்து, மனவசனகாய மென்னும்மூன்றினுலும், பாகியாப்யந்தரமென்னும் இரண்டு பரிக்கிரகங்களினின்றும்நீங்கி, உத்தமக்ஷமை முதலான தசதர்மமும், துவாதசவித தபசுமாகிய இவற்ருேடும் பழகித் தன்னிடத்தில் நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கத்தையும் ஸ்தாபித்தலாம்" என்பதாம்.

இங்குக்கூறியவற்ருல், ஐந்தவித்தான்என்பது அருகக்கடவுளுக்கே பொருந்து மென்பதைக்காண்க.

ஆதிபகவனுகிய அருகன், தர்மார்த்தகாமங்களை பிரஜைகளுக்குத்தானே உணர்த்தி, பரதன், பாகுபலிகுமாரன் முதலானவர்களுக்கு ராஜ்ஜியங்களைப் பகிர்ந்துகொடுத்து, வீடடைதல் என்பதையும் உணர்த்தும் பொருட்டுச் சகல பற்றுக்களையும் விட்டு வனம்சென்று நிர்க்கந்தனுப், மனவசனகாயங்களையடக்கி + மனப்பர்யயமென்னும் நான்காவது ஞானத்தையடைந்து ஆறுமாதம் அனஸன விரதம் கைக்கொண்டு வெய்யில் மழை பனி காற்றுமுதலாகிய பரிஷஹங்களைச்சகித்துப் பர்வதம்போல சலியாது தவம் செய்தார். அவ்வாறு,

ஆதிவே தத்து நாதன் புருவிந்த வுலக மேத்த
நீதிமா தவத்தைத் தாங்கி நிறைந்தயோ கத்தி னின்ற
போதினு தரத்தின் வந்தார் போகவா தரத்தினுர்கள்
தீதிலாக் குணத்தி னுர்கள் விநமியு நமியு மென்பார்.

வந்தவ ரிறைவன் பாதம் வலங்கொண்டு வணங்கி வாழ்த்தி
அந்தமி னிதியு நாடு மரசருக் கீந்த வந்நாள்
வந்தில மடிக ளின்றே வந்தன மண்ணெமக்குத்
தந்தபின் னன்றிப் போகோ மென்றுதாழ்ந் தேத்தினுரே.

இவ்வாறு வித்தியாதரபுத்திரர்களாகியநமி, விநமி, என்பவர் ராஜ்ஜியங்களைப்பெறவிரும்பி, பகவானிடம்வந்துபணிந்து மேலும்,

+ மனப்பர்யய ஞானமென்பது - பிறர் மனதில் நினைத்தவைகளைச் சொல்லுதல்.

"மூன்றுலக மேத்தவரு முத்திக் கிளவரசா
யான்ற வனுத்தரத்து என்றமர்ந்தாய் நீயே
யான்ற வனுத்தரத்து என்றமர்ந்து வந்தாயை
மூன்றுலக மேத்திப வாறுசொல்ல முடியாதே''

என்று பலவிதத்திலும் துதிசெய்தார்கள். அப்போது ஆதிபக வான் * பிரதிமாயோகத்தில் சலனமின்றி இருப்பதைப் பவண

* ப்ரதிமாயோகமென்பது-ப்ரதிமைபோல அசைவற்றிருந்து தவஞ் செய்தல்.

இதை, பனம்பாரனுர் தொல்காப்பியம் சிறப்புப்பாயிரத்தில்,

''மல்குநீர் வரைப்பி னைந்திற நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே''

என்ற சூத்திரத்தில் 'படிமை' என்றதனுல் விளக்கியிருக்கிறுர்.

இ - ள்: "கடல்சூழ்ந்த உலகின்கண்ணே ஐந்திறம் (அதாவது பஞ்சாஸ்திகாயமுதலான தத்துவங்களை) நிறையவறிந்த தொல்காப்பியனெனத்தன்பெயரை மாயாமல்நிறுத்தி, இல்லறதுறவறங்களில் பலபுகழ்களையும் இவ்வுலகின் கண்ணேநிலைநிறுத்திய, படிமையோனே (அதாவது ப்ரதிமாயோகத்தைத்தரித்த தவத்தையுடையவனே)'' என்பதாம்.

இன்னும் ப்ரதிமாயோகமென்பதைப்பற்றிக் கிரியாபுஸ்தகம் யோக பக்தி சுலோகம் 11-ல்,

„ வெஹாவிஹ வசிஃஂபாரோ ணிவெஸஂஜவீராஸணெஂகவாஸிய
ஃணிஂயாவக்ஷ ஃாவீ வெ ஃஂதாவெ ஹெயவ்ஷாதி "

எனபிராகிருதபாஷையில் கூறுதலும்காண்க.

இதன்பொருள்: "சூரியப்ரதிமைமுதலானபகுவித ப்ரதிமா யோகங்களிலே நிற்கிற சீலத்தையுடையவரை, காயோத்சர்க்கத்தையும் ஏக பார்சுவத்தையுமுடையவரை, உமிழ்தல் சொரிதல் இல்லாத விரதத்தையுடையவரை, தேகத்தைத்துறந்தவரை வந்தியாநின்றேன்'' என்பதாம்.

இது தவிர, மகாபுராணம் பர்வம்-2, சு 90ல்,

„ உதிஷ்ணாவஸ நிவ்ருஸ்து தகிஶா பொமஹ ஸீபஷஃ
லகாஸஃ க்ஷணவஸ் ஸதுமஹ ஸ்யேயபுஸாவிநஃ "

என இது கூறப்படுதல் உணர்க.

(இ - ள்.) "தைரியலக்ஷ்மியோடு விளங்குகின்றவரும், ஆறுமாச பரியந்தம் நிறைவேற்றப்பட்ட (ப்ரதிமைபோல்நிற்கின்ற) ப்ரதிமாயோகத்தை அடைந்தவருமான ஆதிபகவானுன விருஷபதீர்த்தங்கரருக்கு அந்தக் காலமானது, க்ஷணகாலமாகத்தானே ஆயிற்று'' என்பதாம்.

லோகத்தில் உள்ளதரணேந்திரன் அவதிஞானத்தாலறிந்து அந்த வித்தியாதர புத்திரரிருவருள் விநமியை விஜயார்த்த பர்வதத்தில் உள்ள உத்தரஸ்ரேணியில் அறுபது நகரங்களுக்கு ராஜாவாக ஸ்தாபித்து, கனகபல்லவமென்னும் பட்டணத்தை அவனுக்கு ராஜதானியாக அளித்தான்; தக்ஷிணஸ்ரேணியில் ஐம்பது நகரங்களுக்கு நமிகுமாரனை ராஜாவாக நியமித்து, இரதநூபுர சக்கரவாளமென்னும் பட்டணத்தை அவனுக்கு ராஜதானியாக ஸ்தா

---

மேலும்மேருமந்தரபுராணம் செ-ள்141-ல்,

"எஞ்சலில் கொள்கை தாங்கி யிராப்பகல் படிம நின்றான்"

என்ற அடியிலும் இதுகூறப்பட்டிருத்தல்காண்க.

(இ—ள். "குறைவில்லாத சாரித்திரங்களைத்தரித்து இரவும் பகலும் ப்ரதிமா யோகத்தில் நிலைபெற்றிருந்தான்" என்பதாம்.

இவற்றில் கூறப்பட்ட 'படிமை' என்னும்பதம் ப்ரதிமைக்கும்அதைப்போல் நின்றுசெய்யப்படும் யோகத்திற்கும் ஆகும். இதுப்ரதிமைக்கு வருவதை,

கிரியாபுஸ்தகம் சைத்தியபக்தியில்,

"ஜிணபடிமாகட்டிமே வந்தே"

எனவரும்பிராகிருத சுலோகத்தின் சரணத்தால் உணரலாம்.

இ-ள். "கிருத்திமத்தினுலான ஜிநப்படிமா(அதாவது பிரதிமையை) வந்திக்கின்றேன்" என்பதாம்.

இன்னும் உதயணன் பெருங்கதை தெய்வச்சிறப்பில்,

"ஆரணங் காகிய வறிவர் தானத்துப்
பூரணப் படிமை காண்ட லானும்"

எனவரும் 37-38-ஆம்அடிகளிலும் படிமைஎன்பது இப்பொருளில்வருதல் காண்க.

படிமா, படிமை, படிமம் என்னும் பிராகிருத பதங்கள் ஒருபொருளனவாகும். இவைவடமொழியில், ப்ரதிமாவெனவரும். இவைகள், ப்ரதிமாயோகமென்னும் தவத்திற்கும், அசைவற்றிருக்கும் ப்ரதிமைக்கும் ஆகும். மேல்கண்ட ஆகமப்பிரமாணத்தால் தொல்காப்பியரும், ஜைநர் என்பதும், முற்றுந்துறந்த மகாமுனிவரென்பதும், பஞ்சாஸ்தி காய முதலான தத்துவங்களைநிறையவறிந்தவரென்பதும், ப்ரதிமாயோகமென்னும் தவத்தினையடைந்தவரென்பதும் விளக்கமாகத்தெளிதல் கூடும். இன்னும் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்தில் வேறுபல ஜைநசமயக் கொள்கைகளுமிருக்கின்றன வாயினும் அவற்றைஇங்குவிவரிப்பின் பெருகுமென இதைமட்டும் கூறினோம்.

பித்தான். அவ்வாறு ஸ்தாபித்தபின்னர் இவர்களிருவருக்கும் ஐந்நூறு மகாவித்தைகளையும், எழுநூறு க்ஷுல்லக வித்தைகளையும் துணையாகும்படி கொடுத்து, மற்றவித்தியாதரர்களையெல்லாம் இவர்களது ஆக்கினையைக்கேட்டு நடக்கும்படிசெய்து, தனதிடம் அடைந்தனன்" என்ற வரலாறு ஜைனநூல்களில் கூறப்பட்டிருக்கிறது. இதனால், ஆதிபகவான் பஞ்சேந்திரியங்களையும் அவித்து, மகா தபசைத்தாங்கிப் ப்ரதிமா யோகத்தில் நின்றார் என்பதை உணரலாம். இவற்றின் விரிவுகளை ஸ்ரீபுராணம் ஆதிபகவான் பகுதியிலும், மேருமந்தரபுராணம். 187-வது கவிமுதல் உள்ள சிலகவிகளிலும் காணலாம்.

பகவான் தவஞ்செய்தாரென்பது,

"[illegible]"

என்னும்பஞ்சாஸ்திகாய: சுலோகத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

---

மேற்கூறிய, தொல்-சி-பா-சூத்திரத்தில் ஐந்திறம் என்னும் பதத்தைச் சிலர் ஐந்திரமெனப்பாடபேதங்கொண்டும், அதற்கு ஐந்திரவியாகரண மெனப் பொருள்கொண்டு மிருக்கின்றனர். இது பொருத்தமற்றதாம்.

எப்படியெனில், தவயோகத்தையுடையவருக்குத் தத்வங்கள் நிறைந்திருக்கவேண்டு மாதலால், ஐந்திரவியாகரணம் நிறைந்தவரெனச் சொல்லுதல் பொருந்தாது. இங்கு ஐந்திறம் அதாவது பஞ்சாஸ்திகாயமென்றது-ஜீவாஸ்திகாயம், புத்கலாஸ்திகாயம், தர்மாஸ்திகாயம், அதர்மாஸ்திகாயம், ஆகாசாஸ்திகாயம் என்பனவாம்.

தொல்காப்பியர் நான்குவேதங்களை, முற்ற அறிந்தவரென்பதையும், பஞ்சாஸ்திகாயமுதலான தத்துவங்களை நிறையவறிந்தவரென்பதையும், ப்ரதிமாயோகத்தையுடையவ ரென்பதையும், பனம்பாரனார் கூறியிருக்கின்றமையால், அவிநயனார் ஜைநர் என்பதுபோல இந்தப் பனம்பாரனாரும் ஜைநர் என்பது தொல்காப்பியத்தின் சிறப்புப்பாயிரத்தால் நன்கு புலனாகின்றமை அறிதல்கூடும்.

இ - ள். "மத்தியானகாலத்திலே, காயோத்சர்க்கமாய் உக்கிரதபசில் நிற்கும் மஹாத்மாவின்மேல் தீவிரமாய்ப் பிரகாசிக்கும் சூரியனானவன், சுக்லத்தியானமாகிற அக்னி, கர்மங்களாகிற விறகுசமூகங்களைப் பற்றி, உதாசீனமாகிற (வைராக்கியமாகிற) பெருங்காற்றினால் வீசப்பெற்று, உண்டாகும் பெரும் ஜ்வாலையினின்றும் கிளம்பி,மேலேபோன, பொறிகளில் ஒன்றாகக் காணப்பட்டான்; இவ்விததியானரூடராயும், முனிகளுக்கு ஸ்ரேஷ்டராயும், நாபிமகாராஜனுக்குப்புத்திரராயும்,மகாத்மாவாயும் விளங்காநின்ற ஸ்ரீவிருஷபதீர்த்தங்கரர் (ஆதிபகவான்) ஜெயமுடையவராவர்; இத்தகைய கடவுள் நம்மை இரக்ஷிக்க" என்பதாம்.

இன்னும் பகவான் ஐந்தவித்தானென்பது,

"ஐவரை வென்றோன் அடியிணை யல்லது
கைவரைக் காணினும் காணா வென்கண்"

என்னும் சிலப்பதிகாரம் நாடுகாண்காதை 198 ஆம் வரியாலும்,

"பொறிவாயி லைந்தவித்த புனிதனீயே"

என்னும் ஜீவஸம்போதனை 1-வது அத்தியாயம் 29 ஆம் செய்யுளடியாலும்,

"பொறிவரம் பாகிய புண்ணிய முதல்வனை"

என்னும் சீவகசிந்தாமணி 2563 ஆம், கவியடியாலும்,

"பொறியிலா வறிவனீ பூசனைக் கிறைவனீ"

என்னும் மேருமந்தரபுராணம் 1000-ஆங் கவியினடியாலும்,

"பொறியொடு வல் வினை வென்ற புனிதனீயே"

என்னும் நாககுமாரகாவியச் செய்யுளடியாலும் உணரப்படும்.

பொறிவாயிலைந்தவித்தானென்பது மற்றதேவர்களுக்குப் பொருந்துமாவென்பதைப் பற்றியும் இனி ஆராய்வாம்: புத்தக் கடவுளுக்குப் பொருந்துமாவெனின், அவர், முற்றுந் துறவாமல் துவராடையை யுடுத்தியும், வாளினால் தமது முடிமயிரைக்கொய்தும், பசிபொறுக்காதவராய் இளைப்பினால் உணர்வழிந்து கீழே விழுந்துவிட்டாரென்றும், ஆயர்சிறுவனால், வெள்ளாட்டின்பாலைக் குடித்துக் களைப்பாறினாரென்றும் புத்தசரிதை சொல்லப்படுவதால், புத்தருக்குப்பொருந்தாது. பிரம்மாவிற்குப் பொருந்துமாவெனின், அவர்,இந்திர பதவியடையவேண்டுமென்று மூன்றரைக் கோடி வருடங்கள் தவஞ்செய்தாரெனவும், இந்திரப்பட்டம்பெறாமல் நான்குமுகங்களைப்பெற்றாரெனவும் அவர்வரலாறு சொல்லப்

படுவதால் பிரம்மாவிற்கும் பொருந்ாது. சிவன், விஷ்ணு ஆகியவர்கள் தவஞ்செய்ததாக ஆகமப்பிரமாணம் காண்கிலோம். இவற்றை யெல்லாம் ஆராய்ந்து அறிய, பொறிவாயிலைந்தவித்தானென்பது அருகக்கடவுளுக்குப் பொருந்துமென்பதும், மற்ற சமய தெய்வங்களுக்குப் பொருந்தாதென்பதும் நன்குவிளங்கும்.

ஆதிபகவான், மேருவைப்போலச் சலியாது, சமுத்திரம்போல ஒன்றிலும் கலத்தலின்றி, வாயுபோல ஒன்றிலும் பற்றின்றி, ஆகாயம்போல மலமின்றித் தியானரூடனாய் எழுந்தருளிநின்று ஷண்மாசம் சென்றபின், யோகத்தைவிட்டு க்ஷுத்பாதையிலனாகிலும், தனது தீர்த்தத்துட்டோன்றும் ரிஷிகணங்கட்குச் சரியாமார்க்கத்தினையும், கிரகஸ்தர்களுக்கு தானக்கிரமத்தினையும் காட்டுதற்குத் திருவுளம்செய்து ஆகாரத்தின்பொருட்டு ஆஸ்தினபுரம் செல்ல, ஸ்ரேயாங்குமாரன் பகவானது திவ்விய ரூபங்கண்டதும் ஜாதிஸ்மரணமடைந்து சப்தகுண நவபுண்ணியக்கிரமத்தினோடும் மதுரமாகிய இக்ஷுரஸத்தினை பகவானுடைய பவித்திரமாகிய பாணிபாத்திரத்தில் நிறைத்தனன்.

பகவான் சோகப்ரதேசமின்றியே ஔஷதம் சேவிப்பான்போன்று, அந்தஅமிர்தத்தைப் புசித்தனன். இவ்வண்ணம்தபோதனர்க்குச் சரியாமார்க்கத்தினையும், கிரகஸ்தர்களுக்கு தானக்கிரமத்தையும் காட்டித் தபோவனம் எழுந்தருளினபின்னர் பகவான் சகஸ்ரவருஷம் உக்ரமான தவம்செய்து, ஸ்தவிரகல்பமென்னும் யோகத்தைவிட்டு, ஜிநகல்பமாகிய யோகத்தைக் கைக்கொண்டு, வடவிருக்ஷத்தின்கீழ், பல்லியங்காஸனத்தெழுந்தருளியிருந்து, உபஸமஸ்ரேணியினின்றும் க்ஷபகஸ்ரேணியிலேறி, பிரதம சுக்லத்தியான மென்கிற வச்சிரத்தாலே, மோகநீய மகாபர்வதத்தினையெறிந்து, துதியசுக்லத்தியானமென்னும் நிசிதமாகிய பாசுவினால், ஞானவரணியம், தரிஸனவரணீயம், அந்தராயங்களென்கிற விஷவிருக்ஷங்களை வேரறவெறிந்து, கர்மக்ஷயாதிஸயப்பத்துடன், அநந்தஞானம், அநந்ததரிஸனம், அநந்தசுகம், அநந்தவீரியமுதலாகிய நவகேவலலப்தியினை அடைந்தனர். அப்பொழுது இந்திரர்களுடைய ஆசனங்கள் கம்பித்தன; பவண, வியந்தர, ஜோதிஷ்க, கல்பவாசிகளுள்ளும் முறையே கண்டையும், சிம்மநாதமும், பேரியும், சங்கமும் தாமே முழங்கின. அக்குறிகளால் பகவானுடைய கேவலசாம்பிராஜ்ஜியத்தினையறிந்து சௌ

தர் மேந்திரன் முதலான தேவர்கள்வந்து, சமவசரணமென்னும் ஜிநாலயத்தை நிர்மித்து, கேவலபூஜையினையும் செய்து பகவானை ஸ்தோத்திரஞ்செய்தார்கள். (இது ஸ்ரீபுராணம் ஆதிபகவான் பகுதியில் கூறப்படுகின்றது.)

இன்னும் இதைப்பற்றி மகாபுராணம். 20 வது பர்வம் சு. 269. ல்

"𑌭𑌗𑌵𑌤𑌿 𑌜𑌿𑌤𑌮𑍋𑌹𑍇 𑌕𑍇𑌵𑌲𑌜𑍍𑌞𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾
𑌸𑍍𑌫𑍁𑌰𑌤𑌿 𑌸𑌤𑌿 𑌸𑍁𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌨𑍍 𑌭𑌕𑍍𑌤𑌿𑌭𑌾𑌰𑌾𑌤𑍍
𑌨𑌭𑌸𑌿 𑌜𑌯𑌤𑌿 𑌨𑌾𑌦𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑌦𑌿𑌕𑍍𑌕𑌂 𑌜𑌜𑍃𑌮𑍍𑌭𑍇
𑌸𑍁𑌰𑌵𑌟𑍁 [illegible]"

என்பது கூறப்பட்டிருக்கின்றது.

இதன்கருத்து:"ஆதிபகவான் மோகநீயகர்மத்தை ஜெயித்தவளவில், கேவலஞானமென்னும் லக்ஷ்மியோடு விளங்கினவராகையால், அவருக்கு தேவேந்திரர்கள் பக்திவிசேஷத்தினால் நமஸ்காரம் செய்தார்கள்; ஆகாயத்தில் எப்பக்கமும் ஜெயகோஷணையும், தேவதுந்துபியும் முழங்கின; ஒளியினால் ஆகாயம் இடையின்றிப் பிரகாசித்து அழகுபொருந்தியஸ்தானமாயிற்று"என்பதாம்.

"சிறப்பொடிங் கடைந்த தேவர் செறிபொழி லதனைச் சேர்ந்தாற்
றுறக்கத்தை மறப்ப ரென்றாற் சொல்லுவ தினியென் னன்றிப்
பிறப்பெறிந் திருந்த வீரன் பெருமையைச் சிறிது காட்ட
விறப்பவு முயர்ந்த தேவ ராசனு மியன்ற தன்றே."

என்ற"மேருமந்தரபுராணம். 1089. ஆம். செய்யுளும் இவ்விவரத்தைக்கூறுகின்றது.

இங்குக்கூறியவற்றால் ஆதிபகவானுடையகேவலஞானத்தை அறிந்தவுடன், சௌதர்மேந்திரன் முதலானதேவர்கள், பகவானுக்கு கேவலபூஜையினைச் செய்து, சமவசரணமென்னும் கோவிலும் நிர்மித்தாரென்பது ஜைநசமயசித்தாந்த மென்பதாய்விளங்கும்.

இதனை, மேருமந்தரபுராணம் சமவசரணசருக்கத்தில் விரிவாகக்காணலாம்.

இம்மாதிரி மற்றசமயக்கடவுள்கள் கேவலஞானத்தை அடைந்தாரென்பதும், சௌதர்மேந்திராதிதேவர்கள் அவருக்குக்கோவில் நிர்மித்துக் கேவலபூஜைசெய்தாரென்பதும் பிறசமயசாஸ்திரங்களில் இல்லை என்பதும் நன்கு அறிதல்கூடும். மேற் கூறியபடி

ஏற்பட்டசமவசரணமென்னும் ஜிநாலயத்திற்குப்ப்ரதியாகத்தான் ஆதிகாலந்தொடங்கி ஜைனர்கள் கோவிலைநிர்மித்துப் பகவானை பூஜித்து வருகின்றார்கள்.

இனி, ஆதிபகவான், உவமையில்லாதவனென்பதைத்திருக்குறளாசிரியர் விளக்கியிருப்பதைப்பற்றி **ஆராய்வாம்:**

"தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற வரிது"

என்ற குறளில் ஆசிரியர், இதனைக்குறிப்பிடுகின்றார்.

இதன்கருத்து: "தனக்கு ஒருவிதத்திலும் நிகரில்லாத (சமவசரண சாம்பிராஜ்ஜிய விபூதியையுடைய) அருகக்கடவுள் பாதகமலங்களைச்சேர்ந்தவர்க்கல்லது, மற்றையவர்க்கு, மனக்கவலைநீக்கமுடியாது" என்பதாம்.

மேற்கூறியபடி தேவர்கள் சமவசரணமென்னும் ஜிநாலயத்தை நிர்மித்ததும், ஆதிபகவானுக்குத் தெய்வீகாதிசயம் பதினான்கு தோன்றின. பகவான் அவதரித்தவுடன் தோன்றின ஸ்வபாவாதிசயம்பத்தும், காதிகர்மரஹிதனானபின் தோன்றிய கர்மக்ஷயாதிசயம்பத்தும் ஆக முப்பத்துநான்கு அதிசயங்கள் பகவானிடத்துத் தாமேதோன்ற, அவர் அவற்றுடனும், இந்திரனா லமைக்கப்பட்ட அஷ்டமகாப்ராதிஹாரியமென்னும்எண்சிறப்புக்களுடனும், இந்திராதி நால்வகைத் தேவர்களால் இயற்றப்பட்ட பஞ்சகல்யாணத்துடனும், பதினெண்குற்றத்தைக் கெடுத்தவனும், ஸப்தபயத்தினின்றும் நீங்கியவனும், த்வாதசகணபரிவேஷ்டிதனுமாகி, பரமௌதாரிக திவ்வியசரீரத்துடன் பதினெண்பாஷைகளுக்கும், எழுநூறு க்ஷுல்லகபாஷைகளுக்கும் ஏகமாயிருக்கபட்ட திவ்வியத்வனி எழும்ப, சமவசரணத்திற்கு நாற்பத்தெண்காத தூரம் வரையிலுள்ள சகல ஜீவன்களும்கர்மநிர்ஜரை ஏதுவாய்ச் சமவசரணத்தைச்சூழ, நான்கு திக்குகளிலும் நானூற்றுக்காத தூரம் வரையிலுமுள்ள தேசங்களிலிருக்கிறஜீவன்களுக்கு, துர்ப்பிக்ஷம், வியாதி, பிராணிவதைகள் முதலாகிய அவகுணங்களில்லாத அதிசயங்களுக்கு ஏதுவாகச் சகலதேசங்களிலும் ஆயிரம்சம்வத்ஸரம் குறைந்த பூர்வகாலமெல்லாம் ஸ்ரீ விஹாரம்செய்து அதாவது சமவசரணத் தில்சென்று தர்மாம்ருதம் பொழிந்து அந்தியத்தில் கைலாசபர்வதத்தின்மிசை எழுந்தருளிமாகதீயமென்னும் திவ்வியபாஷாமிர்தத்தினால் சாகார அனகாரமென்னும் இல்லறதுறவறதர்மங்களை உபதேசித்தார்.

மேற்கூறப்பட்ட பஞ்சகல்யாணங்களாவன:

ஸ்வர்க்காவதரணம், மந்த்ராபிஷேகம், பரிநிஷ்க்ரமணம், கேவல பூஜை, பரிநிர்வாணம் என்பனவாம்.

ஸ்வர்க்காவதரணமாவது:

பகவான் ஷண்மாதத்து ஸ்வர்க்காவதரணம் பண்ணியருளுவனென தேவேந்திரன் நியோகத்தால் குபேரன் நாபிராஜாபவனத்து நாள்தோறும் மூன்றரைக்கோடி ரத்னமழைபொழிந்தபின் ஸ்வர்க்காவதரணாநந்தரம் ஒன்பதுமாதம் நாள்தோறும் கனகமழை பொழிந்ததாம். அதனால் பகவானுக்கு ஹிரண்யகர்ப்பனென்று நாமமாயிற்று.

மந்தராபிஷேகமாவது: பகவான் அவதரித்ததும் அவ்வவதாரத்தை இந்திரன், அவதிஞானத்தாலறிந்து சசிமகாதேவியுடனும் நால்வகைத்தேவர் கூட்டங்களுடனும் வந்து, அக்குழந்தையை சசிமகாதேவிபால் எடுப்பித்து, ஐராவதத்தின் மிசைவைத்து தேவவாத்தியங்கள் முழங்கக்கொண்டுபோய் மகாமேரு பர்வதத்து, பாண்டுசிலாதலத்து, நிர்மிதமாகிய ரத்னமண்டபத்துப் பூர்வாபிமுகமாக எழுந்தருளுவிக்கக் கனககும்பங்களினால் அதிபவித்திரமாகிய க்ஷீரசமுத்திரஜலத்தை தேவர்கள் கொண்டுவந்துகொடுப்ப, சௌதர்மேந்திரனும் ஈசானேந்திரனும் வாங்கிக்கொண்டு சுவாமிக்கு தக்ஷிண பார்சுவத்தினின்றும், வாமபாார்சுவத்தினின்றும் ஜன்மாபிஷேகம் பண்ணுவது.

பரிநிஷ்க்ரமணமாவது:- பகவான், சம்ஸார மனித்தியமென்று விரக்தனாகியதை அவதிஞானத்தினாலறிந்த பிரம்மகல்பவாசிகளாகிய லௌகாந்திகதேவ ரெண்மரும், பகவத்சமீபமடைந்து, "பகவானே! மித்யாத்வமென்கிற மகாவிஷவேகத்தால் மயங்குகின்ற லோகத்தினை தர்மதீர்த்தமென்கிற அமிர்தவருஷத்தால் ரக்ஷித்தருளுதற்கு இதுகாலமாம்" என விண்ணப்பஞ்செய்து துதிக்க, பகவான் அதன்பின், பரிநிஷ்க்ரமண கல்யாணாநந்தரம் தீக்ஷாங்கனைப் பண்ணநினைந்து, நாபிமகாராஜா முதலாகிய பந்துஜநங்களைவிடுத்து, தேவர்களால் நிர்மிதமாகிய சுதர்சனமென்னும் விமானத்தில் சௌதர்மேந்திரன், கைகொடுப்ப ஏறி, நரபதிகள் பூமியிலேழடி எடுத்துச் செல்லப்போய்ப் பிறகு வித்தியாதரர்களாலும் சுரபதிகளாலும் ஆகாயமார்க்கமாகக் கொண்டு போகப்பட்டுச் சௌதர்மேந்திரன் தவளச்சத்திரமெடுப்ப, சனத்

குமாரனும் மாகேந்திரனும் சாமரைவீச, தேவதுந்துபிமுழங்க, புஷ்பவருஷம் பொழியச் சித்தார்த்தவனமடைந்து இந்திரன் கை கொடுப்ப இறங்கிச் சிலாதலத்துமிசை, வஸ்திராபரண மால்யாதிகளை வாங்கியபின், கேசங்களைப் பஞ்சமுஷ்டியாலே (பறித்து) வாங்கித் தன்னுடைய திருவுருவினை (நிர்க்கந்தரூபத்தை) அடைந்து, தவஞ்செய்வதும், அந்தப் பகவானுடைய வஸ்திராபரண மால்யாதிகளையும், கேசங்களையும் தேவர்கள் ரத்னபாஜனத்திலேற்றுக் கொண்டுபோய் க்ஷீரசமுத்திரத்தி லிறக்குவதுமாகும்.

கேவலபூஜையாவது: பகவான்காதிகர்மங்களினின் றும் நீங்கியபின், தேவர்கள் சமவசரணத்தை நிர்மித்துத்துச் செய்யும் பூஜையாகும்.

பரிநிர்வாணமாவது:

"பொன்னரி மாலை சாந்தஞ் சுண்ணம்பூ மாலை தூம
மின்னன பலவு மேந்தி யிமையவ ரிறைஞ்சு மெல்லை
மின்னென முனிவர் மேனி மறைந்தன வியந்து நோக்கிப்
பன்னருந் துதிய ராகி வானவர் பணிந்து போனார்."

என்னும் மேருமந்தரபுராணம் 1398 ஆம் செய்யுளில் கூறப்பட்டதாகும்.

இதன்கருத்து: "பொன்னொலாகிப் பிரகாசிக்கின்ற மாலைகளும், சந்தனாதிகளும், கந்தப்பொடிகளும், புஷ்பமாலை முதலியவைகளும், அகில் தூப முதலியவைகளுமாகிய இத்தகைய அநேகவஸ்துக்களைத் தாங்கிக் கொண்டுவந்து அர்ச்சித்து, தேவர்கள் பரிநிர்வாணபூஜையை விதிப்படி செய்து வணங்குகின்றகாலத்தில், பகவானது பரமௌதாரிக திவ்விய சரீரமானது தோன்றி மறையும் மின்னற்கொடியைப்போல அத்திர்சயமாயிற்று; அப்பொழுது தேவர்கள் ஆச்சரியத்தையடைந்து அதனைப் பார்த்துச் சொல்லுதற்கரிய ஸ்துதிகளையுடையராகி வணங்கித் தமதிடமடைந்தார்கள்" என்பதாம்.

ஸ்வபாவாதிசயங்கள் பத்தும் பகவான் அவதரித்தபொழுது அவருடன் தோன்றுவன. அவையாவன:—

1 பகவான் திருமேனியில் வியர்வையில்லாதிருத்தல்.
2 பஞ்சேந்திரியங்களிலும் ஜலமலங்களில்லாதிருத்தல்.
3 ரத்தம் பால்போன்றிருத்தல்.
4 எல்லாப் பிராணிகளிடத்திலும் ஹிதமான வார்த்தைகளையே பேசுதல்.

5 ரூபிக்கவும் ஒப்பிடவும் முடியாத அழகுடைமை.
6 மிருந்தவாசனை.
7 ஆயிரத்தெட்டு சுபலக்ஷணம்.
8 அளவில்லாத பராக்கிரமமுடையவரா யிருத்தல்.
9 எந்த ஆயுதங்களாலும் புண்படுத்தக்கூடாமை.
10 நான்குபக்கமும் சமமான அழகுடைத்தாதல்.

கர்மக்ஷயாதி சயங்கள் பத்தாவன.

1 நிழலில்லாச் சரீரம்.
2 உண்வின்றி இருத்தல்.
3 துன்ப மில்லாதிருத்தல்.
4 கண்கள் இமைக்கொட்டாதிருத்தல். [திருத்தல்
5 பகவானைச்சுற்றிலுமுள்ள பிராணிகள் ஹிம்ஸை * இல்லா
6 பகவான் எழுந்தருளியிருக்கும் தேசத்தில்க்ஷாமமின்மை.
7 பகவானை தியானித்தவளவில்சகல வித்தைகளும்உதித்தல்,
8 நககேசங்கள் வளரா திருத்தல்,
9 ஆகாசத்தில் செல்லுதலாகியகமனம்.
10 பார்வைக்கு நான்குதிக்கிலும் நான்குமுகமாகத்தோன்றுதல்

தெய்வீகாதிசயங்கள் பதினான்காவன:

1 பகவானிடத்தில் சகலபிராணிகளுக்கும் தம்தம் பாஷையில் விளங்கும் திருவாக்கு உதித்தல்
2 பன்னிரண்டுமாதங்களிலும் உண்டாகும் புஷ்பம் காய் பழம் முதலானவைகள் சுவாமி எழுந்தருளியிருக்கும் தேசத்தில் எப்பொழுதும் நிறைந்திருத்தல்.
3 சர்வஜீவன்களும் நேசமாயிருத்தல்.

---

* "மான்கன்றும் புலியின் கன்று மாறியே முலையை யுண்ணும்
ஆன்கன்று மானைக் கன்றுஞ் சிங்கத்தின் கன்றோ டாடும்
ஊன்றின்று வாழுஞ் சாதி யத்தொழி லொழிந்த வுள்ளச்
தான்சென்ற சாந்தி யார்க்கும் மாதவன் றன்மையாலே"

"எலிசென்று நாகக் தன்மே லேறிடும் நாகங் கிரி
நலியுமென் றஞ்ச வில்லை மானமா வாலின் முன்னைப்
புலிசென்று வாங்கும் புல்வாய் கிடர்தழி நடுங்கு மென்று
நலிவுசெய் வேடர் செல்லார் செற்றமி னற்ற வத்தால்"

என்னும் மேருமந்தரபுராணம் 142-3-ஆம் செய்யுட்கள் இதனை விளக்கும்.

4 சகலஜீவன்களும் கூன்குருடுசெவிடு உளமைமுதலாகிபசரீரக்குறைவும் எவ்விதவியாதியுமின்றிச் சந்தோஷமாயிருத்தல்.
5 சமவசரணக்ஷேத்ரம் அதிநிர்மலமாகி ப்ரதிபலித்தல்.
6 சமவசரணத்தில் மந்தமாருதக் காற்றுவீசுதல்.
7 வாயுகுமாரன் சமவசரணத்தில் தூசிமுதலானவற்றைப் போக்குதல்.
8 மேககுமாரன் சமவசரணத்தில் சுகந்தஹிம ஜலத்தைத் தெளித்தல்.
9 தேவர்களாலும் நரர்களாலும் செய்யப்பட்ட ஜெயகோஷணை.
10 சகலதானியங்களும் சம்பூர்ணமாயிருத்தல்.
11 ஆகாசமும் திக்குகளும் நிர்மலமாயிருத்தல்.
12 த்ரிமேகலாபீடத்தின் இரண்டாவது பீடத்தில் அஷ்டமங்களங்கள்நிறைந்திருத்தல்.
13 தாமரைபுஷ்பத்தின் மிசைநடத்தல்.
14 சமவசரணத்தில் நான்குதிக்குகளிலும் பூதங்கள் ரத்னமயமாகிய தர்மசக்ரத்தை ஏந்திச்செல்லுதல்.

தேவர்களால் பகவானுக்குச் செய்யப்படும் எண்சிறப்புக்களாவன:—

| | | | |
|---|---|---|---|
| 1 | அசோக விருக்ஷம். | 5 | சிம்மாஸனம். |
| 2 | புஷ்பவிருஷ்டி. | 6 | ப்ரபாவலயம். |
| 3 | திவ்வியத்வனி. | 7 | தேவவாத்தியம். [ளாம், |
| 4 | சாமரை. | 8 | முக்குடை ஆகியவைக |

துவாதச கணங்களாவன:—

1 சமவசரணபூமியில்உள்ள கணதராதி மகாமுனிவர்கள். [கள்
2 தவஞ்செய்து நோற்கின்றஆரியாங்கனைகள் முதலான ஸ்ராவகி
3 கல்பவாசி தேவஸ்திரீகள்.
4 ஜோதிஷ்கதேவ ஸ்திரீகள்.
5 வியந்தரதேவ ஸ்திரீகள்
6 பவணதேவஸ்திரீகள்.
7 பவணதேவர்கள்.
8 வியந்தர தேவர்கள்.
9 ஜோதிஷ்கதேவர்கள்.
10 கல்பவாசிதேவர்கள்.
11 ராஜாக்கள் முதலாகிய ஸ்ராவகர்கள்.
12 தர்மவசனத்தைஅறியும் மனோபலமுள்ள திர்யக் ஜீவன்கள் என்பனவாம்.

ஸப்தபயங்களாவன: இஹலோகபயம், அத்ராணபயம், பரலோகபயம், அகுப்திபயம், ஆகஸ்மிகபயம், வேதனாபயம், மரணபயம் என்பவைகளாம்.

பதினெண்குற்றங்களாவன:—

"[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]"

என்னும் சுலோகத்தில் கூறப்பட்டவை.

இ - ள்:—"பசி, தண்ணீர்த்தாகம், பயம், கோபம், ஆசை, மோகம், சிந்தை, மூப்பு, ரோகம், மரணம், வியர்வை, ஆயாசம், மதம், போகம், ஆச்சரியம், ஜநநம், நித்திரை, துக்கம், என்பவைகளாகிய இந்தப் பதினெட்டுத்தோஷங்களும், சாதாரணமாக லோகத்திலுள்ள சமஸ்த ஜீவன்களிடத்திலுமுள்ளவைகள். இந்தத்தோஷங்களினின்றும் எவன் நீங்கியிருக்கிறானோ அவனேபரிசுத்தபரமாத்மனாகும். இந்தத்தோஷங்கள் யாரிடத்திலிருக்கிறதோ அவர்கள் சம்ஸாரிகளென்று கருதப்படுவார்கள். இன்னும் மேற்சொன்னதோஷங்களில் ஒன்றாகிலும்கொஞ்சமேனும் எந்த ஆத்மனிடத்தில் இருக்கிறதோ, அந்த ஆத்மன்ஜீவாத்மனேயொழிய பரமாத்மனல்லவென்பது ஜைநசமயசித்தாந்தம்" என்பதாம்.

இன்னும், பகவானுடைய மகிமைகளைப்பற்றி,

"[illegible]
[illegible]
[illegible]
[illegible]"

என்னும் அகளங்காஷ்டகம் 9-வது ஸ்லோகம் கூறுகின்றது.

இதன்கருத்து: "எவனொருவன் அறிவதற்கு யோக்கியமாயிருக்கிற ஸமஸ்தலோகத்தையும் அறிகிறானோ, அலையையுடைத்தானசம்சாரமாகிறசமுத்திரத்தினுடைய கரையைக்கண்டவனாகிறானோ, எவனுடைய திவ்விய வாக்கானது பூர்வாபரசம்பந்தத்தால் விரோதமில்லாததும், உவமையில்லாததும், களங்கமில்லாததுமாயிருக்கின்றதோ, அப்படிப் பிரசித்தனாயிருப்பவனும், கணதராதிரிஷிஜனங்களாலே நமஸ்காரம் செய்வதற்குயோக்கியனாயிருப்பவனும், சமஸ்தகுணங்களுக்கு மிருப்பிடமான

வனும், கெடுக்கப்பட்டிருக்கிற பதினெட்டுத்தோஷங்களாகிற சத்ருக் களேயுடைத்தாயிருப்பவனும் ஆகியவனே புத்தன், அருகன், பிரம்மா, விஷ்ணு, சிவன்; அவனே நமஸ்கரிக்கின்றேன்" என்பதாம்.

இதன்படி, லோகாலோகத்தை ப்ரத்தியக்ஷமாகக் கேவலஞா னத்தாலறியும் தன்மையும், சம்ஸாரசமுத்திரத்தைத் தாண்டின தன்மையும், பூர்வாபரவிரோதமில்லாத உவமாதீதவசனமுடைத் தான தன்மையும், பதினெண்குற்றங்களில்லாததன்மையும் ஆகிய இந்தக்குணங்களெல்லாம் அருகனுக்குத்தான் பொருந்துமென்ப தும், மேற்சொன்ன நாமங்கள் அருகனுக்குத்தான் உரியனவென் பதும் ஜைநசமய சித்தாந்தங்களாம்.

மேற்கண்டநாமங்கள் அருகனுக்கே தகுதியானவை என்பதை,

"𑌬𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌵𑌿𑌬𑍁𑌧𑌾𑌰𑍍𑌚𑌿𑌤 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿 𑌬𑍋𑌧𑌾𑌤𑍍
𑌤𑍍𑌵𑌂𑌶𑌙𑍍𑌕𑌰𑍋𑌸𑌿 𑌭𑍁𑌵𑌨𑌤𑍍𑌰𑌯 𑌶𑌙𑍍𑌕𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍
𑌧𑌾𑌤𑌾𑌸𑌿 𑌧𑍀𑌰 𑌶𑌿𑌵𑌮𑌾𑌰𑍍𑌗 𑌵𑌿𑌧𑍇𑌰𑍍𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌤𑍍
𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑍋𑌽𑌸𑌿" ॥

என்னும் பக்தாமரம்-25-ஆம் ஸ்லோகத்தால் உணரலாம்.

இ - ள். "சுவாமியே! நீ தேவர்களினலே பூஜிக்கப்பட்டிருக்கிற கே வல ஞானத்தை, தானே அறிந்ததினின்றும் புத்தனாகின்றாய்; மூன்று லோகத்திலுள்ள பிராணிகளுக்கு சௌக்கியத்தைப் பண்ணுவதினல் சங் கரனாகின்றாய்; மோக்ஷமார்க்கத்தினுடைய முறைமையைச் சிருஷ்டி த்ததால் பிரம்மாவாகா நின்றாய்; * பகவானே! நீநிச்சயமாக புருஷோத்த மனாகிய விஷ்ணுவும் ஆகாநின்றாய்; பௌத்தர், எல்லாம் அநித்தியம் என் னும் மித்தியா ஞானத்தை வெளியிட்ட க்ஷணிகவாதியாகிய கௌத மனைப் புத்தனென்றார்கள்; ஆனல் உன்னுடைய கேவலஞானத்தால் சம ஸ்ததத்துவங்களையும் அறிந்து பவ்விய ஜாங்களுக்கு வெளியிட்ட நீயே புத்தனென்னும் பேருக்கு உரிமையுடையாய்; சம்ஹாரகர்த்தாவாயும், திரிபுராரியுமாகிய கபாலியைச் சங்கரனென்பார் சிலர்; திரிலோகத் திற்கும் ஹிதத்தைச் செய்யும் சர்வஜீவதயாபரனாகிய நீயே சங்கரன்; தபஞ்செய்யும்போது அப்சரஸ்திரீயினைக்கண்டு தபமிழந்த நான்முகனை

* மேற்கண்ட குணங்களால் அருகனுக்கே இந்நாமங்கள் பொருந்து வதுபற்றியேமண்டலபுருடர் சூடாமணிநிகண்டு-11-ல், "பகவனே யீசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்" என்றநாமங்களை அருகக்கடவுளு க்குரியனவாகக் கூறியிருக்கின்றார். 'பகவன்' என்பதற்கு, 'கேவலஞான த்தையுடையவன்' என்பதும், இத்தன்மை யுடையவனுக்கு மேற்சொ ன்னநாமங்கள் பொருந்துமென்பதும் இங்குக்கூறியவற்றால் உணரலாம்.

பிரம்மாவென்பார் சிலர்; ஆனால் மோக்ஷவழியை உண்டு பண்ணிய நீயே உண்மையில் பிரம்மா; அவ்வாறே சம்சாரத்தில் காமலீலையிலுழன்றமாதவனைச்சிலர் புருஷோத்தமனென்றார்; அநந்தஞானாதி குணங்களால் நிறைந்து வீதராகனாகி நிர்மல புருஷனான நீயே புருஷோத்தமன்" என்பதாம்.

இன்னும், அயனும், அரனும், அரியும், அருகனே என்பதை,

"முனிமை முகடாய மூவா முதல்வன்
றனிமைத் தலைமை தனதுதா னென்ப
தனிமைத் தலைமை தனதுதா னென்றாற்
பனிமலர்தூய் நின்று பழிச்சாவா றென்னே"

"மலரேந்து சேவடிய மாலென்ப மாலா
லலரேந்தி யஞ்சலிசெய் தஞ்சப் படுவா
னலரேந்தி யஞ்சலிசெய் தஞ்சப் படுமே
லிலரே மலரொளினு மேத்தாவா றென்னே"

களிசேர் கணையுடைய காமனையுங் காய்ந்த
வளிசே ரறவாழி யண்ணலிவ னென்ப
ரளிசே ரறவாழி யண்ண லிவனேல்
விளியாக் குணத்துநாம் வித்தாவா றென்னே"

என்னும்' சிவகசிந்தாமணி-1609, 10, 11, ஆம் கவிகளாலும், நச்சினார்க்கினியர் இவற்றிற் கெழுதிய உரையாலும் உணரலாம்.

இ - ள்: "முனித்தன்மைக்கு மேலாகிய ஒப்பில்லாத தலைமை, முதல்வன்றனதே என்பர், அறிஞர்; அங்ஙனம் கூறுமிடத்து, அவனை உலகம் பழிச்சாதிருக்கின்றது அறியாமை யன்றோ;

மலர்தானேந்தின அடியையுடைய மால், இந்திரனால் வணங்கி மதிக்கப்படுவானென்பர் அறிஞர்; அங்ஙனமாயின் உலகத்தார் மலரிலரெனினும் ஏத்தாதிருக்கின்றது அறியாமை யன்றோ;

காமனைவென்ற அருள்பொருந்திய அறவாழியையுடைய தலைவன் இவனே யென்பர் அறிஞர்; அங்ஙனமாயின் நாம் துதிகளைப் பரப்பாதிருத்தல் அறியாமையன்றோ" என்பதாம்.

இதற்கிணங்கத் தோத்திரத் திரட்டில்,

"திருமாலே திசைமுகனே சிவனே காஞ்சித்
திருப்பருத்திக் குன்றுறையுஞ் செம்பொற் குன்றே"

என்றபெயர்கள் அருகக்கடவுளுக்குக் கூறப்பட்டிருத்தல் காண்க. இன்னும் அருகனுக்குச் சிவன் என்னும் நாமமுண்டென்பதை,

"மாயா நாஸ்தி ஜடாகபால முகுடம் சந்த்ரோ ந மூர்த்தாவலீ
கட்வாங்கம் ந ச வாஸுகிர் ந ச தனு: ஶூலம் ந சோக்ரம் முகம்।
காமோ யஸ்ய ந காமினீ ந ச வ்ருஷோ கீதம் ந ந்ருத்யம் புந:
ஸோஸ்மாந் பாது நிரஞ்ஜநோ ஜிநபதி: ஸர்வத்ர ஸூக்ஷ்ம:
ஶிவ:" ॥

என்னும் அகளங்காஷ்டகம் 10-வது ஸ்லோகம் விளக்குகின்றது.

இதன்கருத்து: "எவனுக்கு மாயை யானதும் ஜடையானதும் இல்லையோ, கபாலம், மகுடம் சந்திரசேகரசிரசு, கட்டில், மெத்தை, இவை இல்லையோ, மற்றும் வில்லானது இல்லையோ, சூலாயுதமானதும் இல்லையோ, குரூரமாயிருக்கிற முகமானதும் இல்லையோ, ஆசையானது இல்லையோ, ஸ்திரீயானவள் இல்லையோ எருதானதும், கீதமானதும் இல்லையோ, நர்த்தனமானது இல்லையோ அப்படிப்பட்ட பிரசித்தனுயிருப்பவனும், கர்மரஹிதனுயிருப்பவனும், உபமாதீதனுயிருப்பவனும், எல்லாவிடத்திலேயும் ஸூக்ஷ்மமாயிருப்பவனுமாகியவனே சிவன்; அப்படிப்பட்டவனுகிய சிவன் எங்களை ரக்ஷிக்கக்கடவன்" என்பதாம்.

இன்னும்,

"சிரத்திர ஞன்கிலனைம்படை யேந்திலன் றின்சிலைபாற்
புரத்திர யங்களை யும்பொடி யாக்கிலன் போதியென்றோர்
மரத்திரள் சேர்ந்துபன் மாயஞ்சொல் லானெங்கை மன்னுயி
பரத்திரயங்கள்பணித்தபிரானெங்கள்பண்ணவனே" [ர்க்குப்

என்னும் திருநூற்றந்தாதி 24-ஆம்செய்யுளும் அருகக்கடவுளின் குணங்களை விளக்கும்.

இதன்பொருள்: "அதிசயத்தாலன்றி விபரீதமுகமான்இல்லாதவன்; பகையில்லாமையாலே ஆயுதமெடாதவன்; முப்புரத்தைச்சுடாதவன்; அரசின்கீழேயிருந்து உயிரில்லையென்று பலபல மாயஞ்சொல்லாதவன்; அவன் யாவனெனின், நிலைபேறுடைய உயிர்களுக்கு, மேலாகிய ரத்னத்திரயத்தை அருளிச்செய்த எங்கள் அருகன்" என்பதாம்.

இன்னும் அருகர் பெருமைகளை,

"தனஞ்சுமந்தலமருமிடையவர்தடங்கணின் கடைதெறமெலியலர்
சரண்புகுர் தடிதொழி னலர்தருசரந்துரந்தெதிர்பொருபகையிலர்
மனஞ்சலம் படிகழுதொடுபிணை வனந்தொறும் படர்தரு மயலிலர்
வனந்தரும் பதிதொறு மிடுபலி வருந்தியுண் டலமரு பசியிலர் [லர்
சினஞ்செய்பவன்பகைவருமெனவளிசிதைந்துவெம்படைபலசுமவ
சிரங்க ளெண்டிசை நிரைகொளவரைசெயும்புயம்பலகொடுதிரியல

ரனர்தர் கொண்ட மளியின்மிசை யறிவழிர்துகண் படுவதோரஸைசவில
குரகண்ட மங்கையின் மணியென வணரபங்கர் சங்கரர் சினாகரே"

என்னும்திருக்கலம்பகம் 107. ஆம் செய்யுளும் விளக்கும்.

(இ - ள்.) "அருகர், சகலத்தையும் உள்ளங்கையிலிருக்கின்ற இரத்தினம்போல அறிகின்ற பங்கமில்லாதவர்; சுகத்தைப் பண்ணுகின்றவர்; வினையைச் செயித்தவர்; பாவமில்லாதவர்; தனபாரங்களைத் தாங்கிவருந்தாநின்ற இடையையுடையவாது விசாலமான சடைக்கண்கள் வருத்த விளையாதவர்; அடைக்கலமடைந்து பாதத்தை வணங்கினுல் மிகுந்த பாணங்களையேவி எதிர்கின்று சண்டைபண்ணும் பகையில்லாதவர்; மனமானது கலனப்படும் பேயுடனே பிணத்தையுடைய சுடலைதோறும் திரியாநின்ற மயக்கமில்லாதவர்; அழகைக்கொடாநின்ற ஈாடுகடோறு மிடப்பட்ட பிச்சையை வருந்திவாங்கிப்புசித்துச் சுழலாநின்ற பசியில்லாதவர்; கோபத்தைப் பண்ணுகின்ற கடினமான பகைவன் வருவானென்று பலஞ்சிதைந்து வெப்பமான ஆயுதங்களை அநேகமாகத்தாங்காதவர்; எட்டுத்திக்கிலும் தலைகள் வரிசையாக மலைபோலக்காட்டும் புயங்களனேகங்கொண்டு திரியாதவர்; சயனத்தின்மேல் நித்திரையைக்கொண்டு அறிவுகெட்டுப்படுப்பதாகிய ஓர்சோர்வில்லாதவர்" என்பதாம்.

இன்னும் இவருடைய தன்மையைப்பற்றி,

"[illegible]
[illegible]"

என்னும் மகாபுராணம் தேவேந்திர ஸ்தோத்திரசுலோகமும் கூறப்பட்டிருக்கிறது.

இ - ள்: "மோகத்தால் குருடனாகிய அசாரோ ஹிம்ஸை செய்ததினுல் உன்னைப் (பெரியார்) யமனுக்கு யமனைச் சொல்லுகின்றார்கள்; எந்தக் காரணத்தினுல் உனக்குப் பாதியாகிறகாதிகர்ம சத்ருக்கள் இராநின்றதில்லையோ, அக்காரணத்தினுல் நீ அர்த்தநாரீஸ்வரனென்னும் திருநாமத்தை யுடையவனாகின்றாய்" என்பதாம்.

இந்தப்பகவான், மனவசனகாயங்கள் முதலான பஞ்சேந்திரிய விஷயஸ்வரூபம் நீங்கி, அதீந்திரியஸ்வரூபனாகி, கேவலஞானவரணீயக்கர்மக் கேட்டினுல், லோகாலோகத்திலுள்ள சமஸ்த பதார்த்தங்களும், த்ரிகாலத்திலும், ஸ்திதி உற்பத்திவிநாஸங்களோடுகூடியிருப்பதை ஒருசமயத்திலே ஒருங்கே அறியும் அநந்தஞானத்தை யுடையவனாயும், கேவலதர்ஸனவரணீயகர்மக் கேட்டினுல் லோகாலோகத்திலுள்ள ஆத்மப்ரமாண ஸ்வரூபமெல்லாம் ஒருங்கே அறியும் அநந்ததர்ஸனத்தையுடையவனாயும்,

மோகனீயகர்மக்கேட்டினால் அநந்தசுகத்தை யுடையவனாகியும்,
அந்தராயக்கர்மக்கேட்டினால் அநந்தவீரியமுடையவனாயும், இப்
படி சகல தோஷரஹிதனா யிருப்பதைக் குறித்து, நிர்தோஷனெ
ன்றும், பரமாத்மனென்றும், அஷ்டகர்மங்களில் காதிகர்மங்கள்
நான்கும் கெடுகையினாலே அர்த்தநாரீஸ்வரனென்றும், பிரஜை
களுக்கு நாடுநகரங்கள் முதலான லோகவிவகாரங்கள் யாவும்
செய்யுமுபாயங்களை உபதேசித்தவனாகையால் சிருஷ்டி கர்த்தா
வென்றும், பிரம்மாவென்றும் லோகாலோகங்களெல்லாம் அநந்த
ஞானாதி குணங்கள் வியாபித்திருப்பதால் விஷ்ணுவென்றும்,
* அந்தரங்கலக்ஷ்மி, பகிரங்கலக்ஷ்மி இவைகளுக்கு (நிவாஸமாய்)
இருப்பிடஸ்தானமா யிருப்பதால் ஸ்ரீனிவாஸனென்றும், மோ
க்ஷஸ்தானத்தை யுடையவனாதலால் சிவனென்றும், சுகத்தை
உண்டு பண்ணுகின்றவனாதலால் சங்கரனென்றும், பவன, வியந்
தர, ஜோதிஷ்க, கல்பவாசிகள் முதலானவர்களால் பூஜிப்பதற்
குரியனாதலால் அருகனென்றும், எட்டுத்திக்குகளையும் வஸ்திர
மாகவுடையவனாதலால் திகம்பரனென்றும், சோகமில்லாதவ
னாதலால் அசோக விருக்ஷ அடையாளமுள்ள அசோகனென்
றும், திரிலோகத்துக்கும் கடவுளாதலால் (சந்திராதித்யம் நித்திய
விநோதம் சகலபாஜனம் என்னும்) மூன்று குடையையுடையவ
னென்றும், திரிலோகத்திலுள்ள சகல வஸ்துக்களையும் கரதலாம
லகம் (நெல்லிக்கனி) போலகாண்கிற கேவலஞானமென்னும் திரி
யலோசன முள்ளவனாதலால் திரிநேத்திரனென்றும், கர்மநிர்
மூலம் செய்கையினால் ¶ ஜிநனென்றும், விகாரவித்வம்ஸனாகை
யினால் மன்மத விஜயனென்றும், ஜாதிஜராமரணமென்கிற திரி
புரத்தைக் கெடுத்த வனாகையினால் திரிபுரஹர னென்றும்,

---

* அந்தரங்கலக்ஷ்மீ-கேவல ஞானம்;பகிரங்கலக்ஷ்மீ-சமவசரணவிபூதிகள்.

¶ 'ஜி' என்றதாதுவிற்கு ஜெயிப்பதென்றர்த்தம். 'ஜி' என்னும் தாதுவினோடு, நக் என்ற ப்ரத்யயம்சேர்த்து, 'ஜிந' என்றசப்தம் சித்தியாகிறது; இதையுடையவனுக்கு ஜிநன்என்றுபெயர். ஜிநன் என்பதற்கு ஜெயிப்பவனெனறர்த்தம். "சம்ஸாரதுக்கஹேதூன், ஜன்மஜராமரணாதீன் ததுத்பூத ஹேதூன் ஞானாவரணாதிதிரவிய பாவாத்மககர்ம சத்ரூம்ஸ்ச ஜயதீதிஜிந:" என்ற ஸ்லோகத்தின்படி, சம்ஸாரதுக்கத்திற்குக் காரணமாகவிருக்கும் ஜன்மஜராமரண முதலானவைகளையும், அவைகட்குக் காரணமான திரவியகர்ம பாவகர்மங்களென்னும் பேதமுள்ள ஞானாவரணீய முதலானகர்மசத்ருக்களையும், யார்நிர்மூலப்படுத்துகிறாரோ, (அதா

§ காதிகர்மங்களைக் கெடுத்தவனாகையினால் வினையினீங்கியவனென்றும், சகல லோகவஸ்து பதார்த்தங்களை உள்ளங்கையில் மூன்று ரேகையைப் பிரத்தியக்ஷமாகக் காண்பதுபோலக்கண்டு சகல ஜனங்களுக்கும் சொல்லுகிறவனாகையினால் சர்வக்ஞனென்றும், அன்பு, அருள், அறம் ஆகிய இம்மூன்றுமே திருமேனியாக அவதரித்துச் சகலஜீவன்களிடத்திலும் சக்ருமித்ருத்துவமில்லாமல் ஒரு தன்மையோடுகூடியிருப்பவனானதால் அன்புள்ளவனென்றும், சர்வஜீவன்களிடத்திலும் அருள் உள்ளவனாதலால் அருளாழி

---

வது மேற்சொன்ன சம்ஸாரகர்மங்களை யார் சம்பூர்ணமாக ஜெயிக்கின்றானோ) அந்த பரமாத்மனேஜிநன் என்ற நாமதேயத்தினால் ஸ்துதிக்கப்படுகிறான்; அந்தப் பரமாத்மனால் சொல்லப்பட்ட தர்மத்திற்கு ஜிநதர்மம் என்றுபெயர்; அந்ததர்மத்தைநம்பும் ஜனங்களுக்கு ஜைநரென்று பெயர்.

§ பகவான் காதிகர்மங்களைக் கெடுத்தவனென்பதை,

"காதியா யிருவினையைக் கடிந்தாய் நீயே
கணமீரா றடியேத்துங் கடவு ளீயே"

என்னும்ஜீவஸம்போதனை 1—வது அத் 20-ஆம்செய்யுளடியாலுணரலாம்.

இன்னும், அருகன் மேல்கண்ட சிறப்புக்களை யுடையவனா தலைத் தொல்காப்பிய ஆசிரியர்,

"வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்."

என்னும்பொருளதிகாரம் மரபியல் 94 ம் சூத்திரத்தாலும் விளக்கியிருக்கின்றார்.

இதன்பொருள்: "வினையினீங்கி - (காதிகர்மரஹிதனாய்) நல்வினை தீவினையினின்றும்விலகி, விளங்கிய-(இந்திராதிதேவர்களால் சமவசரணமென்னும் ஜிநாலயத்தின்கண் கந்தகுடிமத்தியத்து நிர்மிதம் செய்யப்பட்ட அஷ்டமகாப்ராதிஹாரியத்துடனும், முப்பத்துநான்கு அதிசயத்துடனும், பரஞ்சோதிமயமாகிப் பிரகாசம்பொருந்தி)விளங்கிய,அறிவின்-கேவலஞானத்தையுடையவனாகிய, முனைவன்-அருகக்கடவுள், கண்டது-திவ்யத்துவனியினின்றும் அறிந்தது, முதனூலாகும் - பிரதமநூலென்று சொல்லப்படும்"என்பதாம். திருக்குறள் கடவுள்வாழ்த்தில் காட்டியிருக்கும் மேற்கோளால் முதல்நூல் அருளியவர் அருகக்கடவுள் என்பதை உணரலாம். இதனால்தொல்காப்பிய ஆசிரியரும்ஜைநர் என்பதுவிளங்கும். இதற்கிணங்க, சூளாமணி கடவுள் வணக்கம் செய்யுளின் கண்,

"வென்றான் வினையின் றொகையாய விரிந்தடங்க
ளொன்றாய்ப் பரந்தவுணர் வின்னொழியா துமுற்றுஞ்
சென்றான் றிகழுஞ் சுடர்சூழொளி மூர்த்தியாகி
நின்றானடிக் கீழ்ப் பணிந்தார் வினைநீங்கி நின்றார்."

என்று கூறியிருத்தலு முணர்க.

வேக்தனென்றும், சர்வஜீவ தயாபரனென்றும், சதாதர்மங்களையே போதிப்பவனாகையினால், அறவாழியந்தணனென்றும், அறவோன் என்றும், சித்திக்ஷேத்திரமுடையவனாதலால் சித்தி சக்கரத்தையுடையவனென்றும், காதிகர்மங்கள் அறுபத்துமூன்றும் கெடுத்து தேகஜோதி, ஆத்மஜோதி, ஞான ஜோதி என்னும் மூன்று ஒளியினை பெற்றவனாதலால் முச்சோதியையுடையவனென்றும், தனது முக கமலம் ஒன்றாயிருப்பினும் சமவசரணஜிநாலயத்தின்கண் நான்கு கோபுரவாயில்களில் எப்பக்கஞ்சென்றாலும் தெய்வீகாதிசயத்தின் தன்மையால் ஒவ்வொருபக்கமும் தனதுமுகம் காண்கையினால் சதுர்முகனென்றும், சகஸ்ரதளகமலோபரிஸ்திதனாகையால் கமலாசனனென்றும், தர்மதீர்த்தகரனாகையினால் தீர்த்தங்கர பரமேஸ்வரனென்றும், பற்றற்றவனாகையினால் வீதராகனென்றும், யாதொருபயமுமில்லாதவனாகையினால் நிர்ப்பயனென்றும், யாதொரு ஆயுதமுமில்லாதவனாகையால் நிராயுதனென்றும், யாதொருவிக்னமுமில்லாதவனாகையால் நிர்விக்னனென்றும், கிருஷியில்லாதவனாகையால் நிர்க்கிருஷ்யனென்றும், யாதொருசிந்தையுமில்லாதவனாகையால் நிச்சிந்தனென்றும், இன்னும் இத்தன்மையான பலவகைக்காரணங்களால், நிரஞ்சனன், நிராமயன், நிர்மலாயன், நித்தியாயன், நிர்மதாயன், நிர்மோகாயன், நிஸ்ஸபத்னயன், நிரூபத்ரவாயன், நிஷ்களங்கன், நிரம்பராயன், நிச்சலன், நிராசம்ஸாயன், நிருக்தவாசன், நிரபேக்ஷன், நிஷ்பிரபஞ்சன். நிஜகுணநிலயன், நிர்க்குணன், நித்தியரூபன், நிராஸ்ரவாயன், நிரகன், நிராஹாராயன், நிர்மதசரன், நிர்விகாரன், நிரஜன், நிர்ணித்தயுக்தன், நிருபமவிபவன், நிர்ஜ்ஜரபதினுதபாதத்வயன், சாஸ்வதகுணநிலயன், நிரவ்யயன், நிரூபமஹிதன், கிரதார்த்தாயன், மகாதேவன், சதாசிவாயன், ரத்னகர்ப்பன், ஹிரண்யகர்ப்பன் யக்ஞாங்காயன், தயாநிதி, தயாத்துவஜாயன், சுயம்பு, கொல்லாவேதன்எனவும், மேலும் பலவகைகளாகவும் இப்பெற்றிய ஆயிரத்தெட்டுத்திருநாமங்களால் துதிக்கப்படுகிறான். இதனாலும் அருகக்கடவுள் உபமாதீதனென்பது துணியப்படும்.

இன்னும், அருகனே உவமையில்லாதவனென்பதையும், எல்லோர்க்குமிறைவனென்பதையும் மற்றொருவகையாலும் விளக்குவாம்:

" [illegible]
[illegible]
[illegible]
[illegible] "

என்னும், அகளங்காஷ்டகம் 11-ஆம் சுலோகமும் இதனை விளக்குகின்றது.

இ - ள்: "மூஞ்சாம்புல், சூத்ரம், தடி, கமண்டலம் ஆகியவற்றை அடையாளங்களாக உள்ளவன் பிரம்மாவென்றும், ஜடை, கபாலம், கௌபீனம், ஸ்திரீ முதலானவைகளை அடையாளங்களாக உள்ளவன் ஈஸ்வரனென்றும், சங்கு, சக்கரம், கத்தி முதலானவைகளை அடையாளங்களாக உள்ளவன் விஷ்ணுவென்றும், சிவப்புவஸ்திரத்தை அடையாளமாகஉடையவன் புத்தனென்றும், நிர்வாணமுத்திரையை அடையாளமாக உடையவன் அருகனென்றும் (அந்தஅந்தமத சாஸ்திரங்களேகூறுகின்றது) லோகத்திலே பிரசித்தமாயிருக்கின்றது; வித்வாம்ஸர்களே! இவற்றைக்கொண்டு கவனித்துப்பாருங்கள்; லோகத்திலேபிறக்கிற ஜீவன்களெல்லாம், அருகன் சம்பந்தமான நிர்வாணமுத்திரையாகவே பிறக்கின்றன; ஆனபடியினாலே லோகங்களுக்கெல்லாம் அருகனேகடவுளென்பது துணியப்படும்" என்பதாம்.

இதன்படிமனிதர் பிறக்கும்போதும் அருகனுடைய நிர்வாணரூபமாகப் பிறக்கின்றார்கள்; இறக்கும்போதும்,

"முக்காலைக் கொட்டினுண் மூடித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து"

என்று நாலடியாரில் முனிவர் மொழிந்தபடி இறந்தவர்களை, பின்னர்ச் சாகப்போகின்றவர்கள் சுடலைக்குக் கொண்டுபோய்க் கட்டை முட்டைகளை அடுக்கி அவற்றில்வைத்து, அவர்களிடமுள்ள அரைஞாண் வஸ்திரபூஷண அலங்காரங்கள் முதலியவைகளைக் களைந்துகொண்டு, மர்மஸ்தான முதலானவைகளைக் காண்போர்க்கு அருவருப்பு உண்டாகாமலிருக்கும் பொருட்டுச் சல்லாவினால்மூடி, அக்னியிட்டு எரிக்கிறார்கள். அப்போதும் அவர்கள் நிர்வாண முத்திரையுடைய அருகனுடையரூபத்தை அடைகிறார்கள். இது ஜைநர்களுக்கு மாத்திரமேயல்லாமல், சைவவைணவ முதலான சமயத்தினருக்கும் உண்டென்பது எல்லோரும் நன்கறிந்ததாம்.

இன்னும்,

"பூமாலை முதலாய புனையாத திருமூர்த்தி
காமாதி வென்றுயர்ந்த கடவுளென் றறையுமே
காமாதி வென்றுயர்ந்த கடவுளென் றறைந்தாலுங்
கோமானின் றிருவுருவங் கொண்டுவப்பாரரியரே."

என்னும் மேருமந்தரபுராணம் 64-ஆம் செய்யுளும் அருகக்கடவுள் உயர்வைவிளக்குகின்றது.

இ - ள்: "புஷ்பமாலை முதலானவைகளை அலங்காரமாகவணியாத அழகிய உனதுபரமௌதாரிக திவ்வியதேகமானது, நீ ஆசைமுதலாகிய குற்றங்களைஜெயித்து சுபாவகுணங்களாலுயர்ந்த பகவானென்று தெரிவிக்கும்; அங்ஙனம் அந்த ராகாதிகளைவென்று உயர்ந்த நிலைமையையுடையகடவுள் இவர்தாம் என்றுதெரிவித்தாலும், கோமானே! உனது அழகியரூபத்தைமனத்துட்கொண்டு சந்தோஷித்துச்செல்கின்றவர்கள் அருமையாயிராநின்றார்கள்" என்பதாம்.

மேலும்,

" தஷாஹமவ தொராஙிவ ஃவஸாஙிவம் விஹாவூஙம்
வஶ்ருஸௌ஧ஸஹரெஷுணநாவசூ ஆஷ்டீஂஸஹஸ்ரஷ்டுசுக "

என்னும் மகாபுராணம் 17-ம் பர்வம் 222-ஆம் சுலோகமும் பகவான் மகிமையைவிளக்குகின்றது.

இ - ள்: "பிரகாசம் பொருந்தியவரும், உவமையில்லாத ரூபலாவண்ணிய முடையவருமான கேவலஞானியாகிய பகவானுடைய ரூபத்தை ஆயிரங்கண்களுடைய இந்திரன், தனது ஆயிரங்கண்களினாலும் கண்டும் திருப்தியையடையவில்லை" என்பதாம்.

இன்னும்,

"பூரணை யாற்பதி னாற்கயிற் றூக்கப் புவனமெல்லாம்
நீரணை மாருதந் தாங்கிய தொக்கு நிவந்தசிங்கப்
பேரணையார்க்கிணை யாருமில் லாப்பெரியோர்க்குவிண்ணோர்
பாரணை யாவடி தாங்கச்செந் தாமரை பாரித்ததே"

என்னும் திருநூற்றந்தாதி 91-ஆம் செய்யுளும் இதனை உணர்த்துவதாகும்.

இ - ள்: "ஒப்பு ஒருவருமில்லாமல் சிங்காசனத்திருந்த பெரியோர்க்கு அதாவது பெருமைபொருந்திய அருகபரமனுக்கு, அவரது நிலந்தோயாத்திருவடிகளைத் தாங்குவதற்குத் தேவர்கள் பொற்றாமரைப் பூவைப் பண்ணினது எதுபோலுமென்னில், பதினாலு கயிற்றின்உயரத்தையுடைய உலகங்களையெல்லாம் முறைமையாகக் கெட்டியகாற்றானது தாங்கியதை ஒக்கும்" என்பதாம்.

இஃதன்றி,

"அருக னீநல்ல பூசைக் கருகனுய்ப்
பெரியை யாயினை பெண்ணசை யின்மையா

லொருவ னுயிரை யொப்பவ ரின்மையாற்
றுருவ மாயினை தோற்றம தின்மையால்''

என்னும் மேருமந்தரபுராணம் 1300-ஆம் செய்யுளும் அருகன் உயர்வைக் கூறுகின்றது.

இ - ள்: "நன்மையாகிய பவ்வியர்களினல் செய்கின்ற பூஜைக்கு நீ உரியவனுகி, அதனுல், அருகன் அருகன்என்கிற பெயருடையவனுனுய்; ஸ்திரீவாஞ்சையில்லாததினுல் பெரியோனுனுய்; உனக்கொப்பானவர்களில்லாமையால் உபமாதீதனுகினுய்; பிறப்பில்லாததினுல் நிச்சயமான நித்தியஸ்வரூபியானுய்'' என்பதாம்.

அன்பார்ந்த அறிஞர்களே! மேற்கண்ட பலமேற்கோள்களால் எடுத்துக்காட்டியிருக்கின்ற விஷயங்களில் ஒவ்வொன்றையும் நன்ருகப் பரிசிலனை செய்து பார்த்தால் உவமையில்லாதவன் அருகனென்பதும், இப்பெயர் மற்றசமயக்கடவுள்களுக்குப்பொருந்தாதென்பதும் பிரயத்தியக்ஷமாகவிளங்கும்.

இனி, அருகக்கடவுள் தர்மசக்கரத்தை உடையவரென்னும் ஜைநமததத்வத்தையும் திருக்குறள் விளக்கக்கூடியதா யிருக்கிறது. அதைப்பற்றியும் ஆராய்வாம்:

"அறவாழி யந்தணன் ருள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது''

என்னும் குறள் அதனைவிளக்கும்.

இ - ள்: "அறவாழியந்தணன்-தர்மசக்கரத்தையுடைய அருகக்கடவுளது, தாள்-பாதத்தை, சேர்ந்தார்க்கல்லால் - அடைந்தவர்க்கல்லாமல், பிறவாழி - சதுர்க்கதிப் ப்ரமணமாகிய பிறவிக்கடலை, நீந்தல் - கடத்தல், அரிது-(மற்றையர்க்கு) முடியாது'' என்பதாம். சதுர்க்கதிகளாவன:— நரக, விலங்கு, மனுஷ்ய, தேவ கதிகளாம்.

இதற்கிணங்க,

"ஸ்ரீமதே ஸகலஜ்ஞாந ஸாம்ராஜ்யபதமீயுஷே
தர்மசக்ரப்ருதே பர்த்ரே நம: ஸம்ஸாரபீமுஷே''

என்னும் மகாபுராணம், கடவுள்வணக்க சுலோகமும் கூறப்பட்டிருக்கிறது.

இ - ள்: "சகல ஐஸ்வரியத்தோடுங்கூடி கேவலஞான சாம்பிராஜ்ஜிய பதவியாகிய மோக்ஷலக்ஷிமியினல் விரும்பப்பட்டவரும், சம்சாரத்திற்கு (சதுர்க்கதி பிரமணத்திற்கு) பயத்தை யுண்டுபண்ணுகின்றவரும், தர்மசக்கரத்தைத் தரித்தவருமாகிய அருகத் பகவானை நான் நமஸ்கரிக்கின்றேன்'' என்பதாம்.

இன்னும்,

“தர்மசக்ரம் தயாசக்ரம் அஸாதாரண சக்ரகம்
ஸார்க்ய லக்ஷ்மீ ஸித்தசக்ரம் ஸார்வசக்ரீ ஜிநோத்தம:”

என்னும் அமரசிம்மம் அருகன்பேர்வழி சுலோகத்திலும் இது கூறப்படுகின்றது.

இதன்கருத்து: “தர்மசக்கரம், அருள்சக்கரம், அசாதாரணசக்கரம், ஆர்க்கியலக்ஷ்மியுடன் கூடிய சித்தசக்கரம், சார்வசக்கரம்” என்பதாம்.

“மறுவற வுணர்ந்தனை மலமறு திகிரியை”

என்று சீவகசிந்தாமணி-2563-ஆம் செய்யுளடியிலும்,

“ஆண்டுகொண் டோயற வாழிகொண் டேவென்ற வந்தணனே”

என்று திருநூற்றந்தாதி-27-ஆம் செய்யுளடியிலும்,

“அருட்சக்கர மேந்திய சங்கரனே”

என்று திருநூற்றந்தாதி-67-ஆம் செய்யுளடியிலும்,

“அருளாழி முன்செல்லப் பின்செல்வ தென்னோ
வடிப்படா தாய்நின்ற வகன்ஞால முண்டோ”

என்று சூளாமணி-துறவுச்சருக்கம். 68-ஆம். செய்யுளடியிலும்,

“தாமரையி னங்கணடி வைத்தருளு மாதியா யாழி
யறவரசே யென்று நின் னடிபணிவ தல்லால்”

என்று சூளாமணி, துறவுச்சருக்கம் 73-ஆம் செய்யுளடியிலும்,

“சம்பவன் முன்பு நின்ற தருமச்சக் கரத்தி னும்பர்”

என்று மேருமந்தரபுராணம். 1189-ஆம்-செய்யுளிலும் அருகக்கடவுள் தருமசக்கரமுடையவரென்னும் விவரம் கூறப்படுகின்றது.

இன்னும்,

“மறவாழி யிறையவரு மாதவரும் புடைசூழ
வறவாழி வலனுயரி யருணெறிமே யருளியோய்”

என்று யாப்பருங்கலவிருத்தி-பகுதி 1, பக்கம். 296-ல் வரும் அடிகளும்,

“கொலையி லாழி வலனுயர்த்த குளிர்முக் குடையி
னிழலோய் நீ”

என்ற சீவகசிந்தாமணி - 1244-ஆம்செய்யுளடியும் இதனை விளக்குகின்றன.

இதற்கிணங்க, தற்காலத்திலும் அருகக்கடவுள் பிரதிபிம்பத்தின்பிரபாவலயத்து தக்ஷிணபாகத்தில் தர்ம சக்கரம் அமைத்திருப்பதைப் பிரத்தியக்ஷமாகக்காணலாம்.

இன்னும்,

"அருளொ டெழுமற வாழிப் பாபிற வாழியிப்பா"

என்னும் திருநூற்றந்தாதி-5-ஆம் செய்யுளடிக்கு, சென்னை யூனிவர்ஸிட்டி என்னும் சகலகலாசாலைத் தமிழ்த் தலைமைப்புலவரா யிருந்து காலஞ்சென்ற மழவை மகாலிங்க ஐயர் அவர்கள் சுமார் 80. வருஷங்கட்கு முன் எழுதிய பதவுரையில் 'அறவாழி' என்பதற்குத் தர்மசக்கரமென்றும், 'பிறவாழி' என்பதற்குப் பொருளுமின்பமுமான கடலுள் எனவும் பொருள் விளக்கியிருப்பதாலும் இது துணியப்படும். பிறவாழி என்பதற்கு நாம் மேற்கூறியபடி சதுர்க்கதி யாகிய சம்சாரக்கடல் என்று பொருள்கூறுதலும் பொருத்தமாம்.

இன்னும்,

"மறங்கொ ணேமி விட்டெறிந்து மன்னர்சென்னிசோரியிற்
பிறங்க வென்ற வென்றியோ ரனேக பே ருலகெல்லா
மிறைஞ்ச வெங்கண் வல்வினைத் தெவ்வர் சிந்த வெந்துபே
ரறங்க ணேமி கொண்டு வென்ற சோதி யெங்க ளாதியே"

என்ற - திருக்கலம்பகம் 24-ஆம்-செய்யுளிலும் இது கூறப்பட்டிருக்கின்றது.

இ - ள்: "பாவத்தைக்கொண்ட சக்கரத்தைவீசி அரசர்களுடைய சிரங்கள் இரத்தத்தில் மூழ்கிவிளங்க, அவர்களைஜெயித்த வெற்றியையுடையோர் அநேகர்; உலகமெல்லாம் வணங்கக்கொடுமையான வலியையுடைய இருவினையாகிய பகைவர்கெடச்சினந்து பெரிதாகிய தருமச்சக்கரத்தைத் தன்னிடத்திற்கொண்டு அவ்வினைகளை ஜெயித்த சோதியானவர் எனது: சுவாமி" என்பதாம்.

குறளாசிரியர், "அறவாழி..." என்றகுறளில் கூறிய, "அறவாழி, பிறவாழி" என்பவற்றிற்கு, மகாலிங்க ஐயர் உரைசெய்தருளியபடி, "அறவாழி" என்பது தருமச்க்ரமேயாம். அங்ஙனமிருப்ப, பரிமேலழகர், "அறவாழியந்தணன்" என்பதற்கு, "தருமக்கடலாகிய கடவுள்" என்றும், "பிறவாழி" என்பதற்கு "பொருளுமின்பமுமாகிய கடல்" என்றும் பொருள்கள்வரைந்திருக்கின்றனர். இவை பொருத்தமற்றவையாம். ஏனெனின், மேற்கூறிய அநேக உதாரணங்களால், "அறவாழி" தருமசக்கரமே என்பது நிச்சயமாகவிளங்கும். "மகாவிஷ்ணுவிற்குச் சக்கரமிருப்பதால், இது அருகக்கடவுளுக்கு மாத்திரம் எவ்வாறு பொருந்தும்? 'அறவாழி யந்தணன்' என்பதை விஷ்ணுவென்று ஏன்கொள்ளக்கூடாது?" என்றுசிலர்செல்லக்கூடும். மகாவிஷ்ணுவினிட

யிருப்பது, தருமசக்கரமாகாது; ஹிம்ஸாசக்கரமாகும். ஆதலின் அதுபொருந்தாது. இக்காரணங்களால், அறவாழி-தர்மச்சக்கரமென்றும், பிறவாழி பிறவிக்கடலென்றும் தாத்பரியம் செய்ய வேண்டும்.

இன்னும், அருகக்கடவுள் மலர்மேல் நடந்தவிஷயத்தையும் திருக்குறள் விளக்கக் கூடியதாயிருக்கின்றது. அதைப்பற்றியும் சிறிது ஆராய்வாம்:

"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

என்னும் குறளே இதனைத் தெளிவாக விளக்கக்கூடியதாயிருக்கின்றது.

இ - ள்: "தாமரைமலரின்மேல் நடந்தவனாகிய அருகக் கடவுளின் பெருமைபொருந்திய பாதகமலங்களை அடைந்தவர்கள் எல்லாவுலகங்களுக்கு மேலாகிய மோக்ஷஸ்தானத்தில் எக்காலத்திலும் சலனமின்றி வாழ்வார்கள்" என்பதாம்.

பரஹிதநிரதனாகிய ஆதிபகவான், சம்பூர்ண சந்திரமண்டலம் போன்ற சத்ரத்திரயம் (முக்குடை) தானேகவிப்ப, சந்திரக்கிரணங்கள் போலும் சாமரைகள் தாமே இருமருங்கும் அசைய, தர்மசக்ரம்முன்செல்ல, தேவதுந்துபி முழங்க, கின்னரர் வீணாவேணு மிருதங்கங்களைவாசிப்ப, கந்தர்வர் பகவான்குணங்களைப்புகழ்ந்து பாட, §சௌதர்மேந்திரன் சர்வாபரண பூஷிதனாகி பாகுசகஸ்திரங்களைநிர்மித்து, அபிமுகமாக நின்று நயனாநந்தமாகநர்த்தனம் பண்ண, திவ்வியஸ்திரீகள் தன்னைச்சூழ்ந்து கற்பகவல்லிபோல நர்த்தனம்பண்ண, அக்னீந்திரன் அநேகபாகுக்களால் தூபகடங்களைத்தரித்துமுன்செல்ல, திக்தேவதைகள் அஷ்டமங்களங்களை

§சௌதர்மேந்திரன் நர்த்தனம் செய்தா னென்பதை,

"புயங்க ளாயிரந் திரண்டிரு மருங்கும்
பொங்கி யாயிரம் வரையெனக் குலாவக்
கயங்கொ டாமரைப் போதென மலர்ந்த
கண்க ளாயிரங் களிப்பவின் னவர்கோ
னயங்கொ ளாநந்த நாடக மாடி
நாம மாயிரம் பாடவர் தருளு ஞ்
சயங்கொ ளாழியங் கடவுளே யெமக்குன்
சரண மாவண வரணமா வனவே"

என்னும் திருக்கலம்பகம் 35-ஆம் செய்யுளும் விளக்கும்.

யேந்திச்செல்ல, தேவசேனை ஜெயஜெயவென்று துதிப்ப, துகிற் கொடிகள் பரந்துமுன்செல்ல, திக்குகள் பிரஸன்னங்களாக, பூமி சால்லியாதிசம்பத்தினையடைய, சுரபி மந்தமாருதம்வீச, தேவர்கள் சுகந்தஜலங்களினுல் தூளி உபசமனம்பண்ண, விருக்ஷங்கள் முதலானவை ஷட்ருது சம்பூதமாகிய புஷ்ப பலபாரங்களையடைய, பகவானது சரணன்நியாஸப்பிரதேசநபஸ்தலத்து மிருது ஸ்பரிச ஹேமமயமாக முன்னும் பின்னும் விகசிதஸப்த பத்மங்களும், அவற்றின் மத்தியிலுள்ள பத்மமும் லக்ஷ்மிநிவாஸ சௌதங்கள் ஆகாசாங்கணத்துச் சஞ்சரியாநின்றனபோல விளங்கா நிற்ப, காசியாதி சகலதேசங்களிலும் விஹரித்து, கிரமமாகச் சந்திரக்கிரணம் போன்ற தனது கீர்த்தியினை அனுசரியாநின்ற கைலாசபர்வத சிகரத்து, தேவநிர்மிதபூர்வோக்தவர்ணனோபேதமாகிய ஸ்ரீசபாமண்டபத்து, துவாதசகணபரிவிரதனுகி, அஷ்டமகாப்பிராதி ஹார்யசமன்விதனுகிஎழுந்தருளியிருந்தனன்" என்று ஸ்ரீபுராணத்தில் கூறப்படும் அருகக்கடவுளின் சிறப்புக்களினிடையில் அந்தப் பகவான் மலர்மேல் நடந்த விவரம் கூறப்பட்டிருப்பதுகாண்க.

இன்னும் பகவான் தாமரைமலர்மீது நடந்தாரென்பதை,

"𑌮𑌕𑌰𑌨𑍍𑌦𑌰𑌜𑍋𑌵𑌰𑍍𑌷𑌿 𑌪𑍍𑌰𑍋𑌦𑍍𑌭𑌿𑌨𑍍𑌨𑌕𑍇𑌸𑌰𑌂
𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌰𑌤𑍍𑌨𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌣𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑌂 𑌵𑌿𑌕𑌸𑌦𑍍𑌦𑌲𑌂
𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌨𑍍𑌯𑌾𑌸𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑍇𑌽𑌭𑌵𑌤𑍍𑌸𑍍𑌵𑌯𑌂
𑌮𑍃𑌦𑍁𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌮𑌿𑌵𑌾𑌤𑌨𑍍𑌵𑌤𑍍 𑌪𑌙𑍍𑌕𑌜𑌂 𑌹𑍇𑌮𑌕𑍇𑌸𑌰𑌂
𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑌶𑍍𑌚 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌚𑍍𑌚 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌕𑌾𑌸𑌿𑌨𑌃
𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑌾𑌸𑌨𑍍𑌸𑍁𑌗𑌨𑍍𑌧𑌾𑌸𑍍𑌤𑍇 𑌸𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌿𑌞𑍍𑌜𑌲𑍍𑌕𑌰𑍇𑌣𑌵𑌃"

என்னும் மகாபுராணம் 25-ம் பர்வம் 271-ஆம் சுலோகத்தாலும் உணரலாம்.

இதன்கருத்து: "மகரந்தப்பொடியை வருஷிப்பதும், நூதனமாக மலர்ந்த கிஞ்சல்கத்தையுடையதும், நாநாவர்ணரத்னரசிதகர்ணிகையையுடையதும், பிரகாசம்பொருந்திய இதழினையுடையதுமாகிய ஸ்வர்ண தாமரஸபுஷ்பமானது பகவானுடை பாதஅடிவைப்பாகிய பிரதேசத்தில் மிருதுவாகத் தொடுவதுபோல் பிரகாசித்தது; அத்தகையபகவானது பாதத்தின்கீழிருக்கும் புஷ்பத்திற்கு முன்னேமு பின்னேமு தாமரைப் புஷ்பங்கள் மிகுந்தவாசனையையுடையவைகளும் நெருங்கிய கிஞ்சல்கத்தின் தூள்களை யுடையவைகளுமாக உண்டாயின" என்பதாம். (கிஞ்சல்கம்-தாமரைப்பூவின்மத்தியிலுள்ளது.)

இன்னும், ஆதிபகவான் மலர்மீது நடந்ததை,

"மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லதென்
றலைமிசை யுச்சி தானணிப் பொறாது"

என்னும் சிலப்பதிகாரம் நாடுகாண்காதை. 204,5-ஆம்வரிகளா லும்,

"விரிபூந் தாமரை மேற்சென்ற
திருவா ரடியேத்தி"

என்னும் சீவகசிந்தாமணி-2814-ஆம் செய்யுளடிகளாலும்,

"கமலமீ துலவுமுனைக் காதலிப்பா ரரியரே"

என்னும் மேருமந்தரபுராணம்-66-ஆம் செய்யுளடியாலும்,

"தேனுறு மரவிந்தஞ் சென்றேறும் போழ்து
திருவடிகள் செங்தோடு தீண்டாவே யாகி"

என்னும் சூளாமணி - துறவுச்சருக்கம். 69-ஆம் செய்யுளடியா லும்,

"தாவின்றி எப்பொருளும் கண்டுணர்ந்து தாமரைப்
பூவின்மேற் சென்றான் புகழடியை"

என்னும் அறநெறிச்சாரம் கடவுள்வாழ்த்துச் செய்யுளடிகளா லும்,

"நகாநின்ற தாமரைமே னடந்தேகிய நற்றவனே"

என்னும் திருநூற்றந்தாதி-45-ஆம் செய்யுளடியாலும்,

"மாவாதல் களிறாத லேறாத லேறு
மலர்த்தா மரைக்கே செலத்தாள் வைக்குந்
தேவாதி தேவா நமஸ்தே நமஸ்தே"

என்ற திபங்குடி திபநாதர்நமோஸ்து பதிகச்செய்யுளாலும்,

"மருவார் மலர்ப்பிண்டி மன்னா நமஸ்தே
வண்டாரு மலர்மேல் நடந்தாய் நமஸ்தே"

என்னும் திபங்குடித்திபநாதர் துதியாலும்,

"கதமும் மதமும் கடிந்தாய் சரணம்
கமலத்தின் மீது நடந்தாய் சரணம்"

என்னும், பாரிஸ்வநாதர் சரணப்பதிகத்தடியாலும்,

"தாட்டவிழ் தாமரைநடந்த தத்துவனை முத்திமுதற்பொருளை"

என்னும் திருமயிலாப்பூர் பத்தும்பதிகச்செய்யுளடியாலும் உணரலாம்.

"வீசுடல பெறிதிரையின் மேவுகடன் மருவுபுணை
வேகவினை வனயடைய வீழவுட னெறியு மழு
வாசையவிர் பொறியரவி னுவிசெல வதிருமிடி
யாறுவதுரு நயமயல்க ளாயவிருள் பருகுசுடர்
மாசிலருண் முனிவர்மன வாவிநடு வலருமலர்
வானவர சர்கண்முடியின் மாமகுட சிகையின்மணி
பேசரிய சிவகதியி லேறுமவர் குறுகு நெறி
யேடவிழு நளினமிசை யேகுமவ ரடியிணையே"

என்னும் திருக்கலம்பகம்-53-ஆம், செய்யுளும் இதனைவிளக்கும்.

இ - ள்: "இதழ்விரிகின்ற தாமரைப் பூமேல் நடக்கின்றவராகிய அருகருடைய இரண்டுபாதங்களும். வினையைக்கொடுக்கின்ற தேகமாகிய மோதுகின்ற அலையோடு பொருந்திய பிறவிக்கடலுக்குப் பொருந்திய தெப்பமாம்; வெப்பத்தையுடைய தீவினைக்காடு முழுவதும் அழிய ஒரு தன்மையாகவெட்டுகின்ற கோடாலியாம்; இச்சையாகிய விளங்குகின்ற புள்ளிகளுடைய பாம்பினுடைய உயிரானது நீங்கமுழங்குகின்ற இடியாம்; ஆறுவகைப்பட்ட * ஏகாந்தவாதமென்னும் மயக்கங்களான இருட்டைப்போக்குகின்ற சூரியனும்; குற்றமில்லாத ஜீவகாருண்ணியத்தையுடைய முனிவர்களுடைய மனமாகிய தடாகத்தினது மத்தியில் மலர்கின்றபூவாம்; இந்திரருடைய சிரத்திற்றரிக்கும் பெருமைபொருந்திய கிரீடத்தினுடைய உச்சியிலிருக்கின்ற இரத்தினமாம்; இகழ்வில்லா தமுத்தியில் சேருகின்றவர்கள் அடைகின்றவழியாம்" என்பதாம்.

* ஏகாந்தவாதிகள் அறுவரென்பதை, அறநெறிச்சாரத்தில்,

"சக்கர னுன்முகன் சங்கரன் பூரணன்
புத்தன் கபிலன் கணுதனெனன் றித்திறத்
தேகாந்த வாதிக ளொண்கெட்ட வாதம்போ
லாகாதா மாத்தன் றுணிவு"

எனவரும் செய்யுளாலுணரலாம்.

"புத்தக்கடவுளுக்கும் பூமிசைநடந்தோன் என்றதிருநாமமிருப்பதால் திருக்குறளாசிரியர் இதைப்புத்தருக்கேசொன்னாரென்று ஏன் கொள்ளக்கூடாது? இது எப்படி அருகக்கடவுளுக்கே பொருந்தும்?" என்றுசிலர் சொல்லக்கூடும். புத்தர்கொள்கை, குறளாசிரியர் நூலிற்கூறியகொள்கைகளுக்குமாற்றமாயிருப்பதால்

இது பொருந்தாது. புத்தர்கொள்கை குறட்கருத்துக்கு மாற்றமென்பதை,

"வயிரமொன் றுடையான் வையத் துயிர்கண்மேன்மாயைமைந்தன்
செயிர்விடத் தயாமுன் னோரா னறக்கெடு மனித்தஞ் சொன்னா
னுயிரினை யில்லை யென்றா னூனினை யுண்க வென்றான்
பயிரினாற் கொலையுஞ் சென்னான் முக்தியும் பாழென்றிட்டான்"

என்னும் மேருமந்தரபுராணம் - 667 - ஆம்கவியால் உணரலாம்.

இ - ள்: "மாயாதேவியின் புத்திரனாகிய புத்தன் வைராக்கியமொன்றையே மிகவுமுடையவன்; இவ்வுலகில் துன்பம் நீங்க முன்னே ஜீவன்களின் மேலுள்ள தயவை அறியான்; சர்வதாநாசமாகும் அனித்தியத்தைச்சொன்னான்; ஜீவனையில்லையென்றும் சொன்னான்; மாமிசத்தை உண்ணுகவென்றுஞ்சொன்னான்; இவ்வாறு கூறிய பொருளற்ற சொற்களால் கொலையையும் சொல்லினான்; மோக்ஷமும் சர்வதா ஒன்றுமில்லாமல் நாசமாதலென்றும் சொன்னான்" என்பதாம்.

ஆறளாசிரியர் குறளில் ஜைனசமயக் கொள்கைக்குப் பொருத்தமாக ஜீவன்கள் நிலைபேறுடையன வென்பதையும், அவற்றிற்கு மறுபிறப்புண்டென்பதையும், ஊழ் உண்டென்பதையும், கொல்லாமை, புலான்மறுத்தல் முதலியவற்றையும், நிலமிசைநீடுவாழ்வாரென்று மோக்ஷத்தையும் கூறியிருப்பதாலும், புத்தர்மேற்காட்டிய செய்யுளிற்கூறியபடி மோக்ஷமுதலானவைகளை அனித்தியமென்பதாலும், 'மலர்மிசை ஏகினான்' என்பதைப் புத்தனைக்குறித்துச் சொல்லியிருக்கமாட்டாரென்பதை நிச்சயமாக உணரலாம்: இதனால் திருக்குறள் புத்தசமயத்திற்குப் பொருந்தாதென்பது நன்குவிளங்கும். இனி இது பிரமாவிற்குப் பொருந்துமாவெனின், அவர் கமலாசனமுடையவர் என்பது ஆகமப்பிரமாண மாதலால் இந்த, 'மலர்மிசைநடந்தோன்' என்பது அவருக்கும் பொருந்தாது.

மேல்கண்ட ஆகமப்பிரமாணங்களால் 'மலர்மிசை ஏகினான்' என்கிற திருநாமம் ஜைநசமயக்கடவுளாகிய அருகருக்கே உரியதென்பதும், திருக்குறளாசிரியர் அவரையே மலர்மிசை ஏகினானென்று கூறினாரென்பதும், ஐயமறவிளங்கும். இவை இங்ஙனமிருக்கப் பரிமேலழகர், 'மலர்மிசை ஏகினான்' என்பதற்கு 'அன்பரது நெஞ்சமாகிய தாமரைமலர்மீது நடந்தவர்' என்று பொருளுரைத்திருக்கின்றார். இது சரியன்று. ஏனென்றால், நடத்தல்தொழிலையேற்பதற்கு வரிசையாக அமைந்த தாமரைப்புஷ்பங்கள்பொ

ருத்தமானவையேயன்றி, மனம் பொருத்தமானதன்று. இருத்தற் றொழிலேயேற்பதற்கே மனம்பொருத்தமானதாம். 'மலர்மிசை இருந்தான்' என்றால் அதற்கு ஒரு வகையில், 'மனமாகிய மலரில் தங்கியவன்' என்று பொருளுரைக்கலாம்; அப்படி உரைப்பதிலும் மனமென்பதை வருவித்து வலிந்து பொருள்கூறவேண்டியிருப்பதால் அதுவும் சிறந்ததாகாது. பலநூல்களிலும் அருகக்கடவுள் தாமரைமலரில் நடந்தாரென்று விளக்கமாகச் சொல்லியிருப்பதைக்குறளாசிரியர் வெளிப்படையாகக் காட்டியிருக்கும்போது, அதற்கு இடர்ப்பாடானபொருளுரைத்து உண்மையைமறைப்பது நடுவு நிலைமையற்ற செய்கையாகும். ஆகையால் அருகத்பரமேஷ்டியான ஆதிபகவான் கருமபூமியின் ஆதியில் அதாவது கிருதயுகத்திலே அவதரித்துச் சமவசரணத்தில் மலர்மிசைஏகினவராதலால் அவரைப்பற்றியே ஆசிரியர் கூறியருளியிருக்கின்றாரென்பதை நன்கு அறியவேண்டும்.

இன்னும், "பிறவிப்பெருங்கடல்......" என்னும் குறளும் ஜைநமதக்கொள்கைகளை நன்குவிளக்கக்கூடியதாயிருக்கிறது. அதைப் பற்றியும் சிறிது ஆராய்ந்துரைப்பாம்:

> பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
> இறைவ னடிசேரா தார்"

என்றகுறள், பஞ்சபரி வர்த்தன ரூபமான சம்சாரத்தை விளக்கிக் காட்டி, அதனை நீக்குமார்க்கங் கூறுகின்றது.

இ - ள்: "இறைவன்-அருகக்கடவுளின், அடி-பாதங்களை, சேர்ந்தார்-சேர்ந்தவர், பிறவிப் பெருங்கடல் - பஞ்சபரிவர்த்தனைகளாகிய சம்சாரக் கடலை, நீந்துவர்-நீந்திக் கடப்பார், சேராதார்-சேராதவர், நீந்தார்-அந்த சம்சாரக்கடலைக் கடக்காமல் அதில் அழுந்துவர்" என்பதாம்.

பஞ்சபரிவர்த்தனைகளாவன: திரவியம், க்ஷேத்திரம், காலம், பாவம், பவம், என்பனவாம். எழாவது குறளில், 'பிறவாழி நீந்தலரிது.' என்றதால், சதுர்க்கதிகளையும் விளக்கி, இந்தக்குறளில், பிறவிப்பெருங்கடலென்றதால், பஞ்சபரிவர்த்தனைகளாகிய சம்சாரக் கடலை மொழிந்தனர் ஆசிரியர்.

பஞ்சபரிவர்த்தனைகளைப்பற்றியும், சதுர்க்கதியைப்பற்றியும், உள்ள விஷயங்களை,

> "மாற்றி னின்றது வையக மூன்றினு
> மாற்ற வும்பரி யட்டமோ ரைந்தினுற்

றேற்றம் வி டொடர்ந்திடை யில்வினைக்
காற்றி னற்கதி நான்கிற் சுழலுமே"

என்னும் மேருமந்தரபுராணம் - 71 ஆம் செய்யுளும் விளக்கும்.

இ - ள்: "மாற்றமாகிய சம்சாரநெறியில்நின்ற சம்சாரஜீவன், மூன்றுலோகங்களிலும் திரவிய, க்ஷேத்திர, கால, பாவ, பவமென்னும் பஞ்ச பரிவர்த்தனைகளினால், மிகவும் பிறத்தலும், சாவதும், ஆகிய இவைகளைச் சேர்ந்து மத்தியில் கருமங்களாகிற காற்றினால் (நரக, திரியக், மனுஷ்ய, தேவ என்னும்) நான்கு கதிகளிலும் சுழலாநிற்கும்" என்பதாம்.

இதனை,

'பிறவி மாக்கடல் பெயர்க்கு மாற்றலா
விறைவ னன்னவ னேந்து கொள்கையான்"

என்னும் மேருமந்தரபுராணம் - 821 - ஆம் செய்யுளடிகளும் விளக்கும்.

இ - ள்: "சம்சாரமாகிற பெரியசமுத்திரத்தை நீக்கும் ஸம்மியத்துவ சக்தியினால், சர்வக்ஞனாகிர்த்தவன், தரிக்கிராநின்ற ஸம்மியக்சாரித்திரத்தையுடையவன்" என்பதாம்.

"ஏத்தருங் குணத்தவத் திறைவ யாமுடைக்
கோத்திரக் குலமிவை யருளு வாழிநீ
நீத்தரும் பிறவிநீர்க் கடலை நீந்துநற்
றேப்பையாந் திருவுரு வென் றிறைஞ்சிடா"

என்னும் மேருமந்தரபுராணம். 1201 ஆம் செய்யுளாலும் இதனை உணரலாம்.

இ - ள்: "துதித்தற்கரிய அநந்தஞானாதி குணங்களையுடைய தபம் பொருந்திய கணதராரிஷிகணாதியர்களுக்குநாதனாகிய ஸ்வாமியே! எங்களுடைய கடத்தற்கரிய சம்சாரமாகிற ஜலசமுத்திரத்தைக் கடக்கும்படியானதும், நன்மையாகியதும், தெப்பமாகிறதும், நிர்க்கந்தரூபமாகிறதுமாகிய ஜிநதீக்ஷயை தயவுடன்அளிக்கக்கடவாய்; நீவாழக்கடவாய்; என்று சொல்லி வணங்கி" என்பதாம்.

"சூழ்கதிர் மதிய மன்ன சுடர்மணிப் பூணி னானும்
வீழ்தரு கதியி னீங்கி விளங்குபொன் னுலகத் துய்க்கு
மூழ்வினை துரத்த லானு முணர்வுசென் றறித்த லானு
மாழ்கடற் புணையி னன்ன வறிவரன் சர ணடைந்தான்"

என்னும் சீவகசிந்தாமணி 380-ஆம் கவிக்கு ஆசிரியர்நச்சினார்க்கினியர், "ஊழ்வினை செலுத்துதலானும், உணர்வு எறித்தலானும்

சதியினீங்கிப் பிறவிக்கடலை நீந்துதற்குத் தெப்பமன்ன அறிவனைச் சரணாக அடைந்தார்" என எழுதியிருக்கும் உரையாலும் இதனை நன்குணரலாம்.

"நாத னெனப் படுவோய்நீ நவைசெய் பிறவிக் கடலகத்துன்
பாத கமலந் தொழுவேங்கள் பசையாப் பவிழப்பணியாயே"

என்னும் சீவகசிந்தாமணி 1242-ஆம் செய்யுளடிகளும் இதனை உணர்த்தும்.

இ - ள்: "தீங்கைச்செய்கின்ற பிறப்பென்னும் சமுத்திரத்திலாழ்ந்து அத்துன்பத்தை நீக்கிக்கொள்ளும்பொருட்டு, உன்னுடைய தாமரை மலர்போன்ற பாதங்களை வணங்குகின்றவர்களாகிய எங்களின் உலகப்பற்றுகிய கட்டு நீங்கும்படி கட்டளையிட்டருளுவாயாக" என்பதாம்.

"வீசுடல மெறிகிரையின் மேவுகடன் மருவுபுணை"

என்னும் திருக்கலம்பகம்-53. ஆஞ்செய்யுளடியும் இதனை விளக்கும்.

இ - ள்: "வினையைக்கொடுக்கின்ற தேகமாகியமோதுகின்ற அலையோடு பொருந்திய பிறவிக்கடலுக்குப் பொருந்திய தெப்பமாம் அருகனுடைய பாதங்கள்" என்பதாம்.

மேல்கண்ட காரணங்களால் பிறவிப்பெருங்கடல் என்பது பஞ்சவர்த்தனை சதுர்க்கதியாகிய சம்சாரக் கடலெனப் பொருள் பட்டு ஜைநசமயசித்தாந்தத்திற்குப் பொருந்தியிருப்பதையுணர்க.

இன்னும், குறள், ஜைநசமயக்கொள்கையின்படி அருகக்கடவுளுக்குரிய எண்குணத்தான் என்றநாமத்தையும் கூறி, அதன்ஆசிரியர் அருகக்கடவுளையே துதித்தாரென்பதையும் விளக்கக்கூடியதாயிருக்கிறது. இதைப்பற்றியும் சிறிது விளக்குவாம்:

"கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை"

என்னும் திருக்குறள் இதனை விளக்கக்கூடியதா யிருக்கின்றது.

இ - ள்: "பஞ்சேந்திரிய வுணர்ச்சியில்லாத பொறிகளையுடைய பிரதிமைபோல், எண்வகைப்பட்ட குணங்களையுடைய அருகக்கடவுளது பாத கமலங்களைவணங்காத தலையும்-துதியாதாரவும் பிரயோஜனமில்லை" எ-ம்.

எண் குணங்களாவன: கடையிலாவறிவு, கடையிலாக் காட்சி, கடையிலாவின்பம், கடையிலா வீரியம், நாமமின்மை, ஆயுவின்மை, கோத்திரமின்மை, அழியாவியல்பு என்பனவாம்.

இஃதன்றி இக்குறளில், 'தலை' என்று சொன்னதற்கிணங்க'

"தம்பத்தின் மேற்புழை யேழுள வாக்கித் தமித்து வைத்த
கும்பத்தி னோடு நிகரொக்கு மாங்குணிப் பின்றிமைந்தாம்
பம்பத்தி காயம் பணித்த பிரான்பசுந் தாமரைத்தாள்
செம்பத்தி யால் வணங் காச்சிறி யார்தஞ் சிரத்திரளே"

என்னும் திருநூற்றந்தாதி 23. ஆம் செய்யுளில், தலைக்கூட்டங்கள் கூறப்பட்டிருத்தல்காண்க.

இ - ள்: "பஞ்சாஸ்திகாயத்தை அருளிச்செய்த அருகக்கடவுளது அழகிய தாமரைமலர்போன்ற பாதங்களை, பக்தியால் வணங்காத அற்ப அறிவினையுடைய தலைக்கூட்டங்கள், ஒருதூணின்மேலே ஏழுதுளைகளை உண்டாக்கித் தனிமையாக வைக்கப்பட்டகுடங்களை யொக்கும்" என்பதாம். ஏழுதுளைகளாவன: வாய் 1, கண் 2, மூக்கு-2, செவி 2. ஆக ஏழு இதனாலும், மேற்படிகுறள் ஜைநசார்புடைய தென்பது துணியப்படும்.

"பூத்தொழியாப் பிண்டிக்கீழ்ப் பொங்கோத வண்ணனை
நாத்தழும்ப வேத்தாதார் வீட்டுலக நண்ணாரே
வீட்டுலக நண்ணார் வினைக்கள்வ ராறலைப்ப
வோட்டிடுப வெண்குணனுங் கோட்பட் டுயிராவே"

என்னும் சீவகசிந்தாமணி-1469-ஆம்-செய்யுளும் எண் குணத்தை விளக்கும்.

இ - ள்: "பூத்துமாறுத அசோகவிருக்ஷத்தின் கீழமர்ந்த கடல்வண்ணனாகிய அருகக்கடவுளை, நாத்தழும்பும்படி தோத்திரம்செய்யாதார்வீட்டைச்சேரார்; அங்ஙனம் வீடுபெறுதார் பின்பு வினையாகிய கள்வர் வழிபறித்தலாலே எண்குணனும் அவர்கைக்கொள்ளப்பட்டு வருந்தி கெட்டுயிர்ப்புக்கொண்டு ஓடிடுவர்" என்பதாம்.

இன்னும்,

"குற்றங் குறைத்துக் குறைவின்றி மூவுலகில்
நற்ற மறைத்தாங் கருள்பரப்பி—முற்ற
உணர்ந்தானைப் பாடாத நாவல்ல அல்ல
சிறந்தான்றாள் சேராத் தலை"

என்னும் அறநெறிச்சாரச் செய்யுளும் மனிதனை, 'தலை' என்று கூறி மேற்கூறிய குறள்ஜைநமதச்சார்பானதென்பதை விளக்குவதையும் உய்த்துணர்க.

இஃதன்றி,

" [illegible]
[illegible] "

என்ற கிரியாபுஸ்தகம் சித்தபக்தியில் உள்ள சுலோகமும் அருகக் கடவுள் எண்குணத்தானென்பதை விளக்கும்.

இ - ள்: "எட்டுவிதமான கர்மத்தினின்று மகன்றதினுல் எட்டுக் குணங்களோடு நிறைந்த, உவமையில்லாத, எட்டாவதான மோக்ஷவுலகில் நிலைக்கொண்டு நிறைந்த சித்தபரமேஷ்டிகளை அநவரதமும் வந்திக்கின்றேன்" என்பதாம்.

இன்னும்,

"ஸம்யக்த்வ ஜ்ஞான த்ருஷ்டி வீர்ய ஸூக்ஷ்மத்வ மவகாஹனம்
அகுருலகு அவ்யாபாதம் ஸித்தானாம் அஷ்டகுணம் ..."

என்னும் கிரியாபுஸ்தகம்-சித்தபக்தியில் உள்ளசுலோகமும் அருகக்கடவுளின் எண்குணத்தைக் கூறுகின்றது.

இ - ள்: "அநந்தஞானம், அநந்ததரிசனம், அநந்தவீரியம், அநந்தசுகம், அதிசூக்ஷ்மத்துவம், அவகாஹனத்துவம், அகுருலகுத்துவம், அவ்வியாபாதத்துவம் ஆகிய எட்டுக்குணங்களும் சித்தபரமேஷ்டிகளுக்கு உண்டாகாநின்றன" என்பதாம்.

இன்னும்,

"பண்ணவ னெண்குணன் பாதத்தில் பழம்பொருள்"

என்னும் சிலப்பதிகாரம் நாடுகாண்காதை-188 ஆம் வரியாலும்,

"இருநால் வினைகெடுத்திட் டெண்குணனு மெய்தி"

என்னும் ஜீவசம்போதனை - 1வது அத்தியாயம், 2ஆம் செய்யுளடியாலும்,

"அவ்விந்திர னுக்குமுன் எண்குணத் தெங்காவலனைக்
கவிப்பார் வளைப்பார் முளைப்பார் களைப்போல"

என்னும் திருநூற்றந்தாதி 11 ஆம் செய்யுளாலும்,

"பண்பால் வரிவண்டுத் தேனும் பாடும் பொழிற்பிண்டி
யெண்பா லிகந்துயர்ந்தாற் கிசைந்த கோயி லியன்றதே"

என்னும் சிவகசிந்தாமணி-2600 ஆவது செய்யுளடிகட்கு ஆசிரியர் நச்சினர்க்கினியர் "எட்டுக் கருமங்களைநீக்கி, எண்குணங்களானுயர்ந்தார்க்குப் பொழிலாகிய பிண்டிக்குள்ளே இசைந்தகோயில் சமைந்ததென்க" என எழுதியிருக்கும் உரையாலும் இதனை நன்குணரலாம்.

இன்னும்,

"இறைவனீ ஈசனீ எண்குணத் தலைவனீ
பொறியிலா வறிவனீ பூசனைக் கிறைவனீ
மறுவிலா வொருவனீ மாதவத் தலைவனீ
சிறியயா னின்குணஞ் செப்புதற் கரியனீ"

என்னும், மேருமந்தரபுராணம், 1000-ஆம் செய்யுளும் அருகனுடைய எண்குணங்கள் முதலானவற்றை விளக்குதல் காண்க.

இ - ள்: "நாதனும்நீயே, முதல்வனும் நீயே, அநந்தஞானாதி அஷ்ட குணத்தலைவனும் நீயே, அதீந்திரிய ஞானஸ்வரூபனும் நீயே, திரிபுவனாதிபதிகளால் பிரியதமமாக பூஜிக்கப்படுபவனும் நீயே, களங்கமில்லாத (அதாவது கலத்தற்றன்மையில்லாத) ஸ்வயம்புவானவனும் நீயே, மகாதபசையுடைய கணதராதி யதிவரர்களுக்கெல்லாம் அக்ரணியானவனும் நீயே, அற்பபுத்தியையுடையயான் உனது அநந்தமாகிய குணங்களைச் சொல்லுவதற்கு அருமையானவனும் நீயே" என்பதாம்.

இன்னும், "ஆதிபகவான், கைலாசபர்வதத்து, சித்தசிலாதலத்து எழுந்தருளிப் பூர்வாபிமுகமாகப் பல்பங்காசனமாகப் பதினன்குநாளெழுந்தருளி இருந்து, மூன்றும் சுக்லத்தியானத்தால் யோகத்தைத்தாங்கி, நான்காம் சுக்லத்தியானத்தால் வேதநீய, ஆயுஷ்ய, நாம, கோத்திரங்களைக்கெடுத்து, ஔதாரிகாதி சரீரத்திரயங்களைக்கழித்து, மாகமாச கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி உத்திராஷாட நக்ஷத்திரநாள் அபிஜின்முகூர்த்தத்து, சூரியோதயத்தில் சகஸ்ரமுனிகணங்களோடு மூன்றுங்காலமுன்றுசம்வத்சரமும் எட்டுமாதமும் இருக்கும்போது, தமது ஸ்வரூபமாகிய அஷ்டகுணங்களையுமடைந்து, லோகாக்ரமாகிய சித்திக்ஷேத்திரத்தினை (மோக்ஷத்தை) அடைந்தருளினர்" என்பது ஸ்ரீபுராணம் விருஷபதேவர்பகுதியில் கூறப்பட்டிருகிறது. இதனாலும் ஆதிபகவானே எண்குணன் என்றநாமத்துக்குரியவன் என்பது விளங்கும்.

இன்னும் இவனே இத்தகைய உயர்ந்த நாமங்களுக்குரியவனென்பதை,

"வணங்கப் படுந்தெய்வ நீயல்ல தியார்நின் வரம்பிகந்த
குணங்கட் கியார்குற்றங் கூறவல் லார்குறி யாதிரண்டு
கணங்கட் கிறைநின் குணமெங் கடவுட்கு மாமென்றுதாம்
பிணங்கப் புகுவர்பின் கொண்டா டுவதவர் பேய்த்தனமே"

என்று கூறுகின்றது.

இதன்பொருள்: "குறித்தபன்னிரண்டு கணங்களுக்கும் இறைவன் நீயேயல்லாமல் எல்லாருந்துதிக்கப்படுகின்ற கடவுள் எவர்களிருக்கின்றார்கள்? உன்னுடைய அநந்தமான எண்குணங்களுக்குமெவர்கடாங்குற்றஞ்சொல்லவல்லவர்கள்; அப்படியிருக்கச் சிலர் உனது குணங்களை எங்களுடைய சுவாமிக்குமாகுமென்று சொல்லுவார்கள்; அவ்வாறு சொல்லிக்கொண்டே நினக்கு அவர்கள் மாறுபடப் புகுவார்கள்; பின்பு நினது குணங்களாலேயே அவர்கள் தெய்வங்களைக்கொண்டாடுதல் அவர்களுடையபேய்த்தனம்" என்பதாம்.

இன்னும் ஆத்மன், எண்குணங்கள் சம்பூர்ணமாகி மோக்ஷஸ்தானத்தை அடைதல் கூடுமென்பதை,

"வினையற விட்ட போழ்தின் வெடித்தவே ரண்டம்போல
நினைவருங் குணங்க ளெட்டு நிறைந்துமே னோக்கி யோடி
முனிவரு முலக மூன்று மிறைஞ்சமூ வுலகி னுச்சி
கனைகழ லரச நிற்றல் கைவல மாகுங் கண்டாய்"

என்னும் மேருமந்தரபுராணம்-106. ஆம் செய்யுள் விளங்கக்கூறுகின்றது.

இதன்பொருள்: ("ஆத்மன்) ஞானவரணாதி அஷ்டகர்மங்கள் முழுமையும் தன்னைவிட்டு நீங்கினகாலத்தில், வெடித்துநீங்கிய ஆமணக்கங்கொட்டையைப்போல அவற்றை விட்டுவிலகி, நினைத்தற்கரிய அநந்தஞானாதி அஷ்டகுணங்களும் சம்பூர்ணமாகி, (அதாவது அஶரீரியாகிய சித்த பரமேஷ்டித் தன்மையை அடைந்து) ஊர்த்துவகதிஸ்வபாவமாகிச் சென்று, முனீஸ்வரர்களும் மூன்றுலகத்திலுள்ள ஞானிகளும் வணங்க, மூன்றுலோகத்துக்கும் உச்சியாகிய தனுவாதாக்ரத்தில் நிலையாயிருக்குந் தன்மை கைவல்லியமாகிய த்ரவியமோக்ஷமாகும்" என்பதாம்.

இங்குக்கூறிய மோக்ஷத்தின் ஸ்வரூபத்தையும், அதில்நிலைகொண்டிருக்கும் சித்தபரமேஷ்டியின் தன்மையையும் சிறிது விவரிப்பாம்:

மோக்ஷமென்று சொல்லப்படும் க்ஷேத்திரம் எத்தன்மையதெனில், மேலேசொன்ன லோகத்தின் உச்சியில், தெற்குவடக்கில் ஏழுகயிற்றுப்ப்ரமாணநீளமும், கிழக்குமேற்கில் ஒருகயிற்றுப்ப்ரமாணநீளமும், எட்டுயோசனைகனமுமாகிய ஈஷத்ப்ராக்பாரமென்னும் எட்டாஞ்சிலையின்மேல் மத்தியத்தில், மனுஷ்யக்ஷேத்திரப்ப்ரமாணமாகிய நாற்பத்தைந்துலக்ஷம் யோசனை விசாலமுடையதாய், வ்ருத்தமாய், நடுமத்தியத்தில் அஷ்டயோசனை கனமுள்ளதாய், கிரமமாகச் சுருங்கிவந்து அந்தியத்தில் தும்பி இறகுபோன்றமெல்

லிய கனத்தையுடையதாய், மலர்த்திவைத்த சத்ராகாரம் (குடை) போன்ற சுத்தஸ்படிக சிலையின்மேல், மேற்சொன்ன கனோததி கனவாததனுவாதாக்ரத்தில் சித்தபரமேஷ்டிகள் பொருந்தி யிருக்கும் ஸ்தானமே மோக்ஷக்ஷேத்திரமாகும்.

இந்த ஸ்வபாவத்தையுடைய மோக்ஷத்தில் அநந்தஞானாதி எண்குணங்களுடன் நிறைந்து நித்தியராய், அஸரீரரும், ஜீவகனாகாரரும், சாயாப்ரதிமைபோல ஸாகாரநிராகாரரும், அதீந்திரிய கோசரருமாய், அநந்தாநந்தகாலமெல்லாம் நிலைபேறுடையவராய், மேல்கமனமும் கீழ் இழியாத தன்மைகளையுமுடையவராய், ஜன்ம ஜராமரண வியாதி முதலாகிய அவகுணங்களிலராகிச் சமயசமயம் அநந்த சுகத்தையுடையவராகி, எந்நாளும் ஒருதன்மையாயிருக்கப் பட்டவர் சித்தபரமேஷ்டிகளாவர்.

அமூர்த்தமாயிருக்கின்ற சித்தபரமேஷ்டிகளுக்கு இந்திரிய வழியில்லாமல் ஏற்படும் சுகமெத்தகைய தெனில், அது இணையற்றது. மனுஷ்யர் அனுபவிக்கிற சுகத்துக்கெல்லாம் அதிகசுகம் அநுபவிக்கிறவன் சக்ரவர்த்தி; அந்தச்சுகம் அநந்தம் அநுபவிக்கிறவர் போகபூமிமனுஷ்யர்; அந்தச்சுகம் அநந்தம் அநுபவிக்கிறவன் நாகலோகத்துத்தரணேந்திரன்; அந்தச்சுகம் அநந்தம் அநுபவிக்கிறவன் சௌதர்மகல்பத்துச் சௌதர்மேந்திரன்; அந்தச் சுகம் அநந்தம் அநுபவிக்கிறவர் பஞ்சாநுத்தரத்து அகமிந்திரர்.

இப்படிப்பட்ட தேவர்களுடையசுகங்களையும், மற்றுமுள்ள ஜீவராசிகள் த்ரிகாலங்களிலெல்லாம் அநுபவிக்கிற சுகங்களையும் ஒன்றாகத்திரட்டினாலும் அவை சித்தபரமேஷ்டி ஒருசமயத்தில் அநுபவிக்கிறசுகத்தின் அநந்தம் பங்குகளிலொருபங்குக்கும் இணையாகமாட்டா. சித்தபரமேஷ்டிகள் இத்தகைய திவ்விய சுகத்தை அநுபவிப்பர்.

மேற்கூறியபடி மானிடர்கள் அஷ்டகர்மங்களைக் கெடுத்து ஒவ்வொருவரும் எண்குணங்களையடைந்து, மோக்ஷமடையக் கூடுமென்பதற்குப் பிறசமயங்களில் ஆகம ப்ரமாணமில்லை ஆகையால், ஒவ்வொரு மானிடர்களும் ஞானாவரணாதி அஷ்டகர்மங்களைக் கெடுத்து, அநந்தஞானாதி அஷ்டகுணங்களைத் தரித்து, மோக்ஷவீட்டில் தனித்தனி நித்தியாநந்தத்தினை அடையக்கூடும் என்பது ஜைநசமயசித்தாந்தம். அத்தன்மை அடைந்தவர்களை, சீவகசிந்தாமணி மேருமந்தரபுராணம் முதலிய பல நூல்களில் பரக்கக் காணலாம்.

இக்காரணங்களைக்கொண்டு திருக்குறளாசிரியர் எண்குணத்தானென்று சொன்னது அருகக்கடவுளையே என்பது நிச்சயமாகத்துணியப்படும். உண்மை இங்ஙனமிருக்கப் பரிமேலழகர், "* முற்றுமுணர்தல் முதலான எண்குணங்கள் சைவாகமத்திற்

---

* முற்றுமுணர்தலாவது த்ரிலோகங்களிலுமுள்ள சகல பதார்த்தங்களையும் த்ரிகாலங்களில் நடக்கும்சமஸ்தவிஷயங்களையும் ஒருங்கேக்ஷணப் பிரதிசமயந்தோறும் அறிவது இத்தன்மையுடையவனுக்கு சர்வக்ஞன் என்றுபெயர்; இதனை,

"𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌚𑌰𑌾𑌚𑌰𑌾𑌣𑌿 𑌵𑌿𑌵𑌿𑌧𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌿 𑌤𑍇𑌷𑌾𑌂𑌗𑍁𑌣𑌾𑌨𑍍
𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑌾𑌨𑌪𑌿 𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑌿 𑌭𑌵𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌸𑌦𑌾𑌸𑌰𑍍𑌵𑌦𑌾
𑌜𑌾𑌨𑍀𑌤𑍇 𑌯𑍁𑌗𑌪𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍍𑌷𑌣𑌮𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇
𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌯 𑌜𑌿𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯 𑌮𑌹𑌤𑍇 𑌵𑍀𑌰𑌾𑌯 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌨𑌮𑌃"

என்னும் கிரியாபுஸ்தகம் ஸாமாயிகபக்தி-3-வது சுலோகம் கூறுகின்றது.

இ - ள்: "எவனொருவன், சர்வஸ்தாவரங்களான (புல்பூண்டு முதலான) ஜீவத்திரவியங்களையும், புத்கலாதி நாநாதிரவியமான சமஸ்த திரவியங்களையும், அந்த திரவியங்களுடைய குணங்களையும், அதீத, அநாகத, வர்த்தமானமாகிய (இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலமாகிய) கால விஷயங்களான சமஸ்தபரியாயங்களையும், எப்போதும் சர்வப்பிரகாரத்தினாலே ஒருங்கே க்ஷணப் பிரதிசமயந்தோறும் அறியாநின்றானோ அவன் இது காரணத்தினால் சர்வக்ஞன் என்றுசொல்லப்படாநின்றான்; சமஸ்தத்தையும் அறிகின்ற ஜிநேஸ்வரனான மகத்துவத்தையுடைய அப்படிப்பட்ட வர்த்தமான ஸ்வாமியின் பொருட்டு நமஸ்காரம்" என்பதாம். இதனால் அருகன்முற்றும் உணர்தல் தன்மையுடையவன் என்பது நன்கு விளங்கும்.

இதில்கூறியபடி அருகக்கடவுள் ஜீவத்திரவியங்கள் முதலானவற்றையுணர்ந்து அவற்றின்வகைகளைக் கூறினானென்பதை,

"ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
யிரண்டறி வதுவே யதனொடு நாவே
மூன்றறி வதுவே யவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே யவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே யவற்றொடு செவியே
ஆறறி வதுவே யவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத்தினரே"

என்னும் தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல்-582 - ஆம்சூத்திரம் விளக்கும்.

இதன்பொருள்: "அருகக்கடவுள், சர்வஸ்தாவரங்கள் முதலான ஜீவ

சொல்லப்பட்டன” வென்றார். அங்ஙனங்கூறியது பொருந்தாது. தவிர மண்டலபுருடர், சூடாமணிநிகண்டு தெய்வப்பெயர்த்தொகுதியில், “அருகன்எண்குணத்தான்” என்றுகூறி யிருப்பதோடு 12-வது தொகுதியில், எண்குணங்களில் ஒவ்வொன்றின் நாமத்தினையும் தனித்தனியாகவும் கூறியிருக்கின்றார். இவற்றைப் பழய ஏட்டுப்பிரதிகளிலும், 50-60-வருஷங்களுக்கு முன் பலர் அச்சிட்டிருக்கும் புத்தகங்களிலும் காணலாம். சிவபிரானுக்கு இதுசம்பந்தமான விஷயங்கள், அந்தத்தெய்வப்பெயர்த்தொகுதியிலும், 12-வது தொகுதியிலும் சொல்லப்படவில்லை. இவை அநேகவித்வாம்சர்கள் நன்கு அறிந்தவிஷயங்கள். பிற்காலத்தில், சிலமதத்வேஷமுடையவித்வான்கள் சூடாமணிநிகண்டு 12-வது தொகுதியில் சிவபிரானுக்கும் எண்குணமுண்டென்பதைப்புகுத்தி இரண்டு போலிச்செய்யுட்களை இயற்றித் தாங்கள் அச்சிட்டபுத்தகங்களில் சேர்த்திருப்பதுவும் தவிர, ஏட்டுப்பிரதிகளிலும் பழய அச்சுப்பிரதிகளிலும் உள்ள பழயசெய்யுட்களை நீக்கியும் தாங்களியற்றியவேறு சிலபுதிய செய்யுட்களைச் சேர்த்தும் பல மாறுபாடுகளைச் செய்திருக்கின்றார்கள். திவாகரம் பிங்கலர்நிகண்டு முதலியவற்றிலும் இத்தன்மையாகவே சில மாறுபாடுகளை உண்டுபண்ணியிருக்கின்றார்கள். இதனாலேயே சிவபெருமானுக்கு எண்குணத்தானென்கிற திருநாமம் உண்டாகாது. சிவபிரானுக்கு எண்குணத்தானென்கிற நாமம் பொருந்ாதென்பதை,

“ஶுத்³தா⁴த்மஜ்ஞாநம் ஸ்வ ஜந்மா வஸ்ததி தேவி
வெத்³ நாகோ ஞானாயபு”

என்னும் அகளங்காஷ்டகம்-6-வது சுலோகம் 3-வது சரணத்தினால் உணரலாம்.

---

த்திரவியங்களின் குணங்களையும், புத்கலாதிகளின் தன்மைமுதலானவற்றையும் நேராகஉணர்ந்து, அவற்றின்மார்க்கத்தைக்கூறி அருளினார்” என்பதாம்.

இங்கு ‘நேரிதினுணர்ந்தான்’ என்றது அருகக்கடவுளை.

ஜீவத்திரவியங்களின் சுபாவங்கள் முதலானவைகளைக் கடவுள் தவிர மகா ஞானிகளாகிய முனிவரர்களாலும் சொல்லுதல் முடியாதென்பது ஜைனசமய சித்தாந்தம்.

இது காரணத்தினாலும் தொல்காப்பிய ஆசிரியர் ஜைனர் என்பதும் நன்குவிளங்கும்.

இ - ள்: "சிவபெருமான் கருப்பத்தில் பிறவாமல் அநாதியாயிருக்கின்றவரெனில் திருவாதிரை நக்ஷத்திரத்திலே பிறந்தாரென்கிறபிரசித்தியானது எவ்வாறுண்டாயிற்று? அவர், தமக்குபத்மாசூரனால் வரப்பட்ட (அந்தராயத்தை) இடையூற்றினை அறியவில்லை; அங்ஙனமிருப்ப அந்த சிவனானவர் சமஸ்தத்தையும் அறிந்தாரென்பதுஎவ்வாறுபொருந்தும்?" என்பதாம்.

இதற்கிணங்க, "பித்தனார் பிறந்தநாள் (திருவாதிரை) பின்னையாறுமத்திமம்" என ஜோசிய நூற்காரர்களும் கூறுகின்றார்கள்.

ஆதலால், எண்குணத்தானென்பது சிவபெருமானுக்குப் பொருந்தாதென்பதும், குறளாசிரியர், 'எண்குணத்தான்' என்று கூறியது அருகக்கடவுளையே என்பதும் நன்கு விளங்குகின்றன. சிவபெருமானுக்கு எண்குணம் உண்டென்பது சைவசித்தாந்தத்தில் கூறப்பட்டிருப்பினும், திருக்குறள் ஜைனசமய வேதமாதலின், எண்குணத்தானென்று ஆசிரியர் கூறியது சைவசமயத்திற்குஉரியதாகாதுஎன்பது நன்கு அறிதல்கூடும். மேலும்சிவனுக்குக் கூறப்பட்ட எண்குணங்களின் தன்மைகள் வேறு, இங்கு அருகனுக்குக்கூறப்பட்ட எண்குணங்களின் இயற்கைகள்வேறு. சிவனுக்குள்ள எண்குணங்கள் இந்திராதிதேவர்க்குள்ள அணிமாதி அஷ்டகுணங்களே.

அணிமாதி அஷ்டகுணங்கள் அருகக்கடவுளுக் குரியனவல்லவென்பதும், சாமானியதேவர்களுக் குண்டென்பதும் ஜைன மத நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. இனிஅணிமாதி அஷ்டகுணங்களின் விவரத்தையும் கூறுவாம்:

"அணிமா மஹிமா சைவ கரிமா லகிமா ததா
ப்ராப்தி: ப்ராகாம்ய மீசத்வம் வசித்வஞ்சாஷ்டமா குணா:"

என்னும்,ரத்னகரண்டகம். 1 வது அத்தியாயம். 41-ஆம் சுலோகமும் இக்குணங்களைக் கூறுகின்றது.

இ - ள்: "அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்வம், வசித்வம் என்பன எட்டுக்குணங்கள்" என்பதாம்.

அணிமா-பரமாணுவைப்போன்று மிகச்சிறிய சரீரத்தைப் பெறுதல்; மகிமா-மகம்மேருபோன்றுமிகப்பெரியஉருவினை அடைதல், கரிமா-மலையினுங்கனத்த சரீரத்தையுடைத்தாதல்; லகிமா-பஞ்சுபோன்றுமிக லேசான சரீரத்தை அடைதல்; ப்ராப்தி-பூமியிலிருந்து விரலினால் சந்திராதித்யரை மூடுகின்றது முதலானவை

களைத் தான் இச்சித்தவாறடைதல்; ப்ராகாமியம்-அக்னியிலே முழுகுகிறது,ஜலத்திலே நடப்பதுமுதலான குணங்களையடைதல்; ஈசத்வம்-யாவருக்கும் மேம்பாடுடையவராயிருத்தல்; வசித்வம்-எல்லோரையுந் தன்வசம் செய்துகொள்ளல்.

இந்த அணிமாதி அஷ்டகுணங்கள் தேவர்களுக்குமுண்டு முற்றுந்துறந்த 6-வது குணஸ்தானவர்த்திகளாகிய ப்ரமத்தரென்னும் மகாமுனிவர்களும் இந்த அணிமாதிகுணங்களையும், ஆகாசத்தில் செல்லும் சாரணரித்தி முதலானவைகளையும் அடைதல் கூடும். மகாமுனிவர்களுக்கும் இந்திராதிதேவர்களுக்கும் அணிமாதிகுணங்கள் உண்டென்பதை நீத்தார்பெருமையைப்பற்றிவருமிடத்து கண்டுகொள்க.

அருகக்கடவுளுக்கு மேற்கூறிபபடி அநந்தஞானநி அஷ்டகுணங்கள்தவிர அணிமாதி அஷ்டகுணங்கள் இல்லை.

இவ்வாறு இந்த அணிமாகிகுணங்கள் சிவனுக்கு உண்டென்பதை அமரகோசர் ஸ்வர்க்கவர்க்கில் ஈஸ்வரநாமத்தின்கிழ்,

"𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌿𑌰𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌮𑌣𑌿𑌮𑌾𑌦𑌿𑌕𑌮𑌷𑍍𑌟𑌧𑌾"

எனவரும் சுலோகத்திற்கு உரையாசிரியர்.

"விசேஷமாகவுண்டாகிறது ஈஸ்வரஸ்ய பாவஐஸ்வர்யம்; அந்த ஐஸ்வரியமானது அணிமாதிபேதத்தினல் எட்டுவிதம்" என எழுதியிருக்கும் உரையினல் விளங்கும்.

இனிஜைநசமயத்தில் கடவுள்வணக்கமுறை நான்குவகையாக அமைந்துள்ளது. அந்நான்காவன: அருகசரணம், சித்தசரணம், சாதுசரணம், தர்மசரணம் என்பனவாம். இவற்றை,

"𑌅𑌰𑍍𑌹𑌂𑌤𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌚𑍍𑌛𑌾𑌮𑌿
𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌚𑍍𑌛𑌾𑌮𑌿
𑌸𑌾𑌧𑍁𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌚𑍍𑌛𑌾𑌮𑌿
𑌕𑍇𑌵𑌲𑌿𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌂 - 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌚𑍍𑌛𑌾𑌮𑌿."

எனவரும் கிரியாபுஸ்தகம் சத்தாரிமங்கள சுலோகம் விளக்கும்.

இ-ள்: "அருகசரணம் புகுவேன், சித்தசரணம் புகுவேன், சாதுசரணம் புகுவேன், கேவலிகளினல் சொல்லப்பட்ட தர்மத்தைச் சரணம் புகுவேன்" என்பதாம்.

சீவகசிந்தாமணி 382-ஆம் கவியினடியில்

"நல்லறத் திறைவ னாகி நால்வகைச் சரணமெய்தி"
எனக்கூறியிருத்தலாலும்,

இதன் உரையில் நச்சினார்க்கினியார், "நால்வகைச்சரணம்" என்பதற்கு.

"அருகசரணம், சித்தசரணம், சாதுசரணம், தன்மசரணம்" என்றுபொருள் உரைத்திருப்பதாலும் இவற்றை உணரலாம்.

இந்நான்கு வணக்கங்களையும் திருக்குறளாசிரியர் கடவுள் வாழ்த்தில் கூறியிருக்கின்றார். ஏழுசெய்யுட்களில் அருகசரணமும், 'கோளிற்பொறியிற்குணமிலவே' என்ற குறளில் சித்தசரணமும் 'பொறிவாயிலைந்தவித்தான்' என்றகுறளில் சாதுசரணமும், 'அறவாழியந்தணன்' என்றகுறளில் தர்மசரணமும், அமைந்திருக்கின்றன.

இன்னும் ஜைநசமயத்தில் உள்ள கடவுள் வணக்கமுறையில் வஸ்துஸ்தவம்,ரூபஸ்தவம்,குணஸ்தவம் என்றவேறுவித வணக்க முறைகளும் இக்கடவுள் வாழ்த்தில் பொருந்தியிருக்கின்றன.

இந்த ஒருகாரணத்தைக்கொண்டே திருக்குறள் ஜைநமதத்தைச் சார்ந்த தென்பதை நிச்சயமாகத் தெரிந்து கொள்ளலாம்

இனி ஆப்தன் லக்ஷணத்தைப்பற்றி அஷ்டபதார்த்தத்தில் கூறுவனவற்றை இங்கு விவரிப்பாம்:

ஆப்தன் என்பதற்குக் கடவுள் என்றுபொருள்; இந்தக்கடவுள் தன்மையுடையவர் ஆப்தர் என்றுசொல்லப்படுவர்.

இந்த ஆப்தர் சகலாப்தர், விகலாப்தர் என இருவகையினராவர்.

இவருள் சகலாப்தரில் நிஷ்களாப்தர் சகலாப்தர் என இருவகையினராவர்.

இவருள் நிஷ்களாப்தராவார்-148-கர்மங்களையும் கெடுத்து அஷ்டகுணஸ்வபாவத்தராகிய சித்தபரமேஷ்டிகள்.

சகலாப்தராவார்-தீர்த்தங்கரர், அநகாரகேவலிகள், அந்தர் முகூர்த்தகேவலிகள் என மூன்று வகையினராவர்.

தீர்த்தங்கரரென்பவர் - விருஷபதீர்த்தங்கரராகிய ஆதிபகவான் முதல் மகாவீரர்பரியந்தம் இருபத்துநால்வர் ஆவர். இந்த இருபத்துநால்வர்களும் முப்பத்துநான்கு அதிசயங்களையுடையவர்களாய்த் தேவேந்திரராதியர்களால் செய்யப்படும் பஞ்சகல்யா

ணசமவசரணவிபூதிகளையுடையவர்கள். இந்த இருபத்துநால்வர்களுடைய குணம் ரூபமுதலானவைகள் ஒன்றேயாதலால், இப்புத்தகத்தில், "தனக்குவமையில்லாதான்" என்ற குறட்பாவின் கீழ்க் காட்டியிருக்கும் சிறப்புக்களை இருபத்துநால்வரும் உடையவர்களாவர்.

அநகார கேவலிகளென்பவர்-ஸ்வர்க்காவதாரணம் ஜன்மாபிஷேகம் பரிநிஷ்க்ரமணம் ஸ்வபாவாதிசயம்பத்து அஷ்டமகாப்ராதிஹார்யம், சமவசரணாதி விபூதிகள்முதலியன இன்றி, அநந்த ஞானுதி சதுஷ்டயங்களும், மணிவித்தமான ஹேமபத்ராஸனமும், குடைஒன்றும், சாமரையுகளமும், கல்பகவிருக்ஷமும், ஒரு யோசனைப்ரமாண கந்தகுடியென்னும் ஜிநாலயமுமுடையவர்கள்.

அந்தர் முகூர்த்தகேவலிகளென்பவர்-காதி அகாதி-148-கர்மங்களையும் ஏகாந்தர் முகூர்த்தத்தில் கெடுத்து மோக்ஷத்தை அடைந்தவர்கள்.

அநகாரகேவலிகள், அந்தர்முகூர்த்த கேவலிகள் என்பவர்கள் தீர்த்தங்கரர் தவிர மற்ற மனிதர்கள்.

விகலாப்தர்என்பவர் ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் என மூன்றுவகையினராவர்.

ஆசாரியர் என்பவர்-தீக்ஷாதானம் செய்தல், நான்குவேதங்களை உபதேசஞ்செய்தல், மோக்ஷமார்க்கானுஷ்டானம் செய்தல், அதாவது தன் ஆத்மன் தர்மத்யானம் சுக்லத்யானத்திற்கு ஏதுவாகிய தவத்தினைச் செய்தல் முதலானவற்றையுடையவராவர்.

உபாத்தியாயர் என்பவர்-மோக்ஷமார்க்கானுஷ்டமாகிய தவஞ்செய்தல், சாஸ்திரங்களை உபதேசஞ் செய்தல் முதலியவற்றையுடையவராவர்.

சாதுபரமேஷ்டிகள் என்பவர் - மோக்ஷமார்க்கானுஷ்டானமாகிய தவத்தினைச் செய்வோராவர்.

இனி ஆத்மன் லக்ஷணத்தைப்பற்றியும் சிறிதுவிவரிப்பாம்: திருக்குறளாசிரியர் பிராகிருதபாஷையில்,

"[illegible]।

[illegible]॥

எனவரும் ரயணசாரம் சு-128-ல் இதனை விளக்கியிருக்கின்றார்.

இ - ள்: "பஹிராத்மா அந்தராத்மாக்களின் பேதங்கள் பரஸமய மென்று சொல்லப்படும். கர்மக்ஷயம்செய்து சமவசரணமத்தியசுத (சிறப்புக்களையுடைய) அருகத்பரமேஷ்டி பரமாத்மா; சித்தர் உத்கிருஷ்ட பரமாத்மா; இந்த பேதங்கள் அருகத்பரமேஷ்டியாலே அருளப்பட்ட குணஸ்தானங்களில் காணப்படும்" என்பதாம்.

பகிராத்மா, அந்தராத்மாக்கள் இரண்டும்-பரசமயம்.
பரமாத்மா ஸ்வஸமயமாகும். அதாவது சர்வக்ஞன்.

இன்னும்,

"மிச்ச்சொம் தி வஹிரம்வா தரதமயா தம்ஸிய ஐதரம்வ

ஜஹண்ணா । ஸம்தொம் தி ஜம்ஸிட்தர வீணம்தீ வரீ

ஜிணவஹிம்யா ॥

என்னும் ரயணசாரம் 129-ஆம் சுலோகமும் இதைக் கூறுகின்றது.

இ - ள். "மித்தியாதிருஷ்டிமுதல் ஸாஸாதனன், மிஸ்ரன்பரியந்தம் மூன்று குணஸ்தானவர்த்தி பரிணதியுள்ள ஆத்மன் பகிராத்மனாகும்; அந்த மூன்று குணஸ்தானத்தின்மேல் தாரதம்மிய பேதத்தினால் நாலாங் குணஸ்தான வர்த்தியாகிய அஸம்யத சம்யக்திருஷ்டி ஜகன்னிய அந்தராத்மாவாகும்; ஐந்தாங் குணஸ்தானமுதல் ஏழாவது குணஸ்தானபரியந்தம் மத்திம அந்தராத்மாவாகும்; எட்டாவது அபூர்வகரண குணஸ்தானமுதல் க்ஷீணகஷாயராகிய பன்னிரண்டாவது குணஸ்தானம் வரையில் உத்கிருஷ்ட அந்தராத்மாவாகும்; அருகத் பரமேஷ்டி, சித்தபரமேஷ்டிகள் பரமாத்மாவாகும்" என்பதாம்.

குண ஸ்தானங்களாவன:- மித்தியாதிருஷ்டி, ஸாஸாதனசம்மியக்திருஷ்டி, மிஸ்ரன், (அல்லது சம்யக் மித்யாதிருஷ்டி), அஸம்யதசம்யக்திருஷ்டி, தேசஸம்யதன், ப்ரமத்தன், அப்ரமத்தன், அபூர்வகரணன், அனிவிருத்திகரணன், ஸூக்ஷ்மஸாம்பராயன், உபசாந்தகஷாயன், க்ஷீணகஷாயன், ஸயோகிகேவலி, அயோகிகேவலி எனப் பதினான்காகும். ஸயோகிகேவலி என்பவர் அருகத்பரமேஷ்டி; அயோகிகேவலி என்பவர் 85: கர்மங்களையும் கெடுத்து மோக்ஷஸ்தானத்தில் அடையும் வரையிலுள்ள நிலைமையுள்ளவர்.

பகிராத்மன், அந்தராத்மன் என்பவர்களைப் பற்றித் திருக்குறளாசிரியர் ப்ராக்ருதபாஷையில், செய்துள்ளரயணஸாரம் 120. 121-ஆம் ஸ்லோகங்களில் கூறுகிறார். அவற்றுள் 120-ஆம் ஸ்லோகமாவது:—

“[illegible]” ॥

என்பதாம்.

இ - ள். “எப்படி அமேத்தியத்தில் உற்பத்தியாகிற புழுக்களுக்கு அந்த அமேத்தியமே ப்ரீதியாக இருக்கிறதோ அப்படியே பகிராத்மனுக்கு பாகிய இந்திரிய விஷயங்களிலே ப்ரீதி உண்டாகிறது” என்பதாம்.

121-ஆம் ஸ்லோகமாவது:—

“[illegible]” ॥

என்பதாம்.

இ - ள். “எவன் ஸ்வப்னத்திலேயும் பஞ்சேந்திரியசுகங்களில் ஆசையை விட்டவனோ, தேகம் முதலான பாகிய வஸ்துக்கள் ஆத்மனுக்கு வேறு என்ற திடமான புத்தியுள்ளவனோ, அநாதிகாலமாக அனுபூதமாகிய அதாவது அனுபவித்துக்கொண்டு வருகிற பஞ்சபரிவர்த்தனரூப ஸம்ஸாரத்திலுள்ள சுகதுக்கங்கள் ஆத்மனுக்கு பின்னமென்று நிஜாத்ம சிந்தனை செய்கிறானோ, அந்தயோகீந்திரன் மோக்ஷசுகத்தில் பிரீதியுள்ள அந்தராத்மாவாகும்” என்பதாம்.

இனி திருக்குறளினுள்ள வான்சிறப்பைப்பற்றி ஆராயுமிடத்து அதையும் ஜைநசமய சித்தாந்தத்தைத் தழுவியே திருக்குறளாசிரியர் செய்திருக்கிறாரென்பது விளங்கும்; அதைப்பற்றியும் சிறிது கூறுவாம்:

பதினன்காம் மநு நாபி ராஜாகாலத்தில் கற்பகவிருக்ஷங்கள் மறைந்தபின் ஜீவன்களுக்கு ஆதாரமாக மேகங்கள்தோன்றி மழைபெய்தன வென்பது முன்கூறப்பட்டுளது. அதற்குப் பொருத்தமாகவே ஆதிபகவானருளிய தர்மார்த்தகாமமோக்ஷ மென்னும் நான்கு புருஷார்த்தங்களை அடைவதற்குரிய இல்லறதுறவறங்களை நடத்தவும், சகலபொருள்களும் விருத்தியாகவும் மழைமுக்கியமானபொருளென்பதையும், கடவுள்பூஜை தானம்தவம் ஒழுக்கம் முதலானவற்றிற்கும் மழை அவசியமென்பதையும் மழையின்றியாதொன்றும் நடவா தென்பதையும் விளக்கி மழையினது சிறப்

யைப்பற்றிய அதிகாரத்தையும் ஆசிரியர் அமைத்தார். அங்ஙனம் அமைத்ததில்,

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"

என்னும் குறளால் மழையில்லாவிடின் இவ்வுலகில் தேவர்களுக்கும் சிறப்புமுதலியன நடவாவென்பதை விளக்கியிருக்கிறார்.

இ - ள். "மழைபெய்யாவிட்டால் இவ்வுலகில் தேவர்களுக்கும் சிறப்பொடு உத்ஸவங்களும் பூஜையும் நடைபெறா" என்பதாம். பூசனை முதலியனநடத்துவது அருகக்கடவுளுக்கும், அவர் அடியார்களாகிய இருபத்துநான்கு யக்ஷன்யக்ஷி முதலான தேவர்களுக்கு மாதலின், "வானோர்க்கும்" என்றார்.

"தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்"

என்னும் குறளில், மழைபெய்யாவிடின் உலகில் தானம் முதலியன தங்காவென்பதை விளக்கியிருக்கிறார்.

இ - ள். "மழைபெய்யாவிடில் உலகத்தில் தானமும், தவமும் நிலைபெறமாட்டா" என்பதாம்.

தானமாவது - ஆகாரதானம், அபயதானம், ஔஷததானம், சாஸ்திரதானம் என்பவைகள்.

"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு"

என்றகுறளில் மழையின்றி எவரிடத்தும் ஒழுக்கம் நடைபெறாதென்பதைக் கூறுகிறார்.

இ - ள். "உலகமானது நீரின்றியமையாது; அங்ஙனம் அமையாதெனின் எவ்வகைப்பட்ட மேம்பாட்டினையுடையோர்க்கும் மழையின்றி யாதொரு ஒழுக்கமும் நடவாது" என்பதாம்.

ஒழுக்கமாவது - குணவிரதம்-3-சிக்ஷாவிரதம் 4, ஆக 7. குறளாசிரியர் இங்குக்கூறியபடி கடவுள்பூஜை, தானம், தவம், ஒழுக்கம் ஆகிய இந்நான்கும்

"𑌦𑌾𑌨𑌶𑍀𑌲𑍋𑌪𑌵𑌾𑌸𑌾𑌰𑍍𑌚𑌾 𑌭𑍇𑌦𑌾𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌃 ।
𑌸𑌂𑌯𑌮𑌿𑌶𑍍𑌰𑌾𑌵𑌕𑍈𑌕𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑍇𑌤 𑌯𑌥𑌾𑌯𑌥𑌂" ॥

என்னும்ஸாகார தர்மாம்ருதம் 7-வது அத்தியாயம் 51-வது சுலோகத்தில் கூறப்படுகின்றன.

இ - ள். "தானம், சீலம், உபவாஸம், அர்ச்சனையென்னும் இவைகளின் பேதத்தினின்றும் நாலுப்ரகாரமான தர்மமானது ஸ்ராவகராலே சம்ஸாரக்கேட்டின் பொருட்டுத் தம் தம்மிட நிலைகளிலே யதாயோக்கியமாகப் பண்ணப்படும்" என்பதாம். தானமாவது - சத்பாத்திரங்களுக்குச் செய்யப்படும் ஆகார தானம். சீலமாவது-ஒழுக்கம். உபவாசமாவது-(அஷ்டமி சதுர்த்தசியில் செய்யும்) தவம். அர்ச்சனையென்பது-கடவுள் பூஜை. இன்னும்,

" அருந்தவந் தானம் சீல மறிவனற் சிறப்பு நான்குந்
திருந்திய குணத்தி னூர்க்குச் சேதிக்கு வீ தியாகும்"

என்னும் மேருமந்தரபுராணம் 729-ஆம் செய்யு ளடிகளிலும் இவை கூறப்படுகின்றன.

இ - ள். "செய்தற்கரிதாகிய தவமும், சதுர்வித தானமும், ஒழுக்கமும், சர்வக்ஞனைக் குறித்துச்செய்யும் பூஜையும் ஆகிய இந்த நான்கும் திருத்தமாகிய ஸம்மியத்வ குணத்தையுடையவர்களுக்கு மோக்ஷத்திற்கு வழியாகும்" என்பதாம்.

இன்னும்,

"நற்றானஞ் சீல நடுங்காத் தவமறிவர் சிறப்பிந் நான்கு
மற்றுங்குச் சொன்ன மனைவியரிந் நால்வரவர் வயிற்றுட் டோன்றி
யுற்று னொருமகனே மேற்கதிக்குக்கொண்டுபோ முரவோன்றன்
பெற்றார் மகப்பெற்று ரல்லாதார் பிறர்மக்கள்பிறரேகண்டீர்"[னைப்

என்னும் சீவகசிந்தாமணி 1545-ஆம் கவியாலும் இவற்றை உணரலாம்.

மேற்கூறிய இறைவன்பூஜை, தானம், தவம், ஒழுக்கம் இந்நான்கும் மோக்ஷமடைவதற்கு வழியென்பதாம். ஆதலின் திருக்குறளாசிரியர் இந்நான்கு தர்மங்களும் மழையின்றி நடவாவென்பதைக்கூறி யிருக்கின்றார். இவ்வாறு இந்த நான்குதர்மங்களையும் சங்கிலித் தொடர்போல ஒன்றேடொன்றாக இணைத்துக் கூறுவது ஜைநசமய சித்தாந்தமாகும்.

பரிமேலழகர் "நீரின்றமையா துலகெனின் வானின்றமையா தொழுக்கு" என்றகுறட்பாவில், "வானின் றமையாதொழுக்கு"

என்பதற்கு "அங்கீரினது நடுவே நீங்காத ஒழுக்கமும் மழை இல்லாமல்பொருந்தாது" என்றார். அதுபொருத்தமன்று. ஏனெனின் திருக்குறளாசிரியர், "இவ்வுலகம் நீரின்றியமையாதது போல மழையில்லாமல் ஒழுக்கம் நடவா" தென்கிறகருத்தினை இக்குறளில் கூறியிருக்கின்றார். இன்னும் "விரிநீர்வியனுலகத்துள்" என ஆசிரியர் கூறியதனாலேயே உலகம் இதிற் கூறியபடி நீருடன் அமைந்தது என்பதை நன்குணரலாம்.

இனி நீத்தார் பெருமை திருக்குறளில் ஜைனசமயத்திற்குப் பொருத்தமாக விளக்கப்பட்டிருப்பதையும் கூறுவாம்.

"இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு"

என்று திருக்குறளாசிரியர் கூறுகின்றார்.

இ - ள். "சம்ஸாரம் மோக்ஷமென்னும் இரண்டினது துன்பவின்பங்களின் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து இப்பிறப்பின்கண் மோக்ஷ மார்க்கானுஷ்டானமாகிய துறவறத்தைத் தரித்தவரது மகிமையே உலகத்தில் உயர்ந்தது" என்பதாம்.

சம்ஸாரம் என்பது ஜீவன்கள் சுகதுக்கங்களோடு கூடி சதுர்க்கதியில் சுழலுந்தன்மை. மோக்ஷம் என்பது கர்மத்தின் கெடுகையால் ஜீவன்கள் நித்தியானந்தசுகத்தில் நிலைத்திருக்கும் தன்மை.

ஆதலின் இவ்விரண்டினையும் அறிந்து, நீத்தாரென்னும் முற்றுந் துறந்தவர் பெருமை ஜைநசமய சித்தாந்தத்திற்குப் பொருத்தமான தென்பதை விளக்குதற்கு குணஸ்தானம் பதினொன்கில் ஆறுவது குணஸ்தான வர்த்தியாகிய ப்ரமத்தரென்பவரின் ஒழுக்கத்தின் பெருமையைச் சிறிது கூறுவாம்:

ப்ரத்வீ அப்பு தேஜோ வாயு வனஸ்பதி என்னும் பஞ்சஸ்தாவர ஜீவவதையும் நிவர்த்தி செய்தவராய், பஞ்சமகா விரதம் பஞ்சசமிதி த்ரிகுப்தி கேஸோலுஞ்சன முதலாகிய ஸப்தகம் க்ஷுத்பாதை முதலாகிய துவாவிம்ஸதி (22) பரீஷகஜெயம் பஞ்சேந்திரியவிஷய ஜெயம் ஷடாவஸ்யக்ரியை 6, உத்தமக்ஷமை முதலான தஸதர்மம் துவாதஸதபஸு துவாதசானுப்ரேக்ஷை பஞ்சாஸ்திகாய ஷட்திரவ்வியங்கள் முதலான தத்துவங்களை உடையவராய் மெல்லியநான்கு கஷாயமும் ஸ்திரீகதை தேசகதை ராஜாக்

கள்கதைபக்தகதை (ஆகாரம்புசித்தல்) என்னும் நால்வகைக்கதைகளிலும், பஞ்சேந்திரியத்திலும், ஸ்நேகம் மோகமென்னும் (நித்திரை) ப்ரணயத்வயத்திலும் ஏற்பட்ட முப்பத்தேழாயிரத்தைந்நூறு விகல்பமான ஸ்வரூபத்திலும் ஏகதேச சலனமுடையவராகி நூற்றுக்கோடி மகாவிரதமும் எண்பத்துநான்கு லக்ஷம் குணவிரதமும் பதினெண்ணுயிரம் சீலாசாரமும் உடையவராய், அவதிஞானம் மனப்பரிய ஞானம் சாரணத்துவம் ரித்திப்ராப்தம் முதலானவைகளையடைந்து நிகழ்பவர் நீத்தாரென்னும் முற்றுந்துறந்தவராவார்.

மேற்கூறியவற்றில் பஞ்சமகாவிரதமென்பதை விளக்குவாம்:

"சிறிய கொலைபொய் களவொடு காமம்
பொருளைத் துறத்தலோ டைந்து"

என்று அருங்கலச்செப்பு 86-ஆம் செய்யுளில் கூறப்படுகின்றவையே பஞ்சமகாவிரதங்களாம்.

இ - ள். "சிறியகொலையும், சிறியபொய்யும், சிறியகளவும், சிறியகாமமும், பொருளாசையும் ஆகியஐந்தையும் பற்றற விடுகிறது பஞ்சமகாவிரதம்" என்பதாம். சிறியகொலை என்பது ஏகேந்திரிய ஜீவன்களை ஹிம்ஸைசெய்தல்.

இவற்றை,

"பொய்கொலை களவு காம மவாவிருள் புகாது போற்றி"
என்னும் சீவகசிந்தாமணி 2824 ஆம் செய்யுளடியும் கூறுகின்றது.

இவற்றில் பொய்யாமையை ஆசிரியர் முந்திக்கூறியிருப்பினும் கொல்லாமையை முதன்மையாகக்கொண்டு பொருளுரைக்கவேண்டும். ஏனெனின் மேற்கூறிய ஐந்து விரதத்திற்கும் கொல்லாமை முதன்மைபெற்றது.

இதனைக்குறளாசிரியர்,

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

என்று கூறுவது உணர்த்தும்.

இ - ள். "ஒன்றாக-முதலாவதாக, கொல்லாமை-கொலைசெய்யாமை, நல்லது-நன்று, அதன்பின்சார் - அதன்பிறகுசார்ந்த, அப்பொய்யாமை - அந்தப்பொய்சொல்லாமையும், மற்று-பிறவும், (கள்ளாமை, பெண்வழி

சேறல், அவாவறுத்தல் ஆகியவைகளும்), நன்று - நன்மையாகும்" என்ப தாம். இவற்றில் மற்று என்னும் பதத்திற்குப் பரிமேலழகர் யாதொன்றும் கூறவில்லை. எனினும் மற்று என்பதால் கொல்லாமைபொய்யாமையுடன் மற்ற மூன்றையும் ஆசிரியர் விளக்கினர் என்பதையுணர்க.

ஆசிரியர் பஞ்சமகாவிரதங்கள் ஐந்தையும் இந்தக்குறட்பா வில் விளக்கி இவற்றை ஐந்து அதிகாரங்களாகவும் அமைத்துள்ளார். அவற்றில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருகுறள் எடுத்துக் காட்டி இவ்விஷயத்தை விளக்குவாம்.

" நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி"

என்றும்,

" எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு"

என்றும்,

" எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு"

என்றும்,

"மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது."

என்றும்,

" வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்"

என்றும் வருவன அவ்வதிகாரங்களில் உள்ள ஒவ்வொன்றாய் அவ்வதிகாரங்களை விளக்குவனவாம்.

இவைநிற்க,

இனி பஞ்சசமிதியைப்பற்றி விவரிப்பாம்.

பஞ்சசமிதியாவது: ஈர்யாஸமிதி, பாஷாஸமிதி, ஏஷணஸமிதி, ஆதானநிக்ஷேபணஸமிதி, வ்யுத்ஸர்க்கஸமிதி என ஐந்தாகும்.

இவற்றை,

"முன்னுகத் தளவு நோக்கி முன்புபின் பிரியச் செல்லா
ரின்சொலும் பிறர் தமக்கு மிதத்தன வன்றிச் சொல்லா
ரன்புநீத் துயிரை யோம்பி யளவமைந் துண்ப ரார்க்குந்
துன்புறக் கோடல் வைத்தல் மலங்களைத் துறத்தல் செய்யார்"

என்னும் மேருமந்தரபுராணம் 1363-ஆம் கவி கூறுகின்றது.

இ-ள். எதிரிலே நுகத்தளவுதூரம் நன்குகப்பார்த்து, முன்னும் பின்னும் ஜீவன்கள் பாதையடைந்து நீங்கும்படி செல்லார்; இனிய வசனத்தையும் அன்னியர்களுக்கு மிதமானவையில்லாமல் சொல்லார்; ராகத்வேஷமின்றிச் சகல ஜீவன்களையும் பாதுகாத்து, அளவிற்பொருந்திஅதாவது குறைத்து பவித்ராகாரத்தை பொஜிப்பார்கள். எவ்விதமானவர்களுக்கும் துக்கமடையும்படி ஒன்றை நிக்ஷேபிப்பதும், ஆதானம் பண்ணுவதும் செய்யார்; மலமூத்ராதிகளை ஜீவன்கள் துன்புற அவையுள்ள விடத்தில் விடார்" என்பதாம். இதிற் கூறப்பட்டவைகளே பஞ்சஸமிதிகளாம்.

இனி, த்ரிகுப்தி என்பதைப்பற்றி விவரிப்பாம்.

"இருத்தலே கிடத்தல் நிற்ற லியங்குதல் முடக்கல் நீட்டல்
திருத்திபெவ் வுயிர்க்கும் தீமை செறிந்திடா வொழுக்க மோம்பி
யுரைத்துயிர்க் குறுதி மார்க்க மோம்புவ கொடுப்பிற் கொண்டும்
பரிக்கதப் பாவை மாரைப் பற்றறத் துறந்திட் டாரே"

என்றுமேருமந்தரபுராணம் 1364-ஆம் கவியிற் கூறப்பட்டிருப்பவைகளே திரிகுப்திகளாம்.

இ - ள். "உட்கார்ந்திருத்தலாலும், படுத்திருத்தலாலும், யோகத்தில் நிற்கின்றதாலும், சர்யாமார்க்கமாகச் செல்கின்றதாலும், அஸ்தபாதாதிகளை முடக்குதலாலும் நீட்டுதலாலும், சகலஜீவன்களுக்கும் உபஸர்க்கம் செய்யாத ஒழுக்கத்தைப்பேணியும் (அதாவது காயகுப்தம்செய்தும்) பவ்ய ஜீவன்களுக்கு உறுதியாகிய மோக்ஷமார்க்கத்தைச் சொல்லியும் (அதாவது அதனைச்சொல்லி வேறுவார்த்தைகளைப் பேசாத தன்மையாகிய வாக்குப்தியடைந்தும்), ரத்னத்ரய விருத்திக்கு ரக்ஷணை யாகும்படியான ஆகாராதிகளை பத்ர சிலர்கள் கொடுத்தால் ஏற்றுக்கொண்டும் த்வாவிம்ஸதி (22) பரீஷஹங்களென்னும் உபாதிகளாகிய பாவைமார்களை ஆசையற நீக்கினர் (அதாவது மனோகுப்தியையும் பொருந்தினர்)" என்பதாம்.

இன்னும் காயத்தினடக்கத்தை,

"வில்லின தெல்லை கண்ணு னோக்கிமெல் லடிகள் பாவி
நல்லருள் புரிந் துயிர்க்கண் ணகைமுத லாய நாணி"

என்னும் யசோதரகாவியம் சருக்கம் 1 செய்யுள்-24 ன் அடிகளும்விளக்கும்.

இன்னும்,

‚‚இச்சாமி படிக்கமிஉம் இரியாவஹியாஎ பொலெஉம் பாம் பாம் தா
கம்மிண வம்திஉ வஉதிஸா ।விதிஸாஸா விஹாரஉரணேண
ஜம் ம் தாஜ திம்மிணா கம்மிவா வஉரகஜொஷெண வாணஹெஜ
ஜீவஸம் தாண் வஹெதி உவகாஜொ கஜொவா காரிஜொவா
கீரிம் ஜொவா ஸமணு மணிய் தம்ஸமிச்சாமி துக்கடம் ணமொ
அரஹம்தாண''

என்று கிரியாபுஸ்தகம் ஈர்யாபத சுத்தியிலும் ப்ராக்ருத பாஷையில் இவ்விவரங்கள் கூறப்படுகின்றன.

இ - ள். * "வாராய் ஞானவானே! நடக்கு மிடத்தைப்பற்றி ஆலோசனை செய்ய இச்சிக்கிறேன்; கிழக்கு வடக்கு தெற்கு மேற்கு என்கிற நான்கு திக்குகளிலும் திக்கோணங்களிலும் நுகத்தளவு தூரத்தைமுன் பார்த்து விஹரிக்கின்ற என்னுலே, ஏகேந்திரியாதிஜீவன்கள் காணப்படுகிறவிடத்தில் பிரமாதமாகிறமறதியினலே விகலேந்திரியங்களும் வனஸ்பதிகளும் பஞ்சேந்திரியங்களும் ப்ரத்வீ அப்பு தேஜோவாயுகாயங்களுமாகிய இவைகளுக்கு வருந்துதல் பண்ணுவதும் பண்ணுவிப்பதும், உடன்படுவதும் ஆகியவற்றிற்குச் சம்பந்தமான பொல்லாத நிகழ்ச்சி எனக்கு இல்லாதாகக்கடவது என்று அருகத் பகவானை நமோஸ்து செய்கிறேன்" என்பதாம்.

இதுவரைசொல்லியவற்றல் காயத்தினடக்கமென்பது ஜீவன்களுக்குத்துன்பம்வராமல் காப்பாற்றி ஒழுகவேண்டிய தென்பது நன்குவிளங்கும். இங்குக்கூறப்பட்ட காயத்தின் அடக்கத்தைப் பற்றிக் குறளாசிரியர்,

"செறிவறிந்து சீர்மை பயக்கு§ மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்"

என்றுகூறுகின்றூர்.

இ - ள். "செறிவு-நெருக்கமான (நுகத்தளவு தூரத்தை), அறிந்து-முன்பார்த்து, ஆற்றின்-நல்வழியில், அறிவு-ஞானத்தினுல், அறிந்து-(ஜீவன்களுக்குத்துன்பம் வராதவிதத்தை) தெரிந்து, அடங்கப்பெறின்-(அஸ்

* வாராய் ஞானவானே என்றது தன்ஆத்மனை; ஆத்மன் ஞானதரிசனத்தை யுடையவன். இதுபற்றியே குறளாசிரியர் § "அறிவறிந்து" என்றூர்.

தபாதாதிகளை மெதுவாக இயங்கச்செய்து அமைதியாய் நடந்து) அடங்கப்பெற்ருல், (அது) சீர்மை-சிறப்பை, பயக்கும்-(அவனுக்குத்) தரும்'' என்பதாம்.

இந்தக் குறட்பாவில் பரிமேலழகர், 'செறிவு' என்னும் பதத்திற்கு, 'அவ்வடக்கமானது' என்றும், 'அறிந்து' என்பதற்கு, 'நல்லோரால் அறியப்பட்டு' என்றும் பொருள்களுரைக்கின்றனர். அவைபொருத்தமல்ல வென்பதை மேல்கண்ட உரையினுல் உணரலாம்.

இன்னும் குறளாசிரியர்,

"ஒன்ருனுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்ருகா தாகி விடும்"

என்பதால் வாக்கின் அடக்கம் கூறுகின்ருர்.

"கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து"

என்பதால் மனேவடக்கம் கூறுகின்ருர்.

இவற்ருல் குறளாசிறியர், அடக்கமுடைமையில், காயம் வாக்கு மனம் என்னும் த்ரிகுப்திகளினடக்கமும் கூறியுள்ளாரென்பது நன்குவிளங்கும்.

இனி கேஸோலுஞ்சனமுதலான ஸப்தகத்தைப்பற்றிக் கூறுவாம். அவையாவன:

கேஸோலுஞ்சனம் அசேலம் அஸ்னனம் க்ஷிதிஸயனம் அதந்தாவனம் ஸ்திதிபோஜனம் ஏகபுக்தம் என ஏழாகும்.

இவற்றின் விவரத்தை முறையே கூறுவாம்: இவை தலைமயிரைப் பறித்தல் வஸ்திரமில்லாமல் நிர்க்கந்தரூபத்தைத் தரித்தல் ஸ்நானம் செய்யாதிருத்தல் பூமியில்படுத்திருப்பது பல்துலக்காமலிருப்பது நின்றுகொண்டு ஆகாரம்கொள்வது ஒருவேளை ஆகாரம் கொள்வது என்பனவாம்.

க்ஷுத்பாதை முதலான துவாவிம்ஸதி (22) பரிஷஹஜெயம் என்பவைகளை தவம் என்பதைப்பற்றிவருவனவற்றில்கண்டு கொள்க.

இனி பஞ்சேந்திரிய விஷயஜெயம் என்பதைப்பற்றிக் கூறுவாம்: இதனை,

"பொறிமீது புலத்தெழு போகமெலா
மிறவாதிர வும்பக லும்நுகரா
நிறையா தொழியப் பின்னெருப் பினிடை
விறகே யிவையென் றுவெறுத் தனனே"

என்ற மேருமந்தரபுராணம். 779-ஆம் கவி விளக்கிக் கூறுகின்றது.

இ-ள் "பஞ்சேந்திரியங்களால் விஷயவஸ்துக்களின்மேலேஉண்டாகிய போகோபபோகங்களையெல்லாம் நீங்காமல் இரவிலும் பகலிலும் அனுபவித்தும் திருப்தியாகாமல் நீங்கப்பிறகு இந்த இந்திரிய விஷயபோகங்களானவை அக்கினியினிடத்தில் அகப்பட்ட விறகுக்குச்சமானமே யாகுமென்று அவற்றைவெறுத்து வைராக்கிய முற்றான்" என்பதாம்.

ஆதலின் பஞ்சேந்திரியங்களினாலுண்டாகும் விஷயவாஞ்சையைத் துறந்தவர் முன்சுவர்க்கத்தை அடைந்து பின்மோக்ஷமடைவார்கள்.

இதனை,

"யேந வைராக்ய வஜ்ரேண ஹதாந்யக்ஷ தஸ்கரா: ।
தஸ்ய மோக்ஷ ஸ்வர்க்ஸம்பத்: கிம் வ்யர்த்த காயதண்டநை:" ॥

என்று தர்மஸாரம். 6-வது சுலோகம் கூறுகின்றது.

இ-ள். "பஞ்சேந்திரியங்களாகிறகள்ளர்கள் யாதொருத்தனாலே வைராக்கியமாகிற ஆயுதத்தினாலே கொல்லப்பட்டார்கள் அந்த வைராக்கிய புருஷனுக்கு ஸ்வர்க்கமும் மோக்ஷமும் ஆகக்கடவன; சரீரதண்டனைகளினாலே என்ன? வியர்த்தம்" என்பதாம்.

இதற்கிணங்கக் குறளாசிரியரும்,

"உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து"

என்று கூறுகின்றார்.

இ - ள். "அறிவென்னும் அங்குசத்தினால் ஐம்பொறியாகிய யானைகளைந்தையும் அதனதன் விஷயங்களிற் செல்லாமல் தடுப்பவன் உயர்வாகிய மோக்ஷபூமிக்கு ஓர் வித்தாவான்" என்பதாம்.

வித்து என்பதனால் முன்சுவர்க்கத்தை அடைந்து பின் மோக்ஷ மடைவான்என்பது கருக்க. இதற்குப் பரிமேலழகர் "ஈண்டு இங்குப் பிறந்திறந்து வரும் மனிதனல்ல" என்றார். அது பொருத்தமன்று.

இதற்கிணங்க.

ஒன்றாயவூக்க வேர்பூட்டி யாக்கைச் செறுவுழுது
நன்றாய நல்விரதச் செந்நெல்வித்தி யொழுக்கநீர்
குன்றாமற் றாங்கொடுத்தைம்பொறியின் வேலிகாத்தோம்பின்
வென்றார்தம் வீட்டின்பம் விளைக்கும் விண்ணோருலகீன்றே.

என்று சீவகசிந்தாமணி 962-ஆம்கவி கூறுகின்றது.

இ - ள். பகிராத முயற்சியாகிய ஏரைப்பூட்டி உடம்பாகிய செய்யைத் தவத்தாலே வருந்துவித்து விரதமாகிய செந்நெல்லை விதைத்து சாரித்திரமாகிய நீரைவற்றாமற்பாய்த்தி ஐம்பொறியாகிய வேலியைப் புலனாகிய பசுக்கள் பிரியாதபடி காத்துப் பரிகரிப்பின் அந்நிலை முதற் சுவர்க்கத்தினைத் தந்து பின் வீட்டினைவிளைவிக்கும் என்பதாம்.

இன்னும் இதனை,

"ஐவகைப் பொறியும் வாட்டி யாமையி னடங்கி"

என்னும் சீவக சிந்தாமணி 2824-ஆம் கவியினடியிலும், திருத்தக்கதேவர் கூறியிருத்தல்காண்க.

இதற்கிணங்கக் குறளாசிரியரும்,
"ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்"

என்று கூறியிருக்கின்றனர்.

இந்தக் குறட்பாவிற்குப் பரிமேலழகர், "ஒருவன் ஐம்பொறியும் அடக்கவல்லவனாயின்" எனப் பொருளுரைத்துப் பிறகு "இதனால் காயத்தினடக்கம் சொல்லப்பட்டது" என்றார். இந்தக் குறட்பாவிற் சொல்லப்பட்டது காயத்தி னடக்கமாகாது; ஐம்பொறியினடக்கமேயாகும். ஆசிரியர்காயத்தி னடக்கத்தை இந்த அதிகாரத்தில் வேறு குறட்பாவில் கூறியிருக்கின்றார். அதனை, மேலே விளக்கிக் காட்டியுள்ளோம்.

இன்னும்குறளாசிரியர்பஞ்சேந்திரியவிஷயங்களின் அடக்கத்தை
" அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு."

என்னும் குறளால் கூறுகின்றார்.

இ - ள். " (மோக்ஷத்தையடைபவர்) ஐந்தன்-பஞ்சேந்திரியங்களின் விஷயங்களுக்குரிய், புலத்தை-ஐம்புலன்களையும், அடல்வேண்டும்-கெடுத்தல் வேண்டும், (கெடுக்கும்போது) வேண்டியவெல்லாம்-(மனத்தினால்)

விரும்பப்படும் விஷயங்களெல்லாவற்றையும், ஒருங்கு-ஒருமிக்க, விடல் வேண்டும்-வெறுத்து விடுதல் வேண்டும்'' என்பதாம்; அதாவது ஐம்புலன்களுடன் மனத்தையும் ஒருமிக்க அடக்கவேண்டும் என்பதாம். அதனால் பரிசுத்தமான ஞானம் விளங்கும் என்பது பெறப்படும்.

இந்தக்குறட்பாவில் பரிமேலழகர் வேண்டியவெல்லாம் ஒருங்கு விடல்வேண்டும் என்னும் பதத்திற்கு (அப்புலன்களை அனுபவித்தற்பொருட்டு)தாம் படைத்த பொருள்களையெல்லாம் ஒருங்கு விடல்வேண்டும் என்று உரைவகுத்திருக்கின்றனர். அது பொருத்தமன்று. சகலபொருள்களிலும் ஆசையைப்பெருக்குவதுமனோ இந்திரியம்; ஆதலால் தான் படைக்காதபொருள்களிலும் மனம் பிரவேசிக்கக்கூடும். ஆதலின் மனதினால் நினைப்பவைகளெல்லாவற்றையும் ஒருமிக்கவிடவேண்டுமென்று குறளாசிரியர் அருளினரென்பது பொருத்தமுடையதாம்.

இதனை,

"மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
வைவாய வேட்கை யவாவினைக்—கைவாய்
கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்."

என்ற நாலடியார் துறவு. 9-ஆம்செய்யுளும் உணர்த்தும்.

இ-ள். "பஞ்சேந்திரிய வழிகளினுடைய ஆசையினையும் மனோ இந்திரியத்தினாலுண்டாம் ஆசையினையும் நன்மார்க்கத்திலிருந்து காக்கும் ஞானத்தையுடையவன் தப்பாது மோக்ஷமடைவான்'' என்பதாம்.

இன்னும்,

"இந்தியக் குஞ்சரத்தை ஞானப் பெருங்கயிற்றால்
சிந்தனைத் தூண்பூட்டிச் சேர்த்தியே—பந்திப்பர்
இம்மைப் புகழும் இனிச்செல் கதிப்பயனும்
தம்மைத் தலைப்படுத்து வார்."

என்னும் அறநெறிச்சாரச்செய்யுளும் இதனை விளக்குகின்றது.

இன்னும்,

"பொறிப்புலத் தெழுந்த போகத் தாசையைப் போகவிட்டு
வெறுத்தெழு மனத்த ராகின் வீட்டின்பம் விளையும்."

என்று மேருமந்தரபுராணம் 862 ஆம் செய்யுளடியும் இதனைக் கூறுகின்றது.

இ - ள். "பஞ்சேந்திரியங்களின் விஷயங்களிலே உண்டாகிய போக போக போகங்களினலாகிய ஆசையைப் பேதபாவனைபண்ணி நீக்கி அவ்விந்திரியவிஷயபோகங்களில் விராகமுற்றுச் சுத்தாத்மஸ்வரூபத்தில்உண்டாகிய ஏகாக்ரசித்தத்தராகில் அவர்கட்கு மோக்ஷசௌக்கியம் உண்டாகும்" என்பதாம்.

இனி ஷடாவஸ்யக்கிரியையைப்பற்றிக் கூறுவாம்.

இது ஸாமாயிகம் ஸ்துதி வந்தனை ப்ரதிக்ரமணம் ப்ரத்யாக்யானம் வியுத்ஸர்க்கம் என ஆறாகும்.

இவற்றை,

"நன்மைதீ மைக்கண்ணொத்து நாதன்றன் பாதமோதித்
தன்மைக்கண் ணின்றார்தம்மைப் பணிந்துதப்பிழைப்பின் மீண்டு
பின்னைத்தம் பால்வந்தெய்தும் பிழைப்பைமுன் மறுத்துக்காயந்
தன்னைத்தாம் விட்டுநின்றார் தடவரைச் சூளியொத்தார்."

என்னும் மேருமந்தரபுராணம் 1365-ஆம் கவி விளக்கும்.

இ - ள். "நன்மை வந்தபோதிலும் தீமை வந்தபோதிலும் யதாஸ்வரூபமடைந்து சமானமா யிருக்கிறதும் திரிலோகேஸ்வரனுகிய அரஹந்தபகவானுடைய திருவடிகளைச்சொல்லி ஸ்துதி செய்வதும் பஞ்சபரமேஷ்டிகளைப்பணிந்து வந்தனைசெய்வதும் தங்களுடைய குற்றங்களினின்றும் நீங்குவதும் அதாவது நீங்குதல் பாவனையாகிய தன்னை நிந்தித்து பிரதிக்ரமணம் செய்வதும் பிறகு கர்மோதயத்தால் தங்களிடத்தே வந்தடையப்பட்டகுற்றங்களை முன்னே மறுத்தலும் அதாவது ஆலோசனுதிபூர்வமாகிய விவேக பலத்தினல் பிராயச்சித்த பாவனையடைவதும் சரீரத்தையும் தாம்விடுத்தலும் அதாவது அதனை நமதல்லவென்றுமனதில் பாவிக்கின்ற வியுத்ஸர்க்க பாவனை யடைவதுமாகும்" என்பதாம்.

இனி உத்தமக்ஷமை முதலான தஸதர்மத்தைப்பற்றி விவரிப்பாம்.

இதனைக் குறளாசிரியர்,

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

என்று கூறுகின்றார்.

இ - ள். "ஒழுக்கத்து - (திரயோதசசாரித்திரமாகிய) சீலாசாரத்தினல்-நீத்தார்-முற்றுந் துறந்தவர், வேண்டும். விரும்புகின்ற, விழுப்பத்து-பரிசுத்தமாகிய தசதர்மமே, பெருமை - (அவர்க்குப்) பெருமையாகும் (இது) பனுவல்-நூற்களினது, துணிவு-துணிபாம்" என்பதாம்.

இந்தக் குறட்பாவில் பரிமேலழகர் ஒழுக்கமென்பதனை இன்னதென விளக்காமல், விழுப்பத்து என்னும் பதத்திற்கு மேலான பலபொருள்களுள்ளும் என உரைசெய்திருக்கிறார். அது பொருந்தாதென்பதை, இங்குக்காட்டிய கருத்துக்களால் நன்குணரலாம்.

திரயோதஸ சாரித்திரமாவது பஞ்ச மகாவிரதம் பஞ்சஸமிதி த்ரிகுப்தி ஆகிய பதின் மூன்றுமாம்.

இதனை,

"பத்துமூன்றாகி நின்ற கிரியையைப் பயின்றிட்டானே" என்று மேருமந்தர புராணம் 145-ஆம் கவியினடி கூறுதல் காண்க. கிரியை என்பது-ஒழுக்கம்.

தஸதர்மமாவது-உத்தமக்ஷமை உத்தமமார்த்தவம் உத்தம ஆர்ஜ்ஜவம் உத்தமசத்தியம் உத்தமசௌசம் உத்தமஸம்யமம் உத்தமதவம் உத்தமதியாகம் உத்தமஆகிஞ்ஜின்யம் உத்தமபிரம்ம சரியம் என்னும் பத்தாகும்.

இதனை,

"படைகெழு புரிசை வெல்வார் புறநின்று பதின்மர்காக்க" என்று சூளாமணி முத்திச்சருக்கம் 44-ஆம் செய்யுளடி கூறுதல் உணர்க.

இதில் பதின்மர் என்பது தஸதர்மமாகும்.

"பத்தறம் பன்னிரண்டாந் தவத்தொடு பயின்று தன்கண்" என்னும் மேருமந்தரபுராணம் 411-ஆம் செய்யுளடியிலும் இது கூறப்படுதல் உணர்க.

இவற்றில் பத்தறம்என்பது தஸதர்மமாகும்.

இன்னும் பிராகிருதபாஷையில் க்ரியாபுஸ்தகம் யோகபக்தியில்

ഉഝവിമ യംഠംഠാംണം ഉഝഝജഠ ഝജഠെ വഠെ ।

எனவரும் 7-வது சுலோகம் 2-வது சரணத்திலும் கூறப்படுகின்றது.

இ-ள். "உத்தம க்ஷமாதிசனான பத்து தர்மங்களிலே நின்றவரும் ஏகேந்திரிய முதலான ஐந்து ஜீவன்களையுடைய பிராணிகளை ரக்ஷிக்கிறதும் ஸ்பரிஸன முதலான ஐந்து இந்திரியங்களைத் தடைசெய்கிறதுமென்கிற பத்து சம்யமங்களிலே யத்னம் செய்கின்றவருமாகியவரை வந்தியாநின்றேன்" என்பதாம்.

மேல்கண்டவடமொழி தென்மொழி நூல்களால் காட்டியுள்ள தலதர்மத்தையே குறளாசிரியர் விழுப்பத்தளன்று அருளியிருக்கின்றாரென்பது நன்கு தெளிதல் கூடும்.

மேற்கூறியுள்ள பத்துதர்மங்களில் ஒவ்வொன்றின்கருத்தை விவரிப்பாம்.

உத்தமக்ஷமையென்பது, தன்னை அறுத்தாலும் அறுப்பவனுக்கும் நிழலைத்தருகின்ற மரம்போல வரிசையாகச் சேர்ந்து நின்று துன்பங்களைச் செய்தவர்களுக்கும் அவர்களும் சௌக்கியத்தை யடையும்படியான தர்மோபதேச வசனத்தை உபசரித்துப் போற்றுவதாகும்.

உத்தம மார்த்தவமென்பது, வணக்கத்தோடு கூடியவராகி நிறைந்திராநின்ற ஜீவன்களையெல்லாம் சமத்வபாவமாக நோக்கி மனமானது பஞ்சைப் பார்க்கிலும் மிருதுவாகும் குணத்தையுடையவராய் நிகழ்வது.

உத்தம ஆர்ஜவமென்பது,உள்ளும்புறமும்ரத்னதீபத்துக்குச் சமானமாகி மேலான ரிஜுபரிணமமாகி ஒப்பற்ற விதமாக நடக்கின்ற குணமுடைய வராயிருத்தல்.

உத்தம சத்யமென்பது ராகத்வேஷமோக மில்லாதவராய்சம்யத்வகுணவிருத்தியினால் நிறைந்நிராநின்ற பவ்வியஜீவன்களுக்கு உறுதியை உண்டுபண்ணுதலில்லாதவசனத்தைச்சொல்லாதவராய் தர்மோபதேச மொழியைக் கூறுவதாகும்.

உத்தம சவுசமென்பது, யாதொருபிரகாரத்தாலும் ஆகாதென்றுநீக்கிவிடப் பட்டிருக்கின்ற விஷயவஸ்துக்களின்மேல் மறுபடியும் சோர்வுற்றவிடத்திலும் மனம்செல்லாத பரிசுத்ததர்மகுணமுடையவராய் நிகழ்தல்.

உத்தம ஸம்யமமாவது, மெய் வாய் கண் மூக்கு செவி மனமென்னும் ஆறுஇந்திரியங்களினுடைய விஷயவழிகளில்செல்கின்ற பரிணமங்களைச் செல்லாமற்றடுத்துப்போற்றுதலும் ஷட்ஜீவ நிகாயங்களை அருளுடன் ரக்ஷித்துவர்த்திப்பதுமாகும். ஷட்ஜீவ நிகாயமென்பதைதவத்தைப்பற்றிய விஷயம்வருமிடத்துச்கண்டுகொள்க.

உத்தம தவமென்பது, துவாதஸ (12) தவத்திலும் நிரதிசாரமாகச்சேர்ந்து தவஞ்செய்வது.

உத்தம ஆகிஞ்ஜின்யமென்பது - தர்மபரிணபம்.

உத்தமதியாகமென்பது - பவ்யஜீவன்களுக்கு தத்வோபதேசம் செய்தலாகிய பரமாகமங்களை வியாக்யானம் பண்ணியருளும் சாஸ்திரதான சக்தியாகும்.

உத்தம பிரமசரியமென்பது - ஸ்திரீமார்களைத் துதித்தல், பார்த்தல், அவர்கள் அழகிய மொழிகளை மேன்மையாகக் கேட்குதல், அவர்களுடன் சிரித்தல், அவர்கள் அடைந்திருக்கின்ற வீட்டில் வாசஞ்செய்தல் முதலான குற்றங்களினின்றும் நீங்கிவிளங்குவதாகும்.

இனி, 'துவாதஸதபசு' என்பதைப்பற்றிக் கூறுவாம்.

தபசு-பாஹியதபசு, அப்யந்தரதபசு என இரண்டு வகைப்படும்; அவற்றுள் அனஸநம், ஆவமோதர்யம், வ்ரத்திபரிஸங்கியானம், ரஸபரித்தியாகம், விவிக்தஸயனுஸயனம், காயக்லேசம் என்னும் ஆறும் பாஹியதபஸாகும். பிராயச்சித்தம், விநயம், வையாப்ரத்யம், ஸ்வாத்யாயம், வ்யுத்ஸர்க்கம், தியானம் என்னும் ஆறும் அப்யந்தர தபஸாகும்.

இவற்றில் அனஸனமென்பது-திவி உபவாஸம், சதுர்த்தோபவாஸம், ஸஷ்டோபவாஸம், பக்ஷோபவாஸம், மாஸோபவாஸம், சாதுர்மாஸோபவாஸம், ஸஷ்டமாஸோபவாஸம், ஸம்வத்ஸரோபவாஸம் முதலான உபவாஸங்களாகும்.

ஆவமோதரியமென்பது—ஆகாரம் குறைத்துப் புசிப்பதாகும்.

வ்ரத்திபரிஸங்கியானமென்பது-இன்னவஸ்துப் புசிப்பேன்' இத்தனைவீடுபரியந்தம் வீதியில் போவேன், இன்னபூஷணம் இன்ன வஸ்திரம் தரித்தபேர் நிறுத்தினுல் ஆகாரம் கொள்வேன் என்று விரதம்பண்ணிக்கொண்டு போவதாகும்.

ரஸபரித்யாகமென்பது-பால், தயிர், நெய், எண்ணெய், வெல்லம், பண்டு பலாதி முதலாகிய ரசவர்க்கங்களைத் துறந்து ஆகாரம் கொள்ளுவதாகும்.

விவிக்த ஸயனுஸயனமாவது:— பத்மாஸனம், குக்குடாசனம், பல்யங்காசனம், கோமுகாஸனம், மகரமுகாஸனம், தனுஸயனம், ஏகபார்ஸ்வதண்டஸயனம் முதலானவைகளைக்கொண்டு, ஸதிரீ,பசு

20

பண்டகவர்ஜிதஸ்தானத்திலிருந்தும், ஸப்தபயத்தினின்றும்நீங்கிப் பல குகைகள், வனங்கள் முதலாகிய ஸ்தானங்களிலே இருப்பதாகும்.

காயக்லேசமென்பது-கோடைக்காலம் நான்குமாதமும் மலையினுச்சியிலும், மழைக்காலம் நான்குமாதமும் மரத்தின்கீழும்,பனிக்காலம் நான்கு மாதமும் ஸமுத்திர பார்ஸவத்திலும் காயோத்ஸர்க்கமாய் அசையாமல் நின்று சரீரத்தை ஆத்மபாவனைக்கு இசையவஸம் செய்வதாகும்.

இவைகள் பிறர் காணப்படுகையினால் இவற்றிற்கு பாஹிய தபமென்று பெயராயிற்று.

அப்பியந்தரதபஸில், பிராயச்சித்த மென்பது-தான் கைக்கொண்டு, நடக்கிற விரதங்களில் அபசாரம் வந்தால் அதாவது குற்றம் நேர்ந்தால் அதனைப்பிறகு ஆசாரியரிடம் வெளியாக உள்ளபடி சொல்லி, அவர்கள் சொன்னபடி அதற்குப் பிராயச்சித்தம் கைக்கொண்டு நடப்பதாகும்.

விநயமென்பது-தனக்குஸமானமான பேரிடத்திலும், மேற்பட்டவரிடத்திலும் எதிரெழுச்சி முதலாகிய வந்தனைகள் செய்வதாகும்.

வையாப்ரத்ய மென்பது-தன்னிலும் மேற்பட்டவரிடத்தில் பணிவிடை முதலாகிய சிஸ்ருஷை பண்ணுவதாகும்.

ஸ்வாத்யாய மென்பது-நான்கு வேதங்களையும், சித்தாந்தமுதலாகிய தத்வ சாஸ்திரங்களையும் இடைவிடாமல் ஓதுவதும், பிறருக்கு உபதேசம் பண்ணுவதும், சாஸ்திரங்களை எழுதிவைப்பது முதலானவைகளுமாகும்.

வ்யுத்ஸர்க்க மென்பது-கர்மபந்த காரணமான பாஹியாப்யந்தரமுதலான இருபத்து நான்கு பரிக்கிரகங்களை விடுவதாகும்.

இந்தப் பரிக்கிரகங்களின் விவரத்தைத் துறவு என்பதைப் பற்றிய விஷயங்கள் வருமிடத்துக் கண்டுகொள்க.

த்யான மென்பது-மனதை எங்கும் செலுத்தாமல், ஸ்திரமனதுடையவராய் ஜீவாதிதத்துவங்களை தியானிப்பதும், அந்த தியானத்தில் ஆர்த்த ரௌத்ர தியானங்களை நீக்கி தர்ம சுக்ல த்யானங்களைவர்த்திப்பதுமாகும்.

இந்த நான்கு த்யானங்களின் விவரத்தை, தவத்தைப்பற்றிய விஷயங்கள் வருமிடத்துக் கண்டுகொள்க.

இந்த ஆறுவகை தபஸும் தன்னுற்றானே யறிந்து பண்ணக் கூடிய தாகையினால் இதற்கு அப்யந்தர தபஸென்று பெய ராயிற்று.

இனி துவாதசானு பிரேக்ஷை என்பதை விவரிப்பாம்:

இது அநித்தியம், அஸரணம், ஏகத்வம், அன்யத்வம், ஸம் ஸாரம், லோகம், அசுசித்வம், ஆஸ்ரவம், ஸம்வரை, நிர்ஜரை, போதிதுல்லபம், தர்மஸ்வாக்யானம் எனப் பன்னிரண்டு வகையினை யுடையதாகும்.

இவற்றில் அநித்ய மென்பது-தேகமும், அழகும், யௌவன மும், வீரமும் ஆகிய இவையெல்லாம் மேகத்திலிடப்பட்ட விற் போல வாகுந்தன்மை யுடையன வென்பது.

அஸரண மென்பது-அருகருடைய பாததாமரைகளே யல் லாமல் மற்ற பந்துக்கள் உறவும், திரவ்யங்களும் ரக்ஷணையாகா வென்பது.

ஏகத்வமென்பது-பிறப்பும், இறப்பும், மூப்பும், வியாதிகளு மாகிய மிக்க துயரங்கள் என்னையடைய நான் அவற்றிலுழன்று நிற்குங் காலத்தில், நானுகிய ஒருவனே யல்லாமல் எனக்கு அன்னி யர் துணையானவரல்லர் என்பது.

அன்னியத்வமென்பது-குற்றமில்லாத சிறப்பையுடைய உயி ரானது அறிவையுடையது; சரீரமானது அறிவில்லாதது; ஆகையி னுல், வெவ்வேறு குணங்களையுடைய அவ்வுயிருடலென்னும் இரண் டும் சேர்க்கையினுல் நிலைபெற்றொன்ருயிருப்பினும், வாளும்கூடும் போல வெவ்வேறு தன்மையுடையன வென்பதாம்.

சம்ஸாரமென்பது-கணக்கிறந்த எல்லா வூழிக்காலத்திலும் கெடாத சம்ஸாரத்தில், பஞ்சவர்த்தனைகளினுலே அநந்தவாரம் காற்ருடிபோ லுழலுகின்ற நாற்கதிகளிலேயும் ஏற்படும் துயரமா னது மிகுகின்ற பிறப்புக்கள் என்பதாம்.

லோகமென்பது-பழமையாகிய இவ்வுலகமானது பலவாகிய ஜீவன்களும் பிறத்தற்கும், முக்தியடைவதற்கும் ஏற்பட்ட விட மென்று லோகத்தினது தன்மையை தியானிப்பதாம்.

அசுசித்வ மென்பது-மலங்கள் கழலுகின்ற நவத்துவாரங் களை யுடைத்தாகும் மாம்ஸமாகியது தேகம்: இத்தேகத்தினாற் சுக முண்டாகாது என்று இதனை நிந்தித்து வெறுத்தல்.

ஆஸ்ரவமென்பது-குரோத,மாண, மாயா, லோபமென்னும் நான்கு கஷாயங்களும், மித்யாத்வமும் ஆகிய இவற்றினாலே சொல்லுதற்கரிய முடிவில்லாத வினையானது ஜீவனிடத்தில் அடை யும் தன்மையாம்.

ஸம்வரையென்பது பாகியாப்யந்தரதபஸுகளாலும், பிரா ணிஸம்யமம் விஷயஸம்யமம் என்று சொல்லப்பட்ட விரதங்க ளாலும், நீங்காத தத்துவஞானத்தினாலும் வலிமையுடையவினைகள் தம்மை யடையாமல் நீங்கும்படியான வகையை நினைத்தல்.

நிர்ஜரை யென்பது-மிகுந்த ஞானத்தினாலும், தியானத்தினா லும் அருமையாகிய வினைகளும், தம்தம் கருமத்தினுடைய ஸ்திதி பந்த சக்தியுடனே அநுபாகபந்தசக்தியும் கணந்தோறும் குறைவு பட்டுக் கரணத்திரயத்தில் உதிர்ச்சியாகும் (கெடும்) தன் மையாம்.

போதிதுல்லபமென்பது-நன்ஞானமும், நற்காட்சியும், நல் லொழுக்கமுமான ஜிநதருமந்தான் அருமையான நன்மையை யுடைத்தாகும் என்று அதன் பெருமையை நினைத்தல்.

தர்மஸ்வாக்கியானமென்பது-அபிமானத்தினின்றும் நீங்கி, இகத்திலுண்டான பிரயோசனத்தை யெண்ணாமல், உயிர்களிடத் தில் இதமும், மதுரமுமாகு முன்மையான கிருபைவைத்துப் பெருமை பொருந்திப் பொய்யும் பகையும்நீங்கிய செம்மையினாலே சம்யக்திருஷ்டிகளிடத்து உண்டாகா நின்ற உபதேசமொழிகளி னருமையை அறிதலாம்.

இந்த துவாதஸாநு பிரேக்ஷை முத்தியடைபவருக்கொரு மார்க்கமாம். இவற்றை அஷ்டபதார்த்தத்திலும், ஒவ்வொன்றுக் கும் சரித்திர உதாரணத்துடன் ஜீவசம்போதனையிலும் பாக்கக் காணலாம்.

தவிர மேலே 142-ம் பக்கத்தில் கண்ட முப்பத்தேழாயிரத் தைந்நூறு விகல்பமும், நூற்றுக்கோடி மகாவிரதமும், எண்பத்து நான்குலக்ஷம் குணவிரதமும், பதினெண்ணாயிரம் சீலாசார முத

லானவைகளும் அபாரமான விஷயங்களாதலால் அவைகளை இங்கு விவரிக்கவில்லை.

இனி, மெல்லிய நான்கு கஷாய மென்பது:—இந்தக்கஷாயங்கள் நான்கு பேதங்களாம்.

அவையாவன:—

"அநந்தானுபந்தி குரோத மான மாயா லோபம்
அப்பிரத்தியாக்கியான குரோத மான மாயா லோபம்
பிரத்தியாக்கியான குரோத மான மாயாலோபம்
சஞ்ஜ்வலன குரோத மான மாயாலோபம்"

என்பனவாம்.

இவற்றில் நான்காவது, மெல்லிய நான்கு கஷாயமாம். இந்த நான்கு வகையுள் பதினாறுபேதங்களுண்டு. அவற்றின்கருத்துகளை கர்ம ஸ்வரூபத்தில் கண்டுகொள்க.

இன்னும் முற்றுந்துறந்தவர்களுக்குரிய ஒழுக்கங்கள்,

" வடிவஸமிதி ந்த்ரிய ரோதோ லோசாவஸ்யகமசேலமஸ்நாநம் ।
க்ஷிதிஸயநமதந்தவநம் ஸ்திதிபோஜநமேகபக்தம் ச ॥"

என்ற சுலோகத்தால் ரயண சாரத்தில் கூறப்படுகின்றன.

இ-ள். "பஞ்சமகாவிரதம். 5, பஞ்சசமிதி. 5, பஞ்சேந்திரிய ஜெயம். 5, தலைமயிர் பறித்தல். 1, ஷடாவஸ்யக்ரிவை, 6, நிர்க்கந்த ரூபம் தரித்தல். 1, ஸ்நாநம் செய்யாமலிருத்தல். 1, பூமியில் படுப்பது. 1, பல்துலக்காமலிருப்பது 1, நின்றுகொண்டு ஆகாரம்கொள்வது. 1, ஒரு வேளை உண்பது. 1, ஆக. 28-ம் முனிவர்களுக்கு மூலகுணங்கள்" என்பதாம்.

இன்னும், முனிவர்க்குரிய உத்தர குணங்களை

" ஸமய பவயணமோஹா உஸமவமே பஹாரதிநோ ஹாதி ஜவயமோ ।
ஸோகஸ தவமாவாஸா ஸமதீஸ ஜுணா மேணியமா ॥"

என்ற ரயணஸார சுலோகமும் கூறுகின்றது.

இ-ள். பஞ்சமகாவிரதம் 5, த்ரிகுப்தி 3, உத்தமக்ஷமைமுதலான தஸதர்மம். 10, அனஸனுதி தவங்கள் 12, ஷடாவஸ்யக்

ரிமை ர். ஆக 36-ம் முனிவர்களுக்கு உத்தரகுணங்கள்" என்பதாம்.

இவை இங்ஙனம் உயர்ந்தனவாகக் கூறப்பட்டிருந்தும், மேல் கூறியுள்ளவற்றில் தலைமயிர் பறித்தல், கோவணமில்லாமல் நிர்வாணமாக விருத்தல், நின்றுண்டல், கையிலுண்பது, பல்துலக்காமலிருப்பது, ஸ்நாநம் செய்யாதிருத்தல், இன்னும் மயில் பிஞ்சம் தரித்தல் முதலானவைகளை சைவசமயத்தினராகிய திருஞானசம்பந்தர், சன்மார்க்க ஒழுக்கங்களென்றறியாதவராய்த் தாமியற்றிய தேவாரத்தில் பலவாறு தூஷித்திருக்கின்றனர். அவைகளை இதனடியில் சிறிது விவரிப்பாம்.

'தாறிப் S பெண்ணைத் தட்டுடையாரும்"

என்று 1-வது திருக்கண்ணார் கோயில் பதிகத்திலும்,

"நாணுதுடை நீத்தோர்களுங் கஞ்சிநாட்காலே
யூணுப்பகலுண்டோதுவோர்களுமுரைக்குஞ்சொற்
பேணுது"

என்று 1-வது திருச்சிராப்பள்ளிப்பதிகத்திலும்,

---

S. சைவசமய தபவிகள் மான்தோலை ஆடையாகவும், புலித்தோலை ஆஸனமாகவும் உடையவர்களா யிருக்கின்றமையால், தங்களைப்போலவே ஜைன முனிவர்களும் ஆடையைத் தரித்தார்களென்றும், ஆனல் அது இழிந்த ஆடை யென்றும் கூறி அவ்வகையில் அவர்களை இழிவுபடுத்தக் கருதிஇங்ஙனம் சமணர்களும் பனந்தடுக்கை ஆடையாகவுடுத்துகின்றவர்களென நிந்தித்திருக்கின்றார். ஆனல் பனந்தடுக்கு ஜைன முனிவர்களுக்குரிய தென்று சாஸ்திரங்களில் கூறப்படவில்லை. ஜைநமுனிவர்கள் நிர்வாணி யென்றும், திக்குகளையே ஆடையாக உடையவராதலால் திகம்பரரென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவற்றின்படியே ஜைனமுனிவர்கள் திகம்பரர்களா யிருந்து வந்திருக்கின்றார்கள். இக்காலத்திலும் பம்பாய் ராஜ்யத்தில் இருக்கும் நிர்க்கந்த முனிவர்கள் இவ்வாறு திகம்பரர்களா யிருப்பதை பிரத்தியக்ஷமாகக்காணலாம். ஆகையால் திருஞான சம்பந்தர் கூறியிருப்பவை பொருத்தமற்றன வாகும். அவர் மதத்துவேஷத்தால் ஜைநர்களாகிய சமண முனிவர்களைத் தாமியற்றிய தேவாரத்தில் இல்லாதனவும் பொல்லாதனவுமாக அநேக பொய்களைச் சொல்லி வரம்பு கடந்து தூஷித்திருக்கின்றனர். சாக்கியர் தேரரென்கிற புத்தர்களையும் விட்டபாடில்லை.

"நின்றுண் சமணரிருந்துண்டேரர் பேர்வையா
ரொன்று முணராவூமர் வாயிலுரை கேட்டுழல்வீர்காள்"

என்று 1-வது திருநறையூர் சித்தீச்சரம் பதிகத்திலும்,

"குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு சாக்கியரும்
குணமொன்றில்லா
மிண்டாடு மிண்டருரை கேளாதே"

என்று 1-வது திருவையாற்றுப் பதிகத்திலும்,

"நாணாசமணர் நல்லதறியார் நாளுங்குரத்திகள்
பேணார் தூமெய் மாசுகழியார் பேசேலவரொடும்"

என்று 1-வது திருக்குடந்தை காரோணம் பதிகத்திலும்,

"குறங்காட்டு நால்விரற் கோவணத்துக்கோலோவிப்போ
அறங்காட்டுஞ் சமணருஞ் சாக்கியரும்"

என்று 2-வது திருச்சாய்க்காடு பதிகத்திலும்,

"ஊற்றைவாய்ச்சமண்கையர்கள் சாக்கியர்"

என்று 2-வது திருச்சாய்க்காடு பதிகத்திலும்,

"உறித்தலைச் சுரையொடு T குண்டிகை பிடித்து"

என்று 3-வது திருக்கானப்பேரூர்ப் பதிகத்திலும்,

"கையிலுண்பவர் கணிகை நோன்பவர் செய்வனதவ
மலாச்செது மதியார்
பொய்யவருரைகளைப் பொருளெனாது"

என்று 3-வது ஸ்ரீ புகலி பதிகத்திலும்,

"அறிவிலாதவன் சமணர்கள் சாக்கியர் தவம்புரிந்தவஞ்செய்வார்
நெறியலாதன கூறுவர் மற்றவை தேறன்மின்"

என்று 2-வது திருமுறை திருவலஞ் சுழி பண் நட்டராகம்பதிகத்திலும் கூறுகின்றார்.

இம்மாதிரி ஜைந (சமண)ர்களை இவர் பலவாறு தூஷித்திருப்பினும் இவைகள் நல்லொழுக்கங்களுக்குக் காரணமென்பதைச் சிறிது கூறுவாம்:—

பரமாத்மஸ்வரூபத்தை அடையவிரும்பியவர்கள் கூட்டுக்கும் புள்ளுக்கும் சம்பந்தமில்லாதிருத்தல் போல யான் என்கிற தன

T. சைவசமய தபஸிகளுக்குக் குண்டிகையில்லை போலும்.

தல்லாத உடலுக்கும், ஆத்மனுக்கும் சம்பந்தமில்லை யென நிலையாமையை நிச்சயித்துப் பார்வைக்கு ஒன்ருகத் தோன்றும் உடலுக்கும் ஆத்மனுக்கும் சம்பந்தமில்லை யென்றும், எனது என்கிற புத்திர மித்திர களத்திராதி பந்துக்களும் ,மண், மனை, தனதான்யாதி பொருள்களும்,

"இன்றுளா ரின்றேயு மாய்வர் அவருடைமை
அன்றே பிறருடைமை யாயிருக்கும்"

என்று அறநெறிச் சாரத்தில் கூறியுள்ளதுபோல பரத்திரவ்யங்களென்றும், முற்றுந் துறந்து, மேல்கூறியுள்ள பஞ்சமகாவிரதம்' பஞ்சசமிதி, தஸதர்மம் முதலான சாரித்திரங்களைப்பெற்று, சரீரம் அழியுந்தன்மை யுடையது ஆத்மன் சாஸ்வதமானது என்றும், புத்கலம் மூர்த்தம் ஆத்மன் அமூர்த்தமென்றும், புத்கலம் அறிவற்றது ஆத்மன் அறிவுள்ளது என்றும் ஆத்மபாவனை செய்யும் அந்தராத்மாக்களாகிய யோகீந்திரர் தமது தேகத்தை வெய்யில், மழை, பனி முதலானவைகளில் பிரதிமாயோகத்தில் நின்று காயக்லேசம் செய்வார்கள். அதாவது அசுசித்வத்தையுடைய தேகம் தனதல்ல வென்று பாவித்து அதை உலர்த்துவார்கள்,இவர்கள் இவ்வாறு தேகத்தை இழிவாகக்கருதுவதை,

"என்பினை நரம்பிற் பின்னியுதிரந்தோய்த் திறைச்சி மெத்திப்
புன்புறந் தோலின் மூடி யழுக்கொடு புழுக்கள் சோரு
மொன்பது வாயிற்றுய வூன்பயில் குரம்பை தன்மே
லன்புறு மாந்தர் கண்டாயறிவினுற் சிறிய நீரார்"

என்று மேருமந்தர புராணம், 116-ம் செய்யுள் விளக்கும்,

இ-ள். "இரத்தத்தை ஊட்டவைத்து நரம்புகளினுல் எலும்புகளைப் பின்னி மாம்ஸத்தை அப்பி அதாவது பூசி மேலே அற்பமாகிய தோலினுல் மூடி மலங்களோடு புழுக்களும் சொரியும் நவத்துவாரங்களையுடைய திணம் சேர்ந்த அசுசித்வத்தை யுடைய சரீரமாகிய குடிசையின் பேரில் ஆசை நீங்காத மனுஷ்யர்கள் ஞானத்திற் குறைந்தவராவார்கள்" என்பதாம்.

ஆகையால் மனையையும், * போகோப போகங்களையும்அநுபவித்து வந்த தேகத்தின் மீதுள்ள பற்றை அறநீக்கிக் காட்டில் சென்று தவம் செய்பவர்கள் தேகபோஷிப்பை விரும்பமாட்டார்கள். பல்துலக்குவது, ஸ்நாநம் செய்வது, நிர்வாணரூபம் தரிக்க நாணமுள்ளவராய்க் S கோவணம் தரித்தல், காஷாயவஸ்திரம்தரித்தல், தலைமயிர் பறித்தலின் கஷ்டத்தினால் சடைவளர்த்தல், மொட்டை யாக்கல் முதலான ஒழுக்கங்கள் தேகத்தின்மீது பற்றுள்ள அற்பகுணங்களையுடையவர்களுக்கே உரியனவாம். இத்தன்மையுடையவர்களின் ஒழுக்கங்கள் போகியொழுக்கங்களாம். இவ்வொழுக்கங்களையுடைவர்களுக்கு மோக்ஷப்பிராப்தி இல்லை யென்பது ஜைந சமய சித்தாந்தத்தின் நிச்சயம். இதை,

"அருகன துருவமில்லா ரகமிந்திரத்துட்டோன்றார்"

என்று மேருமந்தர புராணம் 75-ஆம் கவியினடி கூறுகின்றது.

இ-ள். "அருகத்பரமேஸ்வரனுடைய ரூபமாகிய நிர்க்கிரந்தவம் பண்ணாதவர்கள் (16-கல்பங்களுக்கு மேலுள்ள) நவக்ரைவேயகம் நவாநுதிசை பஞ்சாநுத்தரம் என்கிற அகமிந்திர லோகத்தில் பிறக்கமாட்டார்கள்" என்பதாம்.

நிர்க்கந்தரூபம் தரியாமல் தபம்செய்பவர்கள் 31-32-33. கடற்காலமாயுஷ்யமுள்ள அகமிந்திர லோகத்தைப் பெறுதலில்லை யென்றால் அவைகளுக்கு மேலுள்ள நிலைபெற்ற மோக்ஷத்தை அடையார்க ளென்பதைச் சொல்லவேண்டுமோ?

---

* போக மென்பது—ஒருமுறை அநுவிப்பது; அதாவது: ஆகாரம், புஷ்பம், மாலை, சந்தனம், தாம்பூலம் முதலானவைகளின் அநுபவம்.

உபபோக மென்பது - அநுபவித்ததைப் பலமுறை அநுபவிப்பது; அதாவது: கட்டில், மெத்தை, ஸ்திரீ, வஸ்திரம், ஆபரணம், வண்டி, வாகனம், முதலானவைகளின் அநுபவம்.

S. கௌபீன கண்டவஸ்திரமுடையவர், கௌபீனமாத்திரமுடையவர் ஆகியவர்கள் 11-வது நிலை ஸ்ராவகர்கள் இவர்கள் முற்றுந் துறவாமையினால் வானப் பிரஸ்தரென்று சொல்லப்படுவார்கள்; இவர்கள் வனத்தில் மகாமுனிவர்களிடமிருந்துகொண்டு அவர்களுக்குச்சிஸ்ருஷை செய்பவரும், முற்றுந் துறக்கும் தவத்துக்குரிய சில விஷயங்களை அநுஷ்டிப்பவருமாவார்கள். இவர்கள் சாரித்திரங்களை ஸ்ராவகாசாரத்தைப்பற்றிய விஷயங்கள் வருமிடத்தில் காண்க.

ஆகையால், முற்றுந் துறந்தவர்கள் மற்றவர்கள் செய்யும் வெளித்தேக சுத்தி முதலியவைகளைச் செய்யார்கள். அவர்களுக்கு ஸ்நானம் செய்வதும், ஆடை ஆபரணம், பூமாலை முதலானவைகளை அணிந்து கொள்வதும் வேறுவகையாகக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றை,

"ஒழுக்கநீர் குளித்துடுத் தம்ப ரத்தினை
வழுக்கிலா மாதவச் சாந்து மட்டியா
விழுக்குண மணியணி மேனி சேர்த்தினர்
தொழிற்றொடை சீலமா மாலை சூட்டினர்"

என்று மேருமந்தரபுராணம் 1208-ம் கவி விளக்கும்.

இ-ள். "நல்லொழுக்க மென்னும் ஜலத்தினால் ஸ்நானம் செய்து, திக்குகளை ஆடையாக உடுத்திக்கொண்டு, நழுவுதலில்லாத மகா தபமாகிற சந்தனத்தைப் பூசிப் பெரிதாகிய ஸம்யக்ஞானாதி குணங்களாகிய ரத்னாபரணங்களைச் சரீரங்களில் அணிந்தவர்களாகி, (எல்லையாகச் சேர்ந்த) தொழிலென்னும் சீலாசாரங்களாகிய பூமாலைகளையும் அணிந்து கொண்டார்கள்" என்பதாம். இவை முற்றுந்துறந்தவர்களின் ஒழுக்கங்களாம்.

ஆகையால் மேற்கூறிய சாஸ்திரவிதிகளைக் கொண்டு ஜைநர் (சமணர்)கள், அதாவது முற்றுந்துறந்த ஞானிகள், பல்துலக்குவதாலும், ஸ்நாநம் செய்வதினாலும் ஜலகாயிக ஜீவன்களுக்கு ஹிம்ஸையா மென்றும், உட்கார்ந்துண்பது, சடைவளர்த்தல், மொட்டையாக்கல் முதலானவை சரீர போஷணையின் நிமித்தமாமென்றும், கோவண முதலானவைதரித்தால் அவை கிழிந்து போன சமயத்தில் வேறு வேண்டுமென்கிற சிந்தனையும், அவை கிடைக்காவிடில் அவமான முண்டாகு மென்கிற பற்றும், அதனால் ராகத்துவேஷமு முண்டாமென்றும், ஆகாரம் கொள்வதில் இலையிலுண்பதனால் ஏகேந்திரிய ஜீவன்களுக்கு ஹிம்ஸையும், இலையின் தையல் வாயின்கண் த்வீந்திரிய முதலான ஜீவன்கள் உற்பத்தியாகுமாதலால் அவற்றிற்கு நாசமும் உண்டாகுமென்றும், பாத்திரத்தில் புசிப்பதனால் அதைச் சரியா மார்க்கம் போகும் போது கொண்டு போகவும் அதைக் காப்பாற்றவும் வேண்டு மென்கிற விருப்ப

முண்டா மென்றும் கருதி மேற்கூறியதீயவொழுக்கங்களை யொழித்துஇலை, பாத்திரமுதலான வற்றில் உண்பதில் பற்றற்றவராய், கையிலுண்பது பரிசுத்த மென்று தீர்மானித்துச் சகல பற்றுக்களையும்விட்டுத் தவஞ்செய்வார்கள். பற்றொன்றுடையவர்களானல் முற்றுந் துறந்த முனிவர் தன்மையினுக்கு அது இடையூறு மென்பது ஜைநசமய சித்தாந்தம்.

இதனைத் திருக்குறள் ஆசிரியர்,

"இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து"

என்னும் செய்யுளால் விளக்கிக் கூறியிருக்கின்றார்.

இ - ள். "எல்லாப் பொருள்களையும் விட்டு ஒரு பொருளை விடாத விடத்தும் அது சார்பாக விடப்பட்டன வெல்லாம் மீண்டு வந்து தவத்திற் கிடையூறாக மனக்கலக்கஞ் செய்யும்" என்பதாம்.

இன்னும் ஷை ஆசிரியர், தவவொழுக்கத்தைப்பற்றிக் கூறுமிடத்து,

"உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

என்று கூறுகின்றார்.

இக்தக் குறட்பாவில் 'உற்றநோய் நோன்றல்' என்பது 22-பரிஷகங்களை ஜெயித்தலாம். அதாவது கொசு,ஈ,முதலியன கடித்தலால் உண்டாகும் துன்பங்களைப் பொறுத்தலாம். 'உயிர்க்குறுகண்செய்யாமை, யென்பது ஷட்காய ஜீவன்களுக்குப்பாதையில்லாமல் நடப்பதாம். இவ்விவரங்களைத் தவத்தைப்பற்றிய விஷயங்கள் வருமிடத்துக்காண்க.

ஜீவரக்ஷணையின் பொருட்டே துறந்தவர்கள் மயில் பிஞ்சத்தைத் தரியா நின்றார்கள். இதைப்பற்றி திருஞான சம்பந்தர்.

"ஆலுமயிலின் பீலியமண ரறிவில் சிறுதேரர்"

என்று முதல் திருமுறை திருப்புறவம் பதிகத்தில் நிந்திக்கின்றார்.

மயில் பிஞ்சத்தின் நன்மையைப்பற்றி,

“ ஸர்வப்ராணிஹிதம் ம்ருதூபகரணம் கர்மாணிஸம்ரோதநம்
ஜீவாநாம் பரிவாரணே நாதிகதம் ஶுத்தம் ஸ்வயம் ஶோதநம் ।
விக்யாதம் ஸஹ விஹாவிதம் ஹிதகுணம் காஷ்டாதி பிம்பாதிவத்
சிஹ்நம் ஜைநமதாநுஸாரி யதிநாம் ஸ்ரேஷ்டம் ஹி பிஞ்சம் பவேத் ॥ ”

என்னும் யதியாசார கிரந்த சுலோகம் கூறுகின்றது,

இ-ள். “சர்வ ஜீவன்களுக்கு உபகாரமாயும், மிருதுவான உபகரணமாயும், கர்மங்களைத் தடுப்பதாயும், ஜீவரக்ஷணைக்கு யோக்கியமாயும், பரிசுத்தமானதாயும், தானே பரிசுத்தம் செய்யத் தக்கதாயும், பூமியில் பிரசித்தமானதாயும்,மரபிம்பத்தைப்போல ஹிதமான பிரசித்த குணத்தைப் பாவிக்கத் தக்கதாயும், ஜைனமதத்துக்கு அநுஸரணையாயும், அடையாளமாயிருக்கிற பிஞ்சமானது யதிகளுக்குப் பிரசித்தி பெற்ற அடையாளமாம்.” என்பதாம்.

ஜிநமுனிவர்கள் இருத்தல், கிடத்தல், போதல் முதலான இடங்களில் ஜீவன்களுக்குத் துன்பம் உண்டாகாதிருக்கும்பொருட்டு மயில்பிஞ்சத்தினால் மிருதுவாக விலக்கி ஒழுகுவதற்காகவே பிஞ்சத்தை உபயோகிக்கிறார்கள். ஜீவகாருண்யஞ் சிறிது மிலாத சம்பந்தரைப்போன்ற அழுக்காறுடையாருக்கு இஃது இழிந்தவையாகத் தோன்றும்

இன்னும் முனிவர் நல்லொழுக்கங்களைப்பற்றிய சில முக்கியமான விஷயங்களையுங் கூறுவாம்:

மகா முனிவர்கள் அடியில்கண்ட உபகரண வஸ்துக்களையுடையவராவார்கள்,

அவையாவன:—ஜீவோபகரணம், ஸௌசோபகரணம், ஞானோபகரணம் என்பனவாம்.

ஜீவோபகரண மென்பது-ஜீவன்களை ரக்ஷித்தற்கு ஏற்பட்ட மயில் பிஞ்சமாம்.

ஸௌசோபகரண மென்பது-மலமூத்திராதிகளைச் சுத்தம் செய்வதற்குரிய கமண்டலமாம்.

ஞானோபகரணமென்பது-ஜீவபுத்கலாதிகளின் தத்துவங்களைப் போதிக்கும் சாஸ்திரங்கள்.

முனிவர் இவைகளைக் கொண்டிருக்கும் ஸ்தானம் 6-வது ஸ்தானமாம். இந்த 6-வது குணஸ்தானத்திலிருந்து 7-வது குண ஸ்தானத்தை யடைந்து ஒவ்வொரு குண ஸ்தானங்களாக குண ஸ்ரேணி யேறுங்காலத்தில் அவர்கள் ஆகாராதிகளையும், மேற் கூறிய உபகரணங்களையும் விட்டவராவார்கள்.

இன்னும் தலைமயிர் பறித்தலைப்பற்றித் திருஞானசம்பந்தர்,

"பறித்தலும் போர்த்தலும் பயனிலை பாவிகாள்"

என்று 3-வது திருமுறை திருக்கானப் பேரூர்ப் பதிகத்தில் நிந்திக்கின்றார்.

இவர் நிந்திக்கிறபடி பறித்தல் இழிந்த ஒழுக்கமாகாது என்பதையும், சடை வளர்த்தல், மொட்டையாக்கல் ஆகிய இவைகளே இழிந்தவைகளாம் என்பதையும்,

"மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்"

என்கிற குறட்பாவின் மூலம் ஆசிரியர்விளக்கியிருக்கின்றார். இதனைக் கூடாவொழுக்கத்தில் விரிவாக விவரிப்பாம்.

இவற்றை யெல்லாம் ஆராயுமிடத்து ஜைந சமய சித்தாந்தங்களில் கூறியுள்ள இல்லற துறவற தர்மங்களின் ஒழுக்கங்களையும், ஜீவ புத்கலாதி தத்துவங்களின் உண்மைப் பொருள்களையும் உணராமல், மதத்துவேஷத்தினாலேயே S மித்தியா திருஷ்டியாகிய திருஞான சம்பந்தர் தாமியற்றிய தேவாரத்தில் பலவாறு தூஷித்திருக்கிறாரென்பதும், அந்நூலைக்கொண்டு தூஷிப்பவர்களும் மதிமயக்க முடைய மித்தியாதிருஷ்டிகளாவார்கள் என்பதும் மேல் கண்ட காரணங்களாலறியலாம்.

இன்னும் மகாமுனிவர்கள் மேல்கூறியுள்ள நல்லொழுக்கங்களை யுடைய தபஸ் ஸாமர்த்தியத்தினால் அவதி ஞானம், மனப்பரியய ஞானம், ஆகாஸரித்தி, ஔஷதரித்தி முதலானவைகளை யடைந்திருக்கிறார்கள். அவர்களின் பெருமைகளை மேருமந்தர புராணம் 1096-முதல், 1101-வரையிலுள்ள கவிகள் கூறுகின்றன, அவைகளாவன:—

---

S. மித்தியாதிருஷ்டி யென்பவர் 14 குண ஸ்தானங்களில் முதல் குண ஸ்தான வர்த்திகளாவர். இவர் தன்மையைப் பின்வரும் குண ஸ்தானத்தில் கண்டுகொள்க.

"மலைபனைய நிலையுடைய மாதவர்க ளொருபால்
விலைபமற வெறிதரும விரோசனர்க ளொருபான்
மலைவின் மொழி நிலையு ணல மௌனதர ரொருபா
னிலைபனியின் வெயின் மழையினீங்கவில ரொருபால்"

இ-ள்:—பர்வதம்போல சலனமில்லாதஏகாக்ரத்தியானத்தில் நிலைத்து நிற்கின்ற மஹா தபசையுடையவர் ஒருபக்கம்; ஸம்ஸாரஹேதுவாகிய குற்றங்களெல்லாம் நீங்கும்படி சேதிக்கின்ற பிரகாசம் பொருந்திய உபாத்தியாய குணத்தை யடைந்தவர்க ளொருபக்கம்; மாறுபாடில்லாத தன்மையாகிய தர்மவசனத்தில் நிலைத்திருக்கின்ற மவுன விரதத்தைத் தரிக்கின்றவர்களொரு பக்கம்; பனிக்காலத்தும் கோடைகாலத்தும் வருஷாகாலத்தும் நின்ற யோக நிலையில் நீங்காதவர்களாகிய காயக்கிலேச தபமுடையவர்களொருபக்கம்.

"உக்கதவர் திக்ததவர் தத்ததவ ரொருபான்
மிக்கதவர் கோரதவர் மேவுமிட மொருபான்
தொக்கநல காயமன வசிவலிக ளொருபால்
பக்கமுத ரேனுன்புடைய பரமதவ ரொருபால்"

இ-ள்.—உக்கிர தபசை யுடையவர்களொரு பக்கம்; தீப்ததபசையுடையவர்க ளொருபக்சம்; தப்ததபஸ்வியர்களொருபக்கம்; மகாதபசையுடையவர்க ளொருபக்கம்; கோரதபசை யுடையவர்களொருபக்கம்; தபோரித்தியை யுடையவர்க ளொருபக்கம்; காயபெலிகளும் மனோபெலிகளும் வசன பெலிகளுமாகிய பெலரித்தி பெற்ற முனிவர்களொருபக்கம்; பக்ஷோபவாசம் மாஸோபவாஸாதி விரதங்களையுடைய மேலான தபத்தை யுடையவர்களொருபக்கம்.

"மாசுமலம் வாய்த்திவலை மூக்குடைய மருந்தாம்
பேசரிய பெருந்தவர்களிருந்தவிட மொருபால்
வாசநறு நெய்யமுது பாலமுது வின்மே
லாசையற வுரைசெய்மொழி யருந்தவர்க ளொருபால்"

இ-ள்.—தங்களுடைய சரீரத்தின் மேலாகிய அழுக்குத் துளிகளும் வாயிலுண்டாகிய நீர்த்துளியும் மூக்கிலுண்டாகும் சளியும் ஆகிய இவைகள் பிறர்களின் வியாதிகளுக்கு மருந்தாகின்ற சொல்லுதற்கரிய பெருமையை யுடையஅவுஷதரித்திகளை யடைந்திராகின்ற ஆமௌஷதிப்பிராப்தர், கேளௌஷதி பிராப்தர், ஜல்லௌஷதி பிராப்தர், விப்ரௌஷதிப் பிராப்தர், சர்வௌஷதப் பிராப்தர் ஆகிய தபத்தையுடையவர்களொரு பக்கம்; நறுமணம் பொருந்திய நெய்யன்னம், பாலன்னம் இவற்றின்மேல்

ஆசைநீக்கும்படி சொல்லப்பட்ட தர்ம வசனத்தையுடைய அரிதாகிய க்ஷீரஸ்ரவீணம் முதலாகிய ரஸரித்தியையுடைய தபஸ்வியர்களொரு பக்கம்.

"முதலிறுதிநடுவனொரு பதமதுகொண் டந்நூல்
விதிமுழுது மறிஞர்சிலர் மூலபதமேவி
முதனடுவு முடியவுணர்வார் சம்பின்னமதிகண்
மதியின்புகை பன்னிரண்டின் வருமொழிகளறிவார்"

இ-ள் (ஒருநூலில்) பிரதமத்திலும், அந்தியத்திலும், மத்தியிலும் ஒரு பதத்தைத் தெரிந்து கொண்டு அந்த சாஸ்திரத்தினுடைய கிரமத்தை முழுமையும் அறியும்படியாகிய கோஷ்டபுத்தியுடையவர்களும், 'முதலிலொரு பதத்தைப் பொருந்தி ஆதியும், மத்தியும்,அந்தியமுமாகிய சகல விதிகளையும் அறிபவர்களாகிய பீஜபுத்திகளும், புத்தியதிசயத்தினால் பன்னிரண்டு யோஜனை தூரத்திலிருந்து உண்டாகிவருகின்ற வசனங்களை விவரமாகத் தனித்தனியாகத் தெரிந்து கொள்பவர்களாகிய ஸம்பின்ன ஸ்ரோத்திரத்துவ புத்திபலத்தை யுடையவர்களும்,

"மதியவதி சுதமிருது விபுலமதி ஞானத்
ததிசயர்க ளனகார கேவலிகளொருபால்
விதியிலனு மாதிவிகு வணைவலவ ரொருபான்
மதியின்வரு சாரணரன் மாமுனிவரொருபால்"

இ-ள்—மதிஞான பலமுள்ளவர்களும்ஒருபக்கம்; அவதிஞான முள்ளவர்களொருபக்கம்; சுருதஞான சம்பன்னர்களொருபக்கம்; ருஜு மனப்பரியய ஞானிகளொருபக்கம்; விபுலமதி மனப்பரியயஞானதிசய சமுத் பன்னர்களொருபக்கம்; அநகார கேவலிகளொருபச்கம்; அணிமா முதலாகிய விக்ரியாரித்திப் பிராப்தர்களொருபக்கம்; ஆகாச சாரணத்துவரித்தியை யடைந்த நன்மையாகிய பெருமை பொருந்திய முனிவர்களொருபக்கம்.

"வேதமொரு நான்கையிணைபத்தைகமிகமேவி
யோதுபவர் கேட்பவருரைப்பவர் நிருக்தர்
வாதியர்கள் கற்றமற வாதமதியோர்கள்
மேதகைய சிந்தனைகண் மேவுநர்களொருபால்"

இ-ள்.—சதுர்வேதங்களையும், மிகுதியான வணக்கத்துடன் கூடிப் படிப்பவர்களும், கேட்பவர்களும், பதம்பிரித்துத் தெளியச் சொல்லுகின்ற வியாக்கியான கர்த்தாக்களும், தர்க்க சாஸ்திரம் படித்துத் தத்துவ நிச்சயம் செய்பவர்களும், தாம் கற்ற ஆகமத்தியயனத்தை மறுபடி மறந்து போகாத தாரணமதி ஞானவீரிய வந்தர்களும், மேன்மை பொ

ருந்திய தருமத்தியான சுக்கிலத்தியானங்களைப் பொருந்தி பாவிக்கின்ற ஏகாக்ர சித்த தபஸ்வியர்களும் ஒருபக்கம்'' என்பனவாம்.

மேலே சொன்ன உக்கிரதப மென்பது இரண்டுவிதம். ஒரு உபவாஸமும் பாரணையும், இரண்டுஉபவாஸமும்பாரணையும், மூன்று உபவாஸமும் பாரணையுமாக இவ்வண்ணம் ஏகாந்தர விருத்தியினால் யாவஜ்ஜீவந் அதாவது மரண பரியந்தம் உபவாஸம் பெருகுவது உக்ரோக்ரதபம். தீக்ஷோபவாஸம் பண்ணி பாரணைபண்ணி ஏகாந்தரம் பண்ணி பாதாயினு மொரு நிமித்தத்தினால் வந்த உபவாஸத்தைக் கூட்டி த்ரிராத்ரம் பண்ணுவதும், இந்தக் கிரமத்தினால் யாவஜ்ஜீவம் பெருகுவதும் அவஸ்திதோக்ரதபமாகும்.

இன்னும் மேற்கூறியதித்ததவர், தத்ததவர், மிக்கதவர், கோரதவர் முதலானவர்களுடைய விவரங்களை எழுதப்புகின் பெருகுமென உக்கதவர் விவரத்தை மாத்திரம் மேலே காட்டினோம்-இன்னும் மகாமுனிவர்களின் காற்று ஸ்பரிஸனத்தினால் பிறர்களின் வியாதி நீங்கும்; முகஸ்பரிஸனத்தினால் விஷம் அமிர்தமாகிப்பரிணமிக்கும்; அவர்கள் பார்த்த மாத்திரத்தில் விஷம் நிர்விஷமாகும்; மகா தபோதனர் முனிந்தவை தக்ஷணத்தில் மரணமாகும்; சிலர் பார்த்த க்ஷணத்தில் மரணமாகும்; இத்தன்மையான துறந்தார் பெருமைகள் பதார்த்தசாரம் அனகாரதர்மத்தில் இன்னும் விரிவாகக் கூறப்படுகின்றன. இன்னும் துறந்தார் பெருமையை யதியாசார மென்னும் நூலிலும் பரக்கக்காணலாம்.

இன்னும்,

'' [illegible]
[illegible] ''

என்று அமரசிம்மம் கூறுகின்றது.

இ ள்: ''விக்ரியாரித்தியினால் க்ஷீணமல்லாத சக்தியையுடையவர் ராஜரிஷி யென்றும், புத்தி ஔஷதரித்திகளை யடைந்தவர் பிரம்மரிஷி யென்றும், ஆகாச கமனத்தில் சமர்த்தரானவர் அதாவது ஆகாசத்தில் செல்லும் சாரணரித்தியுடையவர் தேவரிஷி யென்றும், கேவலஞானத்தை யுடையவர் பரமரிஷி யென்றும் ரிஷிகள் நால்வகைப்படுபவர்கள்'' என்பதாம்.

இன்னும்,

“ஸ்ரீ தஶ்ரேணித்வயாரூட்யஷேஸ்ருத க்ஷகேவலா: ।
நிஶ்ரேஷா ஷட்விக்ரு வ்ருஷஸ்வாக்ஷ்ய திக்ஷ-லிக்ஷு நிக்ஷஷிக்ஷு ரோக்ஷ||”

என்று அமரசிம்மம் கூறுகின்றது,

இ-ள்:—“ஏகதேச பிரத்தியக்ஷமாக அவதிஞானத்தினல் அறிகின்றவர் முனிவர், அஷ்டரித்தி ஸம்பன்ன ரானவர் ரிஷிகள் குணஸ்தானத்தில் இரண்டு ஸ்ரேணியை யடைந்தவர் ஜிநயதிகள், கிரஹஸ்தரல்லாதார் (துறந்தவர்) ஸாதுவர்க்கம் என்பதாம்.

மேல்கண்ட பல வகைகளால் உயர்த்திக்கூறப்பட்டிருக்கும் குணங்களையுடையவரைத்தான் நீத்தாரென்று இவர்களின் பெருமையைத் திருக்குறளாசிரியர்,

“துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று”

என்றும்

“குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது”

என்றும்,

“ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்”

என்றும் கூறுகின்றார்.

இந்தக் குறட்பாவின் உரையில் நகுஷனென்னும் அரசன் இந்திரப்பதவி பெற்று அகத்திய முனிவர் சாபத்தால் இடையில் அவ்விந்திரப்பதவியை இழந்தானென்று பரிமேலழகர் கூறுகின்றார். இம்மண்ணுலகத்தில் மானிடர் தவத்தின் பயனால் மறுஜென்மத்தில் இந்திரபதவி பெறுதல் முடியுமே தவிர மானிட சரீரத்துடன் தேவலோகம் அடையமுடியாது. மானிடர் இந்திரப்பதவி பெறுவா ரென்பதும் அதனை இடையில் இழந்துவிடுவாரென்பதும் ஜைநசமய சித்தாந்தத்திற்குப் பொருந்ாதனவாம். இதில் வேந்தன் என்றது மண்ணுலகத்தையாளும் அரசனேயாம்

இன்னும்,

"இறந்தமைந்த சார்புடைய ராயினுமுய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்"

என்றும் திருக்குறளாசிரியர் கூறுகின்றார்.

குறளாசிரியர் மேற்கண்டபடி மகா முனிவர்களின் பெருமையைக் கூறியிருப்பினும் அவர்களுக்குக் கோபமென்பது உண்டாவதே இல்லை. அத்தன்மையுடையவர்களுக்குக் கோபம் உண்டான போது பிறர் கெடுவது மன்றித் தாங்களும் துர்க்கதி பிராப்தி அடைவார்கள் என்பது ஜைநசமயசித்தாந்தம்.

இதனை,

"கோபத்தீக் குடையவோடி நரகத்தைக் குறுகிப்பல்கால்
வேபத்தின் வெதும்பி நின்றெவ்விலங்கினுஞ் சுழன்று"

என்று மேருமந்தரபுராணம் 1004-ம் செய்யுளடிகள் கூறுகின்றன. குறளாசிரியரும், இதைப்பற்றி,

"தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
தன்னையே கொல்லுஞ் சினம்"

என்றும்,

"சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும்"

என்றும் கூறுகின்றார்.

இங்ஙனம் கோபத்தீயானது தன்னையும், தன் இனத்தையும் சுடுமென்று குறளாசிரியர் அருளியதைக் குறித்துச் சிறிது விவரிப்பாம்.

22-வது ஸ்ரீ நேமிதீர்த்தங்கரர் சமவசரணத்துடன் ஒருகாலத்தில் ஊர்ஜயந்தகிரியில் வந்து தங்கினர். சமுத்திரவிஜய மகாராஜா, பலதேவன், கிருஷ்ணன் முதலானவர்கள் சமவசரணம் அடைந்து சுவாமியைத் துதித்தனர். பிறகு பலதேவன் சுவாமி எங்கள் ராஜ்யகால அளவும், கிருஷ்ணனுடையமரணகாலமும் அருளிச்செய்ய வேண்டுமென விண்ணப்பம் செய்தான்.

நேமி பகவானும் இன்னும் 12-வருஷத்திற்குள் கிருஷ்ணனுடைய புத்திரனாகிய தீபாயன குமாரனால் துவாரகை எரிந்து நீறாய்ப் போகுமென்றும், அவனுக்கிளையவனாகிய ஜரத்குமாரனால்

கிருஷ்ணனுக்கு மரணம் சம்பவிக்குமென்றும் அருளிச்செய்தார். அதைக்கேட்டு தீபாயண குமாரன் இனி துவாரகையிலிருக்கலாகா தென்று ஜிநதீக்ஷையைப்பெற்று தபோவனமடைந்தான். ஜரத்குமாரனும் துவாரகையை விட்டு வெளியே போய்விட்டான்.

தவத்தையடைந்த தீபாயண முனிவர், மலைமாதமதிகமிருப்பதை யறியாது 12-வருஷம் கழிந்ததென்று துவாரகையடைந்து இரவு பிரதிமாயோகத்தில் நிற்கச் சிலதுஷ்டர்கள் வந்து மதுபான மயக்கத்தால் அவரை ஹிம்ஸிக்க அவர் சகிக்கமாட்டாது அதிக கோபமடைந்தார். அசுபபரிணாமோதயத்தால் அவருடைய இடது புஜத்தில் கோழிச்சுடர்போல அக்னி உண்டாகி முழுதும் வியாபித்து துவாரகையை தகித்துவிட்டது. அதுசமயம் பலதேவனும் கிருஷ்ணனும் தங்களாலானமட்டும் சமுத்திர ஜலத்தினால் நெருப்பை அணைக்கப்பார்த்தும் முடியாமல் அதைவிட்டு ஒரு காட்டில் தங்கியிருந்தார்கள். அப்போது கிருஷ்ணன் வியாதி பீடிதனாகி அவனுக்குத் தாகம் மேலிட்டது. பலதேவன் ஜலம் கொண்டுவரப் போனான்.

முன் வெளியே போயிருந்த ஜரத்குமாரன் காட்டில்வந்திருக்கும் சமயத்தில் கிருஷ்ணனும் தனிமையாக கால்மேல் கால்போட்டுக் கொண்டிருக்கும்போது மிருகமென்று கருதித்தனதுபாணத்தாலவனை யடித்துவிட்டுச் சமீபம் போய்ப்பார்க்க கிருஷ்ணனும் மூர்ச்சையாயிருந்தான். அதைக்கண்டு ஜரத்குமாரன் அதிக துக்கத்தை அடைந்திருக்க, கிருஷ்ணன் மூர்ச்சைதெளிந்து, தனது குமாரனால் சேர்ந்ததுணர்ந்து தன்கழுத்திலிருந்த ஹாரத்தை அவனிடம் கொடுத்து பாண்டவர்களிடம் சென்று துவாரகைஅழிந்து போன விஷயங்கள் யாவும் சொல்லி ஒருபட்டணம் வாங்கிக்கொள்ளென்று அவனை அனுப்பிவிட்டான். ஜரத்குமாரனும் தென்மதுரையிலிருந்த பாண்டவர்களிடம் சென்று நடந்த விவரங்களெல்லாம் சொல்ல, அவர்களும் சமுத்திர சமீபத்தில் ஒருபட்டணத்தை நிர்மித்து அதற்கு துவாரகையென்று நாமமிட்டு ஜரத்குமாரனுக்கு பட்டாபிஷேகம் செய்துவைத்து ஜிநதீக்ஷையைப் பெற்றார்கள். பலதேவனும் ஜலம் கொண்டுவந்து கிருஷ்ணன்காலில் பாணம் தைத்திருப்பதைக்கண்டு பாணத்தைப் பிடுங்க கிருஷ்ணன் மரணமடைந்தான். தீபாயண முனிவரும் துர்க்கதியடைந்தார். இவ்விவரங்களை பாண்டவபுராணத்தில் விரிவாகக்காணலாம்.

18வது தீர்த்தங்கரர் காலத்தில் மித்தியாதபஸியாகிய ஜமதக்கினி முனிவர் தம்பத்னி ரேணுகையுடன் தபோவனத்தில் போக வாஞ்சையுடன் செல்கின்ற காலத்தில் இவ்விருவர்க்கும் இந்திரராமன், ஸ்வேதராமன் என இரண்டு புத்திரர்கள் உற்பத்தியாய் வளர்ந்து வந்தார்கள். அப்படி வளர்ந்து வருங்காலத்து ரேணுகைக்கு முன்பிறந்த ராஜகுமாரன் அரிஞ்செய ரென்பார் சம்மியக் திருஷ்டியாகி ஜிநதீக்ஷையைப் பெற்றுத்தபோவனம் சென்றார். அவரை ரேணுகை யறிந்து நமஸ்கரித்து பக்தியுடன், "அடிகளே! என்னை என்நாதருக்கு மணம் செய்விக்குங் காலத்தில் உங்களாலென்ன எனக்கு ஸ்ரீதனம் தரப்பட்டது' என்று வினவ, முனிவரும் அது பொழுது ஒன்றும் தரப்பட்டதில்லை யென்று ஜீவனோபாயமாக வித்தியாரூபத்தினால் சுரபியொன்றும், அதற்கு ரக்ஷணையாக பரஸு (வாள்) ரூபமாக * மந்திரத்தினையும் கொடுத்துப் போயினர். அதனால் அவர்கள் வனத்தில் ஜீவித்து வந்தார்கள். ஒரு நாள் சகஸ்ரபாகு, கிருதவீரராஜன் முதலான சைன்னியங்கள் வனத்தில் வந்திருக்க, அவர்களுக்கு ஜமதக்னி முனிவரும், ரேணுகையும் சுரபியினால் விருந்து செய்விக்கவும், கிருதவீரராஜன் சுரபியின்மீது விருப்பமுடையவனாய் ரேணுகை சமீபமடைந்து சுரபியைக் கேட்க, ரேணுகை சம்மதியாமையால் சுரபியை கிரகித்துக் கொண்டு போனான். அவ்வாறு போகையில் எதிரில் வந்தஜமதக்னி முனிவர் அவனைத் தடுக்க, அவன் அவரைக் கொலைசெய்து சுரபியைக் கொண்டுபோனான். வனசஞ்சாரமாகப் போய்வந்த இந்திரராமன்,ஸ்வேதராமன் ஆகிய இருவரும் பித்ருமரணத்தினையறிந்து கோபாக்னியால் சகஸ்ரபாகு, கிருதவீரன் முதலானவர்களுடைய

---

* மந்திரமென்பதனை தொல்காப்பியர்,

> "நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த,
> மறைமொழிதானே மந்திரமென்ப"

என்று பொருளதிகாரம் 490 ஆம் சூத்திரத்தில் கூறுகின்றார்.

இதற்கிணங்க குறளாசிரியரும்,

> "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
> மறைமொழி காட்டி விடும்"

என்று கூறுகின்றார்.

இவ்விரண்டு செய்யுட்களின் கருத்துக்களால் ஆசிரியர்கள் இருவரும் ஜைநர் என்பதை நன்கு அறியலாம்.

வம்ஸத்தினை இருபத்தொருவாரம் நாசம்செய்து, ராஜ, யுவராஜாக்க ளாக ராஜ்ஜியத்தினை அனுபவித்துவந்தார்கள். இராஜாவாகிய இந் திரராமன் பரிக்ரஹீதபரஸுபாணியாதலின் இவனுக்கு பரஸுராம னென்று காரணப்பெயராயிற்று. இந்தப் பரசுராமரும், ஸ்ரீராமரும் விஷ்ணுவின் அவதாரமென்றும், ஸ்ரீராமரிடம் பரசுராமர் அபஜய மடைந்தாரென்றும் வைணவநூல்கள் கூறும் கூற்றும். * ஜமதக்னி, பரசுராமன் முதலானவர்களுடைய சரித்திரத்தினை ஸ்ரீ புராணம் 18-வது தீர்த்தங்கரர் பகுதியில் விரிவாகக் காணலாம்.

மேற்கூறியபடி மகாமுனிவர் பார்த்த க்ஷணத்தில் விஷம் நிர் விஷமா மென்பதையும், முனிந்தவுடன் தக்ஷணம் மரணமா மென் பதையும், தீபாயண முனிவரின் கோபத்தால் துவாரகை முதலான வைகள் நாசமடைந்ததாலும், அரிஞ்செய முனிவரின் அருளால் விரும்பியவற்றைக் கொடுக்கும் சுரபியும், வாளும் மந்திரபலத்தால் ரேணுகை பெற்றதாலும் உணரலாம். இத்தன்மையான குணங்களை யுடைய தவத்தினர்வல்லமையைக்குறித்துத்திருக்குறள் ஆசிரியர்,

"ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்"

என்று கூறியிருத்தலும் உணர்க,

இன்னும் புத்கலத்தின் சுபாவமும், ஜீவனுடைய தன்மையும், ஜீவ புத்கல தர்மாதர்ம ஆகாச கால மென்னும் ஷட்திரவ்யங்கள் நிறைந்தது உலக மென்பதும் ஆகிய தத்துவங்களை,

"சுவை யொளியூ றோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு"

என்னும் திருக்குறளால் ஷை ஆசிரியர் விளக்குகின்றார்.

இ - ள். "சுவை-ரசமும், ஒளி-(பார்வை), பிரகாசமும், ஊறு-ஸ்பரி ஸமும், ஓசை-சத்தமும், நாற்றம் - கந்தமும், என்று-என்று சொல்லப் பட்ட, ஐந்தின்-(ஐம்புலனுக்கும் பிரதானமாகிய மெய், வாய்,கண், மூக்கு,

* ஜமதக்னி முனிவருடைய புத்திரர் தொல்காப்பிய இலக்கணம் இயற்றியவரென்பதும், அவர் தொல்காப்பியர், திரணதூமாக்னி யென் னும் இயற்பெயர்களையுடையவரென்பதும் தொல்காப்பியத்தின் முகவுரை யில் எழுதப்பட்டிருக்கின்றன. திருக்குறளாசிரியரைப்பற்றிக் கூறும் போலிக்கதையைப்போல் இத் தொல்காப்பியர் கதையும் போலித்தன மான கதையேயாம். ஜமதக்னி முனிவருடையகாலம் ஸ்ரீ ராம லக்ஷ்மணர் காலத்திற்கும் பல்லாயிரவருஷங்களுக்கு முற்பட்டதென்பது ஜைநசமய சித்தாந்தம்.

**செவியென்னும்)(வர்ண, ரஸ, கந்த, ஸ்பரிஸங்களுடன் கூடிய) புத்கலத்தினது, வகை-கூறுபாடுகளை, தெரிவான் கட்டே-ஆராய்ந்தறியும் ஞானியினிடத்தே, உலகு-உலகத்தினது தத்துவம் விளங்கும்'' என்பதாம்.**

புத்கலமென்பது-அணுத்திரள். அணுவும் வர்ண, ரஸ, கந்த, ஸ்பரிஸங்களுடையது; சத்தமென்பது புத்கலஸ்கந்தங்களில் உண்டாகா நின்றது; புத்கலத்தினது கூறுபாடாவது ஸ்தூலஸ்தூலம், ஸ்தூலம், ஸ்தூலஸூக்ஷ்மம், ஸூக்ஷ்மஸ்தூலம், ஸூக்ஷ்மம், ஸூக்ஷ்ம ஸூக்ஷ்மம் என ஆறுவித ஸ்கந்தங்களாம். 'தெரிவான் கட்டே',யென்றதனால்,ஜீவபுத்கலசம்பந்தமுள்ளபுருடனைக்குறித்துக் காண்பித்தலால் அவன் தெரிதற்குக் காரணமாகிய ஜீவபுத்கலங்கள் செல்லல்,நிற்றல் இவ்விரண்டிற்கும் ஏதுவாகிய தர்மாதர்மமும்,செல்லல்,நிற்றல் இவைகட்கு இடந்தரும் ஆகாயமும், ஜீவபுத்கலங்கள் உற்பத்தி, ஸ்திதி, விநாசம் இவைகளைக்குறிக்கும் காலமும் ஆகியவைகள்நிறைந்தது உலகமாம் என்பதும், இவ்வித ஜீவ, புத்கல, தர்ம, அதர்ம, ஆகாய, காலம் ஆகியதத்துவங்களை அறியும் ஞானியினிடத்தே உலகம் அடங்கியிருக்கிறது என்பது பொருளாம்.

ஆதலின், ஷட்திரவ்வியங்களின் தத்துவங்களும், அவற்றில் மூர்த்தா மூர்த்தங்களும், சேதனா சேதன சுபாவங்களுமுள்ள ஜீவபுத்கலாதிகளின் விவகார நிச்சய ஸ்வரூபங்கள் முதலான தத்துவங்களை அறிந்து ஒழுகுவது நீத்தார் பெருமையாம்.

மேற்கூறிய ஜீவபுத்கலாதி தத்துவங்களைத் திருக்குறளாசிரியர் பிராகிருத பாஷையில் இயற்றியுள்ள ப்ராப்ரதத்ரய மென்னும் நூலில் பஞ்சாஸ்திகாயம், பிரவசனஸாரம், ஸமயஸாரம் என்பவைகளில் விரிவாகக் கூறியுள்ளார். அவற்றிலும், வேறு நூல்களிலும் வரும்விஷயங்களை இதனடியில் சிறிது விவரித்துக் காட்டுவாம்:—

'சுவை யொளியூ றோசை நாற்றமென் றைந்தின்,' என்ற குறளில் புத்கலத்தின் சுபாவத்தைப்பற்றி கூறியதற்கிணங்க ஆசிரியர்,

"𑌵𑌂𑌣𑌰𑌸𑌗𑌂𑌧𑌫𑌾𑌸𑌾 𑌵𑌿𑌜𑍍𑌜𑌂𑌤𑍇 𑌪𑍋𑌗𑍍𑌗𑌲𑌸𑍍𑌸 𑌸𑌹𑍁𑌮𑌾𑌦𑍋 । 𑌪𑍁𑌢𑌵𑍀𑌪𑌰𑌿𑌯𑌂𑌤𑌸𑍍𑌸 𑌯 𑌸𑌦𑍍𑌦𑍋 𑌸𑍋 𑌪𑍋𑌗𑍍𑌗𑌲𑍋 𑌚𑌿𑌤𑍍𑌤𑍋 ॥"

என்று பிரவசனஸாரம் 142-ம் சுலோகத்தில் கூறுகின்றார்.

**இ - ள்: "பரமாணுரூப ஸூக்ஷ்ம ஸூக்ஷ்ம முதலாக ப்ரத்வீரூப பாதரபாதர (ஸ்தூலஸ்தூல) ஸ்கந்தபரியந்தமாகிய புத்கலத்திரவ்வியத்தி**

னுக்குவர்ணரஸகந்த ஸ்பரிஸயங்களுள;பாவநாத்மகாதி ஈனுபேத பின்ன மாகிய அந்தப்பிரசித்தமாகிய சத்தமும் புத்கலஸ்கந்தத்தினுலே நிஷ்பன்னமாம் (உண்டாகிறது)" என்பதாம்.

பரமாணு முதலாக மகாஸ்கந்த பரியந்தம் வர்ணரஸ கந்த ஸ்பரிஸ சதுஷ்டய குணங்களும் சாமான்னியம் அவ்யவஹிதம் (பிரிவில்லாதன); ஸப்த மென்பது புத்கலத்தினுடைய ஸ்தூலபரியாய மாகையினுல் ஸ்கந்தங்களிலன்றிப்பரமாணுக்களுளில்லை என்பது இதனது தாத்பரியம்.

புத்கலத்திரவ்வியத்தினுக்கு ஸ்வபாவமாயுள்ள வர்ண ரஸ கந்த ஸ்பரிஸங்களின் விவரங்களாவன:—

வர்ணமாவது:—

ஸ்வேதவர்ணம் ...வெண்மை.
பீதவர்ணம் ...மஞ்சள்.
ஹரிதவர்ணம் ...பச்சை.
அருணவர்ணம் ...சிவப்பு.
கிருஷ்ணவர்ணம்...கருப்பு,

ஆகவர்ணம்—5.

ரஸமாவது:—

திக்தரஸம் ...கசப்பு [ப்பு)
கடுகரஸம் ...கார்ப்பு (உறை
கஷாயரஸம் ...துவர்ப்பு
ஆம்பலரஸம் ...புளிப்பு
மதுரரஸம் ...தித்திப்பு.

ஆகரஸம்—5

(லவணம் சேர்ந்து ரஸனேந்திரியத்தாலறிவது ஷட்ரஸம்:)

கந்தமாவது:—

சுகந்தம் ...நறுமணம்,
துர்க்கந்தம் ...கெட்டநாற்றம்,

ஆக கந்தம் 2.

ஸ்பரிசமாவது:— [தல்.

ஸ்நிக்தஸ்பரிஸம்...வழுவழுத்
ரூக்ஷஸ்பரிஸம் ...சருச்சரை.
சீதஸ்பரிஸம் ...குளிர்ச்சி.
உஷ்ணஸ்பரிஸம்...வெப்பம்.
குருஸ்பரிஸம் ...கனம்.
லகுஸ்பரிஸம் ...லேஸ்.
மிருதுஸ்பரிஸம்...மிருது.
கர்க்கசஸ்பரிஸம்...கடினம்.

ஆக ஸ்பரிஸம் 8.

இன்னும் புத்கலத்தைப் பற்றி ஆசிரியர்

" ദേഹോ യ മണോ വാണീ പോഗ്ഗലദവ്വപ്പഗത്തി
ണിദ്ദിട്ഠാ । പോഗ്ഗലദവ്വം ഹി പുണോ പിണ്ഡോ പരമാ
ണുദവ്വാണം ॥ "

என்று பிரவசனசாரம் 173-ம் சுலோகத்தில் கூறுகின்றார்.

இ-ள். "சரீரமும், மனமும், வசனமும் என்ற இவை புத்கல ஸ்கந்தாத்மக்க வென்று சொல்லப்பட்டன; புத்கலஸ்கந்தமென்பது பாமாணு திரவ்யங்களுடைய சமூகரூபம்" எம்ன்பதா.

இன்னும் **ஆறுவித** ஸ்கந்தங்களைப்பற்றி **ஆசிரியர்,**

“𑌪𑍃𑌥𑍍𑌵𑍀 𑌜𑌲𑌂 𑌚 𑌛𑌾𑌯𑌾 𑌚𑌤𑍁𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯 𑌵𑌿𑌷𑌯 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 ।

𑌕𑌰𑍍𑌮𑌾𑌤𑍀𑌤𑌾𑌶𑍍𑌚𑌵𑌂 𑌷𑌡𑍍𑌭𑍇𑌦𑌾𑌃 𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥”

என்று பஞ்சாஸ்திகாயம் 83-ம் சுலோகத்தில் கூறுகின்றார்.

இ-ள்: “பிரத்வியும் (மண்), ஜலமும், சாயையும் (நிழல்), சக்ஷுஸ், (கண்) ஆகிய வர்ஜிதங்களாகிய நாலு இந்திரியங்களுடைய விஷயமும், கர்மவர்க்கணை ரூபங்களும், கர்மப்பிராயோக்கியங்களல்லாதனவும் ஆகிய * ஆறுபிரகாரங்களையுடையன புத்கல ஸ்கந்தங்கள்” என்பதாம்.

ஆறுபிரகாரங்களையுடைய புத்கல ஸ்கந்தங்களுக்கு முதன்மையாயிராநின்றனவும், லோகமுழுமையும் நிறைந்துள்ளனவும் அணுக்களாம்.

இதனை,

“ஊறிரண்டாகி நாற்றம் வண்ணமுஞ் சுவையுமொன்றாய்க்
கூறிரண்டாக்கலாகா தன்மைத்தா யளவைக் கெல்லாம்
பேறுதன் வழியதாகிப் பிறங்கிமூ வுலகமுற்று
மாறுகந் தங்கட்காதி யாகிய தணுவதாமே”

என்று மேருமந்தர புராணம் 86—ஆம் கவி கூறுகின்றது,

இ-ள். “அணுவானது, அஷ்டஸ்பரிஸங்களுள் ஸ்நிக்தபரமாணுவுக்கு ஸ்நிக்தஸ்பரிஸமும், சீதஸ்பரிஸமும், ரூக்ஷபரமாணுவுக்கு ரூக்ஷஸ்பரிஸமும் உஷ்ணஸ்பரிஸமுமாக இரண்டிரண்டு ஸ்பரிஸங்களையுடையதாகி, என்றதனால் (மற்றகுரு, லகுமிருது, கர்க்கச மென்னும் நாலு ஸ்பரிஸங்களும் ஸ்கந்தங்களிடத்திலுள அணுவுக்கில்லை யென்பதுபெறப்படும்) சுகந்தம் துர்க்கந்தங்களிலும் பஞ்சவர்ணங்களிலும் பஞ்சரசங்களிலும் ஒவ்வொன்றையுடையதாகி, அதாவது ஒருகந்தம் ஒருரஸம் ஒருவர்ணத்தையுடையதாகி, கேவலஞானத்துக்கும் இரண்டுகூறு படுக்க முடியாத ஸூக்ஷ்மமாகி, (த்ரவ்ய க்ஷேத்திர கால பாவ) அளவைகளுக்கெல்லாம் பெறற்பாடு தனது வழியாலாகி, மூன்று லோகத்தில் முழுமையும் நிறைந்து, மேல்சொன்ன ஆறுஸ்கந்தங்கட்கும் முதலாயிரா நின்றது’ என்பதாம்.

---

* ஆறுபிரகாரங்களாகிய புத்கல ஸ்கந்தங்களின் **விவரங்கள் மேல்** 26-வது பக்கத்தில் விளக்கமாக எழுதப்பட்டிருக்கின்றன; கண்டுகொள்க.

புத்கலத்தினது ஆறுவித ஸ்கந்தங்களில் ஸ்தூல ஸ்தூலமென்பது மண் கல் முதலானவைகள்; மண்வகைகளிலும் செம்மண் கருப்புமண்ணென்கிற வர்ணபேதங்களும், உவர்ப்பு துவர்ப்பு முதலான ரஸங்களும், சுகந்தம் துர்க்கந்த முதலான கந்தங்களும், மிருதுகடின முதலான ஸ்பரிஸங்களு முள்ளன. இவற்றைப்போலவே கல்வகைகளாகிய பச்சை, சிவப்பு, சுண்ணும்புக்கல், பர்வதாதிகள் முதலானவற்றிற்கும் வர்ணரஸகந்தஸ்பரிஸங்கள் முதலான ஸ்வபாவங்களுள்ளன. இன்னும் ஸ்தூல மென்பது ஜலதைலாதிகளுமாம். இவைகளிலும் மேல்கூறியுள்ள வர்ணமுதலான நான்கு குணங்களுள்ளன.

இன்னும் புத்கலத்தின் தன்மையைப்பற்றி,

> "நாற்ற புஞ் சுவையு மூறும் வண்ணமுந் தன்மைத்தாகிப்
> போற்றல்பூ ரித்தல் வாட லுடையதாப் புற்கலந்தான்
> மாற்றிடை யுயிரைப்பற்றி வினைமுதலாகித் துன்ப
> மாற்றவும் செய்து கந்த மணுவுமாய் நிற்பதாமே"

என்று மேருமந்தரபுராணம் 83-ம் கவி கூறுகின்றது.

இ-ள். "புத்கலமானது கந்தத்தையும், ரஸத்தையும், ஸ்பரிஸத்தையும், வர்ணத்தையும் தன்னுடைய சுபாவத்தினுல் அல்லது நிச்சயத்தினுலுடையதாகிக் கூடுவதும், நிரம்புவதும் பிரிவதுமாகியவைகளை பரியாயத்தால் அல்லது விவகாரத்தா லுடையதாகி, சம்ஸாரத்தில் வர்த்தியாநின்ற சம்ஸார ஜீவன்களைப் பிடிக்கின்ற ஞாணவரணுதி அஷ்டகர்மங்களுக்கு ஆதாரமாகி, துக்கங்களை மிகவும் உண்டுபண்ணி ஸ்கந்தங்களாகவும் அணுக்களாகவுமாகி இருப்பது" என்பதாம்.

ஆகையால் ஜீவனுடைய தன்மையைப்பற்றி,

> "വംണ രസ പംച ഗംധാ ദോ ഫാസാ അംഠ ണിംഛയാ ജീവേ।
> ണോ സംതി അമുത്തി തദോ വവഹാരാ മുത്തി ബംധാദോ॥"

என்று திரவ்ய சங்கிரஹம் 7-ம் சுலோகம் கூறுகின்றது.

இ-ள் ஜீவனிடத்தில் ஐந்துவர்ணங்களும், ஐந்துரஸங்களும் இரண்டு கந்தங்களும், எட்டுஸ்பரிஸங்களும் நிச்சயத்தினுல் இராநின்றதில்லை; ஆகையால் ஆத்மா அமூர்த்தியாகாநின்றான்; விவகார நயத்தினுல் ஆத்மா (வர்ணுதிநான்கு குணங்களுடைய) புத்கல பந்தமுடையவனுகும்" என்பதாம்.

இவை இங்ஙனமிருப்ப,

பரிமேலழகர், சுவை யொளி யூ றோசை நாற்றமென்றைந்தும் பஞ்சதன் மாத்திரைகளென்றார். பஞ்சதன் மாத்திரைக ளென்பவை எவை யெனச் சைவசமய நூலொன்றை ஆராய்ந்ததில், மூலப் பிருகிருதியின் தமோ குணத்திற்கு ஆவரணம் விக்ஷேபம் என இரண்டு சத்திகள் உண்டென்றும், இவ்விரண்டில் விக்ஷேபசத்தியினின்றும் சத்ததன் மாத்திரையான ஆகாசந் தோன்றிற்று, ஆகாசத்தினின்றும் ஸ்பரிஸதன் மாத்திரையான வாயு தேன்றிற்று, வாயுவினின்றும் ரூபதன் மாத்திரையான அக்கினிதோன்றிற்று, அக்கினியினின்றும் ரஸதன்மாத்திரையான அப்புத்தோன்றிற்று, அப்புவினின்றும் கந்ததன் மாத்திரையான பிரத்வீ தோன்றிற்று, இந்தசூக்ஷ்மபஞ்ச பூதத்திற்குக் காரணமாயிருக்கின்ற விக்ஷேபசத்தியினிடத்திலே தமஸில் சத்துவம், தமஸில் ரஜஸ், தமஸில் தமஸ் என்னுமிவை அற்பங்கருவாக விருந்தபடியால் அதன் காரியமாகிய இந்தத் தன் மாத்திரைகளான பஞ்சபூதங்களும் முக்குணங்களுடனே பிறந்தன வென்றும் இந்தப்பஞ்சபூதங்கட்குத் தன்மாத்திரைகளென்றும், அபஞ்சீகிருத பூதங்களென்றும், சூக்ஷ்ம பூதங்களென்றும், முக்குண பூதங்களென்றும் சாஸ்திரங்களில் நாமங்கள் சொல்லப்படு மென்றும் அந்நூல் கூறுகின்றது.

ஆகலின் இந்தப் பஞ்சதன் மாத்திரையைத்தான் குறளாசிரியர் கூறியுள்ளதாகப் பரிமேலழகர் தமது கருத்துட்கொண்டு, சுவையொளியூறோசை நாற்றமென்றைந்தும் பஞ்சதன் மாத்திரைகளென்றும், அவற்றில் தோன்றிய நிலம் நீர் தீ காற்று ஆகாயமென்னும் பூதங்களைந்தும், அவற்றின் கூறுகிய மெய்வாய் கண் மூக்கு செவியென்னும் ஞானேந்திரியங்களைந்தும், வாக்கு பாதம் பாணிபாயுரு(மலவழி)உபஸ்தமென கர்மேந்திரியங்களைந்தும், ஆக இருபதுமாம்; வகை தெரிவானென்றதனால் தெரிகின்றபுருடனும் அவன் தெரிதற்குக் காரணமாகிய மான்(புத்தி) அகங்காரம் மனம் எனப்பட்டவையும் கொள்ளப்படும் என்றும், இவ்விருபத்தைந்து தத்துவக் கூட்டமல்லது உலகெனவேறில்லை யென்றும், உலகினது இருப்பை யறிதலால் அவ்வறிவனிடத்ததாயிற்று என்றும் கூறியிருக்கின்றார்.

தவிர,

"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீ முரணிய நீரு மென்றாங்
கைம்பெரும் பூதத்தியற்கை போல"

என்று புறநானூறு. 2-ல் கூறுகின்றது.

இச்செய்யுளில் அணுச்செறிந்த நிலத்தினின்றும் ஆகாயம் தோன்றிற்றென்பது கூறப்படுகின்றது. மேற்கூறியவற்றில் ஆகாயத்தினின்றும் காற்று முதலாக ஒவ்வொன்றாய்த்தோன்றிக் கடைசியில் நிலந் தோன்றிய தென்பது கூறப்படுகின்றது. இவைகளில் ஒன்றுக்கொன்று மாறுதலாக விருக்கின்றது. இவை எத்தன்மையாக விருந்தபோதிலும், பஞ்சதன்மாத்திரைகள் ஒன்றனுளொன்று தோன்றியதென்பது அமைகின்றது.

ஆனால் குறளாசிரியர், தாமியற்றிய பஞ்சாஸ்திகாயம், பிரவசனஸாரமுதலான ஆகமங்களில் புத்கலத்தைப்பற்றி விரிவாகக் கூறியுள்ள விஷயத்தைச் சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் என்கிற இலக்கணப்படி திருக்குறளில், 'சுவை யொளி யூறோசை நாற்ற மென்றைந்தின்' என்பதில் வர்ணரஸகந்த ஸ்பரிஸங்கள் புத்கலத்தின் சுபாவமென்றும், சப்தமென்பது புத்கலத்தின் பரியாயமென்றும் கூறியுள்ளார். இதனை மேல் (171-ம்) பக்கத்தில், பிரவசனஸாரம் 142-ஆம் சுலோகத்தால் ஐயமறத் தெளியலாம்.

இவற்றைக்கொண்டு ஜீவசம்பந்தமுள்ள ஏகேந்திரியமுதல், பஞ்சேந்திரியம் வரையிலுமுள்ள புத்கலத்ரவ்வியமும், நிலம், நீர் கல்முதலான உலகத்திலுள்ள உயிரல்லாத புத்கலங்களும்,வர்ணரஸ கந்த ஸ்பரிஸங்களோடு இயற்கையாய் அமைந்துள்ளன வென்னும் நோான கருத்தைத் திருக்குறளாசிரியர் அருளினரென்பதை அறிஞர்கள் நன்குணர்ந்துகொள்வதோடு அவர் கூறியவை ஒன்றனுளொன்று தோன்றியதாய்க் கூறும் பஞ்சதன்மாத்திரைக ளல்ல வென்பதையும் எளிதில் உணரலாம்.

இதுவரையில் லோகமுழுமையும் அணுக்கள் முதலானபுத்கல ஸ்கந்தங்கள் நிறைந்த தென்பதையும், அவற்றின் தன்மையையும் கூறினோம். இனி லோகமுழுமையும் ஜீவன்கள் நிறைந்துள்ள தென்பதையும், ஜீவபுத்கலங்கள் முதலான ஷட்திரவியங்கள் நிறைந்து

லோகமென்பதையும் விவரிப்பதுடன் ஜீவாதி தத்துவங்களையும் சிறிது விளக்கிக் காட்டுவாம்.

லோக முழுமையும் ஜீவன்கள் நிறைந்துள்ளனவென்பதைப்பற்றி,

“இந்திய மொன்றினு லுலக மெங்குமா
யைந்தினு னுளிகை யகத்து வாழுமே
யந்தினை டிரண்டரை தீப மாழிமூன்
றிந்திய நான்குமூன் றிரண்டி னெல்லையே”

என்று மேருமந்தர புராணம் 79-ம் கவி கூறுகின்றது.

இ - ள். “ஏகேந்திரிய ஜீவன்களினல் இந்த உலகமாகியது343-ரஜ்ஜுப்பிரமாணமுமாகா நின்றது; பஞ்சேந்திரிய ஜீவன்களால் த்ரஸநாளிகைக்குள் வாழாநிற்கும் அந்நியத்திவிராகின்ற ஸ்வயம்புரமணுர்த்த த்வீபத்தோடு இரண்டரை த்வீபமும் மகாலவண காளோதகஸ்வயம்புரமணமென்னும் மூன்று சமுத்திரங்களும், சதுரிந்திரிய ஜீவன்களினுடையவும் த்ரீந்திரிய ஜீவன்களினுடையவும் த்வீந்திரிய ஜீவன்களினுடையவும் பிறப்பு ஸ்தானங்கள்” என்பதாம்.

பஞ்சாஸ்தி காயத்தைப்பற்றிக் குறளாசிரியர்,

“ 𑌜𑍀𑌵𑌾 𑌪𑍋𑌗𑍍𑌗𑌲𑌕𑌾𑌯𑌾 𑌧𑌮𑍍𑌮𑌾𑌧𑌮𑍍𑌮𑌾 𑌤𑌹𑍇𑌵 𑌆𑌯𑌾𑌸𑌂 ।
𑌅𑌤𑍍𑌥𑌿𑌤𑍍𑌤𑌮𑍍𑌹𑌿 𑌯 𑌣𑌿𑌯𑌦𑌾 𑌅𑌣𑌣𑍍𑌣𑌮𑌇𑌯𑌾 𑌅𑌣𑍁𑌮𑌹𑌂𑌤𑌾 ॥ ”

என்று பஞ்சாஸ்திகாயம் 4-வது சுலோகத்தில் கூறுகின்றார்.

இ-ள். “ஜீவாஸ்திகாயங்களும், புத்கலாஸ்திகாயங்களும் தர்மாஸ்திகாயமும் அதர்மாஸ்திகாயமும் ஆகாசாஸ்திகாயமும் என்னும் பஞ்சாஸ்தி காயங்கள் தத்தம் சாமான்னிய விசேஷாஸ்தித்வங்களுள் நின்றன; இவைகள் யாவராலும் பண்ணப்படாதன; பிரதேசங்களால் பெரியனவாம்” என்பதாம்.

இந்த ஜீவாதி நாமங்கள் அநாதி சித்தாந்த பதங்களும், குண நாமங்களுமாம். அஸ்தித்வயுக்தங்களும் அணுவினலளக்கப்பட்ட காரணத்தினல் *பிரதேசத்தினை அணுவென்றார் மேலோர். ஜீவாதி

* மண்டிணிஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்”

என்று மணிமேகலை பாத்திரம் பெற்ற காதை 95-ம் வரி கூறுகின்றது.

இதன் கருத்து “அணுக்கள் செறிந்த நிலவுலகத்தில்” என்பதாம்.

இங்ஙனம் உரையாசிரியர் கூறியுள்ளது ஜைநசமய சித்தாந்தத்திற்கு ஒத்திருத்தல் காண்க.

இதற்கிணங்க,

“மண்டிணிந்தநிலனும்”

என்று புறநானூறு 2-ல் கூறுகின்றதும் உணர்க.

பஞ்ச பதார்த்தங்கள் அவ்வண்ணமாகிய பிரதேசங்களின் பெருத்வத்தினை யுடையனவாகையினால் அஸ்திகாயங்களென்று கூறப்பட்டன. புத்கலபரமாணுவினுக்கு வெகு பரமாணு பந்தசக்தியோகத்தினால் ஔபசாரிகமாகிய (உபசாரசம் பந்தத்தினால்) பெருப்பிரதேசத்தினை யுடைத்தாகையினால் அஸ்திகாயத்வம் அவிருத்தம்; சக்தியினாலும் வியக்தியினாலும் காலாணுவினுக்கு த்விதியாதிப்பிரதேசமில்லை; ஆதலால் காயத்வமில்லை. அதுகாரணத்தினால் ஜீவாதிபஞ்சகத்தினுக்கே அஸ்திகாயத்வம் சொல்லப்பட்டதென்பது இதனது தாத்பரியம்.

இன்னும்,

" . . . . . . . 'ஐந்தாம்

பம்பத்திகாயம் பணித்தபிரான் பசுந்தாமரைத்தாள்''

என்று திருநூற்றந்தாதி 23-ம் செய்யுள் கூறுகின்றது.

இ-ன், ஐந்தாகிய கணக்கையுடைய * பஞ்சாஸ்திகாயத்தை விதித்தகடவுள்'' என்பதாம்.

இன்னும்,

ஜீவபுத்கலங்களின் கதி ஸ்திதி முதலானவைகளுக்குக் காரணமாகிய தர்மாதர்ம ஆகாச காலங்களைப்பற்றிக் குறளாசிரியர்,

---

* பஞ்சாஸ்திகாயம்-பஞ்ச-ஐந்து-அஸ்திகாயம்,(ஸ்திரம்)திரம்.

இதனைத் தொல்காப்பியம் சிறப்புப் பாயிரத்தில் பனம் பாரனார் ''ஐந்திரநிறைந்த தொல்காப்பியன்''எனக் கூறியிருத்தலால் விளக்கியிருக்கின்றார். ஐந்திரமென்பது-ஐந்து-பஞ்ச, திரம்-அஸ்திகாயமெனவும்பொருளாம். ஆதலின் ஐந்திரநிறைந்த தொல்காப்பியன்என்பது பஞ்சாஸ்திகாய முதலான தத்துவங்கள் நிறைந்த தொல்காப்பியர் என்று பொருளாம். ஆனால் மேல் 94-வது பக்கமுதல் 96-வது பக்கம் வரையில் இவ்விஷயம் கூறப்பட்டிருப்பதில் ஐந்து என்பது பஞ்சாஸ்திகாய மெனவும், திறமென்பதுதத்துவமெனவும் பொருள் செய்துள்ளேன். ஆயினும் ஐந்திரமெனினும் ஐந்திற மெனினும் ஒக்கும். இஃது பஞ்சாஸ்திகாய மெனப் பொருளுரைக்கப் பொருந்துமே தவிர ஐந்திரவியாகரணமெனச் சொல்லுதற்குப் பொருத்தமாகாது. ஏனெனின் தொல்காப்பியரைப் படிமையோன்என்று கூறியிருப்பதால் அதாவது அசைவற்று நின்று தவம்செய்யும்பிரதிமாயோகத்தையுடையவர் என்று சொல்லியிருப்பதால் அத்தன்மையுடையவரைத் தத்துவங்களை நிறைய அறிந்தவரென்று சொல்லுதலே பொருத்தமாம்.

"𑌲𑍋𑌗𑌾 𑌲𑍋𑌗𑍇𑌸𑍁 𑌣𑌹𑍋 𑌧𑌮𑍍𑌮𑌾𑌧𑌮𑍍𑌮𑍇𑌹𑌿𑌂𑌆𑌦𑌦𑍋𑌲𑍋𑌗𑍋 । 𑌸𑍇𑌸𑍇 𑌪𑌡𑍁𑌚𑍍𑌚𑌕𑌾𑌲𑍋 𑌜𑍀𑌵𑌾 𑌪𑍁𑌣 𑌪𑍋𑌗𑍍𑌗𑌲𑌾 𑌸𑍇𑌸𑌾 ॥"

என்று பிரவசனஸாரம் 147-ஆம் சுலோகத்தில் கூறுகின்றார்.

இ - ள். "ஆகாசத்ரவ்யம் ஜகஸ்ரேணியினுடைய (343) ரஜ்ஜுக னப் பிரமாணப்பிரதேசமாத்திரமாகிய லோகஸ்வரூபமும் அதனிற்புறம் புஅநந்தாநந்த ப்ரதேசப்ரமிதமாகிய அலோக ரூபமுமாய் இருக்கின் றது; ஜீவபுத்கலங்களுடைய கதிஸ்திதி, ஹேதுக்களாகிய தர்மாதர்மங்க ளால் வியாபிக்கப்பட்டது. லோகமென்பது; சேஷங்களைக்குறித்துத் தன் னுடைய சமயாவளிகாதிகள் (சமயம் ஆவளி முதலான காலபேதம்) பிர வர்த்திக்கும் (உண்டாகும்) காரணத்தினுல் காலத்ரவியமும் லோகத்துன் இருப்பதாம்; இங்குச் சொன்ன சேஷங்களென்பனயாவை யெனில்,ஜீவத் ரவ்யங்களும், புத்கலங்களும் ஆகிய இவையே. இவை சேஷசப்தத்தினுற் சொல்லப்பட்டன: இக்காரணத்தினுல் ஜீவபுத்கலத்ரவ்யங்களும் அவற்றி னுடைய கதிஸ்திதிகளுக்குக் காரணங்களான தர்மாதர்மத்ரவ்யங் களும் அந்தஜீவபுத்கலவர்த்தனுஹேதுவாகிய காலத்ரவ்யமும் எவ்வளவு ஆகாஸ ப்பிரதேசத்துளிருக்குமோ அதுவே லோகமென்று சொல்லப்படும் என் பதாம்.

மேற்காட்டியபடி ஷட்திரவ்யங்கள் நிறைந்தது உலக மென் றும்,தொல்காப்பியர் ஜைநரென்றும் கூறியிருக்க, அவர்,

"நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்க முலகம்"

என்று கூறியதாக தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல் 89-ஆம் சூத்திரமும், அதற்கு,

"நிலனும் தீயும் நீரும் காற்றும் ஆகாயமு மென்னும் ஐம்பெ ரும் பூதமுங் கலந்த கலவையல்லது உலகமென்பது பிறிதில்லாமை யின் அவற்றைச் சொல்லுமாறு சொல்லாது" என்ற பொருளும் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன. இவை ஜைநமதத்திற்குப் பொருந்தாதனவாம்.

ஏனெனின் தொல்காப்பியர் ஜைநராதலால் மேற்கூறிய கருத் தைக் கொண்ட சூத்திரத்தைச்செய்யார்; பிற்காலத்திருந்த புற மதத்தினர் தங்கள் கருத்திற்கிசைந்தவாறு மேற்படி சூத்திரத்தை மேற்கண்டவாறு திருத்திப் பொருளுரைத்திருக்கின்றனர். தொல் காப்பியர்,

"நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த துலக மயக்கம்"
என்றே இச்சூத்திரத்தைச் செய்திருப்பார்.

இ - ள். "(நிலந்தீ நீர்காற்று ஆகாயமென்னும்) ஐம்பெரும் பூதங்களும் கலந்தது-சேர்ந்தது, உலகம் - உலகமென, (மக்கள்) கூறுதல் மயக்கம்-அறியாமை" என்பதாம்.

இன்னும், நிலம், தீ, நீர் காற்று முதலான புத்கலங்களின் தன்மையைப்பற்றி,

"கருமநல் லுபசயங் காய நோகமம்
மருவிய புலமவத்து போகங் காரண
மிருள்வெயி லொளியொலி நிழனற் பூதமாய்த்
திரிவுடைப் புற்கலந் தான வேனே"

என்று மேருமந்தர புராணம் 87-ம் கவி கூறுகின்றது.

இ - ள். "ஞானவரணாதிகருமங்களும் நன்றாகிய தாது உபதாதுக்களும் S. ஔதாரிகாதி பஞ்ச சரீரங்களும் நோகர்ம வர்க்கணைகளும் சேர்ந்திராநின்ற பஞ்ச இந்திரியங்களும் இந்திரிய விஷயவஸ்துக்களும் போக உபயோகவஸ்துக்களும் தர்மார்த்தகாமத்துக்குக் காரணவஸ்துக்களும் இருட்டும் வெயிலும் பிரகாசமும் சப்தமும் நிழலும்(பிரத்வீ அப்பு தேயுவாயு) என்னும் நான்கு பூதங்களுமாய் திரவ்யகுண கிரியாவிகாரங்களையுடைய புற்கலங்கள் அஜீவனாகும் என்பதாம்.

ஆதலால் மேல் கூறியுள்ளதுபோல நிலம், தீ, நீர், வளி முதலான நான்கு பூதங்களும் அஜீவ புத்கல ஸ்கந்தங்களாம். இவைகளும் ஷட்திரவ்யங்களி லொன்று; ஆகாயமென்பதுவும் ஷட்திரவ்யங்களிலொன்று. இதுவும் சகல திரவ்யங்கட்கும் இருப்பிடத்துக்கு இடந்தரக் கூடியதாம்.

---

S. ஔதாரிகாதி பஞ்சசரீரங்களாவன-ஔதாரிகசரீரம், வைக்ரீயிகசரீரம், ஆஹாரகசரீரம், தைஜஸசரீரம், கார்மணசரீரம் என்பனவாம், இவற்றின் விவரங்களை,

"புக்கிலமை ந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சிலிருந்த வுயிர்க்கு"

என்னும் குறட்பாவைப்பற்றிய விஷயங்கள் வருமிடத்துக்காண்க.

ஆகையால் சைவவைணவ சமய சித்தாந்தங்களில் உள்ளது போல ஆகாயம், வாயு, அக்னி, நீர், நிலம் முதலானவைகளைத் தொல்காப்பியர் அம்முறைப்படியும் அருளவில்லை, இவ்வைந்தும் ஒன்றனுள் ஒன்ருகத் தோன்றினவாகவும் கூறவில்லை யாதலாலும் ஐம்பெரும் பூதங்கள் கலந்தவை உலகமெனக்கூறுதல் மக்களின் மருளென மறுத்திருப்பதாலும், ஜீவ, புத்கல, தர்ம, அதர்ம, ஆகாச, காலமென்னும் ஷட்திரவ்யங்களுடன் சிலவற்றை அடியில் கண்ட சூத்திரத்தில் சுட்டிக்காட்டியுள்ளதாலும், ஐம்பெரும் பூதமுங் கலந்தவை உலகமெனக்கூறினரென்பது கிஞ்சித்தும் பொருந்தாமையாம்.

அவர் ஷட்திரவ்யங்களுடன் சிலவற்றைச் சுட்டிக் காட்டியுள்ளா ரென்பதை விவரிப்பாம்:

"கால முலக முயிரே யுடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கட் சொல்லென வரூஉம்"

என்று சொல்லதிகாரம் 57—வது சூத்திரத்தில் கூறுகின்ருர்.

இச்சூத்திரத்திற்குச் சேனவரையர் தாம் செய்த உரையில் காலமென்றது காலக்கடவுளை யென்றும், உலகமென்றது ஈண்டு மக்கட்டொகுதியை யென்றும், உயிரேயுடம்பேயெனப் பொது வகையாற் கூறினரேனும் மக்களுயிருமுடம்புமே கொள்ளப்படுமென்றும், பால்வரை தெய்வமென்பது எல்லார்க்குமின்பதுன்பத்திற்குக் காரணமாகிய இருவினையையும் வகுப்பது என்றும், வினையென்பது அறத்தெய்வ மென்றும், சொல்லென்பது நாமகளாகிய தெய்வமென்றும் கூறியிருக்கின்ருர். பூதமென்பதற்கு பூதம் புடைத்தசென்பது தவிர வேறு பொருள் கூறவில்லை. ஆகையால் மேற்கூறியுள்ள கருத்துக்கள் பொருத்தமல்ல வென்பது விளங்கும். இதனடியில் விவரித்திருக்கும் கருத்துக்களாலும் அதனை உணரலாம்.

உயிரே யென்பதற்கு ஜீவனும், உடம்பேயென்பதற்கு புற்கலமும், பால்வரை தெய்வமென்பதற்கு ஜீவபுத்கல மிரண்டினுக்குஞ்செல்லல் நிற்றல் இவைகளுக்குக் காரணமாகிய தர்மாதர்மமும், உலகமென்பதற்கு சகல திரவ்வியங்கட்கும் இருப்பிடத்துக்கு இடந்தரக்கூடிய ஆகாயமும், காலமென்பதற்கு உற்பத்தி

ஸ்திதி விகாஸங்களுக்கு வர்த்தனை ஏதுவாகிய காலத்திரவ்வியமும், வினையே யென்பதற்கு ஞானவரணாதி அஷ்டகர்மங்களும், பூதமென்பதற்கு பிரத்வி அப்பு தேயு வாயு முதலான அஜீவ புத்கலஸ்கந்தங்களும், சொல்லென்பதற்கு அனுத்திரள் என்பதும் பொருள்களாம்.

சொல்லெனினும் மொழியெனினு மொக்கு மாதலால் நன்னூலாசிரியர்,

"மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி"

என்று 58-ஆம் சூத்திரத்தில் கூறுவதுங்காண்க.

மேல்பக்கத்தில் பால்வரைதெய்வமென்பதற்கு ஜீவபுத்கலங்கள் செல்லல் நிற்றல்எனப் பொருள்படுத்தியுள்ளது; அதற்கிணங்க

"யாவராயினு நால்வரைப் பின்னிடிற்
றேவ ரென்பது தேறுமிவ் வையகம்"

என்று சீவக சிந்தாமணி 249-ஆம் கவியினடிகள் கூறுகின்றன.

இ-ள்: "இழிந்தோராயினும் அவர்பின்னே நால்வரைத் திரியச்சொல்லுவாராயின் அவரைப் பால்வரை தெய்வமென்னும் தன்மையை இவ்வையகம் தேறும்" என்பதாம்.

திரிதலுடையவர்க்கு நிற்றலும் சொல்லல் பொருந்தும். ஆதலின் இவைகளுக்குப் பால்வரை தெய்வமெனக் கூறுதல்போல தொல்காப்பியர் பால்வரை தெய்வமென்பதுவும் நடத்தல் நிற்றல் இவைகளுக்குஞ் சொல்லியது பொருத்தமாம்.

மேற்கூறியுள்ள காரணங்களால் தொல்காப்பியரும் சைவவைணவசமயத்தில் கூறும் உலகத்தின் ஸ்வரூபத்திற்கு வேறுபட்டும், ஜைநசமயத்தின் சிந்தாந்தங்களை விளக்கியு முள்ளாரென்பதை நண்பர்கள் நன்குணர்ந்து கொள்ளலாம்.

இன்னும் ஷட்திரவியங்களைப்பற்றி,

"சேதன மிதர மாயுஞ் செல்வன நிற்ப வாயு
மேதுவி னியல்பி னரும் விகாரியாய் விகாரி யின்றி
யோதிய வுருவ மாகி யிதரமா யுலக மாகி
நீதியாற் பொருள்க ணின்ற நிலைமையை நினைத்து நின்றான்"

என்று மேருமந்தரபுராணம் 788-ஆம் கவி கூறுகின்றது.

இ-ள்: "ஜீவத்ரவ்யம் சேதனமாகியும், மற்றவைந்தும் அசேதனத்ரவ்யமாகவும், ஜீவபுத்கலத்ரவ்யங்கள் கமன சக்தியுள்ளனவாயும், மற்ற நான்குத்ரவ்யங்களும் ஸ்திரபரிணமத்தையுடையன வாயும், திரவ்யங்கள்

ஒன்றுக்கொன்று ஹேது வாகுந்தன்மையினுல் ஸ்வபாவகுணத்தில்உண்டாகும் விவகாரநயத்தால் ஜீவபுத்கலத்ரவ்யமிரண்டும் விபாவ பரியாய முற்றுப் பலவிகாரத்தன்மையுடையனவாயும், மற்ற நான்கும் விபாவபரியாயமில்லாமல் அவிகாரித்ரவ்யங்களாயும், சொல்லப்பட்ட புத்கலத்ரவ்யமொன்றுமே ரூபத்ரவ்யமாகியும், மற்றவைகள் அரூபத்ரவ்யமாகியும், இந்த ஷட்திரவ்யங்களே ஒன்று சேர்ந்து லோகமாயும், தன் தன் குண பரியாய நீதிக்கிரமத்தால் உத்பாதவியத்ரௌவ்யயுக்தமாகி, சத்ஸ்வரூபமாய், ஜீவபுத்கலதர்மாதர்ம ஆகாசகாலமென்னும் ஷட்திரவியங்களாகிய பொருள்களும் நின்ற தன்மையை அதாவது அதனதன் நிச்சயகுணத்தன்மையைத்தியானித்து (ஹெயஸ்வரூபத்தியாகமும் உபாதேயஸ்வரூபஸ்வீகாரமும்செய்து) நின்றான்'' என்பதாம்.

இது மேருமந்தர புராணத்தில் சக்ராயுத முனிவர் தியானத்தைப்பற்றிக் கூறியுள்ளதாகும்.

ஹெயஸ்வரூபத்தியாகமென்பது புத்கலாதி பரத்திரவ்வியங்களைத் தனதல்லவென்று விடுதல்.

உபாதேயஸ்வரூபஸ்வீகாரமென்பது தனது அந்தராத்மன் பரஞ்சோதிமயமாகிய பரமாத்மஸ்வரூபத்தை ஸ்வீகரித்தல்

உத்பாதவியத்ரௌவ்வியமென்பது உற்பத்திவிநாச ஸ்திதியாம்.

உற்பத்தி விநாசஸ்திதியைப் பற்றி,

"ஜாம்வ[illegible] ஜாயம்[illegible]॥
[illegible] ॥ "

என்று பஞ்சாத்தியாய் 196-ஆம் சுலோகம் கூறுகின்றது.

இ-ள்: "சுவர்ணம் பிண்டமாயிருக்குங்காலத்தில் எப்படியிருக்கின்றதோ அப்படியே குண்டலமுதலான ஆபரணவஸ்துக்கள் அதினின்றும் உற்பத்திவிநாஸஸ்திதிகளை யடையுங்காலத்திலும் இரா நின்றது'' என்பதாம்.

சுவர்ணமானது கடுக்கன், கங்கணமுதலான ஆபரணங்கள் உண்டாகுங் காலத்தில் எப்படி யிருக்கின்றதோ அப்படியே பிற்பாடு அந்த ஆபரணுதி வஸ்துக்கள் விநாசமானுலும் ஸ்திரமாக விருப்பதுபோல ஆத்மன் அநேக ரூபங்களில் உற்பத்தி விநாசங்களடைந்தாலும் ஸ்திரமாயிருக்கின்றான் என்பது இதன்கருத்து

இத்தகைய ஆத்மனுடைய விவகார நிச்சயஸ்வரூபங்களைப் பற்றிக் குறளாசிரியர்,

“ பாணேஹிம் சதுஹிம் ஜீவதி ஜீவஸ்ஸதி ஜோ ஹு ஜீவிதோ புவ்வம்।
ஸோ ஜீவோ பாணா புண பலமிந்திய மாஉ உஸ்ஸாஸோ॥ ”

என்று பஞ்சாஸ்திகாயம் 30-ஆம் சுலோகத்தில் கூறுகின்றார்.

இ-ள்: “ஜீவன் நாலு பிராணன்களாலும் (நிகழ்காலத்தில்) ஜீவியா நின்றது; (எதிர்காலத்து) ஜீவிக்கவேண்டியிருக்கிறது; (இறந்தகாலத்தில்) ஜீவித்துவந்தது. நிருபசாரவிருத்தியினுல் (உபசாரவிருத்தி இல்லாமையால்) அது ஜீவனென்னப்பட்டது. அந்த நாலு பிராணன்களென்பன யாவையெனில், பலப்பிராணன், இந்திரியப் பிராணன், ஆயுஷ்யப்பிராணன், உச்வாஸநிச்வாஸப்பிராணன் என்பவையாம். அவற்றுள் மனோ, வாக், காய, பல பேதத்தினுல் பலப்பிராணன் மூன்று விதமாம்; ஸ்பரிஸ,ரஸ, க்ராண, சக்ஷு, ஸ்ரோத்ரேந்திரிய பேதத்தினுல் இந்திரியப்பிராணன் ஐந்து விதமாம். ஆயுஷ்யப்பிராணனும் உச்வாஸநிச்வாஸப்பிராணனும் பிரத்யேகம் ஒவ்வொருவிதமாம். இவ்வண்ணம் பேதிப்பதால்பிராணன்கள் பத்துவகையாம்; அவைதத்தமது கர்மங்களின் உதயத்தினுலான காரணத்தினுல் ஏற்பட்ட அனுபசரிதாஸத்பூத (அநாதிகாலமாக அனுபவித்துக்கொண்டு வருகிற) விவகார நயத்தினுல் ஆத்மனுடையஸ்வரூபங்களாகியும், சுத்த நிச்சய நயத்தினுல் ஆத்மனில் அத்யந்தம் பின்னங்களாகியுமிருப்பனவாம்” என்பதாம்.

விவகாரமென்பது - ஆத்மன்புத்கலாதி தஸப்பிராணனுடன் வர்த்திப்பது. நிச்சய மென்பது-தஸப்பிராணன் தபாக்னியால் நாசமடைந்து ஆத்மன் இயற்கையான கேவலஞானுதி பரஞ்சோதி ஸ்வரூபத்தை யடைவது.

நான்கு பிராணன்முதலாக தஸப்பிராணன் பரியந்தமுள்ள பிராணன்களின் விவரங்களாவன:—

| | | |
|---|---|---|
| பாதர ஏகேந்திரியம் சூக்ஷ்ம ஏகேந்திரியம் } இவைகளுக்கு- | ஸ்பரிஸனேந்திரியப் பிராணன் | 1 |
| | காயபலப் பிராணன் | 1 |
| | ஆயுப் பிராணன் | 1 |
| | சுவாஸோச்வாஸப் பிராணன் | 1 |

ஆகப் பிராணன்கள் 4

த்வீந்திரியம்-மேல் நான்கு பிராணன்களுடன் ரஸனேந்திரியப்பிராணன் 1

வசனபலப் பிராணன் 1

ஆகப் பிராணன்கள் 6

த்ரீந்திரியம்-மேல் 6-பிராணன்களுடன் கிராணேந்திரியப்பிராணன் 1

ஆகப் பிராணன்கள் 7

சதுரிந்திரியம்-மேல் 7-பிராணன்களுடன் சக்ஷுரிந்திரியப்பிராணன் 1
ஆகப் பிராணன்கள் 8
அஸஞ்ஜி பஞ்சேந்திரியம்-மேல் 8 பிராணன்களுடன். ஸ்ரோத்ரேந்திரியப் பிராணன் 1
ஆகப் பிராணன்கள் 9
ஸஞ்ஜிபஞ்சேந்திரியம்-மேல் 9 பிராணன்களுடன் மனோபலப்பிராணன் 1
ஆகப் பிராணன்கள் 10

ஆதலின் தசப்பிராணன்களுடன் ஜீவிப்பவன் ஆத்மா. S இவ்வேழுவகைகளும் எழுபிறப்பென்று சொல்லப்படும். ஆத்மாவானவன் மேல்கூறியுள்ள எழுவகை இந்திரியங்களிலும் கர்மங்களின் காரணத்தால் அநேக ரூபங்களாக ஜனிக்கின்றான். இவ்வேழுக்கும் பரியாப்தி அபரியாப்திபேதத்தினால் ஜீவஸ்தானம் 14. ஆம். இன்னும். மார்க்கணாஸ்தானம் 14. ஆம், இவ்விவரங்களை மக்கட்பேறு அதிகாரத்தில் விளக்கமாக விவரிப்பாம்.

இன்னும் ஆசிரியர்,

"ணா ஹூ தெஹொ ண 8ணாண வெவாணி ணகாண தெ வி।
கு தாண ஹிகாரஷயா ஜண ஷ்தா ணெவ கு தீ ண॥"

---

S இந்த எழுபிறப்பைக்குறித்துக் குறளாசிரியர்,

"ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு"

என்று கூறுகின்றார்.

இன்னும்,

"எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்"

என்றும் கூறுகின்றார்.

இந்தக் குறட்பாவில் கூறியுள்ள எழுபிறப்புவேறாம்.

இன்னும்,

"ஒருமைக்கட்டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து"

என்று கூறும் எழுபிறப்பு வேறாம்.

இன்னும் எழுபிறப்பைப்பற்றி ஆசிரியர் பலவிடங்களிலும் கூறியுள்ளார்.

இவைகளைமக்கட்பேறு அதிகாரத்தில் விவரிப்பாம்.

என்று பிரவசன ஸாரம் 172-ஆம் சுலோகத்தில் கூறுகின்றார்.

இ-ள்: " யான் தேகம் அல்லன்; மனமும் அல்லன்; வசனமும் அல்லன்; அந்த காய மனோவசனங்களுக்குக் காரணமுமல்லன்; அவையிற்றைப்பண்ணுபவனும், அவற்றைப் பண்ணுவிப்பனும் அல்லன்; அந்த காயாதிகளைப் பண்ணுமவர்களுக்கு உடன்படுபவனுமல்லேன்" என்பதாம்.

சம்ஸ்லேஷ (கூட்டுறவு) ரூபத்தினால் அநேக காயசித்த வசனங்களுக்கு ஆத்மன் காரிய காரணாதி ரூபனல்ல வென்ற விடத்துப் பின்னப்பிரதேசவர்த்திகளாகிய புத்திர மித்திரகளத்திர தன தான்னியாதிகள் ஆத்மனுக்கு என்ன சம்பந்தமென்பது இதனது தாத்பரியம்.

இன்னும்,

" ஏகொ மே ஸாஸ்வத ஸ்ராத்மா ஜ்ஞாநத்ருஷ்டி லக்ஷணः ।
ஶேஷாவஹி ஸ்துவா பாவா: ஸர்வே ஸம்யோக லக்ஷணா: ॥ "

என்று கிரியா புஸ்தகம் ஸாமாயிகபக்தி 9-ஆம் சுலோகத்தில் கூறுகின்றது.

இ-ள்: " ஆத்மாவானவன் ஒருத்தனும், கேடில்லாதவனும், ஞான தர்ஸன லக்ஷணத்தையுடையவனுமாம். ஆத்மாவுக்கு வேறான புத்கலாதி பதார்த்தங்கள் பாகியத்திலுண்டானவைகள். சமஸ்தபாகிய வஸ்துக்களும் கூட்டுறவை லக்ஷணமாக வுடையன" என்பதாம்.

இன்னும் வர்ண, ரஸ, கந்த, ஸ்பரிஸ, சத்தம், ஸ்திரீலிங்கம், புருஷலிங்கம், நபும்ஸகலிங்க முதலான பரத்திரவ்வியங்களினின்றும் வேறாகிய சுத்த ஜீவனைப்பற்றிக் குறளாசிரியர்,

S " அரஸமரூவ மகந்தம் அவ்வத்தம் சேதணா குணமஸத்தம் ।
ஜாண அலிங்கக்கஹணம் ஜீவமணித்திட்ட ஸம்ஹாணம் । "

என்றுபிரவசனஸாரம் 181-ஆம் சுலோகத்தில் கூறுகின்றார்.

இ-ள்: " சுத்த ஜீவத்திரவ்வியம் பஞ்சரஸங்களினின்றும் அகன்றதாகையினால் அரஸமும், பஞ்சவர்ணங்களினின்று மகன்ற தாகையினால் அரூபமும், இரண்டு கந்தங்களினின்று மகன்ற தாகையினால் அகந்தமும்,

---

S இதைக்கொண்டு ஆசிரியர் இந்த சுலோகத்தில் அருளியுள்ள கருத்தையே திருக்குறளில் கூறியுள்ளாரென்பதும், சுவையொளியூறோசை நாற்றமென்றது-வர்ண,ரஸ, கந்த, ஸ்பரிஸம், சத்த முதலானவைகளே யென்பதும் என்னைப் போன்ற சாமன்னிய படிப்பாளிகளுக்கும் நன்கு தெளிவாம்.

அஷ்டஸ்பரிஸங்களினின்று மகன்றதாகையினல் அவ்யத்தமும், நாஞவித சத்தங்களினின்று மகன்றதாகையினல் அஸத்தமும், ஸ்வபாவகாரியாதிபகுப்பிரகாரங்களாகிய லிங்கங்களால் பரிச்சித்தியாதொன்றிற் இல்லை யாகையினல் அலிங்கக்ஹணமும், * சமசதுராதி ஸம்ஸ்தான நிர்தேசங்களில்லை யாகையினல் அனிர்திஷ்ட ஸம்ஸ்தானமும் விசேஷாரூபசேதன குணஸ்வபாவ மாகையினல் சேதனகுணமும் உள்ளதென்றறிக” என்பதாம்.

சேதன குணமாகியஸ்வபாவகுணமே ஆத்மன்; சகலமூர்த்தாமூர்த்தங்களாகிய அசேதனபதார்த்தங்களினின்றும் ஆத்மா விடுபட்டதென்பது இதனது தாத்பரியம். மூர்த்தம்-புத்கலம், அமூர்த்தம்-தர்மாதர்ம ஆகாசகாலமுதலானவை.

இதனை நன்னூலாசிரியரும்,

“உணர்விய லாமுயி ரொன்று மொழித்து
உடல்முத லனைத்து முயிரில் பொருளே”

என்று 450 ஆம் சூத்திரத்தில் கூறுவதும் உணர்க.

இன்னும்,

“ [illegible] ।
[illegible] ॥”

என்று பரமாத்மப்பிரகாஸம் 26 ஆம் சுலோகமும் கூறுகின்றது.

இதன் சாயை ஸம்ஸ்கிருதத்தில்,

“ [illegible] ।
[illegible] ॥”

என்பதாம்.

இ-ள்: “முத்திக்ஷேத்திரத்தில் கர்மரஹிதனுகவும், ஞானஸ்வரூபியாகவுமிருக்கிற எந்த பரமாத்மாவானவன் வசிக்கிருனே அப்படிப்பட்ட

---

* சமசதுராதி ஸம்ஸ்தானமென்பது-சமசதுரஸம்ஸ்தானம், நியக்ரோதஸம்ஸ்தானம், ஸ்வாதி ஸம்ஸ்தானம், வாமன ஸம்ஸ்தானம், குப்ஜஸம்ஸ்தானம், ஹுண்ட ஸம்ஸ்தானம் என ஆறுகும். இவைகள் சரீர ஆக்ருதி (வடிவு) களாம். இவற்றின் விவரங்களை கர்மஸ்வருபத்தில் கண்டு கொள்க.

பிரம்மஸ்வரூபனாக விருக்கிற உத்கிருஷ்டமான * பரமாத்மாவானவன் உன்னுடைய தேகத்திலே வசிக்கிறான்; சித்தபகவானுக்கும், உன் ஆத்மனுக்கும் வேறு பிரிவினையைச் செய்யவேண்டாம்.'' என்பதாம்.

இதன்படி அஷ்டகர்மங்களையும் நிர்மூலஞ்செய்த உத்கிருஷ்ட பரமாத்மாவாகிய சித்தபரமேஷ்டி அஷ்டகுணங்களுடன் கூடியிருக்கிறான். அத்தன்மையாக பரமாத்மஸ்வரூபத்தையடையுந்தன்மையுள்ள ஜீவாத்மன் பாலினுள் நெய்கூடியிருப்பது போன்று சக்திரூபத்தினால் தேகத்தில் நிறைந்திருக்கிறான். பால் தயிராகித்தயிரைக் கடைந்தபோது நெய் வேறு பிரிவது போல ஞானாமிர்தத்தை(பாலில் புரைகுத்தினாற்போல) குருவசனங்களால் மனதில் பொருத்தி (தயிரைக்கடைந்து சிதிலமாகச் செய்வதுபோல) தவத்தினது தியானத்தினால் சகல கர்மங்களையும் சிதிலமாகச்செய்து கர்மத்தையும் ஆத்மாவையும் பிரதக் (வேறு வேறு) செய்தால் சக்திரூபத்தால் புத்கலத்துடன் கூடியிருந்த ஆத்மன் வியக்தியாகின்றான்; அதாவது ஆத்மன் கர்மத்தைவிட்டு வேறுபட்டுப் பரஞ்சோதி ஸ்வரூபத்தை அடைந்து மோக்ஷமடைகிறான், அதாவது சித்தபரமேஷ்டி குணங்களை அடைகிறான்.

இத்தகைய ஜைநசமயதத்துவங்களை பஞ்சாஸ்திகாயம், பிரவசனசாரம், சமயஸாரம், பதார்த்தஸாரம், கோமடஸாரம், ஆத்மப்பிரகாஸம், திரவ்யசங்கரஹம், சமயஸாரநாடககலஸம், தத்துவார்த்தசூத்ர முதலானபல நூல்களில் பரக்கக்காணலாம்.

மேல்கூறியுள்ள மேற்கோள்களால், "சுவை யொளி யூறோசை நாற்றமென்றைந்தும்'' என்றது-புத்கலத்தினது தன்மையை யென்பதும், "தெரிவான் கட்டேயுலகு'' என்றது ஜீவபுத்கல முதலான ஷட்திரவ்யங்கள் நிறைந்ததே லோகமாதலால் அந்த ஷட்திரவ்யங்களில் மூர்த்தா மூர்த்த, சேதனா சேதன ஜீவபுத்கலங்களின் விவகார நிச்சயஸ்வரூபங்கள் முதலான தத்துவங்களை ஆராய்ந்து தேகம், நிலையாமை, நோய், மூப்பு, சாக்காடுடையதென்

* "நல்ல குலத்திற் பிறந்து நல்லாரைச் சேர்ந்தொழுகி
நல்லறிவு பெற்றுடைய நன்மாணு-நல்ல
சிவம்வேறே யென்றெண்ணிச் சிந்தைகலங்காதே
சிவமென்ற நீயே சிவம்.''
என்று சிவஞானவள்ளலார் ஞானவிளக்கம், 44-வது செய்யுளில் கூறுகின்றனர்.

றெண்ணி உண்மையை உணர்ந்தவனிடத்திலேயே உலக மடங்கியிருக்கின்ற தன்மையை யுடையதென்பதும் விளங்கும். தலையாயாராய்த் தங்கருமஞ்செய்வோராகிய முற்றுந்துறந்த அந்தராத்மாக்களென்னும் ஞானிகள் பரமாத்மஸ்வரூபத்தைப் பெற்று மோக்ஷமடையக்கூடியவர்களாதலால், ஆசிரியர் நீத்தார் பெருமையில் ஜீவபுத்கல முதலான தன்மைகளை அறிந்து அவற்றைவிட்டு மோக்ஷமடையக் கூடியவர்களே பெரியாரென்பதையும், அவர்களிடமே உலகம் அடங்கியிருக்கின்றதென்பதையும் இதில் விளக்கினர்.

இதற்கு மாறாகப் பரிமேலழகர், பஞ்சதன் மாத்திரைகளின், 25 தத்துவங்கள் நிறைந்தது உலகமென்று கூறியுள்ளார். இதுதவிர, "மாயையினிடத்திலே நிர்மலசலப்ரதிபிம்பம்போல பிரம்மம் சலக்ஷணமாகப் பிரதிபிம்பிக்கும்; இந்தப் பிரதிபிம்ப சைதன்னியம் சர்வக்ஞனாகிய ஈஸ்வரனென்று சொல்லப்படும்; இந்தச் சத்துவகுண மாயையினிடத்திலே சத்துவத்தில் சத்துவம், சத்துவத்தில் ரஜஸ், சத்துவத்தில் தமஸ் என மூன்று குணங்களுண்டு; இவைகளில் சத்துவத்தில் சத்துவம் பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரன் ஜகத்தை ரக்ஷிக்கையினாலே விஷ்ணுவென்றும், சத்துவத்தில் ரஜஸ் பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரன்ஜகத்தை சிருஷ்டிக்கையினாலேபிரம்மாவென்றும், சத்துவத்தில் தமஸ் பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரன் ஜகத்தை உபஸம்மாரம் பண்ணுகையினால் உருத்திரனென்றும் சொல்லப்படுவார்கள்; இப்படி மூலப்பிரகிருதியின்சத்துவகுணகற்பனை சொல்லப்பட்டிருக்கிறது" என்று சைவசமய நாநாஜீவவாத கட்டளை என்னும் நூலில் கூறுகின்றது.

ஆகையால், "ஒருகாலத்தில் ஒருவரால் உலகம் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என மூன்று வகைகளால் செய்யப்பட்டது" என்பது சைவசமய சித்தாந்தம். வைணவஸமயத்திலும் சிருஷ்டி முதலானவைகள் கூறப்படுகின்றன.

ஆனல் ஜைநசமயவேதம் ஜீவபுத்கலமுதலான ஷட்திரவ்வியங்கள் நிறைந்தது லோகமென்றும், லோகமானது ஒருவரால் சிருஷ்டிக்கப்பட்டதல்ல வென்றும், அநாதியாகவுள்ளதென்றும் துணிவாய்க்கூறுகின்றது. இதன் உண்மையை உலகத்தார் அறிந்து கொள்ளும்பொருட்டே திருக்குறளாசிரியர், நீத்தார் பெருமையில் இவ்விவரத்தைக் கூறியுள்ளாரென்பது உறுதி.

சிருஷ்டியைப்பற்றிய விவரத்தை,

" இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்"

என்னும் குறட்பாவைப்பற்றிய விஷயங்கள் வருமிடத்துப்பாக்கக் காணலாம்.

இன்னும் முற்றுந்துறந்த மகாமுனிவர்களாய் ஜீவாதிதத்துவங்கள் முதலானவைகளால் ரித்திப்பிராப்த முதலானவைகளையும், மனவசனகாயங்கள் முதலானத்ரிகாரணங்களையும், மதிஞானம் ஸ்ருதஞானம் அவதிஞானம் மனப்பரியயஞானம் முதலானவைகளையும் கடந்து சர்வசாதுபரமேஷ்டிகுணத்தை யடைந்து அநகார கேவலஞானத்தைப் பெற்றவரின் சிறப்பை நீத்தார் பெருமையில் ஆசிரியர் அருளியுள்ளதை இதனடியில் விவரித்துக்காட்டுவாம்:—

" ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி"

என்னும் குறள் இதனை விளக்கும்.

இதன்பொருள்: "ஐந்தவித்தான் - (புலன்களிற் செல்லுகின்ற) ஐந்தாசைகளையும் ஒழித்துக் காதிகர்மங்களைவென்ற மகாமுனிவரது, ஆற்றல் (கேவல) ஞானவன்மைக்கு, அகல்விசும்புளார்-அகன்ற பொன்னுலகத்துள்ள தேவர்க்கு, கோமான்-தலைவனுகிய, இந்திரனே-தேவேந்திரனே, சாலுங்கரி-போதுமான சாக்ஷியாம்" என்பதாம்.

முனிவர்க்குக் கேவலஞானம் உண்டானவளவில் இந்திராதி தேவர்கள் கேவலபூஜை செய்வார்களாதலால், அதனை விளக்குதற்கு, 'இந்திரனே சாலுங்கரி' என்ருர். இங்ஙனம் கேவலபூஜை செய்யப்படுதல்,

" கேவல முற்பத்தி யாமள வேகிளர் பூசனைக்கென்
றேவலி யற்றுமவ் விந்திர னுக்குமுன் னெண்குணத்தெங்
காவல னைக்கவிப் பார்வளைப் பார்முளைப் பார்களைப்போல்
மூவுல கத்துள்ள நால்வகைத் தேவரு முன்னுவரே"

என்னும் திருநூற்றந்தாதி 11-ஆம்செய்யுளால் உணரப்படும். இன்னும், அநகாரகேவல ஞானிகளைப்பற்றி,

" மாலைவா யிருளை நீக்கி வையத்தைத் துயி லெழுப்புங்
காலைவா யருக்கன் போலக் காதிக னான்கு நீங்க

மேலெலா முறங்கு நான்மை விழித்தல கனைத்துங் காண
மாலிலா மனத்துச் சிந்தை யருக்கன துதித்ததன்றே.''

என்னும் மேருமந்தரபுராணம் 1383. ஆம் கவியும் கூறுகின்றது.

இ-ள்: "இராத்திரியிற் பொருந்தும் அந்த காரத்தைப் போக்கி இந்தப் பூலோகத்துப்பிராணிகளை நித்திரையினின்றும் பிராதக்காலத்தில் எழுப்புகின்ற பாலசூரியனைப்போல, ஆத்மப்பிரதேசமுழுவதும் தங்கியிருந்த ஞானவரணீய தர்சனவரணீய மோகனீய அந்த ராயங்களென்கிற காதிசதுஷ்டயங்கள்விலக, அனந்த சதுஷ்டயமானது பிரகாசித்து லோகாலோக முழுமையும் கேவல தர்சனத்தால் தெரிய, மயக்கமில்லாத மனதிலே சுத்தஸ்வரூபசக்லத்தியானத்தினால் கேவலஞானமென்னும் சூரியனானது கிரணத்தினால் வியாபித்து உதயமாயிற்று'' என்பதாம்.

இன்னும் ஆத்மன் கேவலஞானத்தை அடைந்தவுடன் அதனை இந்திராதி தேவர்கள் உணர்ந்து அவனைப் பூஜிப்பார்கள் என்பதை,

''ஆயிடை யமரர் தங்கண் முடியொடா சனங் துளங்கப்
பாயகல் லவதி யென்னும பருதியாற் கண்ட தெல்லாம்
ஆயிரங் கண்ணி னானை யதிபதி யாகச் சூழ்ந்து
மாயிரும் விசும்பும் மண்ணும் மறையவா னவர்கள் வந்தார்''

என்னும் மேருமந்தரபுராணம் 1386-ஆம் கவி கூறுகின்றது.

இ-ள்: " அப்பொழுது சதுர்ணிகாயாமரர்களுடைய கிரீடங்களோடு இருக்கும் ஆசனங்களும் சலிக்க, பரவியதன்மையாகிய அவதிஞானமென்னும் ஒளியால் (அவர்கட்கு) யாவும் தெரிந்தது, அப்பொழுதே ஸஹஸ்ராக்ஷனாகிய சௌதர்மேந்திரனைத் தங்களெல்லோருக்கும் நாதனாக அமைத்துச் சுற்றி நிறைந்து மிகவும் பெரிதாகிய ஆகாயமும் பூமியும் மறையும்படியாக இந்திராதிசர்வதேவர்களும் வந்தார்கள் என்பதாம்.

இன்னும் இதனை,

"பிண்டியுங் குடையுஞ் சீய வணையுஞ்சா மரையுமற்றும்
மண்டவர்க் கிறைய மைத்தா னன்னவர்க் குரிய வாற்றான்''

என்ற மேருமருமந்தரபுராணம் 389 ஆம்கவியடிகளும் கூறுகின்றன

இ-ள். "அசோக விருக்ஷமும் ஏகசத்ரமும் சிம்மாசனமும் வெண்சாமரைகளும் பின்னும் புஷ்பமாரிதுந்துபி முதலான

வையும் அநகாரகேவலிகட்கு உரித்தான விதமாகத் தேவர்களுக் கதிபதியாகிய சௌதர்மேந்திரன் நிர்மித்தான்" என்பதாம்.

ஆதலின் ஐந்தவித்தானாற்றல் என்கிற குறள், முற்றுந்துறந்த மகாமுனிவர்கள் ஐம்புலன்களையு மடக்கித் தவஞ்செய்து காதிகர் மங்களைக்கெடுத்துக் கேவலஞானத்தை யடைந்ததின்பெருமையை அவதிஞானத்தாலறிந்த இந்திரன் அவர்க்குக் கந்த குடியென் னும் ஜிநாலயத்தை நிர்மித்துக் கேவல பூஜையினைச் செய்ததைக் குறித்ததென்பதும், ஆசிரியர் நீத்தார் பெருமையில், முனிவர் அடைந்த கேவலஞானத்தின் உயர்வை உணர்த்தற்கு இந்திரன், சாக்ஷியாவானெனக் கூறினர் என்பதும் விளங்கும்.

இந்தக் குறட்பாவிற்குப் பரிமேலழகர், "இந்திரன் ஐந்தாசை களையும் நீக்காமல் சாபத்தை அடைந்து நின்று, அவ்வாசைகளை நீக்கினவனாகிய கௌதமமுனிவனது வல்லமையைத்தெரிவித்தா னாதலின் ஐந்தவித்தானாற்றலுக்கு இந்திரனே சாலுங்கரி" எனப் பொருளுரைத்திருக்கின்றனர். இது ஜைநசமய சித்தாந்தத்திற்குப் பொருத்தமற்றதாகும்.

தேவகதியைப்பற்றி ஜீவகசிந்தாமணி. 2800 ஆம் கவிமுதல் 2803 ஆம் கவி வரையில் உள்ள கருத்துக்களை இங்கு விவரிப் பாம்; அவையாவன:

"தேவருடைய குணத்தைக்கூறின் அவர்கருவிற்சென்று பிற வார்; கால் நிலந்தீண்டுதல் செல்லார்; அவருருவத்தைக் கூறின் எழுதலாகா; அவர்நிறம் பரிதியின் (சூரியனல்)· இயன்ற தொக் கும்; அவர்க்குக் கண்ணிவாடா; அவர் தேவியர்க்குக் கையும், அடியும் தாமரைமலர்ந்த செவ்வியையொக்கும்; கண் கமலத்தை யொக்கும்; வாய் செங்கதிராகிய பேரொளியையுடைய பவளத்தை யொக்கும்; நிகழுமுறுவல் முத்தி னொளியை யொக்கும். இவையேயன்றி அவர்க்குத் திருமகள் இயாழைப்பெற்றிலே னென்று தானேக்கி வருந்தும்படி யொழிந்த அவயவவழகும் வந்து திரண்டன. குவளைக்கண்ணியினையும், மார்பிற் கோதையினை யும், நெற்றிமாலையினையும், வாண்முடியிலுண்டாகிய வைரவில்லினை யும், சுடரும் குழையினையும், மார்பிற் பூணிடத்தில் நிலவினையும், மின்னொடு பொலிந்த நிறத்தினையுமுடைய அத்தேவர் உண்டற்றொ ழிலையுடைய அமிர்தத்தை உண்டற்கு விரும்பினல் மனத்தாலே

யுண்பது கையினாலு முண்ணார்; காமன் தொன் மலரம்பு முன்னர்ப் புதைந்த தேவருடைய மலர்ந்தமார்பிலே தேவியர் புருவம் வாங்கு வில்லாகக் கண் அம்பாக எய்ய மயங்கிக் கலாப மின்ன அணையிலே வீழ்வார்.

இன்னும் கொம்பையொத்து இழை சுடருமேனியையுடைய கொடியன்னாரைப்புல்லி அவருடைய தனங்களென்னுந் தாமரை முகைகளோடே தமது தார் பொருதுதோற்று அழகழியவைகி அதனாலு மமையாராய் அவரை அமிர்தமாகப்பருகி அதனாலு மாராராய் விருப்ப மிகுதியாற் கண்ணிமையாமல் தாழ்ந்து உள்ளம் வெம்பிக் காய்த்தியிட்டுக் கடைந்திடுகின்ற காமக்கடலை நீந்துந் தெப்பம் இவர்களே யென்று கருதி அவர்களைக் கைவிடார்" என் பனவாம். இன்னும் கல்பங்களிலுள்ள இந்திராதி தேவர்களுடைய இயற்கைகளை த்ரிலோகப்ரக்ஞப்தி, லோகாணி முதலானவைகளில் விரிவாகக் காணலாம்

இன்னும் தேவேந்திரன் முதலான தேவர்கள் அணிமாமகிமா வென்கிற விக்ரியையினால் வேறுவேறு ரூபங்களை நிர்மித்துக்கொண்டு பகவானுக்கு அபிஷேகம் தோத்திர முதலானவைகளைச் செய்தார்களென்பதை விளக்கும் மேருமந்தரபுராணம் 1296,7-ஆம் கவிகளிலுள்ள கருத்துக்களை இங்கு விவரிப்பாம்:

"சௌதர் மேந்திரன் முதலாகிய தேவர்கள் ஆயிரம் புயங்களை நிர்மித்துக்கொண்டு அவற்றில் ரத்னத்தினாலாகிய பூர்ண கடங்களைத் தரித்தவர்களாய்க் கர்மங்களை ஜெயித்த ஜிநேந்திரப் பிரதிமைகளின்மேல், மகாமேரு பர்வதத்தினின்றும் சொரிகின்ற அருவி ஜலம்போல சொரிந்தார்கள்; பிறகு ஆயிரம் முகங்களை நிருமித்துக்கொண்டு அவற்றால் மூன்றுலோகத்தார்களாலும் வணக்கும்படியாகிய அந்த ஜிநேந்திரகுண சகஸ்ராஷ்ட நாமங்களாகிய தண்டகஸ்துதியை, அபிஷேகவிதிமுடிந்தவுடன் சொல்லித் துதித்தார்கள்; ஒவ்வொரு ஊழிக்காலத்திலு முண்டாகிய கெட்ட வினைகளெல்லாம் நீங்கின" என்றும்,

ஆயிரங் கண்களுடைய தேவேந்திரனானவன், காதிகர்மங்களை ஜெயித்தவராகிய ஜிநேந்திரருடைய குணங்களெல்லாம் ஒரு தன்மையை அடைந்தது போலச் சேர்ந்திரா நின்ற அந்தப்பிரதிரூபங்களைப் பலதடவைகளில் நோக்கிப் பொருந்தி, ஜிநப்பிரதிமை

களின் பாதங்களை ஈகை பொருந்திய கையால் வணங்கித்துதியுடன் அர்ச்சனை செய்தான்; தேவஸ்திரீகளில் இனி அதிகப் பிறப்பில்லாமல் அடுத்த ஒருபவத்தில் கர்மக்ஷயம் செய்து மோக்ஷமடையும் பக்குவமுள்ள இந்திராணியானவள் இந்த நந்தீஸ்வர பூஜையை தேவேந்திரனுடன் கூடச்செய்து முடித்தாள்'' என்றும் அச்செய்யுட்கள் கூறுகின்றன. இவை அவ்விஷயத்தை உணர்த்தும்.

இன்னும்,

" கண்முழுதுடம்பிற்றோன்றிச்சுதஞ்சணன் களிப்புற்றானே''

என்று ஜீவகசிந்தாமணி 3085 ஆம் கவியில் கூறப்படுவதும் இதனை விளக்குகின்றது. இவற்றாலும் மேல்கண்டகாரணங்களாலும் இந்திரன் முதலானவர்கள் ஆயிரம்புயங்கள், ஆயிரம் முகங்கள், ஆயிரங்கண்கள், முதலானவைகளை விக்கிரியாசக்தியினால் நிர்மித்துக் கொள்வார்களென்பது விளங்கும். இது ஜைநசமய சித்தாந்தம்.

தவிர, மனிதர்கள் சக்கரவர்த்திகள், போகபூமிமனுஷ்யர், நாகலோகத்து தரணேந்திரன் ஆகிய இவர்களால் அனந்தம் அனந்தமாக அனுபவிக்கப்பட்ட சுகத்தை இந்திரன் ஒருவன் அனுபவிக்கின்றானென்பது மேலே. 130-வது பக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இன்னும் இந்திராணி மறுபவத்தில் கர்மக்ஷயம் செய்து மோக்ஷமடையும் பக்குவமுள்ளவளென்பதினால் இந்திரனும் அத்தன்மையுடையனென்பதைச் சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாகும்.

சரீரகாந்தியும், நறுமணமுமுடைய இந்திராணி முதலான தேவஸ்திரீகளின் இன்பங்களை அனுபவிக்கும் தன்மையுடைவனும், கால்நிலந்தோயாதவனுமாகிய இந்திரன், பிறன் தாரமாயும், நாற்றமுள்ளசரீரத்தையுடையவளாயும், நரஸ்திரீயாயுமிருந்த அகலிகையுடன்இன்பத்தை அனுபவித்தானென்பதும், கௌதமமுனி சாபத்தினால் அவன் தேகத்தில் ஆயிரம் யோனிகளை அடைந்தானென்பதும் ஜைநசமய சித்தாந்தத்திற்குப் பொருந்தாது. இன்னும் அசுரர்களால்இந்திராதி தேவர்கள் துன்புற்றாரென்பதும், அத்துன்பத்தை சிவன், விஷ்ணு நீக்கினார் என்பதும் பொருத்த மற்றனவாம். இந்திராதிதேவர்கள் சஜ்ஜனராகியபவ்வியருடைய கண்களுக்குப் புலப்.

படுவார்களேதவிர துர்ஜனருடைய கண்களுக்குத் தோன்றார் ஆகையால் கேவல ஞானத்தின் பெருமைக்கு இந்திரன் சாக்ஷியென ஆசிரியர் கூறினரென்பதைத் தெளிவாய் உணரலாம்.

இனிமுற்றுந்துறந்தவர் பெருமையைப்பற்றிச் சிறிது கூறுவாம்:

> "படநாகந் தோலுரித்தாற் போற்றுறந்து கண்டவர்மெய்
> [பனிப்ப நோற்றிட்
> டுடனகை வைம்பொறியும் வென்றார்"

என்று சீவகசிந்தாமணி 1546-ஆம் கவி, இவர் தன்மையினைக் கூறுகின்றது.

இதனல் முற்றுந்துறந்தவர் அகப்பற்றும் புறப்பற்றும் விட்டுத் துறந்து பஞ்சேந்திரியங்களால் உண்டாம் ஆசையையும் வெறுத்தல் வேண்டுமென்பது விளங்கும்.

இன்னும்,

> "ஐவகைப் பொறியும் வாட்டி யாமையி னடங்கி யைந்தின்
> மெய்வகை தெரியுஞ் சிந்தை விளக்குநின் றெரிய விட்டுப்
> பொய்கொலை களவு காம மவாவிருள் புகாது போற்றிச்
> செய்தவ நுனித்த சீலக் கனைகதிர்த் திங்க ளொப்பார்"

என்னும் சீவகசிந்தாமணி 2824-ஆம் கவியும்,

> "வாய்ச்சிவா யுறுத்தி மாந்தர் மயிர்தொறுஞ் செத்தி னும்
> பூச்சுறச் சாந்த மேந்திப் புகழ்ந்தடி பணிந்த போதுந்
> தூக்கியிவ் விரண்டு நோக்கித் தொல்வினை யென்று தேறி
> காச்செறும் பராவுங் கொள்ளார் நமர்பிற ரென்று முள்ளார்"

என்னும் சீவகசிந்தாமணி 2825-ஆம் கவியும்,

> "இந்திரர்கள் வந்தடி பணிந்தருளு கெனினுஞ்
> சிந்தையுடன் வெந்துயர்க ளின்னலர்கள் செயினுந்
> தந்தம்வினை யென்றுநமர் பிறரெனவு நினையா
> ரந்த மிகந்தரு டவத்தரசர் தாமோய்"

என்னும் எசோதரகாவியம் 5-வது சருக்கம் 10-ஆம் கவியும்,

> "தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
> றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை

யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்''

என்னும் நாலடியார் துறவு 8-வது செய்யுளும்,

"நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்''

என்னும் நாலடியார் சினமின்மை 4-வது செய்யுளடிகளும்,

"இன்னா செயினு மினிய வொழிகென்று
தன்னையே தானோவி னல்லது''

என்னும் நாலடியார் பொறையுடைமை 6-வது செய்யுளடிகளும்,

"உயிர்நோய்செய் யாமை யுறுநோய் மறத்தல்
செயிர்நோய் பிறர்கட்செய் யாமை—செயிர்நோய்
விழைவு வெகுளி யிவைவிடுவா னாயின்
இழிவன் றினிது தவம்''

என்னும் சிறுபஞ்சமூலம் 32-ஆம் செய்யுளும் துறந்தார் இயல்பினை உணர்த்துவனவாம்.

இன்னும் திருக்குறளாசிரியர்,

"உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து''

என்றும்,

"ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து''

என்றும்,

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.''

என்றும்,

நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற''.

என்றும்,

"சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்''

என்றும்,

"கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்"

என்றும்,

"இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்றும்,

" அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு"

என்றும்,

" இயல்பாகு நோன்பிற் கொன்றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து"

என்றும்,

" உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு"

என்றும்,

" இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு"

என்றும் துறந்தாரியல்புகளைக் கூறுகின்றார்.

இன்னும்,

" [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] "

என்னும் பிரஸ்னோத்தரமாணிக்கமாலா கிருந்த சுலோகமும் இவர் தன்மையைக் கூறுகின்றது.

இ-ன்: "எவர் சம்யக்தரிசனம், சம்யக்ஞானம், சம்யக்சாரித்ரம் (நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம்) ஆகிய ரத்னத்திரயங்களைத் தரித்தவரும், உத்தம க்ஷமைமுதலான பத்துவிததர்மங்களைக் காப்பாற்று

பவரும், லாபாலாபங்களில் சமசித்தமுள்ளவரும், இந்திரியங்களை ஜெயித்தவரும், கர்மகாசத்தை தியானிப்பவரும், ஷட்காயஜீவன்களுக்கு ஹிம்ஸை உண்டாகாமல் எச்சரிக்கையாயிருப்பவரும், மானவமானங்களில் சமபுத்தியுள்ளவரும், பற்றற்றவரும், தீவ்ரதபச்சரணங்களைச் செய்பவருமாவரோ அவரே முற்றுந்துறந்த முனிகள். அப்பேர்ப்பட்ட முனிகளை நான் நமஸ்கரிக்கின்றேன்'' என்பதாம்.

இன்னும்,

"மாதரைப் புகழ்தல் பார்த்தல் மற்றவ ரட்ட தென்று
லாதரித் துண்டல் புக்க வவ்வகத் துறைத லஞ்சொல்
போதகக் கேட்டல் மேவிச் சிரித்திடல் விழைவு நோக்கல்
வதமின் றிவற்றி னீங்கி யிலங்குமுள் ளத்த ரானூர்"

என்னும் மேருமந்தரபுராணம் 1362. ஆம் கவியும் இவரியல்பைக் கூறுகின்றது.

இ-ள்: "ஸ்திரீஜனங்களைத் துதித்தலும், விரும்பி நோக்குதலும், பின்பு அந்த ஸ்திரீமார்களால் சமையல் செய்ததென்றால் அதனைப் பிரீதியோடு கூடிப் புசித்தலும், அவர்கள் அடைந்திருக்கின்ற அவ்வீட்டில் வாசஞ்செய்வதும், அவர்களுடைய அழகிய மொழிகளை மேன்மையாகக் கேட்கின்றதும், அவர்களுடன் பொருந்தி ஹாஸ்யமாகச் சிரிப்பதும், அவர்களுடைய விருப்பத்தைப் பார்த்தலும் ஆகிய இந்தப்பரிணமங்களினின்றும் நீங்கி, குற்றமின்றாக விளங்குகின்ற உத்தம பிரம்மசரியமென்னும் தர்மகுணமுடையவர்களானூர்கள்'' என்பதாம். இவையே முற்றுந்துறந்தவர்களின் நெறிகளாம்.

சைவசமயத்திலும் துறந்தோரியல்பைப்பற்றி,

"பெண்மை விபவார் பெயரு மெடுத்தோதார்
கண்ணெடு நெஞ்சுறைப்ப நோக்குறூர்—பண்ணெடு
பாடல் செவிமடார் பண்பல்ல பாராட்டார்
வீடில் புலப்பகையி னூர்''

என்னும் நீதிநெறிவிளக்கம் 85. ஆம்செய்யுளும் கூறுகின்றது.

இ-ள்: "விடுதலில்லாத விடயங்களைப் பகைத்து விட்டவராகிய துறவிகள், பெண் தன்மையை நன்கு மதிக்கார்; பெண்ணென்னும் பெயரையு மெடுத்துச்சொல்லார்; மனதில் பதியும்படி கண்களால்அவளைப்பாரார்; இசையுடனே அவர் பாடுதலைக் காதாற் கேளார்; ஆகாதன வற்றைக்கவனியார்'' என்பதாம்.

சாந்தமில்லாததினியல்பைப்பற்றி,

"பலகால மோதித் தவஞ்செய்து பாக்காற்
சிலகால மன்னனுக்கே யாசை-பலனுண்பான்
விக்கிட்டுக் காய்த்துப் பழமுன்னான் பூவுண்ணும்
பித்தனைப்போ லாவதோ பேசு"

என்று ஜீவசம்போதனை 2வது அத்-13 வது செய்புளில் கூறுவது உணர்க.

சாந்தமுடைமையைப்பற்றிச் சிவஞானவள்ளலார்,

"வைதிடினுங் கொய்திடினும் வாழ்த்திடினு மாயமெலாஞ்
செய்திடினு மன்னர் செறுத்திடினுங்-தெய்வநிலைப்
பூக மயக்கினும்பு ரந்தரன்போர் செய்திடினு
மேதுமயங் கான்ஞானி யெண்"

என்று உபதேசமாலை 72-ஆம் செய்புளில் கூறுகின்றார்.

ஆதலின், மேற்காட்டிய நூல்களில் கூறியபடி கௌதமமுனிவர் முற்றுந்துறந்தவர் ஒழுக்கங்களில் ஒன்றேனு மில்லாதவரென்பது யாவரும் எளிதில் உணரலாம்.

கௌதமமுனிவரது மனைவியாகிய அகலிகையை வஞ்சகத்தால் இந்திரன் புணர்ந்தானென்பதும், அதை யறிந்த கௌதமமுனிவர் இந்திரனுக்கு ஆயிரம் மாதர்களுக்குள்ள பெண் குறி உண்டாகக்கடவதென்று கோபத்தால் சாபம் கொடுத்தாரென்பதும்,

"புக்கவ ளோடுங் காமப் புதுமண மதுவின் றேறல்
ஒக்கவுண் டிருந்த லோடு முணர்ந்தன ளுணர்ந்த பின்னும்
தக்கதன் றென்ன வோரா டாழ்ந்தன ளிருப்பத் தாழா
முக்கணா னனைய வாற்றன் முனிவனு முடுகி வந்தான்"

"சரந்தரு சாப மல்லாற் றடுப்பருஞ் சாபம் வல்ல
வரந்தரு முனிவ னெய்த வருதலும் வெருவி மாயா
நிரந்தர முலகி னிற்கு நெடும்பழி பூண்டா னின்றான்
புரந்தர னடுங்கி யாங்கோர் பூசையாய்ப் போக லுற்றான்"

என்னும் கம்பராமாயணம் பாலகாண்டச் செய்யுட்களால் உணரப்படும்.

மேற்கூறிய இரண்டு செய்யுட்களாலும் கௌதமமுனிவர் சாந்தமற்றவரென்பது நன்குவிளங்கும்.

தவிர ஆசிரியர்,

"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை"

என்று கூறியுள்ள குறட்பாவில், "இயல்புடைய மூவரென்பவர் ஆசாரியனிடத்தே ஓதுகின்றவனும், விரதங்காக்கின்றவனுமாகிய பிரம்மசாரியும், காட்டினிடத்தே போய் மனைவியோடு தவஞ்செய்கின்றவனாகிய வானப்பிரஸ்தனும், எல்லாப்பற்றுக்களையும் விட்ட சன்னியாஸியும்" எனவிளக்கமாக உரைசெய்த பரிமேலழகர் முற்றுந்துறந்த தீர்த்தார் பெருமையில் முற்றுந்துறவாமல் அகலிகையுடன் தவஞ்செய்த வானப்பிரஸ்தரும் தன் பத்தினியின் பொருட்டுக் கோபத்தினால் இந்திரனுக்குச் சாபம் கொடுத்தவருமாகிய கௌதமமுனிவரை உவமைகூறுவது மாறு கொளக்கூறல் என்கிற குற்றத்தின் பாற்படும். இலக்கணமுடிபுகளை நன்கு அறியக்கூடிய உரையாசிரியராகிய இவர் இம்மாதிரி பொருள் கூறியது கிஞ்சித்தும் ஒப்பமுடிந்ததல்ல வென்பது யாவரும் பட்டப்பகல் வெட்ட வெளிச்சம் போல உணரக்கூடும்.

பத்தினியுடன் தவஞ்செய்வது கூடா வொழுக்க மென்பது ஜைநசமய சித்தாந்தம்.

இதனை,

"தவமறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று."

என்னும் கூடாவொழுக்கத்தின் குறட்பாவைப் பற்றிய விஷயங்கள் வருமிடத்துக் கண்டு கொள்க.

மேல் 137-வது பக்கத்தில் விவரித்துள்ள பதினன்கு குணஸ்தானவர்த்திகளின் ஒழுக்கங்களைப்பற்றிச் சிறிது விவரிப்பாம்:—

உலகத்திலுள்ள அநந்தாநந்த சம்ஸார ஜீவன்களில், அபவ்விய ஜீவனென்றும், அபவ்விய ஜீவசமான பவ்வியஜீவனென்றும், பவ்வியரில் தூரபவ்வியரென்றும், ஆஸன்னபவ்வியரென்றும் நால்

வகைப்பட்டஜீவன்களுள அவற்றில் அபவ்வியருக்கும் அபவ்வியசமான பவ்வியருக்கும் என்றும் மோக்ஷமில்லை. தூரபவ்யருக்கும், ஆஸன்னபவ்வியருக்கும் மோக்ஷமுண்டு. எவ்வாறெனில் உலகத்தில், அந்தபாஷாணம், ஸ்வர்ணபாஷாண மென இரண்டுபாஷாண வகையுள்ளன. இவைகளில் அந்தபாஷாணமென்பது குருட்டுக்கல்; இதில் எக்காலத்திலும் ஸ்வர்ணகலப்புமில்லை, உண்டாவதுமில்லை. இதைப்போல அபவ்வியரும் அபவ்வியசமான பவ்வியரும் அநந்த காலம் சம்ஸாரத்துள்ப்ரமித்து,நிகோதமுதலான நரகங்களிற்சேர்ந்து, போகநிதான சுகாபிலாஷைபால் தபாதிகளைச்செய்துகல்பவாசிகளாயும், நவக்ரைவேயகத்து 31 கடற்கால பரியந்தம்தேவசுகங்களை அனுபவித்துப் பிறகு மனுஷ்ய ஜன்மத்து ராஜகுல முதலானவைகளிலே பிறந்து, அந்தபாஷாணத்தில் ஸ்வர்ணமில்லாமைபோல சம்யத்வமில்லாமல் பஞ்சேந்திரிய போகங்களிலே வாஞ்சையுள்ளவராய், யதியாஸ்ரமத்தை அடைந்தாலும் போகவாஞ்சாநிதான * சல்யத்ரயத்தினல் மித்யாத்வாதி ஹிம்ஸாதிகிருத்திய துர்பாவத்தால் மரணமடைந்து, நரகாதி சதுர்கதிகளிலேயே சுழன்று வர்த்திப்பர்.

ஸ்வர்ணபாஷாணமென்பது-பொன்கலந்தகல். இது ரஸமுதலான சம்ஸ்காரத்தினல் தங்கமாகிறதுபோல, தூர பவ்வியர், ஆஸன்ன பவ்வியர்கள் சம்யத்வத்தினல் மோக்ஷமடைவார்கள்.

தூரபவ்வியனென்பவன் நெடுங்காலம் அதாவது ஒருகோடாகோடி கடற்காலவருஷம் சதுர்க்கதியிலுழன்று மோக்ஷமடைவான்; ஆஸன்னபவ்வியனென்பவன் சிலபவங்களில் மோக்ஷமடைவான்.

இப்படிப்பட்ட நால்வகை சம்ஸாரஜீவன்களுடைய பரிணமத்தையும், மோக்ஷமெய்துகின்ற யதிகளுடைய பரிணமத்தையும், அசுப, சுப, சுத்த மென்னும் மூன்றுவகைப் பரிணமத்தையும் ஒருங்கு தொடுத்து, உப்பரிகை ஏறுவதற்குப் படி கட்டுகிறதுபோல

* சல்யத்ரயமாவது-மித்யாசல்யம், மாயாசல்யம், நிதான சல்யம் என்பனவாம். இவற்றில் மித்யாசல்யமாவது-மித்யாத்வத்தில் நடப்பது; மாயாசல்யமாவது-விரதங்கள் முதலானவைகள்; மாயை (வஞ்சனை) யினல்செய்வது; நிதான சல்யமாவது-சக்ரவர்த்தியாயும் தேவனுயும் பிறக்கவேண்டுமென்கிற பாவனையுடன் தவமுதலானவைகள் செய்வது.

பதினான்கு குணஸ்தானங்களின் விஷயங்களும் அந்தந்தகுணஸ்தானங்களில் கர்மங்கள் கெடுக்கும் விவரங்களும் சொல்லப்படும்.

1-வது மித்தியாதிருஷ்டி குணஸ்தானவர்த்திகள்:—அதேவனை தேவனென்றும், குஸாஸ்திரத்தை சாஸ்திரமென்றும், பாஷண்டியை தபஸியென்றும், தத்வமல்லாததைத் தத்வமென்றும், நிர்தோஷியாயிருக்கின்ற தேவனை தோஷியென்றும், மாறுபாடில்லாத சாஸ்திரததை தூஷித்தும், சத்பாத்திரமான தபஸியை தூஷித்தும், அபாத்ரகுபாத்ராதிகளை பூஜித்து தானம்பண்ணியும், இவைமுதலாகிய தோஷங்களைச்சொல்லுகின்ற தொண்ணூற்றாறுபாஷண்டிமதங்களில், முந்நூற்றறுபத்து மூன்று விகல்பமாய் வர்த்திக்கின்றவர்கள் மேல்சொன்ன நால் வகை ஜீவன்களில் மித்தியாதிருஷ்டி குணமுள்ளவர்களாவர்.

2-வது ஸாஸாதன சம்யக்திருஷ்டி குணஸ்தானவர்த்தி:—மேல் சொன்ன நால்வகை ஜீவன்களில் முதல் மூன்றுவகை ஜீவன்கள் தவிர, ஆஸன்ன பவ்விய ஜீவன்களில், வஸ்துயதாஸ்வரூபத்தில் அந்தர் முகூர்த்தத்து வர்த்தித்து சம்யக்திருஷ்டியாகி, அப்படியே அது நிறைபப்பெறாமல், அந்தியத்திலே பரிணாமம்கெட்டு மித்யாத்வத்திலே விழுகிற அந்தராளகாலமுள்ளவனாகும்: அதாவது சம்யத்வமென்னும் ரத்னபர்வதத்தின் சிகரபரியந்தம் சென்று அநந்தானுபந்திக்குரோத மான மாயா லோபமென்னும் கஷாயங்களிலேதாவதொன்றின் பரிணாமத்தினால் சிகரத்தின்மீது ஏறாமல் நழுவி பூமியிலே விழாத மத்தியகாலவர்த்தியாகும்.

3-வது சம்யக்மித்தியாதிருஷ்டி குணஸ்தானவர்த்தி:—பஞ்சாஸ்திகாய, ஷட்திரவ்ப, ஸப்ததத்துவ, நவபதார்த்த முதலான தத்துவங்களை உள்ளபடி நம்புகின்ற பரிணாமமும், மேல் சொன்ன மித்தியாதிருஷ்டி குணங்களை நம்புகின்ற பரிணாமமும் ஆகிய இந்த இரண்டு வகைகளும் சமானமாகவர்த்திப்பதாகிய பரிணாமத்தையுடையவனாகும். அதாவது: தயிரும், வெல்லமும் ஒன்றாகச் சேர்ந்தால் புளிப்பு, தித்திப்பு இவ்விரண்டினையும் பிரிவு செய்யவியலாதது போன்ற பரிணாமத்தையுடையவனாவன். இவனை சம்மியக் திருஷ்டியென்றும், மித்தியாதிருஷ்டியென்றும் சொல்லமுடியாது; இவனுக்கு மிஸ்ரன் என்றும் பெயர்.

4-வது. அஸம்பத சம்யக்திருஷ்டி குணஸ்தானவர்த்தி:—மேல் சொன்ன பஞ்சாஸ்திகாய ஷட்திரவ்ய ஸப்ததத்துவ முத

லான தத்வங்களிலும் த்ரடமான பரிணமமுள்ளவனும், பிரத்வீ அப்பு தேயு வாயு வனஸ்பதி த்ரஸகாயமென்னும் ஷட்ஜீவநிகாயங்களை வதை பண்ணேனென்கிறவிரதபரிணமங்களில்லாதவனும், பஞ்சேந்திரியமனமென்னும் ஆறு இந்திரிய விஷயாசக்தனும், பஞ்சோதும்பர ஸப்தவியஸன மதுமத்ய மாம்ஸ நிவர்த்தனுமாகி, ஏகதேஸ சுத்த நிச்சய நயத்தினல் ஆத்மன் கர்மத்தில் வேறென்று ஒவ்வொருகால் நினைக்கின்ற பரிணம முள்ளவனுகும். (இவன் விரதங்களை அனுஷ்டிக்காதவனுகையினல் இவனுக்கு அஸம்யதசம்யக்திருஷ்டியென்று பெயராயிற்று.) இந்தக் குணஸ்தானத்தில் நரகாயுஷ்ய கர்மம் விச்சித்தி

5-வது தேஸசம்யதன்குணஸ்தானவர்த்தி:—மேல் சொன்ன பஞ்சாஸ்திகாய ஷட்திரவ்யமுதலான தத்வங்களில் த்ரடனும், ஷட்ஜீவநிகாயங்களில் த்ரஸவதை எப்போதும் பண்ணேனென்கிறவிரதபரிணமமுள்ளவனும், நின்ற பஞ்சஸ்தாவரங்களிலுமுள்ள வதையும் ஆறு இந்திரியவழிச்செல்கையுமுள்ளவனுகி ஆத்மஸ்வரூபத்ந்த அடிக்கடி நினைக்கின்றவனும், பஞ்சஸ்தாவரவதையிலும் தனக்குப் பிரயோஜனமல்லாததைச் செய்யாதவனுமாகும். இந்த ஐந்து குணஸ்தானங்களும் சம்ஸார ஜீவன்கள் வர்த்திக்கின்ற குணஸ்தானங்களாகும். அதாவது: கிரகஸ்தாஸ்ரமத்தில் உள்ளவர் வர்த்திக்கின்றவைகளாம். இந்த ஐந்தாம் குணஸ்தானத்தில், திர்யக் ஆயுஷ்யகர்மம் விச்சித்தி.

ஐந்தாம் குணஸ்தானவர்த்தியாகிய தேசசம்யதனில் 11 விகற்பங்களாகும். அவையாவன:—தர்ஸனீகன், விரதிகன், ஸாமாயிகன், புரோஷதோபவாஸன், சச்சித்தவிரதன், ராத்திரியபுக்தன், பிரம்மசாரி, அனரம்பன், அபரிக்கிரகன், அநனுமதி,உத்திட்டபிண்ட விரதன் என்னும் 11-ஸ்ராவகர் நிலைகளாம். இவர்களுடைய ஒழுக்கங்களைப்பற்றித் திருக்குறளாசிரியர் இல்வாழ்க்கையில் 10. குறட்பாக்களால் விளக்கிக் காட்டியிருக்கின்றார். எனினும், மற்ற மேற்கோள் நூல்களிலுள்ள ஸ்ராவகாசாரத்தினையும்சிறிது இல்வாழ்க்கையைப் பற்றிய விஷயங்கள் வருமிடத்துவிளக்கிக்காட்டுவாம்.

ஆறுவது குணஸ்தானவர்த்தியாகிய பிரமத்த ரென்னும் முற்றுந்துறந்தவர்கள். மேல் 141-வது பக்கமுதல் 192-வது பக்கம் வரையில் கூறியுள்ள ஒழுக்கங்கள் முதலானதத்துவங்களை அனு

ஷ்டிக்கும் தன்மை யுடையவர்களில் மூன்று, விகற்பங்களுண்டு. அந்த விகல்பங்களை விவரிப்பாம்: இவைகளைப்பற்றி

“ [illegible]
[illegible] ||”

என்று பஞ்சாத்தியாய் 709 ஆம் சுலோகம் கூறுகின்றது.

இ-ள்: “ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் முதலான முனிவர்களுடைய சாரித்திரங்களானவை சமானமாகப் பரமாகமத்திலே பிரசித்தமாகாநின்றனவானாலும், இம் மூவருக்குள்ளே கிஞ்சித் பேதங்களுண்டு. ஆனால் சாதுபதத்தை அடையாமல் நிச்சயத்தினாலே கேவல ஞானமானது உண்டாவதில்லை” என்பதாம்.

இதில் கூறியுள்ள ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் என்கிற மூவர்களுடைய ஒழுக்கங்கள் ஒன்றாக விருப்பினும் இவர்களில் தாரதம்மியங்களுண்டென்பதை மேல் 136—வது பக்கத்தில் விளக்கியிருக்கிறோம்; அங்குக் கண்டு கொள்க.

மேற்கூறிய பிரமத்தரென்னும் ஆறாவது குணஸ்தானவர்த்திகள் மேல்கூறியுள்ள ஒழுக்கங்களையுடையவராய், அசுபகர்மங்கள் அநேகம் நிர்ஜரித்து (கெட்டு) சுபகர்மங்கள் அநேகம் பெருகிக்கண்ணாடி நிழல்போலத் தன் சரீரத்தில் தன்னைத்தான் காண்கின்ற ஆத்மபாவனையுள்ளவராவர்; இந்தக் குணஸ்தானத்தில் கர்மவிச்சித்தி சூன்யம்.

அப்ரமத்தரென்னும் ஏழாவது குணஸ்தானவர்த்திகள்:— மேற்கூறியுள்ள பிரமத்தரை ஆகாரமுதலான வியாபாரங்களை விட்டு மேற்சொன்ன பஞ்சதலப்ரமாத முதலானவைகளைப் பரிகரித்து ஏகதேசத்திலிருந்து கர்மக்ஷயம் செய்வதற்கு உத்தியோகமுள்ளவராய்த் தியானத்தைப்பற்றி ஆத்மபாவனைக்கு குணஸ்ரேணி யேறுவர்; இவரே ஏழாவது குணஸ்தானவர்த்திகளாவர். இவருக்கு அசுபகர்மங்கள் நிர்ஜரித்து சுபகர்மங்களுடைய குணம் பெருகும்; பந்தமும் உதயமும் ஆகிய அநேக கர்மங்கள் நீங்கி சத்துவத்திலும் எட்டுக்கர்மங்கள் பரிசுத்தியாய்க்கெடும். இவருக்குக்காலம் அந்தர் முகூர்த்தமாகும். இவரும் முன் சொன்ன தியானம் பெருகி நடக்கிறவராவர்.

இந்தக் குணஸ்தானத்தில் கெடுக்கப்பட்ட எட்டுக் கர்மங்களாவன:—தேவாயுஷ்யமும் ஸப்தப்ரகிருதியுமாம், ஸப்தப்ரகிருதியாவது-மித்யாத்வம், சம்மியத்மித்யாத்வம், சம்யத்வப்ரகிருதி, அநந்தானுபந்தி குரோத மான மாயா லோபம் என்பனவாம். இந்த ஏழும் மோகனீய கர்மத்தில் கெடுத்ததாகும்.

அபூர்வகரணரென்னும் எட்டாவது குணஸ்தானவர்த்திகள்:—மேற்கூறிய அப்ரமத்தரே சுபகுணங்களை மேன்மேலும் பெருக்கி, அசுபகுணங்களைக்குறைத்து, பந்த உதய கர்மங்களை நீக்கி, சத்வம் முன் சொன்னபடி யுடையவராகி, மிகுதியும் ஶ்ரேணியேறுவர்; இவரே எட்டாவது குணஸ்தானவர்த்திகள். இவருக்கும் காலம் முன் சொன்னபடி அந்தர்முகூர்த்தமாகும். இந்த குணஸ்தானத்தில் கர்மவிச்சித்தி சூன்யம்.

அநிவிர்த்திகரணரென்னும் ஒன்பதாம் குணஸ்தானவர்த்திகள்:—மேற்சொன்ன அபூர்வகரணரென்கிறவரே குணங்கள் பெருகிவந்து, ஏகநிலையில் நின்று, சுபபரிணமத்தைப் பெருக்கி, பந்தத்திலும் உதயத்திலும் சில கர்மங்களை நீக்கிச் சத்துவத்திலும் முப்பத்தாறு கர்மங்களைப் பரிசுத்தியாய் விடுவர்; இவரே ஒன்பதாம் குணஸ்தானவர்த்திகள். இவருக்குங்காலம் அந்தர்முகூர்த்தமாகும்

இந்தக் குணஸ்தானத்தில் முப்பத்தாறு கர்மங்களைக் கெடுக்கும் விதமாவது:—இந்தக் குணஸ்தானத்தில் அஸங்கியாத சமயங்களாகும்; அவற்றில் ஒன்பது சமயங்களிருக்க மற்ற சமயங்களெல்லாம் கழிந்தபின், முதல் சமயத்தில் பதினாறு கர்மங்கள் விச்சித்தியாம். அவையாவன: நரககதி, நரககத்யானுபூர்வி, திர்யகதி, திர்யகதியானுபூர்வி, ஏகேந்திரியம், த்வீந்திரியம், த்ரீந்திரியம், சதுரிந்திரியம், ஆதபம், ஸ்தாவரம், சூக்ஷ்மம், சாதாரணம், உத்தியோதம் என நாமகர்மத்தில் பதின்மூன்றும், ஸ்தானக்ரந்தி, நித்ராநித்ரை, ப்ரசலாப்ரசலை என தர்ஸனவரணீயகர்மத்தில் மூன்றும் ஆக 16—ஆம். இரண்டாம் சமயத்தில் எட்டுக்கர்மங்கள் விச்சித்தியாம். அவையாவன:—அப்ரத்யாக்யான குரோத மான மாயா லோபம் நான்கும், ப்ரத்யாக்யான குரோத மான மாயா லோபம் நான்கும் ஆம். மூன்றாம் சமயத்தில் நபும்சகவேதமும், நான்காம்சமயத்தில் ஸ்திரீவேதமும், ஐந்தாம் சமயத்தில் ஹாஸ்

யை, ரதி, அரதி, சோகம், பயம், ஜுகுப்ஸையும், ஆறும் சமயத்தில் புருஷவேதமும், ஏழாம் சமயத்தில் சஞ்ஜ்வலன குரோதமும், எட்டாஞ்சமயத்தில் சஞ்ஜ்வலனமானமும், ஒன்பதாம் சமயத்தில் சஞ்ஜ்வலனமாயையும்விச்சித்தியாம். ஆக நாமகர்மத்தில், 13-தர்ஸனவரணியத்தில் 3 மோகனீயத்தில் 20-ஆக 36-கர்மம், கெடுத்ததாகும்.

சூக்ஷ்மஸாம்பராயனென்னும் பத்தாம் குணஸ்தானவர்த்தி:—மேற்சொன்ன அநிவிருத்திகரணனே மோகனீயத்தில் சஞ்ஜ்வலனலோபகஷாயகர்ம மொன்றையும், மகாசூக்ஷ்மமாய், பிரக்ஷாளனம்பண்ணின வஸ்திரத்தில் தோய்த்த குசும்பம் போல சூக்ஷ்மமாகவர்த்தித்து, மற்றமோகனீய கர்மங்களெல்லாம் விடுவான். இவனேபத்தாம் குணஸ்தான வர்த்தியாம். இவன் பந்தம் சாதவேதனீயமொன்றொழிய மற்றவையெல்லாம் விட்டவனாகும். இவனுக்கு உதயத்திலும் சில கர்மங்கள் விட்டுச் சத்துவத்திலும் சூக்ஷ்மசஞ்ஜ்வலன லோபகர்மம் விச்சித்தியாம். இது மோகனீயத்திலாகும. இவனுக்குங்காலம் அந்தர் முகூர்த்தமாகும்.

இவைகள் நிச்சயரத்னத்ரயஸ்வரூப பரமாத்ம த்ரவ்யபரியாயங்களில் தியானிக்கப்பட்ட பிதக்த்வவிதர்க்கவிசார மென்னும் பிரதமசுக்லத்தியானத்தால் கெடுத்தனவாகும்.

உபசாந்த கஷாயரென்னும் பதினொன்றாவது குணஸ்தானவர்த்திகள்:—மேல் சொன்னசூக்ஷ்மசாம்பராய ரென்பவரே உபஸமஸ்ரேணியேறுவர்; இவரே பதினொன்றாவது குணஸ்தானவர்த்திகளாவர்.

இவர், மண்ணோடுகூடிக்குழம்பின தண்ணீரைத் தேற்றாங் கொட்டையினால் தேற்றும்போது குழம்பெல்லாம் கீழேபடிந்திருக்க மேலே தெளிந்த தண்ணீர்காணப்படுவது போல கஷாயமெல்லாம் அடங்கித்தெளிவுகாணப்பட்ட மனதையுடையவராவர். இவருக்குங்காலம் அந்தர் முகூர்த்தமாகும். இந்தக் குணஸ்தானத்தில் கர்மவிச்சித்தி சூன்யம்.

க்ஷீணகஷாயரென்னும் பன்னிரண்டாம் குணஸ்தானவர்த்திகள்:— மேல் சொன்ன சூக்ஷ்மசாம்பராயர் முன் தேற்றின தண்ணீரை ஸ்படிககடத்தில் வடித்துக்கொண்டது போல கஷாயத்தைக் கெடுத்தவராகி, முன்சொன்ன சாதவேதனீயத்தை பந்த

மொன்று முடையவராகி, உதயத்திலும் சிறிது கர்மங்களைவிடுபவராகி, சத்வத்திலும் பதினாறு கர்மத்தைப் பரிசுத்தியாகக்கெடுப்பர்; இவரே பன்னிரண்டாம் குணஸ்தானவர்த்திகளாவர்; இவருக்குங் காலம் அந்தர்முகூர்த்தம்.

இந்தக் குணஸ்தானத்தில், பரமாத்மதத்ரவ்யத்தியான மொன்றிலும், ஏகத்வவிதர்க்க வீசாரமென்னும் த்விதிய சுக்லத்தியானத்தினல், அஸங்கியாத சமயத்தில் இரண்டு சமயமிருக்க மற்ற சமயங்கள் கழிந்த பிறகு, முதல் சமயத்தில் நித்திரையும், பிரசலையும், இரண்டாம் சமயத்தில் மதிஞானவரணீயம், ஸ்ருதஞானவரணீயம், அவதிஞானவரணீயம், மனப்பரியய ஞானவரணீயம், கேவலஞானவரணீயம் 5-ம், சக்ஷுதர்ஸனவரணீயம், அசக்ஷுதர்ஸனவரணீயம், அவதிதர்ஸனவரணீயம், கேவலதர்சனவரணீயம் 4-ம், தானந்தராயம், லாபாந்தராயம், போகாந்தராயம், உபபோகாந்தராயம், வீரியாந்தராயம் என்னும் 5-ம், ஆக 16. கர்மங்கள் விச்சித்தியாம். இவற்றில் ஞானவரணீயகர்மத்தில் 5-ம், தர்சனவரணீயத்தில் 6-ம், அந்தராயத்தில். 5 ம் ஆக. 16. ஆகும்.

ஸயோகி கேவலியென்னும் பதின்மூன்றாம் குணஸ்தானவர்த்திகள்:—அநந்த ஞானம், அநந்த தரிஸனம், அநந்த வீரியம், அநந்தசுக முதலானவைகளையுடையவராகிய அருகத்பரமேஷ்டிகளாவர். இந்தக் குணங்கள் சுக்லத்தியானத்தினலாகும். ஆக்ஞாவிசயம், அபாகவிசயம், விபாகவிசயம், ஸம்ஸ்தான விசயம் என தர்மத்தியானம் நான்கிலும் நடந்த ஜீவர்கள் * தர்மத்தியானத்தைவிட்டு, ப்ரதக்த்வ விதர்க்கவிசாரம், ஏகத்வவிதர்க்க வீசாரம், சூக்ஷமக்ரியாபிரதிபாதி வ்யுபரதக்ரியாநிவர்த்தியென்னும் S சுக்லத்தியானம் நான்கு வகையுள் முந்தின ப்ரதக்த்வவிதர்க்க வீசாரம் என்னும்தியானத்தைப் பொருந்தி, க்ஷீணகஷாய குணஸ்தானசரமத்விசமய பரியந்தம் நடந்து, அதன்மேல் ஏகத்வவிதர்க்கவீசாரமென்னும் இரண்டாம் சுக்லத்தியானத்தைப் பொருந்தி, அதனல் ஞானவரணீயம், தர்ஸனவரணீயம், அந்தராயமென்னும் மூன்றும்,

---

* தர்மத்தியானம் S சுக்லத்தியானமென்னும் இரண்டு வகைகளையும் தவம் என்பதைப்பற்றிய விஷயம் வருமிடத்துக் கண்டு கொள்க.

முன் கெடுத்த மோகனீயத்துடன் கூட நாலுக்கும் உத்திரப்பிரகிருதி நாற்பத்தேழும், நாமகர்மத்தில் பதின்மூன்றும், ஆயுஷ்யத்தில் மூன்றும் ஆகஅறுபத்து மூன்று கர்மம் நிரவசேஷம் (பூர்த்தியாய்) சத்துவத்திலே கெடுக்கையினால், B ஔதாரிகத்துளிருந்த நிகோத சரீரபிண்டங்களும், ஸப்ததாதுக்களும், தியான பலத்தினால் தத்தத்ஸ்வரூபங்களைவிட்டகல, சுத்தபுத்கல ஆகாஸஸ்படிகம் போலவும், மாற்றுக் குறைந்து கிட்டங்கட்டின S பொன்னைப் புடம் போட்டெடுக்க அத்தங்கம் பிரகாசிப்பது போலவும் நிர்மலமா யொளிபரந்த, திவ்யமாகிய கோடிசந்திரசூரிய பிரபாபாஸுர பரமௌதாரிக திவ்யசரீரத்தராகி பஞ்சேந்திரிய விஷயஸ்வரூபம் போகி, அதீந்திரிய ஸ்வரூபராகி, மனவசன காயங்களும், அநந்தாநந்த அம்ஸத்திலே ஒரு அம்ஸமிருக்க மிகுதியெல்லாம் போகி காதி கர்மம் கெடுத்து, அகாதிகர்மம் இருக்கையினால் வெந்த பிரி போலநிலிருக்கிற தென்கிற ஸ்வரூபமேயொழிய அதனால் வரும் குணங்களொன்று மிலராகி, வீதராகசர்வக்ஞராகி அஷ்டோத்தர சதசகஸ்ர நாமத்தையும் உடையவராய் 24-தீர்த்தங்கரர்களாகிய கேவலிகளானால் சமவசரணாதி விபூதிகளும், மற்ற மனிதர்களாகிய அநகார கேவலிகளானால் கந்தகுடியென்னும் ஜினாலயமும் சதுர்வித தேவதேவேந்திரர்களால் நிர்மிக்கப்பட்டு அந்தரங்க பகிரங்க லக்ஷ்மியுடன் கூடின விபவங்களையுடையவராய் சர்வதர்மக்ஷேத்திரங்களிலும் ஸ்ரீவிஹாரம்செய்து இல்லற துறவற தர்மங்களை பவ்விய ஜீவன்களுக்கு உபதேசஞ்செய்து * மன்னுயிர்களெல்லாம், தொழும் சிறப்புக்களையுடையவராவர்.

---

**B.** ஔதாரிகத்துளிருந்த நிகோத சரீர பிண்டங்க ளென்பது-ஸ்தூல சரீரத்திலுள்ள நிகோத ஜீவன்கள், அதன் சரீரத்துக்கு நிகோதசரீர பிண்டங்களென்று பெயர்.

**S.** "சுடச்சுடரும் பொன்போ லொளிவிடும் துன்பம்
சுடச்சுட கோற்கிற் பவர்க்கு"

*. "தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்"

இந்தக் குறட்பாவில் அறப்பெற்றானை என்பதன் கருத்து— காதிகர்மங்களைக்கெடுத்து அநந்த சதுஷ்ட யத்தினைப் பெற்றவனை, அதாவது அருகக் கடவுளை என்பதாம். இதன் விரியுரை தவத்தைப் பற்றிய விஷயங்கள் வருமிடத்துக் காண்க.

மேற் சொன்ன அருகத்பகவான் சமவசரண (அல்லது கந்த குடி)விபவங்களை யெல்லாம் ஒழித்து, ஏகமாய்நின்று, அந்தியத்திலே பஞ்சாக்ஷரத்தை உச்சரிக்கிற காலமளவில் முன்சொன்ன சூக்ஷ்ம மனவசனகாயங்களை விட்டு அயோகி குணஸ்தானத்தைப். பொருந்துவர்; இப்படிப்பட்ட ஸயோகிபட்டாரகருக்கு அகாதிகர்மத்தில் ஆயுஷ்யஸ்திதி கொஞ்சமாய் வேதநீய நாம கோத்திரங்களுக்கு ஸ்திதிமிகுத்திருந்தால், அந்தஸ்திதியை ஆயுஷ்யகர்மங்களோடு கூட சமானம் பண்ணவேண்டி, அவர், முதற்சமயத்திலே கீழேழு கயிறுப்பிரமாணம்.மேலேழுகயிறுப் பிரமாணமுள்ள லோகமெல்லாம் * தண்டாகாரமாய் நிமிர்ந்து, இரண்டாம் சமயத்தில் கிழக்குமுகமாய் நின்றால் தெற்கு வடக்கு உள்ளளவும் வடக்குமுகமாய் நின்றால் கிழக்கு மேற்கு உள்ளளவும் S கவாடாகாரமாய் விரிந்து, மூன்றாம்சமயத்தில் ஔதாரிக சரீரமிருக்க கார்மணசரீரமொன்றும் லோகமெல்லாம் B ப்ரதரயாய் விரிந்து, நாலாஞ் சமயத்தில் கணேதி முதலான வாதத்ரய பரியந்தம் லோகமெல்லாம் T பூர்ணமாய் நிறைந்து,ஐந்தாம் சமயத்தில் திரும்பி ப்ரதரயிலடங்கி, ஆறும் சமயத்தில் கவாடத்திலடங்கி, ஏழாம் சமயத்தில் தண்டத்துடளங்கி, எட்டாம் சமயத்தில் பழய சரீரத்துளடங்கி, ஆயுஷ்யஸ்திதியுடனே வேதனீய நாமகோத்திரங்களை சமானஸ்திதி பண்ணி, அப்பால் அயோகி குணஸ்தானத்தைப் பொருந்துவர்.

இந்த அவஸ்தைதான் ஈஸ்வரன் அடிமுடிகாணுதபடி நிமிர்ந், தானென்றும், விஷ்ணுலோகமெல்லாம் வியாபித்துத் தூண் துரும்பு முதலாகிய சர்வபொருள்களினு மிருப்பானென்றும் சொல்லப்பட்

* தண்டாகாரம் என்பது மூலசரீரத்தைகாட்டிலும் மும்மடங்கு பருமனாகவும் லோகப்பிரமாண பதினாலுகயிறு உயரமளவும் ஆத்மாவியாபித்தலாகும்.

S கவாடாசாரமென்பது முன்போல்மும் மடங்குபருமனும் இரட்டைக்கதவு விரிவதுபோல தெற்கு வடக்கு எழுகயிறு அகலமும் வியாபித்தல்.

B ப்ரதர.என்பது லோகத்தைச் சுற்றிக்கொண்டிருக்கும் மூன்று வாதவலயங்களைவிட்டுக் குடத்தில் உள்ளே நிறைந்து இருக்கும் பால் போல வியாபித்தலாகும்.

T பூர்ணமென்பது மூன்றுவாதவலயங்கள் சகிதமாக லோக முழுதும்வியாபித்தலாகும்.

டது. இவர்களுக்கு இது, சூக்ஷ்மக்ரியா பிரதிபாதி என்னும் மூன்றும் சுக்லத்தியான உபசாரத்தாலுண்டாவதாகும்.

அயோகி பட்டாரகராகிய பதினன்காம் குணஸ்தானவர்த்திஸ்வரூபம்:—ஆயுஷ்யத்தில் பஞ்சாக்ஷரம் உச்சரிக்கிற காலத்துள், அந்தியத்விசமயத்தில், முன்சொன்ன பதினெண்ணாயிரம் சீலமும் சம்பூர்ணமாகி, வ்யுபரதக்ரியா நிவர்த்தியென்னும் நான்காம் உபசார சுக்லத்தியானத்தால், முதல் சமயத்தில் எழுபத்திரண்டு கர்மம் விச்சித்தியாக, அந்தியத்தில் பதின்மூன்று கர்மம் விச்சித்தியாக ஆத்மன் தனக்குள்ள அஷ்டவிதகுணங்களும் மேகம் மூடின ஆதித்யன் மேகம் நீங்கினவுடனே ஸ்வபாவமாய் விளங்குவது போல விளங்கிக் காற்றில்லாதவிடத்தில் அக்னியெழும்புவது போலவும், மண்பற்றின சுரைக்குடுக்கை ஆழ்ந்த தண்ணீருக்குள்ளே கிடந்து மண்கரைந்தவுடனே மேலெழும்புவது போலவும், ஏரண்டபீஜம் (ஆமணக்குக்கொட்டை) காய்வெடித்த வுடனே உயர எழும்புவது போலவும், ஜீவன் ஊர்த்துவகதி ஸ்வபாவனானையினல் ஔதாரிக தைஜஸ கார்மண மென்னும் சரீரத்ரயம் போக ஒரு சமயத்திற்குள்ளே லோகாக்ரத்திற் சென்று சித்திக்ஷேத்திரமாகிய மோக்ஷத்தில் நிலைக்கொள்ளும். இதுவே பதினன்காம் குணஸ்தான வர்த்திஸ்வரூபமாம். இவர் நிலைமை 137-வது பக்கம் பார்க்க.

மோக்ஷத்தின் ஸ்வரூபத்தையும், அதில் நிலைக்கொண்டிருக்கும் சித்தபரமேஷ்டிகளின் குணத்தையும் மேல் 129-130-வது பக்கங்களில் கூறியுள்ளோம்; அங்குக் கண்டுகொள்க.

இந்த 14-வது அயோகி குணஸ்தானத்தில் ஆத்மன் வர்த்திக்கும்போது அஸங்கியாத சமயங்களாகும். அவற்றில் இரண்டு சமயங்களிருக்க மிகுதியெல்லாம் கழிந்தபின் முதல் சமயத்தில் எழுபத்திரண்டு கர்மம் விச்சித்தி அவையாவன:—ஔதாரிக சரீரம், வைக்ரீயிகம், ஆஹாரகம், தைஜஸம், கார்மணமென சரீர நாமகர்மம் 5-ம், ஔதாரிக பந்தனம், வைக்ரீயிக பந்தனம், ஆஹாரக பந்தனம், தைஜஸ பந்தனம், கார்மண பந்தனம் எனப் பந்தன நாமம் 5-ம், ஔதாரிக சங்காதம், வைக்ரீயிக சங்காதம், ஆகாரசங்காதம், தைஜஸசங்காதம், கார்மணசங்காதம், என சங்காதநாமம் 5-ம், சமசதுரஸ்ரஸம்ஸ்தானம், நியக்ரோதஸம்ஸ்தானம், ஸ்வாதிஸம்ஸ்தானம், வாமனஸம்ஸ்தானம், குப்ஜஸம்ஸ்தானம், ஹுண்டசம்ஸ்தானம் எனசம்ஸ்தானநாமம் 6-ம், ஔதாரிகாங்

கோபாங்கம், வைக்ரீயிகாங்கோபாங்கம், ஆஹாரகாங்கோபாங்கம் என அங்கோபாங்க நாம கர்மம் 3-ம், வஜ்ரவிரஷபநாராச சம்ஹநநம், வஜ்ரநாராச சம்ஹநநம், நாராச சம்ஹநநம், அர்த்தநாராச சம்ஹநநம், கீலிதசம்ஹநநம், அஸம்பிராப்தஸ்ரபாடிகா சம்ஹநனம் என சம்ஹநந நாமகர்மம் 6-ம், ஸ்வேதவர்ணம், பீதவர்ணம், ஹரிதவர்ணம், அருணவர்ணம், கிருஷ்ணவர்ணம் என வர்ண நாம கர்மம் 5-ம், சுகந்தம், துர்க்கந்தம் என கந்தநாமம் 2-ம்; திக்த ரஸம், கடுகரஸம், கஷாயரஸம், ஆம்லரஸம், மதுரரஸம் என ரஸ நாமம் 5-ம், மிருதுஸ்பரிஸம், கர்க்கசஸ்பரிஸம், குருஸ்பரிஸம், லகுஸ்பரிஸம், சீதஸ்பரிஸம், உஷ்ணஸ்பரிஸம், ஸ்நிக்தஸ்பரிஸம், ரூக்ஷஸ்பரிஸம் என ஸ்பரிஸநாமம் 8-ம், ஸ்திரம், அஸ்திரம், சுபம், அசுபம், ஸுஸ்வரம், துஸ்வரம், தேவகதி, தேவகத்யானுபூர்வி ப்ரஸஸ்தவிஹாயோகதி, அப்ரஸஸ்தவிஹாயோகதி, துர்ப்பகம், நிர்மாணம், அயஸஸ்கீர்த்தி, அநாதேயம், ப்ரத்திேயக சரீரம், அபர்யாப்தி, அகுருலகு, உபகாதம், பரகாதம், உச்வாஸம், அஸாத வேதநீயம், நீசைர்க்கோத்திரம் 22-ம் ஆகிய எழுபத்திரண்டு கர்மங்களாம். இரண்டாம் சமயத்தில் ஸாதவேதனீயம், உச்சைர்க்கோத்திரம், மனுஷ்யகதி, மனுஷ்யகத்யானுபூர்வி, பஞ்சேந்திரியஜாதி, ஸுபகம், த்ரஸம், பாதரம், பர்யாப்தி, ஆதேயம், யஸஸ்கீர்த்தி, மனுஷ்யாயுஷ்யம், தீர்த்தங்கரத்வ மெனப்பதின்மூன்றும் விச்சித்தி. ஆக இந்த 85-அகாதி கர்மங்களேயும் கெடுத்தவர் அயோகி பகவான்.

ஆத்மர்கள் ஆறுவது குணஸ்தானத்திலிருந்து மேல் ஒவ்வொரு குணஸ்தானங்களை அந்தர் அந்தர் முகூர்த்தத்தில் அடைகின்றதில் க்ஷபகஸ்ரேணியென்றும், உபஸமஸ்ரேணியென்றும் இரண்டு வகைகள் உள்ளன. அவற்றில் உபசமஸ்ரேணியேறுகின்றவர் ஒவ்வொரு குணஸ்தானமாக 11-வது குணஸ்தான பரியந்தம் ஏறி ஏறி மறுபடியும் இழிந்து ஆறுவது குணஸ்தானத்திலேயேவர்த்திப்பர். க்ஷபகஸ்ரேணி ஏறுபவர்கள் அந்தர் அந்தர் முகூர்த்தத்தில் 12-வது குணஸ்தானத்தையடைந்து பின் 13-வது குணஸ்தானத்தில், சமவசரணத்துடன் ஸ்ரீவிகாரஞ்செய்து, பின் 14-வது குணஸ்தானத்தை யடைந்து பின் மோக்ஷமடைவார்கள்

இந்தக் குணஸ்தானங்களின் விஷயங்கள் அபாரமாகிய தத்துவங்கள் நிறைந்தவைகள். அவற்றுள் இங்குக் கர்மஸ்வரூபத்தி

னுள்ளவற்றைமாத்திரம் சங்கிரகமாக எழுதிக்காட்டியுள்ளேன். இவற்றைப் பதார்த்தசாரம், கோமடசாரம், லப்திஸாரம் முதலான கிரந்தங்களில் பரக்கக்காணலாம்.

கர்மங்களின் வகைகளாவன:—ஞானவரணீயம், தர்ஸனவரணீயம், வேதனீயம், மோகனீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராய மென்னும் 8. கர்மங்களும் மூலப்பிரகிருதிகளாம். மேற்கூறியுள்ள காதிகர்மங்கள் 63, அகாதிகர்மங்கள் 85. ஆககர்மங்கள் 148-ல், சுபகர்மங்கள், அசுபகர்மங்களென இரு வகைகள் உண்டு. அவற்றில் சுபகர்மங்கள் அசுபகர்மங்களினும் வர்த்திக்கும். இந்தப் பேதங்களையும், கர்மங்களின் கிருத்தியங்களையும் கர்மஸ்வரூபத்தில் கண்டு கொள்க. மேல்படி 148-கர்மங்களும் உத்திரப்பிரகிருதிகளாம். இந்த 148-கர்மங்களுக்கும் உத்தரோத்தரப்பிரகிருதி பிரத்யேகம் ஒவ்வொன்றுக்கும் அஸங்கியாதவிகல்பமாகும்.

இனி, அறத்தைப்பற்றித் திருக்குறளாசிரியர் கூறியிருப்பனவும் ஜைநமதசித்தாந்தம் என்பதைச் சிறிது கூறுவாம்:—

குறளாசிரியர்,

"சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு"

என்னுங் குறட்பாவினால் அறத்தின் உயர்வை விளக்குகின்றார்.

இ-து: "மக்களுயிர்களுக்குத் தர்மமானது அழியாச்சிறப்பாகிய மோக்ஷத்தையும் கொடுக்கும்; தேவாதி ஐஸ்வரியங்களையும் கொடுக்கும்; ஆதலால் தர்மத்தைக்காட்டிலும் பெரிதாகிய செல்வமானது வேறு இல்லை" என்பதாம். ஆத்மா, தனது குணமாகிய சைதன்ய விசேஷ ஞானதர்ஸனஸ்வரூபன். அவற்றால் சுத்தோபயோக பரிணமனமுற்றால் மோக்ஷமும், சுபோபயோக பரிணமன முற்றால் தேவாதி சுகப்ராப்த புண்ணியமும் ஆகும். அசுபோபயோக பரிணமனத்தால் நரகாதி துக்கப்ராப்தமுமாகும்.

இன்னும்,

"அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூஉங்கில்லை கேடு"

என்னுங் குறட்பாவினாலும் தர்மத்தின் சிறப்பினை விளக்குகிறார்.

இ-து: "தர்மத்தின் மேற்பட்ட செல்வமுமில்லை; அத்தர்மத்தை மறத்தலைப்பார்க்கிலும் கேடுமில்லை" என்பதாம்.

இந்தக்குறட்பாவின் கருத்தினை,

"அறத்தினூங் காக்க மில்லை என்பது மிதனை யாய்ந்து
மறத்தினூங் கில்லை கேடு மென்பது மதித்தி வர்தம்"

என்று மேருமந்தரபுராணம் 747-ஆம் கவிகூறுகின்றது. இதனையும் உணர்க.

இன்னும் இதையனுசரித்து,

"சக்கர மடைந்தபின் னறத்தினை மறந்தா
ரெக்கதுணை மிக்கதுய ரத்திடை யுழைப்பார்"

என்று மேருமந்தரபுராணம் 955-ஆம் கவிகூறுகின்றது.

இ-து: "அரசருக்குரிய ஆக்ஞாசக்கிரத்தையடைந்து மிக்க ஐஸ்வரியம் பெற்ற பிறகு தர்மத்தை மறந்தவர்கள் (நரகத்தில் பிறந்து) ஏகமாக (அதாவது ஒன்றாகவே நீங்காமல்) தங்களைச்சேர்ந்திராநின்றதாகிய அதிகமான அஸாதாதி துன்பங்களிலேயே பொருந்திச் சுழன்று ஸ்ரமப்படுவர்" என்பதாம்.

திருக்குறளாசிரியர் இன்னும்,

"வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்"

என்றும் தர்மச் சிறப்பினைக் கூறுகின்றனர்.

இ-ள் "ஒருவன்-ஒருமனிதன், வீழநாள்-(தருமஞ் செய்யாமற்)கழியுநாள், படாமை-உண்டாகாமல், நன்று-தருமத்தை, ஆற்றின்-செய்வானாயின், அஃது-அச்செய்கையானது, வாழ்நாள்-சதுர்க்கதியில்சுழன்று வாழும்-வழி-வழியை, அடைக்குங்கல்-அடைக்குங்கல்லாம்" என்பதாம். மனிதன், தர்மத்தினால் நரக, திர்யக், தேவ, மனுஷ்யமாகிய இந்நான்கு கதிகளின் பிறப்பினை நீக்கிப் பஞ்சமகதியாகிய மோக்ஷத்தையடைவான் என்பது இதன் தாத்பர்யம்.

இதற்கிணங்க,

". . . . . . . . . . . . . படுகரகுன்
அறந்தலைப் பட்டவர் கட்கடைத் தேகிற்கு மார்வமுள்ளிட்
டிறந்தமுக் குற்றந்தெதம் மீசனின் னேசர்கட் கென்றெதிரே
திறந்துநிற் குஞ்சித்தி நன்னகர் வாசற் றிருக்கதவே"

என்று திருநூற்றந்தாதி 51-ஆம் செய்யுள் கூறுகின்றது.

இ-ள்: "சுவாமியே! நரகமானது உனது ஸ்ரீதர்மத்திலே வந்து தலைப்பட்டவர் புகுதாமல் அடைத்துக் கிடவாநிற்கும், உனது அன்பர்களுக்காகவே எதிராக முத்தியாகிய நல்ல நகரத்தினுடைய வாயிலின் அழகிய கதவானது திறக்கப்பட்டு நிற்கும்" என்பதாம்.

இன்னும் திருக்குறளாசிரியர்,

"அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில"

என்றும் கூறுகின்றார்.

இ-ள்: "அறத்தான்-இல்லறதுறவற தர்மங்களினால், வருவது-வரப்பட்டது, இன்பம்-சௌக்கியம், (அதாவது, இல்லறத்தினால் வருவது புண்ணிய தர்மோதயமாகிய தேவாதி சுகஸ்வரூபத்தை யளிக்கும் சம்ஸாரசுகமாகும்; துறவறத்தால் நிச்சயஸ்வாத்மோர்த்தமாகிய மோக்ஷ சுகமாகும்) மற்றெல்லாம்-இந்த இரண்டு அறங்களிலும் சேராதவைகளெல்லாம், (அஞ்ஞானத்தினால் ஏற்படுவனவெல்லாம்), புறத்த-அதர்மமாகிய பாபச்செயல்களாம், (அவற்றால்) புகழுமில-(ஆத்மாவுக்கு) புகழ்ச்சியுமில்லை" என்பதாம்

குறளாசியர் அறத்தின் சிறப்பினைக் கூறியுள்ள இந்தக்குறட்பாவின் உரையில் பரிமேலழகர், "தன்மனைவியோடு கூடுமின்பமே யின்பமாகும், பிறர்மனைவியோடு கூடுமின்பம் துன்பமாம்" என்றும், "இன்பம் காமத்தின் அனுபவம்" என்றும், "இன்பத்திற் புறமெனவே துன்பமாயிற்று" எனவும் தம் கருத்திற் கிசைந்தவாறு பொருளுரைத்திருக்கின்றனர். அப்பொருள் பொருத்தமற்றதாகும். எவ்வாறெனின் "சிறப்பீனுஞ் செல்வமுமீனும்" என்ற குறளில், "மக்களுயிர்க்குத் தர்மத்தைக் காட்டிலும் ஆக்கம் தருவது வேறில்லை" யென்றும், "அத்தர்மம் சுவர்க்கமும் மோக்ஷமும் கொடுக்கும்" என்றும், பொதுவாகக் கூறி இந்தக் குறட்பாவில் "தர்மம் இல்லறதர்மம், துறவறதர்மம் என இருவகைத்து" எனவும், "அவற்றில் இல்லறதர்மம் சுவர்க்கவின்பத்தையும், துறவறதர்மம் மோக்ஷவின்பத்தையும் தரும்" என்றும், இவ்விரண்டு அறங்களில் சேராது மற்றவைகளெல்லாம் புறம்பானவைகள்; (அவற்றால்) கீர்த்தியுமில்லை" என்ற கருத்துக்களை சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் என்னும் இலக்கணத்திற்கிணங்க ஆசிரியர் நன்கு விளக்கிக் காட்டியிருக்க பரிமேலழகர் இவற்றை யுணராமல் முரண்பாடான கருத்துக் களைக்கொண் டெழுதியிருக்கிறார்.

இங்கு நாம் கூறியபடி அறம் என்பதில் இல்லறம் துறவறம் என இரண்டையும் கொள்ளவேண்டு மென்பதை இதனடியில் எடுத்துக்காட்டும் சம்ஸ்கிருத சுலோகங்களால் நண்பர்கள் நன்குணரலாம்.

"𑌸𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑍋 𑌦𑍍𑌵𑌿𑌧𑍈𑌵 𑌯𑌤𑌿 𑌗𑍃𑌹𑌸𑍍𑌥 𑌭𑍇𑌦𑌤𑌃।
𑌆𑌦𑍍𑌯𑍋 𑌦𑌶𑌵𑌿𑌧𑍋 𑌯𑌤𑍍𑌯𑌃 𑌕𑍍𑌷𑌮𑌾𑌦𑍍𑌯𑍋 𑌰𑌤𑍍𑌨𑌤𑍍𑌰𑌯𑍀𑌭𑌿𑌃॥"

என்பது நாககுமாரகாவியம் 1-ம் சருக்கம் 72-ம் சுலோகம்.

இ-ள்: "தர்மம் இரண்டு; அவையாவன: துறவறதர்மம், கிரகஸ்த தர்மமென்பனவாம்; முதலாவதான முனிவர் தர்மமானது உத்தம ஸப்தத்தை ஆதியிலே உடைத்தாயிருக்கிற க்ஷமைமுதலான பத்துவகைகளாம்" என்பதாம்.

இதற்கிணங்க,

"அவஞ்செய்கின் றேனென் றறிகின்ற தேயில்லை யந்தமில்லாச்
சிவஞ்செய்கின் றனெங்க ளர்த்தப்பி ரான்திரு வாய்மொழிந்த
தவஞ்செய்கின் றாயில்லை தானஞ்செய் தாயில்லை நீநடுவே
யெவன்செய்கின்றாயிந்தி யஞ்சொன்ன வாசெய்யுமென்னெஞ்சமே?"

என்று திருநூற்றந்தாதி 17-ஆம் செய்யுள் கூறுகின்றது-

இ-ள்: "அவத்தஞ்செய்கின்றேன் என்று சற்றும் அறிகின்றாயில்லை; எமது தீர்த்தனலருளிச்செய்யப்பட்ட துறவறஞ்செய்கின்றாயில்லை; அல்லது இல்லறந்தானுஞ் செய்கின்றாயில்லை; இவ்விரண்டு மாகாதே நீயாது செய்கின்றாய்? ஐம்பொறிகளும் விரும்பிய பிரகாரம் செய்கின்ற எனது நெஞ்சமே" என்பதாம்

இன்னும்,

"இல்வாழ்க்கை யானும் இலதானும் மேற்கொள்ளார்
நல்வாழ்க்கை போக நடுவுநின்—றெல்லாம்
ஒருதலையாச் சென்று துணியா தவரே
இருதலையும் காக்கழித் தார்."

என்று பழமொழி 390-ஆம் செய்யுள் கூறுகின்றது.

இ-ள்: "தர்மாதர்மங்களை அறிந்து, இல்லற நெறியையாவது துறவறநெறியையாவது தம்மிடத்து மேற்கொள்ளாமல் வீணிலே காலம் கழிப்பவர் காவடியின் இருதலைப்பொருளையும் போக்கினவர்போல இம்மைப்பேறு மின்றி மறுமைப்பேறுமின்றி ஒழிவர்" என்பதாம்.

இன்னும்,

"ஆத்மஸ்வரூபமவகம்ய க்ருதப்ரயத்நா யே
ஸாகாரதர்மே யதிதர்மே விஶிஷ்டமார்கே
தே ப்ராப்நுவந்தி பரமாத்மபதம் விஶிஷ்டம்
நாந்யே ஜநா யதி சரந்தி விசித்ர வ்ருத்தம்"

என்று பதார்த்த சாரம் ஸாகார (இல்லற) தர்மத்தில் உள்ள சுலோகம் கூறுகின்றது.

இ-ள்: "எந்த மனிதர்கள் ஆத்மஸ்வரூபத்தை அறிந்து இல்லற துறவறங்களினால் விசிஷ்டமான மார்க்கத்தில் நன்மைசெய்யப் பிரயத்தனப்படுகிறார்களோ அவர்கள் பரமாத்ம ஸ்வரூபத்தை அடைகிறார்கள்; மற்றைய ஜனங்கள் அநேகப் பிரகாரமான ஒழுக்கங்களில் நடவாநின்றார்களாதலின் பரமாத்ம ஸ்வரூபத்தை அடைய மாட்டார்கள். என்பதாம்.

இன்னும் "சிறப்பீனும்" என்றகுறட்பாவுக்கிணங்க தர்மத்தின் இயல்பைப்பற்றி,

"உம்பர்தம் முலகினுய்க்கு முலகினுக்கிறைமை யாக்கும்
வெம்பியபிறப்பின் வாங்கி வீட்டின்கண் வைக்கு மெய்யே
நம்பிநல் லறத்தைப் போலுந் துணையில்லை நமக்கு நாடின்
கம்பமி னிலைமை யாகித் திருவறங் கைக்கொள் ளென்றேன்"

என்று மேருமந்தர புராணம் 968-ஆம் கவிகூறுகின்றது.

இ-ள்: "தேவர்களுடைய உலகமாகிய ஊர்த்துவலோகத்தில் அடைவித்துப்புண்ணிய பலன்களைக்கொடுக்கும்; அதுவுமல்லாமல் இம்மூன்று லோகத்திற்கும் ஆதிபத்தியமாகுந்தன்மையான அரகந்த பதவியையும் செய்விக்கும்; வெதும்பும்படியான இச்சம்ஸாரத்தில் பிறக்கும் தன்மையினின்றும் விலக்கி மோக்ஷத்திலே ஸ்தாபிக்கும்; ஆராயுமிடத்தில் ஆத்மனுகிய நமக்கு நன்மையாகிய தர்மத்தைப்போல ரக்ஷணையாகும் பொருள் வேறொன்றில்லை; (ஆகையால்) சலனமில்லாத உறுதியையுடையவனுகி (ஸ்ரீஜிந) தர்மத்தைக் கைக்கொள்வாயாக" என்பதாம்.

இன்னும்,

"தர்மஸ்ஸர்வஸுகாகரோ ஹிதகரோ தர்மம்புதாஶ்சிந்வதே
தர்மேணைவ ஸமாப்யதே ஶிவஸுகம் தர்மாய தஸ்மை நம:।
தர்மாந்நாஸ்த்யபர: ஸுஹ்ருத்பவப்ருதாம் தர்மஸ்ய மூலம் தயா
தர்மே சித்தமஹம் ததே ப்ரதிதிநம் ஹே தர்ம மாம் பாலய।"

என்று கிரியாபுஸ்தகம் சாரித்ரபக்தி 25-ம் சுலோகம் கூறுகின்றது.

இ-ள்: "ஸமஸ்த சுகங்களுக்கும் ஸ்தானமாயும், நன்மையையுண்டு பண்ணுவதாயுமுள்ள தர்மத்தைப் புத்திமான்கள் தேடுகின்றார்கள்; தர்மத்தால்தானே மோக்ஷமடைவிக்கப்படுகிறது; ஆகையால், அந்தத் தர்மத்தின்பொருட்டு நமஸ்காரம்; பிராணிகளுக்குத் தர்மத்தைக்காட்டிலும் வேறு சிநேகிதன் இல்லை; தர்மத்திற்குத் தயையே காரணம்; தர்மத்தினிடத்தில் நான் எப்போதும் மனதைத்தரிக்கின்றேன்; வாராய் தர்மமே! என்னை ரக்ஷிக்கவேண்டும்." என்பதாம்.

இவற்றையெல்லாம் ஆராயின் இந்த அறன்வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தினுலும் ஆசிரியர் ஜைநதர்மத்தையே விளக்கி அருளியிருக்கின்றா ரென்பதை அறிஞர்கள் அறிதல் கூடும்.

இன்னும் குறளாசிரியர், அறிவுடைமை (நன்ஞானம்) என்னும் அதிகாரத்தில்,

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று கூறி அருளியுள்ளார்.

இ-ள்: "எப்பொருள்-(கடவுள் சாஸ்திரம் முனிவர் தத்துவம் ஆகிய) எந்தப் பொருள்களை, யார்யார்வாய்க்கேட்பினும் - எவரெவர்வாயினல் கேட்டபோதிலும், அப்பொருள்-அப்பொருள்களுக்குள்ளே, மெய்ப்பொருள் - (மெய்க்கடவுளால் அருளிய) ஜீவாதிதத்துவங்களின் உண்மைப் பொருள்களை, காண்பது - பொய்யின்றாகக்காணவல்லது, அறிவு-நன்ஞானம்" என்பதாம்.

பலர் பலவாறு சொல்லக்கூடிய பொருள்களில் (கடவுள் சாஸ்திரம் முனிவர் ஜீவாதிதத்துவம், ஆகிய) உண்மையை உணர்த்துகின்ற தத்துவப் பொருள்களை அறிவதே நன்ஞானம் என்பது இதன் கருத்து.

இவ்வுண்மைக் கருத்துக்கு மாறாகப் பரிமேலழகர், குணங்கள் மூன்றும் மாறி மாறி வருதல் யாவர்க்கு முண்மையாயின், உயர்ந்த பொருள் இழிந்தார் வாயினும், இழிந்தபொருள் உயர்ந்தார் வாயினும், உறுதிப் பொருள் பகைவர் வாயினும், கெடுபொருள் நட்டார் வாயினும், ஒரோவழிக் கேட்கப்படுதலான், "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு" மென்றார் என்றும், பொருள் இன்னதென்று விளக்காமலும் கூறுவது பொருத்தமற்றதாகும்.

இங்குக் கூறிய பொருள்கள் மனை, பணம், காசு, வீடு, மாடு, பெண்டீர்,மக்கள் முதலானவைகளல்ல;இம்மாதிரித் தோற்றமுடைய பொருள்யாவும் அழியுந்தன்மை யுடையன. இதுபற்றியே ஆசிரியர்,

"நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை"

என்று, 'நிலையாமை' என்னும் அதிகாரத்தில் கூறுகின்றார்.

"நிலையில்லாத பொருள்களை நிலையுள்ளன வென்று நினைக்கும்படியான அற்பபுத்தியை யுடைத்தா யிருத்தல் கடைப்பட்ட குணமாம்" என்பது இதன் கருத்து.

இன்னும், இப்பொருள்களின் நிலையாமையைப் பற்றி,

"கூத்தாட்ட வைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று"

என்றும் ஆசிரியர் கூறுகின்றார்.

இதன் கருத்து: "பெரும் பொருள் சேருதல், கூத்தாடுஞ் சபையில் வந்து கூடும் மனிதர் கூட்டத்தை நேர்த்ததாம்; அதுபோகுதல் அக்கூத்தாட்டு முடிந்தவிடத்து அக்கூட்டம் நீங்கியது போன்றது" என்பதாம்.

மேற்கூறிய மெய்ப்பொருள்கள் எவையெனின்,

"தலைமகனும் நூலும் முனியு மிம்மூன்றும்
நிலைமைய தாகும் பொருள்"

என்று அருங்கலச் செப்பு 4-ஆம் செய்யுளில் கூறப்பட்டனவாம்.

இ-ள்: "தலைமகனும் - கடவுளும், நூலும் - அக்கடவுளால் அருளிய வேதங்களும், முனியும்-(அக்க வேதங்களிலுள்ள இல்லற துறவற ஜீவஸ்வரூபமுதலான தத்துவங்களை உபதேசம் செய்த) குருவும், (ஆகிய) இம் மூன்றும்-இந்த மூன்றுபொருள்களும், நிலைமையதாகும்- (அழிவில்லாத) நிச்சயப் பொருளாகும்" என்பதாம்.

இதன் கருத்து: "கடவுளும், வேதங்களும், முனிவரும் நிச்சயப் பொருள்கள்" என்பதாம்.

இத்தன்மையாக வுள்ள பொருள்களை ஒவ்வொரு சமயத்தவர்களும் வெவ்வேறு வகைகளாகக் கூறியிருக்கின்றார்கள். தங்கள் தங்கள் வேதங்கள் முதலானவைகளையும், அந்த வேதங்களில் சொல்லும் இல்லற துறவற ஜீவாதி தத்வங்களையும் தங்கள்தங்கள் கடவுள் உபதேசம் செய்தாரென்றும் சொல்லிக்கொள்வதுடன் தங்கள் தங்கள் கடவுள் சாஸ்திரமுதலான தத்துவங்களை உயர்த்தியும், பிறசமயக் கடவுள் சாஸ்திர முதலானவைகளை இழித்தும் அந்தந்தச் சமயங்களின ஆசாரியர்கள் கூறியிருக்கின்றார்கள். அவற்றை இங்குக் கிஞ்சித்து எடுத்துக்காட்டி, ஜைநமதக் கொள்கைக்கும்

அவற்றிற்கும், உள்ள வேறுபாட்டையும், குறளுக்கும் ஜைனமதக் கோட்பாட்டுக்கு முள்ள சம்பந்தத்தையும் விளக்குவாம்:—

கடவுள் தத்துவத்தைப் பற்றிச் சைவசமயத்தில் திருஞான சம்பந்தர்,

"தேவரு மமரர்களுந் திசைகண் மேலுள தெய்வமும்
யாவரும்மறியாத தோர் மதியாற்றழ லுறிவினர்
மூவரும் மவரென்னவு முதல்வரும் மியவென்னவு
மேவரும் பொருளாயினர் மேய துவ்விள நகரே"

என்று 2-ஆம் திருமுறை திருவிள நகர் பதிகத்தில் கூறுகிறார் இன்னும் அப்பர்,

"மூவராய் முதலாய் நின்ற மூர்த்தியே"

என்று ஐந்தாம் திருமுறை திருச்செம்பொன் பள்ளிப் பதிகத்திலும்,

"மூவன்காண் மூவர்க்கு முதலானான்காண்
முன்னுமாய்ப் பின்னுமாய் முடிவானான் காண்
காவன்கா னுலகுக்கோர் கண்ணானான்காண்
கங்காளன் காண்கயிலை மலையினானகாண்"

என்று ஆறாம் திருமுறை திருமுண்டீச்சுவரம் திருத்தாண்டகம் பதிகத்திலும் கூறியுள்ளார்,

வைணவ சமயத்தில் பொய்கையாழ்வார்

"முதலாவார் மூவரே அம்மூவருள்ளும்
முதலாவான் மூரிநீர் வண்ணன்"

என்று இயற்பா முதற்திரு வந்தாதி 15-ஆம் பாசுரத்தில் கூறுகின்றார்.

திருஞான சம்பந்தரும் அப்பரும், பிரம்மா விஷ்ணு சிவன் ஆகிய மூவரும் ஒருவரே யென்று கூறுவதுபோல பொய்கையாழ்வாரும் கூறுகின்றார். இவ்வாறு கூறும் இவ்விரண்டு சமயத்தினரும் மேல்கண்ட முதல்வராகி நின்ற முதற் கடவுள் தங்கள் தங்கள் தெய்வமென்று விகற்பித்துக் கூறுகின்றார்கள். இருவரும் முதற்கடவுள் ஒருவரே என்று ஒப்புக்கொள்ள வில்லை; சைவசமயத்தில் முதற்கடவுள் யாவரு மறியாத தோர் பிரம்மமென்றும் அவற்றிலிருந்து மூவர் தோன்றினரென்றும், அம்மூவரில் முதற் கடவுள சிவன்

என்று சொல்லுகிறார்கள். வைணவ சமயத்தில் முதற்கடவுள் லக்ஷ்மீ சமேதராகிய விஷ்ணு வென்றும் அவர் ரூபியாகவும் அரூபியாகவும் இருப்பதாகவும் கூறுகின்றார்கள்.

மேற்கூறியபடி, சைவம், வைணவம் ஆகிய இவ்விரண்டு சமயங்களிலும் மேல்குறித்த விகற்பத்துடன் பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும் ஒருவரே யென்று பல நூல்களாலும் விளக்கிக் காட்டியிருப்பினும் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தெய்வத்தை உயர்த்தியும் பிறதெய்வங்களைத் தாழ்த்தியுங் கூறுவதை அடியில் வரும் செய்யுட்களால் உணரலாம்,

"பிரமனுந் திருமாலும் கைதொழப் போழலாயபெம்மா
னரவஞ்சேர் சடையந்தணன்"

என்று சைவத்தில் திருஞான சம்பந்தர் முதல்திருமுறை திருவேகம்பன் பதிகத்தில் சிவனைச்சிறப்பித்துக் கூறுகின்றார்.

இதன் கருத்து: "பிரம்மாவும், விஷ்ணுவும் சிவனைக் கைகூப்பி வணங்குகின்றார்கள்" என்பதாம்

வைணவசமயத்தில் நம்மாழ்வார் திருவாய்மொழி 7—வது பத்தில்,

"என்றுகொல் சேர்வதந்தோ வரனான்முக னேத்துஞ்செய்ய
நின்றிருப் பாதத்தை"

என்று 6-ஆம் பதிகம் 2-வது பாசுரத்தில் கூறுகின்றார்

இதன் கருத்து: "சிவனும் பிரம்மாவும் துதிக்கும்படியான (விஷ்ணுவே) உன் திருவடிகளை அடைவது எக்காலோ" என்பதாம்.

இன்னும் திருமழிசை யாழ்வார்,

"அறியார் சமண ரயர்த்தார் பவுத்தர்
சிறியார் சிவபட்டார் செப்பில்—வெறியாய
மாயவனை மாலவனை மாதவனை யேத்தாதார்
ஈனவரே யாதலா லின்று."

என்று நான்முகன் திருவந்தாதி 6-ஆம் பாசுரத்தில் கூறுகின்றார்.

இதன்கருத்து: "ஜைநர் உண்மையை அறியவில்லை; புத்தர் யதார்த்தமறியாமல் பிரமித்தார்கள்; சைவர் அறியத்தக்க வஸ்துவையறியாமல் அற்பரானார்கள்; இவைகளைச்சொல்லில் சர்வகர்த்தனாய் ஆஸ்சர்ய சேஷ்டிதனாய் ஆஸ்ரிதவ்யாமுக்தனாயிருக்கிற ஸ்ரிய: பதியை (விஷ்ணுவை)

இவர்கள் ஸ்தோத்ரம் செய்யார்கள் ஆகையால் இவர்கள் இப்போது ஹீநர்களே'' என்பதாம்.

இச்சச் செய்யுளில் சமணர், புத்தர், சைவர் ஆகிய இம் மூன்று சமயத்தினரும் விஷ்ணுவைத் தோத்திரம் செய்யார்கள் ஆதலின் இவர்கள் ஹீநர்களே என்றார். சமணர், புத்தர் ஆகிய இரண்டு சமயத்தினரும் சைவ வைஷ்ணவர்களுக்கு வேதப் புறம் பினர்கள் என்று கருதப்பட்டவர்கள்; ஆகலின் அவர்களை ஒரு வாறு நிந்திக்கலாம்; சைவர் வைணவர் ஆகிய இரண்டு சமயங் களுக்கும் வேதங்கள் ஒன்றாகவிருக்கின்றன; அப்படி யிருந்தும் சைவரை ஏன் நிந்திக்கவேண்டும்? இதை அறிஞர்கள் யூகித் தறிக.

இன்னும் சைவசமயத்தினராகிய திருஞானசம்பந்தர்,

"மூடிய சீவரத்தர் முதிர்பிண்டிய ரென்றிவர்க
ளோடிய தேவர்தம்மா லிறைஞ்சப்படுந் தேவர்பிரான்
பாடிய நான்மறையன் பலிக்கென்று பல்வீதிதொறும்
வாடிய வெண்டலை கொண்டுழல்வானிடம் வக்கரையே''

என்று மூன்றாம் திருமுறை திருவக்கரை பதிகத்தில் கூறுகின்றார்.

இதன் கருத்து: "புத்தர், சமணர் என்கின்றவர்களால் சொல்லப் படும் கௌதமன், அருகன் ஆகிய கடவுளர்களால் வணங்கப்பட்டவரும், தேவர்களுக்குத் தலைவனானவரும் நான்கு வேதத்தைச் சொன்னவரும், பிச்சைக்கென்று, பலவீதிகள்தோறும் உலர்ந்த (பிரம்மாவின்) வெண் மையுடைய தலையோடு கொண்டவரும் ஆகிய சிவன் எழுந்தருளியது திரு வக்கரை'' என்பதாம்.

இதனால், 'புத்தக் கடவுள் அருகக்கடவுள் இவர்களால் வணங் கப் பெற்றவர் சிவன்' என்றார்.

இன்னும் திருஞானசம்பந்தர்.

"போதியர்பிண்டிய ரென்றிவர்கள் புறங்கூறும் பொய்ந்நூ
லோதிய கட்டுரை கேட்டுழல் வீர்''

என்று 1-வது திருமுறை திருக்கொடி மாடச்செங்குன்றம் பதி கத்திலும்

"புத்தர் தத்துவமிலாச் சமணுரைத்த பொய்தனை
யுத்தம மெனக்கொள்ளா துகந்தெழுந்து வண்டினம்''

என்று 2-வது திருமுறை திருநாருத்திப் பதிகத்தினும் புத்தர் சமணர் ஆகிய இவர்கள் கூறுவது பொய்ந் நூலென்றும், தத்துவ மில்லாது உரைத்த பொய்தனை உத்தமமெனக் கேளாதே என்றும், புத்தர் சமணர் இவர்கள் சாஸ்திரம் தத்துவம் ஆகியவைகளை தாழ்த்திக் கூறியுள்ளார்.

இன்னும் சைவசமயத்தில் பிராம்மணரல்லாத உமாபதி சிவாசாரியர் * ஜீவகசிந்தாமணியைப்பற்றி 0 பெரியபுராணம் சேக்கிழார் நாயனார் புராணத்தில்

"கலகமிடு மமண் முரட்டுக்கையர் பொய்யேகட்டி
நடத்திய சிந்தாமணியை மெய்யென்று
உலகினுளோர் சிலர்கற்று நெற்குத் துண்ணாது
உமிக்குத்திக் கைவருந்திக் கறவைநிற்க
மலடுகறந் துளந்தளர்ந்து குளிர்பூஞ்சோலை வழியிருக்கக்
குழியில் விழுந் தளறு பாய்ந்து
விலைதருமென் கரும்பிருக்க இரும்பை மென்று
விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்து நொந்தார்"

---

* ஜீவகசிந்தாமணி பெரும்பஞ்ச காவியங்களுள் முதன்மைபெற்றதும், புலவர்கள் சிந்தித்ததைக்கொடுக்கும் சிந்தாரத்தினம் போன்றதும், ஜீவன்களுக்கு அறிவுறுத்தலும், அஹிம்ஸா தர்மத்தை விளக்கிக் காட்டுதலும், பலநீதிகளை உணர்த்துதலும், இல்லற துறவற ஜீவாதி தத்துவங்களைப் போதித்தலுமாகிய ஹிதாஹிதங்களைக் கூறுவது. இப்பேர்ப்பட்ட மெய்ந்நூல் பொய்ந்நூலாம்!

0 பெரிய புராணத்தில் இயற்பகை நாயனார் சிவனடியார் நிமித்தமும் தமது பத்தினி நிமித்தமும், சுற்றத்தார்களைக் கொலைசெய்ததும், திண்ணனார் ஈஸ்வரன் நிமித்தம், மிருகங்களைக் கொலைசெய்ததும், சிவனடியார் வேடம்பூண்ட ஈஸ்வரன் தமது ஆகார நிமித்தம் பிள்ளைக்கறி வேண்டுமென்பதைக் குறித்துச் சிறுத்தொண்டநாயனார் தனது புத்திரனைக் கொலைசெய்ததும், திருவிளையாடல் புராணத்தில் (8000) எண்ணாயிரம் சமணர்களைக் கழுவிலேற்றியதும் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வாறாகக் கொலையையே மிகுத்துக்கூறும் நாயன்மார் கதைகளடங்கிய ஹிம்ஸா நூல்களை உயர்ந்த தர்மநூல்களென்று புலவர்கள் பிரசங்கம் செய்யத் தொடங்கி, ஆங்காங்குக் கூட்டம் சேர்த்துக் கொலைசெய்த நாயன்மார்கள் சிவலோகம், வானுலகம் முதலிய உயர்ந்த பதவிகளை அடைந்தார்களென்றும் உபந்நியாசம் செய்துவிடுகின்றார்கள். இத்தகைய பெரிய புராணம் முதலியவை மெய்ந்நூல்கள்போலும்!

என்ற செய்யுளால் இழித்துக் கூறுகின்றார்

இன்னும் அப்பர், சிவன் தன்மையைப்பற்றி

" ஊனாகி யுயிராகி யதனுணின்ற
    வுணர்வாகிப் பிறவனைத்து நீயாய்நின்றாய்
நானேது மறியாமே யென்னுள்வந்து
    நல்லனவுந் தீயனவுங் காட்டாநின்றாய் "

என்று ஆறும் திருமுறை திருவானைக்கா திருத்தாண்டகம் பதிகத்திலும்

---

பெரிய புராணத்தைப் போன்ற வேதாகமங்களான ஹிம்ஸா சாஸ்திரங்களைப் படித்தல், அதன்படி நடத்தல் முதலானவைகளைப்பற்றி ஜைந சமயவேதம் கூறுகின்றது.

" நிடிூவெ ந ஹி கிம் தெந ஶு௱தெநாவுரணெந வ ।
யஹ்ய ஷ்வீகார மாதெ்ரண ஜம்தவொ யாம்தி ஓுறு௱லிம் ॥"

என்று ஞானார்ணவம் 8-வது சருக்கம் 25-ம் சுலோகம் கூறுகின்றது.

இ-ன். "ஜீவதயையில்லாத புராண சாஸ்திரங்களைப் படிப்பதனாலும், அதன்படி நடப்பதனாலும் என்ன பிரயோஜனம்? ஹிம்ஸா சாஸ்திரங்களை அங்கிகாரம் செய்வதனாலே பிராணிகள் நரகாதி துர்க்கதியை அடைகின்றன " என்பதாம்.

இன்னும் அஹிம்ஸா லக்ஷணமில்லாத சாஸ்திரங்கள், சமயங்கள் ஆகிய வைகளைப்பற்றி ஷீ ஞானார்ணவம் சருக்கம்-8 சு—31-ல்,

" ஶு௱யதெ ஸவ௱ஶாஸ்த்ரெஷு ஸவெ௱ஷு ஸமயெஷு வ ।
அஹிம்ஸா லக்ஷணொ யமீ௱ தமிவக்ஷஸ்வ பாதகம் ॥"

என்ற விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன,

இ-ன். "சமஸ்த சாஸ்திரங்களிலும், சர்வ சமயங்களிலும் அஹிம்ஸையே லக்ஷணமாகவுள்ளது தர்மமாகும்; அஹிம்ஸா லக்ஷணமில்லாத சாஸ்திரங்களும், சமயங்களும் பாபகாரணமாகியவை " என்பதாம்.

மேல் எடுத்துக் காட்டிய நூல்களில் நன்மை தீமைகளை ஆராய்ந்து ஜீவன்களுக்குச் சிறப்பைத்தரும் மெய்நூல்கள் எவை என்பதை அறிஞர்கள் உணர்தல் வேண்டும்.

" விண்ணாகி நிலனாகி விசும்புமாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்புகின்ற
எண்ணாகி எழுத்தாகி யியல்புமாகி
யேழுலகுந் தொழுதேத்திக் காணநின்ற "

என்று ஆறும் திருமுறை திருப்பாசூர் திருத்தாண்டகம் பதிகத்திலும் கூறியுள்ளார்.

மேலும் நம்மாழ்வார், விஷ்ணுவின் தன்மையைப்பற்றி

*" நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்ச்
சீரார் சுடர்க ளிரண்டாய்ச் சிவனாயயனானாய்
கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால்
வாராயொரு நாண்மண்ணும் விண்ணு மகிழவே "

என்று திருவாய்மொழி 6-ம் பத்து, 8-ம் பதிகம், 1-வது பாசுரத்தில் கூறுகின்றார்.

இவ்வாறு சைவ சமயா சாரியராகிய அப்பர், நிலம், விண், ஆகாயம், மாமிசம், உயிர், உடல் முதலான யாவும் சிவனே யென்றும், வைணவ சமயத்துத் திருமழிசையாழ்வார் நிலம், நீர், அக்கினி, காற்று, ஆகாயம், சூரியன, சந்திரன,சிவன, பிரம்மா, உயிர், உடம்பு ஆகிய சமஸ்தமும் விஷ்ணுவே யென்றும், கூறுவதும், சைவம், வைணவம் ஆகிய இவ்விரண்டு சமயங்களுக்கும் வேதங்கள் ஒன்றாக விருக்கும் சைவர் விஷ்ணுவை இழித்தும், வைணவர் சிவனை இழித்தும் உலகத்திலுள்ள பொருள் யாவும் சைவர் சிவனென்றும் வைணவர், விஷ்ணுவென்றும் கூறுவதும் அவர்க்கு மெய்ப்பொரு ளுணர்ச்சியின்மையை விளக்குகின்றது. சைவ சமயத்தில் வேதங்களிலுள்ள கடவுளின் உண்மையறிந்த சமயாசாரியர்களென்று சொல்லப்படும் நாலவர்களாவது, வைணவசமயத்தில் ஆழ்வாராதியர்கள் முதல் இராமானுஜாசாரியர் பரியந்த முள்ளவர்களாவது தங்களிரு சமயங்களுக்கும் வேதங்கள் ஒன்றாக விருப்பது போல கடவுளும் ஒன்றெனபதை நிலைநிறுத்தினார்களில்லை. அதாவது: இருவருக்கும் பொதுவான உண்மைப்பொருள் சிவன் அல்லது விஷ்ணு என்று உறுதியாக விளக்கிக் காட்டவில்லை.

இங்ஙனம் தங்களுக்கு உண்மைப்பொருளை அறியும் சாமர்த்திய மில்லாதிருக்க, இப்பேர்ப்பட்டவர்கள் மெய்ப்பொருள் எல்லோருக்கும் ஒன்றெனக்கண்ட ஜைநர்களிடம் வாதுசெய்து ஜெயித்தார்களென்பது அதிஆச்சரியம்.

மேற்கூறியபடி சைவ, வைணவ சமயத்தினர் சமணர், புத்தர் ஆகியவர்களையும், அவர்களின் கடவுள் சாஸ்திரம் முதலானவைகளையும் இழித்துக்கூறுவதுபோல, ஜைநசமயத்தினரும் பிரம்மா விஷ்ணு, சிவன், புத்தன் முதலான கடவுளரையும், அவர்களின் சாஸ்திரமுதலானவைகளையும் இழித்துக்கூறுகின்றனர். அதனையும் இங்குக்கிஞ்சித்து எடுத்துரைப்பாம்.

பிரம்மா, விஷ்ணு, சிவன், அருகன் முதலானவர்களைக் கடவுளரென்று கூறும்பற்பல சமயக்கூற்றுக்களில் எதுசரியானது எவன் கடவுளாகக்கடவன்? என்பவைகளைப்பற்றி அகளங்கர்,

“ப்ரஹ்மா சர்மாக்ஷஸூத்ரீ ஸுரயுவதிரஸா
வேஶ விப்ராந்த சேதா:
ஶம்பு: கட்வாங்கதாரீ கிரிபதி தநயா
பாங்கலீலாநு வித்த: ।
விஷ்ணுஶ்சக்ராயுதஶ்ச துஹிதரமகமத்
கோபநாதஸ்ய மோஹாத்
அர்ஹந் வித்வஸ்தராகோ ஜிதஸகலபய:
கோऽயமாப்தேஷு நாத: ॥”

என்ற சுலோகத்தைக் கூறியிருக்கின்றார்.

இ-ள்: “பிரம்மாவானவன் தோலினால் செய்யப்பட்டிருக்கிற அக்ஷசூத்ரத்தை ஜெபமாலையாகவுடையவனும், தேவஸ்திரீயாகிய ஊர்வசியிடத்திலே உண்டான அதிக பிரீதியினாலே பிரமித்த மனத்தையுடைத்தானவனுமிருக்கின்றான். ஈஸ்வரனானவன் கட்டில்மீதுபடுக்கும் சரீரத்தையுடையவனும், பர்வதராஜனுடைய புத்திரியாகிய பார்வதியினுடைய கடைக்கண்பார்வையில் கட்டுப்பட்டவனுமிருக்கிறான்; விஷ்ணுவானவன் சக்கிராயுதத்தையுடையவனும், மோகத்தினாலே கோபஸ்ரேஷ்டனுடைய பெண்களை (கோபிகாஸ்திரீகளைச்) சேர்ந்தவனுமிருக்கின்றான். அருகத்பரமேஷ்டியானவன் (கிர்க்கந்த ரூபத்தையுடைய வனும்) கெடுக்கப்பட்டிருக்கிற ஆசையையுடையவனும், ஜெயிக்கப்பட்டிருக்கிற பயம், மரணம் ஆகியவைகளையுடைவனுமிருக்கிறான். இப்படிப்பிரசித்தராயிருக்கிறவர்களில் ஆப்தனானவன் (கடவுள்) எவனுவன்?” என்பதாம்.

பிரம்மா, விஷ்ணு, சிவன், அருகன் ஆகிய இவர்களுக்குள்ளே அருகன் பற்றற்றவனுதலால், கடவுள் தன்மையுடையவனென்றும் மற்றவர்கள் மோகிகளாதலால் (பற்றுள்ளவராதலால்) கடவுள் தன்மையில்லாதவர்களென்றும் இதில் ஆசிரியர் கூறியிருக்கின்றூர். இவ்வுண்மையைக் குறளாசிரியர்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்ற குறளால் துறவு என்னும் அதிகாரத்தில் கூறியிருக்கின்றூர்.

இதன்பொருளைப் பரிமேலழகர், "எல்லாப் பொருள்களையும், பற்றி நின்றே பற்றற்ற கடவுளாலே சொல்லப்பட்ட மோக்ஷவழியை இதுவே நல்லவழி யென்று மனத்தில் கொள்ளக்கடவர், கொண்டு அதனிடத்து உபாயத்தை அம்மனத்தினுலே செய்யக்கடவர், விடாது வந்த பற்று விடுதற்கு" என்றும், "கடவுள் வாழ்த்துக் கேற்ப இங்கும் பொதுவகையினுலே பற்றற்றான் என்றூர்" என்று கூறியுள்ளார். இவ்வாறு கூறுவதனுல் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய இம்மூவரும் பற்றற்றவரென்பது பரிமேலழகர் கருத்தெ்தன விளங்குகின்றது. அதுபொருத்த மற்றதாகும். ஏனெனில்,

இவர், "எல்லாப் பொருள்களையும் பற்றிநின்றே" என்னும் மொழியை வலிந்து கூறிப் பின் "பற்றில்லாத கடவுளை" என்பது முன்னுக்குப்பின்முரணுதம். ஆதலின்,

இ-ள்: "பற்றற்றான் எப்பொருள்களிடத்திலும் பற்றில்லாத அருகக் கடவுளினுடைய, (அதாவது அவரால் அருளிய) பற்றினை (சம்யக் தரிசன ஞான சாரித்திரங்களென்னும் இரத்தினத்திரயங்களால் பெறுதற்குரிய மோக்ஷமார்க்கத்தின்) விருப்பத்தை, பற்றுக - (இதுவே நல்வழி யென்று மனத்தில்) கொள்ளுக, (அங்ஙனம் கொண்டு) அப்பற்றை-அதன் சம்பந்தமாகிய உபாயத்தை. பற்றுவிடற்கு-கர்மபந்தம் விடுகிறதற்கு, பற்றுக-மேற்கொண்டொழுகுக" என்பதாம்.

இதன்கருத்து: "பற்றற்றான் சொல்லிய இரத்னத்திரயங்களால் பெறும் முத்திவழியை பற்றக்கடவர்" என்பதாம்.

இன்னும் ஜைந சமயத்தில் வேதத்தைப்பற்றிக் கூறியிருப்பதையும் சிறிது உரைப்பாம்:

வேதம் சிறந்ததென்பதை,

"ശ്രുതം വിഹിതം വെദൊ ദ്വാദശാംഗ വികല്മഷം ।
ഹിംസൊപദെശി യദ്വാക്യം നവെദൊ ഖളകൃതാന്തവാക്॥"

என்ற மகாபுராணம், 39 ஆம் பர்வம், 22 வது சுலோகம் கூறுகின்றது.

இ-ள். "ஸர்வக்ஞப்பிரணீதமும் (அருகக்கடவுளால் உண்டாக்கப்பட்டதும்) பவித்ரமுமான த்வாதசாங்கங்களுள்ள ஸ்ருதமே நிஜமான வேதம்; ஹிம்ஸையை உபதேசிக்கிறது வேதமல்ல; அது எமனுடைய வாக்கியம்" என்பதாம்.

இன்னும்,

"போற்று மிதுவென்கொல் பொய்ந்நூல் களைப்புலவிர்
சாற்று மனந்த சதுட்டயத்தா—னேற்றுந்
துளக்கப் படாத சுருதியா லல்லா
லளக்கப் படுமோ வறம்"

என்னும் திருக்கலம்பகம் 84 ம் செய்யுளும் இதைக் கூறுகின்றது.

இ-ள். "அறிவுடையவரே! நீங்கள் பொய்யாகிய சாஸ்திரங்களைப் போற்றுகின்ற இச்செய லென்ன காரணம்? சொல்லப்பட்ட அநந்த சதுட்டயங்களையுடைய அருக பரம னாலக மேற்றிய அசைக்கப்படாத வேதத்தா லல்லாமல் தருமமான்து மற்றொன்றால் அளவு காணப் படுமோ" என்பதாம்.

இவற்றால் அருகபரமனோதிய தரும சாஸ்திரமே மெய்யான சாஸ்திர மென்பது கூறப்பட்டது.

முனிவர் தன்மையைப் பற்றி இந்நூல் 141 ம் பக்கம் முதல் 173 ம் பக்கம் வரையிலும், ஜீவாதித்த்துவங்களைப் பற்றி 173 ம் பக்கம் முதல் 191 ஆம் பக்கம் வரையிலும் கூறப்பட்டிருக்கிறது.

இனி சைவ வைஷ்ணவம் முதலிய மதங்கள், நிலம், நீர், அக்னிமுதலான எல்லாப் பொருள்களும் கடவுளே' என்று கூறுவதைப்பற்றியும் ஆராய்வாம்.

கடவுள் தன்மையை இவ்வாறு கூறுதல் பொருந்தாது. இதை ஜைந மதம் மறுக்கின்றது.

"அம்மானை முடிவிலா ஞானந் தன்னு
ளளவிலாப் பொருண்முழுதும் பரந்து நின்ற
பெம்மானை யுலகளவு நிறைந்த சோதிப்
பெருமானை யறியாதே பெருமால் கொண்டு

கிம்மான நிலனாகித் தீயாய்க் காலா
யிருசுடரா யெறிபுனலாய் வானாய் மற்று
மெம்மானெவ் வுயிர்க ளுமாய் நின்றா னென்றே
யியம்புவார் துணிவென்னே யிருந்த வாறே''

என்ற திருக்கலம்பகம் 27-ஆம் செய்யுளால் இதனை உணரலாம்.

இ-ள்: "தேவாதிதேவனை, அனந்தஞானத்தினால் அளவில்லாத அறுவகைப்பொருளிலும் பரவியநாயகனை, முந்நூற்றுநாற்பத்துமூன்று கயிற்றளவும் பூரணையால் நிரம்பிய மூச்சோதியையுடைய சுவாமியைக் கருத்தன் (அருகக்கடவன்) என்றறியாமல் மிகுந்த மயக்கங்கொண்டு, இவ்வுலகத்தில் அளவுபட்ட இப்பூமியாகியும், அக்னியாகியும், வாயுவாகியும், சூரியசந்திரராகியும், அலையைவீசாநின்ற நீராகியும், ஆகாயமாகியும்,இவையல்லாமலும் எங்கள் கருத்தன் (கடவுள்) அப்பஞ்சபூதங்களைத் தேகமாகக்கொண்ட உயிர்களுமாகியும் இருந்தானென்றே சொல்லு மவர்களுடைய நிச்சயம் என்னவிதம் இருந்தது!'' என்பதாம்

இதனால் மித்தியாதிருஷ்டிகள் (சைவவைணவர்கள்) கடவுளினது உண்மையானநிலையை உணராதவர் என்பது கூறப்பட்டது.

இன்னும் புத்தகடவுள் தன்மையைப் பற்றியும் ஜைநசமயம் கண்டிக்கின்றது.

"முன்னைப் பிறப்பெண்ணில் பல்கோடியெல்லா
முயன்றின்று பெற்றேன் முதற்போதி யென்றே
பின்னைப் பிறந்துற்ற யானில்லை யென்னும்
பெரும்பித்த ரோபுத்த ராவார் தெளிந்தீர்
பொன்னிற் பிறக்குங் கலத்திற் சலத்திற்
பொங்குந் தரங்கிற் பெரும்பைக டோறுந்
தன்னிற் றிகழ்ந்தாவி நிற்குங் கொலென்னுந்
தனிப்புத்தர் பாதங்கள் சாரீர் விரைந்தே''

என்னும் திருக்கலம்பகம் 66-ஆம் செய்யுளால் இதனையுணரலாம்.

இ-ள்: "முன்னேயான்பிறந்த பிறப்பினை எண்ணுங்கால் பலகோடி ஜனனத்திலும் எல்லாவினைகளையும் செய்தனுபவித்து இப்பொழுது மதிஞானியென்னும் பெயரை அடைந்தே னென்று சொல்லிப்பின்பு உலகிற் பிறந்து ஞானத்தை அடைந்த * நானேயில்லை என்று சொல்லும்

* நானேஇல்லை என்பது. புத்தர் ஆன்மாவில்லை மோக்ஷமில்லை என்று கூறினர் என்பதை விளக்கும்.

பெரிதாகிய பித்தமுடையவரோ புத்தராவார்; வேதமுணர்ந்தவர்களே! பொன்னிலே உண்டாகின்ற ஆபரணங்களைப்போலவும், நீரிலேஎழுகின்ற திரைகள்போலவும், எடுக்கின்ற தேகந்தோறும் 'எடுத்த எடுத்த தேகத்திலே நிறைந்து ஜீவனுனது இருக்கும் என்று சொல்லும் ஒப்பற்ற புத்தியையுடைய அருகாது சரண (பாத)ங்களை நீங்களடையுங்கள் வீணுள் போக்காமல்'' என்பதாம்

இதனுல் புத்ததெய்வம் பழிக்கப்பட்டது.

மேலே காட்டியபடி சைவசமயத்தில் அப்பர், ஊன் (மாமிசம்) உயிர், உணர்வு (ஞானம்), சுவர்க்கம், நிலம், ஆகாயம், எண், எழுத்தும். மற்றவனைத்துமாகி நின்றுர் சிவனென்று கூறியுள்ளார்; வைணவசமயத்திலும் நம்மாழ்வார், நீர், நிலம், அக்கினி, காற்று, ஆகாயம், சூரியசந்திரர், சிவன், பிரம்மா மற்றுமுள்ள சகலபதார்த்தங்களும் ஆகின்ற ஸ்வாமியே விஷ்ணுஎன்று கூறியுள்ளார். புத்தர் ஜீவனில்லை மோக்ஷமில்லை என்று கூறுகின்றுர். இவ்வாறே வேதம், முனிவர் ஜீவாதித்துவமுதலியவைகளைப்பற்றியும் வெவ்வேறு வகைகளாகச் சொல்லுகின்றனர். இவ்விவரங்கள் இந்நூலில் பலவிடங்களில் துலக்கப்பட்டிருக்கின்றன.

ஜைநசமயக் கொள்கையாவது: கடவுள் எல்லாப்பொருள்களுமாகி நின்றவருமல்லர், எல்லாப் பொருள்களுக்கும் சார்புடையவருமல்லர், கடவுள் அசரீரியாயும், பரஞ்சோதி ஸ்வரூபத்தையுடையவராயும், மேல்கமனமும் கீழ் இழிதலும் இல்லாதவராயும், சலனமில்லாதவராயும், ஜன்மஜராமரணமுதலாகிய அவகுணங்களில்லாதவராகியும் எக்காலமும் நிலைபேறுடையவராய் இருப்பரென்பது.

இன்னும்

"சத்திய மேபொன்று சாற்றுகின்றேன் சமயங்க ளெல்லாங்
கத்திய ஞானங் கவல்கின்ற தேகடைச் சாரமெய்து
முத்தியு மேக முதல்வனு மேக முதல்வனுமுற்
பத்தியு நாசமு மொன்றுமில்லாத பரஞ்சுடரே."

என்று திருநூற்றந்தாதி 79-ஆம் செய்யுள் கூறுகின்றது.

தோற்றமும் கேடுமுண்டாமவர் தலைவரல்லர் என்பது இதன் கருத்து.

இதனுல், மெய்க்கடவுளின் தன்மை விளக்கமாகும்.

மேல் எடுத்துக்காட்டிய ஒவ்வொரு சமய சாஸ்திரப் பிரமாணங்களால் ஒவ்வொரு சமயத்து ஆசாரியர்களும் தங்கள் தங்கள் கடவுள், சாஸ்திரம், குரு தத்துவ முதலானவைகளை மெய்ப்பொருளென்று சிறப்பித்தும், பிறசமய கடவுள், சாஸ்திரம்,குரு தத்துவ முதலானவைகளைப் பொய்ப் பொருளென்று இழித்தும் அவரவர்கள் கருத்திற்கிசைந்தவாறு கூறியிருக்கின்றார்கள்;

ஆயினும்

. "தலைமகனு நூலு முனியும் பொருளும்
தொலைவின் றுணிவொடு பக்கம்—மலைவின்றி
காட்டியிவ் வாறும் உரைப்பரே நன்னெறியைக்
காட்டி அறமுரைப்பார்"

என்று அறநெறிச் சாரத்தில் கூறுகின்றது.

கடவுள், சாஸ்திரம் முனிவர் ஜீவாதிதத்துவப்பொருள் (கர்மத்தின்) அழிவு,(இவைகளில்)பக்ஷம், ஆகிய ஆறுவகைகளை மாறுபாடின்றி நிச்சய முள்ள நன்மார்க்கத்தைக்காட்டி தர்மத்தை உணர்த்துவார் சான்றோர் என்பது இதன் கருத்து.

குறளாசிரியர்,

"பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணாப் பிறப்பு"

என்று மெய்யுணர்வு என்னும் அதிகாரத்தில் கூறுகின்றார்.

இதன் கருத்து: "(கடவுள், சாஸ்திரமுதலியவைகளுக்குள்ள இலக்ஷணமில்லாத) பொய்ப்பொருளை மெய்ப்பொருளென்றுணரும் மயக்கத்தால் மாட்சிமையில்லாத பிறப்பு" என்பதாம். இதன் விரிவுரைமேற்கோளுடன் இரண்டாம் பாகத்தில் விவரிப்பாம். ஆங்கு கண்டுக்கொள்க.

இவ்வாறு கூறு மவற்றுள் மெய்ப்பொருள் காணவேண்டும். அது ஜைநசமயத்திலேயே வடமொழி தென்மொழி நூல்களில் விளக்கப்பட்டிருக்கின்றன,

அவ்விவரத்தையும் இங்குக் கிஞ்சித்து எடுத்துக்காட்டுவோம்:

கடவுள், சாஸ்திரம், முனிவர், ஜீவாதிதத்துவம் ஆகியவற்றின் மெய்ப்பொருள்களை ஆராய்ந்து ஒழுகுவதின் பயனால் வீடு பெறுதல் கூடுமென்பது ஜைநசமய சித்தாந்தம்.

இது,

* "உருவ மொழுக்கமு நூலும் பொருளும்
S பொருவிற் றலை மகனோ டின்ன B வொருவாது
கண்டு கருதிக் கயக்கறத் தேர்ந்தபின்
கொண்டுவீ டேற்க வறம்"

என்ற அறநெறிச்சாரத்தின் செய்யுளால் விளக்கமாகும்.

இன்னும் ஷை அறநெறிச்சாரம்,

"நிறுத்தறுத்துச் சுட்டுரைத்துப் பொன்கொள்வான் போல
அறத்திறனு மாராய்ந்துள் புக்காற் பிறப்பறுக்கு
மெய்ந்நூல் தலைப்படலாகுமற் றுகாதே
கண்ணோடி கண்டதே கண்டு"

என்றும் கூறுகின்றது.

இ-ன்: "நிறுத்தும், வெட்டியும், சுட்டும், உரைத்தும் (பரீட்சித்து) பொன் கொள்வான்போல, கடவுள்முதலான நான்கு பொருள்களும், அஹிம்ஸா தர்மமும், மெய்ந்நூலை ஆராய்வதனாலே மனத்தின் கண் புகுந்தால் அவை (நான்கு கதிகளின்) பிறப்பறுக்கும்(அதாவது) மோக்ஷவீடெய்திச் சிறப்புறலாகும்; மற்ற பொய்ந்நூற்களால் ஆகா" தென்பதாம்.

கடவுள், சாஸ்திரம், முனிவர், ஜீவாதிதத்துவம் அஹிம்ஸாதர்மம் ஆகியவற்றின் மெய்ப்பொருளை அறிந்தவர் வீடுபெறுவா ரென்பது இதன் கருத்து.

குறளாசிரியரும் கடவுள், சாஸ்திரம், முனிவர், ஜீவாதிதத்துவம் ஆகிய நான்கு பொருள்களும் மோக்ஷமார்க்கங்களாகிய நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கங்கள் ஆகிய இரத்தினத்ரயங்களையும் *மெய்யுணர்வு என்னும் அதிகாரத்தில் ஒவ்வொரு குறட்பாக்களால் விளக்கிக் காட்டியுள்ளார்.

அவற்றில், "கல்வி அறிவால் மெய்ந்நூல் அறியப்பிறப்பறும் என்பதை,

---

* உருவம் - முனிவர்ஸ்வரூபம். S பொருவில் - ஒப்பில்லாத. B ஒருவாது - நீங்காது.

* மெய்யுணர்வு, என்னும் அதிகாரத்தில் மோக்ஷமடைதற்குரிய சாதனங்களை ஒவ்வொரு குறட்பாக்களால் மேற்கோள்களுடன் 2-ஆம் பாகத்தில் விவரிப்பாம். ஆங்குகண்டு கொள்க.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

என்னும் குறளால் விளக்கியுள்ளார்.

இன்னும் மெய்ப்பொருளைப்பற்றி, ஜைநசமய நூலாகிய அருங்கலச் செப்பு என்னும் நூல்

"மெய்ப் பொருடே றுதல் நற்காட்சி யென்றுரைப்பர்
எப்பொருளுங் கண்டுணர்ந் தார்"

என்றும்,

"மெய்ப்பொருள் காட்டி யுயிர்கட் கறனாகி
துக்கங் கெடுப்பது நூல்"

என்றும் கூறுகின்றது

இதைத்தான் குறளாசிரியர் "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்:" என்ற குறளில் விளக்கிக்காட்டி யிருக்கின்றார்.

இன்னும் மேல்கூறியபடி பலபேதமான கருத்துக்களை எவ செவரிடத்துக் கேட்டாலும் மனதை அவற்றின் வழியே செல்ல விடாது நன்மையிற் செலுத்தவேண்டும் அதுவே நன்ஞானமாகும் என்பதை, மேல்கண்ட குறட்பாவின்கீழ் ஆசிரியர்,

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு"

என்ற குறளிலும் கூறி யிருக்கின்றார்.

இ-ள்: "மனத்தை, மித்தியா (பொய்) மார்க்கத்தினர் மனஞ்சென்ற விடத்திலே போகவிடாமல் நன்மை தீமை ஆராய்ந்து தீயதிலிருந்து நீங்கி நல்லதினிடத்துப் போகவிடுவது (நன்) ஞானம்" என்பதாம்.

இன்னும்,

"பரந்தவர் கொள்கைமேல் பல்லாறும் ஓடார்
விரம்பிய காட்சி நினைந்தறிந்து கொள்க
வரம்பில் பெருமை தருமே பிரம்பூரி
என்றும் பதக்கேழ் வரும்"

என்று பழமொழி 399-ஆம் செய்யுள் கூறுகின்றது.

இ-ள்: "பலவேறு வகைப்பட்டுப் பரந்த சமயத்தார் ஒழுக்கத்தின் மேல் பல நெறிக்கண்ணும் ஓடாதே, அச்சமயத்தார் கொள்கைக்குன் நன்மை நிரம்பிய கொள்கையை ஆராய்ந்தறிந்தே தமக்குக்கொள்கையாக ஒழுகுக.ஒழுகினால் அவ்வொழுக்கம் எல்லையில்லாத பெருமையைத் தரும்; பிரம்பூரி என்னும் பெயருடைய நெல் என்றும் பதக்கேழ் வருமால், அது போல" என்பதாம்.

இவைகளைக் கொண்டு, ஜைநமதத்திலேயே உண்மைப்பொருளின் நிச்சயமும் நல்லொழுக்கங்களும் இருக்கின்றனவென்றும், அதையேதிருக்குறளாசிரியர் விளக்கியிருக்கிறாரென்றும், அங்ஙனம் கூறுவதால் திருக்குறள் ஜைநமத நூலேஎன்றும் நண்பர்கள் உணரலாம்.

இன்னும், திருக்குறள் ஜைநமதக் கொள்கைகளுக்குப் பொருத்தமுடையதென்பதை விளக்குதற்கு எண்ணிறந்த விஷயங்களிருக்கின்றன. அவையெல்லாம் இப்புத்தகத்தின் இரண்டாம் பாகத்தில் வெளிவருப், புத்தகம் மிகப்பெரிதாகுமாதலால் இம்மட்டோடு இதனை முதற்பாகமாக வெளியிட்டோம். இதுவரை கூறிவந்தவைகளை அறிவுடையார் ஆராய்ந்து நடுநிலையில் நின்று உண்மையுணருமாறு அவர்களை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

முதல் பாகம் முற்றிற்று.

சுபம்! சுபம்!! சுபம்!!!

வாழ்த்து

திங்கண்மும் மாரி பெய்க திருவறம் வளர்க செங்கோ
னன்கினி தரசனுள்க நாடெலாம் விளைக மற்று
மெங்குள வறத்தி னேரு மினிதூழி வாழ்க வெங்கள்
புங்கவன் பயின்றநன்னூல் புகழொடும் பொலிக மிக்கே.

# அநுபந்தம்.

திருக்குறள் கடவுள் வாழ்த்து முதற்செய்யுளில், 'ஆதிபகவன்' என்று கூறப்பட்டவர், விருஷப தீர்த்தங்கரரே என்று கூறி அதற்காதாரமாக அவர் சரித்திரத்தை இந்நூலாரம்பத்தில் விரிவாகக்கூறியிருக்கின்றோம். அவரையே வைஷ்ணவர்களும் தெய்வமாகக்கொண்டு துதிக்கின்றார்கள். இவ்விவரம் பாகவதம் ஐந்தாவது கந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் வைஷ்ணவர்கள், அந்தவிருஷபதீர்த்தங்கரரை வணங்கும் ஜைனமதத்தினரைப் புறமதத்தினரென்றும், அவர்கள் கடவுள் வேறென்றும், திருக்குறளில்கூறியகடவுள் வேறென்றுங்கூறி ஜைனரை இகழ்ந்து வருகின்றனர். ஆதலின், திருக்குறளில் கூறப்படும் ஆதிபகவனும், ஜைனர்களால் வணங்கப்படும் கடவுளும், வைஷ்ணவர்களால் பாகவதத்தில் கூறப்படும் விருஷபதேவரும் ஒருவரேயென்பதை அந்த வைணவர்கள் உணர்ந்து, ஜைனர்களை நிந்திக்காதிருக்குமாறு பாகவதத்தில் கூறப்படும் விருஷபதேவர் சரிதையையும் அநுபந்தமாக இங்குக்கூறி அவர்களுக்கு உண்மையை உணர்த்துவாம்:—

பாகவதத்தில் கூறப்படும் அச்சரிதையின் சுருக்கம் அடியில் வருவதாம்:—

நாபிராஜாவானவன் சந்தானத்தை இச்சித்தவனாய் அபுத்திரையான மேருதேவியுடனே பகவானான எக்கியபுருஷனைச் சாவதான மனதையுடையவனாய் எக்கியங்களினாலே ஆராதித்தான். சிரத்தையுடனும், பரிசுத்தமான மனதுடனும் எக்கியத்தினால் பூஜித்த நாபிமகாராஜனுக்கு அனுக்கிரகம் பண்ணவேண்டுமென்கிற இச்சையினாலும், திகம்பரராயும், சுபஸ்விகளாயும், ஞானிகளாயும், நயிஷ்டிக பிரம்மசாரிகளாயும் இருக்கிறவர்களுடைய தர்மங்களைக் காண்பிக்கவேண்டுமென்கிற எண்ணத்தினாலும், பகவானானவிஷ்ணு, நாபிமகாராஜனுடைய அந்தப்புரத்திலிருக்கும் மேருதேவியினிடத்திலே சுத்தசத்துவமான மூர்த்தியாய் அவதரித்தார்.

அதன்பிறகு பகவத்சின்னங்களையுடையவராய் சம்பத்துகளினாலே நாள்தோறும் விர்த்தியடையாநின்ற பிரபாவத்தையுடையவராயிருக்கிற அந்தசுவாமியைத் தேவதைகள் பிரஜைகள் முதலானவர்கள் ஸ்தோத்திரம்பண்ண, பிதாவான நாபிராஜன் அந்தப்

பிள்ளைக்கு ரிஷபனென்று நாமகரணம் பண்ணினார். பின்னர் மிகவும் சந்தோஷாதிசயத்தினாலே பரவசராய் அப்பா, குழந்தாயென்று ஆசையோடு சீராட்டிக்கொண்டு மிகவும் சவுக்கியத்தையடைந்து சர்வலோக சுந்தரனான அந்தப்பிள்ளைக்கு இராஜ்யாபிஷேகம் பண்ணினார்.

பின்பு பகவானான விருஷபதேவர் தம்முடைய ராஜ்ஜியமான பூகண்டத்தைக் கர்மக்ஷேத்திரமென்று சந்தோஷித்தவராய் கிரகஸ்தாஸ்ரம போக்கியங்களான தர்மங்களைப்பண்ணிக்கொண்டு வேதங்களினாலே சொல்லப்பட்ட பிரவிருத்தி மார்க்கம் இரண்டையும் அனுஷ்டித்து இந்திரனாலே கொடுக்கப்பட்ட ஜெயந்தியென்கிற பெண்ணை விவாகம் செய்துகொண்டார். அந்த விருஷபதேவர் தம்மோடு சமானமான நூறுபிள்ளைகளைப்பெற்றார். எந்தப்பரதனாலே இந்தக்கண்டம் பரதகண்டமென்று சொல்லப்படுகிறதோ அந்தப் பரதன் விருஷபதேவருக்கு ஜேஷ்ட புத்திரனானான்.

விருஷபதேவரான அந்தப்பகவானானவர் சுதந்தரராயும், நித்தியமாக நிவர்த்தி நிஷ்டராயும், கேவலம் ஆநந்தானுபவத்தையுடையவராயுமிருந்து கொண்டு, சுவயம் ஈஸ்வரனாயிருந்தாலும் பரதந்திரனைப்போல தர்மங்களைப்பண்ணுகிறவராய் வெகுகாலமாக நின்றுபோன தர்மத்தைத்தாம் செய்வதினாலே அத்தர்மத்தை யறியாதவர்களும் செய்யும்படி அவர்களுக்குக் காட்டிக்கொண்டு சாந்தியையுடையவராய்ச் சகலபிராணிகளிடத்திலும் தயையுடைவராய் லோகங்களைக் கிரகஸ்த தர்மங்களிலே ஆசக்தியை யுடையனவாகச் செய்து சாமதானாதி உபாயங்களாலே ஜனசமூகத்தைரட்சித்துக் கொண்டிருந்தார். பூஜ்யனாகிய விருஷபதேவரால் இரக்ஷிக்கப்பட்டிருந்த இந்தப்பரதக்கண்டத்திலே ஒருவன் தனக்கில்லையென்ற ஒரு வஸ்துவை ஒருவனிடத்திலும் ஓரிடத்திலும், ஒருகாலத்திலும் இச்சித்ததுமில்லை கேட்டதுமில்லை. விருஷபதேவர் ஒருகால் பூசஞ்சாரம் பண்ணிக்கொண்டு வரும்போது பிரம்மாவர்த்தமென்னும் வனத்தை அடைந்து அங்கிருக்கும் பிரம்மரிஷி ஸ்ரேஷ்டர்களுடைய சபையிலே, தம்முடைய உபதேசத்தில் பிரஜைகள் ஏற்கெனவே நிரம்பவும் ஞாபகமுள்ளவர்களாயும், விஸ்வாச முள்ளவர்களாயும் வணக்கத்தோடு இருந்தபோதிலும், தம்முடைய பிள்ளைகளை உத்தேசித்து அடியிற்கண்ட உபதேசத்தைச்செய்தருளினான்.

எவர்கள் எல்லாரிடத்தும் சமமான எண்ணமுள்ளவர்களோ, கோபமில்லாதவர்களோ, எல்லாப்பிராணிகளிடத்தும் சிநேகமுள்ள

வர்களோ, ஈஸ்வரனாகிய என்னிடத்திலும் சிநேகமுள்ளவர்களோ, எல்லாவஸ்துக்களையும் பகவத் ஸ்வரூபமாகப்பார்த்துக்கொண்டு, மனை, வீடுமுதலிய வஸ்துக்களில் பிரீதிஇல்லாதவர்களாய் இருப்பவர்களோ அவர்கள்தாம் சாதுக்கள். எதுவரையில் ஆத்மஸ்வரூபத்தை உண்மையாய் விசாரித்து அறியவில்லையோ அதுவரையில் அக்ஞானத்தினால் புருஷன் அவமதிக்கப்படுகிறான். ஆகையால் வாசுதேவனாகிய என்னை அடைந்து மனை வீடு பூமி முதலானவைகளில் நான் எனதுஎன்னும் மோகத்தைவிட்டு இருதயத்திலிருக்கும் ஆசையாகிய முடிச்சை அறுத்துவிட்டால் சம்ஸாரத்திலிருந்து ஜீவன் விடுபடுகிறான்,

ஆகையால் பிள்ளைகளே! ‘‘நீங்கள் என்னுடைய காரியங்களைச் செய்யுங்கள்; பகவத்கதைகளைச்சொல்லுங்கள்; என்னுடையகுணங்களைச்சொல்லுங்கள்’’ என்று போதித்தார். இம்மாதிரியாக மகானுபாவராகிய விருஷபதேவர் பரமஹம்ஸர்களின் பக்திஞான வைராக்கிய லக்ஷணமாகியதர்மத்தை உபதேசித்து மூத்தவனானபரதனுக்கு இராஜ்யபட்டாபிஷேகம் செய்து வைத்தார்.

அதன்பிறகு சமஸ்தலோக பாதாளங்கட்கும் சிரோமணியான விருஷபதேவர், அவதூதசன்னியாசியாக (நிர்வாணரூபமுள்ள முனிவராக) பகவதம்சமான பிரபாவத்தையுடையவராய் யோகிகளுக்குத் தேகத்தைவிடுகிற தன்மையை உபதேசித்துக்கொண்டு தம்முடைய சரீரத்தை விடவேண்டுமென்று இச்சைக்கொண்டவராய் ஜீவாத்மஸ்வரூபத்தைப் பரமாத்மாவினுடனே அபேதமாகப் பார்த்துக்கொண்டு தேகார்த்தமான வியாபாரத்தினின்றும் ஒழிந்தவரானார்.

இந்தப்பிரகாரம் ஸ்தூலதேக, லிங்கதேக அபிமானத்தையுடையவராயும், பகவானாயுமிருக்கிற அந்த விருஷபயோகி நிஷ்டையிலிருக்க, வாயுவேகத்தினால் ஒன்றோடொன்று உராய்ந்த மூங்கில்களில் உண்டான பெருங்காட்டுத் தீயானது அவ்வனத்தை யெல்லாம் தகித்துக்கொண்டு அந்த விருஷபதேவருடைய தேகத்தையும் கூடத்தகித்தது.

இந்த விருஷபதேவர் அவதாரம் ரஜோகுணத்தையுடையோர்க்கு மோக்ஷமார்க்கத்தைக் காண்பிக்கிற நிமித்தியமாகவுண்டானது. பரமகுருவான பகவானான விருஷபதேவருடைய பரிசுத்தமான

சரித்திரமானது புருஷாளுடைய சமஸ்தமானபாபங்களையும் போக்கடிக்கிறது. பரமமானமங்களங்களுக்கு இருப்பிடமாயிருக்கிறது.

இதைநண்பர்கள் நன்றாகஆராய வேண்டும்.

ஜைநசமயத்து ஸ்ரீபுராணத்தில் சர்வார்த்தசித்தியிலிருந்த அகமிந்திரன் விருஷபதேவராக அவதரித்தனரென்றும், வைணவ சமயத்துப்பாகவதத்தில் பரமபதத்திலிருந்த விஷ்ணுவிருஷபதேவ ராகஅவதரித்தனரென்றும் இவர்சரித்திரம் கூறப்படுகின்றது. இப் படி ஒன்றுக்கொன்று சில விகல்பங்களிருப்பினும் விருஷபதேவர் திரிகாலத்தில் நடக்கும் விஷயங்களையும், திரிலோகத்திலுள்ள சகல பதார்த்தங்களின் தன்மைகளையும் அநந்தஞானம் அநந்த தரிசன முதலான குணங்களால் ஒருங்கே அறிந்து பவண வியந்தர ஜோதிஷ்க கல்பவாசிமுதலான தேவர்களுக்கும் முனிவர்கள் மனிதர்கள் ஆகிய அந்தராத்மாக்கள் ஜீவாத்மாக்கள் முதலான மூவுலகிலுள்ள வர்களுக்கும் ஜீவஸ்வரூபத்தையும், அதன் தன்மைகளையும், இல்லற துறவறமுதலான ஜீவாதிதத்துவங்களையும், மோக்ஷமடைதற்குரிய சாதனங்களையும் உபதேசஞ்செய்தவராகையினாலும், அந்தவிருஷப தேவபரமாத்மன்பவணவியந்தர ஜோதிஷ்க்ககல்பவாசிமுதலானதே வர்கள்; ரிஷியர்கள், மனிதர்கள் முதலானவர்கள் பூஜிப்பதற் குரி மையுள்ள குணங்களையுடையவராதலாலும், அந்தப்பகவான் அருக னென்னும் திருநாமத்தைப்பெற்றார். அந்த விருஷபதேவருடைய சரித்திரத்தையும், அவர்அருளிய வேதங்களையும், அருகனென்னும் திருநாமத்தையும் அத்யயனம் தியானம், முதலானவைகள் செய் வதனால் பாபங்கள் நீங்கிவிடுகின்றனவென்று, அந்த விருஷபதேவ ராகிய அருகனைப் பலவகைகளால், ஜைநர்கள் வணக்கம் செய் கின்றார்கள்.

இவர்களைப்போலவே விருஷபதேவபகவானை மேற்கூடியபடி வைணவசமயத்து பிராம்மணர்களும், பாகவதர்முதலான ஆழ்வா ராதியர்களும் வணங்குவதுடன் அந்தவிருஷபதேவர், கிரகஸ்தாஸ் ரமம், துறவறவாஸ்ரமம் முதலானவைகளையும், ஜீவஸ்வரூப முத லான மோக்ஷம் பெறுதற்குள்ள பலதத்துவங்களையும் உபதேசித் தாரென்றும், அந்தவிருஷபதேவருடைய சரித்திரமானது புருஷா ளுடைய சமஸ்த பாபங்களையும் போக்கடிக்கிறதென்றும் சொல்லி அந்தவிருஷபதேவரைத் தியானம் தோத்திரமுதலான வகைக ளால் துதிசெய்கின்றார்கள்.

இன்னும் விருஷபதேவர் இல்லறதுறவறமுதலான புருஷார்த்தங்களை அநுஷ்டித்தனரென்று ஜைநசமயசித்தாந்தம் கூறுவது போல வைணவசமயத்துப் பாகவத சித்தாந்தமும் கூறுகின்றது.

இத்தன்மையாக விருக்க வைணவர்கள் ஜைநர்களைப்பலவாக நிந்திக்கிறார்கள். அப்படி நிந்தித்திருப்பதை இந்நூலில் சிலவிடங்களிலும் எடுத்துக்காட்டியிருக்கின்றோம். எனினும் அவ்வாறு பழித்த பாக்களில் இங்கும் இரண்டு பாசுரம் எடுத்துக்காட்டுவாம் அதாவது: தொண்டரடிப்பொடியாழ்வார்,

"புலையறமாகிநின்ற புத்தொடு சமணமெல்லாம்
கலையறக் கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோதான்
தலையறுப்புண்டுஞ் சாவேன் சத்தியங் காண்மின்ஐயா
சிலையினாலிலங்கை செற்ற தேவனே தேவனாவான்"

என்று திருமாலை 7-ஆம் பாசுரத்திலும்,

இன்னும் திருமங்கையாழ்வாரும்,

"பிச்சச் சிறுபீலிச்சமண் குண்டர் முதலாயோர்
விச்சைக் கிறையென்னு மவ்விறையைப் பணியாதே
கச்சிக்கிடந்தவனூர் கடல்மல்லைத் தலசயனம்
நச்சித் தொழுவாரை நச்சென்றன் நன்னெஞ்சே"

என்று பெரியதிருமொழி 2-ஆம் பத்து 6-வது திருமொழி 5-ஆம் பாசுரத்திலும் கூறுகின்றார்கள்.

இ-ள்: "திரளான மயிலிறகையும் சிறியமயில் தோகையையுமுடைய அமண (ஜைந)ரான நீசர்முதலானவர்கள், சகலவித்யைகளுக்கு நிர்வாகனென்ற ஒருவனைக்கைக்கொள்ளுவார்கள். அவர்களால் ஏற்படுத்தப்பட்டவனை (கடவுளை) ஆஶ்ரயியாமல் (வணங்காமல்) திருவெஃகாவிலே கண்வளர்ந்தருளுமவன் ஊரான திருக்கடல்மல்லையில் ஸ்தலசயனத்திலே ஆசைப்பட்டு தொழுமவர்களை என்னுடைய விலக்ஷணமான மனஸே நீயும் ஆசைப்பட்டுத்தொழு" என்பதாம்

ஜைந (சமண)ர்கள் முதலான நீசர்தொழும் இறைவனை (கடவுளை) வணங்காதீர்கள்; விஷ்ணுவைத் தொழுங்கள் என்பது இதன்கருத்து.

மண்ணும், நீரும், நெருப்பும், காற்றும், ஆகாயமும் ஆகிய இவற்றாலான பிராணிவர்க்கங்களும் அரனும் அயனும் மற்றுமுள்ள சகலபதார்த்தங்களும் ஆகியவர் விஷ்ணுவென்றும், அவரே விருஷபதேவரென்றும் வைணவசாஸ்திரம் கூறுகின்றது.

மேலும் விஷ்ணுவானவர்,

திகம்பரர்களாயும், ஞானிகளாயும், நயிஷ்டிக பிரம்மசாரிகளாயும் இருக்கிறவ(ஜைந)ர்களுடைய தர்மங்களைக் காண்பிக்கவேண்டுமென்கிற விருப்பத்துடன் விஷ்ணுவே விருஷபதேவராக அவதரித்தவரை ஜைநர்களும் வைணவர்களும் கடவுளென்று துதிசெய்து வரும்போது வைணவர்கள் ஜைநர்களை நிந்திப்பதற்குக் காரணம் யாதோ? இதை நடுவுநிலைமையுள்ள நல்லறிவாளர் நன்கறிந்து உண்மை உணரவேண்டும்.

ஸ்மார்த்தர், வைணவர் முதலான பிராம்பணர்களும் பிராம்மணரல்லாதவர்களும் ஜைநர்களை நிந்தித்திருப்பதை மேலே எடுத்துக்காட்டியுள்ளேன். இனிஜைநர்கள், ஸ்மார்த்தர் வைணவர், முதலான பிராம்மணர்களை நிந்திப்பதாக பிராம்மணர்களும் பிராம்மணரல்லாதவர்களும் அவர்கள்மீது ஒரு குறை கூறுவதைப்பற்றியும் விளக்குவாம்.

ஜைநர்கள் பிராதக்காலத்தில் எழுந்திருக்கும்போது 'விப்ரக்ஷய'மென்று சொல்லிக்கொண்டு எழுந்திருப்பதாக மேற்கூறியவர்கள் கூறகின்றார்கள். அதுபூராவும் தவறு. ஏனெனின் ஜைநசமயத்தில் பிராம்மணவர்ணாஸ்ரமம் ஆதிகாலத்திலேயே ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருக்க 'விப்ரக்ஷய'மென்று ஜைனர் சொல்வார்களா? ஜைநசமய சித்தாந்தத்தின் உணர்ச்சி இல்லாமையினாலேயே அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். அவர்கள் சொல்கிறபடி ஜைனர், 'விப்ரக்ஷயம்' என்ற பதத்தை எப்பொழுதும் சொல்வதேயில்லை.

ஜைநர்கள் ஜீவன்களிடத்து அன்பும், அருளும், கொல்லாவிரதமும் பூண்டவர்களாதலால் இவர்கள் விடியற்காலத்தில் பகவான் மீது * முகஸ்துதியையும், S ஈர்யாபதத்தையும், b சாமாயிகமுதலானவைகளையும், அத்யயனம் செய்து முடிவில் அடியிற்கண்ட சுலோகத்தைப் பாராயணம் செய்வார்கள்.

---

* முகஸ்துதியென்பது-பகவான்மீது தோத்திரம்செய்தல்

S ஈர்யாபதமென்பது-இருத்தல், கிடத்தல், நடத்தல், வைப்பன, எடுப்பன முதலானவிடங்களைச்சோதித்து ஜீவன்களுக்கு ஹிம்சை சேராதபடி இரட்சிக்கிறேனெனப்பாராயணம் பண்ணுவதும் அதன்படி அநுஷ்டித்தலுமாம்.

b சாமாயிகமென்பது-உட்கார்ந்து அல்லது நின்று ஆத்மத்யானம் முதலானவைகள்செய்வது. இதன்விவரங்கள் இரண்டாம்பாகத்தில் இல்வாழ்க்கையைப்பற்றிய விஷயங்கள் வருமிடத்து விவரிக்கப்படும்.

அதாவது,

"𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌭𑌵𑌤𑍁 𑌬𑌲𑌵𑌾𑌨𑍍 𑌧𑌾𑌰𑍍𑌮𑌿𑌕𑍋 𑌭𑍂𑌮𑌿𑌪𑌾𑌲𑌃, 𑌕𑌾𑌲𑍇 𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌵𑌰𑍍𑌷𑌤𑍁 𑌮𑌘𑌵𑌾 𑌵𑍍𑌯𑌾𑌧𑌯𑍋 𑌯𑌾𑌨𑍍𑌤𑍁 𑌨𑌾𑌶𑌮𑍍 | 𑌦𑍁𑌰𑍍𑌭𑌿𑌕𑍍𑌷𑌂 𑌚𑍌𑌰𑌮𑌾𑌰𑍀 𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿 𑌜𑌗𑌤𑌾𑌂 𑌮𑌾 𑌸𑍍𑌮 𑌭𑍂𑌜𑍍𑌜𑍀𑌵𑌲𑍋𑌕𑍇, 𑌜𑍈𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌧𑌰𑍍𑌮𑌚𑌕𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌭𑌵𑌤𑍁 𑌸𑌤𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍌𑌖𑍍𑌯𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌿 ॥"

என்பதே இது சாந்திபாஷ்டகம் 16-வது சுலோகம்.

இ-ள்: "பிராணிகள் வசிக்கக்கூடிய இவ்வுலகில் சமஸ்தஜனங்கட்கும் க்ஷேமமானது உண்டாகக்கடவது; அரசனானவன் புஜபலபராக்ரம முள்ளவனாகவும், தர்மிஷ்டனாகவும், இருக்கக்கடவன். இந்திரனானவன் காலந்தோறும் நன்முக ஜலத்தைவருஷிக்கக்கடவன்; வியாதிகள் நாசத்தை அடையக்கடவது; க்ஷாமமானதும், திருட்டு அம்மை முதலானவைகளும் ஒருக்ஷணமும் உண்டாகவேண்டாம்; அருகபரமனுடைய அறவாழியானது எப்பொழுதும் சமஸ்த பிரஜைகளுக்கும் சௌக்கியத்தைக் கொடுக்கக் கடவது" என்பதாம்.

இந்த சுலோகத்தையும் இக்கருத்துக்களையும் பிராம்மணர்களும் பிராம்மணரல்லாதவர்களும் கனகறிந்து ஜைநர்களின் மீது சொல்லும் குறைபைநீக்கி அவர்கள் நல்லொழுக்கங்களின் சுபாவத்தை இனிமேலாவது நன்கறிவார்களென நம்புகின்றேன்.

சுபமஸ்து!

# அரும்பதவுரை.

| | | |
|---|---|---|
| கனகவர்ணம் | பொன்வர்ணம் | 12 |
| வடவிருக்ஷம் | ஆலமரம் | ,, |
| ஸ்வரணம் | திருவோணநக்ஷத்திரம் | ,, |
| தத்கல்பத்து | அந்தகல்பத்து | 15 |
| பரிநிர்வாணம் | மோக்ஷம் | ,, |
| விஜ்ரம்பிதமகாகாயம் | பராக்ரமமுள்ள பெரியசரீரம் | ,, |
| விஸ்மிதராகி | ஆச்சரியப்பட்டு | ,, |
| அணுமகான் | நுண்ணியதாயு ம்பெரிதாயுமுள்ளது | ,, |
| வைஸ்வதேவம் | சமஸ்ததேவர்கள்சம்பந்தம் | 19 |
| வைதவ்யம் | அமாங்கல்யம் | ,, |
| சைத்யாலயம் | ஜிநாலயம் | 24 |
| அகர்த்திமம் | ஒருவரால்செய்யப்படாதது | ,, |
| புத்கலம் | சரீரம் | 25 |
| பரிணதி | பரிணமம் | 27 |
| சுபாவகுணம் | இயற்கைகுணம் | ,, |
| விபாவகுணம் | செயற்கைகுணம் | ,, |
| பூர்வபாகம் | கிழக்குபாகம் | ,, |
| அபரபாகம் | மேற்குபாகம் | ,, |
| நாபியாகவுள்ளது | மத்தியாகவுள்ளது | 28 |
| ரித்திசம்பன்னர் | ருஜுமதி விபுலமதி முதலிய ரித்தியைப் பெற்றமுனிவர் | 30 |
| ருஜுமார்த்தவகுணம் | ஒழுங்காயும் மிருதுவாயு முள்ள குணம் | 31 |
| பரிவர்த்தித்து | ஒன்றுக்கொன்றுமாறுதலடைந்து | 32 |
| தூமஸ்யாமவர்ணம் | புகைபோன்றகருமைநிறம் | 33 |
| அங்குலியினை ஆகாரமாக உண்பர் | பெருவிரலை தாயின் ஸ்தன்னியம் போல சப்புதல் | 34 |
| ஸ்வபாவமார்த்தவம் | இயற்கையான மிருதுவாகவுள்ள தன்மை | ,, |
| ஒளிபிழம்பினுல் | பிரகாசக்குறைவினுல் | 35 |
| ஸ்யாமவர்ணம் | கருமையானநிறம் | 37 |
| ஜராயுபடலம் | கர்ப்பப்பை | 39 |
| நாபிநாளம் | நாபிக்கொடி | 40 |
| க்ஷாயிகசம்யத்வத்தினையெய்தி | அனந்தானுபந்தி குரோதம், மானம், மாயை, லோபம் நான்கும், மித்யாத்வம், சம்மியக்மித்தியாத்வம், சம்யத்வப்ரக்ரதி மூன்றும் ஆகிய இவ்வேழுகளின் க்ஷயத்தை அடைவது (இத்தன்மையுடையவர் நான்கு பவத்திற்குள் மோக்ஷமடைவார்.) | |

| | | |
|---|---|---|
| பரிணதை | பரிபக்குவம் | 43 |
| ஈத்ரஸம் | இப்படிப்பட்ட | ,, |
| சஸ்யங்கள் | பயிர்கள் | 45 |
| சாவத்யத்திற்கு | ஹிம்ஸாதோஷத்திற்கு | ,, |
| அங்குரம் | முளை | 56 |
| ஹரிதங்களுள் | பச்சைஇலைகளுள் | ,, |
| வியத்திஅபேக்ஷயால் | வித்தியாசமுள்ள வாஞ்சையால் | 68 |
| பஞ்சேந்திரிய லப்தியபர்யாப்தக மனுஷ்யர் | மனிதர்களின் அக்குள் முதலான இடுக்குகளில் உண்டாகும் வியர் வைகளில், தானே தோன்றி அழியும் மனிதர் | 70 |
| அநசனவிரதம் | உண்ணாவிரதம் | 93 |
| பரிஷகம் | துன்பம் | ,, |
| சரியாமார்க்கம் | ஆகாரத்திற்குச்செல்லுதல் | 98 |
| ஜாதிஸ்மரணம் | முன்பிறப்பையறிதல் | ,, |
| ஸ்வர்க்காவதரணம் | தேவலோகத்திலிருந்து இங்கு அவதரித்தல் | 101 |
| இஹலோகபயம் | சர்ப்பம்சத்ருமுதலானவைகளுக்கு பயப்படுதல் | 105 |
| பரலோகபயம் | எந்தெந்தக்கதியில் அடைவோமோ வென்கிறபயம் | ,, |
| அகுப்திபயம் | மனவசன காயங்களாலறியாமல் செய்த காரியங்களைப்பற்றி ராஜ தண்டனை உண்டாகுமோ சதுர் க்கதிதுக்கப்ராப்த் மாமோவென் கிற பயம் | ,, |
| அத்ராணபயம் | விருத்தாப்பியம் வியாதிமுதலான வைகள் நேரிடுங்காலத்தில் நம்மை யார் ரக்ஷிப்பார்கள் என்கிற பயம் | ,, |
| ஆகஸ்மிகபயம் | அகஸ்மாத்தாய் உண்டாகும்பயம் | ,, |
| வேதனபயம் | வியாதிமுதலானவைகள் சகிக்க முடியாத பயம் | ,, |
| மரணபயம் | இறந்து போவதற்கு பயம் | ,, |
| சால்யாதிசம்பத்தி | நெல்முதலிய தானியங்களின் சம் பத்து | 119 |
| ஷட்ருது சம்பூதமாகி | ஆறுருதுகளில் உண்டாகும்புஷ்பாதி பழவர்க்கங்கள் ஏககாலத்திலுண் டாவது | ,, |

| | | |
|---|---|---|
| சரணன்கியாஸப்பிரதேசரூபஸ்தலம் | பாதஅடிவைப்பாகிய பிரதேசத்தின் இடம் | |
| விகஸித சப்தபத்மங்கள் | விரிந்தஏழுதாமரைப்புஷ்பங்கள் | ,, |
| லக்ஷ்மீநிவாசசௌதங்கள் | லக்ஷ்மீவரமண்டபம் | ,, |
| ஜீவகனுகாரர் | பரமாத்ம ஸ்வரூபத்தை அடையும் சமயத்திலிருந்த சரீரப்ரமாணம் | 130 |
| சாகாரநிராகாரர் | ஆகாரமயமாயும் ஆகாரமற்றமயமாயுமிருப்பவர் (அதாவது ஒரு தகட்டின்மீது அருகபரமனது உருவத்தை யெழுதி அவ்வுருவத்தை கத்திரித்து நீக்கினுல் அங்கு ரூபமாகவும் அரூபமாகவும்தோன்றும். அதுபோலவாம் மோக்ஷத்தில் சித்தபரமேஷ்டியின் ஸ்வரூபம்) | ,, |
| அதீந்திரிய கோசரர் | மனவசனகாயங்கள் முதலான பஞ்சேந்திரியவிஷய ஸ்வரூபம் நீங்கி அனந்தஞானம் அனந்ததரிசனம் ஆகியவைகளின் குணங்களால் அறியுந்தன்மையுடையவர். | ,, |
| நிக்ஷேபிப்பது | வைப்பது | 144 |
| ஆதானம்பண்ணுவது | கிரகிப்பது | ,, |
| விகலேந்திரியம் | த்வீந்திரியம் த்ரீந்திரியம் சதுரிந்திரியம் | 145 |
| ரிஜுபரிணமம் | சத்பரிணமம் | 152 |
| ஜலகாயிகஜீவன் | சலத்தையே சரீரமாகவுள்ள ஜீவன் | 162 |
| சேதனம் | அறிவுள்ளது (ஆத்மன்) | 185 |
| அசேதனம் | அறிவற்றது (உடல்) | ,, |

# பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 13 | 17 | யக்ஷதேவா | யக்ஷதேவ |
| ,, | ,, | ஆகஸ்ச ஆகஸ்ச | ஆகச்ச ஆகச்ச |
| 14 | 4 | தேவாய | தேவியை |
| ,, | 24 | பாரீஸ்வநாத | பார்ஸ்வநாத |
| 15 | 18 | [illegible] | [illegible] |
| 17 | 12 | மோக்ஷமடைந்தி | மோக்ஷமடைந்த |
| 18 | 30 | [illegible] | [illegible] |
| 48 | 20 | [illegible] | [illegible] |
| 49 | 19 | [illegible] | [illegible] |
| 50 | 1 | [illegible] | [illegible] |
| 56 | 5 | வெளியினே | வெளியில் |
| 58 | 19 | மாதியா | மாதியாய் |
| 59 | 6 | பிரம்மணேமதே | பிரம்மணேன்மதே |
| ,, | 9 | ஜிநதாபிராமே | ஜநதாபிராமே |
| ,, | 14 | ப்ரபர்த்தி | ப்ரபிருதி |
| ,, | 15 | ஸகர்ருபகால | [illegible] |
| 60 | 1 | இச்தியாதிஞதிலஹோம | இத்தியாதிதிலஹோம |
| ,, | 18 | [illegible] | [illegible] |
| 61 | 31 | காரணெ | காரண |
| 62 | 12 | [illegible] | [illegible] |
| 63 | 2 | [illegible] | [illegible] |
| 64 | 2 | [illegible] | [illegible] |
| ,, | 6 | [illegible] | [illegible] |
| ,, | 15 | [illegible] | [illegible] |
| ,, | 29 | பூர்ப்புவஸ்[illegible] | பூர்ப்புவஸ்[illegible] |
| 68 | 28 | [illegible] | [illegible] |
| 69 | 14 | [illegible] | [illegible] |
| ,, | 17 | [illegible] | [illegible] |
| 70 | 20 | [illegible] | [illegible] |
| ,, | 32 | [illegible] | [illegible] |
| 71 | 13 | [illegible] | [illegible] |
| ,, | ,, | [illegible] | [illegible] |
| 77 | 11 | நாரிகேளா | நாரிகேள |
| 75 | 5 | அதுபொருக்தாதென்க | அதுவும்பொருத்தமாம் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 87 | 19 | ஷத்ரிஸஷ்டி | த்ரிஷஷ்டி |
| 96 | 14 | ராஜதி | ராஜகெத |
| 101 | 2 | மர்த்ராபிஷேகம் | மர்தாபிஷேகம் |
| 102 | 10 | கிர்மித்தத்தச்செய்யும் | கிர்மித்தச்செய்யும் |
| 108 | 13<br>14 | எல்லாவிடத்திலேயும் சூக்ஷ்மமாயிருப்பவனுமாகியவனே சிவன் | எல்லாவிடங்களிலும் ஸ்தூல) சூக்ஷ்ம மாயிருக்கப்பட்ட சகல பதார்த்தங்களையும் அநந்தஞானம் அநந்ததர்சனம் ஆகிய குணங்களால் அறியக்கூடியவனே சிவன் |
| 109 | 2 | குரகண்ட | ரகண்ட |
| ,, | 20 | [illegible] | [illegible] |
| 119 | 21 | [illegible] | [illegible] |
| ,, | 23 | [illegible] | [illegible] |
| 120 | 30 | பாரீஸ்வநாதர் | பார்சுவநாதர் |
| 122 | 24 | பிரமா | பிரம்மா |
| 127 | 31 | சண்குணரலாம் | சன்குணரலாம் |
| 130 | 23 | ஒருசமயத்தல் | ஒருசமயத்தில் |
| 134 | 16 | [illegible] | [illegible] |
| 139 | 30 | [illegible] | [illegible] |
| 142<br>143 | 32<br>1 | பெண்வழிசேறல் | காமமின்மை |
| 153 | 31 | ஸதிரீ | ஸ்திரீ |
| 160 | 28 | நிங்காத | நீங்காத |
| 164 | 4 | [illegible] | [illegible] |
| 183 | 17 | உபயோக | உபபோக |
| 185 | 4 | அனுத்திரன் | அனுத்திரனொலி |
| 190 | 23 | [illegible] | [illegible] |
| 212 | 15 | [illegible] | [illegible] |

Sri Anthimoolam Press,
Madras.